வெளியீடு 29-5-1992 Issued 29-5-1992

424

# தமிழ்நாடு
# சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகள்
## செயலக வெளியீடு

# TAMIL NADU
# LEGISLATIVE ASSEMBLY DEBATES

## OFFICIAL REPORT

செவ்வாய்க்கிழமை, செப்டம்பர் 24, 1991 - தொகுதி 10 - எண் 1
Tuesday the 24th September, 1991 - Volume 10 - No. 1

சட்டமன்றப் பேரவைச் செயலகம், சென்னை-600 009
Legislative Assembly Secretariat,
Madras-600 009

விலை ரூ. 3-00] [Price Rs. 3-00

D
V211,31 N91
N91.10.1
161608

| | |
|---|---|
| 4. வருவாய்த் துறை அமைச்சர். | **மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் :** வருவாய் மாவட்ட வருவாய்த் துறைப் பணியாளர்கள், மாவட்டத் துணை ஆட்சியாளர்கள், ஆவணப் பதிவுத் துறை, முத்திரைச் சட்டம், வெளிநாடுவாழ் இந்தியர்கள், அகதிகள், வெளியேற்றப்பட்டவர்கள், எழுதுபொருள் மற்றும் அச்சுத் துறை, அரசு அச்சகம், பூமிதானம் மற்றும் கிராமதானம், பயண இசைவுச் சீட்டு. |
| 5. கல்வி அமைச்சர் | **மாண்புமிகு திரு. இராம. வீரப்பன் :** கல்வி, தொழில் நுட்பக் கல்வி, அறிவியல் மற்றும் தொழில் நுட்பவியல், விளையாட்டு மற்றும் இளைஞர் நலம், தமிழ் வளர்ச்சி மற்றும் தமிழ்ப் பண்பாடு, தொல் பொருளியல், முன்னாள் இராணுவத்தினர் நலம். |
| 6. உணவு-கூட்டுறவுத் துறை அமைச்சர். | **மாண்புமிகு திரு. க. இராசாராம் :** உணவு, கூட்டுறவு, நுகர்பொருள் வழங்கல், விலைவாசிக் கட்டுப்பாடு, புள்ளி விவரங்கள். |
| 7. தொழிலாளர் நலத் துறை அமைச்சர். | **மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம் :** தொழிலாளர், வேலை வாய்ப்பு மற்றும் பயிற்சி, நகர்ப்புற மற்றும் கிராமப்புற வேலை வாய்ப்புத் திட்டங்கள், மக்கள் தொகைக் கணக்கு. |
| 8. மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர். | **மாண்புமிகு திரு. சு. முத்துசாமி :** மக்கள் நல்வாழ்வு, மருத்துவக் கல்வி, குடும்ப நலம், சுற்றுச் சூழல் மாசு கட்டுப்படுத்தல், மின்னணுவியல், இரும்பு மற்றும் எஃகுக் கட்டுப்பாடு, அச்சுக் காகிதக் கட்டுப்பாடு. |



| | |
|---|---|
| 9. போக்குவரத்துத் துறை அமைச்சர். | **மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன் :** போக்குவரத்து, அரசுடைமையாக்கப்பட்ட போக்குவரத்து, இயக்கூர்திகள் சட்டம், துறைமுகங்கள். |
| 10. கைத்தறி மற்றும் நெசவாலைகள் துறை அமைச்சர். | **மாண்புமிகு திரு. இ. மதுசூதனன் :** கைத்தறி மற்றும் நெசவாலைகள். |
| 11. பொதுப்பணித் துறை அமைச்சர். | **மாண்புமிகு திரு. எஸ் கண்ணப்பன் :** பொதுப் பணிகள், பாசனம் (சிறு பாசனம் உட்பட), நெடுஞ்சாலைகள், மின்சாரம், மரபுசாரா எரிசக்தி வளர்ச்சி. |
| 12. உள்ளாட்சித் துறை அமைச்சர். | **மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு :** நகராட்சி நிர்வாகம், ஊரக வளர்ச்சி, ஊராட்சிகள் மற்றும் ஊராட்சி ஒன்றியங்கள், வறுமை ஒழிப்புத் திட்டங்கள், கிராமப்புறக் கடன் சம்பந்தப்பட்டவை. |
| 13. வேளாண்மைத் துறை அமைச்சர். | **மாண்புமிகு திரு. கு. ப. கிருஷ்ணன் :** வேளாண்மை, வேளாண்மைப் பொறியியல், வேளாண் பணிக் கூட்டுறவுச் சங்கங்கள், தோட்டக் கலை மற்றும் சர்க்கரை. |
| 14. வீட்டு வசதி-நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர். | **மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி :** வீட்டு வசதி, குடிசை மாற்றுத் திட்டம், ஊரக வீட்டு வசதி வளர்ச்சி, இட வசதிக் கட்டுப்பாடு, நகர் அமைப்பு, நகர்ப்புற வளர்ச்சி, சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம், நகர்ப்புற மற்றும் கிராமப்புறக் குடிநீர் வழங்கல். |

| | |
|---|---|
| 15. ஊரகத் தொழில் துறை அமைச்சர். | மாண்புமிகு திரு. முகமது ஆசிப் சிறு தொழில்கள், ஊரகத் தொழில்கள் (குடிசைத் தொழில்கள் உட்பட), கதர் மற்றும் கிராமத் தொழில்கள் வாரியம், வக்ஃப். |
| 16. சமூக நலத்துறை அமைச்சர். | மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி: சமூக நலம் (மகளிர் மற்றும் குழந்தைகள் நலம் உட்பட), சத்துணவு, பிச்சைக்காரர் விடுதிகள், அனாதை விடுதிகள், சீர்திருத்த நிர்வாகம். |
| 17. ஆதி திராவிடர் நலத்துறை அமைச்சர் | மாண்புமிகு திரு. மு. ஆனந்தன் : ஆதி திராவிடர் நலம், மலைவாழ் பழங்குடியினர் மற்றும் பிணைத் தொழிலாளர். |
| 18. வனம் மற்றும் மீனளத் துறை அமைச்சர். | மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார் கால்நடை பராமரிப்பு, பால், பால் பெருக்குத் திட்டம், மீனளம், வனங்கள் மற்றும் சின்கோனா. |

600 008.



# PERSONNEL OF THE GOVERNMENT OF TAMIL NADU

## GOVERNOR OF TAMIL NADU

THIRU BHISHMA NARAIN SINGH

## MEMBERS OF THE COUNCIL OF MINISTERS

| | |
|---|---|
| 1. Chief Minister .. | **The Hon. Selvi J. JAYALALITHA :** Public General Administration, Indian Administrative Service Indian Police Service and other All India Services, District Revenue Officers, Police, Prevention of Corruption, Industries, Commercial Taxes Prohibition and Excise, Molasses, Backward Classes, Minorities, Hindu Religious and Charitable Endowments Information, and Publicity, Film Technology, Cinematograph Act. Tourism and Tourism Development Corporation and Mines and Minerals. |
| 2. Minister for Finance | **The Hon. Dr. V. R. NEDUNCHEZIAN :** Finance, Planning, Elections and Legislature. |
| 3. Minister for Law .. | **The Hon. K. A. KRISHNASAMY :** Law, Courts, Prisons, Legislation on Weights and Measures, Debt Relief including Legislation on Money Lending, Chits and Registration of Companies. |
| 4. Minister for Revenue | **The Hon. Thiru S. D. SOMASUNDARAM :** Revenue, District Revenue Establishment, Deputy Collectors, Registration, Stamp Act, Indians Overseas, Refugees and Evacuees Stationery and Printing, Government Press, Bhoodan and Gramadan and Passports. |

| | |
|---|---|
| 5. Minister for Education. | The Hon. Thiru ERAAMA VEERAPPAN : Education, Technical Education, Science and Technology, Sports and Youth Welfare, Tamil Development and Tamil Culture, Archaeology and Welfare of Ex-Servicemen. |
| 6. Minister for Food and Co-operation. | The Hon. Thiru K. RAJARAM ; Food, Co-operation, Civil Supplies, Price Control and Statistics. |
| 7. Minister for Labour | The Hon. Dr. C. ARANGANAYAGAM : Labour, Employment and Training, Urban and Rural Employment Programmes and Census. |
| 8. Minister for Health | The Hon. Thiru S. MUTHUSAMY : Health, Medical Education, Family Welfare, Environmental Pollution Control, Electronics, Iron and Steel Control and Newsprint Control. |
| 9. Minister for Transport | The Hon. Thiru K. A. SENGOTTAYAN : Transport, Nationalised Transport, Motor Vehicles Act and Ports. |
| 10. Minister for Handlooms and Textiles. | The Hon. Thiru E. MADHUSUDHANAN : Handlooms and Textiles. |
| 11. Minister for Public Works. | The Hon. Thiru S. KANNAPPAN : Public Works, Irrigation including Minor Irrigation, Highways, Electricity and Non-Conventional Energy Development. |
| 12. Minister for Local Administration. | The Hon. Thiru ALAGU THIRUNAVUKKARASU : Municipal Administration, Rural Development, Panchayats and Panchayat Unions, Poverty Alleviation Programmes and Rural Indebtedness. |
| 13. Minister for Agriculture. | The Hon. Thiru Ku. Pa. KRISHNAN : Agriculture, Agricultural Engineering, Agro Service Co-operatives, Horticulture and Sugar. |



| | |
|---|---|
| 14. Minister for Housing and Urban Development. | The Hon. Thiru T. M. SELVAGANAPATHI : Housing, Slum Clearance, Rural Housing Development, Accommodation Control, Town Planning, Urban Development, Madras Metropolitan Development Authority and Urban and Rural Water Supply. |
| 15. Minister for Rural Industries. | The Hon. Thiru MOHAMED ASIF : Small Scale Industries, Rural Industries including Cottage Industries, Khadi and Village Industries Board and Wakf. |
| 16. Minister for Social Welfare. | The Hon. Thirumathi R. INDIRA KUMARI: Social Welfare including Women's and Children's Welfare, Nutritious Noon Meals, Beggar Homes, Orphanages and Correctional Administration. |
| 17. Minister for Adi-Dravidar Welfare. | The Hon. Thiru M. ANANDAN : Adi-Dravidar Welfare Hill Tribes and Bonded Labour. |
| 18. Minister for Forests and Fisheries. | The Hon. Thiru D. JAYAKUMAR : Animal Husbandry, Milk, Dairy Development, Fisheries, Forests and Cinchona. |

## தமிழ்நாடு அரசின் ஆளுநரும் அமைச்சரவையும்,

### ஆளுநர் திரு. பீஷ்ம நாராயண் சிங்.

### அமைச்சரவையின் உறுப்பினர்கள்

1. முதலமைச்சர் — **மாண்புமிகு செல்வி ஜெ. ஜெயலலிதா :** பொது, பொது நிர்வாகம், இந்திய ஆட்சிப் பணியாளர், இந்திய காவல் பணியாளர் மற்றும் அனைத்திந்திய பணியாளர்கள், மாவட்ட வருவாய் அதிகாரிகள், காவல், இலஞ்ச ஒழிப்பு, தொழில்கள், வணிக வரிகள், மதுவிலக்கு மற்றும் ஆயத் துறை, சர்க்கரைப் பாகு கழிவு, பிற்பட்டோர் நலம், சிறுபான்மையினர் நலம், அறநிலையத் துறை, செய்தி மற்றும் விளம்பரம், திரைப்படத் தொழில் நுட்பவியல், திரைப்படச் சட்டம், சுற்றுலா மற்றும் சுற்றுலா வளர்ச்சிக் கழகம்; சுரங்கம் மற்றும் கனிம வளம்.

2. நிதி அமைச்சர் .. **மாண்புமிகு டாக்டர் இர. நெடுஞ்செழியன் :** நிதி, திட்டம், தேர்தல்கள், சட்டமன்றம்.

3. சட்ட அமைச்சர் .. **மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி :** சட்டம், நீதிமன்றங்கள், சிறைகள், எடைகள்-அளவைகள் பற்றி சட்டம் இயற்றுதல், கடன் நிவாரணம் (கடன் வழங்கல், சீட்டு நிதி இவை பற்றிய சட்டம் இயற்றுதல் உட்பட), கம்பெனிகள் பதிவு.

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

பேரவைத் தலைவர்

மாண்புமிகு திரு. இரா. முத்தையா

பேரவைத் துணைத் தலைவர்

மாண்புமிகு பேராசிரியர் க. பொன்னுசாமி

மாற்றுத் தலைவர்கள் பட்டியல்.

1. திரு. க. அர்ச்சுனன்
2. திரு. வ. சத்தியமூர்த்தி
3. திருமதி. ரமணி நல்லதம்பி
4. டாக்டர் தே. குமாரதாஸ்

செயலாளர் :

திரு. செ. சு. ஜானகிராமன்

53—330—B

## பேரவையின் முக்கிய அலுவலர்கள்

(அகர வரிசைப்படி.)

| | |
|---|---|
| இராமச்சந்திரன், திரு. ஆர். கே., பி.ஏ., பி.எல். | இணைச் செயலாளர். |
| சுந்தரராஜன், திரு. கா. செ., பி.ஏ., பி.ஜி.எல். | இணைச் செயலாளர். |
| இராசமாணிக்கம், திரு. பெ., பி.ஏ., பி.எல். | இணைச் செயலாளர். |
| சண்முகநாதன், திரு. கோ., பி.காம். .. | துணைச் செயலாளர் (பதிப்பாளர்). |
| சந்திரசேகரன், திரு. ஆர்., பி.ஏ. .. | துணைச் செயலாளர். |
| சாலமன் ஜெயபால், திரு. டி., பி.எஸ்சி., பி.எல். .. | துணைச் செயலாளர். |
| ஜேக்கப் ஆர்தர், திரு. தா. பி.ஏ., பி.எல்., டி.பி. & பி.ஏ. .. | துணைச் செயலாளர். |
| கிருஷ்ணமூர்த்தி, திரு. எஸ்., பி.எஸ்சி. .. | குழு அலுவலர். |
| வெங்கட்டராமன், திரு. ப. சீ. பி.காம். .. | குழு அலுவலர். |
| அப்துல் சத்தார், திரு. ஜெ., பி.ஏ., பி.எல். .. | சார்புச் செயலாளர். |
| இராசாராமன், திரு. வி., பி.ஸ்எசி., பி.எல். .. | சார்புச் செயலாளர். |
| உமா, திருமதி வி. நா., பி.ஏ. .. | சார்புச் செயலாளர். |
| கண்ணன், திரு. கே., பி.எஸ்சி., பி.எல். .. .. | சார்புச் செயலாளர். |

| | | |
|---|---|---|
| சாயிநாதன், திரு. சி., பி.ஏ., பி.ஜி.எல். | .. | சார்புச் செயலாளர். |
| பவானி சுப்பையா, திருமதி, பி.ஏ., பி.ஜி.எல். | .. | சார்புச் செயலாளர். |
| பானுமதி அனந்தராஜன், திருமதி, பி.எஸ்சி., பி.ஜி.எல். | | சார்புச் செயலாளர். |
| முடிகோபதி, திரு. நா., எம்.ஏ. | .. | சார்புச் செயலாளர் |
| முனிர் உன்னிசா, திருமதி., பி.எஸ்சி., பி.ஜி.எல். | .. | சார்புச் செயலாளர். |
| ராஜன், திரு. கே.பி. டி.ஆர்.எஸ். | | சார்புச் செயலாளர். |
| ராஜேந்திரன், திரு. பி. சி. பி.ஏ. | .. | சார்புச் செயலாளர். |
| வெங்கட்டராமன், திரு. கோ. | .. | பேரவைத் தலைவரின் தனிச் செயலாளர். |
| சுந்தரராஜுலு, திரு. துரை, எம்.ஏ. | .. | தலைமை நிருபர். |
| துரைபாண்டியன், திரு. செ. ஏ., பி.ஏ. | .. | தலைமை நிருபர். |
| ஜெயதேவ், திரு. பி. சி. | .. | தலைமை நிருபர். |

## தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

### உறுப்பினர்கள் பட்டியல் (அகர வரிசைப்படி)

### பெயர்களும் தொகுதிகளும்.

| தொடர் எண்ணும். உறுப்பினர்களின் பெயரும். | | தொகுதியின் பெயர். |
|---|---|---|
| (1) | | (2) |
| 1. அண்ணாமலை, திரு. எஸ். | | ஆலந்தூர். |
| 2. அபரான்ஜி, திரு. பி. | .. | அரூர் (செ.வ.). |
| 3. அபுல்ஹாசன், திரு. எம்.எம்.எஸ். | .. | மயிலாடுதுறை. |
| 4. அமர்நாத், திரு. ஓ.எஸ். | .. | மதுரை கிழக்கு. |
| 5. அம்மமுத்து பிள்ளை, டாக்டர் மு. | .. | கன்னியாகுமரி. |
| 6. அரங்கநாதன், திரு. ஆர்.டி. | | விருத்தாசலம். |
| 7. அரங்கநாயகம், டாக்டர் செ. | | தொண்டாமுத்தூர். |
| 8. அர்ச்சுனன், திரு. க. | .. | வீரபாண்டி. |
| 9. அழகிரி, திரு. ச. | .. .. | சிதம்பரம். |
| 10. அழகு திருநாவுக்கரசு, திரு... | | ஒரத்தநாடு. |
| 11. அறிவழகன், திரு. ஆ. | .. | கிருஷ்ணராயபுரம் (செ.வ.). |
| 12. அன்பழகன், திரு. எஸ். | .. | நாமக்கல், (செ.வ.). |
| 13. ஆசைமணி, திரு. எஸ். | .. | குத்தாலம். |
| 14. ஆண்டி அம்பலம், திரு. மெ. | | நத்தம். |

| | (1) | | (2) |
|---|---|---|---|
| 57. | கிருஷ்ணன், திரு. எஸ். எம். | .. | தாம்பரம். |
| 58. | கிருஷ்ணன், திரு. கு.ப. | .. | ஸ்ரீரங்கம். |
| 59. | கிருஷ்ணன், திரு. சி. | .. | ஓமலூர். |
| 60. | குப்பன், திரு. கே. | .. | திருவொற்றியூர். |
| 61. | குமரி அனந்தன், திரு. | .. | சாத்தான்குளம். |
| 62. | குமாரதாஸ், டாக்டர், தே. | .. | கிள்ளியூர். |
| 63. | குழந்தைவேலு, திரு. சி. | .. | குளத்தூர் (செ.வ.) |
| 64. | கோடி மாரி, திரு. ஆர். | .. | நாகப்பட்டினம். |
| 65. | கோபாலகிருஷ்ணன், திரு. வே. | | சங்கரநயினார் கோவில் (செ.வ.). |
| 66. | கோபால், திரு. .க. | .. | நன்னிலம் (செ.வ.). |
| 67. | கோவிந்தராஜுலு, திரு. எம். | | ரிஷிவந்தியம். |
| 68. | சக்குபாய், திருமதி ஆர். | .. | கும்மிடிப்பூண்டி. |
| 69. | சக்குபாய் தேவராஜ், திருமதி. டி. | | திருவள்ளூர். |
| 70. | சஞ்சய்ராமசாமி, திரு. | .. | விருதுநகர். |
| 71. | சண்முகநாதன், திரு. எஸ். | .. | ஆலங்குடி. |
| 72. | சண்முகம், திரு. எஸ்.வி. | | மதுரை மேற்கு. |
| 73. | சத்தியமூர்த்தி, திரு. வ. | .. | கடலாடி. |
| 74. | சந்திரசேகர், திரு. வி.பி. | .. | பொள்ளாச்சி. |
| 75. | சம்பத், திரு. எ. | .. | வாணியம்பாடி. |
| 76. | சரஸ்வதி, திருமதி, ஏ.டி. | .. | சத்தியமங்கலம். |
| 77. | சரஸ்வதி, திருமதி, ப. | .. | கபிலர்மலை. |
| 78. | சரோஜா, டாக்டர் (திருமதி) வெ. | .. | சங்கரி (செவ.). |



| | (1) | | (2) |
|---|---|---|---|
| 79. | சாத்தையா, திரு. டி. | .. | இராஜபாளையம் (செ.வ.). |
| 80. | சாவித்திரி அம்மாள், திருமதி ஆர். | .. | முசையூர். |
| 81. | சிங்காரம், திரு. .ஆர். | .. | பேராவூரணி. |
| 82. | சிங்காரம், திரு. கே. | .. | மொரப்பூர். |
| 83. | சிங்கை கோவிந்தராசு, திரு. | .. | சிங்காநல்லூர். |
| 84. | சியாமளா, திருமதி ஆர். | .. | கோவில்பட்டி. |
| 85. | சிவசுப்பிரமணியன், திரு. கு. | .. | குறிஞ்சிப்பாடி. |
| 86. | சிவபதி, திரு. என். ஆர். | .. | தொட்டியம். |
| 87. | சின்னசாமி, திரு. .ம. | .. | கரூர். |
| 88. | சின்னசாமி, திரு. .கா. | .. | சேந்தமங்கலம் (ம.ப.) |
| 89. | சின்னசாமி, திரு. வி.கே. | .. | பவானிசாகர். |
| 90. | சின்னப்பன், திரு. கே. கே. | | ஜெயங்கொண்டம். |
| 91. | சீனியம்மாள், டாக்டர் (திருமதி) மு. | .. | அவினாசி (செ.வ.). |
| 92. | சீனிவாசன், திரு. ஆ.கு. | .. | பெரணமல்லூர். |
| 93. | சீனிவாசன், திரு. கு. | .. | மன்னார்குடி. |
| 94. | சுதரசனம், திரு. டி. | .. | பூந்தமல்லி. |
| 95. | சுந்தர்சாமி, திரு. எம். | .. | கசைப்பாக்கம். |
| 96. | சுந்தரதாஸ், திரு. மா. | .. | விளவன்கோடு. |
| 97. | சுந்தரம், திரு. எம்.கே. | .. | தண்டராம்பட்டு. |
| 98. | சுந்தரராஜ், டாக்டர், சா. | | பரமக்குடி (செ.வ.). |
| 99. | சுந்தரவேல், திரு. ஏ.கே.சி. | .. | திருப்பத்தூர். |
| 100. | சுந்தராம்பாள், திருமதி செ. | | மேட்டூர். |

| | (1) | | (2) |
|---|---|---|---|
| 101. | சுப்பிரமணியன், திரு. வி. எம். | | மானாமதுரை (செ.வ.) |
| 102. | சுப்பிரமணியன், திரு. வி.என். | ... | பெருந்துறை. |
| 103. | சுப்பிரமணியன், திரு. வீ. | ... | கண்டமங்கலம் (செ.வ.). |
| 104. | சுப்புரத்தினம், திரு. ஏ. | .. | பழனி. (செ,வ.). |
| 105. | சுலோசனா, செல்வி எல். | | மேட்டுப்பாளையம். |
| 106. | சுவாமிநாதன், திரு. சி. | .. | புதுக்கோட்டை. |
| 107. | செங்கோட்டையன், திரு. கே.ஏ. | | கோபிச்செட்டிபாளையம். |
| 108. | செல்லக்குமார், டாக்டர் அ., | | அண்ணாநகர். |
| 109. | செல்லசாமி, திரு. ஏ. டி. | .. | ஒட்டன்சத்திரம். |
| 110. | செல்லத்துரை, திரு. ஆ. | ... | திருச்செந்தூர். |
| 111. | செல்வகணபதி, திரு. டி..எம். | | திருச்செங்கோடு. |
| 112. | செல்வராசன், திரு. அ. | .. | துறைமுகம். |
| 113. | செல்வராஜ், திரு. கி. | .. | கோயம்புத்தூர் மேற்கு. |
| 114. | செழியன், திரு. தா. | .. | பெரம்பலூர் (செ.வ.) |
| 115. | சேகர், டாக்டர் எம்.பி. | .. | பெரம்பூர்(செ.வ.). |
| 116. | சேகர், திரு. எம்.ஜீ. | .. | பாலக்கோடு. |
| 117. | சொக்கலிங்கம், திரு. .பி. | .. | மதுராந்தகம். |
| 118. | சோமசுந்தரம், திரு. எஸ்.டி. | | தஞ்சாவூர். |
| 119. | ஞானசேகரன், திரு. சி. | .. | வேலூர். |
| 120. | டேனியல்ராஜ், திரு.எஸ். | .. | ஸ்ரீவைகுண்டம். |
| 121. | தங்கமுத்து, திரு. கே. | .. | திருவோணம். |
| 122. | தங்கராஜ், திரு. ஆர். | .. | ஆண்டிமடம். |



| | (1) | | (2) |
|---|---|---|---|
| 123. | தங்கவேல், திரு. எம். | .. | முசிறி. |
| 124. | தண்டாயுதபாணி, திரு.வி. | .. | குடியாத்தம். |
| 125. | தமிழரசன், திரு. செ.கு. | .. | வந்தவாசி (செ.வ.). |
| 126. | தமிழரசு, திரு. வெ. | .. | ஆத்தூர். |
| 127. | தம்புசாமி, திரு. வி. | .. | திருவாரூர் (செ.வ.). |
| 128. | தருமலிங்கம், திரு. கி. | .. | அணைக்கட்டு. |
| 129. | தர்மலிங்கம், திரு. பே. | | பாளையங்கோட்டை |
| 130. | தவசி, திரு. கே. .. | .. | ஆண்டிப்பட்டி. |
| 131. | தனபால், திரு. ம. | .. | திருப்போரூர் (செ.வ.). |
| 132. | தாமரைக்கனி, திரு. இரா. | ... | ஸ்ரீவில்லிபுத்தூர். |
| 133. | தாமோதரன், திரு. சி. | .. | நெல்லிக்குப்பம். |
| 134. | திருநாவுக்கரசு, திரு. எஸ். | .. | அறந்தாங்கி. |
| 135. | துரை, திரு. எஸ்.எம். | .. | ஆத்தூர். |
| 136. | துரைமுருகன், திரு. கே. எஸ். | | பல்லடம். |
| 137. | துரை ராமசாமி, திரு. | .. | வெள்ளக்கோவில். |
| 138. | தெய்வநாயகம், திரு. எ. | .. | மதுரை மத்தி. |
| 139. | தென்னவன், திரு. .மு. | .. | இராமநாதபுரம். |
| 140. | தேவராஜ், திரு. அ. | .. | செய்யாறு. |
| 141. | தேனி பன்னீர்செல்வம், திரு. வெ. | .. | போடிநாயக்கனூர். |
| 142. | நடேசன், திரு. இரா. | .. | திருவட்டாறு. |
| 143. | நடேசன், திரு. .மு. | .. | சேலம்-2. |
| 144. | நடேசன், பால்ராஜ், திரு.வி. | | நாங்குநேரி. |
| 145. | நாகூர் மீரான், திரு. சை. | .. | கடையநல்லூர். |

| (1) | | (2) |
|---|---|---|
| **146. நிர்மலா, செல்வி, பி.** | .. | **திண்டுக்கல்.** |
| **147. நெடுஞ்செழியன், டாக்டர் இரா.** | .. | **தேனி.** |
| 148. பஞ்சவர்ணம், திருமதி கே. | .. | வலங்கைமான் (செ.வ.). |
| 149. பட்டாபிராமன், திரு. கா.ப. | .. | காஞ்சிபுரம். |
| 150. பரந்தாமன், டாக்டர், ஜெ. | .. | பேரணாம்பட்டு (செ.வ.) |
| 151. பரமசிவம், திரு. ஆர்.பி. | .. | சின்னசேலம். |
| 152. பரமசிவன், திரு. அ. மா. | .. | சோழவந்தான். |
| 153. பலராமன், திரு. உ. | .. | பூங்காநகர். |
| 154. பழனிசாமி, திரு. இரா. | .. | தாரமங்கலம். |
| 155. பழனிசாமி, திரு. க. | .. | எடப்பாடி. |
| 156. பழனிசாமி, திரு. நா.சா. | .. | கிணத்துக்கடவு. |
| 157. பழனிசாமி, திரு. வெ. | .. | திருப்பூர். |
| 158. பழனிசாமி, திரு. ஜி. | .. | திருத்துறைப்பூண்டி (செ.வ.). |
| 159. பழனியம்மாள், திருமதி கே. | | ராசிபுரம். |
| 160. பன்னீர்செல்வம், திரு. என். | | திருவிடைமருதூர். |
| 161. பன்னீர்செல்வம், திரு. சா. | .. | திண்டிவனம். |
| 162. பன்னீர்செல்வம், திரு.ஜெ. | .. | திருநாவலூர். |
| 163. பாண்டியம்மாள், திருமதி இரா. | .. | உசிலம்பட்டி. |
| 164. பாப்பா சுந்தரம், திரு. அ. | .. | குளித்தலை. |
| 165. பாலகங்காதரன், திரு. ஜெ. | .. | சிவகாசி. |
| 166. பாலகிருஷ்ணன், திரு. சோ. | .. | முதுகுளத்தூர். |
| 167. பாலசுப்பிரமணியன், திரு. எஸ். ஆர். | .. | பொங்கலூர். |



| (1) | | (2) |
|---|---|---|
| 68. பாலசுப்பிரமணியன், திரு. கே. | .. | பட்டுக்கோட்டை. |
| 69. பாலன், திரு. எம்.கே. | .. | சைதாப்பேட்டை. |
| 70. பாலையா, திரு. ஆ. | .. | குளச்சல். |
| 71. பீட்டர் அல்போன்ஸ், திரு. எஸ். | .. | தென்காசி. |
| 72. புதுநயினார் ஆதித்தன், திரு. இரா. | .. | சேரன்மகாதேவி. |
| 73. புரட்சிமணி, திரு. ச. | .. | மங்களூர் (செ.வ.) |
| 74. புருஷோத்தமன், டாக்டர், வெ. | .. | பெண்ணாகரம். |
| 75. பூராசாமி, திரு. எம். | .. | பூம்புகார். |
| 76. பெரியசாமி, திரு. வே. | .. | அந்தியூர் (செ.வ.) |
| 77. பெரியவீரன், திரு. எம். | .. | பெரியகுளம். |
| 78. பெருமாள், திரு. செ. | .. | ஏற்காடு (ம.ப.) |
| 79. பொன்னம்மாள், திருமதி ஏ.எஸ். | .. | நிலக்கோட்டை. (செ.வ.). |
| 180. பொன்னுசாமி, பேராசிரியர், க. | .. | மருங்காபுரி. |
| 81. பொன்னுசாமி, திரு. பெ. | .. | தருமபுரி. |
| 82. பொன்னுவேலு, திரு. எ.தா. | .. | வரகூர் (செ.வ.) |
| 83. பேரூர் வரதன், திரு. | .. | ஸ்ரீபெரும்புதூர் (செ.வ.). |
| 84. மணிமேகலை, டாக்டர் (திருமதி), சு. | .. | அரியலூர். |
| 85. மணிமேகலை, திருமதி வி.ஜி. | .. | அருப்புக்கோட்டை. |
| 86. மணிவாசகம், திரு. கே.பி. | .. | உடுமலைப்பேட்டை |
| 87. மதுசூதனன், திரு. இ. | .. | டாக்டர் இராதா கிருஷ்ணன் நகர். |
| 88. மரியமுல் ஆசியா, திருமதி, கே. | .. | அரவக்குறிச்சி. |

| | (1) | (2) |
|---|---|---|
| 189. | மல்லிகா, செல்வி, ஜி. | புவனகிரி. |
| 190. | மனோகரன், திரு. கே.ஏ. | ஓசூர். |
| 191. | மாணிக்கம், திரு. சி. | ஈரோடு. |
| 192. | மாலா, டாக்டர் (செல்வி), ஜி.ஆர். | திருச்சிராப்பள்ளி-2. |
| 193. | முகமது ஆசிப், திரு. | திருவல்லிக்கேணி. |
| 194. | முத்துசாமி, திரு. சு. | பவானி. |
| 195. | முத்தையா, திரு. இரா. | சேடப்பட்டி. |
| 196. | முருகானந்தம், திரு. கே.ஆர். | சிவகங்கை. |
| 197. | முருகையா பாண்டியன், திரு. ஆர். | அம்பாசமுத்திரம். |
| 198. | முனிரத்தினம், திரு. ஏ.எம். | சோளிங்கர். |
| 199. | முனிவெங்கடப்பன், திரு. கே. | கிருஷ்ணகிரி. |
| 200. | முனுசாமி, திரு. கா. பூ. | காவேரிப்பட்டிணம். |
| 201. | மூர்த்தி, திரு. டி. | சீர்காழி (செ.வ.) |
| 202. | மோசஸ், டாக்டர், எம். | நாகர்கோவில். |
| 203. | ரகுபதி, திரு. செ. | திருமயம். |
| 204. | ரங்கநாதன், திரு. ட. | புரசைவாக்கம். |
| 205. | ரங்கராஜன், திரு. டி. எம். | மயிலாப்பூர். |
| 206. | ரத்தினவேல், திரு. த. | திருவெறும்பூர். |
| 207. | ரமணி நல்லதம்பி, திருமதி | ராதாபுரம். |
| 208. | ரமேஷ், திரு. வி.பி.ஆர். | தூத்துக்குடி. |
| 209. | ரவிக்குமார், திரு. ஏ. | பொன்னேரி. (செ.வ.) |
| 210. | ரவிச்சந்திரன், திரு. வி. | உப்பிலியாபுரம் (ம.ப.) |
| 211. | ராமசுப்பு, திரு. எஸ்.எஸ். | ஆலங்குளம், |



| | (1) | (2) |
|---|---|---|
| 212. | ராஜு, திரு. எச்.எம். | உதகமண்டலம். |
| 213. | ராஜு, திரு. கே.ஆர். | கூடலூர். |
| 214. | ராஜு, திரு. கே. பி. | பேரூர். |
| 215. | லட்சுமணன், திரு. வி.கே. | கோயம்புத்தூர் கிழக்கு. |
| 216. | லாரன்ஸ், திரு. கு. | பத்மநாபபுரம். |
| 217. | லோகாம்பாள், திருமதி, ஜெ. | லால்குடி. |
| 218. | வரதராஜன், திரு. செ.து. | செங்கல்பட்டு. |
| 219. | விசுவநாதன், திரு. ஜி. | ஆற்காடு. |
| 220. | வீரபாண்டியன், டாக்டர் பெ. | செங்கம் (செ.வ.) |
| 221. | வெங்கடராம ரெட்டி, திரு. மு. | தளி. |
| 222. | வெங்கடேசன், திரு. பி.ஆர். எஸ். | கடலூர். |
| 223. | வேடியப்பன், திரு. தா. | போளூர். |
| 224. | வேணுகோபால், திரு. என்.ஜி. | ராணிப்பேட்டை. |
| 225. | வேலையா, திரு. டி. | திருநெல்வேலி. |
| 226. | ஜனார்த்தனன், திரு. தே. | விழுப்புரம். |
| 227. | ஜானகிராமன், திரு. கோ. | மேல்மலையனூர். |
| 228. | ஜீனத் ஷெர்புதீன், திருமதி | சேப்பாக்கம். |
| 229. | ஜெயக்குமார், திரு. எஸ். | தியாகராய நகர். |
| 230. | ஜெயக்குமார், திரு. டி. | ராயபுரம். |

| | (1) | (2) |
|---|---|---|
| 231. | ஜெயராமன், திரு. எஸ்.ஆர். .. | சேலம்-1. |
| 232. | ஜெயலலிதா, செல்வி ஜெ. .. | பர்கூர். |
| 233. | ஜெய்சன் ஜேக்கப், டாக்டர் .. | ஆரணி. |
| 234. | ஸ்ரீதரன், டாக்டர் அ. .. | வால்பாறை (செ.வ.) |
| 235. | பியாட்ரிக்ஸ் டாக்டர் (திருமதி) டி.சூசா. | நியமன உறுப்பினர் |

பேரவை நடவடிக்கைகளில் பங்கு கொள்ள உரிமை பெற்றவர்

| | |
|---|---|
| சுப்பிரமணியன், திரு.கே. | தலைமை வழக்கறிஞர். |

## உள்ளடக்கம்.

24—09—1991.

பக்கங்கள்.


1. மானியக் கோரிக்கைகள், 1991-92—விவாதமும் வாக்கெடுப்பும்— தொடர்ச்சி.

(அ) கோரிக்கை எண். 2— மாநில ஆயத் தீர்வைத் துறை.
(ஆ) கோரிக்கை எண். 15—காவல் துறை.
(இ) கோரிக்கை எண். 16—தீயணைப்புப் பணிகள். } 1–53

மாண்புமிகு செல்வி ஜெ. ஜெயலலிதா 1–50

(ஈ) கோரிக்கை எண். 20—வேளாண்மை
(உ) கோரிக்கை எண். 53—வேளாண்மை குறித்த மூலதனச் செலவு. } 53–158

1. *மாண்புமிகு திரு. கு.ப. கிருஷ்ணன். 54–56, 141–157
2. திரு. வி. தண்டாயுதபாணி. 56–66
3. *திரு. கி. பாலசுப்பிரமணியன். 66–70
4. திரு. ஜி. பழனிசாமி. 70–75
5. *திரு. வி. பி. சந்திரசேகர். 76–81
6. திரு. அ. பாப்பா சுந்தரம். 81–86
7. *திரு. இரா. பழனிசாமி. 86–90
8. திரு. நா. சா. பழனிசாமி. 90–94
9. திரு. எம். கே. சுந்தரம். 94–99
10. திரு. ஏ. டி. செல்லசாமி. 99–102
11. *திரு. அ. தேவராஜ். 102–106

பக்கங்கள்

12. *பேராசிரியர் (திருமதி) கற்பகம் இளங்கோ. 106-110
13. திரு. ஆர். ஈஸ்வரன். 110-114
14. திரு. கே. தவசி. 115-119
15. திரு. எம். சுந்தரசாமி. 119-122
16. *திரு. கு. தங்கமுத்து. 122-129
17. *திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள். 129-134
18. திரு. எஸ். நாகூர் மீரான். 134-137
19. திரு. வே. கண்ணன். 137-141

(ஊ) கோரிக்கை எண். 13—நீதி நிருவாகம்.
(எ) கோரிக்கை எண். 14—சிறைச்சாலைகள். } 158-244

1. *மாண்புமிகு திரு.கே.ஏ. கிருஷ்ணசாமி. 159-160, 214-243
2. *திரு. பெ. பொன்னுசாமி. 160-166
3. திரு. செ. ரகுபதி. 166-170
4. திரு. எஸ். ஆண்டித்தேவர். 170-175
5. திரு. பி. சொக்கலிங்கம். 175-177
6. *திரு. தா. செழியன். 177-181
7. திரு. என். ஆர். சிவபதி. 181-184
8. திரு. சஞ்சய் ராமசாமி. 184-187
9. *திரு. சி. இராமசுவாமி. 187-189
10. திரு. கு. சு. துரைமுருகன். 190-197
11. *திரு. மு. வெங்கடராம ரெட்டி. 197-201
12. *திரு. கே. ஆர். முருகானந்தம். 201-206
13. திரு. சி. ஞானசேகரன். 206-214

2. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள். 244-246

## தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

புரட்டாசி 8, பிரஜோற்பத்தி—திருவள்ளுவர் ஆண்டு 2022.

1991, செப்டம்பர் 24, செவ்வாய்க்கிழமை

மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. இரா. முத்தையா அவர்கள் தலைமையில் முற்பகல் 9-30 மணியளவில் பேரவை கூடியது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் :

"சுழன்றும்ஏர்ப் பின்னது உலகம் அதனால்
உழந்தும் உழவே தலை."

உலகம் பல தொழிலைச் செய்து சுழன்றாலும் ஏர்த் தொழிலின் பின் நிற்கின்றது ; அதனால் எவ்வளவு துன்புற்றாலும் உழவுத் தொழிலே சிறந்தது.

1. மானியக் கோரிக்கைகள், 1991-92—விவாதமும் வாக்கெடுப்பும்—தொடர்ச்சி.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : 1991-92 ஆம் ஆண்டுக்கான மானியக் கோரிக்கைகள் மீது விவாதமும், வாக்கெடுப்பும்.

கோரிக்கை எண். 2— மாநில ஆயத் தீர்வைத் துறை.

கோரிக்கை எண். 15— காவல் துறை.

கோரிக்கை எண். 16— தீயணைப்புப் பணிகள்.

23—9—1991 அன்று மேற்படி மானியக் கோரிக்கைகள் மீது நடந்த விவாதத்திற்குப் பதிலுரை, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு செல்வி ஜெ. ஜெயலலிதா : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, காவல் துறை மானியம், தீயணைப்புத் துறை மானியம், மாநில ஆயத் தீர்வை மானியம் ஆகிய முப்பெரும் மானியங்களின் மீது பேரவை உறுப்பினர்கள் பேசிய கருத்துக்களை உன்னிப்பாகக் கவனித்துக் கொண்டிருந்தேன். மொத்தம் 18 மாண்புமிகு உறுப்பினர்கள் தமது அரும்பெரும் கருத்துக்களைக் கூறியிருக்கிறார்கள்.

[செல்வி ஜெ. ஜெயலலிதா] [1991 செப்டம்பர் 24

காவல் துறை மானியத்தின் மீது 54 வெட்டுத் தீர்மானங்களும், தீயணைப்புத் துறை மானியத்தின் மீது 29 வெட்டுத் தீர்மானங்களும், மாநில ஆயத் தீர்வைத் துறை மானியத்தின் மீது 12 வெட்டுத் தீர்மானங்களும், உறுப்பினர்களால் கொடுக்கப்பட்டிருக்கின்றன.

உறுப்பினர்களின் கருத்துரைகளும், வெட்டுத் தீர்மானங்களின் சாரமுமே இந்த மானியங்களின் கூறுபாடுகளையும், குறைபாடுகளையும் தெளிவாக்கி இருக்கின்றன. எந்தத் திட்டத்திலும், செயல்பாட்டிலும் குறையும் உண்டு, நிறையும் உண்டு.

"குணம்நாடிக் குற்றமும் நாடி அவற்றுள்
மிகைநாடி மிக்க கொளல்";

என்பதே வள்ளுவம்.

இந்த அரசைப் பொறுத்தவரையில் குறைகள் இருந்தால் குறைக்கப்பட வேண்டும். நீக்கப்பட வேண்டும். நிறைகள் இன்னும் நீட்டிக்கப்பட வேண்டும் என்பதுதான்.

காவல் துறை மானியத்தில் நீங்கள் சுட்டிக்காட்டிய குறைகளையெல்லாம் மேலோட்டமாகப் பார்த்தால், அவற்றையெல்லாம் பின்வருமாறு வகைப்படுத்தலாம் எனக் கருதுகிறேன் ;

(1) காவல் நிலையங்களில் புகார் கொடுத்தால் பதிவு செய்யப்படுவதில்லை ;

(2) காவல் துறையினர் பரிகாரம் தேடிவருபவர்களை மனிதாபிமானத்துடன் நடத்தாது கடுமையாக நடந்து கொள்கிறார்கள் ;

(3) குற்றவாளிகளைக் கண்டுபிடித்து தண்டிக்க வேண்டிய காவல் துறையினர் அக்குற்றவாளிகளை மறைமுகமாக ஆதரிக்கிறார்கள் ; உதவுகிறார்கள் ;

(4) மாமூல் வாங்கி கொண்டு, குற்றம் புரிபவர்கள் மீது நடவடிக்கை எடுப்பது இல்லை.

(5) வேலை செய்வதில் திறமை இல்லை ;

(6) குற்றங்கள் நடக்கும் முன் முன்கூட்டியே கணித்து நடவடிக்கை எடுக்கவில்லை ;



1991 செப்டம்பர் 24] [செல்வி ஜெ. ஜெயலலிதா]

(7) இருக்கும் காவல் நிலையங்கள் போதாது ; இன்னும் வேண்டும். வாடகைக்கு இருக்கும் காவல் நிலையக் கட்டிடங்களுக்குச் சொந்தக் கட்டிடம் வேண்டும்.

(8) காவலர்களுக்குக் குடியிருப்பு வசதி செய்யப்பட வேண்டும் ;

(9) போக்குவரத்தில் உள்ள குறைபாடுகள் களையப் பட வேண்டும்.

இதுபோன்ற பல குறைபாடுகளைச் சுட்டிக்காட்டி, அதே நேரத்தில் அவர்களின் சில பணிகளைப் பாராட்டியும் கருத்துத் தெரிவித்திருக்கிறீர்கள். நீங்கள் கூறியபடி குறைகள் இல்லை என்று நான் சொல்லப் போவதில்லை. அதே நேரம் அது மிகைப்படுத்தப்பட்டிருக்கிறது என்பதையும் மறுப்பதற்கில்லை.

காவல் துறையினர், சமுதாயத்தில் சட்டம் ஒழுங்கைப் பாதுகாத்து, உயிருக்கும், உடைமைக்கும் பாதுகாப்பு அளித்து, பாதிக்கப்பட்டவர்களுக்குப் பரிகாரமும், மன நிறைவும் அளித்து பணி புரிய வேண்டியவர்கள். முன்பெல்லாம் அவர்களுக்கு அது எளிதாக இருந்தது. ஆனால் இப்பொழுதெல்லாம் அவர்களின் பணி கடுமையானதாகவும் சிக்கலானதாகவும், சிரமமானதாகவும் மாறியிருக்கிறது. இதற்குக் காரணம் பலவாக இருந்தாலும், என்னைப் பொறுத்த வரையில் பல இக்கட்டான சூழ்நிலையிலும், அவர்கள் ஆற்றியுள்ள பல்வேறான பணிகளை என்னால் பாராட்டாமல் இருக்க முடியாது.

மற்ற மாநிலத்தவரோடு ஒப்பிடும்பொழுது நமது மாநிலக் காவல் துறையினர் செயல் வீரர்கள் என்று சொன்னால் அது மிகையாகாது. (மேசையைத் தட்டும் ஒலி).

முற்பகல் 9-35

இந்த நேரத்தில் ஒருசில புள்ளி விவரங்களைச் சொல்வது பொருத்தமாக இருக்குமென்றே கருதுகிறேன். தமிழ் நாட்டில், 1990 ஆம் ஆண்டு பதிவாகிய வழக்குகளின் மொத்த எண்ணிக்கை 1,28,829 ஆகும். அதே ஆண்டு, ஆந்திராவில் 88,084 குற்றங்களும், கர்னாடகாவில் 56,873 குற்றங்களும், கேரளாவில் 75,649 குற்றங்களும் பதிவாகியுள்ளன. தமிழ்நாட்டில் 52,000 பேருக்கு ஒரு காவல் நிலையமும், ஆந்திராவில் 46,500 பேருக்கு ஒரு காவல் நிலையமும் அமைந்துள்ளது. இதை வைத்துப் பார்த்தால்

தமிழ்நாட்டில் வேலைப்பளு அதிகம் என்று தெரிகிறது. இருப்பினும், பதிவான குற்றங்களின் எண்ணிக்கையில் தமிழகக் காவல் துறை 65.1 விழுக்காடு அளவிற்கு குற்றங்களைக் கண்டுபிடித்து, சிறந்த சேவை ஆற்றியுள்ளது. அதே ஆண்டு, ஆந்திர மாநிலத்தில் 52.6 விழுக்காடும், கேரள மாநிலத்தில் 22.6 விழுக்காடும் என்ற அளவுக்குத் தான் குற்றங்களைக் கண்டுபிடித்துள்ளனர். குறிப்பாக, களவாடிய பொருட்களை மீட்பதில், தமிழ்நாடு 65.5 விழுக்காடு அளவு எட்டி, முதலிடம் வகிக்கிறது. கர்னாடகம் 52.9 விழுக்காடும், ஆந்திரா 45.6 விழுக்காடும், கேரளா 25.8 விழுக்காடும் பெற்றுள்ளனர். களவு சொத்துக்களை மீட்பதில், அகில இந்திய அளவான 48 விழுக்காட்டை மிஞ்சும் அளவுக்கு, தமிழ்நாடு அதிக அளவுக்கு கண்டு பிடித்துள்ளது குறிப்பிடத்தக்கதாகும். (மேசையைத் தட்டும் ஒலி) தமிழகத்தில் இழக்கப்பட்ட சொத்தின் மதிப்பு சுமார் $13\frac{1}{2}$ கோடி. மீட்கப்பட்ட சொத்தின் மதிப்பு சுமார் ரூபாய் $8\frac{1}{4}$ கோடி. இத்தனை சிறப்புக்குரிய காவல் துறையினருக்கு நமது மாநிலத்தில் 1,075 காவல் நிலையங்களும், 180 புற காவல் நிலையங்களும் உள்ளன. இவற்றை வைத்து 1.30 இலட்சம் சதுர கிலோ மீட்டர் பரப்பளவில் பரவிக் கிடக்கின்ற $5\frac{1}{2}$ கோடி மக்களைப் பாதுகாத்தாக வேண்டும் என்ற பொறுப்பு அவர்களிடம் சுமத்தப் பட்டிருக்கிறது. காவல் துறையின் மற்றொரு முக்கிய பணியை என்னால் இதுசமயம் நினைவு கூராமல் இருக்க முடியவில்லை.

சமீபகாலம் வரை அமைதிப் பூங்காவாகத் திகழ்ந்த நமது மாநிலம் இலங்கைப் போராளிகள்— குறிப்பாக, விடுதலைப் புலிகளின் அமளிக் காடாக, ஆயுதக் கலாசாரத்தின் கிடங்காக மாறியதனால் பேரதிர்ச்சியையும், பெரும் பயத்தையும் உண்டாக்குகிறது. அண்டை நாட்டிலே ஏற்பட்ட அவர்களின் பிரச்சினை, நம் மாநிலத்தை இவ்வளவு தூரம் பாதிக்கும் என்று எதிர்பார்க்கவில்லை. இலங்கைத் தமிழர்களுக்கு விளைந்த இன்னல்களைக் களைய முற்பட்ட தமிழகம், இன்று அந்த நாட்டு விடுதலைப் புலிகளின் அட்டகாசத்திற்கும், அடாவடிச் செயல்களுக்கும் ஆட்பட்டு, அல்லோல கல்லோலப்படுவது தெளிவாகிவிட்டது. எங்கள் கட்சியின் தேர்தல் அறிக்கையிலே, தமிழ்நாட்டை, இலங்கைத் தீவிரவாதிகள், தங்களுடைய பயங்கரவாத நடவடிக்கைகளுக்கு இருப்பிடமாக ஆக்கிக்கொள்ள இம்மியளவும் அனுமதிக்க மாட்டோம் என்று குறிப்பிட்டிருக்கிறோம். (மேசையைத் தட்டும் ஒலி) அதன் அடிப்படையில், இலங்கைத் தீவிரவாதிகள் மற்றும் அகதிகள் ஆகியோரின் மீது எங்களுடைய தெளிவான கொள்கையை, மக்களுக்கும், மத்திய அரசுக்கும் எடுத்து வைத்துள்ளோம். அதாவது,



இந்த அரசு, அரசியல் மன உறுதியை—political will—தெள்ளத் தெளிவாக்கியுள்ளது. இலங்கையிலிருந்து வந்த தமிழ் அகதிகளுக்கு உதவும் கரமாகவும், ஊட்டும் கரமாகவும் திகழும் அதே நேரத்தில், இந்த அரசு, ஆயுதத்தையும், பலாத்காரத்தையும் பிரயோகித்து, பல்வேறு கொடுஞ் செயல்களைச் செய்யும் விடுதலைப் புலிகளின் விஷயத்தில் இணக்கம் காட்டவோ, அவர்களை அடக்குவதில் தயக்கம் காட்டவோ தயாராக இல்லை என்று தெளிவாகச் சொல்லியுள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி) இன்னும் சிறிது வெளிப்படையாகச் சொன்னால், அமைதியான தமிழகத்தில் இப்படிப்பட்ட கொடுமையாளர்களுக்கு இடம் இல்லை என்பதைத் திட்டவட்டமாக அறிவித்துள்ளது, இந்த அரசு. (மேசையைத் தட்டும் ஒலி)

காவல் துறையினரையும், நிர்வாக இயந்திரத்தையும் முடுக்கி விட்டிருக்கிறது. எப்படியும், விடுதலைப் புலிகளின் பயங்கரவாதங்களை அடக்கியே தீருவது என்பதை, முடிந்த முடிவாகக் கொண்டு, அதற்கான நடவடிக்கைகளில் தமிழக அரசு தீவிரமாக இறங்கியுள்ளது. ஆட்சிப் பொறுப்பேற்றவுடனேயே, 26—6—1991 அன்று காவல் துறை, கப்பல் படை, கடலோர உயர் அதிகாரிகளின் மேல்மட்டக் கூட்டம் ஒன்றைக் கூட்டி, தமிழகத்தில் ஒருசில தமிழ் ஈழப் போராளிகள்—குறிப்பாக, விடுதலைப் புலிகளின் நடவடிக்கைகளை, தமிழகத்தில் எப்படியும் ஒடுக்குவது என்பது குறித்து தீவிரமாக ஆராயப்பட்டது.

முற்பகல் 9-40

இவர்களை அடக்கி ஒடுக்குவதில் காவல் துறையினர் எடுத்த அதிரடி நடவடிக்கை வெகுவாகப் பாராட்டத்தக்கது. அகதிகள் முகாமில் இல்லாத இலங்கைத் தமிழர்கள் நம் மாநிலத்தில் தங்கியிருப்பதைச் சிராக்கவும், அவர்கள் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு இடம் கொடுப்பதைத் தடுக்கவும் முகாமில் தங்களைப் பதிவு செய்து கொள்ளாத இலங்கைத் தமிழர்கள் தங்கள் அருகில் உள்ள காவல் நிலையங்களுக்குச் சென்று தங்கள் பெயர்களைப் பதிவு செய்து கொள்ள வேண்டுமென்று எல்லாத் தினசரிப் பத்திரிகைகளிலும் தமிழ்நாடு அரசு 28—6—1991 அன்று அறிவிப்புக் கொடுத்தது. இது தொலைக்காட்சியிலும், வானொலியிலும் அறிவிக்கப்பட்டது. அதன் அடிப்படையில், 27,187 இலங்கைத் தமிழர்கள் தங்களைப் பதிவு செய்து கொண்டனர். இலங்கையைச் சேர்ந்தவர்களுக்கு வாடகைக்கு வீடு கொடுத்த 3,569 வீட்டு உரிமையாளர்களும், இலங்கையைச் சேர்ந்த நபர்கள் தங்களது நிறுவனங்களில் பணி செய்து கொண்டிருப்பதாக 1,104 நிறுவனங்களும், அந்தந்த எல்லைக்குட்பட்ட காவல் நிலையங்களில்

இது குறித்துத் தகவல்களை அளித்துள்ளனர். இவ்வாறு காவல் நிலையங்களில் பதிவு செய்து கொள்ளும் கடைசித் தேதி முடிந்த பின்னரும், பதிவு செய்து கொள்ளாத இலங்கைத் தமிழர்களைக் கண்டுபிடிக்கும் சிறப்பு நடவடிக்கை ஒன்றைக் காவல்துறையினர் மேற்கொண்டனர். இத்தகைய இலங்கைத் தமிழர்கள் சுமார் 500 பேர் தனி முகாம்களில் தற்போது வைக்கப்பட்டுள்ளனர்.

மாநிலத்தின் கடலோரப் பகுதிகளில் கடத்தல்காரர்கள், மற்றும் விடுதலைப் புலிகளின் நடவடிக்கைகளை ஒடுக்கக் கடுமையான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. தமிழகத்தின் கடலோரப் பகுதிகளில் முக்கியமான இடங்களில் நவீன ஆயுதங்களைத் தாங்கிய ஆயுதப் போலீசாரின் 34 சோதனைச் சாவடிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. கடல் வழியே தமிழீழ விடுதலைப் புலிகளின் ஊடுருவலைத் தடுக்கும் வண்ணம், மத்திய ரிசர்வ் காவல் படையின் 10 கம்பெனிகளும், தமிழ்நாடு சிறப்புக் காவல் படையின் 10 கம்பெனிகளும் கடலோரப் பகுதிகளில் நிறுத்தப்பட்டுள்ளன. இலங்கைத் தமிழ் தீவீரவாதிகளை வெளிக்கொணர மத்திய ரிசர்வ் காவல் படையின் மேலும் இரண்டு கம்பெனிகள் உட்பகுதியில் நிறுத்தப்பட்டுள்ளன. கடலோரக் கிராமங்களில், வாகனம் மற்றும் காலால் நடந்து செல்லும் ரோந்துப் பணியும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன. கடலோரத்தின் முக்கிய இடங்களில், தகவல் தொடர்பு சாதனங்கள் பொருத்தப்பட்டு விரைவு வாகனங்களில், அதிரடிப்படையினரும் நிலை கொண்டுள்ளனர்,

மீனவர்கள், அவர்கள் வழக்கமாகப் பயன்படுத்தும் படகுகளுக்குத் தேவையான அளவு எரிபொருட்களைத்தான் வாங்குகிறார்களா என்பதைக் கண்காணிப்பதற்கு, அனைத்து மீனவர்களுக்கும் அடையாள அட்டைகள் வழங்குவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு இருக்கின்றன.

தமிழ்நாட்டின் பரந்த கடலோரப் பகுதி, கப்பற்படை, கடலோரப் பாதுகாப்புப் படை மற்றும் சுங்கத்துறை ஆகியவற்றின் ஒத்துழைப்போடு கண்காணிக்கப்பட்டு வருகிறது.

கடற்பகுதியில், நம் எல்லை வரையிலும் சென்று மீன் பிடித்தல் சீராக்கப்பட்டு கட்டுப்படுத்தப்பட்டிருக்கிறது. காவல் துறையினரின் துணையோடு செல்லும் மீன்பிடி படகு அணிகள் மட்டுமே நமது கடல் எல்லைவரை சென்று மீன்பிடிக்க அனுமதிக்கப்படுகின்றன. இத்தகைய நடவடிக்கை மீனவர்களோடு மீனவர்களாகக் கலந்து இலங்கை



யிலிருந்து இங்கு வந்து செல்வதற்கான ஒரு வாய்ப்பை, விடுதலைப் புலிகளுக்குக் கிடைக்காமல் செய்ய முடியும் என்ற ஒரு உறுதிப்பாட்டை நமக்கு அளிக்கிறது.

இதுவரை 10 விடுதலைப் புலிகளும், 21 இலங்கைத் தமிழர்களும், விடுதலைப் புலிகளின் உள்ளூர் ஆதரவாளர்கள் 40 பேரும் கைது செய்யப்பட்டுள்ளனர். மொத்தம் 4,760 லிட்டர் டீசல்; 2,444 லிட்டர் என்ஜின் ஆயில்; 150 லிட்டர் மண்ணெண்ணெய்; 1 லாரி; 6 மோட்டார் சைக்கிள்கள்; 2 வேன்கள்; 3 பிளாஸ்டிக் படகுகள்; 8 படகு என்ஜின்கள்; ரொக்கம் ரூ. 2,72,773; 5 பிஸ்டல்கள்; 2 நாட்டு ரக ரிவால்வர்கள்; 13 நாட்டு ரகத் துப்பாக்கிகள்; 5,597 தோட்டாக்கள்; 6 கையெறி குண்டுகள், 7,650 காலி கையெறி குண்டுகள், 19 பயன்படுத்தப்பட்ட ஏ.கே. 47 துப்பாக்கித் தோட்டாக்கள், 46 கிராம் தங்கம், 26 வயர்லெஸ் செட்டுகள், 10 மீட்டர் விடுதலைப் புலிகளின் சீருடைத் துணி, 26,523 வெடிகுண்டு குச்சிகள; 38,440 மின்சார டிடோனேடர்கள்; 1,21,853 சாதாரண டிடோனேடர்கள் மற்றும் 10,000 அடி ஃப்யூஸ் ஒயர் ஆகியவற்றைக் காவல்துறையினர் கைப்பற்றினர்.

முற்பகல் 9-45

சட்டம் ஒழுங்குப் பிரச்சினையைச் சமாளிப்பதிலும், குற்றத் தடுப்பு முயற்சிகளை மேற்கொள்வதிலும், போக்குவரத்தை ஒழுங்குபடுத்துவதிலும் ஈடுபட்டுள்ள நமது காவல் துறையை நவீனப்படுத்துவது தற்போது காலத்தின் கட்டாயமாகும். காவல் துறைக்கு நவீன ஆயுதங்கள் வழங்கப்படுவதும் சரியான பயிற்சிகள் அளிக்கப்படுவதும் முன்னுரிமையோடு கவனிக்கப்பட வேண்டிய விஷயம். குறிப்பாக இலங்கைப் போராளிகள் மற்றும் தீவீரவாதிகளின் நடவடிக்கைகளால் தமிழகக் காவல் துறை உடனடியாக நவீனப்படுத்தப்பட வேண்டிய கட்டாயத்திற்குத் தள்ளப்பட்டுள்ளது. இன்னும் இலங்கைப் போராளிகளின் அச்சுறுத்தல் தொடரும் நிலை உள்ளதாலும், மிகவும் நவீன சக்திவாய்ந்த நுட்பமான ஆயுதங்களை போராளிகள் பயன்படுத்தி வருவதாலும், நமது காவல் துறையினர் வசம் உள்ள ஆயுதங்கள் போராளிகள் பயன்படுத்தும் ஆயுதங்களுக்கு நிகரானது இல்லை என்பதாலும் நமது காவல் படையினருக்கு நவீன ஆயுதங்கள், சிறப்புப் பயிற்சிகள் மற்றும் அடிப்படை வசதிகள் ஆகியவற்றை அளிப்பது மிகவும் அவசியம் ஆகிறது. அதன் அடிப்படையில் காவல் துறையை வலுப்படுத்தவும் நவீனப்படுத்தவும் ரூபாய் 80.45 கோடிக்கு ஒரு செயற்குறிப்பை மத்திய அரசுக்கு தமிழக அரசு அனுப்பியுள்ளது.

இந்த உதவிகளைப் பெறுவதற்கு நான் புதுடெல்லி சென்று பிரதமரையும், உள்துறை அமைச்சரையும் சந்தித்து இதற்கான நிதியுதவி கோரினேன். இந்த உதவி 100 சதவிகிதம் மானிய அடிப்படையில் தமிழ்நாடு அரசுக்கு வழங்கப்பட வேண்டும் எனவும் கேட்டுள்ளேன்.

மது ஒழிப்பில் இந்த அரசு காட்டிவரும் தீவிரத்தை உறுப்பினர்கள் அனைவரும் அறிந்ததோடு மட்டுமல்லாமல் மதுவினை விரைந்து ஒழிக்கத் தேவையான அறிவுரைகளையும், கருத்துக்களையும் வழங்கியுள்ளீர்கள். குடிப்பழக்கத்தை அகற்றி குடிகளைக் காக்க வேண்டுமென்ற இந்த அரசின் கொள்கைக்கு, குறிப்பாகத் தாய்மார்களிடமிருந்து வந்துள்ள பாராட்டும், ஆதரவும் பலரும் அறிந்ததுதான். இந்த அரசு ஆட்சிக்கு வந்த சில நாட்களிலே அதாவது 16-7-1991-லிருந்து சாராயம் ஒழிக்கப்பட்டு விட்டாலும் அந்தச் சமுதாயக் கொடுமை மீண்டும் எந்த உருவிலும் திரும்ப வந்துவிடக்கூடாது என்பதற்காகவும், கள்ளச்சாராயத்தை அறவே ஒழிக்கவேண்டுமென்ற நோக்கத்தில் இதற்கென ஒரு தனிக் காவல் பிரிவை தமிழக அரசு உருவாக்கிக் கொண்டிருக்கிறது. இந்தப் பிரிவில் ஏறத்தாழ 1,886 காவல் துறையினர் பணிபுரிவர். காவல் துறையினருக்கு இந்தப் பிரிவை விரிவாக்குவதன்மூலம் வேலைவாய்ப்பும் பெருகும்; அதே நேரத்தில் கள்ளச்சாராயத்தைத் தமிழகத்தில் ஒழிப்பதற்கும் இந்த முயற்சி பெரிதும் பயன்படும் என நம்புகிறேன்.

அடுத்து முதலமைச்சர் மற்றும் முக்கியப் பிரமுகர்கள் பாதுகாப்புக்கென, ஒரு தனிப் பாதுகாப்பு கொடுக்க 'ஸ்பெஷல் செக்யூரிட்டி க்ரூப்' காவல் துறையைக் கொண்டு நிர்மாணிக்கப்பட இருக்கிறது. இதற்கென சிறப்புப் பயிற்சிகளும், நவீன ஆயுதங்களும் பெறப்பட இருக்கின்றன. இப்படை முழு அளவில் நிர்மாணிக்கப்பட்டால் முதலமைச்சர், முக்கியப் பிரமுகர்கள் ஆகியோரது பாதுகாப்பில் தனிக் கவனமும், தரமான பாதுகாப்பும் செலுத்த இயலும்.

காவல் நிலையங்களின் பற்றாக்குறை, காலம் காலமாகப் பேசப்பட்டு வருகிற கருத்தாகும். ஏற்கனவே தமிழகத்தில் இருக்கிற காவல் நிலையங்கள் போதாது என்ற கருத்தினை இங்கே பேசிய உறுப்பினர்கள் பலரும் வலியுறுத்தினார்கள். இதன் முக்கியத்துவத்தை அரசு நன்றாகவே உணர்ந்திருக்கிறது. நிதி வசதிக்கேற்ப இவை பரிசீலிக்கப்படும் என கூறிக்கொள்கிறேன். அதே நேரத்தில் இலங்கைப் போராளிகள் நடமாடும் கடற்கரைப் பகுதிகளில் புதிதாகச்



சில கடற்கரைக் காவல் நிலையங்களை (மெரைன் போலீஸ் ஸ்டேஷன்ஸ்) அவசியம் காரணமாக உடன் நிறுவும் எண்ணம் அரசுக்கு உள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி)

பெண்களுக்கு எதிரான குற்றங்கள் நாளுக்கு நாள் அதிகரித்து வருவதால் அவற்றைக களைந்து பெண்ணுரிமை காக்கப்பட்டு ஆணுக்குப் பெண் சமம் என்னும் சத்தியம் நிலை பெறச் செய்திட எங்கள் அரசு அயராது பாடுபடும். (மேசையைத் தட்டும் ஒலி) பெண்களின் குறைகளை, கோரிக்கைகளை பரிவோடும் கவனத்தோடும் கேட்டு பரிகாரம காணுகிற வகையில் பெண்களே முழுவதும் காவல் துறைப் பணியாளர்களாக, அதாவது முழுக்க முழுக்க பெண் அலுவலர்கள், காவலர்கள் அடங்கிய ஒரு காவல் நிலையத்தை முதலில் சோதனை முறையில் அதாவது ஒரு 'எக்ஸ்பெரிமென்டல் பேஸிஸ்'—இல் தொடங்க இருக்கிறோம் என்ற நல்ல செய்தியை உங்களுக்கு இங்கே அறிவிப்பதில் மிக்க மகிழ்ச்சி அடைகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) இந்தக் காவல் நிலையம் சென்னையில் தொடங்கப்படும். அதன் செயல்படும் திறனறிந்து, பிறகு படிப்படியாக மற்ற இடங்களிலும் விரிவுபடுத்துவது குறித்து முடிவெடுக்கப்படும. இப்படி சென்னையில் தொடங்கப்படும் இந்த பெண்கள் காவல் நிலையத்தில் தமிழகத்தில் உள்ள பெண்கள் யாரும் தமக்கு எதிராக செய்யப்பட்ட குற்றங்களைக் களைய நடவடிக்கை கோரி அணுகலாம்.

முற்பகல் 9-50

காவலர்களுக்கு வீட்டுவசதி வழங்க வேண்டுமென்பதில் இந்த அரசுக்கு மிகுந்த அக்கறை உண்டு. அதுவும் காவலர்களை மொத்தமாக ஓரிடத்தில் தங்க வைக்கிற வகையில் வீட்டுவசதி செய்வதன் மூலம் அவர்களை விரைந்து கூட்டவும், வேலைக்கு அனுப்பவும் வாய்ப்பாகவும் இருக்கும. தற்போது சுமார் 42 விழுக்காடு காவலர்களுககுத்தான் வீட்டுவசதி இருக்கிறது. இந்தப் பிரச்சினைக்கு ஒட்டு மொத்தமாக ஒரு பரிகாரம் தேடவேண்டும் என்பதற்காகத் தான் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் முதலமைச்சராக இருந்தபோது இவர்களுக்கு என தமிழ்நாடு காவலர் வீட்டுவசதிக் கழகம் ஒன்றை செயல்பட வைத்தார். அக் கழகம் 1,561 வீடுகளையும், 601 குடியிருப்புகளையும் கட்டியது. துரதிருஷ்டவசமாக அதற்குப் பின் வந்த தி.மு.க. அரசு இந்த காவலர் வீட்டு வசதிக் கழகத்தைக் கலைத்துவிட்டது. எனவே காவலர்கள் சமுதாயத்தின் நலனில் அக்கறை கொண்ட இந்த அரசு அவர்களின் வீட்டுவசதிப் பிரச்சினைகளைப் போக்க அவர்களுக்கென ஒரு வீட்டு வசதிக்

கழகத்தை மீண்டும் ஏற்படுத்துகிறது என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். மேலும் நடப்பாண்டில் ரூபாய் 8 கோடி செலவில் குறைந்தது ஆயிரம் வீடுகளையாவது கட்டி வழங்க உத்தேசித்து உள்ளது. இப்படி காவலர்களையும், காவலர்களைச் சேர்ந்த காவலர் குடும்பங்களையும் அரவணைத்து காக்கின்ற வகையில் அரசு தேவையான பல்வேறு நன்மைகளை நடைமுறைப்படுத்தத் திட்டமிட்டுள்ளது. அத்திட்டங்களை செவ்வனே நிறைவேற்ற உதவுகிற வகையிலே இத்துறை தொடர்பாக தங்களுக்கு வேண்டிய விளக்கங்களைப் பெறுகின்ற நிலையிலேயும் மாண்புமிகு உறுப்பினர்கள பலர் தங்களுடைய வெட்டுத் தீர்மானங்களையும் கொண்டுவந்துள்ளார்கள். அவர்களுக்குத் தேவையான விவரங்களையும் இந்த அவையில் அளிப்பதற்கு நான் கடமைப்பட்டுள்ளேன்.

வெட்டுத் தீர்மானங்களுக்கு விளக்கம் அளிப்பதற்கு. முன்னால் நேற்று எதிர்க்கட்சித் தலைவர் திரு. எஸ். ஆர் பாலசுப்ரமணியன் அவர்கள் எழுப்பிய சில கேள்விகளுக்கு பதில் கூற விரும்புகிறேன். மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள், ஆட்டோ சங்கர் சிறையிலிருந்து தப்பியது குறித்து சில கருத்துக்களைத் தெரிவித்தார்கள். இந்தந் தவறுக்கு உடந்தையாக இருந்த டெபுடி சூப்பிரண்டென்டெண்ட் மற்றும் சர்க்கிள் இன்ஸ்பெக்டர் தற்போது முக்கிய பதவிகளில் இருப்பதாகவும இந்தச் சம்பவத்தைக் குறித்து விசாரணை செய்ய நியமிக்கப்பட்ட இஸ்மாயில் கமிஷன் அறிக்கை பெறப்பட்டதா ? அதன் மீது நடவடிக்கைகள என்ன என்று தெரிவிக்க வேண்டுமென்று குறிப்பிட்டிருந்தார்கள். ஆட்டோ சங்கர் சென்னை மத்திய சிறையிலே இருந்து தப்பியதற்கு உடந்தையாக இருந்ததாகக் கருதப்பட்ட டி.எஸ்.பி.—துணை காவல்துறைக் கண்காணிப்பாளர் திரு. தங்கய்யா, மற்றும் வட்ட ஆய்வாளர் சர்க்கிள் இன்ஸ்பெக்டர் திரு. தலைமலை இருவரையும் தற்காலிக வேலை நீக்கம், சஸ்பென்ட் செய்து ஆணையிடப்பட்டது. இதனை எதிர்த்து தமிழ்நாடு அட்மினிஸ்டிரேடிவ் டிரிபியூனலில் மேல் முறையீடு செய்து ஸ்டே, தடையாணைகள் பெற்றதால் தற்போது திரு. தங்கய்யா மதுரையில் துணைக் கண்காணிப்பாளர் (பயிற்சி) ஆகவும், புளியங்குடியில் திரு. தலைமலை குற்றப்பிரிவு ஆய்வாளராகவும் பணியில் உள்ளனர். டி. எஸ். பி. திரு. தங்கய்யாவின் தற்போதைய பணி காவல்துறை ஆவணங்களைக் குறித்து அவ்வப்போது மதுரைப் பகுதியில் உள்ள காவலர்களுக்கு விளக்கிச் சொல்வதாகும், காவல் துறை பயிற்சிப் பள்ளியிலோ அல்லது கல்லூரியிலோ அவர்கள் பணி புரியவில்லை. இவர்கள் இருவர் மீதும் மற்றும் இதர மற்ற 4 காவல்துறையினர் மீதும் தக்க மேல்நடவடிக்கைகள் தொடரப்படும்.



மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் ஆட்டோ சங்கர் என்கின்ற குற்றவாளி சிறையிலிருந்து தப்பியது பற்றி விசாரிக்க ஏற்படுத்தப்பட்ட நீதிபதி இஸ்மாயில் கமிஷன் பரிந்துரை என்னவாயிற்று என்ற கேள்வியை எழுப்பினார்.

1990 ஆம் ஆண்டு ஆகஸ்ட் 20, 21 தேதிகளில் சென்னை மத்திய சிறையிலிருந்து சங்கர் என்கிற கௌரி சங்கர் மற்றும் 4 குற்றவாளிகளும் தப்பிவிட்டார்கள். நடந்தேறிவிட்ட குற்றத்தின் கடுமையைக் கருதி சென்னை உயர்நீதிமன்றத்திலிருந்து ஓய்வு பெற்ற தலைமை நீதிபதி எம். எம். இஸ்மாயிலை ஒரு நபர் விசாரணைக் குழுவாக, அரசு நியமித்தது. விசாரணைக் குழுவின் ஆய்வு எல்லையாக கீழே கண்டவை கொடுக்கப்பட்டது:

1. குற்றவாளிகள் எந்தப் பின்னணியில் மற்றும் சூழ்நிலையில் தப்பினார்கள் ?

2. சிறைச்சாலைத் துறையினுடைய கையேட்டில் குறிக்கப்பட்டுள்ள சட்டதிட்டங்களுக்குட்பட்ட முறையில், பாதுகாப்பிலும், உரிய முறையிலே, தப்பிச் சென்ற கடும் குற்றவாளிகள் வைக்கப்பட்டு இருந்தார்களா ?

முற்பகல் 9-55

3. தப்பிச் செல்வதற்கு உடந்தையாகவும் மற்றும் பொறுப்பாளர்களாகவும் எந்த எந்த அலுவலர்கள் இருந்தார்கள் ?

4. சிறைத்துறை கையேட்டில் குறிக்கப்பட்டுள்ளவாறு பார்வையாளர்கள் அனுமதிக்கப்பட்டார்களா ?

5. காவல் துறையைச் சார்ந்த அலுவலர்களும் மற்றும் அரசியல்வாதிகளும் கடும் குற்றவாளிகள் தப்பிச் சென்ற நிகழ்ச்சியில் உடந்தையாக இருந்தார்களா ?

6. இது தொடர்பாக சிறைச்சாலையில் பணிபுரிந்த அலுவலர்கள் மீது எப்படிப்பட்ட நடவடிக்கை எடுக்க வேண்டும் ?

7. எதிர்காலத்தில் இப்படிப்பட்ட தவறுகள் நிகழா வண்ணம் தடுப்பதற்குரிய நடைமுறைகளைப் பரிந்துரைக்கவும்' என இவ்விசாரணைக் குழு கேட்டுக்கொள்ளப்பட்டது.

[செல்வி ஜெ. ஜெயலலிதா] [1991 செப்டம்பர் 24

விசாரணைக் குழு தன்னுடைய அறிக்கையை 1991 ஆம்
ஆண்டு மார்ச் மாதம் 14 ஆம் தேதி அரசுக்கு சமர்ப்பித்தது.
அவ்வறிக்கை பரிசீலிக்கப்பட்டு சட்டமன்றத்தின் முன்
வைக்கத் தயாராக உள்ளது. இந்த நிலையில் அறிக்கையில்
வந்துள்ள தகவல்களை அவையின் முன்னே தெரிவிப்பது
பொருத்தமாக இராது என்றே கருதுகிறேன். முடிந்தால்
இக்கூட்டத் தொடரிலேயே இவ்வறிக்கை அவையின் முன்னர்
வைக்கப்படும். அதுசமயம் உறுப்பினர்களுக்கு இவ்வறிக்கை
யின் மேல் விளக்கமாக விவாதம் செய்யவும் சந்தர்ப்பம்
கிடைக்கும் என்றும் நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் திரு. எஸ். ஆர்.
பாலசுப்ரமணியன் அவர்கள் ஈ.பி.ஆர்.எல்.எப். தலைவர்
பத்மநாபா கொலை வழக்கில் கைது செய்யப்பட்ட 5
இலங்கைப் போராளிகளில் ஒருசிலர் ஜாமீனில் வர
தி.மு.க. அமைச்சர்களின் அலுவலக உதவியாளர்கள்— ஆபீஸ்
அசிஸ்டென்ட்ஸ் உதவியுள்ளார்கள் என்று குறிப்பிட்டுள்ளார்.

இது உண்மையே. இவ்வழக்கில் கைது செய்யப்பட்ட
இலங்கைப் போராளிகள் கிருபன் மற்றும் குமார் ஆகி
யோருக்கு முன்னாள் கைத்தறித் துறை அமைச்சர்
தங்கவேலு அவர்களின் அலுவலக உதவியாளர்கள் இஸ்மாயில்
கனியும், நேசமுத்துவும், முன்னாள் செய்தித்துறை அமைச்
சர் திரு. நேரு அவர்களின் அலுவலக உதவியாளர் அருள்
ராஜூம், முன்னாள் ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர்
திரு. பொன்னேரி சுந்தரம் அவர்களின் அலுவலக உதவி
யாளர் செல்வனும் ஜாமீன் விண்ணப்பத்தில் கையொப்பம்
இட்டுள்ளனர். அமைச்சர்களின் முகவரியை அதில்
கொடுத்துள்ளனர். மேற்படி நபர்கள் யாருடைய தூண்டு
தலின்பேரில் அல்லது நிர்ப்பந்தத்தின் பேரில் ஜாமீன்
விண்ணப்பத்தில் கையெழுத்திட்டனர்?
இந்த வழக்குக்கும் உள்ள தொடர்பு என்ன? அவர்களுக்கும்,
அமைச்சர்களின் இல்லங்களை எவ்வாறு அவர்கள்
விலாசமாக குறிப்பிட நேர்ந்தது என்பது தங்கள் வீட்டு
களுக்கு தற்போது இவ்வழக்கில் போன்ற கேள்வி
விசாரணையின்போது தான் பதில் நடைபெறும் புலன்
முழுமையாக வெளிவரத் தக்கவாறு கிடைக்கும். உண்மை
முடுக்கி விடப்பட வேண்டுமென்று அரசு புலன் விசாரணை
தலைவருக்கு அறிவுரை வழங்கியுள்ளது. காவல் துறைத்
எதிர்பார்க்கப்படுகிறது என்பதைத் தெரிவித்துக் அவரது அறிக்கை
கொள்கிறேன்.

மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் திரு. எஸ். ஆர்.
பாலசுப்ரமணியன் அவர்கள் சிவராசன் தொடர்பான
மற்றொரு வழக்கைப் பற்றி நேற்று குறிப்பிட்டார். இது



1991 செப்டம்பர் 24] [செல்வி ஜெ. ஜெயலலிதா]

தொடர்பாக காவல் துறையினராலும் சுங்கத் துறையின
ரிடம் விவரங்கள் பெறப்பட்டுள்ளன. சுங்கத் துறையினர்,
சிவராசன் மீது வழக்கு ஏதும் பதிவு செய்யப்படவில்லை
யென்றும், சென்னை விமான நிலையத்தில் சிவராசனைப்
பிடித்தபோது அவன் அதிகாரிகளை சுட்டுவிட்டுத் தப்பிய
தாகக் கூறும் ஒரு நிகழ்ச்சி ஏதும் நடைபெறவில்லை என்றும்
தெரிவித்துள்ளனர். காவல் துறையினரும் இந்த நிகழ்ச்சி
குறித்த விவரங்கள் ஏதும் இல்லையென்றும் தெரிவித்துள்
ளனர். எனினும் புலன் ஆய்வுத் துறையினர் இதுபற்றி
முழுமையாக விசாரித்து விரைவில் அறிக்கையை சமர்ப்பிக்க
பணித்துள்ளேன் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் திரு. பண்ருட்டி இராமச்சந்திரன்
அவர்கள் இங்கு உரை நிகழ்த்தியபோது, பரமக்குடியில்
நடந்த துப்பாக்கிச் சூடு குறித்து காவல் துறையைச் சாடி
விமர்சித்துள்ளார். இச்சம்பவம் பற்றிய எனது விளக்கங்
களையும் கருத்துக்களையும் பேரவையில் கூறுகின்றபோது
நடந்த சம்பவம் ஒன்றை நினைவுகூர விரும்புகிறேன்.

எங்கள் ஆட்சி அமைந்த சில நாட்களுக்குள்ளாகவே
சட்டப்பேரவையில் ஒரு சட்டமன்ற உறுப்பினர் தாக்கப்
பட்ட நிகழ்ச்சியைக் காரணம் காட்டி தமிழ்நாட்டில் ஒருசில
மாவட்டங்களில் வன்முறை தூண்டி விடப்பட்டு பல
விபரீத சம்பவங்கள் நடைபெற்றன. சட்டமன்ற உறுப்பினரைத்
தாக்கியவர் என்று குற்றம் சாட்டப்பட்டவர்
மீதும் தக்க நடவடிக்கைகள் மேற்கொண்டு தண்டனை
வழங்கிய பின்னரும் இதுபோன்ற வேண்டாத சம்பவங்கள்
தொடர்ந்தன. அரசுப் பேருந்துகள் சேதப்படுத்தப்பட்டன.
பொதுச் சொத்துக்கள் நாசப்படுத்தப்பட்டன. இதனால்
ஏற்பட்ட இழப்பு ரூபாய் 48 இலட்சம் ஆகும்.

முற்பகல் 10-00

இதையடுத்து இச்சம்பவத்தின் முழுப் பின்னணியையும், அதில்
ஈடுபட்டவர்களின் உள் நோக்கத்தையும் நான் பொது மக்களுக்கு
வெளிப்படுத்தி, அறிக்கை விடுத்தபின் மக்கள் மத்தியில்
இத்தகைய வன்முறைச் செயல்களுக்கு ஆதரவு இல்லை
என்று அவர்கள் உணர்ந்தவுடன், இதுபோன்ற வன்முறைச்
சம்பவங்களைத் தூண்டுவதை நிறுத்தினர்.

நேற்றையதினம் இந்த மாமன்றத்தில் பேசிய உறுப்பினர்
திரு. இராமச்சந்திரன் அவர்கள் பரமக்குடி சம்பவத்தைப்
பற்றி குறிப்பிடுகையில், நாங்கள் வருகின்ற நேரமாகப்
பார்த்து எங்கள் கண் முன்னாலேயே சுட்டார்கள், இதை

முன்கூட்டியே தடுத்திருக்கலாமென்று குறிப்பிட்டார்கள். இதைவிட ஒரு அபத்தமான கூற்று வேறு இருக்க முடியாதென்று கருதுகிறேன். இந்தச் சம்பவத்தின் பின்னணி இதுதான். டாக்டர் அம்பேத்கார் சிலை திறப்பு விழாவிற்குப் பல பகுதிகளிலிருந்தும் தாழ்த்தப்பட்ட மக்களை லாரிகளில் அழைத்து வர வேண்டுமென்று முடிவு செய்த பின்னரும், காவல் துறையினரிடம் பாதுகாப்பை எவரும் கோரவில்லை. பொதுக்கூட்ட நிகழ்ச்சிக்கு மட்டும் அனுமதி பெறப்பட்டிருந்தது. கூட்டத்திற்குத் தேவையான பாதுகாப்பைக் கோரவில்லை. லாரிகளில் வந்த தாழ்த்தப்பட்ட மக்கள் பிற சமுதாயத்தினர் வாழும் பகுதியான கீழத்தூவல் கிராமம் வழியாகச் செல்லும்போது ஒரு குறிப்பிட்ட பிற இனத்தவருக்கு எதிராக, அவர்களுடைய உணர்வுகளைத் தாக்கும் விதத்தில் கோஷங்களை எழுப்பிக் கொண்டு வந்தனர். அப்போது லாரிகளில் வந்தவர்கள் பிற இனத்தைச் சேர்ந்த ஒரு தலைவரின் நினைவுச் சின்னம்மீதும் அந்த இனத்தைச் சேர்ந்த ஒருவரின் தேநீர் கடைமீதும் கற்களை வீசி, சேதம் விளைவித்தனர். அதனால் கோபமடைந்த அந்தப் பிற இனத்தவர் லாரிகள்மீது கற்களை வீசினர் என்று தெரிய வந்துள்ளது. அதில், லாரியில் சென்ற வசந்தி என்ற பெண் காயமடைந்தார். இந்த நிகழ்ச்சியால் கொதிப்படைந்த லாரியில் சென்றவர்கள் பரமக்குடி 5 ரோடு சந்திப்பில் தலைவர்களை வரவேற்கக் காத்திருந்த கூட்டத்தினருடன், சாலையில் அமர்ந்துகொண்டு, போக்குவரத்தைத் தடுத்து மறியல் செய்தனர். காவல் துறைக் கண்காணிப்பாளரும், பரமக்குடி கோட்ட ஆட்சித் தலைவரும் உடனடியாக அங்கே சென்று, மறியலில் ஈடுபட்டவர்களைச் சமாதானப்படுத்த முயற்சி செய்தனர். அமைதி காக்க வேண்டும், வன்முறையில் ஈடுபடக்கூடாது என்று பல மணி நேரம் பேச்சு வார்த்தை நடத்தியும், அசம்பாவிதம் ஏதும் நடக்காமல் இருந்த நிலையில், சிலை திறப்பு விழாவில் பங்கு கொள்ள வந்த தலைவர்கள் விரைவில் வந்தடைவார்கள் என்ற செய்தி கிடைத்ததும், அதுவரையில் அமைதியாக இருந்தவர்கள் காவல் துறையினரைக் கடுமையாகத் தாக்க முற்பட்டனர். நிலைமை கட்டுக்கடங்காமல் போகவே, முறையான எச்சரிக்கைகள் விடுத்த பின்னர், வேறு வழியின்றி துப்பாக்கிப் பிரயோகம் செய்யப்பட்டதாக காவல் துறையின் அறிக்கைகள் தெரிவிக்கின்றன. இருப்பினும் இத்துப்பாக்கிச் சூடு சம்பந்தமான உண்மை நிலை அறிய மாவட்ட வருவாய் அலுவலர், விசாரணை அலுவலராக நியமனம் செய்யப்பட்டு, விசாரணையைத் தொடர்கிறார். அவரது அறிக்கை கிடைத்தவுடன், அரசு தக்க நடவடிக்கைகளை எடுக்குமென்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.



இந்தத் துப்பாக்கிச் சூடு நடைபெற்ற பின்னரும் மேலப்பனையூரில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த டாக்டர் அம்பேத்கார் அவர்களின் சிலை திறப்பு விழாவும், பொதுக் கூட்டமும் நடைபெற்றது என்பதிலிருந்து இந்த அரசின் நல்லெண்ணம் அனைவருக்கும் தெரியும். இந்தப் பொதுக் கூட்டத்தில் ஒருவர், தமிழகத்தில் தற்போது எங்கு பார்த்தாலும் பிரச்சினையாக உள்ளது, ஆட்சியே கவிழ்ந்துவிடுமோ என்று ஆட்சியில் இருப்பவர்களே எண்ணும் நிலைமை உருவாகியிருக்கிறதென்று குறிப்பிட்டுள்ளார். இப்படிப் பேசுவதிலிருந்து அவர்கள் என்ன விரும்புகிறார்கள் என்பது எங்களுக்கு நன்றாகப் புரிகிறது. இந்தக் கூட்டத்தில் மாண்புமிகு உறுப்பினர் திரு. பண்ருட்டி இராமச்சந்திரன் அவர்களும் உடன் இருந்திருக்கிறார்கள். அரசை எதிர்த்தும் பேசியும் இருக்கிறார். இவற்றை எல்லாம் ஒன்றாக இணைத்துப் பார்க்கும்போது, அரசியல் உள் நோக்கத்தோடு இனக் கலவரத்தைத் தூண்டிவிட்டு, இந்த ஆட்சியை எப்படியும் கவிழ்க்க வேண்டுமென்ற முனைப்பில் சிலர் திட்டமிட்டு செயல்படுகிறார்களோ என்று சந்தேகிக்கத் தோன்றுகிறது. அதுவும் அப்பாவி மக்களைப் பகடைக் காய்களாகப் பயன்படுத்தி, பாதிக்கப்படுபவர்களே மீண்டும் மீண்டும் பாதிக்கப்படும் வகையில் அவர்களைத் தவறான பாதையில் திசை திருப்பும் முயற்சியை மேற்கொண்டுள்ளார்கள் என்பதை உணர்கிறேன். பரமக்குடி துப்பாக்கிச் சூட்டிற்குப் பின், அதைத் தூண்டிவிட்ட விஷமிகளுக்கு அவர்களது கட்சியிலிருந்தே ஆதரவு இல்லை என்று உணர்ந்தபின்தான், இதுபோன்ற முயற்சிகளில் மீண்டும் ஈடுபடாது, தற்காலிகமாக நிறுத்தி வைத்துள்ளார்கள் என்று ஐயுறுகிறேன். சாதியின் பெயரால் கலவரத்தைத் தூண்டிவிட்டு, அரசியல் ஆதாயம் தேட முற்படுபவர்களை தமிழக மக்கள் அடையாளம் கண்டுகொண்டு உள்ளனர். இந்த அரசும் அது போன்ற செயல்களை அனுமதிக்காது. தாழ்த்தப்பட்டோர் பிற்படுத்தப்பட்டோர் என்று நாம் குறிப்பிடும்போது, இச் சமுதாயத்தினர் ஒரு காலகட்டத்தில் நல்ல நிலையில் இருந்தவர்கள், பிறரால் பிறரது தவறான வழி காட்டுதலால் தாழ்நிலை அடைந்தார்கள். பிற்படுத்தப்பட்டார்கள் என்பது புரிகிறது. அவர்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்த இந்த அரசு மேற்கொண்டுள்ள சீரிய முயற்சிகளை பேரவையில் உள்ள மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் அறிவார்கள். (பலத்த மேசையைத் தட்டும் ஒலி).

[செல்வி ஜெ. ஜெயலலிதா] [1991 செப்டம்பர் 24

எங்கள் ஆட்சியைப் பொறுத்த மட்டில், தாழ்த்தப்பட்ட, பிற்படுத்தப்பட்ட மற்றும் அனைத்து மக்களுக்காக, அவர்களின் வாழ்க்கை உயர்விற்காக வேகமாகவும், விவேகமாகவும் பாடுபடும் என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்கிறேன். தவறான பாதையைச் சுட்டிக்காட்டும் ஒரு சில அரசியல் தலைவர்களின் நயவஞ்சக வலையில் தாழ்த்தப்பட்ட மக்கள், குறிப்பாக தாழ்த்தப்பட்ட மக்கள், பிற்படுத்தப்பட்ட மக்கள் தவறி விழுந்துவிடக் கூடாதே என்ற அச்சத்தை இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

முற்பகல் 10-05

மாண்புமிகு உறுப்பினர்கள் பரமக்குடியில் நடைபெற்ற சம்பவத்தை தெளிவாகப் புரிந்து கொள்ளவேண்டும். ஏற்கனவே இந்தச் சம்பவம் நிகழ்வதற்கு முன்னமேயே, எனக்கு Intelligence Agencies இடமிருந்து தகவல் கிடைத்து விட்டது. சில அரசியல் கட்சித் தலைவர்கள் ஒரு சதித் திட்டம் தீட்டியுள்ளார்கள். தமிழகம் முழுவதும் சதி செய்து கலவரத்தைத் தூண்டிவிட்டு ஆட்சியைக் கவிழ்ப்ப தற்கு சதி புரிகிறார்கள் என்ற தகவல் எனக்குக் கிடைத்தது. அதன்படி நடைபெற்றதுதான் இந்த பரமக்குடி துப்பாக்கிச் சூடு சம்பவம் என்பதைத் தெளிவாகப் புரிந்து கொள்ளவேண்டும். முன்கூட்டியே ஒரு திட்டம் போட்டுத் தான் இந்த நிகழ்ச்சியை ஏற்பாடு செய்திருக்கிறார்கள். சிலை திறப்பு வேறு எங்கோ நடக்கிறது. அங்கு செல்லும் வழியில் வேறு மாவட்டங்களிலிருந்து தாழ்த்தப்பட்ட மக்களை லாரிகளில் அழைத்துச் செல்கிறார்கள். அவர்கள் செல்லும்போது இந்த கீழத்தூவல் என்ற கிராமத்தில் ஒரு குறிப் பிட்ட இனத்தவர், ஒரு குறிப்பிட்ட ஜாதியினர் வாழ் கிறார்கள் என்பது அனைவருக்கும் தெரிந்த ஒன்று என்றாலும் வேண்டுமென்றே அந்த ஊரைத் தாண்டிச் செல்லும்போது, அந்த இனத்தாரைத் தாக்கி லாரிகளில் சென்றவர்கள் கோஷங்கள் எழுப்பிச் செல்கின்றார்கள். அந்த இனத்தினுடைய தலைவர் நினைவுச் சின்னத்தின் மீது வேண்டுமென்றே கற்களை வீசுகின்றார்கள் லாரிகளில் இருந்தபடியே. மேலும் அந்த இனத்தைச் சேர்ந்த ஒருவரின் டீக்கடை மீது கற்களை வீசுகின்றார்கள். இவ்வளவு செய்த பின்னரும் அந்த ஊர் மக்கள் எப்படி சும்மா இருப்பார்கள்? அதனால் அவர்கள் retaliate செய்தார்கள். திருப்பித் தாக்கினார்கள். ஆனால் இதற்கு மூல காரணம் எங்கே யிருந்து வந்தது? சம்பவத்தைத் தூண்டியது துவங்கியது யார், என்றால் தவறான வழி காட்டுதலுக்கு பலியாகிவிட்ட அப்பாவி தாழ்த்தப்பட்ட மக்கள் என்றே சொல்லவேண்டும், திருப்பி அவர்கள் தாக்கியதில் லாரியில் கற்கள் விழுந்து லாரியில் இருந்தவர்களில் ஒரு சிலர் காயம் அடைந்துள்ளனர்



1991 செப்டம்பர் 24] [செல்வி ஜெ. ஜெயலலிதா]

அங்கேயிருந்து சிறிது தூரம் சென்று 5 ரோடு ஜங்ஷன் என்ற இடத்தில் அவர்கள் அமர்ந்து சாலை மறியல் செய்யத் தொடங்கினர். பல மணி நேரம் அவர்கள் போக்குவரத்தை ஸ்தம்பிக்கச் செய்தனர். காவல்துறையினர் அங்கே சென்று மன்றாடிப் பார்த்தார்கள். பல மணி நேரம் கெஞ்சிப் பார்த்தார்கள். அமைதியான முறையில் அவர்களைக் கலைக்க எவ்வளவோ முயற்சி எடுத்துக் கொண்டார்கள். ஆனால் அவர்கள் எப்படி அமைதியாகக் கலைந்து செல்வார்கள்? ஏற்கனவே ஒரு திட்டத்துடன் தான் அவர்கள் அங்கே சென்றிருக்கிறார்கள். ஒரு Violent incidentஐ, ஒரு வன்முறைச் சம்பவத்தை ஏற்படுத்த, வேண்டுமென்ற instruction உடன் தான் அவர்கள் அங்கே சென்றிருக்கிறார்கள். இப்படி அறிவுறுத்தப்பட்டு, கட்டளையிடப்பட்டுத்தான் அவர்கள் அங்கே சென்றிருக்கிறார்கள். சில மணி நேரங்கள் கடந்தன. எந்தவொரு Violent incident-ம் நடைபெறவில்லை. ஏனென்றால் காவல் துறையினர் அதற்கு இடம் கொடுக்கவில்லை. அந்த நேரம் பார்த்து இவர்கள் எந்தத் தலைவர்களுக்காக காத்துக் கொண்டு இருந்தார்களோ அந்தத் தலைவர்கள் வந்து கொண்டிருக்கிறார்கள், அந்த இடத்தை நெருங்கிவிட்டார்கள் என்ற தகவல் அவர்களுக்குக் கிடைத்தது. உடனே அவர்களுக்குள் பதட்டம். அடடா, அவர்கள் வந்து விட்டார்களே, அவர்கள் சொன்னபடி இன்னும் இங்கே Violent incident ஏற்பாடு செய்து நடத்தவில்லையே என்ற உந்துதலால் அவர்கள், அதுவரை அமைதியாக இருந்த கூட்டத்தினர், திடீரென்று காவல் துறையினரைத் தாக்க ஆரம்பித்துவிட்டனர். அந்தத் தாக்குதல் தொடர்ந்து நடைபெற்றபிறகு, முறையாக, சட்டப்படி எச்சரிக்கைகள் ஒரு முறை, இரண்டு முறை, மூன்று முறை கொடுத்தபின்னர்தான், நடந்தது. இந்தத் தாக்குதலில் 30 காவல் துறையினர் காயம் அடைந்தார்கள் என்பது குறிப்பிடத்தக்கது. இவ்வளவும் நடைபெற்ற பின்னர்தான் வேறு வழியில்லாமல் காவல் துறையினர் துப்பாக்கிச் சூடு நடத்த நேரிட்டது. இதை வைத்துக் கொண்டு மாண்புமிகு உறுப்பினர் பண்ருட்டி இராமச்சந்திரன் அவர்கள் நாங்கள் வரும் நேரமாகப் பார்த்து, அவர்கள் துப்பாக்கிச் சூடு நடத்தினார்கள் என்றால் இதை எப்படி ஏற்றுக்கொள்ள முடியும் என்பது தெரியவில்லை (மேசையைத் தட்டும் ஒலி) (குறுக்கீடுகள்).

மாண்புமிகு உறுப்பினர் திரு. செ. கு. தமிழரசன் அவர்கள் பரமக்குடி துப்பாக்கிச்சூடு பற்றி பேசுகையில் இதில் மரணமடைந்த ஆதி திராவிடர்களின் குடும்பங்களுக்கு நஷ்டஈடாக ஒவ்வொருவருக்கும் தலா ஒரு இலட்சம் ரூபாய்

வழங்கவேண்டுமென்று கூறினார். இந்தத் துப்பாக்கிச் சூட்டில் 3 பேர் மரணம் அடைந்தனர். 4 பேர் காயம் அடைந்தார்கள். இறந்தவர்களின் குடும்பங்களுக்கு தலா ரூ. 10 ஆயிரமும் காயம் அடைந்தவர்களுக்கு தலா ரூ. 2,000 மும் ஏற்கனவே முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து வழங்கப்பட்டுவிட்டது.

முற்பகல் 10-10

இந்த இரண்டு, மூன்று பேர்களில் இருவர் மட்டுமே ஆதி திராவிடர்கள், ஒருவர் பிற இனத்தைச் சேர்ந்தவர், அவர் யாதவர். அந்தச் சம்பவத்தில் காயம் அடைந்த காவல் துறையினரின் எண்ணிக்கை 30 பேர் என்பதும் குறிப்பிடத்தக்கது. மாண்புமிகு பேரவை உறுப்பினர்களுக்கு நான் ஒன்றைக் கூறிக்கொள்ள விரும்புகிறேன். பரமக்குடி துப்பாக்கிச் சூட்டுக்குப் பின்னர் மாமேதை டாக்டர் அம்பேத்கார் அவர்களின் சிலை திறப்பு விழா நடைபெற்றுள்ளது. கோவை நகரில் சமீபத்தில் நடந்த இனக் கலவரம் கட்டுப்படுத்தப்பட்டுள்ளது. சில நாட்களுக்கு முன்பு சென்னையில் நடைபெற்ற மீலாது நபி மற்றும் விநாயகர் சதுர்த்தி ஊர்வலங்கள் அமைதியான முறையில், கருத்து வேறுபாடு இன்றி இரு தரப்பினரும் காவல் துறையினரையும் அரசையும் பாராட்டும் வகையில் பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன என்பதைக் கருத்தில் கொண்டால் நமது காவல் துறை இன்று சீரிய, சிறந்த, பணி புரிந்து வருகிறது என்பதில் எவருக்கும் ஐயப்பாடு இருக்காது என்றே கருதுகிறேன்.

நேற்று மாண்புமிகு உறுப்பினர் பண்ருட்டி இராமச்சந்திரன் பேசும்போது, குமுதம், தராசு, நக்கீரன் போன்ற பத்திரிகைகளின் அலுவலகங்கள் தாக்கப்பட்டதாகவும் அவர் குறிப்பிட்டார். எந்த வகையில் மாநில அரசுக்கு இது தொடர்புள்ளது என்பது எனக்குப் புரியவில்லை. மேலும் எனக்குச் சகிப்புத்தன்மை குறைவாக உள்ளது என்றும் மாண்புமிகு உறுப்பினர் குறிப்பிட்டார். இவர் எனக்கு எதிராக என்னென்ன செய்திருக்கிறார், என்னென்ன பேசியிருக்கிறார் என்பதெல்லாம் மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கே நன்றாகத் தெரியும். (மேசையைத் தட்டும் ஒலி) அப்படி இருக்கையில் ஒரு நாளாவது நீங்கள் ஏன் இப்படிச் செய்தீர்கள் என்று கேட்டதுண்டா ? அல்லது இவர் மீது கோபப்பட்டதுண்டா ? இன்று கூட உரிய மரியாதையுடன் என்னால் நீங்கள் நடத்தப்படவில்லையா ? (மேசையைத் தட்டும் ஒலி). இன்று என்னுடைய அமைச்சரவையில் அமைச்சர்களாக உள்ளவர்களே ஒரு காலக்கட்டத்தில் என்னைப் பற்றி அவதூறு பரப்பியவர்கள்தான். (மேசையைத் தட்டும் ஒலி) அவர்களே என்னை வசை



பாடியவர்கள் என்பது இந்த அவையில் உள்ள உறுப்பினர்கள் அனைவரும் அறிந்த ஒன்றுதான். (மேசையைத் தட்டும் ஒலி). இந்த அவையில் உள்ள உறுப்பினர்களுக்கு மட்டுமல்லாமல் இந்த நாட்டு மக்களுக்கே இந்த உண்மை நன்றாகத் தெரியும். (மேசையைத் தட்டும் ஒலி). ஆகவே அண்ணாவின் வழியில் நடக்கும் எனக்கு எதையும் தாங்கும் இதயம் வேண்டும் என்று மாண்புமிகு உறுப்பினர் பண்ருட்டி இராமச்சந்திரன் போன்றவர்கள் சொல்லித்தர வேண்டியதில்லை. ஏனெனில் அதை நான் பேரறிஞர் அண்ணா அவர்களிடமிருந்தும் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களிடமிருந்தும் தேவையான அளவிற்குக் கற்றுக் கொண்டாகிவிட்டது. அதன் பலனாகத்தான் அனைவரையும் அரவணைத்து அவர்களையும் அமைச்சர் ஆசனத்தில் அமரச் செய்து இன்று கட்சியையும் ஆட்சியையும் மக்களின் நல்லாசியோடு நடத்திக் கொண்டிருக்கிறேன். என்னுடைய சகிப்புத் தன்மைக்கு இதைவிட வேறு ஒரு சான்று தேவையில்லை என்றே கருதுகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி).

தி.மு.க.வின் அஞ்சல் வழிக் கல்வித் திட்டம் சாதித் துவேஷத்தைப் பரப்ப முயல்கிறது என்றும் அதன் மூலம் இந்த ஆட்சியைக் கவிழ்க்க சதித் திட்டம் தீட்டப்படுகிறது என்றெல்லாம் பல உறுப்பினர்கள் இங்கே குறிப்பிட்டுப் பேசினார்கள். அதனைத் தடை செய்யக் கோரியுள்ளார்கள். இது குறித்து அரசின் சட்டத் துறையைக் கலந்தாலோசித்து தக்க நடவடிக்கை எடுக்கப்படும் என தெரிவித்துக் கொள்கிறேன்.

ஆனால் இந்த நேரத்தில் ஒன்றை அனைவருக்கும் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். இவர்கள் ஏதோ சாதி துவேஷத்தைக் கிளப்பிவிட்டு இந்த ஆட்சியைக் கவிழ்த்து விடுவார்களோ என்று பல உறுப்பினர்கள் கவலையைத் தெரிவித்தார்கள். இதைப் பற்றி அந்த அளவிற்குக் கவலைப்பட வேண்டிய அவசியம் இல்லை என்றே கருதுகிறேன். புரட்சித் தலைவர், நமது இதய தெய்வம் எம்.ஜி.ஆர். அவர்கள் இந்த இயக்கத்தை உருவாக்கி மக்களின் அபரிமிதமான வரவேற்பையும் ஆதரவையும் பெற்று மக்களைச் சந்தித்தபோது அவரை வீழ்த்துவதற்காக, அவர் தமிழர் அல்ல, அவர் மலையாளி என்று இதே கட்சியினர், இன்றைக்கு எனக்கு எதிர்ப்பு தெரிவிப்பவர்கள், இவர்களே இத்தகைய ஒரு பிரச்சாரத்தைக் கிளப்பிப் பார்த்தார்கள். ஆனால் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் உயிரோடு இருந்த வரை அவரை அசைக்க முடியவில்லை. (மேசையைத் தட்டும் ஒலி). அவர் தமிழர் அல்ல, மலையாளி என்ற பிரச்சாரம் தமிழக மக்கள் மத்தியில் எடுபடவே

**இல்லை.** அதைப்போலவே இன்று அற்பத்தனமாக என்னைப் பார்த்து, நான் பிராமணர் என்றும், பாப்பாத்தி என்றும் பேசுகிறார்கள். இன்றைக்குப் புதிதாக இந்தப் பிரச்சாரத்தை செய்யவில்லை. என்றைக்கு நான் அரசியலில் பிரவேசம் செய்தேனோ, அதாவது 1982 ஆம் ஆண்டு ஜூன் மாதம் தொட்டு இன்று நான் முதலமைச்சராக ஆகியிருக்கும் காலம் வரை தொடர்ந்து இந்த பிரச்சாரத்தை செய்து பார்த்துவிட்டார்கள். ஆனால் மக்கள் மத்தியில் எடுபடவில்லை. இவர்கள் '' பாப்பாத்தி பாப்பாத்தி '' என்று சொல்லச் சொல்ல, ' இந்த அம்மையார் எங்களுக்குத் தொண்டு செய்யும் சாதி, சாதி ' என்று மக்கள் ஏற்றுக் கொண்டு உள்ளனர். (மேசையைத் தட்டும் ஒலி). 1989-ல் நடைபெற்ற சட்டமன்றத் தேர்தலின்போது ' பாப்பாத்தி, பாப்பாத்தி ' என்று சொல்லிப் பார்த்தார்கள். ஆனால் போடிநாயக்கனூர் தொகுதி வாக்காளப் பெருமக்கள் எனக்கு வாக்களித்து, இந்த மாமன்றத்திற்கு அனுப்பி வைத்தார்கள். (மேசையைத், தட்டும் ஒலி). 1989-லே அனைத்து இந்திய அண்ணா தி.மு.க.-வும் காங்கிரசும் உடன்பாடு வைத்துக்கொண்டு, பாராளுமன்றத் தேர்தலைச் சந்தித்தது. அப்போதும், இந்தக் கூட்டணியை முறியடிக்க ' பாப்பாத்தி, பாப்பாத்தி ' என்ற பிரச்சாரத்தைக் கிளப்பினார்கள். என்ன ஆயிற்று ? ஓரே ஒரு இடத்தைத் தவிர, மற்றப்படி ஒரு 'clean sweep' செய்தோம். (மேசையைத் தட்டும் ஒலி). எந்த இடம் போயிற்று ? நாகப்பட்டினம் தொகுதி. அதுவும் ஏன் ? அன்று புயல் வீசிய காரணத்தால் என்னால் அங்கு செல்ல முடியவில்லை. சென்று இருந்தால் அப்போதே அந்த இடமும் கிடைத்து இருக்கும். (மேசையைத் தட்டும் ஒலி).

முற்பகல் 10-15

சில மாதங்களுக்கு முன்னர் மீண்டும் பொதுத் தேர்தல் நடைபெற்றது. தமிழகத்தின் சட்டசபைக்கும் பாராளு மன்றத்திற்கும் சேர்த்து தேர்தல் நடைபெற்றது அப்போதும் அவர்கள் செய்யாத பிரச்சாரமா? 'பாப்பாத்தி, பாப்பாத்தி ' என்று கக்காத விஷமா ? இருப்பினும், தமிழக மக்கள் எப்படிப்பட்ட தீர்ப்பு அளித்தார்கள் ? வரலாற்றிலேயே இல்லாத வகையில் நூற்றுக்கு நூறு ஒரு வெற்றியைக் கண்டு இருக்கிறோம், பாராளுமன்றத் தேர்தலில். (மேசையைத் தட்டும் ஒலி). எனவே இத்தகைய பிரச்சாரங்களைப் பற்றி நாம் அதிகம் கவனம் செலுத்தத் தேவையில்லை. இவர்களுடைய முயற்சிகள் என்றைக்கும் பலிக்காது. மக்களுக்கு நான் தொண்டு செய்யும் சாதி, தொண்டு செய்யும் சாதி என்பதை மக்கள் ஏற்றுக் கொண்டிருக்கிறார்கள். உள்ள சுத்தியோடு மக்களுக்கு



உண்மையான தொண்டு ஆற்றுகிற வரை நம்முடைய ஆட்சியை எவராலும் அசைக்க முடியாது (மேசையைத் தட்டும் ஒலி) என்பதைத் திட்டவட்டமாகக் கூறிக்கொள்ள விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி.)

மாண்புமிகு உறுப்பினர் திரு. என். எஸ். பழனிசாமி அவர்கள் கோவையில் தப்பிய கைதிகள் யாரேனும் பிடிபட்டனரா என்ற கேள்வியை நேற்று எழுப்பினார். 5 கொள்ளை, 13 கைதிகள் கூட்டுக் கொள்ளை வழக்குகளில் சம்பந்தப்பட்ட கைதிகள் 5—9—1991 அன்று உடுமலைப் பேட்டை நீதிமன்றத்திற்குக் கொண்டு செல்லப்பட்டனர். வழக்கு விசாரணைக்குப் பின்பு, மாலை 7 மணிக்கு பேருந்தில் கோவைக்குக் கொண்டுவரும்போது 10 கைதிகள் தப்பி ஓடிவிட்டனர். அப்போது ஒரு துப்பாக்கியும் எடுத்துச் சென்று விட்டனர். 10—9—1991 அன்று, தப்பி ஓடிய கைதிகளில் அய்யப்பன் என்பவன் துப்பாக்கியுடன் மீண்டும் கைது செய்யப்பட்டு, துப்பாக்கி கைப்பற்றப்பட்டது. மற்ற 9 கைதிகளைப் பிடிப்பதற்கு தீவிர முயற்சிகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

மாண்புமிகு உறுப்பினர் திரு. என். எஸ். பழனிசாமி, அவர்கள் சந்தனமரக் கடத்தல்காரன் வீரப்பனைப் பிடிப்பது பற்றியும் குறிப்பிட்டார். சந்தனமரக் கடத்தல்காரன் வீரப்பனின் நடவடிக்கைகள் கட்டுப்படுத்தப்பட்டு இருக்கின்றன. வீரப்பனைப் பிடிக்க ' வனமலை ஆபரேஷன் ' முடுக்கிவிடப்பட்டு இருக்கிறது. நடவடிக்கை எடுக்கும்போது கர்நாடக மாநிலத்தின் காட்டுப் பகுதிக்குள் ஓடி ஒளிந்து விடுகிறான். கர்நாடக அரசின் ஒத்துழைப்பு இருந்தால் மிக விரைவில் பிடித்து விடுவோம் என்பதைத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி).

மாண்புமிகு உறுப்பினர் திரு. கே. கே. சின்னப்பன் அவர்கள் ஜெயங்கொண்டம் டி.எஸ்.பி. அலுவலகம் மூடப்பட்டு இருக்கிறதா என்று கேள்வியை எழுப்பினார். மதுவிலக்குப் பிரிவு உள்ளூர் காவல் துறையில் இணைக்கப்பட்டபோது அதிகப்படியாக இருந்த பணியாளர்களை அரசு ஆணை எண் 1570, உள்துறை, நாள் 3—7—1990ன்படி புதிய பதவிகளுக்குப் பிரித்து அளிக்கப்பட்டது. அவ்வாறு பிரித்து அளிக்கப்பட்ட 31 காவல்துறைக் கண்காணிப்பாளர்கள் பதவிகளில் ஜெயங்கொண்டத்தில் புதிதாக ஒரு துணை காவல் கண்காணிப்பாளர் அலுவலகம் அமைக்கப்பட்டது. தற்போது அதனை மூடுவதாக உத்தேசம் இல்லை.

மாண்புமிகு உறுப்பினர் திரு. செ. கு. தமிழரசன் அவர்கள் நேற்று பேசுகையில் சாதிக் கலவரங்களைத் தடுப்பதற்கு ஒரு சமுதாயக் குழு அமைக்க வேண்டும்.

என்றார். இந்த சமுதாயக் குழுவில் பல்வேறு சமூகங்களின் தலைவர்கள் இடம் பெற வேண்டும் என்று அவர் கூறினார். இப்படி சமூகத் தலைவர்கள் என்று மாண்புமிகு உறுப்பினர் பேசும்போது அரசியலுக்கு அப்பாற்பட்ட தலைவர்களைக் குறிப்பிடுகிறார் என்றே நம்புகிறேன். அப்படி அரசியலுக்கு அப்பாற்பட்ட சமூகத் தலைவர்கள் யார் இருக்கிறார்கள் என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிவித்தால், அவர்களை வைத்து ஒரு குழு அமைக்க நிச்சயமாக ஆவன செய்யப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி).

முற்பகல் 10-20

மாண்புமிகு உறுப்பினர்கள் திரு. குமாரதாஸ் மற்றும் திரு. மெ. ஆண்டி அம்பலம் ஆகியோர் தமிழகக் காவல்துறை தொடர்புடைய கொள்கை பற்றி விவாதிக்க வெட்டுத் தீர்மானங்களைக் கொண்டு வந்துள்ளனர். காவல் துறையின் முக்கியப் பணிகள் பற்றிய விவரங்கள் மற்றும் கொள்கை விளக்கங்கள் மானியக் கோரிக்கை எண். 15 ன் கீழ் சாதனைகள் மற்றும் திட்டங்கள் என்ற குறிப்பிலே தரப்பட்டுள்ளன. அவைகளை தமிழகக் காவல் துறை பற்றிய இவ்வரசின் கொள்கை விளக்கமாக ஏற்றுக்கொள்ளுமாறு மாண்புமிகு உறுப்பினர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர். சிங்காரம், தஞ்சை மாவட்டம், பட்டுக்கோட்டை வட்டம் திருச்சிற்றம்பலத்தில் புறக் காவல் நிலையத்தை நிரந்தரக் காவல் நிலையமாக மாற்றவும், பேராவூரணி, அதிராம்பட்டினம் ஆகிய ஊர்களில் காவல் ஆய்வாளர் அலுவலகத்தை நிரந்தரம் செய்வது குறித்தும், மாண்புமிகு உறுப்பினர்கள் திரு. வே. தம்புசாமி, திரு. சோ. இராசாராமன், திரு. பி. வி. இராஜேந்திரன் ஆகியோர் தத்தம் தொகுதிகளில் புறக் காவல் நிலையம் வேண்டியும், நிரந்தரக் காவல் நிலையங்கள் வேண்டியும், மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜி. பழனிசாமி மாவட்டந் தோறும் நடமாடும் காவல் நிலையங்கள் அமைக்க வேண்டியும் வெட்டுத் தீர்மானங்களைக் கொண்டு வந்துள்ளனர்.

பட்டுக்கோட்டை வட்டம், திருச்சிற்றம்பலத்தில் புறக் காவல் நிலையம் கடந்த 1—3—1991 அன்று உள்துறை அரசாணை எண். 373 ன்படி முழுக் காவல் நிலையமாக உயர்த்தப்பட்டுள்ளது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி).



திருவாரூர் வட்டம், வைப்பூர் கிராமத்தில் புறக் காவல் நிலையம் ஒன்று தொடங்குவது பற்றி அரசு புதிய பணியிடங்களை உருவாக்க அரசு விதித்துள்ள தடையாணை நீக்கப்பட்ட பின்னர் பரிசீலனை செய்யப்படும்.

கன்னியாகுமரி மாவட்டம் விளவன்கோடு வட்டத்தில் பத்துக்காணி கிராமத்தில் காவல் நிலையம் ஒன்று அமைக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

வேதாரண்யம் தொகுதியில் ஏற்கனவே கரியாப்பட்டினம், வேதாரண்யம் ஆகிய இரு காவல் நிலையங்கள் அருகில் இருப்பதால் ஆயக்காரன்புலத்தில் காவல்நிலையம் தொடங்க அரசுக்கு தற்போது எண்ணம் இல்லை என்றும், அதைப்போல தஞ்சை மாவட்டம், பாபநாசம் தொகுதியில் சுவாமிமலை காவல் நிலையத்தை நிரந்தரமான காவல் நிலையமாக மாற்றவும், திருப்புறம்பியம் ஊருக்கு புறக் காவல் நிலையம் அமைக்கவும் தற்போது அரசுக்கு எண்ணம் இல்லை என்றும் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஏற்கனவே ஒவ்வொரு மாவட்டத்திலும் காவல் துறை பல பிரிவுகளைக் கொண்டு செவ்வனே இயங்கி வருவதால் புதியதாக நடமாடும் காவல் நிலையங்கள் அமைக்க அரசுக்கு தற்போது எண்ணம் எதுவும் இல்லையெனவும் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் திரு. மா. சுந்தரதாஸ், சென்னை நகரில் போக்குவரத்துக் குழு ஒன்றை அமைக்க வேண்டியும், மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். பன்னீர்செல்வம் திண்டிவனம் சரக போக்குவரத்து காவல் பிரிவை ஏற்படுத்துவது குறித்தும், மாண்புமிகு உறுப்பினர் திரு. சோ. இராசாராமன் அவர்கள் சென்னை நகரில் போக்குவரத்துக்கு இடையூறு விளைவிக்கும் நடைபாதை வியாபாரிகளை அகற்றி மக்கள் மனதில் கட்டுப்பாட்டினைக் கொண்டு வர வேண்டியதன் அவசியம் குறித்தும் வெட்டுத் தீர்மானங்களைக் கொண்டு வந்துள்ளனர்.

போக்குவரத்துக் குழு அமைக்கும் அவசியம் சென்னையில் மட்டுமல்லாது, அனைத்து மாவட்டங்களிலும் அமைக்க, கருத்துரு ஒன்று அரசின் பரிசீலனையில் உள்ளது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திண்டிவனம் சரக போக்குவரத்து காவல் பிரிவுக்குக் கூடுதல் பணியாளர்களை பணியமர்த்தும் கருத்துரு, கூடுதல் பணியிடங்கள் ஏற்படுத்த தற்போதுள்ள தடை நீக்கப்பட்டவுடன் பரிசீலிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

சென்னை மாநகரில் போக்குவரத்துக்கு இடையூறு விளைவிக்கும் நடைபாதை வியாபாரிகள் மீது மாநகர அதிகாரிகள், காவல் துறையினர் வழக்குகள் போட்டும், அபராதத் தொகை வசூலித்தும் தக்க நடவடிக்கையெடுத்து, சென்னையில் போக்குவரத்தை செம்மைப்படுத்திக் கொண்டிருக்கிறார்கள் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர். சிங்காரம், திரு. பி. ரங்கநாதன், திரு. டி. சுதர்சனம், திரு, தே. குமாரதாஸ், திரு. எச். எம். ராஜு, திரு. பி. வி. இராஜேந்திரன் ஆகியோர் தத்தம் தொகுதிகளில் உள்ள காவல் நிலையங்களுக்கு வாகன வசதி, கட்டிட வசதி, தொலைபேசி வசதி மற்றும் காவலர்களுக்கு குடியிருப்பு வீடுகள் கட்டித் தருவது குறித்தும் வெட்டுத் தீர்மானங்களைக் கொண்டு வந்துள்ளனர். தமிழகத்தில் உள்ள மொத்தம் 1,075 காவல் நிலையங்களில் 30 நிலையங்களில் ஜீப் வசதி உள்ளது. மீதி 1,045 நிலையங்களில் முதற்கட்டமாக 905 காவல் நிலையங்களுக்கு ஜீப் வழங்க கருத்துரு அரசின் தீவிர பரிசீலனையில் உள்ளது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி).

சென்னை, புரசை தொகுதியில் அயனாவரம் காவல் நிலையத்திற்கு உரிய நிலம் பெற நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. மற்றும் பெரியார் நகர் காவல் நிலையத்தைப் பொறுத்தவரையில் ரூ. 17 இலட்சத்து 16 ஆயிரம் செலவில் கட்டுமானப் பணி நடைபெற்று வருகிறது. விரைவில் இந்தப் பணி நிறைவேற்றப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி).

முற்பகல் 10.25

தமிழகக் காவல்துறை அலுவலருக்கான குடியிருப்பு வசதிகள் ஏற்படுத்துவதுகுறித்து இந்த அரசு அதிக அக்கறை கொண்டுள்ளது. இதுவரையில் ஏழாவது நிதிக்குழு மூலமாக காவல் பணியாளர்களுக்கான 3,989 குடியிருப்புகளும், 2,445 படை வீடுகளும் கட்டுமான வேலை முடிந்துள்ளது. எட்டாவது நிதிக்குழு தமிழ் நாட்டிற்கு நிதி எதுவும் ஒதுக்கவில்லை. ஆயினும் காவல் துறை உயர் மற்றும் கீழ் சார்நிலை அலுவலர்களுக்கான 80 விழுக்காடு வீட்டு வசதி செய்து கொடுப்பது என்ற குறிக்கோளில் இதுவரையில் உயர் சார்நிலை அலுவலர்களுக்கு 30 விழுக்காடும், கீழ் சார்நிலை அலுவலர்களுக்கு 45 விழுக்காடும் நிறைவேற்றப்பட்டுள்ளது.

காவலர்களுக்கு வீடு கட்டித் தருவதற்கு, மிகத் துரிதநடவடிக்கை எடுக்க வேண்டியதன் அவசியத்தை உணர்ந்த இந்த அரசு, கலைக்கப்பட்ட தமிழ்நாடு காவலர் வீட்டு வசதிக்



கழகத்தினை மீண்டும் புதுப்பித்து, அதன் மூலமாக இந்த நடப்பாண்டில் ஆயிரம் குடியிருப்புகள் கட்டுவது என தீர்மானித்து உள்ளது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி).

மாண்புமிகு உறுப்பினர்கள் திரு. சி. சுவாமிநாதன், திரு. உ. பலராமன், திரு. வி. தண்டாயுதபாணி, திரு. ச. இராமச்சந்திரன் ஆகியோர், தமிழகக் காவல்துறைக்கு நவீன ஆயுதங்கள் வழங்குவது குறித்தும், வாக்கி டாக்கி முதலான நவீன வகை உபகரணங்கள் தரப்படுவது குறித்தும், நவீன பயிற்சி முறை கொடுக்கப்படுவதன் அவசியம் குறித்தும் வெட்டுத் தீர்மானங்கள் கொண்டு வந்துள்ளனர். தமிழகக் காவல் துறையை நவீனமயமாக்குதல் தொடர்பாக, சட்டமன்றப் பேரவை முன்னர் வைக்கப்பட்டுள்ள மானியக் கோரிக்கை எண். 15-க்கான் கொள்கை விளக்கக் குறிப்பில், தமிழ்நாடு காவல்துறை சாதனை, வருங்காலத் திட்டம் ஆகியவை பற்றி விளக்கமாக தெரிவித்துக் கொள்ளப்பட்டுள்ளது. அதன் அடிப்படையில், ஏற்கனவே புதுக்கோட்டை, தஞ்சை மற்றும் தமிழகக் கடற்கரையோர மாவட்டங்களில் அழிவுச் சக்திகளின் ஊடுருவலை முற்றிலுமாகத் தடுக்கவும், தகர்க்கவும் மிகச் சீரிய முறையில், நவீன ஆயுத வசதிகளுடன் கூடிய காவலர் படைகள் இடைவெளியின்றி கண்காணிப்புப் பணியில் ஈடுபட்டுள்ளனர். அவர்களுக்குத் தேவையான அனைத்து வசதிகளும் செய்து தரப்பட்டுள்ளன. தமிழகக் காவல்துறைக்கு நவீன பயிற்சி அளிக்கும் பொருட்டு, ஹரியானா மாநிலத்தில், மனேசரி என்ற இடத்தில் உள்ள தேசிய பாதுகாப்புப் படைப் பயிற்சி நிலையத்தில்,

1. Personal Security Officer Course.
2. Bomb Disposal Course.
3. Counter Terrorist Training.

ஆகிய பயிற்சிகளுக்கு இதுவரையில் மொத்தம் 57 அதிகாரிகள் அனுப்பப்பட்டுள்ளனர். மேலும் 48 பேர்கள் அனுப்பப்பட உள்ளனர். மேலும் காவல் துறையினருக்கு நவீன ரக ஆயுதங்கள் வழங்கும் வகையில், ஏ.கே. 47 துப்பாக்கிகள் 200-ம், 7.62 எம்.எம். எஸ். எல். ஆர். வகைத் துப்பாக்கிகள் 100-ம் ஒதுக்கப்பட்டு, அவைகளைக் கையாள்வதற்கான பயிற்சியும் காவலர்களுக்கு அளிக்கப்பட்டு வருகிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

முன்னெச்சரிக்கை பாதுகாப்பு ஏற்பாடுகளை முன்னிட்டு, பொதுக் கூட்டங்கள், விழாக் காலங்கள், சட்டமன்றக் கூட்டத் தொடர் இரவு ரோந்துப் பணிகள் ஆகியவற்றிற்காகப் பணிபுரியும் காவலர்களுக்கு வாக்கி-டாக்கி சாதனங்கள் வழங்கப்பட்டுள்ளன என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு உறுப்பினர்கள் திரு ஆர். சிங்காரம், திரு. ச. இராமச்சந்திரன் ஆகியோர், கள்ளச் சாராயத்தை ஒழிப்பது குறித்தும், தமிழகத்தில் மீண்டும் கலால் பிரிவினைத் துவக்க விவாதிப்பது குறித்தும் வெட்டுத் தீர்மானம் கொடுத்துள்ளனர். கள்ளச் சாராயத்தை அடியோடு ஒழிக்க வேண்டும் என்பதே இந்த அரசின் தலையாய கொள்கையாகும். துடிப்புள்ள, நேர்மையான, தவறு செய்யாத காவல் அலுவலர்களை, கள்ளச் சாராயத்தை ஒழிக்கும் பணிக்கு நியமிப்பது என்ற உறுதியான கொள்கைதான், தற்போது இந்த அரசினால் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது. இதனை மேலும் தீவிரப்படுத்த, தமிழகத்தில் மீண்டும் மதுவிலக்கு அமுல் பிரிவை, ஒரு காவல் துறைத் தலைவரின் தலைமையில் துவக்குவதற்கு, அரசு முடிவு செய்து, அதற்கான நடவடிக்கைகளை எடுத்து வருகின்றது என்பதையும் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி). (குறுக்கீடு). நான் முடித்துவிடுகிறேன். பிறகு கடைசியிலே நீங்கள் பேசுங்கள். நான் முடித்துவிடுகிறேன். இறுதியிலே நீங்கள் விளக்கமாகக் கேளுங்கள். பதில் சொல்லி முடித்துவிடுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** திரு. ச. இராமச்சந்திரன்

**திரு. ச. இராமச்சந்திரன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மதுவிலக்கை அமுல்படுத்துகிறபோது, மத்திய அரசு பணம் கொடுக்க வேண்டும் என்று என்னுடைய வெட்டுத் தீர்மானத்தில் குறிப்பிட்டு இருந்தேன். மற்றவைகளை நான் மாண்புமிகு முதல்வர் பேசியபிறகு விளக்குகிறேன்.

**மாண்புமிகு செல்வி ஜெ. ஜெயலலிதா :** மத்திய அரசு, அதற்கான நஷ்டத்தை ஈடுசெய்ய வேண்டும் என்று கோரியுள்ளோம். பதில் எதிர்பார்க்கப்படுகிறது.

மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள், அவருடைய தொகுதியான தேனி— அல்லி நகரத்தில், ஒரு காவல் நிலையம் வேண்டும் என்ற கோரிக்கையை வைத்துள்ளார். இதுவரை, எல்லோரும் மாண்புமிகு நிதியமைச்சரிடம்தான் கோரிக்கைகளை எடுத்துரைப்பார்கள். ஆனால் நிதியமைச்சர் அவர்கள் இதுவரை, என்னிடத்திலே எதையும் கோரியது கிடையாது. எனவே, அவர்கள் கோரியபடியே, மதுரை மாவட்டம், தேனிக்கு அருகில் உள்ள அல்லி நகரத்தில், காவல் நிலையம் ஒன்று புதிதாக திறக்கப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். இதில் ஒரு உதவி ஆய்வாளரும், 2 தலைமைக் காவலர்களும், 2 முதல் நிலைக் காவலர்களும், 15 காவலர்களும் பணியமர்த்தப்படுவார்கள்.



**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** இதற்கான நிதி கோரி கோப்பு வருகிறபோது, மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் மறுப்பு ஏதும் சொல்லாமல், ஏற்றுக் கொள்ளவேண்டும் என்று அவையின் சார்பில் கேட்டுக் கொள்கிறேன். (சிரிப்பு).

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இருக்கிற நிதியிலே சமாளிக்க முடியும் என்ற காரணத்தால்தான் இது கேட்கப்பட்டிருக்கிறது.

முற்பகல் 10.30

**மாண்புமிகு செல்வி ஜெ. ஜெயலலிதா :** பாதுகாப்புப் பணி, சட்டம்— ஒழுங்குப் பணி மற்றும் ஏனைய அவசரப் பணிகளுக்கு காவல்துறையினர் முன்னறிவிப்பு அதிகமின்றி திடீர் திடீர் என அழைக்கப்படுகிறார்கள். அந்த சமயத்தில் அவர்கள் கையில் பணம் இன்றியோ, அல்லது முன் பணம் வாங்கமுடியாத நிலையிலோ இருக்கலாம். தற்போது அவர்களுக்கு சாப்பாட்டுப் படியாக நாள் ஒன்றுக்கு காவலர்களுக்கு ரூ. 6-ம், தலைமைக் காவலர் உதவி ஆய்வாளர், ஆய்வாளர் ஆகியோருக்கு ரூ. 7.50-ம் கொடுக்கப்படுகிறது. இதை உயர்த்தி கீழ்க்கண்டவாறு வழங்கப்படும் என அறிவிக்கிறேன்.

இரண்டாம் நிலை காவலருக்கு ரூ. 16, தலைமைக் காவலர், முதல் நிலைக் காவலருக்கு ரூ. 20, உதவி ஆய்வாளர், ஆய்வாளர் ஆகியோருக்கு ரூ. 30 என்ற அளவில் இனி சாப்பாட்டுப் படி உயர்த்தி வழங்கப்படும்.

வளரும் சமுதாயத்தின் தேவைகள் அனைத்துத் துறைகளிலும் நாளுக்கு நாள் வளர்ந்து கொண்டு வரும் பின்னணியில், காவல் துறையிலும் தேவைக்கேற்ப பணியாட்களை அதிகப்படுத்த வேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளது. குறிப்பாக பல ஆண்டுகளாக போதுமான காவலர்கள், உதவி ஆய்வாளர்கள் நியமனம் செய்யப்படாமல் பணியிடங்கள் காலியாக இருப்பதால், அவைகளை நிறைவு செய்ய வேண்டியது அரசின் கடமையாகும். இந்தக் குறைபாட்டை உணர்ந்த அரசு, இதற்கென 'தமிழ் நாடு சீருடை அணிவோருக்கான சிறப்பு தேர்வுக் குழு' ஒன்றை ஏற்படுத்த உள்ளது.

குறிப்பாக காவல் துறை, தீயணைப்புத் துறை, சிறைச்சாலைத் துறை போன்ற சீருடை அணியும் துறையின்அடிமட்டப் பணியாளர்களை தேர்ந்தெடுப்பதற்கான பணியை இக்குழு செய்யும் எனத் தெரிவித்துக்கொள்கிறேன்.

காவல்துறையினர் கடமையாற்றும்போது, பயங்கரவாதிகளாலோ, எதிரிகளாலோ, குற்றவாளிகளாலோ தாக்குண்டு அகால மரணமடைய வாய்ப்புள்ளது. அவ்வாறு வீரமரணம்

அடைந்தவர்களின் குடும்பத்தினருக்குப் பரிவுகாட்டி, அவர் களைப்பாதுகாக்கும்நோக்கோடு, இந்த அரசு செயல்பட விரும்பு கிறது. தற்போது இதுபோன்ற இனங்களில் இறந்தவர் குடும்பத் திற்கு இறுதியாக அவர் வாங்கிய ஊதியத்தில் 50 விழுக்காடுதான் குடும்ப ஓய்வூதியமாக வழங்கப்படுகிறது. இனி இது 100 விழுக்காடாக உயர்த்தப்படும். அதாவது இறந்தவர் உயிரோடு இருந்திருந்தால், அவர் எப்போது ஓய்வு பெற்றிருப்பாரோ, அந்த நாள்வரை அவரது குடும்பத்திற்கு முழு ஊதியம் வழங்கப் படும். அதன்பின் வழக்கமான குடும்ப ஓய்வூதியமும் அக்குடும் பத்திற்கு உண்டு என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். மேலும், வீர மரணம் அடையும் காவலரின் குடும்பத்திற்கு, முதலமைச்சர் பொது நிவாரண நிதியிலிருந்து ரூ. 1 லட்சம் மொத்தமாகவும் வழங்கப்படும்.

காவல்துறையினர் வெளியில் பணிக்குச் செல்லும்போது பயணப்படியும், தினப்படியும் பெறுவார்கள். இத்தினப்படி அவர்கள் வாங்கும் அடிப்படைச் சம்பளத்திலிருந்து 40 விழுக் காட்டிற்கு மீறக்கூடாது என்று தற்போது கட்டுப்பாடு உள்ளது. இந்நிலையால் தொலை தூர இடங்களுக்கு முகாம் செல்லும் போது இவர்களுக்கு இந்தக் கட்டுப்பாட்டால் கூடுதல் தினப் படி மற்றும் பயணப்படி கிடைக்க வாய்ப்பில்லாமல் போய்விடு கிறது. இந்நிலையைப் போக்க இது சம்பந்தமான பிரச்சினை களை ஆராய்ந்து பரிந்துரைக்க அலுவலர்களாலான ஒரு குழு நியமிக்கப்பட்டு, இன்னும் மூன்று மாதங்களுக்குள் அக்குழுவின் பரிந்துரைகள் பெறப்பட்டு, தக்க ஆணை பிறப்பிக்கப்படும் என கூறிக் கொள்கிறேன்.

துணைக் கண்காணிப்பாளர் நிலையில் உள்ள அதிகாரி களுக்கு இப்போதுள்ள கட்டுப்பாட்டை நீக்கி ஏனையோரைப் போல இவர்களுக்கும் அடிப்படைச் சம்பளத்தில் 40 விழுக் காட்டிற்கு மீறக் கூடாது என்ற மாறுதல் செய்யப்படுகிறது. இதற்கிடையில் இதுவரையில் நிலுவையிலிருந்த பயணப்படி பாக்கிகளை வழங்குவதற்காக இவர்களுக்காக ஒதுக்கப்பட்ட நிலுவை அளவை ஏற்கெனவே ரூ. 4 கோடியாக உயர்த்தி சமீபத்தில் ஆணையிடப்பட்டது. மேலும் ரூ. 2 கோடி அதற்காக ஒதுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். இத் துடன் பழைய பயணப்படி பாக்கிகள் எல்லாம் வழங்கப்பட்டு விடும்.

தமிழ்நாடு காவலர் சேம நல நிதிக்கு தமிழக அரசு ஆண்டு தோறும் ரூ. 5 இலட்சம் நிதியுதவி அளித்து வருகிறது. இதை இந்த ஆண்டு முதல் ரூ. 10 இலட்சம் என உயர்த்த அரசு முடிவு எடுத்துள்ளது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.



இப்போது காவல்துறை அதிகாரிகளுக்கு சீருடைப் படியாக ரூ. 750-ம், ஒவ்வொரு ஆண்டும் புதுப்பித்தல் படியாக ரூ. 250-ம் உயர் அலுவலர்களுக்கு வழங்கப்படுகிறது. இதை உயர்த்தி இனி சீருடைப் படி ரூ. 1,500 ஆகவும், புதுப்பித்தல் படி ரூ. 500 ஆகவும் வழங்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

முற்பகல் 10.35

தற்போது 'கிட்' பராமரிப்பிற்கு என்று மாதந்தோறும் படி வழங்கப்படுகிறது. அதாவது 'Kit Maintenance Allowance' இதனால் துணை கண்காணிப்பாளர்களுக்கு ரூ. 30-ம், உதவி ஆய்வாளர், ஆய்வாளர் ஆகியோருக்கு ரூபாய் 20-ம், காவலர், தலைமைக் காவலர் ஆகியோருக்கு ரூ. 15-ம் வழங்கப்படுகிறது. இது இனி முறையே ரூ. 40, ரூ. 30, ரூ. 25 என்று உயர்த்தி வழங்கப்படும். அதேபோல் காவலர் நலம் கருதி இன்னும் பலப் பல நல்ல பணிகளை இவ்வரசு பரிவோடு பரிசீலித்து நடவடிக்கை எடுக்கும் என இச்சந்தர்ப்பத்தில் கூறிக் கொள்கிறேன். இச் சந்தர்ப்பத்தில் இன்னொரு செய்தியையும் குறிப்பிட விரும்பு கிறேன். 17 ஆண்டுகளுக்கு முன் தமிழ்நாட்டிலே நடந்த அகில இந்திய காவல் துறையினரின் பணித் திறமை போட்டி 'All India Police Duty Meet. சென்னையில் இவ்வாண்டு இறுதியில் இன்னும் 3 மாதங்களுக்குள் மீண்டும் நடத்தப்படும் என்று தெரிவித்துக் கொள்கிறேன். இத்தகைய சில விளக்கங்களுடன் காவல் துறையின் பதி லுரையை முடித்துக் கொண்டு, மக்களின் உயிர் காக்கும் துறை யாக கருதப்படும் தீயணைப்புத் துறை பற்றிய என்னுடைய பதிலுரையை முன் வைக்க விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்** : திருமதி ரமணி நல்ல தம்பி.

**திருமதி ரமணி நல்லதம்பி** : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சமூக நலத்துறையின் போது கூட இதை நான் சொன்னேன். ஒரு சப் இன்ஸ்பெக்டர் பணியின் போது விபத் துக்கு ஆளாகி ராஜாஜி மருத்துவ மனையில் மதுரையிலே கோமா ஸ்டேஜிலே இருப்பதாக தெரிகிறது. அவருக்கு அரசு உயர்ந்த மருத்துவ வசதியையும் உதவித் தொகையும் வழங்க முன்வருமா என்று அறியவிரும்புகிறேன்.

**மாண்புமிகு செல்வி ஜெ. ஜெயலலிதா** : நீங்கள் குறிப்பிடு கின்ற அந்த சப் இன்ஸ்பெக்டர் எந்த நிலையில் தற்போது இருக்கிறார் என்று அறிக்கை பெறப்பட்டு அவரது நிலைக்கு ஏற்ப தகுந்த உதவி செய்ய அரசு ஆவன செய்யும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

[செல்வி. ஜெ. ஜெயலலிதா]

இப்போது தீயணைப்புத் துறை பற்றிய எனது பதிலுரையைக் கூற விரும்புகிறேன். இயற்கை அளித்த அரும்பெரும் நன் கொடைகள் சில சமயம் சீற்றம் அடைந்து சீறும்போது விளைவு களும் விபத்துக்களும் படு பயங்கரமாகி விடுகின்றன. மக்களைப் பெரிதும் பாதிக்கின்றன. நடக்கப்போகும் தீ விபத்துக்களைத் தடுத்து, தீ விபத்துக்களின்போது உடனடியாக நடவடிக்கைகள் எடுத்து, அதில் சிக்குண்ட உயிர்களையும் உடைமைகளையும் காப்பது தீயணைப்புத் துறையின் தலையாய கடமையாகும், மேலும் இயற்கை சீற்றத்தின்பாற்பட்ட புயல் வெள்ளம். பூகம்பம் போன்ற சமயங்களிலும் இத்துறையின் மீட்புப் பணி மகத்தானது. இத்துறையின் நோக்கம், அமைப்பு, தீயணைப்பு நிலையங்கள், இருக்கும் வசதிகள், பணிபுரிபவர்கள், பணிபுரியும் பாங்கு, செய்த பணிகள், விளைந்த விபத்துக்கள், பணி புரிவோ ருக்காக நலத் திட்டங்கள் ஆகியவை பற்றிய விபரங்களை சுருக்க மாக கொள்கைக் குறிப்பில் குறிப்பிட்டுள்ளேன். அதை வைத்துக்கொண்டும், உங்களின் அனுபவத்தையும், ஏனைய பின்னணியினையும் கொண்டும், இங்கே மாண்புமிகு பேரவை உறுப்பினர்கள் பலர், மானியத்தின் மீது உரையாற்றி நல்ல பல கருத்துக்களையும், கோரிக்கைகளையும் எடுத்து வைத்துள்ளீர்கள்.

பல இடங்களில் புதிதாக தீயணைப்பு நிலையங்கள் ஏற்படுத்த வேண்டும், பயன்படுத்தப்படும் தீ அணைப்பு ஊர்திகள் நல்ல நிலையில் இல்லை அவற்றை சீர்படுத்த வேண்டும், ஆம்புலன்ஸ் வசதி அதிகப்படுத்தப்பட வேண்டும், வாடகை கட்டிடத்தில் இயங்கும் தீயணைப்பு நிலையங்களுக்கு சொந்தக் கட்டிடம் கட்டித்தர வேண்டும் என்பது போன்ற இங்கே சொல்லப்பட்ட கருத்துக்கள், வைக்கப்பட்ட கோரிக்கைகள் அனைத்திலும் நியாயம் இருக்கிறது. உயிர் காக்கும் பணியில் உள்ள துறைக்கு மாண்புமிகு உறுப்பினர்கள் கேட்டதெல்லாம் கொடுக்க வேண்டு மென்றுதான் நானும் விரும்புகிறேன். ஆனால் உங்களுக்கே தெரியும் நமது தற்போதைய நிதி நிலைமை. நிதிப் பற்றாக் குறைதான் உங்கள் கோரிக்கைகள் அனைத்தையும் ஏற்க குறுக்கே நிற்கிறது.

நமது மாநிலத்தில் தீயணைப்புத் துறையில் 5,690 பேர் பணி புரிகின்றனர். 201 இடங்களில் தீயணைப்பு நிலையங்கள் நிறுவப்பட்டு இயங்கிக் கொண்டிருக்கின்றன. இவற்றுள் 69 தீயணைப்பு நிலையங்களில் 75 ஆம்புலன்ஸ் வாகன வசதிகள் உள்ளன. ஆண்டுக்கு சுமார் 10,000 தீ விபத்துக்களை இத்துறை யினர் சந்தித்து வருகின்றனர். சென்ற ஆண்டில் மட்டும் விபத் தால் விளைந்த நட்டம் சுமார் ரூ. 10 கோடியாகும். இதில் காப்பாற்றப்பட்ட பொருட்களின் மதிப்பு சுமார் 92 கோடி என்றால் இத்துறையின் பணித் திறனை பாராட்டத்தான் வேண்டும். மற்ற மாநிலங்களை ஒப்பிடும்போது நமது மாநிலத் தின் இத்துறையின் மீட்புப் பணி நிலை திருப்தி அளிக்கிறது.



வளரும் சமுதாயத்தின் தேவைகளை விரைந்து நிறைவேற்று வது வலிமை மிக்க அரசாகும் என்ற தத்துவத்தை நான் நன்கறிந்தவள். எனவே, மக்களுக்கு வேண்டியதை உரிய காலத் தில் தொடர்ந்து போதுமான அளவிற்கு திருப்திகரமான வகையில் திறம்பட செய்ய வேண்டும் என்பதில் கவனமாக இருக்கிறேன்.

முற்பகல் 10.40

அதாவது, 'Timely service, adequate service, continous service, efficient service' என்பதே எங்கள் குறிக் கோள். இந்த அரசைப் பொறுத்தவரையில் 25 கிலோ மீட்டருக்குள் ஒரு தீயணைப்பு நிலையம் ஏற்படுத்தப் படும். குறிப்பாக குடிசைவாழ் பகுதிகளுக்கும், தொழிற்சாலை கள் இயங்கும் பகுதிகளுக்கும் முக்கியத்துவமும், முன்னுரிமையும் கொடுக்கப்படும். இந்த ஆண்டு கொள்கைக் குறிப்பில் தெரிவித்த படி 6 தீயணைப்பு நிலையங்களை கும்மிடிப்பூண்டி, அனுப்பானடி, நாவல்பட்டி, கணபதி, திரூர், பவானி ஆகிய இடங்களில் திறக்க உள்ளோம். விரைந்து இயங்க காமராசர், பசும்பொன் முத்து ராமலிங்கத் தேவர் மற்றும் இராமநாதபுரம் ஆகிய மூன்று மாவட் டங்களுக்கும் ஒன்றாக இருந்த கோட்டத் தீயணைப்பு அலுவல கத்தை காமராசர் மாவட்டத்திற்கு ஒன்றாகவும், இராமநாத புரத்திற்கு ஒன்றாகவும் ஆக இரண்டு கோட்ட தீயணைப்பு அலுவலகங்கள் தொடங்கப்படும்.

வளரும் தேவைகளை விரைந்து தரவிருக்கும் அமைப்பையும், வாய்ப்பு வசதிகளையும் நவீனப்படுத்த வேண்டும், புதுப் புது முறைகளைக் கையாள வேண்டும் என்பதில் எங்கள் அரசு அக்கறை கொண்டுள்ளது. இருக்கும் ஊர்திகள், கருவிகள் ஆகிய வற்றைச் செப்பனிட முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. புதுப் புது கருவிகளையும், இயந்திரங்களையும் சேர்க்க நடவடிக் கைகளும் எடுக்கப்பட்டுள்ளன.

ஒன்றை குறிப்பிட்டுச் சொல்ல வேண்டுமானால், ஜப்பான் நாட்டிலிருந்து 3.32 கோடிக்கு ஒரு சுழல் மேஜை நீட்டிப்பு ஏணி (Turn-Table ladder) ஒன்றை தமிழகத்திற்கு வாங்கியிருக் கிறோம். 46 மீட்டர் நீளம் உள்ள இந்த ஏணி பொருத்தப் பட்ட வாகனம் விரைந்து சென்று எந்தப் பக்கம் வேண்டுமானா லும் ஏணியை இயக்கி பல மாடிக் கட்டிடங்களில் ஏற்படும் தீ விபத்தில் சிக்கியவர்களை இதன் மூலம் எளிதாக மீட்க உதவும். இதை இயக்க 50 பேர்களுக்கு ஜப்பானியர்களால் பயிற்சி அளிக்கப்பட்டு 15-9-1991 அன்று இந்த புதிய சாதனம் என்னால் அர்ப்பணிக்கப்பட்டது தமிழ்நாட்டு மக்களுக்கு என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். (மேசை யைத் தட்டும் ஒலி).

மாண்புமிகு உறுப்பினர்கள் திரு. ஆண்டி அம்பலம், திரு. தே. குமாரதாஸ் மற்றும் திரு. ஆர். சிங்காரம் ஆகியோர் கொள்கை பற்றி விவாதிக்க வெட்டுத் தீர்மானங்களை கொடுத்துள்ளனர். சட்டமன்ற பேரவையின் முன் வைக்கப்பட்டுள்ள தமிழ்நாடு தீயணைப்புத் துறை கொள்கைக் குறிப்பில் இதற்கான விளக்கங்கள் கொடுக்கப்பட்டுள்ளன என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். புதிய தீயணைப்பு நிலையம் அமைப்பது குறித்து மாண்புமிகு உறுப்பினர்கள் வெட்டுத் தீர்மானங்களைக் கொடுத்துள்ளார்கள். திரு. ஆர். நடேசன் கன்னியாகுமரி மாவட்டம் அருமனையில் அமைக்கக் கோரியுள்ளார். மாண்புமிகு உறுப்பினர் திருமதி ரமணி நல்லதம்பி திசையன்விளையிலும், திரு. பி. வி. இராஜேந்திரன் வேதாரண்யத்திலும், திரு. சோ. இராசாராமன் பாபநாசம் தொகுதியில் திருப்புறம்பியம் என்ற ஊரிலும், திரு. சி. ஞானசேகரன் வட ஆற்காடு—அம்பேத்கார் மாவட்டம் சத்துவாச்சாரியிலும் அமைப்பது குறித்து விவாதிக்கக் கேட்டுள்ளனர். மாண்புமிகு உறுப்பினர்களின் கவனத்திற்கு தீயணைப்புத் துறையினர் ஓர் ஊரில் தீயணைப்பு நிலையம் அமைக்க கடைப்பிடிக்கும் நடைமுறைகளைப் பற்றி கூற விரும்புகிறேன். அந்த ஊர் மக்கள் தொகை, அருகில் உள்ள தீயணைப்பு நிலையங்கள், தீ விபத்து அபாயங்கள் போன்றவற்றைப் பரிசீலித்து அவசியம் இருப்பின் அந்த ஊர் தீயணைப்பு நிலையங்கள் திறக்கப்பட வேண்டிய ஊர்களின் முன்னுரிமைப் பட்டியலில் ஒவ்வொரு ஆண்டும் ஜனவரி மாதம் சேர்க்கப்படுகிறது மாண்புமிகு உறுப்பினர்கள் குறிப்பிட்டுள்ள ஊர்களைப். பற்றிய விவரங்கள் சேகரிக்கப்பட்டு தகுதியிருப்பின் மற்றும் நிதி நிலைமையைக் கருத்தில் கொண்டு வரும் ஆண்டில் பட்டியலில் சேர்க்க நடவடிக்கைகள் எடுக்கப்படும் எனத் தெரிவித்துக்கொள்கிறேன்.

தீயணைப்பு நிலையங்களுக்கு நிரந்தரக் கட்டிடம் கட்டுவது குறித்து விவாதிக்க மாண்புமிகு உறுப்பினர்கள் திருவாளர்கள் வே. தம்புசாமி, ஆர். சிங்காரம், ஆர். நடேசன், மெ ஆண்டி அம்பலம், ஜீ. பழனிசாமி மற்றும் சோ. இராசாராமன் ஆகியோர் வெட்டுத் தீர்மானங்களை அளித்துள்ளார்கள். அவர்கள் குறிப்பிட்டுள்ள ஊர்களான திருவாரூர், பேராவூரணி, குலசேகரம், நத்தம், திருத்துறைப்பூண்டி மற்றும் பாபநாசம் ஆகியவற்றில் நிலத்தேர்வு செய்யப்பட்டு கட்டிடங்கள் கட்டுவதற்கு மதிப்பீடுகள் பெறப்பட்டதும் அரசின் நிதிநிலைக்கேற்ப நடவடிக்கை எடுக்கப்படும் எனத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு உறுப்பினர்கள் திருவாளர்கள் ஆர். சிங்காரம், பி. வி. இராஜேந்திரன், எச். எம். ராஜு, ஜி. பழனிசாமி, எம். எம். எஸ். அபுல்ஹசன், ச. இராமச்சந்திரன் ஆகியோர் பழைய தீயணைப்பு வண்டிகளை மாற்றுவது குறித்தும் பழுதான



வற்றைச் செப்பனிடுவது குறித்தும் விவாதிக்க வெட்டுத் தீர்மானங்களைத் தந்துள்ளார்கள். ஏற்கனவே இவற்றின் மீது தக்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10-45

மாண்புமிகு உறுப்பினர் திரு. மெ. ஆண்டி அம்பலம் மற்றும் திரு. பி. வி. இராஜேந்திரன் ஆகியோர் தீயணைப்புத் துறை ஊழியர்களுக்கு குடியிருப்புகள் கட்டுவது குறித்து ஒரு வெட்டுத் தீர்மானம் கொடுத்திருக்கிறார்கள். தீயணைப்புத் துறை பணியாளர்களுக்கு குடியிருப்புகள் கட்டும் திட்டம் தொடர்ந்து செயற்பட்டு வருகிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் திரு. பி. வி. இராஜேந்திரன் அவர்கள் புதிதாக அமைக்கப்படவுள்ள காயிதே மில்லத் மாவட்டத்தில் கோட்டத் தீயணைப்புத் துறை அலுவலகம் அமைக்கக் கோரியும், மாண்புமிகு உறுப்பினர் திரு. சோ. இராசாராமன் அவர்கள் இந்தத் துறைக்கு நவீனக் கருவிகள் வழங்குவதன் அவசியம் குறித்தும் விவாதிக்க வெட்டுத் தீர்மானங்களைத் தந்துள்ளார்கள். மாவட்டம் புதிதாக உருவாக்கப்படும்போது எல்லா அலுவலகங்களும் அமைக்கப்படும் என்பதையும் தீயணைப்புத் துறைக்கு ஏற்கனவே சைமன் ஸ்நார்கல் என்ற நவீன ஊர்தியும், குளிர் சாதன வசதியுள்ள நோயாளி ஊர்தியும், நெருப்புப் பற்றாத நவீன மேல் அங்கிகளும் வழங்கப்பட்டு புழக்கத்தில் உள்ளன என்பதையும், இந்திய ஆயுள் காப்பீட்டுக் கழக கடன் உதவியுடன் நவீனகருவிகள் வாங்க திட்டமிடப்பட்டுள்ளது என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் திரு. மா. சுந்தரதாஸ் அவர்கள் தீயணைப்புப் பணிகளில் மாணவிகளுக்கு பயிற்சி அளிப்பது குறித்து விவாதிக்கக் கோரியுள்ளார். கல்வித் துறையிடமிருந்து இதுபற்றி கோரிக்கை வரும்போது பரிசீலிக்கப்படும் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

தீயணைப்பு மற்றும் உயிர் காப்புப் பணிகளில் அதிக அளவில் பெண்கள நியமனம் செய்வது குறித்து மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் திரு. சோ. இராசாராமன் அவர்கள் ஒரு வெட்டுப் பிரேரணை கொண்டு வந்துள்ளார்கள். தீயணைப்புப் பணி முறைகள் மற்றும் உயிர் காப்புப் பணி முறைகள் ஆகியவை மிகவும் கடினமான உடல் உழைப்போடு கூடிய பணிகள் ஆகும். எனவே இந்தப் பணியில் ஆடவர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். எனவே இந்தப் பணிகளுக்கு பெண் பணியாளர்கள் உகந்தவர்கள் அல்ல என அரசு ஆணை நிலை எண். 108, உள் (தீயணைப்பு) துறை, நாள் 18—1—1991-ல் அரசு ஆணையிட்டுள்ளது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**தீயணைப்புத் துறையின் சேவையை மேலும் பரவலாக்கவும் அந்தத் துறையின் சேவை மக்களுக்கு விரைவாகவும், செம்மையாகவும் அமையும் பொருட்டு பல ஏற்பாடுகளை இந்த அரசு செய்ய திட்டமிடப்பட்டுள்ளது.**

ஏற்கெனவே தமிழகத்தில் 69 தீயணைப்பு நிலையங்களில் 75 ஆம்புலன்ஸ் வண்டிகள் செயல்படுகின்றன. நீங்கள் கேட்டுக் கொண்டதற்கு இணங்க அவற்றின் எண்ணிக்கையை அதிகப்படுத்தி இன்னும் 5 தீயணைப்பு நிலையங்களில் ஆம்புலன்ஸ் வண்டிகள் வழங்கிட அனுமதிக்கப்பட்டுள்ளது என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி).

அந்த 5 தீயணைப்பு நிலையங்கள் விருத்தாசலம், முசிறி, ஒரத்தநாடு, சங்ககிரி, சோழவந்தான் ஆகும்.

மாண்புமிகு உறுப்பினர்களில் பலர் தத்தம் தொகுதிகளில் தீயணைப்பு நிலையங்கள் வேண்டும் என கேட்டுள்ளீர்கள். உங்களுடைய வேண்டுகோள்களை மனதில் கொண்டு ஏற்கெனவே கொள்கை குறிப்பில் கூறிய 6 இடங்களைத் தவிர மேலும் 3 இடங்களில் புதிதாக தீயணைப்பு நிலையங்கள் ஏற்படுத்தப்படும் என்பதை மகிழ்ச்சியோடு அறிவிக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) அந்த 3 இடங்கள், துவரங்குறிச்சி, திருச்சி மாவட்டம், ஊத்தங்கரை, தர்மபுரி மாவட்டம், மற்றும் ஆற்காடு ஆகும்.

தம் உயிரையும் பொருட்படுத்தாது தீயணைப்புப் பணியில் ஈடுபடும் இந்த துறையினருக்கு இப்போது வழங்கப்படும் உணவுப்படி 'பீடிங் சார்ஜ்' மிகவும் குறைவாக உள்ளது. எனவே பெரும் நிதி நெருக்கடிக்கு இடையிலும் இந்த அரசு அவர்களுக்கு வழங்குகின்ற உணவுப்படியை உயர்த்தி வழங்க ஆணையிடுகிறது என தெரிவித்துக்கொள்கிறேன்.( மேசையைத் தட்டும் ஒலி).

12 மணி நேர வேலைக்கு மேல் 4 மணியிலிருந்து 6 மணி வரை இப்போது அமுலில் உள்ள தொகை ரூ. 1.50. ஏற்றி வழங்கப்படுகிற தொகை ரூ. 3.00; 12 மணி நேர வேலைக்கு மேல் 6 மணியிலிருந்து 10 மணி வரை இப்போது அமலில் உள்ள தொகை ரூ. 3.00, ஏற்றி வழங்கப்படுகிற தொகை ரூ. 6.00; 12 மணி நேர வேலைக்கு மேல் 10 மணியிலிருந்து 12 மணி வரை இப்போது வழங்கப்படுற தொகை ரூ. 4.50, ஏற்றி வழங்கப்படுகிற தொகை ரூ. 9.00.

விடுப்பு இல்லாமல் வாரம் முழுவதும் வேலை செய்யும் அலுவலர்களுக்கு நாள் ஒன்றுக்கு வழங்கப்படும் பிரத்தியேகப் படி. தற்போது ரூபாய் 5.00, இனி அது ரூபாய் 10.00 ஆக உயர்த்தி வழங்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)



தற்போது தீயணைப்புத் துறையில் பணிபுரிபவரகளுக்கு ஒரு செட் டெரிகாட்டன் சீருடையும், மற்றோரு செட் காட்டன் ஆகவும் வழங்கப்படுகிறது. இதை மாற்றி இனிமேல் 2 செட்டுகளுமே டெரிகாட்டனாக வழங்கப்படும் என தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி).

தீயணைப்புப் படையினர் சேம நல நிதிக்கு இதுவரை அரசு உதவி ரூபாய் 60 ஆயிரமாக இருந்தது. அதை இந்த அரசு ரூபாய் 1.5 லட்சமாக உயர்த்தி வழங்க ஆணையிடுகிறது என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி).

முற்பகல் 10.50

செந்தணலுடன் போராடி மக்களது உயிரையும் உடைமைகளையும் காக்கும் தீயணைப்புத் துறையினரின் சேவை மகத்தானது. நாட்டு மக்கள் மென்மேலும் அவர்களது சேவையைப் பெறவும் அத்துறையினர் பணி நிலை, வாழ்க்கைத் தரம் முதலியன உயரவும் இந்த அரசு தொடர்ந்து பாடுபடும் என தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) தீயணைப்புத் துறையைப் பற்றி போதுமான விளக்கங்களை அளித்துள்ளதாக நான் கருதுகிறேன். எனவே, அடுத்து அரசுக்கு அதிக வருமானத்தைத் தருகின்ற ஆற்றலும் அதே நேரத்தில் எப்போதும் மிகுந்த விமர்சனத்துக்கு ஆளாகும் துறையான மதுவிலக்கு மற்றும் ஆயத் தீர்வைத் துறையின் மீதான எனது பதில் உரையைத் தொடர்ந்து எடுத்துச்சொல்ல விரும்புகிறேன்.

மாநில ஆயத் தீர்வை மானியத்தின் மீது நேற்றைய தினம் சட்டப் பேரவை உறுப்பினர்கள் தமது அரும்பெரும் கருத்துக் களையும் அரிய யோசனைகளையும் சுருக்கமாக, அதே நேரம் சுவைபடச் சொல்லி முடித்து இருக்கிறீர்கள். இதற்கு முன்னமேயே சட்டப்பேரவை உறுப்பினர்களால் 12 வெட்டுத் தீர்மானங்கள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. அவற்றின் சாரத் தையும் நீங்கள் பேசிய பேச்சின் நோக்கத்தையும் அணுகிப் பார்த்தால் என்னால் புரிந்துகொள்ள முடிந்தது இந்த மாநிலத்தில் மதுவிலக்கு முழுக்க முழுக்க அமுல்செய்யப்பட வேண்டுமென்றும், அந்த வகையில் இந்த அரசு எடுத்த நடவடிக்கை வரவேற்கத்தக்கது என்றும் தெளிவாக்கி இருக்கிறீர்கள், அதே சமயம், கள்ளச்சாராயம் இந்த மாநிலத்திலிருந்து அடியோடு அகற்றப்படவேண்டுமென் றும் இந்தத் தொழிலில் ஈடுபடுபவர்களின் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படவேண்டுமென்றும், கள்ளச்சாராயத்தை ஒழிப்பதற்கு வேண்டிய அனைத்து நடவடிக்கைகளையும் எடுக்கவேண்டும் என்றும் கூறியிருக்கிறீர்கள். மதுவிலக்கால் ஏற்பட்ட

நட்டத்தை ஈடுகட்ட பல்வேறு வழிகள் கண்டாக வேண்டும் என்பன போன்ற உருப்படியான, அதேநேரம் உருக்கமான யோசனைகளை இந்த அரசுக்கு தந்து இருக்கிறீர்கள். உங்களின் அரும்பெரும் யோசனைகளுக்கு செவிமடுத்துச் செயல்படுவேன் என்பதை எடுத்த எடுப்பிலேயே தெளிவாக்கி எனது பதிலுரையை காலத்தின் அருமை கருதி சுருக்கி, விரைந்து முடிப்பேன் என்பதை முன்கூட்டி சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன். உங்களுக்கு அளிக்கப்பட்ட கொள்கைக் குறிப்பில் தமிழக அரசின் மதுவிலக்கு கொள்கையும், குறிப்பாக மலிவு விலை நாட்டு மதுவை இந்த மாநிலத்திலிருந்து ஒழித்ததையும் அதன்மூலம் நலிந்த ஏழையெளிய சமுதாயம் எப்படி காக்கப்படுகிறது என்பது பற்றியும், இந்தத் துணிவான கொள்கையால் அரசுக்கு சுமார் ஆண்டுக்கு ரூபாய் 400 கோடி வரையில் நட்டம் ஆனாலும் அதைத் தாங்கி செயல்படத் துணிந்ததை விளக்கி உள்ளேன். ஆட்சிக்கு வந்தவுடனே இவ்வளவு பெரிய முடிவு, சமுதாய நலன் கருதி, தேர்தல் வாக்குறுதியை நிறைவேற்றும் பொருட்டு, துணிந்து எடுக்கப்பட்டது குறிப்பிடத்தக்கது. இது போன்ற மலிவு விலை நாட்டு மது ஒழிக்கப்படும் நேரங்களில் கள்ளச்சாராயம் கட்டவிழ்த்து விடப்பட்டதை கண்டிருக்கிறோம். தத்துவம், கொள்கை பெயரளவில் இருந்ததுதான் வரலாறு. ஆனால் இன்றைய நிலை வேறாக இருக்கிறது. தேர்ந்து தெரிந்து ஒன்றைச் சொல்வதும், சொன்னபடி செய்வதும் அதுவும் திறமையாகச் செய்வதும், அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அரசின் சாதாரண நிகழ்ச்சிகள் (மேசையை தட்டும் ஒலி). எங்களது ஆட்சியைப் பொறுத்த வரையில், கொள்கையில் தெளிவாக இருக்கிறோம். மலிவு விலை மதுவை ஒழிப்பது ஒருபுறம், அதே நேரத்தில் கள்ளச்சாராயம் தலைகாட்டாது செய்வது இன்னொருபுறம் என இரு கோணங்களில் இந்தப் பிரச்சினையை அணுகி வினை திட்டத்தோடு செயல்பட்டதை கடந்த 3 மாதங்களாக கவனித்துக்கொண்டு இருப்பீர்கள் என்று கருதுகிறேன். இன்றைக்கு என்னால் துணிந்து சொல்ல முடியும். தமிழகத்தில் முற்காலங்களில் கரைபுரண்டு ஓடிய கள்ளச்சாராயத்தை இன்று வெகுவாகக் கட்டுப்படுத்தி இருக்கிறோம் என்றால் அது மிகையாகாது. (மேசையைத் தட்டும் ஒலி) மதுவை ஒழிக்கவேண்டும். குறிப்பாக கள்ளச் சாராயம் சுத்தமாகத் தடுத்து நிறுத்தப்பட வேண்டும் என்பதற்காக இந்த அரசு எடுத்த சில அபரிமிதமான, அதிரடி நடவடிக்கைகள் உங்களுக்கு மகிழ்ச்சியைத் தரும் என நினைக்கிறேன். இதுவரை, காவலர்கள் தமது கடமைகளுக்கு மத்தியில் மதுவிலக்குக் குற்றங்களையும் கண்காணித்து வந்தார்கள். அதன்மூலம் அவர்கள் கவனம் சிதறுண்டது என்பதை அறிந்த இந்த அரசு மதுவிலக்கை



பிரத்யேகமாக அமுலாக்க ஒரு பிரத்யேகப் பிரிவை ''புரகிபிஷன் என்ஃபோர்ஸ்மெண்ட் விங்'' ஒரு காவல்துறைத் தலைவரின் ''இன்ஸ்பெக்டர் ஜெனரல் ஆஃப் போலீஸ்'' மேற்பார்வையில் உருவாக்க முன்வந்துள்ளது. இந்தப் பிரிவில் 1,800 பேர் களுக்கு மேல் பணிபுரிவார்கள். அவர்களுக்கு வேண்டிய வாகன வசதி, ஏனைய வசதிகள் கொடுக்கப்படும். அப்படி செய்வதன் மூலம் கள்ளச் சாராயம் காய்ச்சுதல், வைத்திருத்தல், விற்பனை செய்தல், எடுத்துச் செல்லுதல் ஆகியவற்றை எளிதில் ஒழித்துக்கட்ட முடியும் என்று இந்த அரசு நம்புகிறது. இவர்களைத் தவிர எப்போதும் உள்ள காவல் துறையினருக்கும் இவ்விஷயத்தில் பொறுப்பு கொடுக்கப்பட்டிருக்கிறது. மதுவிலக்குப் பிரிவு காவலர்களைக் கொண்டு மற்ற மாநில எல்லைகளில் சோதனைச் சாவடிகள், திடீர் திடீரென நடவடிக்கை எடுக்கும் பறக்கும் படைகள் உருவாக்கப்பட இருக்கின்றன. சுருங்கக்கூறின், வெளி மாநிலங்களிலிருந்து கள்ளச் சாராயம் வருவதோ, இந்த மாநிலத்திலே கள்ளச் சாராயம் காய்ச்சி பின் விற்கப்படுவதோ இரும்புக் கரம் கொண்டு தடுக்கப்படும் என்பதில் தெளிவாக இருக்கிறோம்.

முற்பகல் 10.55

அடுத்து, இந்த அரசு ஆட்சிக்கு வந்தவுடனேயே, கிராம நிர்வாக அலுவலர்களையும், காவல் துறை அதிகாரிகளையும், அந்தந்த இடங்களுக்குப் பொறுப்பாக்கி அவரவர்கள் அதிகார வரம்புக்குள் நடைபெறும் கள்ளச்சாராய நடவடிக்கைகள், ஏனைய மதுவிலக்குக் குற்றங்கள் பற்றி நடவடிக்கை எடுக்கத் தவறினாலோ அது விஷயத்தில் திறமைக் குறைவாக நடந்து கொண்டாலோ அவர்கள் மீது கடுமையாக ஒழுங்கு முறை நடவடிக்கை எடுக்கப்படும் என்ற இந்த அரசின் சமீப கால ஆணை ஒரு மகத்தான விளைவை உருவாக்கியிருக்கிறது. மதுவிலக்குக் கொள்கை அமலாக்கத்தில் ஒரு Major break through என்று கூட இதனைச் சொல்லலாம் இது விஷயத்தில் சட்டப்பேரவை உறுப்பினர்களும், ஏனையோரும் அரசுக்கு உதவவேண்டும் என இச்சந்தர்ப்பத்தில் கேட்டுக் கொள்கிறேன்.

கள்ளச் சாராயம் காய்ச்சுவதற்குப் பயன்படும் எரி சாராயம் தவறாகப் பயன்படுத்தப்படுவதைத் தடுப்பதற்காக எங்கெல்லாம் தொழில் நீடிப்பு சாத்தியக் கூறுகள் உள்ளனவோ அங்கெல்லாம் இயல்பு மாற்றப்பட்ட சாராவியை (Denatured Spirit) வழங்க வேண்டும் என்று அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அரசு ஆட்சிக்கு வந்த பின் ஆணை பிறப்பித்துள்ளது. இதனால் கள்ளச் சாராயம் காய்ச்சப் பயன்படும் எரி சாராயத்தின் துஷ்பிரயோகம் தடுக்கப்படுகிறது.

அடுத்து, எந்த ஒரு அமுலாக்கமும் சட்டத்தின் துணையோடு, அமைப்பால் நிறைவேற்றப்படுகிறது. அந்த வகையில் சட்டமும், நிறைவேற்றும் அமைப்பும் பிரச்சினைக்கு முழுப் பரிகாரம் தர முடியாது. பயனடையும் மக்களின் தீவிர ஈடுபாடுதான் திட்டத்தின் வெற்றிக்கு முதுகெலும்பு. ஆகவே, ''குடி குடியைக் கெடுக்கும்'', அதனால் விளையும் விளைவுகள் விபரீதமானவை என்ற தத்துவத்தை நாடு எங்கெங்கிலும் குறிப்பாக ஏழை எளியவர்களின் மத்தியில் வெகுவாகப் பரப்ப வேண்டும். தத்துவ ரீதியாக பார்த்தாலும் சரி, சமயக் கண்ணோட்டத்தில் பார்த்தாலும் சரி, உடல் நலக் கூறுவாக்கில் பார்த்தாலும் சரி, சமுதாயத்தின் நலனை வைத்துப் பார்த்தாலும் சரி, எந்தக் கண்ணோட்டத்தில் அணுகினாலும் சரி, மதுவை விலக்க வேண்டும் என்பதில் மாறுபட்ட, வேறுபட்ட கருத்துக்கள் இருப்பதற்கு நியாயம் இல்லை. எனவே, இதை ஒரு இயக்கமாக மாற்றுவதற்கு மக்கள் முன் வர வேண்டும். இதற்கு அரசியல் மன உறுதி பெற்ற ஆட்சி வேண்டும், அமைப்பு வேண்டும், ஆதரிக்கும் பொது அபிப்பிராயம் வேண்டும். அவை எல்லாவற்றிற்கும் மேலாக மக்களின் பொது ஈடுபாடு வேண்டும்.

இத்தனை தத்துவங்களையும் ஊருக்கு உரத்த குரலில் எடுத்துரைக்க மாநில அளவிலான ஒரு பிரச்சாரக் குழுவை இந்த அரசு ஏற்படுத்தியிருக்கிறது. அந்தக் குழுவிற்குத் தமிழக முதலமைச்சரே தலைவராகவும், தமிழகத்தில் நன்கு அறிமுகமான பிரபலமான பல்வேறு துறைகளில் ஈடுபாடு உடைய பெருமக்கள் 22 பேரையும் சேர்த்து மாநில மட்டத்தில் ஒரு குழு அமைக்கப்பட்டுள்ளது. இதைத்தவிர மாவட்ட ரீதியில், வட்ட ரீதியில், வட்டார ரீதியில், கிராம ரீதியில் குழுக்களை திருத்தியமைக்க இந்த அரசு விரும்புகிறது. வெவ்வேறு மாவட்டங்களில் இருக்கும் குழுக்கள் பெயரளவில் இருந்தனவே தவிர அவை செம்மையாகச் செயல்பட்டதாகச் தெரியவில்லை. இந்தக் குழுக்களில் எல்லாம் பெண்கள் பங்கேற்றதாகத் தெரியவில்லை. இனி மேல் அமைக்கப்படும் குழுக்களில் பெண்கள் கணிசமான அளவிற்குப் பங்கு பெறுவார்கள் என்பதை இங்கு உறுதியாகக் கூறுகிறேன். காலம் காலமாகக் குடிப்பழக்கம் உடைய கணவன்மார்கள் கையில் சிக்குண்டுத் தவித்தவர்கள் ஏழை பேதை பெண்மக்களே. அப்படிப் பாதிப்புக்கு ஆளான பெண் மக்களே அந்தப் பாதிப்பு வராமல் தடுப்பதற்கு தக்க பரிகாரம் சொல்லப் பொருத்தமானவர்கள் இல்லையா?

மதுவின் கொடுமைகளை விளக்க, சினிமாப்படங்கள் பிரச்சார சாதனங்கள், சேவா சங்கங்கள் முழுக்க முழுக்கப் பயன் படுத்தப்படும். பள்ளிப் பாடப் புத்தகங்களில் கூட இதைப் பற்றி கருத்துக்கள் கூற முயற்சிக்கப்படும். குடிப்பழக்கத்தால்



விளையும் கேடுகளை மக்களுக்கு உணர்த்த அரசின் செய்தித் துறை திரைப்படப்பிரிவு விசேஷ திரைப்படங்களைத் தயாரித்து தொலைப் காட்சியிலும் வீடியோ கேசட்டுகள் மூலமாக திரைப்பட அரங்குகளிலும் இப்பிரச்சாரப் படங்கள் மக்களுக்குக் காண்பிக்கப்படும். செய்தித் துறை மானியக் கோரிக்கையின் மீது நடைபெற்ற விவாதத்தின்போதே இதை நான் அறிவித்திருக்க வேண்டும். அதைவிட இங்கே அறிவிப்பதுதான் அதிகப் பொருத்தமுடையது என்பதால் இப் பொழுது அறிவிக்கிறேன்.

ஒவ்வொரு ஆண்டும் ஒவ்வொரு வாரத்தை மதுவிலக்கு எழுச்சி வாரமாகக் கொண்டாடி மக்களின் மனத்தில் இந்தத் தத்துவங்களை நன்கு பதிய வைக்கும் முயற்சிகள் மேற் கொள்ளப்படும்.

தமிழகத்தில் உள்ள 31 சர்க்கரை ஆலைகளில் உற்பத்தியாகும் கருப்பஞ்சாற்றுக் கசண்டை-மொலாஸஸ்- தேக்கம் இல்லாது பார்த்துக் கொள்ளப்படும்.

முற்பகல் 11.00

அதேபோல, வடிசாலைகளில்—'டிஸ்டிலரிஸ்'-களில் — உற்பத்தியாகும் சாராவி- 'ஆல்கஹால்'—தக்கப்படி பயன்படுத் தப்படும். உபரியாக இருக்கும் 'மொலாஸஸ்' சாராவியை, எப்படிப் பயன்படுத்தி, என்னென்ன தொழில்களைத் தொடங்குவது என்பதைப் பற்றி அரசு பரிசீலித்து வருகிறது. சுருங்கக் கூறின், கள்ளச் சாராயம் கட்டுப்படுத்தப்படும்; முழுக்க, முழுக்க ஒழிக்க முயற்சிகள் மேற்கொள்ளப்படும்.

மாண்புமிகு உறுப்பினர்கள் திரு. ஆர். சிங்காரம். திரு. குமாரதாஸ், திரு. மெ. ஆண்டி அம்பலம் ஆகியோர் தமிழக அரசின் மதுவிலக்கு மற்றும் ஆயத் தீர்வை கொள்கை குறித்து விவாதிக்க வெட்டுத் தீர்மானங்கள் கொடுத்துள்ளனர். தமிழக அரசின் மதுவிலக்கு மற்றும் ஆயத் தீர்வை பற்றிய கொள்கை விளக்கங்கள், மானியக் கோரிக்கை எண். 2-இன் கீழ், ஏற்கெனவே கொடுக்கப்பட்டுள்ளன கொள்கை விளக்கக் குறிப்பில் தெளிவாக விளக்கப்பட்டுள்ள. இருப்பினும், மிக முக்கியமான ஒருசில கொள்கைகளை மட்டும் இம்மாமன்றத்தின் முன் வைக்க விரும்புகிறேன். வறிய நிலையில் உள்ள சாதாரண மக்களின் நிலையினைப் பார்த்து, ஒரு உயரிய கொள்கையின் அடிப்படையில், கடந்த 16—7—1991 முதல் நாட்டு மதுக் கடைகளை இந்த அரசு மூடிவிட்டது. கள்ளச் சாராயம் காய்ச்சுதல், எடுத்துச் செல்லுதல், வைத்திருத்தல், விற்பனை செய்தல் போன்றவற்றை, அறவே களைய இந்த அரசு காவல் துறை, வருவாய்த் துறை அலுவலர்களை ஈடுபடுத்தி,

மிகக் கடுமையான ஆணைகளைப்பிறப் பித்துள்ளது. மதுவிலக்கின் நற்பயன் குறித்தும், குடிப் பழக்கத்தின் கேடுகள் குறித்தும், பொதுமக்களிடம் பிரச்சாரம் செய்ய, என் தலைமையில் ஒரு உயர்மட்டக் குழு அமைக்கப்பட்டுள்ளது. மதுவிலக்குக் கொள்கையினை தீவிரப்படுத்த, காவல் துறையில் மது விலக்குப் பிரிவை மீண்டும் ஏற்படுத்த அரசு முடிவு செய் துள்ளது. எரி சாராயம், கள்ளச் சாராயம் காய்ச்சுவதற்கு, தவறாகப் பயன்படுத்துவதை முற்றிலும் தடுக்க இந்த அரசு ஆணைகள் பிறப்பித்துள்ளது. இத்தகைய அடிப்படை கொள்கைகளை ஒட்டி, இந்த அரசு செயல்படும் என்று மாண்புமிகு உறுப்பினர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் திரு. சிங்காரம் அவர்கள் கள்ளச் சாராய வழக்குகளின் மீதான தண்டனையை அதிகரிப் பது குறித்து, ஒரு வெட்டுத் தீர்மானம் கொடுத்துள்ளார். ஏற்கெனவே, நடைமுறையிலுள்ள 1937 ஆம் ஆண்டு தமிழ் நாடு மதுவிலக்குச் சட்டம் மற்றும் 1982 ஆம் ஆண்டு பிறப்பிக்கப்பட்ட தடுப்புக் காவல் சட்டம் ஆகியவைகளிலே மதுவிலக்கு தொடர்பான குற்றவாளிகளுக்கு கடும் தண்டனை கொடுக்க வழிமுறைகள் உள்ளன. எனவே, தற்போது விதிக்கப்படும் அதிகபட்ச தண்டனையான ஏழாண்டு கள் கடுங்காவல் சிறைத் தண்டனை என்பதை மேலும் உயர்த்த வேண்டிய அவசியம் இல்லை என்பதைத் தெரிவித்து கொள்கிறேன்.

மாண்புமிகு உறுப்பினர்கள் திரு. ஆர். சிங்காரம், திரு. பி. சுவாமிநாதன் ஆகியோர் மதுவிலக்கு மூலம் ஏற்பட்ட நிதி நெருக்கடியை ஈடுசெய்வது குறித்தும், வெளிநாட்டு மது வகைகள் மீது வரியை உயர்த்துதல் குறித்தும் வெட்டுத் தீர்மானங்கள் கொண்டு வந்துள்ளார்கள். 1991—92 நடப்பு ஆண்டில், இந்தியாவில் தயாரிக்கப்படும் அயல்நாட்டு மதுபான சில்லறை விற்பனை கடைகளுக்கான கூடுதல் உரிமக் கட்டணம் என்ற வகையில் ரூ. 21.78 கோடி வருவாய் கிடைக்கிறது. மேலும், இந்தியாவில் தயாரிக்கப்படும் அயல் நாட்டு மது மீது, கூடுதல் தீர்வை மூலமாக, மார்ச் 1992 வரை, ரூ. 20.58 கோடி வருவாய் கிடைக்கப் பெறும். இது மட்டுமின்றி, இந்த இழப்பினை ஈடுசெய்யும் பொருட்டு, மானியம் வழங்குமாறு மந்திய அரசு கேட்டுக்கொள்ளப் பட்டுள்ளது என்பதையும் இங்கே தெரிவிக்க விரும்புகிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் திரு. சிங்காரம் அவர்கள் பொது மக்கள், அதிகாரிகள் கொண்ட மது ஒழிப்பு மக்கள் கமிட்டி அமைப்பது குறித்து வெட்டுத் தீர்மானம் ஒன்று கொடுத்துள்ளார். கள்ளச் சாராயத்தை ஒழிக்க, இத்தகைய



பொதுமக்கள், அதிகாரிகள் அடங்கிய குழுக்கள் கிராம அளவில் ஒரத்தநாடு மாதிரி அளவிலான குழுமம் போன்று பல்வேறு மாவட்டங்களிலும் அமைக்கப்பட உள்ளன என்பதைத் தெரி வித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர். நடேசன் அவர்கள் அயல்நாட்டு மதுபானக் கடைகளில் 'பார்' அமைக்க அனுமதி அளிப்பது குறித்து ஒரு வெட்டுத் தீர்மானம் கொடுத்துள்ளார். அயல்நாட்டு மதுபானக் கடைகளில் 'பார்' அமைக்க கொள்கை அடிப்படையில் அனுமதியளிக்க இயலாது என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

மாண்புமிகு உறுப்பினர்கள திரு. பி.வி. இராஜேந்திரன், திரு. எஸ். இராஜாராமன் ஆகியோர் தத்தமது தொகுதி களில் கள்ளச் சாராயத்தை ஒழிப்பது குறித்தும், அதற்கு துணை போகும் அதிகாரிகள் மீது நடவடிக்கை எடுப்பது குறித்தும், வெட்டுத் தீர்மானங்கள் கொண்டு வந்துள்ளார் கள். 1991 நடப்பு ஆண்டில் வேதாரண்யம் பகுதி யைப் பொறுத்தவரையில் கடலோரப் பகுதிகளிலுள்ள கிராமங் களில் மது விலக்கு நடவடிக்கைகள், கள்ளச் சாராயம் ஒழித் தல் மற்றும் வழக்குகள் பதிவு செய்தல் போன்றவை மூலம் தீவிரப்படுத்தப்பட்டுள்ளன. அரசு ஆணை எண். 444, மதுவிலக்கு மற்றும் ஆயத் தீர்வையின்படி ஒவ்வொரு பகுதியிலும் கள்ளச் சாராயம் காய்ச்சுவதை ஒழிக்க, அந்தந்தப் பகுதி கிராம நிர்வாக அலுவலரும் காவல்துறை உதவி ஆய்வாளரும் முழுப் பொறுப்பு வகிக்கிறார்கள். இப்பொறுப்பினை சரிவர நிறைவேற்றாதவர்கள் மீது கடும் ம்ழுங்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படுகிறது. இந்த அரசாணையில் கண்டுள்ள அறிவுரைகள் தீவிரமாகக் கடைப்பிடிக்கப்படும்.

முற்பகல் 11.05

மாண்புமிகு உறுப்பினர் திரு. ச. இராமச்சந்திரன் அவர்கள் மதுவிலக்குக் கொள்கையை அமுல்படுத்த மத்திய அரசு மானியம் வ்ழங்காதது பற்றி விவாதிக்க வெட்டுத் தீர்மானம் கொடுத்துள்ளார். தமிழக அரசின் மதுவிலக்குக் கொள்கையிலே கிட்டத்தட்ட ஆண்டுக்கு 390 கோடி ரூபாய் நிதி இழப்பு ஏற்படும் எனினும், மதுவிலக்கைத் தீவிரமாக அமல்படுத்துவது என்பது தமிழ்நாட்டில் உள்ள இலட்சக்கணக்கான குடும்பங்களை அழிவி லிருந்து காப்பாற்றுவதற்காக, இந்த அரசு கடைப்பிடிக்கும் ஒரு அறநிலைக் கொள்கையாகும். இருப்பினும், இதனால் ஏற்படும் நஷ்டத்தை ஈடுகட்ட வேண்டியது அவசியமாதலால், அரசு,

**மானியம் கோரி மத்திய அரசுக்குத் தெரிவித்துள்ளது. இதற் கான பதில் மத்திய அரசிடமிருந்து எதிர்பார்க்கப்படுகிறது என்ப தையும் தெரிவித்துக் கொள்கிறேன்.**

முழு மதுவிலக்கினைத் தமிழ்நாட்டில் அமல்படுத்த பெரும் முயற்சிகளை மேற்கொண்டுவரும் எங்கள் அரசின் தெளிவான மக்கள் நலக் கொள்கையை நிறைவேற்ற எந்தத் தியாகத்தையும் ஏற்க இந்த அரசு தயாராக உள்ளது என்பதனைத் தெளிவு படுத்தி உள்ளேன். (மேசையைத் தட்டும் ஒலி.)

மதுவிலக்கு மற்றும் ஆயத் தீர்வை மானியக் கோரிக்கையின் மீது நான் ஆற்றிய பதிலுரை மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவ ருக்கும் ஏற்புடையதாக இருக்கும் என்று நம்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி).

காவல்துறை, தீயணைப்புத் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத் தீர்வைத் துறை, ஆகியவை குறித்து நடைபெற்றுள்ள மானியக் கோரிக்கை விவாதத்தில் கலந்து கொண்டு தங்களது சீரியக் கருத் துக்களையும், யோசனைகளையும், தேவையான அளவுக்கு வழங்கி யுள்ள மாண்புமிகு உறுப்பினர்களுக்கு எனது கனிவான நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். மாண்புமிகு உறுப்பினர்களால் எடுத்துச் சொல்லப்பட்ட ஆலோசனைகள் அரசின் கவனத்தை வெகுவாகக் கவர்ந்திருப்பதோடு, தேவையான அளவுக்கு நடை முறைப்படுத்துகிற வகையிலும் ஆர்வத்தோடு கவனிக்கப்பட்டுள் ளது. ஒரு பக்கம் வாழ்த்துக்கும், மறுபக்கம் வசவுக்கும் பெயர் பெற்ற இம்மூன்று துறைகளின் இயக்கம் பற்றிய தெளிவான வழிகாட்டுதலுக்கு மாண்புமிகு உறுப்பினர்கள் வழங்கியுள்ள நல்ல கருத்துக்கள் வலுவோடு உள்ளன. அரசுக்கு மனநிறை வைத் தருகிற அந்த நல்ல கருத்துக்கள் கூடிய விரைவில் செயல் படுத்தப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். (மேசை யைத் தட்டும் ஒலி.)

மாண்புமிகு உறுப்பினர்கள் வழங்கிய கருத்துக்கள் மற்றும் வெட்டுத் தீர்மானங்களுக்குப் பெரும்பாலும் என்னுடைய பதில் கிடைத்திருக்கும் என்று நம்புகிறேன். சில கருத்துக்களுக்குக் கிடைக்கவில்லை என்றாலும், குறிப்பில் மாண்புமிகு உறுப்பினர் கள் பேசிய அனைத்தும் இருக்கின்றன. அவைகள் மீது உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்று தெரிவித்து, வெட்டுத் தீர்மா னங்கள் கொடுத்துள்ள மாண்புமிகு உறுப்பினர்கள் அவைகளைத் திரும்பப் பெற்றுக் கொண்டு மானியக் கோரிக்கைகளை நிறை வேற்றித்தர வேண்டுமென்று கேட்டுக்கொண்டு அமைகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர்.



**திரு. எஸ். ஆர். பாலசுப்ரமணியன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நேற்றைய தினம் நான் இங்கே பேசும் போது சிவராசன் கைது பற்றி எனக்குக் கிடைத்த நம்பகமான தகவலை எடுத்துச் சொன்னேன். காலையிலே சுங்கத்துறையிட மிருந்து கோரிய தகவலைப் பெறமுடியவில்லை என்கிற செய்தி என் செவிக்கும் எட்டியது. என்றாலும், அதற்குப் பின்னாலே காவல் துறையினருக்கு மேலும் சில தகவல்களைக் கொடுத்திருக் கிறேன். I think that that should put them in the right track. இன்னும் சில தகவல்கள் என்னிடத்தில் இருக்கின்றன. அந்தத் தகவல்களை இப்போது நான் இங்கே, இந்த அவையிலே வெளி யிடுவது, புலன் விசாரணையிலே இருக்கின்ற இராஜீவ் காந்தி கொலை வழக்கு விசாரணைக்குக் குந்தகம் விளைவிக்கும் என்று ஐயுறுகிறேன். தேவைப்படுகின்ற நேரத்தில் முதலமைச்சர் கோருகிற நேரத்தில் கட்டாயம் அந்தத் தகவல்களைத் தருவதற் குத் நான் தயாராக இருக்கின்றேன் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு செல்வி ஜெ. ஜெயலலிதா :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது பதிலுரையின் போது இதைப்பற்றிக் குறிப்பிட்டேன். மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் நேற்றுத் தெரிவித்த ஒரு தகவலையொட்டி காவல் துறையிடமும், சுங்கத் துறையிடமும் விசாரித்தபோது அப்படிப் பட்ட ஒரு சம்பவம் நிகழவில்லை என்ற பதில்தான் கிடைத் துள்ளது. இருப்பினும் I have asked them to continue the investigation. If you have any information, I request you to please submit it to the Government and we will take appropriate action on it.

முற்பகல் 11-10

மாண்புமிகு பேரவைத் தலைவர் - திரு. ச. இராமச்சந்திரன்.

**திரு. ச. இராமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தேர்ந்தெடுக்கப்பட்ட அரசை மத்திய அரசுகூட கலைக்கக்கூடாது என்பது தான் எங்களுடைய நிலை. அதோடு மட்டுமல்ல, சட்டமன்றத்தின் உள்ளேயும் சரி, வெளியேயும் சரி ஆக்கபூர்வமான எதிர்க்கட்சியாகப் பணியாற்ற வேண்டும் என்பதுதான் எங்களுடைய குறிக்கோள். தமிழ்நாட்டினுடைய அரசியலைப் பொறுத்தவரையில் நாடு என்று பார்க்கிறோமே தவிர அதிலும் கண்ணோட்டம் என்று பார்த்தால் நாட்டிலுவள ஏழை மக்கள் என்று பார்க்கிறோமே தவிர வேறு எந்த நிலையி லும் இல்லை. அங்கனமிருக்க, மாண்புமிகு முதலமைச்சர் அவர் கள் தனது பதிலுரையில், இந்த ஆட்சியைக் கவிழ்ப்பதற்கு ஜாதிக் கலவரத்தைத் தூண்டி கிளர்ச்சி நடத்தியதாக அவர்கள் குறிப் பிட்டார்கள். அந்த கிளர்ச்சி நடந்த நேரத்தில் கூட பாட்டாளி மக்கள் கட்சியின் நிறுவனர் அவர்கள் நிச்சயமாக இந்த ஆட்சியை கலைக்க வேண்டும் என்ற நோக்கம் எங்களுக்கு சிறிதும்

**இடையாது என்று சொல்லியிருக்கிறார்கள். எனவே தேர்ந்தெடுக்கப்பட்ட அரசை வைத்துக்கொள்ளவோ, நீக்கிக் கொள்ளவோ உரிமை அந்த மக்களுக்குத்தான் இருக்க வேண்டுமே தவிர வேறு யாருக்கும் இருக்கக்கூடாது என்கிற நிலையில் நாங்கள் தெளிவாக இருக்கிறோம். அங்ஙனம் இருக்க மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இப்படிச் சொல்லலாமா என்பது ஒன்று.**

அடுத்து நான் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு சகிப்புத் தன்மை இல்லை என்று சொல்லவில்லை. எங்களுக்குக் காட்டுகிற சகிப்புத் தன்மையை மற்றவர்களுக்கும் கொஞ்சம் எக்ஸ்டென்ட் பண்ணுங்கள் என்றுதான் சொன்னேனே தவிர நான் சகிப்புத் தன்மை அறவே இல்லை என்று சொல்லவில்லை. நேற்றைய தினம் நான அப்படித்தான் பேசி இருக்கிறேன். குறிப்பிலே கூட பார்த்துக் கொள்ளலாம். (குறுக்கீடுகள்) மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்குக் கிடைத்த தகவலின் அடிப்படையில் பரமக்குடி சம்பவம் பற்றிக் குறிப்பிட்டார்கள். நான் என்னுடைய தகவலையும் அவருக்குத் தெரிவிப்பது என்னுடைய கடமை என்று கருதுகிறேன். டாக்டர் அம்பேத்கார் அவர்களுடைய சிலையைத் திறந்து வைக்கப் போகிற வழியில் . . . .(குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** தயவுசெய்து அதற்கு உள்ளே போகவேண்டாம். நீங்கள் நேற்று பேசியிருக்கிறீர்கள். பதிலும் சொல்லிவிட்டார்கள். (குறுக்கீடுகள்) தயவுசெய்து அதை அப்படியே ரிப்பீட் பண்ணவேண்டாம். உங்களுக்குக் கிடைத்த தகவலை நீங்கள் நேற்றே சொல்லிவிட்டீர்கள். முதலமைச்சர் தெரிவித்த கருத்தில் உங்களுக்கு ஏதாவது கருத்து மாறுபாடு இருந்தால் அதை மட்டும் சொல்லலாம்.

**திரு. ச. இராமச்சந்திரன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அங்கே 4 மணிக்கு அந்தக் கூட்டம் கூடியது. It is unlawful assembly, illegal obstruction என்றால் அதாவது சட்ட விரோதமான சாலை மறியல் நடத்தினார்கள் என்றால் அப்போதே ஒன்று அவர்களைக் கைது செய்திருக்கலாம்; அல்லது தடியடி நடத்தி அப்புறப்படுத்தி இருக்கலாம். அல்லது வரவிடாமல் அந்தச் சுற்று வழிகளைத் தடுத்து இருக்கலாம். 3 மணி நேரம் அதை அப்படியே அனுமதித்ததன் விளைவாகத்தான் துப்பாக்கிச் சூடு நடத்த வேண்டி வந்தது என்பது எங்களுக்குக் கிடைத்த தகவல். அதனால்தான் நான் மாண்புமிகு முதலமைச்சரிடத்தில் it is a clear case of lapse on the part of the police administration to manage the situation என்று சொன்னேன். அதுமட்டுமல்ல. அங்கே 300, 400 பேர்கள் இருந்தார்கள் என்றே சொல்கிறார்கள். அதற்கு ஒரு துப்பாக்கிப் பிரயோகம் தேவையா என்றுதான் நான் கேட்டேன்.



**மாண்புமிகு செல்வி ஜெ. ஜெயலலிதா :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பரமக்குடி சம்பவத்தைப்பற்றி நேற்றே தனக்கு அளிக்கப்பட்ட வாய்ப்பைப் பயன்படுத்தி மாண்புமிகு உறுப்பினர் திரு. பண்ருட்டி இராமச்சந்திரன் அவர்கள் என்னென்ன கருத்துக்களைத் தெரிவிக்க வேண்டுமோ எல்லாவற்றையும் தெரிவித்து முடித்துவிட்டார்கள். ஒன்றை மட்டும் நான் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். ஒரு கிளர்ச்சி நடக்கிறபோதோ, இத்தகைய ஒரு அஜிட்டேஷன் நடக்கிறபோதோ துப்பாக்கிச் சூடு நடத்த வேண்டும் என்ற எண்ணத்தோடு காவல் துறையினர் அங்கே செல்வதில்லை. (மேசையைத் தட்டும் ஒலி) முடிந்தவரை— அது ஒரு எக்ஸ்ட்ரீம் ஸ்டெப் ஆகத்தான் கருதப்படுகிறது. அதை ஒரு லாஸ்ட் ரெஸார்ட், அதாவது கடைசிக்கட்ட நடவடிக்கையாகத்தான் காவல்துறையினர் மிகுந்த எச்சரிக்கையோடு இத்தகைய நடவடிக்கையில் இறங்குகிறார்கள். மாண்புமிகு பண்ருட்டி இராமச்சந்திரன் அவர்கள் குறிப்பிட்டது போல் அங்கே சாலையில் சாலை மறியல் போராட்டம் நடத்தியவர்களை வேறு விதத்தில் கலைத்து இருக்கமுடியாதா என்று கேட்டிருக்கிறார். முதலில் அவர்களைச் சமாதானப்படுத்தி அந்த இடத்தை விட்டு கிளப்ப வேண்டும் என்றுதான் முயற்சிகள் நடைபெற்றன. பேச்சுவார்த்தையிலேயே இரண்டு மணி நேரம், 3 மணி நேரம் கழிந்து விட்டது. அதன் பின்னர் ஏற்கெனவே நான் குறிப்பிட்டது போல் அவர்களை அந்த இடத்தை விட்டு அப்புறப்படுத்த வேண்டும் என்ற முயற்சியில் காவலர்கள் இறங்கியபோது தடியடிப் பிரயோகம் நடத்தி இருக்கக்கூடாதா என்ற கேள்வியை பண்ருட்டி இராமச்சந்திரன் அவர்கள் கேட்கிறார்கள். அத்தகைய நடவடிக்கையில் அவர்கள் ஈடுபடுவதற்கு முன்னமே கூட்டத்தினர் காவலர்களைப் பார்த்து தாக்குதல் தொடங்கிவிட்டார்கள். அவர்கள் ஏற்கெனவே கம்புகளோடும் வந்திருந்தார்கள்; தடிகளோடும் வந்திருந்தார்கள். கற்கள் சப்ளை ஸ்டாக்கோடும் வந்திருந்தார்கள். எனவேதான் சொல்கிறேன். நேற்று திரு. பண்ருட்டி இராமச்சந்திரன் அவர்கள் பேசியபோது இத்தகைய சம்பவங்களையும் நிகழ்ச்சிகளையும் யாரும் திட்டமிட்டுச் செய்வதில்லை, இவைகள் தாமாக நடைபெறுகின்றன என்று கூறினார். தாமாக நடைபெற்றக் காலம் எல்லாம் வேறு. அந்தக் காலம் மாறிப்போய் விட்டது. இந்தக் காலத்தில் இத்தகைய சம்பவங்கள் எல்லாம் திட்டமிட்டு சில சுயநலம் படைத்த அரசியல் கட்சித் தலைவர்களால் தூண்டப்பட்டு நடைபெறுகின்றன. இந்த பரமக்குடி சம்பவத்தைப் பொறுத்தவரையில் என்னுடைய பதிலுரையில் நான் குறிப்பிட்டபோது, ஒரு வன்முறை சம்பவத்தை ஏற்படுத்த வேண்டும், எப்படியாவது அத்தகைய சூழ்நிலையை உருவாக்க வேண்டும் என்ற எண்ணத்தோடவே அத்தகைய

ஒரு திட்டத்தோடவே, அத்தகைய தெளிவான கட்டளை இடப்பட்டு அங்கே வந்தவர்கள் வந்தார்கள் என்பதை நான் அறுதியிட்டு உறுதியாகக் கூறுகிறேன். எனவே காவல் துறையினர் எவ்வளவு பொறுமையைக் கடைப்பிடிக்க முடியுமோ அத்தனையையும் செய்துபார்த்து வேறு வழியின்றி 'ஆஸ் எ லாஸ்ட் ரிசார்ட்' கடைசி கட்ட நடவடிக்கையாகத்தான் துப்பாக்கிச் சூடு நடத்த நேர்ந்தது என்பதை மீண்டும் தெரிவித்துக் கொள்கிறேன். (குறுக்கீடு).

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** நீங்கள் கேட்டீர்கள். பதில் சொல்லிவிட்டார்கள். தயவுசெய்து உட்காருங்கள். வாதம் வந்துகொண்டே தான் இருக்கும். நீங்கள் கேட்டதற்குப் பதில் சொல்லிவிட்டார்கள். நீங்களும் உங்கள் கருத்தைச் சொல்லிவிட்டீர்கள். (குறுக்கீடு) உங்கள் கருத்து உங்களால் கூறப்பட்டிருக்கிறது. தெளிவாக அதற்குரிய பதிலும் வந்துவிட்டது. (குறுக்கீடு) இல்லை, இல்லை. கடைசி நேரத்திலே வாதம் வேண்டாம். தயவு செய்து உங்களுடைய கருத்தை நீங்கள் தெரிவித்தீர்கள். அதை மறுக்கக்கூடிய வகையில் அரசாங்கத்தின் சார்பில் அவர்களுக்குக் கொடுக்கப்பட்ட விளக்கங்களை வைத்து மறுத்து விட்டார்கள். அடுத்து திரு. பீட்டர் அல்போன்ஸ்.

*'**திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஜஸ்டிஸ் இஸ்மாயில் கமிஷனுடைய அறிக்கையினை இந்த அவையிலே இந்த சட்டமன்றக்கூட்டத் தொடரிலேயே தாக்கல் செய்ய உத்தேசித்து இருக்கிறோம் என்று சொன்னார்கள். அந்த அறிக்கையினை இந்த மாமன்றத்திலே தாக்கல் செய்கிறபோது, 'எ அலாங் வித் தி ஸ்டேட்மெண்ட் ரெக்கார்டட்' இஸ்மாயில் கமிஷன் பதிவு செய்த அந்த ஸ்டேட்மெண்டுகளையும் இந்த அவையிலே வைக்கவேண்டும் என்று முதலமைச்சர் அவர்களை மிக்க பணிவோடு கேட்டுக் கொள்கிறேன். அதைப் படித்துப் பார்ப்பதற்கு எங்களுக்கு நல்ல கால அவகாசம் தந்து ஒரு அறிக்கையினை விவாதிப்பதற்கு, ஒரு நல்ல வாதம் உருவாவதற்கான கால அவகாசத்தை தரவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** அது அவைத் தலைவர் மற்றும் அலுவல் ஆய்வுக் குழுவினுடைய பணி.

**திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ் ;** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு ரெக்குவஸ்ட்-ஆகத்தான் சொல்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** அதைச் சொல்ல வேண்டாம் திரு. எஸ். பீட்டர் அல்ஃபோன்ஸ்.



**திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இல்லை, இல்லை. நான் அதைப்பற்றி இப்போது சொல்லவில்லை. ஆயத் தீர்வையின் மீது பேசிய முதலமைச்சர் அவர்கள், கள்ளச்சாராயம் காய்ச்சுகிறபோது கிராம நிர்வாக அதிகாரிகள் மீதும் அங்கே இருக்கின்ற சப் இன்ஸ்பெக்டர்கள் மீதும் நடவடிக்கை எடுக்கப்படும் என்று சொன்னார்கள். இப்போது ரிசர்வ் பாரஸ்ட், சோசியல் பாரஸ்ட் ஏரியாக்களிலே தான் கள்ளச் சாராயம் நிறைய காய்ச்சப்படுகிறது. எனவே எந்த பாரஸ்ட் வாட்சர், எந்த பாரஸ்ட் கார்ட், எந்த பாரஸ்டினுடைய ஏரியாவிலே அந்த கள்ளச் சாராயம் காய்ச்சப்படுகிறதோ—ஏனென்றால் காவல் துறைக்கும் அதற்கும் சம்பந்தம் இல்லை. எனவே பாரஸ்ட்கள் ரொம்ப தள்ளி இருக்கின்றன.—அவர்கள் மீது நடவடிக்கை எடுக்க வேண்டுமென்பதோடு வனத்துறை அதிகாரிகளையும் சேர்க்கவேண்டும் என்ற கோரிக்கையினை மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு வைக்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள ரெலவெண்ட்டாக சொல்லுங்கள். திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ்.

**திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் ரெலவண்ட்டாகத்தான் பேசுகிறேன். மூன்றாவதாக, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பேசுகிறபோது சாதி, சமூகம், மதம், இனம் ஆக எல்லாவற்றையும் கடந்து தமிழ் மக்களுக்காக, தன்னையே முழுமையாக அர்ப்பணித்துக்கொண்டு பணியாற்றுகின்ற போது, தன்னைப் பார்த்து ஒரு கொச்சையான வார்த்தைகளால் திட்டுகிறார்களே என்று மனம் வெதும்பி ஒரு வார்த்தையைச் சொன்னார்கள். அவர்கள் அந்த வார்த்தையைச் சொன்னாலுங்கூட, அவர்கள் தகுதிக்கு அந்த வார்த்தை இந்த அவைக் குறிப்பிலே இருக்கக்கூடாது என்று நாங்கள் கருதுகின்றோம். அப்படி இருப்பது இன்னும் ஆயிரம் ஆண்டுக் காலமாக அந்த ஆவணங்கள் இந்த சட்டமன்றத்திலே இருக்கும். இன்னும் ஆயிரம் ஆண்டுகாலங்களுக்கு இந்த தமிழ் சமுதாயம் அந்த வார்த்தையைப் படித்தால் உண்மையிலேயே இவ்வளவு பெரிய இனத் துவேஷத்திற்கு ஆளான ஒரு சமூகத்திலேயா நாம் பிறந்திருக்கிறோம் என்று வருத்தப்படுவார்கள், அவமானப்படுவார்கள். எனவே அவர்கள் அந்த வார்த்தையினை ஆதங்கத்தோடு சொன்னாலும்கூட அவர்கள் வகித்துக் கொண்டிருக்கின்ற பொறுப்பினையும் அவர்கள் மேல் தமிழ்மக்கள் வைத்துக் கொண்டு இருக்கின்ற நல்ல மரியாதையையும் கருத்திலே கொண்டு அவைத்தலைவர் அவர்களே, நீங்கள் அந்த வார்த்தைகளை தயவுசெய்து இந்த அவைக் குறிப்பிலேயிருந்து நீக்கவேண்டும் என்பதை இந்த மாமன்றத்திலே இருக்கின்ற அத்தனை உறுப்பினர்கள் சார்பாகவும் நான் கேட்டுக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** மாண்புமிகு முதலமைச்சர்.

**மாண்புமிகு செல்வி ஜெ. ஜெயலலிதா :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எதிர்காலத்தில், வருங்காலங்களில் எதிரிகளை புரிந்து கொள்வதற்காகவும், எப்படிப்பட்ட ஜாதி துவேஷம் தமிழகத்தில் கிளப்பப்பட்ட முயற்சிகள் மேற்கொள்ளப் பட்டும் அவற்றை எல்லாம் மீறி ஒரு பெண் எப்படி மக்களின் துணையோடு வெற்றிப் பெற்றார் என்பதும் வருங்காலச் சந்ததியினருக்குப் புரிய வேண்டுமானால் அந்த வார்த்தை அவசியம் அவைக் குறிப்பேட்டில் இருக்கவேண்டும் என்று மீண்டும் உங்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிவித்ததைப்போல மாண்புமிகு முதலமைச்சர் பேசுகிறபோதே நானும் யோசித்தேன். ஆனால் அவர்கள் பேசுகிற போது மனம் வருந்தி, இதேபோல புரட்சித் தலைவர் அவர்களையும் மலையாளி, மலையாளி என்று சொன்னதற்குப் பின்னர்தான் தமிழகத்தில் நாட்டு மக்கள் அவரைத் தங்களுடைய இனத்தவராக ஏற்றுக்கொண்டார்கள் என்கின்ற கருத்தை சேர்த்துச் சொல்லியே சொல்லி இருக்கிறார்கள். எனவே அவைக் குறிப்பிலே இருந்தால் அவர்கள் கேட்டுக் கொண்டதைப் போல் எதிர்காலத்தில் இப்படிப்பட்ட சூழ்நிலை எல்லாம் ஒரு காலத்திலே தமிழ்நாட்டில் சிலரால் உருவாக்கப்பட்டது என்பதுகூட தெரிய வாய்ப்பிருக்கும். திரு. பீட்டர் அல்போன்ஸ்.

முற்பகல் 11-20.

**திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ் :** பாரஸ்ட் டிப்பார்ட்மென்ட் பற்றி குறிப்பிட்டேன். அதுபற்றி மாண்புமிகு முதல்வர் பதில் சொல்லவில்லை . . . .

**மாண்புமிகு செல்வி ஜெ. ஜெயலலிதா :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வனப் பகுதிகளில் கள்ளச் சாராயம் காய்ச்சப்படுவது குறித்த தகவலை மாண்புமிகு உறுப்பினர் திரு. பீட்டர் அல்போன்ஸ் தெரிவித்திருக்கிறார். இது ஆராயப்படும். எந்தப் பகுதியில் கள்ளச் சாராயம் காய்ச்சப்பட்டாலோ, விற்கப் பட்டாலோ அந்தப் பகுதிக்கு ஏற்ப, அதிகாரிகள் பொறுப்பு ஒப்படைக்கப்படுவார்கள் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** திரு. ஆர். சிங்காரம்.

**திரு. ஆர். சிங்காரம் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தி.மு.க. ஆட்சிக் காலத்தில் என்னுடைய பேராவூரணி தொகுதியில் புதிய தீயணைப்பு என்ஜின் இருந்தது. (மகிழ்ச்சியடிக்கப்பெற்றது). மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,



இந்த அரசின் சாதனையைத் தானே சொல்கிறேன். நான் சட்ட மன்ற உறுப்பினராக வந்தவுடன் அந்த என்ஜின் வேறு ஊருக்கு மாற்றப்பட்டு ' லொக்கடா ' வண்டியை (சிரிப்பு) அங்கே கொண்டு வந்து போட்டார்கள். புரட்சித் தலைவியின் ஆட்சிக் காலத்தில். கடந்த ஒரு மாத காலத்திற்கு முன்னதாக அந்த புதிய வண்டி பேராவூரணிக்கு வந்துவிட்டது என்கிற சாதனையைத் தெரிவித்து அதற்காக புரட்சித் தலைவிக்கு என்னுடைய பாராட்டைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** திரு. வி. தண்டாயுதபாணி.

**திரு. வி. தண்டாயுதபாணி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இங்கே காவல் துறை மானியத்திலே மாண்புமிகு உறுப்பினர்கள் தெரிவித்த கருத்துக்களுக்கு மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்கள் பதில் உரைத்திருக்கிறார்கள். நான் இப்போது குறிப்பிடப்போவது முதலமைச்சர் சம்பந்தப்பட்ட ஒரு பிரச்சினையாக இருக்கிற காரணத்தால் சொல்கிறேன். புரட்சித் தலைவி அவர்கள் பாண்டிச்சேரியிலிருந்து திரும்பி வரும்போது லாரி ஏற்றி கொல்ல முயற்சி செய்த வழக்கைப் பொறுத்தவரையில் அந்த லாரியில் உதய சூரியன் சின்னம் பொருத்தப்பட்டிருந்தது. அந்த டிரைவரை 10 நாட்களுக்குள்ளாக விசாரித்து வெறும் ஆயிரம் ரூபாய் மட்டும் அபராதம் விதித்து விடுதலை செய்ததும் எவ்வளவு கேலிக்குரியதாக, கண்டனத்துக்குரியதாக, ஏமாற்றத்துக்குரியதாக இருந்தது என்பதை நீங்கள் எல்லோரும் அறிவீர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) இதை எதற்காக நான் சொல்கிறேன் என்றால், விடுதலைப் புலிகளுடைய தொடர்பு பற்றி கர்நாடக மாநிலத்துடைய லாரி அசோசியேஷன்களை எல்லாம் துருவி, துருவி, அந்த லாரிகளைப்பற்றி, எப்படிப்பட்ட சம்பந்தம் அவர்களுக்கு இருக்கிறது என்பது பற்றி எல்லாம் நாடு முழுக்க சொல்கிறபோது இங்கேயும் இந்த லாரி அசோசியேஷன்களை வைத்துக் கொண்டு இப்படி ஒரு படுகொலை முயற்சி செய்தவர்களையும் கண்டுபிடிக்க, மறுபடியும் அந்த விசாரணையைத் தொடங்கி, புரட்சித் தலைவி அவர்களை கொலை முயற்சி நோக்கோடு லாரி ஏற்றி கொலை செய்ய முயற்சி செய்த நபர்களை இந்த அரசு கண்டுபிடிக்க ஆவன செய்யுமா என்று அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு செல்வி ஜெ. ஜெயலலிதா :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்படிப்பட்ட ஒரு முயற்சி முன்பு நடைபெற்றாலும், எப்படியோ உயிர் பிழைத்து இப்போது நன்றாக இருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) எனவே, இப்படிப்பட்ட ஒரு விசாரணை தேவையா என்பது குறித்து இன்னும் அரசு முடிவு செய்யவில்லை. ஆனால் மாண்புமிகு

உறுப்பினர் திரு. தண்டாயுதபாணி அவர்கள் குறிப்பிட்டதுபோல இத்தகைய ஒரு விசாரணையை துவக்க வேண்டுமானால் சாட்சிகள் தேவை. இந்தச் சம்பவம் நடைபெற்றபோதே சாட்சிகள் எல்லோரும் அச்சுறுத்தப்பட்டனர், மிரட்டப்பட்டனர். மீண்டும் அவர்களை எல்லாம் கண்டுபிடிக்க வேண்டும், சாட்சி சொல்ல வைக்க வேண்டும். தவிர இந்தக் கொலை முயற்சியில் சம்பந்தப்பட்டவர்கள், பயன்படுத்தப்பட்டவர்கள் காவல் துறையில் இன்றும் இருக்கிறார்கள். அவர்கள் இன்றும் தமிழக காவல் துறையில் பணிபுரிகிறார்கள். ஆனால் அவர்களை நாம் தவறாக எடுத்துக் கொள்ளக்கூடாது. அன்று இருந்த அரசின் கட்டளைக்குக் கட்டுப்பட்டு, அவர்கள் சொல்லியதற்கு கட்டுப்பட்டு இத்தகைய நடவடிக்கைகளில் ஈடுபட வேண்டியதாயிற்று. இன்று இத்தகைய ஒரு விசாரணையை நாம் தொடங்கினால் அதிலிருந்து வெளிவரும் உண்மைகளை வைத்து, இன்று தமிழக காவல் துறையில் சிறப்புறப் பணிபுரியும் சில காவல் துறையினர் மீது நடவடிக்கை எடுக்க வேண்டி வரலாம். அப்படிப்பட்ட ஒரு அவசியம் இந்த அரசுக்கு ஏற்படக் கூடாது என்று நான் விரும்புகிறேன். எனவே, இந்த விவகாரத்தை இத்தோடு விட்டுவிடுவதே நல்லது என்றே நான் கருதுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. மா. சுந்தரதாஸ்.

திரு. மா. சுந்தரதாஸ் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முன்னாள் முதலமைச்சர் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். ஆட்சிக் காலத்தில் எடுக்கப்பட்ட காவலர்கள் 2 ஆயிரம் பேர் என்று நினைக்கிறேன். அவர்களை பணியில் நியமிப்பது குறித்து மறுபடி ஆட்சிக்கு வந்த தி.மு.க. அரசிடம் பல முறை நேரடியாக நான் சொன்னேன். அவர்களுக்கு டிரெயினிங் கொடுத்து அவர்களை பணியில் நியமிக்க வேண்டுமென்று சொன்னேன். அரசியல் காழ்ப்புணர்ச்சி காரணமாக அவர்கள் இன்னும் தேர்ந்தெடுக்கப்படவில்லை. 2 ஆயிரம் பேரையும் தேர்வு செய்ய வேண்டுமென்று அவர்கள் பல்வேறு மனுக்களைக் கொடுத்திருக்கிறார்கள். திரும்பவும் அவர்களுக்கு பயிற்சி கொடுத்து வேலை கொடுப்பதற்கான எண்ணம் இந்த அரசுக்கு உண்டா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு செல்வி ஜெ. ஜெயலலிதா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்பொழுது மீண்டும் இந்தப் பணிகளில் ' கான்ஸ்டபிள், எஸ்.ஐ.-'க்களை பணியில் அமர்த்துவதற்கு தேர்வு செய்வதற்கு ஒரு புதிய குழு அமைக்கப்படுமென்று இப்பொழுது தான் அறிவித்தேன். இந்தக் குழு தன்னுடைய பணியைத் துவக்கும்போது நீங்கள் இங்கே குறிப்பிட்டவர்களே அவர்கள் இப்பொழுது பணிக்குத் தகுதியுள்ளவர்களாக இருப்பார்களேயானால், நிச்சயமாக அவர்கள் பணியில் அமர்த்தப்படுவார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.



மாண்புமிகு பேரவைத் தலைவர் : விவாதம் முடிவுற்றது. இப்போது வாக்கெடுப்பு. மானியக் கோரிக்கை எண். 2— மாநில ஆயத் தீர்வைத் துறை. வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்படுகின்றனவா என்று அறிய விரும்புகிறேன். திரு. இரா. நடேசன்.

திரு. இரா. நடேசன் : இல்லை

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. இரா. நடேசன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெற்றுக்கொள்ளப் பெற்றது. டாக்டர் தே. குமாரதாஸ் தன்னுடைய வெட்டுத் தீர்மானத்தை வலியுறுத்த விரும்புகிறாரா என அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 11-25

டாக்டர் தே. குமாரதாஸ் : இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : டாக்டர் குமாரதாஸ் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெற்றுக்கொள்ளப் பெற்றது.

மாநில ஆயத் தீர்வைத் துறை பற்றிய 2 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ரூபாய் 6,95,68,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டுமென்னும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் ' ஆம் ' என்க. (ஆம்)

மறுப்போர் ' இல்லை ' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகமென்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

(மேசையைத் தட்டும் ஒலி)

அரசுக்குக் கோரிய தொகை வழங்கப்பெற்றது.

மானியக் கோரிக்கை எண். 5—காவல் துறை. வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்படுகின்றனவா என்று அறிய விரும்புகிறேன். திரு. சி. ஞானசேகரன்.

திரு. சி. ஞானசேகரன் : இல்லை.

[1991 செப்டம்பர் 24

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** திரு. சி. ஞானசேகரன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெற்றுக்கொள்ளப் பெற்றது. திரு. வே. தம்புசாமி. இருக்கையில் இல்லை. வெட்டுத் தீர்மானம் திரும்பப் பெறப்பட்டதாகக் கருதப்படுகிறது. டாக்டர் தே. குமாரதாஸ் தன்னுடைய வெட்டுத் தீர்மானத்தை வலியுறுத்த விரும்புகிறாரா என அறிய விரும்புகிறேன்.

**டாக்டர் தே. குமாரதாஸ் :** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** டாக்டர் தே. குமாரதாஸ் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெற்றுக் கொள்ளப்பெற்றது. திரு. ஜி. பழனிசாமி தன்னுடைய வெட்டுத் தீர்மானத்தை வலியுறுத்த விரும்புகிறாரா என அறிய விரும்புகிறேன்.

**திரு. ஜி. பழனிசாமி :** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** திரு. ஜி. பழனிசாமி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெற்றுக்கொள்ளப் பெற்றது.

காவல் துறை பற்றிய 15 ஆம் எண் மானியக் கோரிக்கையின் கீழ் ரூ. 241,52,14,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டுமென்னும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகமென்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

(மேசையைத் தட்டும் ஒலி)

**அரசுக்குக்** கோரிய தொகை வழங்கப்பெற்றது.

மானியக் கோரிக்கை எண். 16— தீயணைப்புப் பணிகள். வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்படுகின்றனவா என்று அறிய விரும்புகிறேன். திரு. மெ. ஆண்டி அம்பலம்.

**திரு. மெ. ஆண்டி அம்பலம் :** இல்லை.



1991 செப்டம்பர் 24]

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** திரு. மெ. ஆண்டி அம்பலம் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெற்றுக்கொள்ளப் பெற்றது. திரு. வே. தம்புசாமி. இருக்கையில் இல்லை. வெட்டுத் தீர்மானம் திரும்பப் பெறப்பட்டதாகக் கருதப்படுகிறது. டாக்டர் தே. குமாரதாஸ் தன்னுடைய வெட்டுத் தீர்மானத்தை வலியுறுத்த விரும்புகிறாரா என்று அறிய விரும்புகிறேன்.

**டாக்டர் தே. குமாரதாஸ்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** டாக்டர் தே. குமாரதாஸ் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெற்றுக் கொள்ளப் பெற்றது. திரு. ஜி. பழனிசாமி தன்னுடைய வெட்டுத் தீர்மானத்தை வலியுறுத்த விரும்புகிறாரா என்று அறிய விரும்புகிறேன்.

**திரு. ஜி. பழனிசாமி :** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** திரு. ஜி. பழனிசாமி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெற்றுக் கொள்ளப் பெற்றது.

தீயணைப்புப் பணிகள் பற்றிய 16 ஆம் எண் மானியக் கோரிக்கையின் கீழ் ரூ. 19,29,78,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டுமென்னும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

(மேசையைத் தட்டும் ஒலி)

அரசுக்குக் கோரிய தொகை வழங்கப்பெற்றது.

**(ஈ) கோரிக்கை எண். 20—வேளாண்மை.**

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** அடுத்து, மானியக் கோரிக்கை எண். 20— வேளாண்மை. மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கு. ப. கிருஷ்ணன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"வேளாண்மை பற்றிய 20 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ரூ. 607,51,97,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்" எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வெட்டுத் தீர்மானங்கள். வெட்டுத் தீர்மானம் எண். 803— திரு. எச்.எம். ராஜு.

திரு. எச். எம். ராஜு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நீலகிரி மாவட்டத்து விவசாயிகளுக்கு பருவ மழை பெய்து கொண்டிருக்கும்போது மானியத்துடன் கொடுக்கும் தேயிலை நாற்றுக்களை விநியோகிப்பது குறித்து விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்.

"வேளாண்மை பற்றிய 20 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 607,51,97,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்".

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வெட்டுத் தீர்மானம் எண். 769—டாக்டர் தே. குமாரதாஸ்.

டாக்டர் தே. குமாரதாஸ் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கொள்கை பற்றி விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்.

"வேளாண்மை பற்றிய 20 ஆம் எண் மானியக்கோ கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 607,51,97,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்."

(உ) கோரிக்கை எண். 53—வேளாண்மை குறித்த மூலதனச் செலவு.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மானியக் கோரிக்கை எண். 53—வேளாண்மை குறித்த மூலதனச் செலவு. மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கு. ப. கிருஷ்ணன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"வேளாண்மை குறித்த மூலதனச் செலவு பற்றிய 53 ஆம்எண் மானியக் கோரிக்கையின்கீழ் ரூ. 13,06,67,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்" எனக் கோருகிறேன்.



மாண்புமிகு பேரவைத் தலைவர் : வெட்டுத் தீர்மானங்கள். வெட்டுத் தீர்மானம் எண். 821, திரு. பி. வி. இராஜேந்திரன்.

திரு. பி. வி. இராஜேந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வேளாண்மை இடுபொருள்கள் வழங்குதலில் இருக்கும் தொய்வு நிலையினைப் போக்குவது குறித்து விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன் :

"வேளாண்மை குறித்த மூலதனச் செலவு பற்றிய 53 ஆம் எண் மானியக் கோரிக்கையின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 13,06,67,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்".

முற்பகல் 11-30

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வெட்டுத் தீர்மானம் எண். 815. திரு. ஜி. பழனிசாமி.

திரு. ஜி. பழனிசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கொள்கை பற்றி விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன் :

"வேளாண்மை குறித்த மூலதனச் செலவு பற்றிய 53 ஆம் எண் மானியக் கோரிக்கையின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 13,06,67,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வெட்டுத் தீர்மானம் எண். 813. டாக்டர் தே. குமாரதாஸ்.

டாக்டர் தே. குமாரதாஸ் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கொள்கை பற்றி விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன் :

"வேளாண்மை குறித்த மூலதனச் செலவு பற்றிய 53 ஆம் எண் மானியக் கோரிக்கையின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 13,06,67,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மானியக் கோரிக்கைகளும், வெட்டுத் தீர்மானங்களும் பேரவையின் முன் விவாதத்திற்கு வைக்கப்பட்டு இருக்கின்றன. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தன் முன்னுரையாக ஏதாவது கூற விரும்பினால் கூறலாம்.

***மாண்புமிகு திரு. கு. ப. கிருஷ்ணன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வேளாண்மை மற்றும் வேளாண்மை குறித்த மூலதனச் செலவு பற்றிய கொள்கை விளக்கக் குறிப்புகள் ஆங்கிலத்திலும் தமிழிலும் இப்பேரவை முன் வைக்கப்பட்டு இருக்கின்றன. மாண்புமிகு உறுப்பினர்கள் அவற்றையெல்லாம் படித்திருப்பார்கள். தமிழில் உள்ள குறிப்புகளை நான் இந்த அவையில் படித்ததாக ஏற்றுக்கொள்ளவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். மாண்புமிகு உறுப்பினர்கள் எடுத்துச் சொல்கிற ஆலோசனைகள், கருத்துக்களின் அடிப்படையில் என்னுடைய பதிலுரையை இறுதியாக இந்த அவைக்கு அளிக்கிறேன் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** திரு. வி. தண்டாயுதபாணி.

**திரு. வி. தண்டாயுதபாணி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ''என்ன வளம் இல்லை இந்தத் திருநாட்டில், ஏன் கையை ஏந்தவேண்டும் வெளிநாட்டில்'' என்று சொல்கிற அளவுக்கு இந்த விவசாய மானியக் கோரிக்கையிலே பேசுகிற ஒரு அரிய வாய்ப்பைக் கொடுத்தமைக்கு என்னுடைய நன்றியை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

விளையும் பயிர் முளையிலே தெரியும் என்பார்கள். இவ்வளவு நாள் எல்லோரும் மிருகங்களைத்தான் உதாரணமாகக் கூறுவார்கள். இது விவசாயத்துறை மானியக் கோரிக்கையாக இருப்பதால் பயிரையே உதாரணமாகக் கூறுகிறேன். விளையும் பயிர் முளையில் தெரியும் என்பதைப் போல இந்த ஆட்சியின் திட்டங்கள், இந்த ஆட்சி மக்களுக்குச் செய்திருக்கிற திட்டங்கள், பொதுத் தொண்டு எல்லாம் முளைக்கிறபோதே தெரிகிறது. தமிழக மக்களுக்காகவே புரட்சித் தலைவி அவர்கள் தலைமையிலே இந்த ஆட்சி அமைந்து இருக்கிறது. அதிலும் குறிப்பாக விவசாயப் பெருங்குடி மக்களுக்காக அவர்களுக்கு நல்வாழ்வு தரம் உயரும் என்பதற்காகவும் இதை நான் சொல்ல ஆசைப் படுகிறேன். விவசாய மானியக் கோரிக்கையிலே பேசுவதற்கு முன்பாக, எல்லா மானியக் கோரிக்கைகளிலும், நான் இந்த அரசாங்கத்தையும் இந்த அமைச்சரவையையும் இந்த மாமன்றத்திலே புரட்சித் தலைவி அவர்கள் தீட்டுகின்ற திட்டங்களைப் பற்றியெல்லாம் பாராட்டி, பல்வேறு

---

*247.. ஆம் பக்கத்தில் இணைப்பு I ஆக அச்சிடப் பெற்றுள்ளது.



விதமான மானியக் கோரிக்கைகள் இங்கே நிறைவேற்றப் பட்டன. விவசாய மானியக் கோரிக்கையிலே விவசாயப் பெருங்குடி மக்களுக்கு நன்மை பயக்கும் பொருட்டு, விவசாயிகள் எந்த அளவுக்கு நலன்கள் பெறவேண்டுமென்பதை இங்கே எடுத்துச் சொல்கிற முகத்தான் விவசாயத்திற்குத் தேவையான நீர்ப் பாசனம், விதை, உரம், பூச்சிக்கொல்லி மருந்து ஆகிய பல்வேறு விதமான திட்டங்களை உள்ளடக்கி இந்த விவசாய மானியக் கோரிக்கை இங்கே வைக்கப் பட்டிருக்கின்றது. விவசாயிகளுடைய கஷ்ட நஷ்டங்கள், ''சுழன்றும் ஏர்ப்பின்னது உலகம்'' என்றும், உழுகின்றவன் கணக்குப் பார்ததால் உழக்கு கூட மிஞ்சாது'' என்று,, விவசாயத்தில் பழமொழிகள் உண்டு. அதேபோன்று உழுகின்றவனுக்கு எந்த அளவுக்கு துன்பங்கள், தொல்லைகள் உள்ளன என்பதை எல்லாம் இங்கே குறிப்பிட ஆசைப், படுகிறேன். மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்களுடைய தலைமையிலே, தொழிலாளர் நலன், தொழில்கள், கிராமத் தொழில்கள், கிராமப்புறங்கள், நகர்ப்புறங்கள் இப்படி பல்வேறு தரப்பட்ட துறைகளினுடைய தீர்மானங்கள் எல்லாம் நிறைவேற்றப்பட்டு, இப்போது விவசாயத்திற்கு என்று வருகிறபோது 100-க்கு 21 சதவீதம் தமிழகத்திலே உற்பத்தித் திறன் கொண்டது விவசாயத்துறையாகும், என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். இந்த 21 சதவீதத்திலே எந்த அளவிற்கு நாம் இந்த விவசாயிகளை, ஊக்குவிக்கிறோம் என்பதைப் பார்க்கவேண்டும்.

முற்பகல் 11.35

பண்டித ஜவஹர்லால் நேரு அவர்கள் ஐந்தாண்டுத் திட்டங்களைப் போட்டு விவசாயத்திற்கு என்று பணம் ஒதுக்கி, பல்வேறு நன்மைகளைச் செய்தபோதும், இங்கே புரட்சித் தலைவி அவர்களுடைய ஆட்சிக் காலத்திலே, எல்லோரும் இங்கே சொன்னார்கள். இந்திராகாந்தி என்றும், ஜான்சி ராணி என்றும் இன்னும் பல்வேறு விதமாகச் சொன்னார்கள். ஆனால் நான் இங்கே குறிப்பிட ஆசைப்படுவது எங்களுடைய அருமைத் தலைவர் காமராஜ் அவர்கள் எப்படி ஏழையெளிய மக்களுக்காக, விவசாயிகளுக்காக பாடுபட்டாரோ, அதைப் போலவே புரட்சித் தலைவி அவர்களும் பாடுபடுகிறார்கள். அவர் ஏழையெளியவர்களுக்காக பாடுபடும் கரும வீரராக இருந்தார் என்றால் இன்றைக்கு கரும யோகியாக இருந்து புரட்சித் தலைவி அவர்கள் தமிழகத்திற்குத் தொண்டாற்றிக் கொண்டிருக்கிறபோது விவசாயப் பெருங்குடி மக்களுக்கு நலன் ஏற்படும் என்பனை

பணிவன்போடு தெரிவித்துக்கொள்கிறேன். கடந்த நான்காம் தேதி அன்று நம்முடைய நிதியமைச்சர் அவர்கள், விவசாயத்தை 'பிரையாரிட்டி செக்டர்' என்று அறிவித்து அதற்குப் பல்வேறுவிதமான நிதியை அளித்துள்ளார்கள். இந்த விவசாயப் பெருங்குடி மக்களுடைய பிரச்சினை தீர்வதற்கு, காவிரி நீர்ப் பிரச்சினையைப் பற்றி நான் இங்கே குறிப்பிட்டாக வேண்டும். காவிரி நீர்ப் பிரச்சினையில் நம்முடைய தமிழக அரசு, புரட்சித் தலைவி அவர்கள் எடுத்த முடிவு விவசாயிகளுக்கு நலன் பயக்கின்ற முடிவு, அரசியல் உறுதியோடு எடுத்த முடிவு. அந்த முடிவு தமிழகத்து மக்களால் சிறப்பான முறையில் வரவேற்கப் பட்டுள்ளது. தமிழகத்து மக்கள் உணர்கிற வகையிலே ஒட்டுமொத்தமாக எல்லோருமாகச் சேர்ந்து நதி நீர்ப் பிரச்சினையைத் தீர்க்க வேண்டும் என்ற நோக்கத்தோடு அவர்கள் இன்றைய தினம் துணிச்சலோடு செயல்படுகிறார். இந்த நிலைக்கு ஏற்ப எங்களுடைய தலைவரும், தமிழக காங்கிரஸ் கட்சியின் தலைவருமான வாழப்பாடி இராமமூர்த்தி, மந்திரி பதவியை வேண்டாம் என்று தூக்கி எறிந்து மத்திய அரசாங்கத்தைத் தட்டிக் கேட்கின்ற முறையில் செய்து விட்டு வந்திருக்கிறார்கள். மாற்றான் தோட்டத்து மல்லிகையும் மணக்கும் என்று அண்ணாவின் வழியில் வந்த புரட்சித் தலைவி மாற்றான் தோட்டத்து மல்லிகையாக வாழப்பாடி இராமமூர்த்தி இருந்தாலும், அவரும் ஏழரை கோடி மக்களுடைய கதாநாயகன் தன்னுடைய பதவியை ராஜினாமா செய்துவிட்டு வந்தார் என்று தெளிவாகச் சொல்லியதிலிருந்து எந்த அளவிற்கு, மற்றவர்களையும் பாராட்ட வேண்டும் என்ற எண்ணம் நம்முடைய அருமைத் தலைவி அவர்களிடத்திலே இருக்கிறது என்பதை நாங்கள் இன்றைக்கு எண்ணிப் பார்க்கிறோம்.

நீங்கள் இங்கே கொடுத்திருக்கிற 'பெர்ஃபாமன்ஸ் பட்ஜெட்'' கொள்கை விளக்க அறிக்கை ஆகியவற்றையெல்லாம் துருவித் துருவி பார்த்தேன். விவசாயிகளுக்கு நீங்கள் ஒதுக்கி இருக்கின்ற தொகையை இன்னும் கொஞ்சம் உயர்த்திக் கொடுக்க வேண்டும் என்று நிதியமைச்சர் அவர்களை மெத்தப் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன். 1983 ஆம் ஆண்டு விவசாயிகளுக்கு மட்டும் அல்லாமல் விவசாயத் தொழிலாளர்களுக்காகவும் மத்திய அரசு விவசாயத் தொழிலாளர் நலச் சட்டத்தைக் கொண்டு வந்தது. அந்த நலச் சட்டத்தின் மூலம் ஒரு வ்விவசாயித் தொழிலாளிக்கு ஒரு வருஷத்திலே 100 நாட்களுக்காவது வேலை கிடைக்கும் என்று சொன்னார்கள். ஆனால் அந்த விவசாயத் தொழிலாளர்கள் நலர்சட்டத்தை மத்திய அரசாங்கம் அமுல்படுத்திக் கொண்டிருக்கிறபோது, 1989 ஆம் ஆண்டு அதை ஜவகர் வேலை வாய்ப்புத் திட்டத்தோடு



இணைத்துவிட்டார்கள். ஆடிட்டர்-ஜெனரலின் அறிக்கையின்படி 1988-89 ஆம் ஆண்டிலே ரூ. 762 கோடி அதற்கு ஒதுக்கப்பட்டது. அந்த ரூ. 762 கோடியின் மூலம் ஒரு விவசாயத் தொழிலாளிக்கு ஒரு வருஷத்திற்கு 22 நாளைக்குத்தான் வேலை கிடைக்கிறது. அந்த ரூ. 762 கோடி என்பது நிலம் இல்லாத விவசாயத் தொழிலாளிகளின் வேலை வாய்ப்புக்குப் போதாது என்பதால் அதை இன்னும் அதிகமாக உயர்த்திக் கொடுக்க வேண்டும் என்று இந்த மாமன்றத்தின் மூலமாக மைய அரசை நான் வற்புறுத்த ஆசைப்படுகிறேன்.

முற்பகல் 11.40

இன்றைக்குள்ள சூழ்நிலையில் விவசாயிகளுடைய கடன் நிவாரராணச் சட்டத்தைப் பற்றி அத்தனை பேரும் அறிவோம். வீவசாயிகளுடைய கடன் நிவாரணச் சட்டத்தை இன்னும் கொஞ்சம் மாற்றியமைக்க வேண்டும். அதிலே சீர்திருத்தம் செய்ய வேண்டும் என்று மெத்தப் பணிவோடு தெரிவித்துக் கொள்கிறேன். காரணம், ஒரு விவசாயினுடைய கடனைத் தள்ளுபடி செய்கிறபோது கருணாநிதி அவர்கள் என்ன செய்தார்கள் என்றால் ரூ. 10,000 வரையில் உள்ள கடன்களைத் தள்ளுபடி செய்துவிட்டோம் என்று சொன்னார்கள். ஆனால் 10 ஆயிரம் ரூபாய்க்கு முதலும், வட்டியிலே யாராவது கொஞ்சம் செலுத்தி இருந்தால் கூட அந்தக் கடனை அவர்கள் தள்ளுபடி செய்யவில்லை. இது என்ன 'தியரி' என்றே நம்மால் புரிந்துகொள்ள முடியவில்லை. ஒருவன் ஆயிரம் ரூபாய் அல்லது 500 ரூபாய் என்று சட்டி இருந்தால், தான் திருப்பிச் செலுத்த வேண்டும் என்கிற மனப்பான்மை உள்ள சிறிய விவசாயிகளுடைய கடன் தள்ளுபடி செய்யப்படாமல் அப்படியே நின்று போய் இருக்கின்றது. இதை நம்முடைய புரட்சித் தலைவி அவர்கள் கவனித்து, இந்தத் தவறுகள் எங்கே உள்ளன என்று பார்த்து, அந்த ஓட்டைகளை அடைத்து அங்கே உள்ள தவறுகளைக் களைய வேண்டுமென்று அன்போடு நான் கேட்டுக்கொள்கிறேன்.

இதோடு விவசாயிகள் இன்றையதினம் எங்களுடைய தாலுகாவிலே, குடியாத்தம் தாலுகாவிலே தக்காவிக் கடன் வாங்கி இருக்கிறார்கள். தக்காவிக் கடன் வருவாய்த் துறை அமைச்சருக்கு வந்தாலும், ஒரு 15 ஆண்டுக் காலமாக இருக்கிறது. புரட்சித் தலைவர் அவர்களுடைய ஆட்சிக் காலத்திலே வெறும் 2,500 ரூபாய் கொடுத்தார்கள். கிணறு ஆழப்படுத்துவதற்கும், வேலை இல்லாமல் இருக்கின்ற, தண்ணீர் இல்லாத காரணத்தினாலே கிணற்றை ஆழப்ப

படுத்துவதற்கு என்றே தக்காவிக் கடன் கொடுத்தார்கள். அந்தக் கடனை 10 ஆண்டுக் காலாக 500 ரூபாய், 50 ரூபாய் என்று கட்டி வந்தார்கள். அந்தக் கடன் தொகை மொத்தம் ரூ. 2,500 தான். இந்த ரூ. 2,500-க்கு மேலே, இதுவரையிலும் அவர்கள் ரூ. 3,000 அல்லது 4,000 என்று வட்டியே கட்டி இருப்பார்கள். குடியாத்தம் தாலுக்காவை பொறுத்தமட்டிலும் என்ன செய்தார்கள் என்று சொன்னால், போன வருடம் 350 ரூபாய் வசூல் செய்தார்கள். வருஷா வருஷம் ரூபாய் 10 இலட்சம் வசூல் செய்ய வேண்டும். ஆனால் போன வருடம் விவசாயிகளிடம் வெறும் ரூ. 350 மட்டும் வசூல் செய்தார்கள். இந்த வருஷம் என்ன காரணத்தாலோ யாருக்கு கெட்ட பெயர் ஏற்பட வேண்டும் என்ற நோக்கத்தோடோ எல்லா விவசாயிகளிடத்திலேயும் போய் 500 ரூபாய், 1,000 ரூபாய் கட்டிய விவசாயிகள் வீடுகளிலே எல்லாம் புகுந்து ஜப்தி செய்தார்கள். ஒரு பசுமாடும் கன்றும் இருந்தால், கன்றை விட்டுவிட்டு பசு மாட்டை ஓட்டிக்கொண்டு வந்துவிட்டார்கள். அந்த பசு மாடும் 'பவுண்ட்'-லே இன்றைய தினம் இருக்கின்றது. நாங்கள் தாசில்தாரிடத்திலே கேட்டோம். தக்க பதில் வரவில்லை. போன வருஷம் ஏன் 350 ரூபாய் வசூல் செய்தீர்கள்? இந்த வருஷம் மட்டும் ஏன் அவ்வளவு அவசியம் ஏற்பட்டுவிட்டது? கொஞ்சம் பொறுத்து அவர் களுக்கு நோட்டீஸ் கொடுத்து எல்லாம் செய்து இருக்க லாமே? திடீரென்று ஏன் இப்படிச் செய்கிறீர்கள் என்று அவர்களிடம் கேட்டதற்கு அவர்கள் அதற்குப் பதிலே சொல்லவில்லை. இப்படி விவசாயப் பெருங்குடி மக்க ளுடைய பிரச்சினை இருந்துகொண்டே இருக்கின்றது. இந்த அரசு இந்த தக்காவிக் கடனை— வெறுமனே ஆயிரம் ரூபாய், 500 ரூபாய் என்று ஒவ்வொரு வீவசாயிகளும் கட்ட வேண்டி இருக்கிறது; மொத்தமே 10 இலட்சம் ரூபாய்க்குள் ளாகத்தான் இருக்கின்றது— இந்த விவசாயிகள் வாங்கி இருக்கின்ற அந்தத் தக்காவிக் கடனை நீங்கள் தள்ளுபடி செய்து கொடுக்க வேண்டுமென்று நான் அன்போடு கேட்டுக் கொள்கிறேன்.

அதற்கு அடுத்தபடியாக இந்த கடன் பிரச்சினையிலே, விவசாயிகள் பெறுகின்ற இந்த கடன் மட்டு மல்லாமல், நீர்ப்பாசனம் வருகின்றது; இப்போது சில பகுதிகளிலே மழை பெய்கிறது. மாண்புமிகு விவசாயத் துறை அமைச்சர் அவர்கள்— இந்த விவசாயத் துறையைப் பற்றிச் சொல்கிறபோது, அதில் மொத்தமாகச் சேர்த்து பொதுப்பணித் துறை வருகிறது; ரூரல் டெவலப்மெண்ட் வருகிறது; நதிநீர்ப் பாசனம் வருகின்றது— இப்படியெல்லாம் வருகிறபோது எங்களுடைய தொகுதியிலே மோர்தானா என்கின்ற அணை இருக்கிறது. அதை நான் நேற்றைக்கு முன்தினம் போய் கட்டுவதைப் பார்த்தேன். அது, தலைவர்



காமராசர் குடியாத்தம் தொகுதியிலே போட்டி போட்டு வெற்றி பெற்று முதலமைச்சர் ஆனதிலிருந்து அந்த அணையைக் கட்டிக்கொண்டே இருக்கிறார்கள். அந்த அணையை அப்போது இருந்தே கட்டிக்கொண்டு இருக்கி கிறார்கள். ஒவ்வொரு தடவையும் கால்கோள் விழா நடத்து வார்கள். திரும்பிவந்து விடுவார்கள். ஆனால் ஒரு சின்ன பயம் என்னவென்றால், அந்த அணைக்கு யாராவது போய் அடிக்கல் நாட்டினால் அவர்களுடைய அரசு, அவர்களுடைய ஆட்சி மறு மாசமே கவிழ்ந்து போய்விடுவது உண்டு.. இதற்கு முன்பாக கருணாநிதி அவர்கள் அங்கு வந்து குடி யாத்தத்திலே அடிக்கல் நாட்டினார். அவருடைய ஆட்சி 1975-லே போய்விட்டது..

**மாண்புமிகு பேரவைத் தலைவர்**; மாண்புமிகு உறுப் பினர் இனி பேசாமல் அதைக் கை விட்டு விடுங்கள் என்கிற யோசனையை சொல்ல விரும்புகிறீர்களா?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்** : மாண்பு மிகு உறுப்பினர் இனிமேல் யாரையுமே கால்கோள் விழா நடத்த வேண்டாம் என்ற ஒரு முடிவுக்கு வந்து விட்டார் என்றும் தெரிகிறது.

**திரு. வி. தண்டாயுதபாணி** : அந்த நோக்கத்தோடு நான் சொல்லவில்லை. ஆனால் இதையெல்லாம் மீறி போன வருடம் 10 இலட்சம் ரூபாய் செலவிலே அங்கே வேலைகள் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.

முற்பகல் 11-45

மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சரிடத்தில் கூட நான் தெளிவாகச் சொன்னேன். அவர் சுவாரஸ்ய மாகப் பேசிக் கொண்டிருக்கிறார். இருந்தாலும்..

**மாண்புமிகு பேரவைத் தலைவர்** : பொதுப்பணித் துறை அமைச்சர் அவர்கள்— உங்களைப் பற்றி உறுப்பினர் தெரிவிக்கிறார்.

**திரு. வி. தண்டாயுதபாணி** : மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் அவர்களுக்கு பணிவோடு தெரிவித்துக் கொள்கிறேன்......

**மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன்** : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைக்கு வேளாண்மை துறை மானியம் நடந்து கொண்டிருக்கிறது....

1991 செப்டம்பர் 24

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** வேளாண்மைத் துறையில் பேசுகிறபோது, பொதுப்பணித் துறை அமைச்சர் அவர்களின் கவனத்தை ஈர்க்க அவர் விரும்பினார். ஆகவே, கொஞ்சம் அவருக்கு செவி மடுங்கள் என்று கேட்டுக் கொண்டேன். வேறு ஒன்றுமில்லை (சிரிப்பு).

**மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கோரிக்கைகளை இந்த அரசு எப்போதும் செவி மடுத்துக் கொண்டிருக்கிறது என்பதைப் பணிவோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. வி. தண்டாயுதபாணி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் நீர்ப்பாசனம் என்று வருகிற காரணத்தால் தான் அதை பணிவோடு தெரிவித்துக்கொள்ள ஆசைப்பட்டேன். அந்த அணையை இப்போது கட்டிக் கொண்டிருக்கிறார்கள். போன வருடம் 10 இலட்சம் ரூபாய் செலவு செய்தார்கள். முந்தா நாள் அந்த அணைப் பகுதிக்கு நான் சென்ற போது அந்த ஆற்றில் மார் அளவுக்கு தண்ணீர் வந்து கொண்டிருந்தது. தஞ்சை, திருச்சி ஜில்லா பகுதிகளில் இருக்கிற விவசாயிகள் காவிரியை மட்டும் நம்பிக் கொண்டிருக்கிறார்கள். ஆனால் பல மாவட்டங்களில் சிற்றாறுகள் இருக்கின்றன. இங்கே அந்த நதியின் பெயர் கௌண்டன்ய நதி என்று பெயர். அது ஆந்திர மாநிலம், கர்நாடக மாநிலம் வழியாக வந்து 25 கோடி ரூபாயில் அந்தத் திட்டத்தை நிறைவேற்றுவதற்கு ஏற்பாடு செய்திருக்கிறார்கள். இந்த வருடம் 47 இலட்சம் ரூபாய் ஒதுக்கி இருக்கிறார்கள். ஆகவே, எதற்கு இதைக் குறிப்பிடுகிறேன் என்றால் நீங்கள் விவசாயத்திற்கு மட்டும் மானியத் தொகையை அதிகப்படுத்தக் கோருகிறேன் என்று நினைக்காதீர்கள். விவசாயத்திற்கு தேவையான நீர்ப் பாசனத்திற்காக பொதுப்பணித் துறைக்கு இன்னும் கொஞ்சம் அதிகமாக நிதியொதுக்க வேண்டும். நிதியொதுக்க வேண்டும் என்றவுடன் நிதியமைச்சர் அவர்கள் வெளியே போகிறார். பொதுப் பணித்துறைக்கும் கொஞ்சம் நிதி ஒதுக்கினால் இப்படிப்பட்ட திட்டங்கள் நல்லமுறையில் நிறைவேறும். அப்போது விவசாயம் பெருகி, விவசாயப் பெருங்குடி மக்களுக்கு நல்ல பலன் கிடைக்கும் என்பதை நான் பணிவோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

இன்னொன்று. இந்த விவசாயத் துறையில் நில சீர் திருத்தங்களைப் பற்றி மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். நான் அதைப்பற்றி அதிகம் சொல்லவில்லையென்றாலும், பஞ்சாப், அரியானா போன்ற மாநிலங்களில் இருப்பதை போல தமிழகத்தில் இல்லையென்று சொன்னாலும், இந்த விவசாயிகளுக்கு



கொடுக்கிற பலன்கள் 1975-ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 15-ஆம் தேதி சென்னைப் பல்கலைக் கழகத்தில் பெரிய பொருளாதார நிபுணர் திரு. கே. வி. ராவ் அவர்கள் பேசுகிற போது விவசாயிகளுக்கு செய்கிற பலன்கள் எல்லாம் பெரிய முதலாளிகளுக்கும், பெரிய நிலச்சுவான்தார்களுக்கும் சென்று விடுகின்றன என்று தன்னுடைய குறிப்பிலே குறிப்பிட்டார்கள். அதை நான் சொல்ல காரணம் விவசாயிகளுக்குச் செய்கிற பலன்க,ள் விதைகள் இன்னும் சொல்லப் போனால் அவர்களுக்கு ஏற்படுகிற பல்வேறுவிதமான நலன்களை சிறு விவசாயிகளுக்கும் சென்று அடைகிற அளவுக்கு செய்து, அவைகளை நல்லமுறையில் கண்காணிக்க வேண்டும் என்பதற்காக நான் இதைக் குறிப்பிட ஆசைப்படுகிறேன். விவசாயிகளுடைய பல்வேறு பிரச்சினைகளை நான் குறிப்பிடுகிறபோது விவசாயிகள் போராட்டங்கள் பற்றியும் சொல்ல விரும்புகிறேன். விவசாயிகள் தங்களுக்குள்ள குறைகளை எடுத்துச்சொல்லும் போது அந்தப் போராட்டங்கள் நடைபெற்று இருக்கின்றன. அப்படிப்பட்ட போராட்டங்கள் நடைபெற்ற போது, பல்வேறுவிதமான துப்பாக்கிச் சூடுகள், தடியடிகள் இவைகள் எல்லாம் நடைபெற்றது உண்டு. அவையெல்லாம் கருணாநிதி ஆட்சிக்காலத்துல் நடைபெற்று இருந்தாலும், அன்றைக்குள்ள நிலைமைகளுக்ேற்ப, அந்த அரசியல் சூழ்நிலை இருந்தாலும், 1980 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 31 ஆம் தேதி புளியங்குடியில், நெல்லை கட்டபொம்மன் மாவட்டத்தில் துஞ்சாகுளம் என்ற.......... (மணியடிக்கப் பெற்றது).

முற்பகல் 11-50

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் இருக்கிற பகுதியிலே, அவர்களுடைய கவனத்தை வேறு வகையில் ஈர்க்கின்ற வகையில், உறுப்பினர்கள் அங்கே நின்று கொண்டு இருப்பதோ, அமைசசரிடம் பேசிக் கொண்டிருப்பதோ தவிர்க்கப்படவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

**திரு. வி. தண்டாயுதபாணி :** பேரவைத் தலைவர் அவர்களே, விவசாயப் போராட்டத்திலே 1980 ஆம் வருடம் டிசம்பர் மாதம் 31 ஆம் தேதி, நெல்லை— கட்டபொமமன் மாவட்டத்தில், சங்கரன் கோவில் தாலுக்காவில், புஞ்சாகுளம் என்ற கிராமத்தில், துப்பாக்கிச் சூடும் நடைபெற்றது. அதேநேரத்திலே விவசாயிகளும் கொல்லப்பட்டார்கள். போலீசார் ஒருவரும் இறந்தார். 1980 ஆம் வருடம். 69 விவசாயிகள் மீது வழக்கு பதிவு செய்யப்பட்டு, இது நாள் வரையிலும் நெல்லை-கட்டபொம்மன் மாவட்டத்தில உள்ள செசன்ஸ் கோர்ட்டிலே அந்த வழக்கு நடைபெறுக

கொண்டு வருகிறது. அந்தச் சிறிய கிராமத்தினுடைய விவசாயிகள் மிகவும் அல்லல்பட்டுக்கொண்டிருக்கிறார்கள். 'பொல்லாது சேயெனில், தாய்தள்ளல், மீதமோ, புகலிடம் பெரிதும் உண்டோ' என்று தாயுமானவர் சொன்னார். அப்படி, இந்த விவசாயப் பெருங்குடி மக்களை நீங்கள் காப்பாற்றவேண்டும். 11 ஆண்டுக்காலமாக அந்த வழக்கிலே சம்பந்தப்பட்ட அந்த விவசாயிகள், பஸ்ஸிலே ஏறி நெல்லைக்குக் கூட செல்வதற்கு முடியாமல் கஷ்டப் பட்டுக்கொண்டிருக்கிறார்கள். அவர்களுக்கு நீங்கள் பாது காப்பு அளிக்கின்ற வகையிலே இதை மறுபரிசீலனை செய்து, தாய் உள்ளம் கொண்ட, புரட்சித் தலைவி அவர்கள் இந்த விவசாயப் பெருங்குடி மக்கள் மீது போட்டிருக்கிற வழக்கை வாபஸ் பெற வேண்டும் என்று நான், அன்போடு கேட்டுக் கொள்கிறேன்.

இன்றைக்கு உள்ள சூழ்நிலையில், நெல், கரும்பு, பருத்தி, இந்த மூன்றும் ஒரு நல்ல முக்கியமான விவசாயப் பொருட்களாக தமிழகத்திலே இருந்து கொண்டிருக்கின்றன. கரும்புக்கும், நெல்லுக்கும் நாம் மானியம் கொடுக்கிறோம். மத்திய அரசாங்கம் கொடுக்கின்ற விலையைக் காட்டிலும். 10 ரூபாயோ, 20 ரூபாயோ அதிகமாகக் கொடுக்கிறோம். நெல்லுக்கும் அதுதான், கரும்புக்கும் அதுதான். நெசவாளர்களுடைய பிரச்சினையை நாம் சொல்வதற்காக வரவில்லை. பருத்திக்கு மத்திய அரசாங்கம் மட்டும் விலை நிர்ணயம் செய்கின்றது. மத்திய அரசாங்கம் அந்த பருத்திக்கு விலை நிர்ணயம் செய்கிறபோது, அதை எந்த நோக்கிலே செய் கிறார்கள் என்பது கிடையாது. வட மாநிலத்திலே எந்த அளவிற்கு அது உற்பத்தி செய்யப்படுகிறதோ, அதற்கு மேலாகவும், நம்முடைய தென் மாநிலங்களிலே உற்பத்தி செய்யமுடியும். தென் மாநிலங்களில் உற்பத்தி செய்கின்ற பருத்தி இன்னும் தரம் உள்ளதாகவும் இருக்கிறது. இந்த விவசாயிகளுக்கு நிலங்களை நல்லமுறையிலே கொண்டு வந்து, அதை வளம் உள்ளதாக ஆக்குவதற்கு, பருத்தி விளைநிலத்தை இன்னும் பண்பட்டதாக ஆக்குவதற்கு நீங்கள் எடுத்திருக்கிற முயற்சியை பாராட்டுகிறபோது, இந்த பருத்திக்கும் நம்முடைய அரசாங்கம் விலையை உயர்த்தி, விவசாயிகளுக்குக் கொடுக்க வேண்டும் என்று நான் அன்போடு கேட்டுக் கொள்கிறேன். அந்த முறையில் விவசாயப் பெருங்குடி மக்கள் நல்ல வளம் பெற்றார்கள் என்று சொன்னால், நிச்சயமாக விவசாயத்துறை மேலோங் கும், அது நல்லமுறையில் விளங்கும். இந்த நாட்டினுடைய முதுகெலும்பு விவசாயிகள் என்று சொல்லிய மகாத்மா காந்தியடிகள், இந்த இந்தியாவினுடைய ஜனநாயகம் இந்தியாவினுடைய சுதந்திரம் கிராமப்புறங்களிலே தான் இருக்கிறது, அது வளர்ச்சி அடைந்தால்



தான் இந்த நாடு உண்மையான ஜனநாயகத்தையும், சுதந்திரத்தையும் பெற்றதாக ஆகும் என்று அவர்கள், சொல்லியதற்கு இணங்க, இந்த விவசாய மானியக் கோரிக்கையிலே நான் சொல்லிக் கொள்வதெல்லாம், நிச்சயமாக விவசாயப் பெருங்குடி மக்கள் உற்பத்தி செய் கின்ற பொருட்களுக்கு இன்னும் நல்லமுறையிலே. நீங்கள் விலையை உயர்த்திக் கொடுக்க வேண்டும் என்று நான், கேட்டுக் கொள்கிறேன்.

ஒரேயொரு பிரச்சினை. விவசாயிகளுக்குத் தேவையான உரப் பிரச்சினை. இந்த உரம் இல்லை என்று சொன்னால், விவசாயிகள் ஒன்றுமே செய்ய முடியாது. இந்த மாமன்றத்திலேதான் பேரவைத் தலைவருடைய தொகுதியிலே கூட, அந்த டிராக்டர் மோதி இறந்தவர்களுக்கு நீங்கள் உதவித் தொகை, மானியம் எல்லாம் கொடுத்தீர்கள். இதை யோசித்துப் பார்க்கவேண்டும். எதற்காக அந்த, டிராக்டரைக் கொண்டுபோய் இடித்தார்கள், ஏன் அது, ஓடிப் போய்விட்டது. எனவே உரப் பற்றாக்குறை காரணமாக இருக்கின்ற நிலைமையைச் சமாளிப்பதற்கு நம்முடைய அரசாங்கம் இன்னும் நல்ல முயற்சியை எடுத்து, அதிகமான உரங்களைப் பெறவேண்டும். இப்படி உரத்தைப் பெறுகின்ற போது நான் ஏற்கெனவே நிதியமைச்சர் அவர்களிடம் கூறி யுள்ளேன். (குறுக்கீடு).

முற்பகல் 11-55

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அங்கே தாராளமாக இருந்ததினால்தான் கடத்தினார்கள். அதை மனதில் வைத்துப் பேசுங்கள். பற்றாக்குறையினால் அல்ல.

திரு. வி. தண்டாயுதபாணி: கடத்துவதோடு மட்டுமல்ல. இப்போது நம்முடைய நிதியமைச்சர் அவர்கள் உரத்தின் மீதான விற்பனை வரியை 3.5-லிருந்து 3-ஆக குறைத்திருப்பதாகச் சொல்லியுள்ளார்கள், அறிவித்துள்ளார்கள். மத்திய அரசாங்கம் உரத்தினுடைய விலையை 100-க்கு 30 சதவீதம் உயர்த்தி உள்ளார்கள். இப்போது அதனுடைய விலை என்னவென்று சொன்னால், மத்திய அரசாங்கம் ரூ. 52 கோடி மானியம் கொடுத்தாலும், சிறிய, விவசாயிகளுக்கு—நம்முடைய அமைச்சரவர்கள் வசிக்கின்ற பகுதியாகிய திருச்சியிலே உரத்தினுடைய விலை குறைய வில்லை என்று மூன்று நாட்களுக்கு முன்பாக அங்கே விவசாயிகள் சண்டை போட்டதாக பத்திரிகையிலே நான் பார்த்தேன். இப்போது நீங்கள் குறைத்திருக்கின்ற அந்த விற்பனை வரியினால் விவசாயிகளுக்கு ஒன்றும், பெரிய

பலன் இல்லை. ஏனென்று சொன்னால், ரூ. 100 ஒரு மூட்டை யூரியா என்று சொன்னால், முன்பு 103.50 கொடுத்து வாங்கினான் விவசாயி. இப்போது ரூ. 130 அந்த மூட்டையினுடைய விலை என்று சொன்னால், இப்போது மத்திய அரசாங்கம் உயர்த்தி இருக்கின்ற காரணத்தினாலே ரூ. 130-க்கு 3 சதவீதம் ரூ. 3.90. இப்போது இன்னும் 40 பைசா அதிகம் கொடுக்கிறான். ரூ. 3.50-லிருந்து 40 பைசா ஏறிவிட்டது. ஆகையால் 90 பைசா இப்போது உரத்தினுடைய விலையிலே, விற்பனை வரியிலே அதிகமாக விவசாயி கொடுக்கின்றான். ஆகவே உரங்களுக்கு கொடுக்கப்பட்டிருக்கின்ற ரூ. 52 கோடி மானியத்தோடு மட்டுமல்ல, அது போதாது. இந்த மானியத்திலே நம்முடைய விவசாயப் பெருங்குடி மக்கள் சார்பாக நான் கேட்டுக்கொள்கிறேன். மத்திய அரசாங்கம் வழங்கியுள்ள ரூ. 52 கோடி போதாது. இன்னும் அதிகம் வேண்டும், விவசாய மானியத் தொகை. சிறு விவசாயிகளுக்குக் கொடுக்கின்ற அந்த உரத்தினுடைய விலை கட்டுப்படியாகவில்லை. ஆகவே இன்னும் அதிகமாக மானியம் வேண்டுமென்று சொல்லி, மைய அரசை வலியுறுத்த வேண்டுமென்று அன்போடு கேட்டுக்கொண்டு, நம்முடைய மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்கள் இந்த 3.50-லிருந்து 3-ஆக விற்பனை வரியை குறைத்தது போதாது. முழுமையாகவே சிறு விவசாயிகளுக்கு கொடுக்கின்ற உரத்தின்மீது போடுகின்ற விற்பனை வரியை ரத்து செய்வது விவசாயிகளுக்கு, சிறு விவசாயிகளுக்கு நலம் பயக்கும் என்பதை மட்டும் இங்கே நான் தெரிவித்துக் கொள்ள ஆசைப்படுகிறேன். (மணியடிக்கப்பெற்றது). நன்றி.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** திரு. கி. பாலசுப்பிரமணியன்.

***திரு. கி. பாலசுப்பிரமணியன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மற்றும் துணைத் தலைவர் அவர்களே, மற்றும் இங்கே குழுமியிருக்கும் அமைச்சர் பெருமக்களே, சட்டமன்ற உறுப்பினர்களே, இந்த பேரவையைச் சேர்ந்த அதிகாரிகள் யாவருக்கும் என்னுடைய தொகுதியைச் சேர்ந்த வாக்காளர் பெருமக்களுக்கும் என்னை இந்த சட்டமன்றத்திற்கு உறுப்பினராக தேர்ந்தெடுத்து அனுப்பியதற்கு என் மகிழ்ச்சியுடன், நன்றி கலந்த வணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன். மாண்புமிகு முதல்வர், புரட்சித் தலைவி அவர்கள் என்னை இந்த அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் அடையாளச் சின்னமாகக் கோடிட்டுக் காட்டி, பட்டுக்கோட்டைத் தொகுதியில் என்னை சட்டமன்ற உறுப்பினராகத் தேர்ந்தெடுத்து வெற்றிபெறச் செய்ததற்கு என்னுடைய மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.



இப்போது இந்த 'Introductory of the Budget' என்பது 'A complete net work has been made' இதிலே. நுணுக்கமான செயல்களும் செயல்படுத்தக்கூடிய முறைகளும் 'Policy matters' களும் விரிவாக சொல்லப்பட்டிருக்கின்றன. In the circumstances, இந்த நிதிநிலை இருக்கும் சூழ்நிலையிலே இவ்வளவுதான் செய்யக்கூடும் என்று பரவலாக அந்தந்தத் துறை இலாக்காக்களுக்கு ஒதுக்கப்பட்டு அதன் மூலமாக செவ்வனே நடத்துவதற்கு அவர்கள் முயற்சி எடுத்திருக்கிறார்கள் என்பதற்கு இதைவிட வேறு எந்த சான்றும் இருக்கமுடியாது. அதாவது இந்த அரசு ஆட்சி பீடத்தில் அமர்வதற்கு முன்பு நாமெல்லாம் எஸ். ஓ.எஸ். என்று Save our souls என்று சொல்லக்கூடிய நிலைமையிலே நாம் பின்தங்கியிருந்தோம். அதை முறியடித்து நமது முதல்வர் அவர்கள் எஸ்.டி.எஸ். Super dynamic system என்று சொல்லக் கூடிய வகையிலேயும், Super distribution system என்று சொல்லக்கூடிய வகையிலேயும் அவர்கள் செவ்வனே செயல்பட்டு வருகிறார்கள். அவர்கள் தன்னுடைய திறமையையெல்லாம் வெளிப்படுத்தி ஒவ்வொரு துறையிலேயும் அவர்கள் செயலாற்றி வருகிறார்கள் என்டதற்கு இதைவிட வேறு எந்த சான்றுகளும் இருக்க முடியாது. அத்தோடு நான் கன்னி உரையை நிகழ்த்திக் கொண்டிருக்கும் நிலையிலே நான் அதிகமான நேரத்தை எடுக்க விரும்பவில்லை என்றாலும் வேளாண்மை என்ற ஹெட் லைனிலே நான் பேசுவதற்கு வாய்ப்பளித்ததற்காக என் மகிழ்ச்சியைத் தெரிவித்துக் கொண்டு, கொஞ்சம் காலதாமதம் ஆனாலும் 5 நிமிடங்கள் 10 நிமிடங்கள் கூட போனாலும் கூட மன்னிக்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டு என்னுடைய உரையைத் தொடருகிறேன்.

நண்பகல் 12-00

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** உங்களுக்கு ஒதுக்கிய நேரமே 10 நிமிடங்கள்தான். அதற்கு மேல் 5 நிமிடம் 10 நிமிடம் என்று கூட கொடுக்கப்போவதில்லை.

**திரு. கி. பாலசுப்பிரமணியன் :** அக்ரிகல்சர் என்று சொல்லக் கூடிய இந்த முக்கியமான சப்ஜெக்டிலே பேச விரும்புகிறேன். இருக்கக் கூடிய பரப்பளவிலே அதாவது தமிழகத்தில் எங்கெல்லாம் சமவெளி என்று சொல்லக் கூடிய நிலங்களையெல்லாம் நிலப்பரப்புகளையெல்லாம் பயன்படுத்திக் கொண்டு அரசாங்கம் அதை புரட்சிகரமான திட்டத்திலே ஈடுபடச் செய்து விவசாயத்தை பெருக்குவார்களேயானால் நிதியும் நல்ல முறையிலே பெருகிட வாய்ப்பு ஏற்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

என்னுடைய தொகுதியானது கடைமடை தொகுதி. டெயில் என்ட் ஏரியா என்று சொல்லக்கூடியது. அதாவது கிரேண்ட் அணைக்கட்டு என்று சொல்லக்கூடிய பிரிவினை சார்ந்த வெண்ணாறு வெட்டாறு மற்றும் இதைப்போன்ற ஆறுகளில் விடப்படும் நீர் பொதுவாகவே டெயில் என்ட் வரைக்கும் சென்று சேருவது இல்லை. அதற்குக் காரணம் கால்வாய்கள் சரியான முறையிலே தூர் எடுக்கப்படுவதில்லை, பராமரிப்பு செய்யப்படுவதில்லை. அதை மனத்திலே கொண்டு அந்த பி.டபிள்யூ. டி. டிபார்ட்மெண்ட்டை சேர்ந்தவர்கள் எல்லாம் அந்தக் கால்வாய்களை செப்பனிட்டு கொடுத்து நல்ல முறையில் செயல்பட்டால் அந்த நீரானது கடைசி வரைக்கும் டெயில் என்ட் வரைக்கும் போய்ச் சேருவதற்கு ஒரு வாய்ப்பு ஏற்படும்.

மற்றும் எனது தொகுதியிலே ஒரு பெண்கள் கல்லூரி, என்ஜினியரிங் கல்லூரி வேண்டுமென்று கேட்டிருந்தேன். அதை தயவு செய்து அவர்கள் செய்து கொடுப்பார்களானால் அதைச் சுற்றியுள்ள நான்கு நகரங்கள் பயன்பெறும். அதாவது பேராவூரணி, அறந்தாங்கி, போன்று முத்துப்பேட்டை அதிராமபட்டினம் போன்று மன்னார்குடி ஒரத்தநாடு வரையிலே சுற்றி இருக்கும் நகரங்களுக்கு பட்டுக்கோட்டை மையமாக அமையும். ஆகவே அதை அமைத்துக் கொடுக்க வேண்டும் என்று தாழ்மையுடன் கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து நான் எஸ்.டி.டி. வேண்டும் என்று சொன்னேன். அது சென்டிரலைச் சேர்ந்தது. அதற்கு ஆவன செய்து முயற்சி எடுத்து பட்டுக்கோட்டையிலே அமைக்குமாறு தாழ்மையுடன் கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து கர்நாடகா ரிவர் பற்றி மாண்புமிகு முதல்வர் அவர்களின் ஸ்டேண்ட், ரொம்ப தீர்மானமாக நிலையாக இருக்கிறது. எந்த ஒரு இன்டரீம் அவார்டு கொடுக்கப்படுகிறது என்று சொன்னாலும் "First you implement the award and then you go for appeal" என்று சொல்லுவார்கள். அந்த முறையிலே அதை இம்பிளிமென்ட் செய்திருந்தால் நன்றாக இருக்கும். இதை மேலும் கெஜட்டிலே வெளியிட வேண்டும் என்று சொன்னதற்கு, அவர்கள் இதை கெஜட்டிலே பதிவு செய்து விட்டால் பைன்டிங்காக போய்விடும் என்று டிலே செய்து வருவது, அவர்கள் அதை ஒத்துக்கொள்ளாததற்கு காரணம் என்று தெரிகிறது. இதில் மேலும் சென்டிரல் கவர்ன்மென்டை அணுகி அதை நிச்சயமாக கெஜட்டிலே பதிவு செய்ய வேண்டும். அதற்கு வேண்டிய முயற்சிகளை எடுத்துக் கொண்டு நமக்கு வரவேண்டிய நீரைப் பகிர்ந்து கொடுக்குமாறு இந்த இன்டரீம் அவார்டு பிரகாரம் வலியுறுத்த வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.





போலீஸ் டிபார்ட்மென்ட் நிர்வாகம் நன்றாக செயல்படுகிறது. அதற்குரிய வாகன வசதிகளை செய்து கொடுக்க வேண்டும். அதிகாரிகளுக்கு உயர் மட்டம், கீழ்மட்டம் என்று பிரித்து சீருடைகளைக் கொடுக்க வேண்டும். சீனியாரிட்டி வரிசைப்படி பழங்கால முறையிலே உயர் அதிகாரிகளுக்கு புல் சூட்டும் மற்ற அதிகாரிகளுக்கு கலர் மாற்றம் செய்தும் அடிப்படையிலே கான்ஸ்டபிள் என்று சொல்லக்கூடியவர்களுக்கு அரைக்கால் சட்டையும் என்று வைத்துக் கொடுத்தால் அவர்களைக் கண்டால் மக்களுக்கு பயம் ஏற்படும் என்பதைச் சொல்லிக் கொண்டு, அவர்களுக்கு அந்த முறையில் செய்துதர வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். இண்டஸ்ட்ரீஸ் ஷுட் ஹேவ் எ குட் ரிலேஷன்ஷிப் வித் லேபரர்ஸ். அவர்கள் நல்லமுறையிலே அணுகி இருக்க வேண்டும். அந்த இண்டஸ்ட்ரீஸ் வளர்வதற்கெல்லாம் சென்ட்ரல் கவர்ன்மென்ட்டை அணுகி அவர்களுக்கு வேண்டிய உதவிகள், சலுகைகள் செய்வதற்கு ஓ.ஜி.எல். ஓப்பன் ஜெனரல் லைசென்ஸ் என்று சொல்லக்கூடிய முறையை அனுஷ்டித்து ஸ்மால் ஸ்கேல் இண்டஸ்ட்ரீஸ் முன்னேறவும், ரா-மெட்டீரியல்ஸ் வருவதற்கும் வேண்டிய ஏற்பாடுகளைச் செய்து, அந்த டாரிஃப் செல் மூலமாக கட்டுப்பாடுகளைத் தளர்த்தி, இந்தத் தமிழகம் முன்னேற சென்ட்ரல் கவர்ன்மென்ட்டை அணுக வேண்டுமென்று மாண்புமிகு முதல்வர் அவர்களைத் தாழ்மையுடன் கேட்டுக் கொள்கிறேன்.

பிற்பகல் 12-05

அடுத்து இந்த சத்துணவுத் திட்டம் என்று சொல்லக்கூடிய ஐட்டம் வருகின்றபோது நான் பரவலாகச் சொல்கிறேன், தயவு செய்து என்னை மன்னிக்கவும். இதை ஃபாரின் எய்ட்ஸ் மூலமாக இதே மாதிரி ஓப்பன் ஜெனரல் லைசென்ஸ் என்ற முறையிலே அவர்கள் கிஃப்ட் ஆர்ட்டிக்கிள்ளாக கொடுக்கக் கூடிய சில சலுகைகளையெல்லாம் நாம் பெற்றோமானால், இந்த ஷார்ட்டேஜ் அல்லது அதிகமான செலவாகக்கூடிய சத்துணவுத் திட்டங்களுக்கு off.shoot பண்ணக்கூடிய நிலைமை ஏற்படும் என்று சொல்லி, எனவே முதலமைச்சர் அவர்கள் சென்ட்ரல் கவர்ன்மென்ட்டை அணுகி அதற்கு வேண்டிய கிஃப்ட் ஆர்ட்டிக்கிள்ஸ், மற்றும் ஃபுட்ஸ்டஃப்களை வரவழைப்பதற்கு ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து ஃபக்வார்டு கிளாஸ், ஷெட்யூல்டு கிளாஸ் என்று மூன்று வகைகளாகப் பிரிக்கப்பட்டிருக்கிறது. அந்த 3 வகைகளையும் 2 கிளாஸாக செய்துவிட்டால், வருமான அடிப்படையிலே, 3,000 அல்லது 6,000-க்கு வருமானம் இருக்கக்கூடியவர்களுக்கு மட்டும் இந்தச் சலுகைகள் கொடுக்க வேண்டுமென்று சொன்னால் அவர்களுக்கு வேலை வாய்ப்பு மற்றும் வேறு சலுகை

கள் கிடைப்பதற்கு ஏதுவாக இருக்கும். இதற்கு கேஸ்ட் டிஸ்டிங்ஷன் ஏற்படுத்த வேண்டியது இல்லை என்பது என்னுடைய தாழ்மையான அபிப்பிராயம். அதை முதல்வர் அவர்கள் கவனத்தில் கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மரைன் போலீஸ்படை கடலோரப் பகுதியிலே அமைக்கப்பட இருப்பதாகக் கேள்விப்பட்டேன். எனக்கு மிகவும் மகிழ்ச்சியாக இருக்கிறது. அப்படி ஒரு ஸ்குவாட்ஸ் அமைப்போமானால், அது இந்த செக்யூரிட்டி கார்ட்ஸ் என்று சொல்லக் கூடிய நிலைமையில் அமைந்தால் அது நன்றாகச் செயல்படும்.

அடுத்து ரெவின்யூ கலக்ஷன் ஆகாமல் இருக்கிறது. எந்த முறையிலே அதை கலக்ஷன் செய்ய வேண்டுமோ அந்த முறையிலே அதைச் செய்தால் இன்றைக்கு ஷார்ட்டேஜாக இருக்கக்கூடிய நிதி நிலைமை மாறிவிடும். அதற்கு அரசாங்க அதிகாரிகளிடம் வலியுறுத்திச் சொல்ல வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதிராம்பட்டினத்திலே பேஸ்டு ஆன் தி பாப்புலேஷன் அன்ட் அதர் திங்ஸ் அதை இரண்டு ஒன்றியங்களாக பிரிக்க் வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பட்டுக்கோட்டையிலே குடிநீர் வசதி இன்றி கஷ்டமாக இருக்கிறது. பாதாள சாக்கடைகள் இல்லாததால் இன்சானிடரி கண்டிஷன்ஸ் இருக்கிறது. அவைகளையும் கவனிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பட்டுக்கோட்டையிலே ஹவுசிங் டெவலப்மென்ட் ஸ்கீமில் இரண்டு ஆண்டுகளாக அவர்கள் பணத்தைக் கட்டிவிட்டு அவர்களுக்கு அலாட்மெண்ட் ஆகாமலும் அவர்களுக்கு ஏற்பட்ட சங்கடங்களை என்னிடம் சொன்னார்கள். அதற்கு வேண்டிய ஏற்பாடுகளை அரசாங்கம் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, இரண்டாவதாக . . . . (மணியடிக்கப்பெற்றது).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. ஜி. பழனிசாமி.

திரு. ஜி. பழனிசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வேளாண்மையினுடைய மானிய கோரிக்கை மீது என்னுடைய கருத்தைச் சொல்வதற்கு அனுமதி தந்த பேரவைத் தலைவர் அவர்களுக்கு முதலிலே என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன். வேளாண்மைத் துறை, நாட்டினுடைய உணவு உற்பத்தியை பஞ்சத்தைப் போக்குவதற்கு ஒரு முக்கியமான துறை. வேளாண்மைத் துறை எந்த அளவிற்கு சிறப்பாக நடைபெறுகிறதோ அந்த அளவிற்குத்தான் நாட்டிலே இருக்கின்ற உணவு உற்பத்தியை பெருக்குவது பஞ்சத்தை போக்குவது எல்லாம் முடியும் என்பதை அந்தத் துறை உணர்ந்து இருக்கிறது.



(மாண்புமிகு மாற்றுத் தலைவர்— தலைமை.)

பிற்பகல் 12-10

குறிப்பாக தஞ்சை மாவட்டத்தைச் சேர்ந்தவன் என்கிற காரணத்தால் வேளாண்மைத் துறையை எடுத்துக்கொண்டோம் என்று சொன்னால் விவசாயிகளுக்கு கிடைத்திருக்கின்ற அனுபவங்களைப் பார்க்கின்றபோது உழுதவன் கணக்குப் பார்த்தால் உழவு கால் கூட மிஞ்சாது என்று பழமொழி சொல்வார்கள். அதே போன்றுதான் 1974 ஆம் ஆண்டிலிருந்து காவிரி நதி நீர்ப் பிரச்சினை தீராததன் காரணமாக தஞ்சை மாவட்டத்திலே இருக்கக்கூடிய விவசாயிகள் பல்வேறு துன்ப, துயரங்களுக்கு ஆட்பட்டு, விவசாயத்திலே நஷ்டம் ஏற்பட்டு நிர்க்கதியாக நிற்கக் கூடிய ஒரு நிலைமையைத் தான் அவர்களிடம் காண முடிகிறது. விவசாயம் என்பது கொல்லையிலே இருக்கின்ற குப்பைகளை அடித்து விளைய வைக்கின்ற தொழிலாக இன்றைய தினம் இல்லை. விவசாயம் என்பது விஞ்ஞான உலகமாக இன்றைய தினத்திலே மாற்றப்பட்டிருக்கிறது. ஆகவே டிராக்டர் மூலமாக உழவுத் தொழில் செய்ய வேண்டியிருக்கிறது. விவசாயிகள் வியாபாரிகளைப் போல தங்களுடைய தொழிலை துவக்கக்கூடிய நிலையில் இன்றைக்கு இருக்கிறார்கள். பணத்தை மடியில் கட்டிக்கொண்டு தான் வேளாண்மைத் துறையில் இன்றையதினம் விவசாயிகள் ஈடுபடக் கூடிய ஒரு நிலைமை இருக்கிறது என்பது மாண்புமிகு வேளாண்மை துறை அமைச்சர் அவர்களுக்கு நன்கு தெரியும். காரணம் இன்றைக்கு தொடர்ந்து விவசாயிகள் மீது சுமத்தப்படுகினற சுமை என்பது அவர்களால் தாங்க முடியாத நிலையில் இருக்கிறார்கள். குறிப்பாக சொல்ல வேண்டும் என்று சொன்னால் சென்ற ஆண்டு தஞ்சை மாவட்டத்தில் விவசாயிகள் தாம் நட்டுள்ள பயிர்களை காபந்து பண்ண முடியாத நிலையில் அவைகள் கருகிப் போன நிலைகளை எல்லாம் பார்த்து தற்கொலை செய்து கொண்ட நிலை எல்லாம் தஞ்சை மாவட்டத்தில் ஏற்பட்டது. ஏன் என்றால் அவ்வளவு பெரிய கொடுமைக்கு அந்த தஞ்சை மாவட்ட விவசாயிகள் ஆட்பட்டு இருக்கிறார்கள் என்பதை நமக்கு கடந்த கால அனுபவங்கள் கூறுகின்றன. ஆனால் சமீப காலத்தில் விவசாயிகள் வேதனைக்கு உள்ளான இந்த சூழ்நிலையில் கூட அவர்களுடைய நிலங்களை விளைய வைக்க வேண்டும் என்பதற்காக, இந்த தேசத்தின் மீது அக்கறை கொண்டு உணவு உற்பத்தியை செய்ய வேண்டும் என்பதற்காக தொடர்ந்து தன்னுடைய குடும்பத்தினர் அதில் ஈடுபட்டுக் கொண்டிருக்கிறார்கள். எவ்வளவோ நஷ்டங்கள் வந்தபோதிலும் கூட விவசாயிகள் தங்களுடைய பண்ணையை தொடர்ந்து செய்து கொண்டு வருகிறார்கள். அப்படிப்பட்ட விவசாயிகளுக்கு மத்திய அரசாக இருந்தாலும், மாநில அரசாக இருந்தாலும் அவர்களை ஊக்குவிப்பதிலே இன்றையதினம் கவனமாக இருக்கவேண்டும்

அவர்களுக்கு வழங்கக்கூடிய உரமாக இருந்தாலும், பூச்சி மருந்தாக இருந்தாலும் விதைகளாக இருந்தாலும் காலத்தோடு அளிக்கக்கூடிய முறையில் நம்முடைய வேளாண்மைத் துறை இருக்க வேண்டும்.

இன்றைக்கு முக்கியமாக நான் சொல்ல விரும்புவது எல்லாம், இங்கே மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் அவர்கள் இருக்கிறார்கள். வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் இருக்கிறார்கள். இந்த இரண்டு துறைகளும் தனித் தனியாக இயங்குவதன் மூலமாக விவசாயத்தில் மிகப்பெரிய நஷ்டங்கள் ஏற்படுகின்றன. குறிப்பாக வேளாண்மைத் துறையும், பொதுப்பணித் துறையும் இரண்டறக்கலந்து இருந்தால் தான் அந்த வேளாண்மைப் பணிகள் முழுமையாக நடைபெற முடியும். இன்றைக்கு இரண்டும் வித்தியாசப்படுகின்றன. யார் எந்த நேரத்தில் பயிரிட வேண்டும்; என்ன பயிர் செய்ய வேண்டும்? அவர்களுக்கு எப்படி தண்ணீர் கொடுக்க வேண்டும்; எப்படி மராமத்துப் பணிகள் செய்ய வேண்டும்; எங்கே அணை கட்டினால் எந்தவகையில் வயல்களுக்கு தண்ணீர் பாயும் என்ற நிலையை எல்லாம் பொதுப் பணித துறையின் பொறியாளர்கள் மூலமாக அந்தத் துறையில் நடவடிக்கை எடுக்கிறார்கள். ஆனால் வேளாண்மைத் துறை அதற்கு ஏற்ற வகையில் தன்னுடைய விவசாயப் பணிகளைச் செய்வதில் மாறுபடுகின்றன. தஞ்சை மாவட்டத்தில் இருக்கின்ற இந்த முரண்பாடுகள் காரணமாக விவசாயிகளுக்கு மிகப்பெரிய ஆபத்து இருக்கிறது. ஆகவே வேளாண்மைத் துறையும், பொதுப் பணித் துறையும் இரண்டும் ஒருவரிடத்தில இருக்க வேண்டும். அந்தத் துறை அமைச்சர்களிடம் பல்வேறு பிரிவுகள் இருந்தாலும் மாவட்ட அளவில் அந்தத் துறைகள் ஒன்றாக இருந்தால் தான் வேளாண்மைத் துறையை முழுமையாக செழுமைப்படுத்தி விவசாயிகள் உற்பத்தியைச் செய்ய முடியும்.

பிற்பகல் 12-15

விவசாயிகள் இப்படிப்பட்ட வேதனைக்கு உள்ளாகி இருக்கிற இந்த நேரத்தில் மத்திய அரசு விவசாயிகள் மீது மிகப் பெரிய ஒரு பாரத்தை சுமத்தியிருக்கிறார்கள். உரத்தினுடைய விலையை உயர்த்தி இருக்கிறார்கள். குறிப்பாக சொல்லவேண்டும் என்று சொன்னால் சென்ற ஆண்டு டி.எ.பி. உரத்தின் விலை 178 ரூபாய். இன்றையதினம அதனுடைய விலை 250 ரூபாய். சுமார் 72 ரூபாய் அந்த உரத்தின் விலை உயர்ந்து இருக்கிறது. அதே போல யூரியாவின் விலை சென்ற ஆண்டு 50 கிலோ கொண்ட மூட்டை 121 ரூபாய். இன்றையதினம் அதன் விலை 171 ரூபாய் 35 காசாக உயர்ந்து இருக்கிறது. அதேபோல் அமோனியா சல்ஃபேட்டின் விலை சென்ற ஆண்டு 125 ரூபாய். அது அன்றைய தினம் 251 ரூபாய் 50 காசாக விலை உயர்ந்து இருக்கிறது. இவ்வாறு உரத்தின் விலை அதிகமாக இருந்தால் எப்படி அரசாங்கம் நிர்ணயிக்கும் விலைக்கு விவசாயிகளால்



நெல்லை விற்க முடியும். ஆனால் மத்திய அரசின் மூலமாக, மாநில அரசின் மூலமாக விவசாயிகள் உற்பத்தி செய்யக்கூடிய நெல்லுக்கு விலை என்பது மிகவும் குறைவாக அறிவிக்கப்பட்டிருக்கிறது. இங்கே மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் ஒரு செய்தியை இந்த அவையில் அறிவித்தார்கள். பத்திரிகைகளிலும் செய்திகள் வந்திருக்கின்றன. விவசாயிகள் அதைபடித்துவிட்டு உண்மை என்று நம்பி ஏமாந்து போயிருக்கிறார்கள். அவர்கள் சொல்லுகிறார்கள் இந்த ஆண்டு ஒரு குவிண்டால் நெல்லுக்கு 60 ரூபாய் ஊக்கத் தொகை வழங்குவதாக அறிவித்து இருக்கிறார்கள், ஏதோ 60 ரூபாயும் மாநில அரசே வழங்குவது போன்று விவசாயிகள் என்னிடத்திலே பல பேர் கேட்டார்கள். மாநில அரசு 60 ரூபாய் ஒரு குவின்டாலுக்கு கொடுப்பதாக அறிவித்து இருக்கிறதா என்று சொல்லி என்னிடத்திலே விவசாயிகள் கேட்கிறார்கள். ஆனால் மாநில அரசு பைசா கூட உயர்த்தவில்லை. மத்திய அரசு குவின்டாலுக்கு 25 ரூபாய் உயர்த்தி இருக்கிறது. பல ஆண்டுக் காலமாக மாநில அரசு கொடுத்திருக்கக் கூடிய அந்த ஊக்கத் தொகையை, 35 ரூபாயையும் சேர்ந்து அவர்கள் 60 ரூபாயாக இன்றைய தினத்திலே அறிவித்து இருக்கிறார்கள். இதைப் பிரித்துச் சொல்லாத காரணத்தினால் இன்றைக்கு விவசாயிகள் 60 ரூபாய் வழங்குகிறார்கள் என்று நினைக்கிறார்கள், மத்திய அரசு 25 ரூபாய் வழங்குகிறது; ஆக, 35 ரூபாய் வழங்கப்படுகிறது என்று நினைத்து விவசாயிகள் இன்றையதினம் ஒரு ஏமாற்றத்தோடு இருக்கிறார்கள். நான் மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொள்வதோடு நம்முடைய தமிழகத்தினுடைய மாண்பு மிகு முதலமைச்சர் அவர்களையும் கேட்டுக் கொள்கிறேன். 35 ரூபாயாக இருக்கிற அந்த ஊக்கத் தொகையை குறைந்த பட்சம் 50 ரூபாயாக உயர்த்திக் கொடுங்கள் என்றுகேட்டுக்கொள்கிறேன். இப்போது இருக்கிற விலை ஏற்றத்தில் அந்தத் தொகை போதாது என்று தெரிவித்துக் கொள்கிறேன். இன்றைய தினம் விவசாயம் இயற்கையின் சீற்றத்தால் ஏகப்பட்ட பாதிப்புக்கு உள்ளாகி இருக்கிறது. இதனால் விவசாயிகளுக்கு ஏகப்பட்ட பாதிப்புகள் ஏற்பட்டிருக்கின்றன. மேலும் இன்றைய தினம் பூச்சிகள் மூலமாக மிகப் பெரிய பாதிப்புகள் ஏற்படுகின்றன. நம்முடைய வேளாண்மை விரிவாக்க மையத்தினுடைய அலுவலர்கள், அங்கே பணியாற்றக் கூடியவர்கள் எல்லாம் இங்கே வந்திருக்கிறார்கள். இன்றைக்கு போலித்தனமான மருந்துகள் ஏகப்பட்டவை விற்பனை செய்யப்படுகின்றன. தனியாருடைய மருந்து கடைகளில் ஏகப்பட்ட போலித்தனமான மருந்துகள் விற்பனை செய்யப்படுகின்றன. அவைகளை வாங்கிப் போடுவதன் மூலமாக பயிர்களில் வரக்கூடிய கதிர்கள் சாவியாகி, வெறும் கறுக்காவாக மாறிவிடுகிறது. அதே போன்று இன்றைக்கு புதுப்புதுவிதமான

பூச்சிகள் வந்துகொண்டிருக்கின்றன. குறிப்பாக கொலைக் கொல்லி என்கிற ஒரு பூச்சி, தஞ்சை மாவட்டத்தில், பெரும் பகுதிகளில் உள்ள பயிர்கள் வளர்ந்து கதிர்கள் வந்து அறுவடை செய்யக்கூடிய நேரத்தில் அந்தக் கொலை கொல்லி நோய் பூச்சியினால் அனைத்தும் அழிந்து விடக்கூடிய நிலை ஏற்பட்டிருக்கிறது. நம்முடைய விரிவாக்கப் பணியாளர்கள் இதுபற்றி இன்னும் ஆய்வு செய்துகொண்டு இருக்கிறார்கள். அதைக் கண்டுபிடிக்க முடியாத ஒரு சூழ்நிலை இருக்கிறது. விவசாயிகளுக்கு அதிலேயிருந்து பாதுகாப்பு கொடுக்க அரசு முயற்சிகள் மேற்கொள்ள வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். அதற்காக, அரசு அந்த மருந்துகளை ஆய்வு செய்ய வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

தஞ்சை மாவட்டத்தைப் பொறுத்தமட்டில் அங்கே இருக்கக் கூடிய பாசன வடிகால்களின் மராமத்துப் பணிகளை உடனடியாக செய்வதற்கு ஏற்பாடு செய்ய வேண்டும். பல ஆண்டுக் காலமாக அந்த மராமத்துப் பணி என்பது செய்யப்படாமல் இன்றைய தினம் விவசாயிகள் மிகப் பெரிய பாதிப்பினால், வேதனைக் குள்ளாகி இருக்கிறார்கள். அந்தப் பணிகளைச் செய்வதற்கான முயற்சிகளை மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். தஞ்சை மாவட்டத்தில் இருக்கக்கூடிய ஆறுகளின் கிளை வாய்க்கால்களில் எல்லாம் நெய்வேலி காட்டாமணி என்கிற காட்டாமணி செடிகள் இன்றைக்கு அந்த மாவட்டம் முழுவதிலும் வளர்ந்து சிறிய மழை பெய்தாலும் ஆறுகளின் கிளை வாய்க்கால்களின் கரைகள் உடைந்து போகக்கூடிய நிலைமைகளெல்லாம் ஏற்படுகின்றன. இதனால் விவசாயப் பயிர்கள் நாசமாகின்றன. இது தொடர்ந்து நடைபெற்றுக் கொண்டு வருகிறது. அரசினுடைய கவனத்திற்கு நாங்கள் இதுகுறித்து பல ஆண்டுக் காலமாக சொல்லிக் கொண்டு இருக்கிறோம். மேலும் இந்த நெய்வேலி காட்டாமணி செடிகளினால் அதிகமான எலிகளின் தொல்லைகள் ஏற்படுகின்றன. அந்தச் செடிகளாலேதான் எலிகள் அதிகமாக இருக்கின்றன. பயிர்களை ஒருவிதத்திலே பூச்சிகள் பாதித்தால் இன்னொரு புறத்தில் எலிகள் மூலமாக மிகப்பெரிய பாதிப்புகள் பயிர்களுக்கு ஏற்படுகின்றன. நான் ஒரு விவசாயி என்ற முறையிலே இதை சொல்லிக்கொள்கிறேன். இதையெல்லாம் சொல்வதற்கு எனக்கு வேதனையாக இருக்கிறது. அந்தக் காட்டாமணி செடிகளை கட்டாயமாக அப்புறப்படுத்துவதற்கு அரசாங்கம் நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும். (மணியடிக்கப்பெற்றது).

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. க. அர்ஜுனன்) : நீங்கள் பேச ஆரம்பித்து 11 நிமிடங்கள் ஆகின்றன. சீக்கிரம் முடித்துக் கொள்ளுங்கள்.



திரு. ஜி. பழனிசாமி : மாண்புமிகு தற்காலிகத் தலைவர் அவர்களே, பொதுப்பணித்துறை மானியக் கோரிக்கையிலே இதை பற்றி பேசிக் கொள்ளலாம் என்று நினைக்கிறேன். ஆகவே, அந்த மராமத்துப் பணிகளை உடனடியாகச் செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அதேபோன்று கரும்பு, பருத்தி, புஞ்சைத் தானியங்களுக்கு வழங்கக்கூடிய அந்த விதைகளை உயர்த்திக் கொடுப்பதோடு காலத்தோடு அந்த விதைகளைக் கொடுக்க வேண்டும்.

களைக்கொல்லி என்கிற ஒரு மருந்தை இப்போது கொடுக்கிறார்கள். கோடைக்காலங்களிலேதான் அது கிடைக்கும். அநேகமாக பயிர் சாகுபடி செய்கிறபோது மானிய விலையிலே அது தரப்படுவதில்லை. கோடைக்காலங்களிலே கொடுக்கிற ஒரு நிலைதான் இருக்கிறது. ஒவ்வொரு வேளாண்மை விரிவாக்க அலுவலகத்துக்கும் கொடுத்து, அதைக் கொடுத்துவிட வேண்டும் என்பார்கள். கோடையிலே கொண்டுவந்து அந்த மருந்தைக் கொடுப்பார்கள். அதை வாங்கி பேசாமல் வைத்துவிடுவோம். சாகுபடி செய்கின்ற போது, அந்த மருந்தை எடுத்து உபயோகிக்கும்போது அது பவர் இல்லாமல் போய்விடுகிறது. ஆகவே, மருந்தை சாகுபடி நேரங்களில் வழங்குவதற்கு மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் முயற்சி எடுக்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அதேபோன்று, ஒரே ஒரு கோரிக்கையை மட்டும் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். வேளாண்மைத் துறையிலே பணியாற்றக்கூடிய வயல் விளக்க அலுவலர்கள், அநேகமாக 10 ஆண்டுக் காலமாக பணியாற்றிக் கொண்டிருக்கிறார்கள். அவர்களுக்கெல்லாம் பதவி உயர்வே இல்லை. அவர்களுடைய படிப்பிற்குத் தகுந்தமாதிரி பதவி உயர்வு தரவேண்டும். அதேபோன்று அவர்களுக்கு குறைந்த சம்பளம்தான் வழங்கப்படுகிறது. 250 ரூபாய்க் குத்தான் அவர்கள் பணியாற்றிக்கொண்டு இருப்பதாக சொல்கிறார்கள். இந்த நேரத்தில் 250 ரூபாய் என்பது குறைவானது. அவர்களுக்கு சம்பளம் உயர்த்தி கொடுக்கவும் இந்த அரசு மறுபரிசீலனை செய்யவேண்டும். மாண்புமிகு அமைச்சர் அவர்களைச் சந்தித்திருக்கிறார்கள் ; மகஜர் கொடுத்து இருக்கிறார்கள். மிகவும் பரிதாபமான நிலைமை. அவர்கள் இரண்டும் கெட்டான் நிலையிலே வாழ்க்கையை நடத்திக்கொண்டு இருக்கிறார்கள். அவர்களுடைய கோரிக்கையை நீங்கள் மறு பரிசீலனை செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொண்டு பேரவை தற்காலிகத் தலைவருக்கு நன்றி கூறி, முடிக்கிறேன். வணக்கம்.

பிற்பகல் 12-20

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. க. அர்ஜுனன்) : அடுத்து, திரு. வி. பி. சந்திரசேகர்.

*'திரு. வி. பி. சந்திரசேகர் : மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, நான் அன்றாடம் வழிபடுகின்ற தமிழகத்தினுடைய காவல் தெய்வம், தமிழகத்தினுடைய முதலமைச்சர் மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்களுக்கு அவர்கள் இருக்கின்ற திசை நோக்கி வணக்கத்தைத் தெரிவித்து,

கார் நடக்கும்
படி நடக்கும்
பாராளும் பண்புடைய
ஏர் நடக்கும் எனில்
இயல் இசை நாடகம் நடக்கும்
சீர் நடக்கும்
திறம் நடக்கும்
திருவரத்து செயல் நடக்கும்
பார் நடக்கும்
படை நடக்கும்
பசி நடக்க மாட்டது

என்கிற பெருமையைப் பெற்ற வேளாண்மை மானியக் கோரிக்கையிலே பேசுகின்ற வாய்ப்பு கிடைத்தமைக்காக நன்றி கூறிக் கொள்கிறேன்.

இன்றைக்கு த் தமிழகத்திலே இருக்கின்ற மக்களிலே எழுபது சதவீதம் பேர் விவசாயத் தொழில் செய்து கொண்டிருக்கிறார்கள். கிட்டத்தட்ட மூன்றே முக்கால் இலட்சம் பேர் என்று குறிப்பிடலாம். பத்தாண்டுக் காலமாக மழை பெய்யாத நிலையிலே காலங்கள் மாறுபட்டாலும் விவசாயிகளுடைய நிலை ஒரே மாதிரியாகத்தான் இருக்கிறது என்பதை நினைவூட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மழை பெய்யாத காரணத்தினாலே தண்ணீர் வரத்து இல்லாத அணைக்கட்டுகள், தண்ணீரே பார்க்காத குளம், குட்டைகள், ஈரப் பசையே இல்லாத கிணறுகள், இப்படிப்பட்ட நிலையிலே இன்றைக்குக் கடந்த ஒன்றரை மாத காலமாக எங்கள் கொங்கு மண்டலத்திலே பெய்கின்ற மழையின் காரணமாக அணைகள் நிரம்பி வழிகின்றன; குட்டைகள், குளங்களிலே தண்ணீர் தேங்குகின்றன; கிணற்றுக்கு நீர் வரத்து வந்திருக்கிறது. கொங்கு மண்டலத்திலே இருக்கின்ற மக்கள அதற்கெல்லாம் காரணம், இன்றைக்கு மகராசி அவர்கள் ஆட்சியிலே மாதம் மும்மாரி பெய்கிறது என்கின்ற பெருமையோடு இன்று முதலமைச்சருக்குப் பின்னால் இப்பொழுது கொங்கு மண்டலமே நின்று வணங்குகிறது; வாழ்த்துகிறது.

இன்றைக்கு விவசாயிகளுடைய பிரச்சினையை எடுத்துக் கொண்டாலேயே முதலிலே நமக்கு நினைவுக்கு வருவது, விவசாயிகளுடைய கூட்டுறவுக் கடன்கள் தான் என்பது உங்களுக்கு நன்றாகத் தெரியும். இன்றைக்கு இருக்கின்ற நிதி நிலையிலே



கூட்டுறவுக் கடன்களைத் தள்ளுபடி செய்யுங்கள் என்று முதலமைச்சரைக் கேட்பதற்கு எங்களுக்கு மனம் வரவில்லை. நாங்கள் முதலமைச்சரவர்களைக் கேட்டுக்கொள்வதெல்லாம், எங்களைப் போன்ற விவசாயிகளுடைய கூட்டுறவுக் கடன்களை குறைந்தது ஐந்து ஆண்டுகளுக்காவது வசூலிலேயிருந்து தள்ளி வைக்க வேண்டுமென்று இந்த நேரத்திலே பணிவோடு கேட்டுக் கொள்கிறேன். அப்படி ஐந்தாண்டுகள் தள்ளி வைக்கின்ற பொழுது ஐந்தாண்டுகள் விவசாயம் செய்து அந்தக் கூட்டுறவுக் கடன்களையும், அதற்குச் சேர்த்து வட்டியும் சேர்த்து கட்டி விடுவோம் என்று நாங்கள் சொல்லவில்லை. இன்றைக்கு இருக்கின்ற முதலமைச்சரவர்கள் மிகுந்த திறமைசாலி என்று மக்கள் சொல்லிக் கொள்கிறார்கள். வருகின்ற ஐந்தாண்டுகளுக்குள்ளாக, தொழிலிலே முதன்மை பெற்ற மாநிலமாகத் தமிழகத்தை மாற்றிக் காட்டுவேன் என்று அறிவித்திருக்கிறார்கள். இப்படிப்பட்ட திறமையான முதலமைச்சர் இருக்கின்ற நேரத்திலே நிதிநிலையிலே ஐந்து ஆண்டுகளுக்குள்ளாக ஒரு நிறைவைப் பெற்று விடுவோம் என்ற நம்பிக்கையிலே இப்படி ஐந்தாண்டுகள் கழித்ததற்குப் பின்னாலாவது இப்படிப்படட ஏழை விவசாயிகளுடைய கடன்களைத் தள்ளுபடி செய்ய முதலமைச்சரவர்கள் முன்வர வேண்டுமென்று இந்த நேரத்திலே கூறிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மழை பெய்கிறது ;
ஏர் இடுவான் ;
விதை இடுவான் ;
பயிர் வளர்ப்பான் ;
அறுவடை செய்து களம் சேர்ப்பான் ;

களம் சேர்க்கின்ற பொருள்களுக்குச் சரியான விலை கிடைக்காத காரணத்தாலே அந்த விளை பொருளை விற்க முடியாமல் பரிதவிப்பான்.

பிற்பகல் 12-25

இப்படிப்பட்ட நிலையிலேதான் இன்றைக்கு விவசாயி இருந்து கொண்டிருக்கிறான். விவசாயிகளுடைய நிலைமையை எண்ணிப் பார்த்து, அவர்களுக்கு என்று— அந்த விளைபொருள்களுக்கு ஒரு விலை நிர்ணயம் செய்ய வேண்டுமென்று இந்த அரசாங்கத்தை நான் கேட்டுக் கொள்கிறேன்.

சர்க்கரை ஆலைகளுக்குக் கரும்பு அனுப்புவது சம்பந்தமாக அமைச்சரவர்களுக்கு நான் ஒரு விண்ணப்பம் கொடுத்திருந்தேன். பல்வேறு மாநிலங்களில் கரும்புக்குக் கொடுக்கிற விலை அதிகமாக இருக்கிற காலத்திலே, தமிழகத்திலே இருக்கிற விவசாயிகளுக்கு, கரும்புக்குக் கொடுக்கிற தொகை மற்ற மாநிலங்களைக் காட்டிலும் குறைவாக இருந்து கொண்டிருக்கிறது. இப்படிப்பட்ட

சூழ்நிலையிலே, அடுத்த மாநிலங்களினுடைய அருகிலே இருக்கிற
—அதாவது, கேரள மாநிலத்தினுடைய அருகிலே இருக்கிற
தமிழக மக்கள் கரும்பு விளைவிக்கிறார்கள் ; அந்த மாநிலத்திலே
இருக்கிற மக்களும், தாங்கள் பயிர்செய்த கரும்பை சர்க்கரை
ஆலைக்கு அனுப்புகிற நேரத்திலே, அப்படி கரும்பு அனுப்புகிற
போக்குவரத்துச் செலவை, பக்கத்திலே இருக்கிற கேரள மாநிலத்
திலே இருக்கிற சர்க்கரை ஆலை, அந்த விவசாயிகளுக்கு ஆலையி
லேயே கொடுத்து விடுகிறது. ஆனால், தமிழகத்தைப்
பொறுத்தமட்டிலே, அந்த விவசாயிகள் அனுப்புகிற கரும்பிற்கான
வாடகையை அந்த விவசாயிகளினுடைய கரும்பிலே கிடைக்
கக் கூடிய வருமானத்திலிருந்தே பிடித்துக் கொள்கிறார்கள்.
இப்படிப்பட்ட சூழ்நிலை இருக்கிறபோது, விவசாயிகள்
பக்கத்து மாநிலத்திலே இருக்கிற சர்க்கரை ஆலைகளுக்கு, கரும்பு
அனுப்புவதற்கு விருப்பப்படுகிறார்கள் என்கிற கருத்தை
இங்கே சொல்லியிருக்கிறார்கள். ஆகவே, நம்முடைய தமிழ
கத்திலே இருக்கிற சர்க்கரை ஆலைகளை-- கூட்டுறவுச் சர்க்கரை
ஆலைகளே-- விவசாயிகளுக்கு அந்தப் போக்குவரத்துச் செலவை
மற்ற மாநிலங்களைப் போல, கொடுக்க முன்வர வேண்டுமென்று
இந்த நேரத்திலே கேட்டுக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.
இன்றைக்கு விவசாயிகள் விளைவிக்கின்ற விளை பொருட்களை,
ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்கள் மூலமாக விற்பனை செய்
கிறார்கள்.

இன்றைக்கு அரசாங்கம், விவசாயிகள் விளைவிக்கக்கூடிய
தேங்காய், வெங்காயம், எள், சோளம், கம்பு, ராகி ஆகிய பயிர்
களுக்கு 'செஸ்' விதித்திருக்கிறார்கள். அப்படி 'செஸ்' விதிக்
கிற நேரத்திலே, இன்றைக்கு அந்த வரியைக் கட்ட வேண்டிய
நிலை வியாபாரிகளிடம் இருந்து கொண்டிருக்கிறது. எங்கள்
பகுதியிலே ஒன்று சொல்வார்கள ; வியாபாரிகளுக்கு ஏற்படுகிற
நஷ்டம், விவசாயிகளுடைய தலையிலே என்று சொல்வார்கள்.
அப்படி கட்ட வேண்டிய 'செஸ்'-ஐ நினைவுப்படுத்து. விவசாய
களிடமிருந்து விளை பொருள்களின் விலையைக் குறைத்து, வாங்
கும் நிலைமைதான் இருந்து கொண்டிருக்கிறது. ஆகவே, விவ
சாயிகளுக்கு நஷ்டம். அப்படி வசூலிக்கப்படுகிற அந்த 'செஸ்'
-ஐ அரசாங்கத்திற்கு செலுத்துகிறார்களா என்று பார்த்தால்,
அதுவும் கிடையாது. அங்கே இருக்கிற அதிகாரிகள் கையூட்டுப்
பெறுவதன் மூலமாக அப்படி அந்தப் பொருட்களுக்கான 'செஸ்'
வசூலிக்கப்படாத நிலைமை இருந்து கொண்டிருக்கிறது.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை.)

ஆகவே, விவசாயிகளுக்கு நஷ்டம் ; வியாபாரிகளுக்கு
இலாபம் ; அரசாங்கத்திற்கு நஷ்டம். இப்படிப்பட்ட சூழ்நிலை
மாற வேண்டும் என்று சொன்னால், விவசாயிகளுக்குப் போடப்
பட்டிருக்கிற அந்த 'செஸ்' அறவே நீக்கப்பட வேண்டும் என்று
இந்த அரசைக் கேட்டுக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்





அதேபோல, விளைபொருட்கள் — விவசாயிகளுக்குக் கொடுக்
கப்படுகிற விவசாய கருவிகள், விளைச்சலின்போது அடிக்கப்படுகிற
பூச்சி மருந்துகள், உரம் முதலியவை மானிய விலையிலே
கொடுக்கப்படுகின்றன. விவசாயக் கருவிகளும் மானிய விலை
யிலே கொடுக்கப்படுகின்றன. இப்படி கொடுக்கப்படுகிற அந்தப்
பொருட்கள், உரிய நேரத்திலே விவசாயிகளுக்குக் கிடைத்தால்
தான், அவை உரிய முறையிலே விவசாயிகளுக்குப் பயன்படும்.
ஆகவே, உரிய நேரத்திலே கொடுக்க வேண்டுமென்று இந்த
நேரத்திலே கேடடுக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதேபோல், மின்சார வாரியத்திலே பதிவு செய்யப்பட்டி
ருக்கிற இணைப்பு விண்ணப்பதாரர்களுடைய எண்ணிக்கை,
இன்றைக்கு 5 இலட்சத்தையும் தாண்டிப் போய்க்கொண்டிருக்
கிறது. இப்படிப்பட்ட சூழ்நிலையிலே, ஆண்டுக்கு 40 ஆயி
ரம் 'கனெக்ஷன்' கொடுக்கிறார்கள் என்று சொன்னாலும்கூட,
கிட்டத்தட்ட கி.பி. 2,000-ஆம் ஆண்டுக்குப் பின்னால்தான்
இன்றைக்குக் கொடுக்கப்பட்டிருக்கிற விண்ணப்பங்களின் மீது
விவசாயிகளுக்கு மின் இணைப்புக் கொடுக்க முடியும் என்ற
நிலைமை இருந்து கொண்டிருக்கிறது. பக்கத்திலே இருக்கிற
கர்னாடக அரசை எடுத்துக் கொள்வோமேயானால், ஒரு
விண்ணப்பதாரர் விண்ணப்பம் கொடுத்தவுடனேயே, கிட்டத்
தட்ட 10 நாட்களிலே, விவசாயிகளுக்கு மின்னிணைப்பு கொடுக்
கப்படுகிறது. அப்படிப்பட்ட நிலை, இந்த தமிழகத்திலே அமைய
வேண்டும் என்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல, பயிர் இன்சூரன்ஸ் திட்டம், இந்த அரசாங்கத்
தால் கொண்டு வரப்பட்டிருந்தாலும்கூட, அது பல்வேறு பகுதி
களிலே செயல்படுத்தப்படுவதில்லை. இன்றைக்கு, என் பகுதியை
எடுத்துக் கொள்வோமானால், அங்கே இருக்கிற தென்னை மரங்
கள் திடீரென்று நோய் தாக்குதலுக்குள்ளாகி, பல வருட காலம்
விவசாயியால் வளர்க்கப்பட்ட அந்த தென்னை மரங்கள்—கருகி
விடுகிற நிலைமையைப் பார்க்கிறோம். எனவே, நான் சொல்லுவ
தெல்லாம், இப்படிப்பட்ட இன்சூரன்ஸ் திட்டத்தை அமல்படுத்து
கிறபோது, தென்னை மரங்களுக்கு இவ்வளவு என்று தொகையை
நிர்ணயம் செய்து, அதை விவசாயிகளிடமிருந்து நீங்கள் பெற்றுக்
கொள்ளுங்கள். இப்படி நோயினால் பாதிப்பு ஏற்பட்டு, அவை
அழிகின்ற நேரத்திலே, இந்த இன்சூரன்ஸ் தொகையின் மூலமாக
உடனடியாக அதற்கு நிவாரணம் கிடைக்கிறபோது, பாதிக்கப்
பட்ட விவசாயிகள் நிச்சயமாக பலன் அடைவார்கள் என்பதை
இந்த நேரத்திலே சொல்லிக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.
(மணியடிக்கப் பெற்றது) . . . ஒரு நிமிடம் , . . .

அதேபோன்று, கரும்பு, பருத்தி, தேங்காய் போன்ற பொருட்
களுக்கான தொழிற்சாலைகள் அமைக்கப்படவேண்டும். நான்
இங்கே ஒன்றை நினைவுக் கூற கடமைப்பட்டிருக்கிறேன். ஒரு

பகுதியிலே ஒரு தொழிற்சாலை அமைக்க வேண்டுமென்று சொன்னால், அந்தப் பகுதியிலே விளைகின்ற கச்சாப் பொருட்களைக் கொண்டு, அந்தத் தொழிற்சாலை நல்ல முறையிலே இயங்குவதற்கான இடத்திலே அந்தத் தொழிற்சாலை அமைக்கப்பட வேண்டும். நான் ஒரு உதாரணத்திற்குச் சொல்லவேண்டுமென்று சொன்னால், எங்கள் பொள்ளாச்சிப் பகுதியிலே சோயா எண்ணெய் தயாரிக்கின்ற தொழிற்சாலை அமைத்திருக்கின்றார்கள். அந்தச் சோயா எண்ணெய் தயாரிப்பதற்கு, சோயா பீன்ஸ் அந்தப் பகுதியிலே விளைகிறதா என்றால், அங்கே கிட்டத்தட்ட ஐந்து ஏக்கருக்குக் கூட சோயா பீன்ஸ் விளைவது இல்லை. அதற்குத் தேவையான சோயாவை வட மாநிலங்களிலிருந்து பெற்றுக் கொண்டிருக்கிறார்கள்.

பிற்பகல் 12-30

அதனால் ஒரு தொழிற்சாலை அமைந்தாலும் கூட, அந்தத் தொழிற்சாலை சரியான முறையில் நடைபெற முடியாத நிலையிலே— அன்றைக்குக்கூட மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னார்கள் அதிகப்படியான எண்ணெயை அங்கு உற்பத்தி செய்ய முடியவில்லை என்று சொன்னார்கள்— கிட்டத்தட்ட 1½ வருட காலமாக அங்கே அந்தத் தொழிற்சாலை நடந்து கொண்டிருக்கிறது. அங்கே அந்த எண்ணெய் தயாரிக்கப்படுவதைப் பற்றித் தெரியவில்லை. அதனுடைய விலை நிர்ணயம் எதுவும் செய்யப்படவில்லை என்று தெரிவித்திருக்கிறார்கள். ஆகவே, எங்கள் பகுதியிலே, கரும்பு விளைகிறது.; பருத்தி விளைகிறது; தேங்காய் விளைகிறது. ஆகவே, அப்படிப்பட்ட மூலதனப் பொருள்களைக் கொண்டு செயல்படுகின்ற தொழிற்சாலைகளை எங்கள் பகுதியில் அமைத்துத்தர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன் (மணியடிக்கப் பெற்றது). ஒரே நிமிடம் . . . . . அதே போல நகர்ப்புறத்திலே இருக்கின்ற விவசாயிகள்— அன்றைக்கு அமைச்சர் அவர்கள் சொன்னார்கள்— விவசாயி பம்பு செட்டுகளுக்கு முழுவதுமாக இலவச மின்சாரம் தருகிறோம் என்று. நான் இங்கே ஒன்றைச் சொல்லிக் கொள்கிறேன் நகர்ப் பகுதிகள் அமைகின்றபோது, அதற்குப் பரப்பளவு காரணமாகப் பிரிக்கப்பட்டாலும், எங்கள் பகுதிகள் எல்லாம் கிராமப் பகுதிகளாக இருந்தாலும் கூட, நகராட்சிப் பகுதியுடன் இணைந்து விட்டதன் காரணமாக, அங்கே விவசாயிகள் அவர்கள் பயன்படுத்துகின்ற பம்பு செட்டுகளுக்கான மின்சாரக் கட்டணம் முழுவதையும் இன்றைக்கும் செலுத்திக் கொண்டிருக்கிறார்கள். அங்கே அவர்களுக்குக் கொடுக்கப்படுகின்ற மின்சாரம் முழுக்க முழுக்க விவசாயத்திற்குப் பயன்படுத்தப்படுகிறது. அப்படியிருந்தும் கூட, விவசாயத்திற்குக் கொடுக்கப்படுகிற அந்த மின்சாரத்திற்கு இன்றைக்கும் நாங்கள் கட்டணம் செலுத்திக் கொண்டிருக்கிறோம். ஆகவே, அமைச்சர் அவர்கள் அந்த



விவசாயத்திற்குக் கொடுக்கின்ற மின்சாரம், அது கிராமமாக இருந்தாலும் சரி, அல்லது நகர்ப்புறமாக இருந்தாலும் சரி, இலவச மின்சாரம் வேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக் கொள்கிறேன்.

அதைப்போல, எங்கள் பகுதியில் புதிதாக வாய்க்கால்கள் வெட்டப்பட்டிருக்கின்றன. பல ஆண்டு காலமாக அதிலே தண்ணீர் வருவது கிடையாது. அந்த வாய்க்கால்கள் வருகின்ற காரணத்தாலே, விவசாயிகள் தாராளமாகக் கடனைப் பெற்று விட்டார்கள். நிச்சயமாகத் தண்ணீர் வரும், அதிலே வருகின்ற பொருள்களை வைத்து அந்தக் கடனை அடைத்து விடலாம் என்று விவசாயிகள் கடனைப் பெற்று விட்டார்கள். ஆனால் வாய்க்காலில் தண்ணீர் வரவில்லை. ஆகவே, விவசாயிகள் என்ன செய்து கொண்டிருக்கிறார்கள் என்று சொன்னால், எங்கள் பகுதியிலே வாய்க்கால்கள் வெட்டப்பட்டிருக்கின்றன. ஆகவே, என்றைக்காவது ஒருநாளைக்கு அதிலே தண்ணீர் வரும். அப்படிப்பட்ட நிலங்களை நீங்கள் இன்றைக்கு வாங்குவீர்களேயானால் நல்ல விளைச்சல் எடுக்கலாம். ஆகவே, இந்த நிலத்தை வைத்துக் கொள்ளுங்கள் என்று அந்த வாய்க்காலைக் காட்டி அந்த நிலங்களை அதிக விலைக்கு விற்று தங்களுடைய கடனை அடைத்துக் கொண்டிருக்கிறார்கள் என்பதை இந்த நேரத்திலே கூறிக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். அதேபோல, இப்படிப்பட்ட . . . . (மணியடிக்கப் பெற்றது).

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** அதிக நேரம் பேசிவிட்டீர்கள். திரு. பாப்பா சுந்தரம் . உறுப்பினர்கள் இப்படி நேரம் தாழ்த்தினால் மத்தியானம் மூன்று மணி ஆகிவிடும்.

**திரு. வி. பி. சந்திரசேகர் :** இந்த நிலை மாறவேண்டுமென்று சொன்னால், அரசாங்கத்தால் அங்கீகரிக்கப்பட்ட ஆனைமலையாறு திட்டம், நல்லாறு திட்டம் ஆகியவற்றை இந்த அரசு செயல்முறைப் படுத்த வேண்டும். அதன் காரணமாக, எங்கள் பகுதியிலே தண்ணீர் வரத்து அதிகமாக வரவேண்டிய நிலை உருவாக வேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டு, வாய்ப்பளித்த துணைத் தலைவருக்கு நன்றி கூறி, விடை பெறுகிறேன். நன்றி வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** திரு. அ. பாப்பா சுந்தரம்.

**திரு. அ. பாப்பா சுந்தரம் :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த வீவசாய மானியத்தின் மீது பேச வாய்ப்பளித்த உங்களுக்கும், இந்த மாமன்றத்திலே பல ஆன்றோர்களும், சான்றோர்களும் இருந்தாலும்கூட படித்தவர்கள் இருந்தாலும் கூட, என்னைப் போன்ற சாதாரண

[திரு. அ. பாப்பா சுந்தரம்.] [1991 செப்டம்பர் 24

விவசாயினைய இரண்டாவது முறையாகச் சட்டமன்ற உறுப்பினராக ஆக்கிய எங்களுடைய காக்கும் தெய்வமாகிய புரட்சித் தலைவி அவர்களுக்கும், என்னைத் தேர்ந்தெடுத்த குளித்தலை வாக்காளப் பெருங்குடி மக்களுக்கும் நன்றியை முதலிலே கூறிக் கொண்டு, இந்த வேளாண்மைத் துறை மானியத்தின் மீது என்னுடைய உரையைத் துவங்குகின்றேன்.

பிற்பகல் 12-35

இன்று 607 கோடி ரூபாய் அளவுக்கு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் அறிவித்திருக்கிறார்கள். சென்ற ஆண்டைவிட, 1990-91-ல் 438 கோடியாக இருந்ததை, இது 607 கோடியாக அறிவித்திருப்பதை நான் முதலிலே வரவேற் கிறேன். தமிழகத்திலே பல துறைகள் இருந்தாலும், விவசாயம் தான் பெரிய துறை என்பதை நீங்கள் எல்லாம் நன்று அறிவீர்கள். இந்தத் துறையிலே மிகப்பெரிய மனது வைத்து புரட்சித் தலைவி அவர்கள் இவ்வளவு பணத்தை ஒதுக்கியிருக்கிறார்கள். தமிழகத் திலே, குறிப்பாக கிராமப்புறங்களிலே கிட்டத்தட்ட 65 சதவிகித மக்கள் விவசாயத்தையும், அதைச் சார்ந்த தொழிலையும் நம்பித் தான் வாழ்கிறார்கள் என்பதையெல்லாம் நீங்கள் அறிவீர்கள். அவர்கள் எல்லாம் புரட்சித் தலைவி அவர்கள் அரசை ஆதரித்து வாக்களித்தார்கள் என்பது நமக்கு நன்றாகப் புரியும். ஆகவே அந்த வகையில்தான் விவசாய மக்களைப் பெரிதாக மதித்து இவ்வளவு பெரிய தொகை ஒதுக்கி இருக்கிறார்கள். ஆகவே அதை இங்கே வரவேற்கக் கடமைப்பட்டிருக்கிறேன். விவசாயிகள் அதிகமாக, பெருமையாக வாழ்ந்தவர்கள் என்பதை நீங்கள் எல்லாம் அறிந்தவர்கள். ஆனால் விவசாயிகள் இன்று இனாமா கப் பலவற்றைக் கேட்கிறார்கள். மின்சாரம் கேட்கிறார்கள். கூட்டுறவு வங்கியில் வாங்கிய கடன்களைத் தள்ளுபடி செய்ய வேண்டும் என்று கேட்கிறார்கள். அதை எல்லாம் நீங்கள் அறி வீர்கள். அதற்குக் காரணம் உங்களுக்குத் தெரியும்.

விவசாயிகளாக வாழ்ந்தவர்கள் மிகப் பெருந்தன்மையாக வாழ்ந்தவர்கள். இன்று இயற்கை சீற்றத்தாலும், செயற்கை விளைவுகளாலும் இந்த விவசாயத் துறை மிகவும் நலிந்திருக்கிறது என்பதை நீங்கள் அறிந்துகொள்ள வேண்டும். இயற்கை சீற்றத் தால் இன்று சில பகுதிகளில் வெள்ளங்கள் ஏற்படுவதாலும், சில பகுதிகளில் மழை இல்லாத காரணத்தாலும் விவசாயிகள் மிகவும் நலிந்து இருக்கிறார்கள். செயற்கை விளைவுகள் பற்றி யும் நீங்கள் அறிவீர்கள். விவசாயத்திற்கான இடுபொருட்களின் விலையேற்றம், அவர்கள் உற்பத்தி செய்த பொருட்களின் கட்டுப் படியாகாத விலை. ஆகிய இவை எல்லாவற்றையும் மனதில் வைத்துத்தான் இங்கே புரட்சித் தலைவி அவர்கள் இந்த விவசாய மானியத்தில் சில சலுகைகளை அளித்திருக்கிறார்கள். விவசாயி



991 செப்டம்பர் 24] [திரு. அ. பாப்பா சுந்தரம்]

ளுக்கு சலுகைகள் அளிப்பதுடன் விவசாயிகளுக்குக் கட்டுப்படி ரான விலை தரவேண்டும் என்றும் இந்த நேரத்தில் நான் கேட்டுக் கொள்கிறேன்.

விவசாயத்திற்கு சம்பந்தம் இல்லாத மத்திய அரசினர் விலை நிர்ணயம் செய்கிறார்கள். ஆகவே இந்த விவசாய விளை பொருட்களுக்கு விலை நிர்ணயம் செய்யும் உரிமை மாநில அரசுக்கே இருக்கவேண்டும் என்று இந்த நேரத்தில் கேட்டுக்கொள் கிறேன். காரணம் இங்கே இருக்கிற விளைபொருட்கள், தட்ப வெட்ப நிலை, இங்கே இருக்கிற தொழிலாளர்களின் கூலி உயர்வு இவற்றை எல்லாம் மனதில் கொண்டு இந்த அரசே விலை நிர்ணயம் செய்யவேண்டும் என்று இந்த நேரத்தில் நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதே போல் கூட்டுறவுத் துறையில் விவசாயிகளுக்குக் கடன் வழங்குகிறபோது அதிகமான வட்டி வசூல் செய் கிறார்கள் என்பதை உங்கள் மேலான கவனத்திற்குக் கொண்டு வரக் கடமைப்பட்டு இருக்கிறேன். விவசாயிகள் சில நேரங் களில் தங்கள் கையிலே பணம் இல்லாத நேரத்தில் அவர் களுடைய நகைகளை அங்கே கூட்டுறவு வங்கிகளிலே வைக் கிறபோது 16 சதவீதம் அதாவது கிட்டத்தட்ட வெளியே வாங்குகிற அளவுக்கு வட்டி வாங்குகிறார்கள். ஆகவே, கூட்டுறவு வங்கிகளில் வாங்கப்படும் அந்த வட்டி சதவீதத்தை குறைக்க வேண்டும் என்று மிகவும் தாழ்மையோடு இந்த நேரத்தில் நான் கேட்டுக்கொள்கிறேன்.

இங்கே பேசியவர்கள் பொதுப்பணித் துறையையும், விவசாயத் துறையையும் ஒன்றாக இணைத்துப் பேசினார்கள். அது மிக, மிக சாலப் பொருத்தமாகும். பொதுப்பணித் துறையிலே பல குளங்கள் எல்லாம் வெட்டப்பட்டிருக்கின்றன. அதே போல் சிறு கசிவு நீர்க் குட்டைகள் வெட்டப்பட்டி ருக்கின்றன. அந்தக் குளங்கள் வெட்டப்பட்டிருக்கிறதே, அந்தக் குளங்களால் எவ்வளவு பலன் அடைந்திருக்கிறோம் என்பதை யாரும் ஆராய்ந்துப் பார்க்கவில்லை. அந்தக் குளங் கள் இப்போது ஏதோ கான்ட்ராக்ட் வேலைக்காகவும், அங்கே இருக்கின்ற மக்கள் இதை ஏதோ சிறிது கால வேலை வாய்ப்பாகவும், கருதுகிற அளவில்தான் இருக்கிறதே தவிர அந்தக் குளங்களில் தண்ணீர் தேக்கப்பட்டு அந்தக் குளங் களால் எவ்வளவு நிலங்களுக்குத் தண்ணீர் போகிறது என்பதை எல்லாம் நாம் ஆராயவில்லை. எனவே குளங்களை வெட்டு வதால் அர்த்தம் இல்லை. குளங்களுக்கு வருகிற வரத்து வாரிகளை அதாவது குளங்களுக்கு எங்கேயிருந்து தண்ணீர் வருகிறதோ அந்த வாரிகளை தூய்மைப்படுத்தி அந்த வாரி களில் உள்ள ஆக்கிரமிப்புகளை அகற்றி அந்தக் குளங்களுக்குத் தண்ணீர் வரச் செய்யவேண்டும். அப்படி குளங்களுக்குத்

தண்ணீர் வரச் செய்தால்தான் பக்கத்தில் இருக்கிற அந்தக் குளங்கள் எல்லாம் பலன் பெற்று அந்தக் குளங்களின் மூலம் நல்ல சாகுபடி செய்வதற்கு ஏற்ற வகையில் விவசாயிகளுக்கு நல்ல ஏதுவான சூழ்நிலை இருக்கும் என்பதை இந்த நேரத் தில் நான் சொல்லிக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

விவசாயிகள் நன்றாக வாழ்ந்தவர்கள். அவர்கள் யாரி டமும் கேட்டுப் பழக்கம் இல்லாதவர்கள். அவர்களுக்கு நீங்கள் மானியம் கொடுப்பதை விட அவர்களுக்கு நல்ல விலையை உயர்த்தித் தரவேண்டும் என்று இந்த நேரத்தில் நான் கேட்டுக்கொள்கிறேன்.

இன்னொன்றையும் நான் இந்த நேரத்தில் சொல்லிக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். விவசாயிகள் வீட்டுப் பிள்ளை என்றால்— நான் தமாஷாகச் சொல்லவில்லை, உண்மை நிலையைத்தான் சொல்கிறேன். விவசாய வீட்டுப் பிள்ளை என்றால்— பெண் கொடுக்கக்கூட அவர்கள் சிறிது தயக்கம் காட்டுகிறார்கள். அந்த அளவுக்கு இன்று அவர்கள் நலிந்து இருக்கிறார்கள். விவசாயி சென்று பெண் கேட்டால் கூட 'நீ என்ன வேலையில் இருக்கிறாய்' என்றுதான் கேட கிறார்கள். எனவே விவசாயிக்கு பெண் கொடுக்க யாரும் முன் வருவதில்லை. முன்பெல்லாம் ஒரு காலத்தில் நீங்கள் எவ்வளவு ஏக்கர் நிலம் வைத்திருக்கிறீர்கள் என்று கேட டார் கள். அப்படி நிலம் வைத்திருந்த விவசாயிகள் எல்லாம் பெருமையாக மதிக்கப்பட்டார்கள். இன்று அந்த நிலை மாறி அந்தத் தொழில் நசுங்கி வருவதற்கு இதை ஒரு உதா ரணமாக நான் குறிப்பிட்டுக் காட்டக் கடமைப்பட்டிருக் கிறேன்.

அதே போல் உரிய காலத்தில் விவசாயிகளுக்கு வேண்டிய பொருட்கள் மற்றும் பூச்சிக் கொல்லி மருந்துகள் தரப்பட வில்லை என்று பல உறுப்பினர்கள் சொன்னார்கள். அது மிக மிக உண்மையான நிகழ்ச்சியாகும். சில நேரங்களில் விவசாயிகள் சென்று கேட்கிறபோது, இல்லை தீர்ந்துவிட்டது என்று சொல்கிறார்கள். சில காலங்களில் நமக்குத் தேவை யான மருந்துகள் இருக்காது. எவ்வளவுக்கெவ்வளவு மோசமான மருந்துகள் இருக்குமோ அந்த மருந்துகள் தான் இன்றையதினம் அந்தக் கிடங்குகளில் இருக்கின்றன. நான் மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்களிடத்திலும், இங்கே இருக்கிற வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்களிடத்திலும், சர்க்காரால் அங்கீகரிக்கப்பட்ட அத்தனை நல்ல மருந்துகளும் விவசாயக்கிடங்குகளில் இருக்க ஆவன செய்ய வேண்டும் என்று நான் இந்த நேரத்தில் கேட்டுக்கொள்ளக் கடமைப் பட்டிருக்கிறேன்.





அதே போல, கரும்பு விலை பற்றி இங்கே அதிகமாகச் சொன்னார்கள். நான் ஒன்றைக் குறிப்பிட விரும்புகிறேன். உங்களுக்கு நன்றாகத் தெரியும். உரத்தின் விலையும், கூலித் தன்மையும் மற்ற சாதனங்களுக்கு நாம் செய்யும் செலவுகளை எண்ணிப் பார்க்க வேண்டும். 30 சதவிகிதம் இப்போது விலைவாசி உயர்ந்திருக்கிறது. ஆகவே சென்ற ஆண்டு நம் மாநிலத்திலே கரும்பு விலை 290 ருபாயாக நீங்கள் அறி வித்திருந்தீர்கள். இந்த ஆண்டு 30 சதவிகிதம் உயர்த்தி னால் கூட ரூ. 420-க்கு வரும். ஆகவே, இந்த ஆண்டு புரட்சித் தலைவி மத்திய அரசை வற்புறுத்தி நீங்களும் சேர்த்து கரும்புக்கு 8.5 கட்டுமானத் திட்டத்திற்கு நீங்கள் 400 ரூபாய்க்குக் குறையாமல் அறிவிக்கவேண்டும் என்று இந்த மாமன்றத்திலே கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக் கிறேன்.

பிற்பகல் 12-40

அதே போல எங்கள் மாவட்டத்தில் திருச்சியிலே சென்ற ஆட்சிக் காலத்திலே நான் கூட பலமுறைகள் வாதாடி கேட்டேன். எங்கள் குளித்தலை தொகுதியிலே ஒரு விதை ஆராய்ச்சிப் பண்ணை இருக்கிறது. அந்த ஆராய்ச்சிப் பண்ணைக்கு அருகே ஆயிரம் ஏக்கர் நிலம் வேண்டுமென்றா லும் தருகிறோம். மலிவு விலையிலே தருகிறோம் என்றும் நீங்கள் அங்கே ஒரு விவசாயப் பல்கலைக்கழகம் ஆரம்பிக்க வேண்டும் என்று கேட்டேன். அன்று இருந்த நிலையிலே, அன்று இருந்த முதல் அமைச்சர் தொகுதியாக இருந்த காரணத்தினாலே, அங்கே ஒரு முக்கிய திராவிட முன்னேற்றக் கழகம் என்ற காரணத்தினாலே அந்த வேளாண்மைப் பல்கலைக்கழகம் லால்குடியிலே மாற்றி அமைக்கப்பட்டது. அந்த லால்குடியிலே இருக்கும் அந்த பல்கலைக்கழகம் எப்படி இருக்கிறது என்பதை நீங்கள் எண்ணிப்பார்க்க வேண்டும். அந்தப் பல்கலைக்கழகத்திற்குச் சென்ற மாணவர்கள் சரியாகப் பயிற்சி பெறவில்லை. அங்கே சரி யான கட்டடம் இல்லாமல் ஏதோ ஒரு ஷெட் போல போட்டு அந்த பல்கலைக்கழகம் இயங்கிக் கொண்டிருக்கிறது.

அங்கே வாழை ஆராய்ச்சி மையம் என்று வைத்திருக்கின்றார் கள். அந்த ஆராய்ச்சி மையம் சரியாக அங்கே செவ்வனே தன்னுடைய செயல்பாடுகளை செய்யவில்லை. ஆகவே அந்த வாழை ஆராய்ச்சி மையத்தை மாற்றி வாழை அதிகமாக விளைகின்ற எங்கள் குளித்தலைப் பகுதிக்கு மாற்றித் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதைப்போலவே, மணப்பாறைக்கு குடிநீர்த் திட்ட செலவிற்கு உலக வங்கியோடு 6 கோடி ரூபாயில் ஒரு திட்ட த்தில் ஒரு செயல்பாடு தொடக்கத்தில் இருக்கிறது. அதை

[திரு. அ. பாப்பா சுந்தரம்] [1991 செப்டம்பர் 24

விரைவுப்படுத்த வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.
நம் மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் அவர்களிடம்
நான் கேட்டுக்கொள்வதெல்லாம், இந்த நிலையிலே லாரிகள்ல்
வரும் தண்ணீர் வெள்ளத்தால் பாதிக்கப்பட்டு சில இடங்
களில் கஷ்டப்படுவதால் அந்த லாரிகளை சீரமைத்துக்
கொடுக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

மணப்பாறை பகுதியிலே சுற்றுப்பகுதியில் 40 கிலோ
மீட்டர் அளவுக்கு அங்கே எந்தவிதமான கல்லூரியும் இல்லை.
50 கிலோ மீட்டர் அளவுக்கு ஒரு கல்லூரி இல்லாத காரண
த்தினாலேயே அங்கே ஒரு கல்லூரி ஏற்படுத்தித் தர
வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

எங்கள் சோளமலைப் பகுதியிலே நான் முன்பே சொன்னது
போல பல பெரிய குளங்கள் இருக்கின்றன. சமுத்திரம்,
வரவனூார், பூதலூர் போன்ற இடங்களிலே பெரிய குளங்கள்
இருக்கின்றன. அந்த குளங்களைச் சீர்படுத்தி அந்தத்
தண்ணீர் அதில் தங்குவதற்கு ஏற்ப வரத்துக் கால்வாய்களை
வெட்டிச் சீர் செய்யவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்
கிறேன்.

இன்னும் ஒன்றே ஒன்று சொல்லிக் கொள்கிறேன்
நம்முடைய புரட்சித் தலைவி ஆட்சியிலே பல்வேறு நிகழ்ச்சி
களைப் பார்க்கிறோம். இங்கே அரசு சார்பிலே கலைஞர்
களுக்கு பரிசு கொடுக்கிறார்கள். போலீஸ் துறைக்கு பரிசு
கொடுக்கிறார்கள். இன்னும் விளையாட்டுத் துறையில்
உள்ளவர்களுக்கு, அந்த வீரர்களுக்கு பரிசு கொடுக்கிறார்கள்.
ஆசிரியர் பெருமக்களுக்கு பரிசு கொடுக்கிறார்கள். அந்த
வகையிலே சிறந்த விவசாயிகளுக்கு என்று தேர்ந்தெடுத்து
மாநில அளவிலே சிறந்த விவசாயிக்குக் கொடுக்கவேண்டும்.
அதேபோல் மாவட்ட அளவிலே தேர்ந்தெடுத்து பரிசு கொடுக்
கவேண்டும், வட்ட வாரியாக சில விவசாயிகளைத் தேர்ந்
தெடுத்து புரட்சித் தலைவி அவர்கள் கையாலே பரிசை அவர்
கள் பெறவேண்டும் என்று இந்த நேரத்தில் கேட்டுக் கொண்டு
அந்த வகையிலே விவசாயிகளுக்கு ஆக்கமும் ஊக்கமும் தர
வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். இங்கே பேசுவதற்கு
அன்பான வாய்ப்பைக் கொடுத்த பேரவைத் துணைத்
தலைவர் அவர்களுக்கு நன்றி கூறி விடை பெறுகிறேன்
வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. இரா.
பழனிசாமி.

***திரு. இரா. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத்
தலைவர் அவர்களே, வேளாண்மை மானியத்தின் மீது பேச
வாய்ப்பு அளித்ததற்கு நன்றியைக் கூறி ஒரு சில கருத்துக்
களைச் சொல்ல முன் வருகிறேன்.



1991 செப்டம்பர் 24] [திரு. இரா. பழனிசாமி]

விவசாயிகளுக்கு இலவசமாக மின்சாரம் கொடுப்பதால்
சில கோடி ரூபாய் பணம் இழப்பு ஏற்படுகிறது என்று நிதி
நிலை அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. விவசாயிகளுக்கு
இலவச மின்சாரம் கொடுப்பதை எக்காரணம் கொண்டும்
தடை செய்யக் கூடாது என அரசைக் கேட்டுக் கொள்கிறேன்.
அரசு இதிலே தனிக் கவனம் செலுத்த வேண்டும். இந்த
நாட்டிலே வறுமைக் கோட்டிற்குக் கீழே உள்ளவர்கள் யார்
என்றால் சிறு விவசாயிகளும், நடுத்தர விவசாயிகளும் தான்.
வவசாயிகள் உற்பத்தி செய்யும் பொருள்களுக்கு நல்ல விலை
கிடைப்பதில்லை. கூட்டிக் கழித்துப் பார்த்தால் அவர்
களுக்கு ஒன்றும் மிஞ்சுவது இல்லை. இந்தநேரத்தில் அரசு
இலவச மின் கட்டணத்தை நிறுத்திவிட்டால் அது விவ
சாயிகளை மிகவும் பாதிக்கும். எனவே விவசாயிகளுக்கு எந்த
நேரத்திலேயும் மின் கட்டணத்தை திணிக்காமல் பார்த்துக்
கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

பிற்பகல் 12.45

சேலம் மாவட்டத்தை உள்ளடக்கி 7 மாவட்டங்களல்
நடப்பாண்டில் ஒருங்கிணைந்த எண்ணெய் வித்துக்கள் மேம்
பாட்டுத் திட்டத்தை தொடங்கியுள்ளதாக நிதி நிலை அறிக்
கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. அதை வரவேற்கிறேன்.
அதை செயல்படுத்துவதில் ஒருசில குறைபாடுகளை நீக்கி
செயல்படுத்தினால் திட்டம் விவசாயிகளுக்கு நன்கு பயன்
படும். பயிரிடும் விவசாயிகளுக்கு உரிய காலத்தில் விதை,
உரம், மருந்து ஆகியவைகளை வழங்க வேண்டும். ஆனால்
கடந்த காலங்களிலே பருவத்தில் விவசாயிகளுக்கு இடு
பொருள்களை வழங்காமல் பருவம் தவறி வழங்கியதால் ஊழல்
கள் தான் நடந்தது. ஏட்டளவில் திட்டம் செயல்பட்டதாக
இருந்ததேயொழிய விவசாயிகளுக்கு இத்திட்டம் பயன்பட
வில்லை. எனவே, பருவத்தில் அனைத்து இடுபொருள்
களையும் வழங்கி அரசு திட்டத்தை செவ்வனே செயல்படுத்த
கேட்டுக்கொள்கிறேன். சேலம் மாவட்டம் மிகவும் மேட்டுப்
பாங்கான மாவட்டம். எண்ணெய் வித்து பயிரிட உகந்த
மாவட்டம். எனவே, எண்ணெய் வித்து பயிரிட சேலம்
மாவட்டத்திற்கு அதிக நிதி ஒதுக்கீடு வழங்க அரசை கேட்
டுக்கொள்கிறேன்.

அடுத்து, கூட்டுறவுச் சங்கங்களில் பயிர்க் கடன் பெறும்
விவசாயிகள் கட்டாயம் உரம் வாங்கி ஆகவேண்டும் என்ற
நிலை இன்றும் உள்ளது. ஆதலால் விவசாயிகள் உரத்தை
வாங்கி தேவைப் போக மீதி உள்ள உரத்தை பாதி
விலைக்கு கடைக்காரர்களுக்கு விற்க வேண்டிய நிலை உள்ளது.
இதனால் விவசாயிகள் நஷ்டத்திற்கு உள்ளாகிறார்கள். குறிப்
பாக, பாசன வசதி உள்ள தஞ்சை போன்ற பகுதிகளில்
முழுமையான உரத்தைப் பயன்படுத்துகிறார்கள். ஆனால்
என்னுடைய சேலம் மாவட்டத்தைப் போன்ற மிகவும் வறட்

சியான மேட்டுப்பாங்கான மாவட்டங்களில் நிறைய விவசாயிகள் இயற்கை உரங்களைப் பயன்படுத்தி மானாவாரியாக பயிர் செய்கிறார்கள். எனவே, தமிழ்நாடு முழுதுமோ அல்லது சேலம் மாவட்டத்தைப் போன்று மேட்டுப் பாங்கான மாவட்டங்களுக்காவது விரும்பும் விவசாயிகளுக்கு உரத்தை வழங்கியும், உரத்தை விரும்பாத விவசாயிகளுக்குப் பணமாகவும் கூட்டுறவுச் சங்கங்களில் வழங்க ஆவன செய்ய அரசைக் கேட்டுக்கொள்கிறேன்.

அதுபோல வேளாண்மைத் துறையின் மூலம் தரமான விதைகளை கொள்முதல் செய்து விவசாயிகளுக்கு வழங்க ஏற்பாடு செய்ய வேண்டும். விவசாயிகள் இடுபொருள்கள் வாங்கும்பொழுது அத்துடன் பயன்படுத்த முடியாமல் இருக்கும் தரம் இல்லாத இடுபொருள்களையும் வாங்க வேண்டுமென்று நிர்ப்பந்தம் செய்கிறார்கள். அதைத் தவிர்க்க அரசு தக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அரசாங்கம் விவசாயிகளுக்கு விதைப் பொருள்கள், உரம், பூச்சி மருந்து இவைகளை பல கோடிரூபாய் மானியத்தில் அளிக்கிறது. அவை முறையாக விவசாயிகளுக்குப் போய்ச் சேர்வது இல்லை. 'பருவத்தே பயிர் செய்' என்பதற்கு எடுத்துக்காட்டாக உரிய பருவத்தில் இவைகளை வழங்கவேண்டும். ஆனால் இவைகள் உரிய காலத்தில் வழங்கப்படுவதில்லை. அதேபோன்று எண்ணெய் வித்தில் நம் தமிழ்நாடு பின் தங்கியுள்ளது. எண்ணெய் வித்துத் துறையில் தமிழ்நாடு மற்ற மாநிலங்கள் போல் செயல்பட பலகோடி ரூபாய் மானியம் அளித்து அரசு பல ஊராட்சி ஒன்றியங்களை தத்து எடுத்து விதை, பூச்சி மருந்து, உரம் இவைகள் அனைத்தையும் இலவசமாகக் கொடுக்கிறது. ஆனால் அவைகளை வேளாண்மை அலுவலர்கள் பருவக் காலத்தில் வழங்காமல் பருவம் தவறி வழங்குவதால் இடைத் தரகர் மூலம் அது விற்பனைக்குப் போய்விடுகிறது. ஏட்டளவில் கணக்கைக் காண்பித்து விடுகிறார்கள், விவசாயிகளுக்கு வழங்கியதாக. ஆனால் உள்ளபடியே அவை விவசாயிகளுக்குப் போய்ச் சேர்வதில்லை. எனவே, அரசு ஊராட்சி ஒன்றியத்திற்கு சட்டமன்ற உறுப்பினர்களை உள்ளடக்கிய கண்காணிப்புக் குழுவை நியமித்து விவசாயிகள் பயனடைய அனைத்து ஏற்பாடுகளையும் செய்ய வேண்டுமென்று அரசை நான் இச்சந்தர்ப்பத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து வேளாண்மைத் துறையில் உள்ள பெருவாரியான அலுவலர்கள் விவசாயிகளை கிராமத்திற்குப் போய் சந்திப்பதே இல்லை. வயல் விளக்க அலுவலர்கள், உதவி வேளாண்மை அலுவலர்கள் இவர்கள் எல்லாம் தங்கள் சொந்த வேலையைச் செய்கிறார்களே தவிர அரசுப்பணியை செய்வ



தில்லை. கிராமத்திற்குச் சென்று மேற்சொன்ன அலுவலர்களைப் பற்றிக் கேட்டால் விவசாயிகள் அதுபோன்று அலுவலர்கள் உள்ளனரா? எனத் நங்களுக்குத் தெரியாது எனக் கூறும் நிலைதான் உள்ளது. டி.வி. திட்டம் என்று, அதாவது பயிற்சி வழி தொடர்புத் திட்டம் என்று பெயர். பல வருடங்களாக நடைமுறையில் உள்ளது. அலுவலர்களுக்கு ஒதுக்கப்பட்ட ஒவ்வொரு கிராமத்திற்கும் வாரத்தில் ஒரு நாள் சென்று நவீன முறையில் விவசாயம் செய்வதைப் பற்றி விளக்க வேணடும். ஆனால் நடைமுறையில் அத்திட்டம் பயனற்றுப் போய் உள்ளது. கிராமத்தில் உள்ள டீக்கடையில் டி. வி. திட்டம் போர்டு மாட்டப்பட்டிருக்கும். வாரத்தில் அலுவலர் அங்கு செல்லும் தேதி குறிக்கப்பட்டிருக்கும். ஆனால் பெருவாரியான அலுவலர்கள் கிராமதிற்கு சென்று காலடி எடுத்து வைப்பதில்லை. (மணியடிக்கப்பெற்றது). வேளாண்மைத் துறை சம்பந்தப்பட்ட எந்த வேலையும் செய்யாமலே, சம்பளம் பெற்றுக் கொண்டுள்ளார்கள். அதுமட்டுமல்ல, விவசாய இலாகாவில் தோட்டக்கலைப் பிரிவு என்று ஒரு பிரிவு உள்ளதாக கேள்விப்பட்டுள்ளேன். அத்துறைக்கும் அரசு கணிசமான நிதி ஒதுக்கீட்டை நிதி நிலை அறிக்கையில் இன்றைய தினம் ஒதுக்கியுள்ளது. ஆனால் இன்றைய நிலை என்னவென்றால் சந்தனக் கட்டை கடத்தல் மன்னன் வீரப்பனைக் கூடப் பார்த்து விடலாம் போல் உள்ளது. இத்துறை சம்பந்தப்பட்ட அலுவலர்களை ஊராட்சி ஒன்றிய பெருந்தலைவராக பணியாற்றிய நானே பார்த்ததில்லை, விவசாயிகள் எங்கே பார்த்திருக்க முடியும். அவர்கள் செய்யும் வேலை எனக்கு கிடைத்த செய்திபடி தினசரி அலுவலகத்திற்கு வர வேண்டிய அவசியம் இல்லை. வாரத்திற்கு ஒருநாள் அலுவலகத்தில் வந்து கையெழுத்துப் போட்டுவிட்டு, சொந்த ஊர் சென்று அவர்களுடைய சொந்தத் தொழிலைக் கவனிப்பதுதான். இதுபோன்ற தோட்டக்கலைப் பிரிவு தேவைதானா என்று அரசு சிந்திக்க வேண்டும்.

பிற்பகல் 12.50

தோட்டக்கலை சம்பந்தப்பட்ட அலுவலர்கள் தங்கள் பணியை சரிவரச் செய்ய அரசு பார்த்துக்கொள்ள வேண்டும். நான் அரசைக் குறைகூறுவதாக மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் தவறாக எடுத்துக் கொள்ளக் கூடாது. நான் ஐந்தாண்டு காலம் ஊராட்சி ஒன்றியத்தின் பெருந்தலைவராக இருந்தபொழுது பார்த்த அனுபவப்பூர்வமானவற்றைச் சுட்டிக் காட்டினேன்.

நான் முன் சுட்டிக்காட்டிய தவறுகள் எல்லாம் நடைபெறாமல் அரசு கண்காணித்து, தவறு செய்பவர்கள்மீது தக்க நடவடிக்கை எடுத்து மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி ஆட்சியிலே விவசாய உற்பத்தியில் தமிழ்நாடு

தன்னிறைவு அடைந்த மாநிலமாக உயர்ந்திட வேண்டும் என அரசைக் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : திரு நா. சா. பழனிசாமி.

திரு. நா. சா. பழனிசாமி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த வேளாண்மை மானியக் கோரிக்கையின் மீது எனக்குப் பேச வாய்ப்பளித்ததற்காக நன்றி தெரிவித்துக் கொள்கிறேன்.

வேளாண்மைக் கொள்கை விளக்கத்திலே,

''ஆற்றங்கரையின் மரமும் அரசறிய
வீற்றிருந்த வாழ்வும் விழுமன்றே—ஏற்றம்
உழுதுண்டு வாழ்வதற்கு ஒப்பில்லை கண்டீர்
பழுதுண்டு வேறோர் பணிக்கு''

என்று வேளாண்மையினுடைய பழம் பெருமைபற்றி குறிப்பிட்டிருக்கிறார்கள். வேளாண்மை பற்றி சொல்கிறபோதெல்லாம் அதனுடைய பழம் பெருமை பற்றி சொல்லிக் கொண்டிருக்கிறார்களே தவிர இன்றைய நிலைமையில் வேளாண்மை எந்த நிலையிலே இருக்கிறது என்பதை நாம் சற்று எண்ணிப் பார்க்க வேண்டும்.

''உழுதுண்டு வாழ்வரே வாழ்வார் மற்றெல்லாம்
தொழுதுண்டு பின்செல் பவர்''

என்று வள்ளுவர் சொன்ன நிலை மாறி,

''கைகட்டி வாழ்வரே வாழ்வார் மற்றெல்லாம்
கைகட்டி பின் செல் பவர்''

என்ற நிலையில் இன்று விவசாயம் செய்பவர்களுக்கு மதிப்பும் மரியாதையும் குறைந்து, படித்து பல்வேறு தொழில்களை செய்பவர்களுக்குத்தான் இன்று மரியாதை உயர்ந்திருக்கிறது. அந்த நிலை மாற வேளாண்மைத் தொழிலிலே விஞ்ஞானத்தைப் புகுத்தியிருக்கிற இந்த நேரத்தில் விஞ்ஞானத்தினுடைய கண்டுபிடிப்புகளைப் பயன்படுத்தி ஒட்டு வீரிய விதைகள், இரசாயன உரம், இரசாயன பூச்சிக்கொல்லி மருந்துகள், மின்சார மோட்டார்கள், டிராக்டர்கள் என்று பல்வேறு நவீன சாதனங்கள் புகுத்தப்பட்டிருக்கிற இந்த நேரத்தில் படித்துப் பட்டம் பெற்றவர்களும் வேளாண்மை செய்வதற்கு முன்வரவேண்டும். அப்படி படித்தவர்கள் வேளாண்மைக்கு வரவேண்டுமானால் வேளாண்மை விஞ்ஞானி டாக்டர் எம். எஸ். சுவாமிநாதன் அவர்கள் குறிப்பிட்டதைப்



போல Farming and allied rural professions must become economically rewarding and intellectually satisfying விவசாயத்தைப் படித்தவர்கள் செய்ய வரவேண்டுமானால் அது பொருளாதாரத்திலே அவர்களுக்கு வருமானம் கொடுக்கக்கூடியதாக அவர்களை மனப்பூர்வமாக திருப்திப்படுத்தக் கூடியதாக அந்தத் தொழில் அமைய வேண்டும்.

இப்போது ஒரு பொறியியல் பட்டதாரிக்கு அரசாங்கம் உதவி செய்தால் அவன் தொழிற்சாலை வைத்து நடத்தத் தயாராக இருக்கிறான். ஒரு மருத்துவப் பட்டதாரிக்கு அரசாங்கம் உதவி செய்தால் அவன் தனியாக கிளினிக் வைத்து நடத்தத் தயாராக இருக்கிறான். ஆனால் ஒரு வேளாண்மைப் பட்டதாரிக்கு அரசாங்கம் நிலம் கொடுத்தால் அவன் விவசாயம் செய்ய முன் வருவானா என்று சிந்தித்துப் பார்க்கவேண்டும். ஏனென்றால் விவசாயத்திலே இலாபம் இல்லை என்ற முறையில் வேளாண்மை தொழிலை செய்வதற்கு படித்து விவசாயப் பட்டம் பெற்றவர்கள் கூட முன்வரவில்லை. எனவே, இந்த வேளாண்மைத் தொழிலை முன்னேற்றுவதற்கு மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்கள் எப்படி தொழில் துறையில் தமிழ் நாட்டை முன்னேறிய மாநிலமாக மாற்றவேண்டுமென்று விரும்புகிறார்களோ அதைப்போல வேளாண்மைத் தொழிலிலும் இந்தியாவிலேயே தமிழ்நாட்டை முன்னேறிய மாநிலமாக மாற்ற வேண்டும். அதற்கு வேளாண்மைத் தொழிலுக்கு என்று ஒரு கொள்கையை வகுத்துக் கொள்ளவேண்டும்.

தமிழ் நாட்டைப் பொறுத்த வரையில் எல்லா வளங்களும் பெற்ற மாநிலமாக இயற்கையிலேயே இருக்கிறது. நீர் வளம் ஒன்றைத் தவிர மற்ற எந்த வளத்திலும் குறைவு இல்லை. அந்த நீர் வளத்தைக் கூட இன்றைக்கு சொட்டு நீர்ப் பாசனம் தெளிப்பு நீர்ப்பாசனம், வீவா ஸிஸ்டம், என்று பல்வேறு நீர்ப்பாசன முறைகள் நவீன முறையிலே வந்திருக்கின்றன. அந்த நவீன நீர்ப்பாசன முறைகளை எல்லாம் வேளாண்மையில் பயன்படுத்தி, அந்த நீர்த் தட்டுப்பாடு என்ற குறையைக் கூட போக்க முடியும். தமிழ்நாடு இயற்கை அமைப்பிலேயே ஒரு சிறந்த இடத்தை வகிக்கிறது. கியூபாவுக்கு அடுத்த இடமாக தமிழ் நாட்டில் தான் கரும்பு பூக்கிறது. கரும்பு பூப்பதால் தான் இங்கே இரண்டு கரும்பை ஒட்டு சேர்த்து புதிய வீரிய கரும்பு விதையைக் கண்டுபிடிக்கிறார்கள். கரும்பு விளைச்சலில் இன்றைக்கு இந்தியாவிலேயே தமிழ்நாடு தான் ஒரு ஏக்கராவில் அதிக மகசூல் கொடுக்கிற மாநிலமாக இருக்கிறது.

அப்படியிருந்தாலும்கூட இங்கே கரும்புக்கு அதிக விலை
கொடுக்கப்படாமல் இருக்கிறது. மற்ற மாநிலங்களைப்
போல கரும்புக்கு விலை கொடுக்க வேண்டும். குறிப்பாக
தமிழகத்தில், விந்திய மலைக்குத் தெற்கேதான் திராட்சை
2 முறை குலை விடுகிறது. மாமரத்தில் இடையிலே காய்க்
கிறது. இப்படிப் பருவகாலங்கள் இயற்கை ரீதியாக அமைந்
திருக்கின்றன. வாழைப்பழம் இந்திய நாட்டிலே வருஷம்
பூராவும் எங்கே கிடைக்கும் என்றால் தமிழகத்தில்தான்
கிடைக்கும். கேரளாவிற்கு அடுத்தபடி, தமிழகத்திலே
தான் தென்னை அதிகமாகக் காய் காய்க்கிறது. அந்த இளநீர்
இயற்கைக் குளுகோசாக பயன்படுத்தப்படுகிறது. தேங்காய்
இயற்கை உணவாகப் பயன்படுத்தப்படுகிறது. தென்னை
யின் அனைத்துப் பொருள்களும் உபயோகப்படுத்தக்கூடிய
தாக இருக்கின்றன. இப்படி பல்வேறு வகைகளிலே இயற்
கையாகவே தமிழ்நாடு விவசாய உற்பத்திக்கு உகந்த மாநில
மாக இருக்கிறது. தென்மேற்குப் பருவ மழை, வடகிழக்குப்
பருவ மழை—இரண்டு பருவ மழையும் தமிழகத்திற்குச்
சாதகமாக அமைந்திருக்கிறது. தென் மேற்குப் பருவ மழை
மே கடைசி வாரத்தில் அல்லது ஜூன் முதல் வாரத்தில்
வருகிறது. வட கிழக்குப் பருவ மழை அக்டோபர் கடைசி
வாரத்தில் சரியாக வந்துகொண்டிருக்கிறது. ஆனால் அந்த
நேரங்களில் மரங்கள் வெட்டப்பட்டு, காடுகள் அழிக்கப்பட்ட
தால், இயற்கை சூழ்நிலை காரணமாக சில நேரங்களில்
மழை பெய்யாமல் சென்று விடுகிறது என்று வேளாண்
வல்லுனர்கள் சொல்லுகிறார்கள். அந்தப் பருவ மழை
காலங்களில் சில்வர் அயோடைடை விமானங்கள் மூலமாக
நீர்ப் பிடிப்புப் பகுதிகளில் தெளித்து, செயற்கை மழை
பெய்விக்க முடியும். புரட்சித் தலைவி அரசு அதைச் சிந்
தித்து, பருவ மழை தொடங்கும் நேரத்திலே, செயற்கை
மழையை நீர்ப் பிடிப்புப் பகுதிகளிலே பெய்வித்தால் நிச்ச
யமாக அணைகள் நிரம்ப அதிக வாய்ப்பு இருக்கிறது.

பிற்பகல் 12.55

இந்தியாவில் தமிழக விவசாயிகள்தான் உழைப்பில்
மிகச் சிறந்தவர்கள். 50,000 ரூபாய் செலவில் தனிப்பட்ட
விவசாயிகள் ஆழ் குழாய்க் கிணறுகளை அமைத்துக்கொண்டு,
கிணற்று நீரை சரியாகப் பயன்படுத்துகிறார்கள். அப்படி
கிணற்று நீரைப் பயன்படுத்தி பொருள்களை விளைவித்தாலும்
கூட, அவற்றுக்கு சரியான விலை, வேளாண் விளை பொருள்
களுக்குக் கிடைக்கவில்லை. முன்னாள் மத்திய அமைச்சர்
திரு. பானுபிரதாப்சிங் அவர்கள் குறிப்பிடும் போது,
Indian farmers have been reduced to the status of captive producers
and captive consumers in the sense that they are compelled to sell
their produce at prices which are dictated and much below the



international prices and by industrial products which are much above the international prices என்று குறிப்பிடுகிறார். நம்முடைய விவசாயிகள் தாங்கள் வாங்குகின்ற தொழிற்சாலைப் பொருள்களுக்கு அதிக விலை கொடுத்து வாங்கியும், தாங்கள் விற்கும் பொருள்களைக் குறைந்த விலைக்கு விற்கும் நிலையிலும் இருக்கிறார்கள். அதனால் நல்ல பலன் தரவில்லை.

கோவை மாவட்டத்தில் தென்மேற்குப் பருவக் காற்று வீசுகிற பாலக்காட்டு கணவாய்க்கு நேராக உள்ள பொள்ளச்சி உடுமலை, பல்லடம், திருப்பூர் தாலுக்காக்களில் பல்லாரி வெங்காயம் ஒரு ஏக்கருக்குச் சராசரி 10 டன் அளவுக்குக் கிடைக்கிறது. அந்த வெங்காயத்தின் விலை நிரந்தரமாக இருப்பதில்லை. சென்ற வாரம் கிலோ 4 ரூபாய்க்கு விற்றது இந்த வாரம் 2 ரூபாய்க்கு வாங்க ஆளில்லாமல் இருக்கிறது.

அந்த வெங்காயத்தை சென்னை, கல்கத்தா, போன்ற தலைநகர மார்க்கட்டுகளுக்கு அனுப்பும்போது ஒழுங்கு முறை விற்பனைக்கூட அதிகாரிகள் அந்த வெங்காயத்தை 'நோட்டிபைடு காமாடிடிஸ்'–அறிக்கை இடப்பட்ட பொருள்களின் லிஸ்டில் சேர்த்திருக்கிறார்கள். அதனால் வெங்காயத்தின் மீது செஸ் விதித்துக்கொண்டிருக்கிறர்கள். அதற்கு சரியான பில் போடுவதில்லை. லாரியை மடக்கி, ஒரு தொகையை வாங்கிக் கொண்டு விட்டுவிடுகிறார்கள். தார்பாய் போட்டு வரும் ஒரு லாரி காலை 4 மணிக்கு கொத்தவால் சாவடிக்கு வரவில்லை என்றால் அடுத்த நாள் அந்த வெங்காயத்தைக் கொண்டுவர முடியாது. அந்த வெங்காயம் கெட்டுவிடும் வாய்ப்பு இருக்கிறது. தயவு செய்து வேளாண்மைத் துறை அமைச்சரவர்கள் வெங்காயத்தின் மீது அழுகும் பொருள்கள் மீது விதித்துள்ள செஸ்-ஐ நீக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன் (மணி அடிக்கப்பெற்றது).

பிற்பகல் 1.00

தமிழ்நாடு ஜி.டி. நாயுடு வேளாண்மைப் பல்கலைக் கழகத்தில் ஆராய்ச்சிப் பிரிவுகளின் கண்டுபிடிப்புகள் எதுவுமே இன்றைய தினம் விவசாயிகளுக்குப் பயன்படத் தக்கதாக இல்லை. இன்றைய தமிழ்நாட்டில் விளைவிக்கிற நெல் எல்லாம் சர்வதேச ஆராய்ச்சிப் பண்ணையில் கண்டுபிடிக்கப்பட்ட ஐ.ஆர். ரகங்களைத்தான் நாம் விளைவித்துக் கொண்டிருக்கிறோமே யல்லாமல் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகத்தில் ஆண்டுதோறும் தைப் பொங்கல் அன்று வெளியிடப்படுகிற

வெரைட்டி விதைகள் விவசாயிகளுக்கு அந்த ஆண்டே
வழங்கப்படுவதில்லை. அடுத்த ஆண்டு அந்த விதைகள்
இருப்பதுமில்லை. புதிய கண்டுபிடிப்புகள் என்று வெளி
யிடுகிறார்கள். எனவே விவசாய ஆராய்ச்சியின் பலன்
பண்ணைக்கு, நிலத்துக்கு, வரவேண்டும். Lab to land
என்று சொல்வார்கள். வேளாண்மைத் துறையின் ஆராய்ச்சி
கள் ஏன் சரியான முறையில் நடைபெறுவதில்லை என்பதை
வேளாண்மைத்துறை அமைச்சர் கவனித்து அதற்கான சரியான
நடவடிக்கை எடுக்க வேண்டும்.

திருப்பூரிலிருந்து பனியன் தொழில் செய்பவர்கள் அன்னிய
செலாவணியை ஈட்டும் பொருட்டு ஏற்றுமதி செய்கிறார்கள்.
ஆனால் அந்த பனியனுக்கு வேண்டிய 1000 கோடி ரூபாய்
மதிப்புள்ள மூலப் பொருளான பருத்தி, தமிழ்நாட்டில் 5
லட்சம் பேல் தான் விளைகிறது. தமிழ்நாட்டின் தேவை
35 லட்சம் பேல். அந்தப் பருத்தியை விளைவிப்பதற்குத்
தான் அதிகமான பூஞ்சரம் மருந்துகள் பயன்படுத்த வேண்டி
யிருக்கிறது. எனவே அந்த ரக பருத்தியை நம்முடைய
சேலம், ஆத்தூர் போன்ற பகுதிகளில் பயிரிட வாய்ப்பு
இருக்கிறது. 100-ம் நெம்பர் நூல் நூற்கக் கூடிய பருத்தி
அங்கே விளையும் வாய்ப்பு இருக்கிறது. ஆனால் அதை விளை
விப்பதால் அதற்கான விலை கிடைப்பதில்லை.
பூச்சி தொல்லை அதிகம். எனவே பருத்தி உற்பத்தி செய் அதற்கு
வதற்கு ஒரு சிறப்புத் திட்டத்தை வேளாண்மைத் துறையின்
மூலமாக செய்து ஏற்றுமதியை அதிகரிக்க உதவவேண்டு
மென்று (மணியடிக்கப் பெற்றது) கேட்டுக்கொண்டு எனக்குப்
பேச வாய்பளிப்பதற்காக நன்றி தெரிவித்து, அமைகிறேன்.

**மா்ண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்** : திரு. எம். கே.
சுந்தரம்.

**திரு. எம். கே. சுந்தரம்** : மாண்புமிகு பேரவைத் துணைத்
தலைவர் அவர்களே, விவசாயக் குடும்பத்தில் பிறந்த
எங்களைப் போன்ற ஏழை எளியவர்களை இந்த மாமன்றத்
திலே பேசவைத்த, அதிலும் குறிப்பாக எங்களுடைய குலத்
தொழில் என்று கருதப்படுகின்ற இந்தியத் துணைக் கண்டத்
தினுடைய அதிலும் குறிப்பிட்டுச் சொல்ல வேண்டுமானால்
தமிழகத்தின் குலத் தொழில் என்று சொல்லப்படக் கூடிய
வேளாண்மைத்துறை மானியத்தின் மீது நடைபெற்றுக்
கொண்டு இருக்கின்ற இந்த கோரிக்கையில் பேசுகின்ற
வாய்பளித்த தானைத் தலைவி, தங்கத் தலைவி, தமிழகத்
தின் ஒப்பற்ற ஒரே தலைவி, புரட்சித் தலைவி அவர்
களுக்கு என்னுடைய நன்றியை பாதங்களில் சமர்ப்பித்து அதற்
காக வாக்களித்து இங்கே என்னை புரட்சித் தலைவியினு



டைய ஆசியோடு உருவாக்கிய தண்டராம்பட்டு வாக்காளப்
பெருமக்களுக்கும் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்
கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை.)

இன்றைய தினம் தமிழகத்திலே இருக்கின்ற துறைகளிலே
மிகச் சிறந்த துறை என்று கருதப்படுகின்ற வேளாண்மைத்
துறையின் மூலம் இந்த அரசாங்கத்திற்குக் கிடைக்கின்ற
வருமானம் ஏறத்தாழ 21 விழுக்காடு என்று இங்கே கொடுக்கப்
பட்டிருக்கின்ற வேளாண்மை பற்றிய குறிப்புகளில் இருக்கின்
றன. வேளாண்மை மற்றும் வேளாண்மையைச் சார்ந்த
பிற துறைகளிலும் வருமானம் கிடைக்கிறது என்பதை
இங்கே குறிப்பிட்டுச் சொல்லியிருக்கின்றார்கள். விவசாயப்
பெருங்குடி மக்களுக்கு மறைந்த மாமேதை புரட்சித் தலைவர்
அவர்கள் எந்த அளவுக்கு உறுதுணையாக இருந்தார்கள்
என்பதை இந்த மாமன்றம் மட்டுமல்ல தமிழகத்திலே இருக்
கிற விவசாயப் பெருங்குடி மக்கள் எல்லாம் அறிந்திருக்கிறார்
கள். இன்றைக்கு தமிழக மக்களுடைய நெஞ்சங்களிலே
எந்த அளவுக்கு புரட்சித் தலைவர் அவர்கள் மறைந்து
மறையாமல் வீற்று இருக்கிறார்களோ, அந்த அளவுக்கு
மங்காத அளவுக்கு ஒளி விளக்காக புரட்சித் தலைவரின்
வாரிசாக விளங்கிக் கொண்டிருக்கின்ற எங்களுடைய தானைத்
தலைவி புரட்சித்தலைவி அவர்களும் விவசாயிகளுடைய
அரசு இந்த அரசு என்பதை நிருபிக்கின்ற அளவிலே வேளாண்
மைத் துறைக்கு பல சலுகைகளை இன்றைக்கு அளித்திருக்
கின்றார்கள். திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சார்ந்த
வர்கள், சொன்னதைச் செய்வோம், செய்வதைத் சொல்
வோம், என்று சொல்லி, சொல்லாததை எல்லாம் சொல்லி
விவசாயப் பெருங்குடி மக்களுக்கு பல இன்னல்களை புரிந்தார்கள்
என்பது சரித்திரம். ஆனால் எங்களுடைய தங்கத் தலைவி
புரட்சித் தலைவி அவர்கள் அனைத்திந்திய அண்ணா திராவிட
முன்னேற்றக் கழகம் தேர்தலிலே போட்டியிடுகிற
போது அன்றைய தினம் விவசாயப் பெருங்குடி மக்களைச்
சந்தித்து, அவர்களுக்கு நல்ல பல திட்டங்களை, தான்
ஆட்சிப் பொறுப்புக்கு வந்தால் செய்து தருவோம் என்று
சொன்னார்கள். அதற்கு ஒரு உதாரணமாக தமிழகத்தில்
இருக்கிற தரிசு நிலங்கள், பயிரிடப்படாத, புறம்போக்கு
நிலங்களில் பயிரிடுவதற்காக அதற்கான நிவாரணத்தைத்
தீட்டி, கரம்பு நிலத்திலும் தரிசு நிலத்திலும் பயிரிடச்
செய்வோம் என்று சொன்னார்கள். அப்படிச் சொன்னதோடு
மட்டுமல்லாமல், இன்றையதினம் தான் ஆட்சிப் பொறுப்
பேற்றவுடன் தரிசு நிலங்களிலும் கரம்பு நிலங்களிலும் பயிரிடு
வதற்கான ஓர் உத்தரவைப் பிறப்பித்து தேர்தல் அறிக்கை
யிலே சொன்னதை செய்து காட்டிய ஒரு ஒப்பற்ற தலைவி
என்பதை நிரூபிக்கிற வகையில் இன்றைக்கு ஏறத்தாழ 1.59

**கோடி ரூபாயை ஒதுக்கியிருக்கிறார்கள் என்று சொன்னால் அது மிகையாகாது. அப்படிப்பட்ட தாளைத் தலைவி அவர்களுக்கு என்னுடைய தண்டராம்பட்டு தொகுதி மக்கள் சார்பாக என்னுடைய நன்றியைக் காணிக்கையாக்க கடமைப் பட்டிருக்கிறேன்.**

பிற்பகல் 1.05

மேலும் புரட்சித் தலைவி அவர்கள் தாய்க் குலத்தினுடைய ஒப்புயர்வற்றத் தலைவி என்பதை இங்கே பல துறைகளிலும் நிருபித்துக் கொண்டிருக்கிறார்கள். தமிழகத்தினுடைய முதுகெலும்பு என்று சொல்லப்படுகிற வேளாண்மை துறையிலே ஒரு நிறுவனத்தின் உதவியோடு மகளிர் பயிற்சி நிச்சயமாக அளிக்கப்படும், என்று புரட்சித் தலைவி அவர்கள் அறிவித்திருக்கிறார்கள். புரட்சித் தலைவியினுடைய அரசு, புரட்சித் தலைவருடைய அரசாக, ஏழையெளிய விவசாயிகளின் அரசாக இன்றைக்கு அமைந்திருக்கிறது என்பதை இங்கே நான் சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். விவசாயத் தொழிலிலே ஈடுபடுத்திக் கொண்டிருக்கிற என்னைப் போன்றவர்களையெல்லாம் இந்தச் சட்ட மன்றத்திலே பேசுவதற்கு வாய்ப்பளித்தமைக்கு மீண்டும், மீண்டும் என்னுடைய நன்றியைத் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

ஒரு பழமொழியைச் சொல்லுவார்கள். ''பெற்ற பிள்ளையை நம்பாவிட்டாலும் கூட தென்னம் பிள்ளையை நம்பினால் பிற்காலத்திலே உதவும்'' என்று சொல்வார்கள். என்னுடைய திருவண்ணாமலை—சம்புவராயர் மாவட்டத்திலும், வட ஆற்காடு — அம்பேத்கர் மாவட்டத்திலும், தருமபுரி மாவட்டத்திலும் சேலம் மாவட்டத்திலும் உள்ள பெருத்த விவசாயிகள் தென்னை மரத்தால் பலன் அடைந்து கொண்டிருந்தாலும் ஏறத்தாழ கடந்த நான்கு ஆண்டு காலமாக வானம் பொய்த்துவிட்டதால் மழை இல்லாததால் தென்னை மரங்கள் எல்லாம் பாதிக்கப்பட்டிருக்கின்றன. தென்னை மரங்கள் பாதிக்கப்பட்ட இந்த நேரத்திலே மத்திய அரசு தென்னை மரத்தை பயிரிடுகிற விவசாயிகளுக்காக மானியத் தொகையை வழங்குகிறது என்று சொல்லுகிறார்கள். இதனால் அண்டையிலுள்ள கேரள மாநிலத்திலே உள்ள விவசாயிகள் பலன் பெற்றுக் கொண்டிருக்கிறார்கள் என்று சொல்லுகிறார்கள். அப்படிப்பட்ட ஒரு சலுகையை இங்கே இருக்கிற பெருமதிப்பிற்குரிய விவசாயத் துறை அமைச்சர் அவர்கள், தமிழகத்திலே இருக்கின்ற தென்னை மரத்தை வைத்து வாடிக் கொண்டிருக்கிற விவசாயிகளுக்குப் பெற்றுத் தந்து ஒரு நிவாரணத்தைத் தேடித்தர வேண்டும் என்று மெத்தப் பணிவோடு இங்கே கேட்டுக் கொள்ளக் கடமைப் பட்டிருக்கிறேன்.



மேலும் புரட்சித் தலைவியினுடைய அரசு இன்றைக்கு எவ்வளவோ திட்டங்களை அறிவித்திருந்தாலும், மானாவாரி பயிர் விளையாத ஒரு சூழ்நிலை இருக்கிறது. மானாவாரி பயிர் விளைகிற நிலத்திலே இருக்கின்ற விவசாயிகள் அதனால் வாடிக் கொண்டிருக்கிறார்கள். இந்தப் பிரச்சினையைப் போக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். புரட்சித் தலைவியினுடைய அரசு, தேசிய நீர்வரத்து மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் 14 மாவட்டங்களிலே இருக்கின்ற 84 வட்டாரங்களிலே செயற்படுத்தும் ஒரு திட்டத்தை அறிமுகப் படுத்தி இருக்கிறார்கள். திருவண்ணாமலை-சம்புவராயர் மாவட்டம் மிகவும் பின்தங்கிய மாவடடம். அதிலும் என்னுடைய தண்டராம்பட்டு தொகுதியில் இருக்கின்ற செங்கம் வட்டம் மிகவும் பிற்பட்ட வட்டம் என்பதை நான் அமைச்சர் அவர்களுக்குச் சுட்டிக்காட்டக் கடமைப் பட்டிருக்கிறேன். காரணம், என்னுடைய தொகுதியிலே உள்ள மக்கள் மலைவாழ் மக்களாக இருக்கிறார்கள். ஆதி திராவிட மக்கள் பெரும் எண்ணிக்கையில் இருக்கிறார்கள். அத்தனை பேரும் கூலித் தொழிலாக, அடிப்படைத் தொழிலாக விவசாயத்தையே நம்பிக் கொண்டிருக்கிறார்கள். ஆனால் வானம் பொய்த்துவிட்டது. அங்கே இருக்கின்ற சாத்தனூர் அணையின் மூலம் பிற மாவட்டங்களில் உள்ள விவசாயப் பெருங்குடிமக்கள் நன்மையைப் பெற்றாலும் என்னுடைய தொகுதியிலே உள்ள, பல பகுதிகள், ஒரு சில பகுதிகள் நீங்கலாக, சாத்தனூர் அணையின் தண்ணீரால் பயன்படவில்லை. இதன் காரணமாக வானம் பார்த்த பயிரைத்தான் என்னுடைய தொகுதியிலே உள்ள மக்கள் நம்பிக்கொண்டிருக்கிறார்கள். ஆகவே 14 மாவட்டங்களிலே உள்ள 84 வட்டங்களைத் தேர்ந்தெடுத்திருக்கிற அமைச்சர் அவர்கள் என்னுடைய மாவட்டத்திலே உளள செங்கம் வடடத்தையும், குறிப்பாக தண்டராம்பட்டுத் தொகுதியினுடைய வட்டத்தையும் எடுத்துக் கொண்டு மானாவாரி பயிரை நம்பி, வானத்தால் வஞ்சிக்கப்பட்டிருக்கிற விவசாயப் பெருங்குடி மக்களுக்கு நன்மை செய்ய வேண்டும் என்று இந்த நேரத்திலே கேட்டுக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

ஏரிகளை நவீனப்படுத்துவதற்காக ஒரு கணிசமான தொகையை புரட்சித் தலைவி அவர்கள் இன்றைக்கு ஒதுக்கி இருக்கிறார்கள். என்னுடைய தொகுதியிலே ஏரிகள் பல இருந்தாலும் கூட அவைகள் அத்தனையும் இன்றைக்கு வறண்டிருக்கின்றன. தண்ணீர் இல்லாத இந்தக் காலக் கட்டத்திலே ஏரிகளைச் செப்பனிட்டால் வறுமையில் வாடிக் கொண்டிருக்கிற விவசாயப் பெருங்குடி மக்கள் தினக் கூலி செய்துக் கொண்டாவது பிழைத்துக்கொள்வார்கள் என்ற ஒரு எண்ணம் அங்கே இருந்து கொண்டிருக்கிறது. ஆகவே தண்ணீர் இல்லாத இந்தக் காலக் கட்டத்திலே ஏரிகளை

ஆழப்படுத்தி, சீர்படுத்துகிற ஒரு திட்டத்தைச் செய்வதற்கு அரசு முன்வரவேண்டும். அப்படி செய்தால் விவசாயத்தை நம்பி வஞ்சிக்கப்பட்டிருக்கிற, வானத்தை நம்பி வஞ்சிக்கப் பட்டிருக்கிற விவசாயப் பெருங்குடி மக்களுக்கும் அங்கே தினக்கூலி பெற்று பிழைக்கும் வாய்ப்பு ஏற்படும். ஆகவே ஏரிகளை நவீனப்படுத்தும் திட்டத்தை என்னுடைய தொகுதி யில் இருக்கிற அத்தனை கிராமங்களிலும் இருக்கிற ஏரி களுக்குச் செயற்படுத்தும் திட்டத்தை மேற்கொள்ளவேண்டும் என்று தக்க அதிகாரிகளை பணித்து ஆவண செய்ய வேண்டும் என்று மெத்தப் பணிவன்போடு கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன் (மணி அடிக்கப்பெற்றது).

மேலும் இன்றைக்கு 50 இலட்சம் செலவில் எண்ணெய்வித்தை நவீனப்படுத்துவதற்காக இங்கே ஒருதிட்டத்தை அறிவித்து, என்னுடைய சம்புவராயர் மாவட்டத்திலே அதை அறிவித்து இருக்கிறீர்கள். இதற்காக புரட்சித் தலைவியின் அரசுக்கு என்னுடைய மாவட்டம் சார்பாகவும், தொகுதி சார்பாகவும் என்னுடைய நன்றியை நான் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டு இருக்கிறேன்.

பிற்பகல் 1.10

மேலும் இன்றைக்கு வானம் பொய்த்துவிட்டது. இன் றைக்கு விவசாயப் பெருங்குடிமக்கள் ஒரு பயிரை வைத்தால் அடுத்த பயிர் வைப்பதற்கு வசதி இல்லாத நிலையில் இன் றைக்கு பயிர் வைக்கின்றபோது அந்த பயிருக்குத் தேவை யான நீர் கூட இல்லாமல் அந்த பயிருக்குத் தேவையான இயற்கையான நீர் கூட பெய்யாமல் வானம் வஞ்சித்து இருக்கிறது. இந்த நிலையில் விவசாயிகள் எப்படிப் பிழைப்பது என்ற மிகப் பெரிய கேள்விக் குறியோடு இன்றைக்கு இருக்கி றார்கள். இதனால் இங்கே இருக்கின்ற அமைச்சர் அவர் கள் விவசாயிகளுக்கு காப்பீட்டுத் தொகையாக, ஏதாவது ஒரு நிவாரணத் தொகையை மத்திய அரசோடு அவர்கள் தொடர்புகொண்டு ஏற்படுத்தித்தர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

இன்றைக்கு வறண்ட பகுதி, குறிப்பாகச் சொல்லப் போனால் தர்மபுரி மாவட்டம், சம்புவராயர் மாவட்டம் சேலம் மாவட்டம், அந்தப் பகுதிகளில் எல்லாம் இன்றைக்கு கரும்பு பயிரிட முடிவதில்லை; வாழை பயிரிட முடிவதில்லை; நெல் பயிரிட முடிவதில்லை. இதற்குக் காரணம் வறட்சி, நீர் இன்மை. அதற்குப் பதிலாக குறைந்த நீரில் பயிரிடக் கூடிய மரவள்ளிக் கிழங்கை அங்கே பயிரிடுகிறார்கள். அப்படிப் பயிரிட்டுக் கொண்டிருக்கிற அந்தப் பகுதியிலே ஆயிரக் கணக்கான தொழிற்சாலைகள் இன்றைக்கு இயங்கிக் கொண்



டிருக்கின்றன. அந்தத் தொழிற்சாலைகளிலே தொழிலாளர் கள் பிழைத்துக் கொண்டு இருக்கிறார்கள். அப்படிப்பட்ட தொழிலாளர்கள் புரட்சித் தலைவர் எம். ஜி. ஆர். ஆட்சிக் காலத்துக்கு முன்னால் அந்த விவசாயப் பெருங்குடிகளை ஒருசில மார்வாடிகள் வஞ்சித்து அங்கே மரவள்ளிக்கிழங்கை மூட்டைக்கு ரூ. 25 என்று வாங்கி பிழைத்து கொண்டிருந் தார்கள். ஆனால் புரட்சித் தலைவர் அவர்கள் 'சாகோ சர்வோ' என்ற ஒரு திட்டத்தை தீட்டி அங்கே இருக்கின்ற தொழிலாளர்களுக்கு மட்டுமல்லாமல் என்னுடைய மாவட்டத் திலே இருக்கின்ற, சேலம் மாவட்டத்திலே இருக்கின்ற மரவள்ளிக் கிழங்கு பயிரிடுகின்ற விவசாயப் பெருங்குடி மக்களுக் கெல்லாம் வயிற்றிலே பால் வார்க்கின்ற ஒரு நிலையாக மூட்டை 75 ரூபாய்க்கு உயர்த்திக் காட்டியவர் ஒப்பற்ற புரட்சித் தலைவர் எம். ஜி. ஆர். என்பதை நான் இங்கே சொல்லக் கடமைப்பட்டு இருக்கிறேன். (மணி அடிக்கப் பெற்றது.)

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** முடியுங்கள்.

**திரு. எம். கே. சுந்தரம் :** ஆனால் தி.மு.க. ஆட்சியிலே அங்கே வரிகள் போட்டு அந்த விவசாயிகள் வஞ்சிக்கப்பட்டு இருக்கின்றார்கள். மீண்டும் அந்த விவசாயிகள் புரட்சித்தலைவர் காலத்திலே எந்த அளவுக்கு நன்மைகள் பல பெற்று இருந்தார் களோ அந்த அளவுக்கு புரட்சித் தலைவி அவர்களுடைய ஆட்சியிலே அவர்கள் பெறுகின்ற வகையில் அங்கே நடை பெறுகின்ற அந்த தில்லுமுல்லுகளைக் களைந்து மீண்டும் அந்த மரவள்ளிக்கிழங்கு பயிரிடுகிற அந்த விவசாயப் பெருங்குடி மக்களுக்கு அந்த சாகோ சர்வோ மூலம் முறை யான ஒரு தொகையை நிர்ணயித்து விவசாயத் துறை அமைச்சர் அவர்கள் அங்கீகாரம் அளிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

என்னுடைய தொகுயிலே இருக்கின்ற விவசாயத்தை நம்பி இருக்கின்ற மக்கள் திடீரென்று மழை பெய்து விட்டால் அங்கே உழுவதற்கு டிராக்டர் கிடையாது. அங்கே இருக்கின்ற ஒன்றிய அலுவலகத்திலே ஒரே ஒரு டிராக்டர் இருக்கின்றது. அது கூட இந்த நாடு சுதந்திரம் பெற்ற காலத்தில் வாங்கி இருக்கக் கூடும் என்று நான் கருதுகிறேன் (மணி அடிக்கப்பெற்றது) ஒரே ஒரு நிமிஷம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** போதும். திரு. ஏ. டி. செல்லசாமி.

**திரு. ஏ. டி. செல்லசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த வேளாண்மைத் துறை மானியக் கோரிக்கை யின் மீது எனது கன்னிப் பேச்சை தொடங்குவதற்கு முன்

நம்மை வாழ வைத்துக் கொண்டிருக்கும் தெய்வமாகிய புரட்சித் தலைவி அவர்களின் திசை நோக்கி வணங்கி, எங்கோ ஒரு குட்டி கிராமத்தில் சாதாரண ஒரு விவசாயக் குடும்பத்தில் பிறந்து, என்னை இந்தக் கீர்த்தி மிக்க மாமன்றத்தில் உறுப்பினராக வழிகாட்டிய மாதர்குல மாணிக்கம் தமிழகத்தின் காவல் தெய்வம், தென்னகத்தின் ஜான்சிராணி இதய தெய்வம் புரட்சித் தலைவி அவர்களின் பொற்பாதங்கள் தொட்டு வணங்கி, என்னை தங்கள் பிரதிநிதியாகத் தேர்ந்தெடுத்து புரட்சித் தலைவி அவர்களின் தொண்டராகப் பணிபுரியும் வாய்ப்புக் கொடுத்த எனது தொகுதியான ஒட்டன்சத்திரம் தொகுதி மக்களுக்கும் நன்றி தெரிவித்து வேளாண்மை மானியக் கோரிக்கை மீது எனது கருத்துக்களை எடுத்து வைக்க விரும்புகிறேன்.

''சுழன்றும்ஏர்ப் பின்னது உலகம் அதனால்
உழந்தும் உழவே தலை''.

என்று வேளாண்மைத் தொழிலைப் பற்றி குறள்தாசன்
வள்ளுவப் பெருந்தகை உயர்வாக எடுத்துக்கூறி உள்ளார்.
ஆனால் விவசாயிகளினுடைய வாழ்க்கை நிலையில் உயர்
வான முன்னேற்றம் ஏற்படவில்லை என்பதுதான் யதார்த்த
மான உண்மை, அப்படிப்பட்ட விவசாயப் பெருமக்களின்
வாழ்க்கையில் ஒளி ஏற்றிட புரட்சித் தலைவியின் அரசு
மகத்தான பல நல்ல திட்டங்களைத் தீட்டிச் செயல்படத்
துவங்கி உள்ளது. தமிழக விவசாயிகளுக்கு உயிர்நாடி என்று
கருதப்படும் காவிரி நீரைத் தமிழகத்துக்குக் கொண்டுவரு
வதற்கு புரட்சித் தலைவி அவர்கள் எடுத்த முயற்சிகளும்
நடவடிக்கைகளும் சமீபத்தில் வரலாற்றில் இடம் பெற்று
விட்டது. சிறப்பான செய்தியாகும். அந்த முயற்சிக்கு
பல குந்தகங்களை கர்நாடக அரசு தொடர்ந்து செய்த போதும்
'தடைக் கற்கள் உண்டெனினும் தடந்தோள்கள் உண்டு'
என்ற புரட்சிக் கவிஞன் பாரதிதாசன் கவிதை வரிகளுக்கு
ஏற்ப உச்ச நீதிமன்றத்தில் மத்திய அரசுடன் உரிய
நடவடிக்கைகள் எடுத்தது, எப்படியும் காவிரிநீர் தமிழகத்
திற்கு கொண்டுவந்து தீருவதே என்ற உறுதிப்பாட்டுடன்
செயல்பட்டு வரும் புரட்சித் தலைவி அவர்களை வேளான்
பெருமக்கள் தங்கள் குல விளக்காகக் கும்பிட்டுக் கொண்டி
ருக்கிறார்கள்.



சமீபத்தில் உரங்களுக்கு கொடுத்துவந்த 40 விழுக்காடு மானியத்தை எடுத்துவிட மத்திய நிதியமைச்சர் முயற்சித்தபோது நாடு முழுவதும் விவசாயிகள் பொங்கி எழுந்தனர். உரத்திற்கு கிடைத்து வந்த மானியத்தை ரத்து செய்து ஏற்கனவே அல்லல்பட்டுக் கொண்டிருக்கிற விவசாயிகளை மேலும் துன்பத்திற்குள்ளாக்க வேண்டாம் என்று புரட்சித் தலைவி அவர்கள் பிரதமரிடம் வேண்டுகோள் கொடுத்தார்கள். அதன் காரணமாக மானியத்தை முழுவதும் எடுத்துவிடயிருந்த நிலை மாறி, 10 சதவீதம் மட்டும் குறைக்க அரசால் முடிந்தது என்பதை நல்ல உள்ளங்கள் நன்றியோடு நினைத்துப் பார்க்கின்றன.

பிற்பகல் 1.15

விவசாயத்தில் தொழில் நுட்ப, அறிவியல் முன்னேற்றத்தில் ஏற்படும் நிலைமைகள் அன்றாடம் விவசாயத்தில் சரியான முறையில் கிடைக்கவில்லையென்று சில விவசாயிகளிடையே மனக்குறை இருக்கிறது. அந்த மனக் குறையை போக்கும் விதத்தில் விவசாயத்தில் ஏற்படும் முன்னேற்றங்கள் சாதாரண விவசாயிகளுக்கு பயன்படும் முறையில் வழிவகைகளைக் காண வேண்டுமென்ற வேண்டுகோளை முன்வைக்கிறேன். வேளாண்மைத் துறையில் அதிகாரிகள் விவசாயிகளுடன் மேலும் இணக்கமான உறவை ஏற்படுத்திக் கொண்டு அவர்களுக்கு உதவ வேண்டும்.

தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக் கழக ஆட்சிமன்றக் குழுவில் கிராமப் பகுதிகளிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள விவசாய சார்புடைய சட்டமன்ற உறுப்பினர்களை நியமித்தால் நல்ல பலன் ஏற்படும் என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்கிறேன்.

கிராமங்களையே முழுக்க முழுக்க கொண்ட என்னுடைய ஒட்டன்சத்திரம் சட்டமன்றத் தொகுதியில், ஒட்டன்சத்திரம் தினசரி அங்காடிக்கு காய்கறிகள் நிறைய விற்பனைக்கு வருகின்றன. விற்பனையாகாத காய்கறிகளைப் பதப்படுத்தி பக்குவமாக வைத்திருக்க தற்போது வசதிகள் எதுவும் அங்கே இல்லை. எனவே, அதற்குரிய குளிர்சாதன வசதிகளை ஏற்படுத்தித் தந்தால் எங்களுடைய பகுதி மக்களுக்கு உதவியாக இருக்கும் என்பதை மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்களிடம் தெரிவித்துக் கொள்கிறேன்.

நலிவடைந்த பகுதியாக உள்ள எங்கள் பகுதியில் மக்களுக்கு விவசாயம் சார்புடைய எருமை மாடு, ஆடு வளர்ப்பு போன்ற பண்ணைகளை வைத்துக் கொடுத்தால் [illegible]

இருக்கும் என்று கூறிக்கொள்கிறேன். மானிய உதவியோடு வழங்கினால் அவர்கள் வாழ்க்கையில் வளம் ஏற்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

எங்கள் பகுதியில் அமராவதி சர்க்கரை ஆலை இருக்கிறது. பெரும்பாலும் எங்கள் பகுதியில் கரும்பு சாகுபடி அதிகமாகச் செய்கிறார்கள், அவர்களுக்கு சரியான நேரத்தில், விதைகளையும், உரங்களையும், கொடுப்பதில்லை. காலம் கடந்துதான் கொடுக்கிறார்கள். அதைப்போல கரும்பு ஆலைகள் காலம் கடந்துதான் கரும்பை கட்டிங் செய்கிறார்கள். கன்னி கரும்பு என்றால் 12 மாதங்களுக்குள்ளாக வெட்ட வேண்டும். அந்த ஆலை அதிகாரிகள் 15 மாதம் கழித்துதான் வெட்டுகிறார்கள். இதனால் பெரும் நஷ்டம் ஏற்படுகிறது. இதுபோன்ற தவறுகள் நடந்ததற்கு காரணம் தி.மு.க. ஆட்சியில் விவசாயிகள் மீது அக்கறை இல்லாமல் அவர்கள் நடந்து கொண்டதுதான் காரணம். நம்முடைய தமிழகத்தின் முதல்வர் ஒப்பற்றத் தலைவி, விவசாயிகள் மீது உயிரையே வைத்துள்ள அன்பு தெய்வம், அவர்கள் காலத்தில் இதுபோன்ற தவறுகள் நடக்காமல் இருக்க சம்பந்தப்பட்ட அதிகாரிகளை ஆவண செய்யுமாறு மாண்புமிகு அமைச்சர் அவர்களை கேட்டுக்கொண்டு, வாய்ப்பளித்த பேரவைத் தலைவர் அவர்களுக்கு நன்றி கூறி விடைபெறுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. அ. தேவராஜ் அவர்கள்.

திரு. அ. தேவராஜ் : மான்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழக வரலாற்றில் சங்க காலம் பொற்காலம் ஆகும். அதற்குப் பின் வந்த களப்பிரர் காலமோ இருண்ட காலம் என்பர். அதைப்போலவே புரட்சித் தலைவர் அவர்கள் பொற்காலத்தைத் தொடர்ந்து இடையில் சில காலம் இருண்ட காலம் ஆகும். அந்த இருண்ட ஆட்சிக்கு முற்றுப்புள்ளி வைத்து, மீண்டும் பொற்காலம் படைக்கும் மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அவர்களே, இருளைக் கிழித்தெறிந்து, தமிழகத்தில் ஒளி விளக்கு ஏற்றி வைத்திருக்கும் எங்கள் திராவிட திருவிளக்கே, தொட்டது துலங்கும், கைப்பட்டது விளங்கும் தகமைசால் மாண்புமிகு முதல்வர் அவர்களே, விலாசம் தெரியாத எங்களை எல்லாம் வெளிச்சத்திற்கு கொண்டு வந்த எங்கள் குலவிளக்கே, தங்கள் பாத மலர்களுக்கு என் பணிவான வணக்கத்தைத் தெரிவித்து விவசாய மானியக் கோரிக்கையில் பேசத் தொடங்குகிறேன். அதைப் போல என்னைத் தேர்ந்தெடுத்த செய்யாறு தொகுதி மக்களுக்கும் என் பணிவான வணக்கத்தினை தெரிவித்துக் கொள்கிறேன்.



இந்திய விவசாயி ஏழையாகவே பிறக்கிறான்; ஏழையாகவே வாழ்கிறான்; ஏழையாகவே மடிகிறான்; விவசாயத்தை நம்பி வாழும் ஆணும் பெண்ணும் தங்கள் துன்பத்தை எண்ணி எண்ணி வேதனைகளை தங்களுக்குள்ளே பரிமாறிக் கொள்வதே வழக்கமாகிவிட்ட சான்று. அவர்கள் படும் வேதனையை புரட்சித் தலைவர் அவர்கள் எடுத்துக் காட்டும் போது—

''அட காடு விளைஞ்சென்ன மச்சான்—நம்ப
கையும் காலும் தானே மிச்சம், கையும் காலும்
தானே மிச்சம்
அட காடு விளையட்டும் பெண்ணே நமக்கு காலம்
இருக்குது பின்னே''—

என்கிற நம்பிக்கையில் தங்கள் வாழ்நாளை கழித்துக்கொண்டிருக்கிறார்கள் விவசாய மக்கள்.

பிற்பகல் 1.20

அவர்களின் வேதனைக்கான காரணங்களைக் கண்டறிந்து, களைந்தெரிவதற்கான வழிவகைகளை புரட்சித் தலைவி அவர்கள் தந்துள்ளார்கள். நமது நாட்டிலுள்ள தரிசு நிலங்களை சாகுபடி நிலங்களாக ஆக்கத் திட்டம் தந்துள்ளார்கள். நெல் உற்பத்தியைப் பெருக்க வழிகாட்டியுள்ளார்கள். நம் நாட்டின் நிலத்தின் பரப்பிற்கோ, வளத்திற்கோ, நிலத்தில் உழைக்கும் விவசாயிகளுக்கோ குறைவில்லை. அவை அனைத்தையும் முறைப்படுத்தி செயல்படுத்தும்போதுதான், மக்கள் நிம்மதி பெருமூச்சு விட முடியும். இந்தக் கருத்தினை புரட்சித் தலைவர் அவர்கள திரைப்பட பாடலிலே சொல்லியிருக்கிறார்கள்.

''என்ன வளம் இல்லை இந்த திருநாட்டில்
ஏன் கையை ஏந்தவேண்டும் வெளிநாட்டில்
ஒழுங்காய் பாடுபடு வயக்காட்டில்
உயரும் உன் மதிப்பு வெளிநாட்டில்''

என்று பாடியிருக்கிறார்கள். அந்த இலக்கை நோக்கி வேளாண்மைத் துறையை வழிநடத்திச் செல்வதிலே மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்கள் நம்பிக்கை நட்சத்திரமாக திகழ்கிறார்கள். இந்த நாட்டில் எத்தனையோ கொடிகள் பறக்கலாம், ஆனால் புரட்சித் தலைவர் அவர்களோ, எந்தக் கொடி பறக்க வேண்டும் என்று சொன்ன போது, ''எங்கும் பறக்கவேண்டும் ஒரு சின்னக்கொடி, அது பஞ்சம் இல்லையெனும் அன்னக்கொடி.'' என்று சொன்னார்கள். அந்த பஞ்சம் இல்லை என்னும் அன்னக்கொடி

அன்னமிட்ட கையாம் புரட்சித் தலைவி அவர்கள் ஆட்சியிலே
தமிழகம் முழுவதும் பட்டொளி வீசிப் பறக்க நம்முடைய
இதய தெய்வம் அவர்கள் முயன்று கொண்டிருக்கிறார்கள்.

ஜெர்மிபென்தம் என்கிற பொருளாதார நிபுணர், மேதை,
அரசின் திட்டங்கள் பற்றிக் குறிப்பிடுகையில், 'பெருவாரி
யான மக்களின் அதிகப்படியான மகிழ்ச்சிதான் இலக்காக
இருக்கவேண்டும்' என்று குறிப்பிட்டார்கள், அவர்களுடைய
வார்த்தையிலே, அவருடைய வார்த்தையிலே என்ன சொல்கி
றார்கள் என்றால், Greatest Happiness of the Greater Number
என்பதாகும். அந்த அடிப்படையிலேதான், தமிழகத்
திலே அதிக எண்ணிக்கையில் உள்ள விவசாயிகளின்
மகிழ்ச்சி என்கிற இலக்கை நோக்கி, இந்த விவசாய
நிதிநிலை அறிக்கையில் அளித்துள்ள பல்வேறு திட்டங்களைப்
பாராட்டுகிறோம். அதே நேரத்திலே, அவர்களுக்காகப்
போடப்படும் திட்டங்களும், அரசின் நிதி உதவிகளும் மக்க
ளுக்குப் பயன்படும் வகையிலே, உரிய நேரத்தில் ஒழுங்காகச்
செல்வதற்கு அதிகாரிகளும் ஒத்துழைக்க வேண்டும்.

தமிழக விவசாயிகளைப் பொறுத்த வரையில், நீர்ப்பற்றாக்
குறையும், பருவ மழையின்மையும் மிகப் பெரிய தடையாக
உள்ளன. வானம் பொய்த்துவிட்டால், விவசாயிகள் வேலை
யற்றவர்களாக ஆகிவிடுகிறார்கள். மழையை நம்பியுள்ள
தமிழகம், வறண்டு வாட நேரிடுகின்றது. தமிழகத்திற்கு
வற்றாத நீர் வளம் கிடைக்கக்கூடிய வகையில், உரிய நட
வடிக்கைகள் மேற்கொள்ளப்படவேண்டும். அந்த வகையிலே
பல ஆண்டுகாலமாக காவிரிப் பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வு
காண நீங்கள் எடுத்த, துணிச்சலான தமிழகத்தின் துயர்
துடைக்கும் நடவடிக்கையை நாடே பாராட்டுகின்றது. தேர்தல்
அறிக்கையில் சொன்னதுமட்டுமின்றி, அதைச் செயலிலும்
தாங்கள் தெளிவுப்படுத்திவிட்டீர்கள்.

அன்று காவிரி நீரைக் கொண்டுவர படை நடத்தி சென்
றார் ராணி மங்கம்மாள். • இன்றோ எங்கள் புரட்சித்தலைவி
அவர்கள் வீரமிக்க தலைமையிலே ராணி மங்கம்மாள் பணி
தொடர்கிறது.

புரட்சித் தலைவர் அவர்கள் ஆட்சிக்காலத்தில் தெலுங்கு
— கங்கைத் திட்டம் ஒரு மைல்கல்லாக இருந்தது. இன்று
புரட்சித் தலைவியின் ஆட்சிக் காலத்தில், கங்கை— காவிரி
இணைப்புத் திட்டம் உருவாகி, இந்திய வரலாற்றிலேயே
ஒரு முன்மாதிரி திட்டமாக அமையவேண்டும். அதற்கான
நடவடிக்கையை புரட்சித் தலைவி அவர்கள் மேற்கொள்ள
வேண்டுமென, விவசாயிகள் சார்பிலே பணிவான வேண்டு
கோளாக விடுக்கிறேன். இத்தகைய திட்டங்களை எல்லாம்
புரட்சித் தலைவி அவர்கள் செய்ய முடியுமா என்று ஏளனம்



செய்தவர்கள் பட்ஜெட்டை பார்த்ததும் வாயடைத்துப் போனார்கள். ஒரு பெண்ணால் நாடாள முடியுமா என்று நகைத்தவர்களுக்கு, புரட்சித் தலைவர் அவர்களே ஒரு திரைப் படத்திலே, தன் கருத்தைச் சொல்லியிருக்கிறார்கள். அந்தத் திரைப்படம் குலேபகாவலி. அதிலே ஒரு சிறிய கேள்வி வருகிறது. ஆட்சிப் பீடத்திற்கு அவசியமானவர்கள் ஆண் களா, பெண்களா என்ற கேள்விக்கு பதில் சொல்கிறபோது, புரட்சித் தலைவர் அவர்கள் சொன்னார்கள். ஆண், பெண் என்ற வித்தியாசம் ஆட்சிப் பீடத்திற்குக் கிடையாது. மக்களின் உதவிகள் என்ற நூலைக்கொண்டுதான் பதவி என்னும் பட்டம் வானளாவப் பறக்க வேண்டும். ஆகையால் நீதி, ஆளும் செங்கோல, நேர்மையான மகுடம், நிம்மதியான ஆட்சி இதுதான் அரசு என்றார்கள். இன்று புரட்சித் தலைவி அவர்களின் சட்டமன்றப் பணிகளைப் பார்த்தவர்கள் நாடாளும் நிர்வாகத்திறமையைக் காண்பவர்கள் ஒட்டு மொத்தமாகப் பாராட்டுக்களைக் குவித்துக்கொண்டிருக்கிறார் கள்.

பாரதி கண்ட புதுமைப் பெண்ணாகவும், பெண்ணுக்கு இலக்கணமாகவும், இலக்கியமாகவும், பெரியாரின் பெண்ணுரிமை சுதந்திரத்திற்கு உயிர் கொடுக்கும் சக்தியாகவும், புரட்சித் தலைவி அவர்கள் திகழ்ந்து கொண்டிருக்கிறார்கள். புரட்சித் தலைவி அவர்கள் மக்களின் பேராதரவு என்ற பீடத்தின் மீதுதான் தன் சிம்மாசனத்தை அமைத்துக் கொண்டிருக்கிறார் கள். அத்தகைய புரட்சித் தலைவி அவர்கள் ஜாதி பேதத்தால், ஆண், பெண் வேறுபாட்டால், ஆட்சிக் கட்டிலி லிருந்து அகற்றிவிட முடியும் என்று காலத்தால் ஒதுக்கப் பட்டவர்கள், அரசியலிலே காலாவதியாகிப் போனவர்கள் கற்பனை உலகிலே மிதந்து கொண்டிருக்கிறார்கள். நச்சு வார்த்தைகளை நாடு எங்கும் வீசிக் கொண்டிருக்கிறார்கள்.

கோபுரக் கலசத்தில் வந்து அமரும் காகம், தன் எச்சத்தை எறிந்துவிட்டுப் போவதால், கோபுரத்தின் பெருமையோ புனிதமோ, குறைந்துவிடாது. காகத்தின் மதிப்பும், மாண்பும் உயர்ந்து போகாது. கோபுரம் கோபுரம்தான், காக்கை காக்கைதான்.

தமிழக நிதிநிலை அறிக்கையின் பயன்கள் நாடு முழுவதும் கிடைத்துள்ளன. எனது செய்யாறு தொகுதியின் தேவை களை மாண்புமிகு முதல்வர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டுவருவதற்கு முன் மாண்புமிகு புரட்சித் தலைவி அவர் கள் தாய் உள்ளத்தோடு, என்னுடைய தொகுதியிலே இருக்கிற திருவத்திபுரம் நகராட்சிக்கு புதிய திடடப் பணி களுக்காக 1 கோடியே 20 லட்சம் ருபாயை ஒதுக்கி உள்ளதற்கு செய்யாறு தொகுதி மக்களின் சார்பாக நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அதேபோல் அறிஞர் அண்ணா அவர்கள் முதலமைச்சர் ஆனவுடன் தமிழ்நாட்டில் தொடங்கப்பட்ட முதல் கல்லூரி செய்யாறு அரசு அறிஞர் அண்ணா கலைக் கல்லூரியாகும். அவர் மறைந்ததும், அவர் பெயரை தாங்கி நிற்கும் முதல் கல்லூரியும் அதுவே ஆகும், அந்தக் கல்லூரிக்கு இவ்வாண்டு வெள்ளிவிழா ஆண்டாகும். மாண்புமிகு முதல்வர் அவர்கள் இந்த ஆண்டில் புதியதாக எம்.எஸ்சி., கணிதம், எம்.எஸ்சி., இரசாயனம், எம்.எஸ்சி., பௌதீகம் போன்ற முதுநிலைப் பட்ட வகுப்புகளை வெள்ளி விழா பரிசாகத் தொடங்கி வைக்க வேண்டுமாய் கேட்டுக் கொள்கிறேன்.

பிற்பகல் 1.25

தமிழ்நாட்டிலேயே புரட்சித் தலைவி அவர்களின் பொற் கரங்களால் தந்தை பெரியார் அவர்களின் சிலையை 1984-லே திறந்து வைக்கும் பாக்கியத்தை பெற்றது செய்யாறு தொகுதியாகும்.

அதேபோல் விவசாய மக்கள் அதிகமாக இருக்கின்ற பகுதியிலே அவர்கள் தேர்தல் சுற்றுப்பயணத்தின்போது செய்யாறிலே இருக்கின்ற சர்க்கரை ஆலை முறையாகத் திறந்து வைக்கப்படும் என்ற சொல்லை சொல்லியிருக்கிறார்கள். அதே போன்று நவம்பர் மாதத்திற்குள் மீண்டும் சர்க்கரை ஆலை திறந்து வைக்கப்பட ஆவண செய்ய வேண்டுகிறேன் (மணியடிக்கப் பெற்றது). கிராமங்களில் உள்ள நெச வாளர்களுக்காக கூட்டுறவு நூற்பு ஆலை ஏற்பாடு செய்ய வேண்டுகின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** திருமதி கற்பகம் இளங்கோ.

**திருமதி கற்பகம் இளங்கோ :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கல்லூரி ஆசிரியையாக இருந்த என்னை, காரைக்குடி தொகுதி மக்களுக்கு சேவை செய்ய வாய்ப்பளித்த என் இதய தெய்வம் புரட்சித் தலைவி அவர் களுக்கும், என் தொகுதி மக்களுக்கும், விவசாய மான்யத்தில் பங்கேற்று பேச வாய்ப்பளித்தமைக்கும், நன்றி கூறி எனது உரையை துவக்குகின்றேன்.

இந்திய விவசாயிகள் கடனிலே பிறந்து கடனிலே வாழ்ந்து கடனிலே சாகின்றனர் என்ற நிலைக்கு தமிழகத்திலே முற்றுப் புள்ளி வைக்கப்படும் என புரட்சித் தலைவி அவர்கள் நமது தேர்தல் அறிக்கையில் கூறியிருந்த வண்ணம் விவசாயிகள் முன்னேற்றத்திற்காக பல திட்டங்களை அறிவித்துள்ளார்கள்.



உரம், பூச்சி மருந்துகளுக்கு விற்பனை வரியினைக் குறைத்து அதன் மூலம் விவசாயிகளின் இடுபொருள் செல வினைக் குறைத்திடவும், முக்கிய பயிர்களின் விளைச்சலுக்கு விவசாய வருமான வரியிலிருந்து அறவே வரி விலக்கு அளித்தமைக்கும், குக்கிராமங்களில் விவசாயத்தை மட்டுமே நம்பி வாழும் எங்கள் பகுதியின் விவசாயப் பெருங்குடி மக்களின் சார்பில் மாண்புமிகு புரட்சித் தலைவி அவர் களுக்கு பாராட்டுதலையும், நன்றியினையும் காணிக்கை யாக்குகின்றேன்.

சட்டமன்றத்தில் 25 பெண்களுக்கு இடமளித்து தாய்க் குலத்திற்கு பெருமை சேர்த்தது போல எட்டு ஆண்டுகளில் 72,000 பண்ணை மகளிருக்கு டேனிடா உதவியுடன் பயிற்சி யளிக்கும் பெருந்திட்டத்தினை அறிவித்த மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கு தமிழகத்து வேளாண்குடி தாய்மார் கள் சார்பாக நன்றியினைத் தெரிவிப்பதோடு, அவர்கள் புரட்சித் தலைவிக்கு என்றென்றும் நன்றியுடன் இருப்பார்கள் என்று உறுதியினையும் அவர்கள் சார்பாக தெரிவிக்க விரும்புகிறேன்.

கழக ஆட்சி அமைத்தவுடன் கடும் சிக்கலானது காவிரி நீர் பிரச்சினை. கர்நாடக அரசானது காவிரியில் தண்ணீர் அளிக்க மறுத்தாலும், இயற்கை அன்னை தமிழகத்தின் நம் அன்னையாம் புரட்சித் தலைவி மீது கருணைமிகக் கொண்டு, கரைபுரள வெள்ளத்தினை காவிரியில் தந்தாள், தஞ்சை விவசாயிகளின் வாழ்வில் விளக்கேற்றச் செய்த நம் வெற்றிச் செல்விக்கு விதைக்கின்றேன் வாழ்த்துக்களை வணக்கமுடன்.

தற்போது தமிழகத்தின் மக்கள் தொகை சுமார் 5 கோடியாகும். தற்போதைய நமது அரிசி உற்பத்தி 60 லட்சம் மெட்ரிக் டன்னாகும். ஆனால் கி.பி. 2000-ல் நமது தமிழகத்தின் ஜனத்தொகை 6½ கோடியாக உயரும் என எதிர்ப்பார்க்கப்படுகிறது. அப்போதைய அரிசி உற்பத்தி சுமார் 95 லட்சம் டன்னாக இருந்தால்தான் அன்றைய உணவுத் தேவையைச் சமாளிக்க முடியும். அதற்குத் தகுந்தவாறு திட்டமிட்டு செயல்படும் வகையில் இந்த அரசு, சிறப்பு அரிசி உற்பத்தித் திட்டத்தினை துவக்கியுள்ளதை வரவேற்கிறேன். அந்த வகையில் இந்த அரசு, சிறப்பு அரிசி உற்பத்தித் திட்டத்தை, இந்த ஆண்டு இராமநாதபுரம் பெரியார் மாவட்டங்களோடு வறட்சி மிகுந்த எங்கள் மாவட்டமான பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் மாவட்டத்திற்கும் நீடித்திருப்பதற்காக என் மாவட்டத்தின் சார்பில் இந்த அரசுக்கும், முதல்வருக்கும் நன்றி கூறிக் கொள்ள விரும்புகிறேன்.

'இதனை இதனால் இவன்முடிக்கும் என்றாய்ந்து
அதனை அவன்கண் விடல்'— என்ற குறளுக்கிணங்க

புரட்சித் தலைவி அவர்கள் வேளாண்மைத் துறைக்கு தீவிர விவசாயி ஒருவரையே வேளாண்மைத் துறை அமைச்சராக நியமித்து இருப்பதை பாரோர் மகிழ்ந்து பாராட்டுகின்றனர்.

நமது மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் அடிக்கடி ''விவசாயிகளும் விவசாயத்துறை அலுவலர்களும் மக்கள் மத்தியில் மதிப்பு மிக்கவர்களாகவும் மரியாதைக்குரியவர்களாகவும் ஆக்கப்படவேண்டும்'' எனக் கூறுவார்கள். அவர் ஒரு விவசாயக் குடும்பத்தைச் சேர்ந்த நடைமுறை விவசாயி என்பதனால் ஏற்பட்ட அவரது அந்த உணர்வுகள் வளப்படுத்தப்பட வேண்டும்.

நூற்றாண்டுகளுக்குமேல் செயல்பட்டு வரும் வேளாண்மை துறையை இந்த அரசு மேலும் பலப்படுத்த வேண்டும். ''உண்டி கொடுத்தோரே உயிர் கொடுத்தோர், உப்பிட்டவரை உள்ளளவும் நினை'' என்ற பழிமொழிகளுக்கு இணங்க நமக்கு உணவு தரும் விவசாயிகளையும், அவர்களுக்கு உதவிக்கரமாக இருக்கும் விவசாய விஞ்ஞான தொழில்நுட்ப அலுவலர்களையும் இந்த அரசு பாராட்டி அவர்களை நன்கு பயன்படுத்திக் கொள்ளவேண்டும். அவர்களின் பணிகளை ஊக்கப்படுத்தும் வகையில் வேளாண்மைத் துறையை தொழில் நுட்பமாக, தொழில் நுட்பத் துறையாக மாற்றி வேளாண்மைத் துறைக்கு தொழில்துறை அந்தஸ்து கொடுத்து வேளாண்மை கவுன்சில் அமைத்திட ஆவன செய்ய கேட்டுக் கொள்கிறேன்.

பிற்பகல் 1.30

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அவையின் அனுமதியுடன் அவையின் அலுவல் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

திருமதி கற்பகம் இளங்கோ : பசுமைப் புரட்சி மூலம் அதிக உற்பத்தி செய்து விளைச்சலில் புரட்சி காணும் விவசாயிகளுக்கு புரட்சித் தலைவி விருதினையும், அதற்கு ஊக்கமும் ஆக்கமும், தந்து உறுதுணையாக இருந்திடும் வேளாண்மை அலுவலருக்கு அண்ணா விருதையும் ஒவ்வோர் ஆண்டிலும் உழவர் திருநாளில் மாண்புமிகு முதல்வர் அவர்களின் பொற்கரங்களால் வழங்கிட வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.



மகாத்மா காந்தியடிகள் சமுதாய வளர்ச்சித் திட்டங்கள் கிராமப்புறங்களில் செயல்பட வட்டார அளவில் திட்டங்கள் தீட்டப்பட வேண்டும் என்றார்கள். அந்த வகையில் வட்டார அளவின் வேளாண்மை வளர்ச்சி அலுவலர்களின் பணி மிகவும் பாராட்டத்தக்க வகையில் அமைந்துள்ளது. மக்கள் பிரதிநிதிகளான ஊராட்சி மற்றும் ஒன்றியத் தலைவர்களோடும் சட்டமன்ற நாடாளுமன்ற உறுப்பினர்களோடும் உள்ள தொடர்புகள் மிக நல்ல முறையில் உள்ளன. வழக்கமாக பொதுமக்கள்தான் அரசு அலுவலர்களைச் சென்று பார்க்கும் நிலை நாட்டில் உள்ளது. ஆனால் வேளாண்மைத்துறை மட்டுமே அதற்கு விதிவிலக்கு. வேளாண்மை அலுவலர்கள் விவசாயிகளைத் தேடி அவர்களுடைய வீடு, வயல், தோட்டங்களுக்குச் சென்று சந்தித்து பழமையில் ஊறித் திளைத்திருக்கும் அவர்களின் மனப் பக்குவத்தை மாற்றி புதிய விஞ்ஞான விவசாய தொழில் நுட்பங்களை எடுத்துக் கூறி அவற்றை ஏற்கச் செய்து உற்பத்தியைப் பெருக்கும் உன்னதப் பணியில் ஈடுபட்டு வருகின்றனர். இத்தகைய வேளாண்மை வளர்ச்சி அலுவலர்களுக்கு வட்டார அளவில் வட்டார வளர்ச்சி அலுவலர் வட்டாட்சியர் மற்றும் உதவிக்கல்வி அலுவலர் ஆகியோருக்கு உள்ளது போன்ற நிதி மற்றும் நிர்வாக அதிகாரங்கள் அரசு ஆணை எண் 289-ன் வாயிலாக வழங்கப்பட்டு அரசுத் திட்டங்கள் விவசாயிகளுக்கு கால தாமதமின்றி உடனடியாகவும் நேரடியாகவும் கிடைக்க அது வழி கோலுகிறது. விலைவாசி உயர்வு என்றால் அரிசி, பருப்பு போன்ற உணவுப் பொருட்களின் விலையைத்தான் குறிப்பிடுகிறார்கள். தக்காளி விலைஉயர்ந்து வந்ததை எப்படி புரட்சித் தலைவி தடுத்தாட்கொண்டு விலையைக் குறைத்து வீட்டுத் தாய்மார்களின் பாராட்டைப் பெற்றார்கள் என்பதை நாடு அறியும். உற்பத்தியை அதிகப்படுத்தி விலைவாசியைக் குறைக்க அரசு முழுமையாக பாடுபட்டு வருவது வரவேற்கத்தக்கதாகும்.

பசும்பொன்மாவட்டம் வேளாண்மை பெருங்குடி மக்கள் அதிகம் வாழும் மாவட்டம். இம்மாவட்த்தில் வேளாண்மைத்தொழில் வளர்ச்சியடைய தேவையான ஆராய்ச்சி கூடங்களோ, ஆராய்ச்சி நிலையங்களோ உழவர் பயிற்சி மையமோ இல்லை. எனவே, மண் ஆய்வுக் கூடம், உரப் பரிசோதனைக் கூடம் பூச்சி மருந்து பரிசோதனைக் கூடம் போன்ற ஆராய்ச்சி கூடங்களையும் உழவர் பயிற்சி மையத்தினையும் பசும்பொன் மாவட்டத்தின் தலை சிறந்த நகரான காரைக்குடியில் தொடங்கி உற்பத்தியைப் பெருக்க இந்த அரசு உதவிட வேண்டுகிறேன்.

பசும்பொன் மாவட்டம் வறட்சியான மாவட்டம். 24
மாவட்டத்தில் செம்மண் அதிகம் காணப்படுகிறது. இம்
செம்மண் பற்றிய ஆராய்ச்சி நிலையமும், எனவே
பயிர்களின் சாகுபடி பற்றிய ஆராய்ச்சி நிலையம் மானாவாரி
தருவதுடன், வள்ளல் அழகப்ப செட்டியார் அமைத்துத்
வேளாண்மைக் கல்லூரி ஒன்று நிறுவி வேளாண்மை நகரில்
நீண்ட நாள் ஆசையை நிறைவேற்றிட வேண்டுமாய் மக்களின்
கேட்டுக் கொள்கிறேன். மேலும் காரைக்குடி அன்புடன்
வேப்பமரங்களும் பனை மரங்களும் தொகுதியில்
தால் வேப்ப எண்ணெயிலிருந்து தயாரிக்கும் அதிகம் இருப்ப
ஆலை ஒன்றை நிறுவிடவும், பனை மரத்திலிருந்து பூச்சி மருந்து
படும் கைவினைப் பொருட்கள் பயிற்சி தயாரிக்கப்
துவக்கிடுமாறு அன்புடன் மையம் ஒன்றையும்
வந்தால் பத்தும் வேண்டுகிறேன்.
நம் பசிப்பிணி நீக்க பறந்து போகும் பசி
கோரிக்கையில் பல்வேறு திட்டங்களை என்டர்.
அமைச்சர் தந்த மாண்புமிகு மானியக்
வாழ்த்தி அவர்களையும் வேளாண்மைத் துறை
விடைபெறுகிறேன். அவரது துறையினரையும்
நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** திரு. ஆர். ஈஸ்வரன்.

**திரு. ஆர். ஈஸ்வரன் :** மாண்புமிகு
தலைவர் அவர்களே, வேளாண்மைத் துறை பேரவைத்
கோரிக்கையில் பேசுவதற்கு வாய்ப்பு அளித்தமைக்காக மானியக்
கூறி தமிழ்நாட்டில் இருக்கக்கூடிய அனைத்து நன்றி
பல்வேறு கஷ்டத்திற்கு உள்ளாகிக் விவசாயிகளுமே
தொல்லைகளுக்கு உள்ளாகிக்கொண்டு கொண்டு, கடன்
நேரத்தில் தமிழ்நாட்டில் சர்க்கரை இருக்கிறார்கள். அதே
இருக்கின்றன. இந்த 31 ஆலைகள் 31 ஆலைகள்
127.16 லட்சம் டண். அதன் ஆலைகளின் அறவைத்திறன்
லட்சம் டன் சீனி மூலமாக ஒரு ஆண்டுக்கு 11.54
விவசாயிகளிடமிருந்து உற்பத்தியாகிறது. அதே நேரத்தில்
படுகிறது. ஒரு டன்னுக்கு சுமார் ரூ. 50 பிடிக்கப்
ரூபாய் அதன் மூலம் ஒரு ஆண்டுக்கு 65.5 கோடி
நேரத்தில் விவசாயி களிடமிருந்து வருமானம் வருகின்றது. அதே
விவசாயிகளுக்கு இங்கிருக்கிற சட்டமன்ற உறுப்பினர்கள் கூட
அந்த மின்சாரம் இனாமாக வழங்கப்படுகிறது.
விவசாயிகளுக்கும் மின்சாரவசதி பெரிய விவசாயிகளுக்கும் சிறிய
வசூல் செய்ய வித்தியாசம் வைத்து மின்சார கட்டணத்தை
கள் வேண்டும் என்று சில சட்டமன்ற உறுப்பினர்
அளவில் கூறினார்கள். ஆனால் விவசாயிகளைப் பொறுத்த
உற்பத்தியிலிருந்து சுமார் 65 கோடி ரூபாய்க்கு மேல் கரும்பு
வருமானம் கிடைக்கிறது.
அதே



நேரத்தில் மின்சாரக் கட்டணம் ஒரு ஆண்டுக்கு இனாமாக விவசாயிகளுக்கு அளிப்பதால் அரசின் இருப்பு ரூ. 36 கோடி தான். மின்சார இலாக்காவினுடைய மொத்த செலவினங்கள் 500 கோடி ரூபாய் என்று இருக்கிறது. ஆனால் விவசாயிகளுக்கு மட்டும். 36 கோடி ரூபாய் தான் செலவிடப்படுகின்றது. ஆளுநர் உரையிலே எப்படியாவது விவசாயிகளுடைய கடனை தள்ளுபடி செய்வதற்கு ஆய்வு செய்வதாக சொல்லப்பட்டிருக்கிறது. ஆனால் நிதிநிலை அறிக்கையில் ஒரு வார்த்தைகூட விவசாயிகளுடைய கடனைப் பற்றி சொல்லவில்லை. விவசாயிகளைப் பொறுத்தவரையில் நெல்லாக இருந்தாலும் அல்லது சோளமாக இருந்தாலும் ........

பிற்பகல் 1.35

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவசாயிகளுக்கு மின்சாரம் வழங்குவதைப் பற்றி மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னார்கள். 36 கோடி ரூபாய் என்று சொன்னார்கள். மொத்தமாக விவசாயிகளுக்கு மின்சாரம் வழங்குவதிலே ஏறத்தாழ 545 கோடி ரூபாய் இந்த அரசுக்கு இழப்பு ஏற்படுகிறது என்பதை இந்த அவைக்கு நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** திரு. எஸ். ஆர். பாலசுப்பிரமணியன் .

**திரு. எஸ். ஆர். பாலசுப்ரமணியன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. முன்பு இங்கே வைக்கப்பட்ட நிதி நிலை அறிக்கையிலே கூட நம்முடைய நிதி அமைச்சர் அவர்கள் ஆண்டு ஒன்றுக்கு 550 கோடி ரூபாய் அதிலே இழப்பு ஏற்படுவதாகச் சொல்லியிருக்கிறார்கள். ஆனாலும், தொடர்ந்து வெளியிலே முன்னாள் முதலமைச்சராக இருந்தவர் தன்னுடைய பத்திரிக்கையிலே இலவச மின்சாரம் விவசாயிகளுக்கு வழங்குவதாலே ஏற்படுகின்ற இழப்பு 30 கோடி ரூபாய் என்று எழுதிக்கொண்டிருக்கிறார். அது எப்படி என்பதை இப்பொழுது இல்லாவிட்டாலும் கூட தன்னுடைய பதிலுரையிலே அமைச்சர் அவர்கள் விளக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

53—330—15

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** திரு. நா. சா. பழனிசாமி

**திரு. நா. சா. பழனிசாமி :** பேரவைத் தலைவர் அவர்களே, விவசாயத்திற்கு இலவசமாக மின்சாரம் அளிப்பதில் 30 கோடியிலிருந்து 40 கோடி வரை என்று சொல்லப்படுவது ஹார்ஸ் பவருக்கு 50 ரூபாய் கட்டணம் என்று முன்பு வரை வசூலித்துக்கொண்டிருந்த முறையில் 10 லட்சம் பம்பு செட்டுகளுக்கு சராசரியாக ஒரு பம்ப் செட்டுக்கு 5 ஹார்ஸ் பவர் அல்லது 6 ஹார்ஸ் பவர் என்ற முறையிலே கணக்கிட்டு பார்க்கின்றபோது ஏற்படுகின்ற இழப்பு அந்தத் தொகை என்றுதான் சொல்லப்படுகிறது. அந்தத் தொகைதான் இழப்பு என்று சொல்லப்படவேண்டுமே அல்லாமல் மொத்த மாக விவசாயத்திற்கு ஏற்படுகின்ற இழப்பை எல்லாம் சேர்த்து 10 ஆண்டுகளுக்கு முன்பு இருந்த நிலைமையை எல்லாம் சேர்த்து இன்று டோட்டலாகச் சொல்வது என்பது....

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர்.

**மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம் :** பேரவைத் தலைவர் அவர்களே, 30 கோடி கருணாநிதியின் மூலம் ஏற்பட்ட இழப்பு. மீதி புரட்சித் தலைவர் எம்.ஜி. ஆரால் ஏற்பட்ட இழப்பு.

**திரு. நா. சா. பழனிசாமி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே....

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** திரு. பழனிசாமி. அவர் என்ன தொகை என்று ஒரு விளக்கம் கேட்டார். நீங்கள் பேசியிருக்கிறீர்கள். உட்காருங்கள்.

**திரு. ஆர். ஈஸ்வரன்:** பேரவைத் தலைவர் அவர்களே, விவசாயிகளுடைய மின்சாரக்கட்டணம் மொத்தத்திலே 36 கோடி ரூபாய் இருக்கும் என்று தெளிவாக இருக்கிறது. மின்சாரத் துறை மானியக் கோரிக்கையில் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இறுதியாகச் சொன்னால் நலமாக இருக்கும்.

அதே நேரத்தில் கரும்பை மற்ற மாநிலங்களில் உற்பத்தி செய்யக்கூடிய விவசாயிகளுக்கு விலை கூடுதலாக இருக்கிறது. சுமார் 400-லிருந்து 500 ரூபாய் வரைக்கும் மாநிலங்களில் இருக்கிறது. ஆனால் அதே நேரத்தில் மற்ற நாட்டில் விலை ரொம்ப குறைவாக இருக்கிறது. தமிழ் விவசாயிகளுடைய உற்பத்திச் செலவு கூடுதலாக இருக்கிறது. இங்கு



உர விலை கூடுதலாக இருக்கிறது. எனவே தமிழ்நாட்டில், இங்கிருக்கக்கூடிய விவசாயிகளுக்கு உற்பததி விலையைக் கூட்ட வேண்டுமென்று மாண்புமிகு முதல்வர் அவர்களையும் மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்களையும் நான் கேட்டுக்கொள்கிறேன்.

அதே நேரத்தில் கொள்முதல் விலை 50 ரூபாயை நீங்கள் ஊக்கமாகக் கொடுத்தால் அது விவசாயிகளுக்கு நன்றாக இருக்கும். நெல் கொள்முதல் விலையை அரசு உயர்த்தித்தர வேண்டும். தஞ்சை மாவட்டத்திற்கு மட்டும் ஒரு போனஸ் மாதிரி கொடுக்கிறீர்கள். அதே நேரத்திலே அதை தமிழ்நாடு முழுவதுமாக விரிவுபடுத்த வேண்டும்.

பிற்பகல் 1.40

வீணாகிக் கொண்டிருக்கும் தென்னை நார் கழிவுப் பொருட்களை விவசாய உரமாக பயன்படுத்தி தேவையான காளானை அதிக அளவுக்கு உற்பத்தி செய்து தென்னை நார் கழிவுகளை இயற்கை உரமாக செய்தால் அது அந்த விவசாயிகளுக்கு ஒரு உரமாக பயன்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இன்றைக்கு விவசாயிகளைப் பொறுத்தவரையில் இந்த கரும்பு செஸ்லிருந்து ரோடு போடாததால் மிகவும் கஷ்டப்படு கிறார்கள். ஆகவே கரும்பு அபிவிருத்தித் திட்டத்தின் மூலமாக புதிதாக ஆரம்பிக்கப்பட்ட ஆலைகள் மூலம் அங்கே இருக்கக்கூடிய விவசாயிகளுக்கு நல்ல சாலைகளை அமைத்துத்தர முன்வரவேண்டுமென்று கேட்டுக்கொள் கிறேன். எங்கள் தென் மாவட்டங்களில் புதிதாக ஆலைகள் ஆரம்பிக்கப்பட்டு இருக்கின்றன. அங்கே சாலைகள் இல்லா மல் ரொம்ப கஷ்டமாக இருக்கிறது. ஆகவே சாலைகள் அமைத்துத் தர நடவடிக்கை எடுக்கவேண்டுமென கேட்டுக் கொள்கிறேன்.

அதேமாதிரி அந்தப் பகுதிகளில் ஐரோப்பிய பொருளா தார நிதி உதவியுடன் சுமார் 15 கோடி ரூபாய்க்கு மேல் 55 கோடி ரூபாய் வரையில் 1991-92 ஆம் ஆண்டுக்கு அந்த ஏரிகளுக்கு பயன்படுத்துவதற்காக நிதி ஒதுக்கப் பட்டிருக்கிறது. ஆனால் அந்த நிதி ஆங்காங்கே இருக்கக் கூடிய விவசாய சங்கங்கள் மூலமாக அந்த நிதியைக் கொடுத்தால் அவர்கள் இந்த வேலைகளை தெளிவாகச் செய்வார்கள். தனிப்பட்ட ஒரு நபரிடம் காண்ட்ராக்ட் கொடுக்கும்போது அந்த வேலை சரியான முறையில் நடை பெறுவது இல்லை. ஆகவே அந்த ஐரோப்பிய பொருளா தார நிதி உதவிகளை தென் மாவட்டங்களுக்கு கொஞ்சம் கூடுதலாக ஒதுக்கித் தரவேண்டும் என மாண்புமிகு அமைச்சர் அவர்களை நான் மிக அன்போடு கேட்டுக் கொள்கிறேன்.

அதேபோல் வட மாநிலங்களில் கரும்பு வெட்டுகிற நேரத்தில் அந்த வெட்டுக் கூலி மற்றும் அங்கே இருக்கக் கூடிய கரும்பை எடுத்து செல்வதற்கு உண்டான கூலியை அங்கே இருக்கக்கூடிய நிறுவனமே ஏற்றுக்கொள்கிறது. ஆனால் தமிழ்நாட்டைப் பொறுத்தவரையில் விவசாயிகளுக்கு பல்வேறு கஷ்டங்கள் இருக்கின்றன. ஆகவே அந்த ஆலை நிறுவனமே அந்த வெட்டுக் கூலியையும், போக்குவரத்து கூலியையும் ஏற்றுக்கொள்ளவேண்டுமென்று அரசு நட வடிக்கை எடுக்கவேண்டும் என்று கேட்டுக்கொண்டு வாய்ப் புக்கு நன்றி கூறி அமைகிறேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்** : அவைக்கு ஓர் அறிவிப்பு. இன்னும் 4 மாண்புமிகு உறுப்பினர்கள் பேச வேண்டியுள்ளது. தொடர்ந்து மாண்புமிகு அமைச்சர் அவர் கள் பதிலுரை கூற வேண்டியுள்ளது. நேரத்தின் அருமை கருதி மாலை 4-00 மணிக்கு விவாதமும் மாண்புமிகு அமைச்சர் அவர்களின் பதிலுரையும் தொடங்கலாம் என்ற கருத்து அவையில் தெரிவிக்கப்பட்டு கட்சித் தலைவர்கள் ஒப்புக்கொண்டிருக்கிறார்கள். எனவே, மாலை 4-00 மணிக்கு இந்த விவாதத்தை தொடர்ந்து வைத்துக் கொள்ள லாம் என்று இருக்கிறேன்.

மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் அவர் கள் கூறும்போது கருணாநிதியால் ஏற்பட்ட இழப்பு 30 கோடி ரூபாய்; புரட்சித் தலைவர் அவர்களால் ஏற்பட்ட இழப்பு 500 கோடி ரூபாய் என்று சாதாரணமாக இருக் கிறது. அது பின்னால் வருகிறபோது தவறுதலாக எடுத்துக் கொள்ளப்படும். எனவே, கருணாநிதி அறிவித்த சலுகை யால் 30 கோடி ரூபாய் இழப்பு; புரட்சித் தலைவர் அவர்கள் அறிவித்த சலுகையால் 500 கோடி ரூபாய் இழப்பு என்று அதை திருத்திக் கொள்ளலாம்.

**மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம்** : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கருணாநிதி அவர்கள் தந்த சலுகை 30 கோடி ரூபாய்; மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் தந்த சலுகை 520 கோடி ரூபாய் ஆகும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்** : பேரவையின் இன்றைய காலை நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. பேரவை மீண்டும் இன்று மாலை 4.00 மணிக்குக் கூடும். வணக்கம்.

பின்னர் பேரவை பிற்பகல் 1-44 மணிக்கு ஒத்தி வைக்கப்பெற்றது.



பேரவை பிற்பகல் 4-00 மணியளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. இரா. முத்தையா அவர்கள் தலைமையில் கூடியது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்** : வேளாண்மை குறித்த மானியக் கோரிக்கைகள் விவாதம்— தொடர்ச்சி. திரு. கே. தவசி.

**திரு. கே. தவசி.** : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னை இந்த பத்தாவது சட்டமன்றப் பேரவை யில், சாதாரணக் குடும்பத்தில் பிறந்த என்னை இந்தச் சபையிலும் பேச வாய்ப்பளித்த எங்களது குடும்பத்தின் திருவிளக்கு மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்களுக்கு என்னுடைய நெஞ்சார்ந்த நன்றியினைத் தெரிவித்து இங்கே பத்தாவது சட்டமன்றப் பேரவையில், விவசாயத் துறை பற்றிய மானியக் கோரிக்கையில் பேச வாய்ப்பளித்த மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கு மீண்டும் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

'' ஏர்முனைக்கு நேர் இங்கே எதுவுமே இல்லை
என்றும் நம்ம வாழ்விலே பஞ்சமே இல்லை ''

என்பதை உருவாக்கிட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

காவிரி நீர்ப் பிரச்சினையை சுமுகமான முறையில், தமிழகத்து மக்கள் போற்றுகின்ற வகையில், காவிரியி லிருந்து நீர் வரவேண்டுமென்றும் மேலும் நமக்கு இயற்கை யிலேயே கிடைத்த நீர்வளத்தைப்பற்றி, புரட்சித் தலைவி ஆட்சியில் கிடைத்ததை மனமார பாராட்டக் கடமைப் பட்டுள்ளவனாக இருக்கிறேன். அதேபோல, இந்த பத்தா வது சட்டமன்றப் பேரவையில் இங்கே விவசாய மானியக் கோரிக்கையில் நான் ஒரு சில கருத்துக்களை முன் வைக்க லாம் என்று நினைக்கிறேன்.

1989-90 ஆம் ஆண்டு மதுரை மாவட்டத்தில், குறிப் பாக, ஆண்டிப்பட்டி, உசிலம்பட்டி, தேனி போன்ற பகுதி களில் பருத்தியில் காய்ப்புழுக்கள் கட்டுப்படுத்த முடியாத அளவிற்கு பருத்தியை நாசம் செய்ததால் விவசாயிகள் பெரிதும் நட்டம் அடைந்தார்கள். விவசாயிகளுக்கு தகுந்த நட்டஈடு கோரி சாலை மறியல் போன்ற போராட்டங்களை அன்றைய ஆட்சியாளர்களை எதிர்த்து நடத்தினார்கள். வேளாண்மை பல்கலைக்கழகத்தில் இருந்து பயிர் வல்லு நர்கள் பாதிப்புக்குள்ளான பகுதிகளை பார்வையிட்டு சிறிது

காலம் பருத்திப் பயிரை பயிரிடாமல் மாற்றுப் பயிர் சாகுபடி செய்ய விவசாயிகளுக்கு அறிவுரை வழங்கினார்கள். ஆனால் சென்ற அரசு அந்த விவசாயிகளுக்கு நட்ட ஈடாக மாற்றுப் பயிர் செய்யத் தேவையான இடுபொருள்களை வழங்காமல் மீண்டும் இலவசமாக பருத்தி விதையையும், பயிர் பாதுகாப்பு மருந்துகளை வழங்கி விவசாயிகளை மேலும் ஒரு முறை நட்டம் அடைய வைத்தனர். சென்ற ஆட்சிக் காலத்தில் பருத்தி விதைகள் தனியாரிடமும் கூட்டுறவு மூலமும் (Tucos) கொள்முதல் செய்து கொள்ளை லாபம் அடித்தனர். அவர்கள் கொள்ளையடிக்கவேண்டி தனியாரிடம் விதைகளை கொள்முதல் செய்து, ஏழை விவசாயிகளை பெரிதும் பாதிப்பு அடையச் செய்திருக்கின்றனர். இந்த நிலையைப் போக்க, மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்கள் இந்த ஆண்டில் வேளாண்மைத் துறையில் கொடுக்கக்கூடிய இடுபொருள்களை நல்லமுறையில் பெற்றுத் தருவதற்கு வழி செய்ய வேண்டுகிறேன். வேளாண்மைப் பல்கலைக்கழக விவசாய வல்லுனர்கள் மாற்றுப் பயிர் செய்யச் சொல்லியும் மீண்டும் பருத்திக்கான இடுபொருள்களை வழங்கியதன்மூலம் தனியாரிடம் விதைகளை போலி டெண்டர்கள் மூலம் பெற்று கொள்முதல் செய்து சென்ற ஆட்சியாளர்களும் அதிகார வர்க்கத்தினரும் கொள்ளை லாபம் அடித்துள்ளனர். இதற்கு தனியாக ஒரு கமிஷன் அமைத்து அவர்களுக்கு தக்கதொரு பாடம் கற்பிக்க வேண்டுமாய் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, எண்ணெய் வித்துத் துறையைப் பொறுத்தமட்டில், எண்ணெய் வித்துக்களில் இன்று நமது மாநிலத்தில் அதிகமாகப் பயிரிடப்படுவது நிலக்கடலையாகும். இந்தக் கடலைக்கு மானியமாக ஒரு கிலோவுக்கு ஒரு ரூபாய் வழங்கப்படுகிறது. ஆனால் எண்ணெய் வித்துத் துறையைப் பொறுத்தவரையில் பேப்பர் புரக்யூர்மெண்ட்-தான் கடந்த தி.மு.க. ஆட்சிக்காலத்தில் நடைபெற்றுள்ளது. கொள்முதல் செய்யாமலேயே கொள்முதல் செய்யப்பட்டதாக போலி பில்களைத் தயாரித்து, அரசு மான்யம் அதிகாரிகளால் கொள்ளையடிக்கப்பட்டுள்ளது.

தாய்க்குலத்தின் பெருந்தலைவி, புரட்சித் தலைவி அவர்கள் அந்தத் தவறுகள் செய்தவர்கள்மீது நடவடிக்கை எடுக்க வேண்டுமாய் கேட்டுக்கொள்கிறேன்.

தமிழக அரசு வரலாற்றிலேயே, இந்தச் சட்டமன்றப் பேரவையில் இதற்கு முன்பு இல்லாத வகையில், சிறப்பு மிக்க வகையில், விவசாயக் குடும்பத்தில் பிறந்த ஒரு விவசாயியை வேளாண்மைத்துறை அமைச்சராக இங்கே பணியமர்த்தச் செய்து, மாண்புமிகு வேளாண்மைத் துறை



அமைச்சர் அவர்களின் சீரிய நடவடிக்கைகளின் காரணமாக பல ஊழல் அதிகாரிகள், கடந்த காலத்தில் செய்த ஊழல்களை கண்டுபிடித்து, இப்போது அவர்கள் வேலை நீக்கம் செய்யப்பட்டுள்ளனர்.

பிற்பகல் 4-05

மேலும் அவர்கள் மீது கடுமையான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்று நான் வலியுறுத்துகிறேன். ஊராட்சி ஒன்றியத்தில் ஏ.டி.ஓ. என்ற ஒரு பதவி, கருணாநிதி ஆட்சிக் காலத்தில் போடப்பட்டு, அந்த ஏ.டி.ஓ.க்கள் யாருடைய கண்ட்ரோலில் இருக்கிறார்கள் என்றே தெரியவில்லை. ஊராட்சி ஒன்றியப் பெருந்தலைவராக நான் இருந்தபொழுது, ஏ.டி.ஓ.க்கள் ஊராட்சி ஒன்றியப் பெருந்தலைவர் கண்ட்ரோல் என்று சொன்னார்கள். ஆனால் ஒரு முறை கூட ஊராட்சி ஒன்றிய அலுவலகத்திற்கே வரவில்லை. எனவே, ஏ.டி.ஓ. பதவிகளை மாற்றி, சீர்திருத்தி அமைக்க வேண்டுமாய்க் கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக, தோட்டக் கலைத் துறையைப் பொறுத்த வரையில், இந்தத் துறையானது 1979 ஆம் ஆண்டு தனித் துறையாகப் பிரிந்தது. துறை தனியாகப் பிரிந்தபோது அத்துறையில் செயல்படுத்தப்பட்ட பல திட்டங்களை வெற்றிகரமாகச் செயல்படுத்திய வேளாண்மை பட்டதாரிகள் முற்றிலும் புறக்கணிக்கப்பட்டனர். தோட்டக் கலை ஆராய்ச்சிப் பிரிவுக்குத் தெரிவு செய்யப்பட்ட வேளாண்மை பட்டதாரிகள், அரசு ஆணையில் உள்ள சில லூப் ஹோல்ஸ்-களைக் காட்டி, விரிவாக்கப் பணியில் உதவித் தோட்டக் கலை இயக்குநர் முதல் தோட்டக்கலை இயக்குநர் வரை பதவி உயர்வு பெற்றனர்.

இதனால், தோட்டக் கலை திட்டங்களில் விரிவாக்கப் பணியில் பணிபுரிந்த வேளாண்மைப் பட்டதாரிகள் பணி மூப்பு இருந்தும் பதவி உயர்வு பெறாத நிலையில் இருந்து வருகிறார்கள். இப்பொழுது இந்த நிலையே தொடர்கிறது. ஆகவே, தமிழ்நாடு பப்ளிக் சர்வீஸ் கமிஷன் வழங்கிய சீனியாரிட்டி பிரகாரம் செய்து கொடுக்க வேண்டுமாய்க் கேட்டுக்கொள்கிறேன்.

மேலும் தோட்டக் கலைத் துறையானது வளர்ந்து வரும் ஒரு துறையாகும். மாநிலத்தில் திட்டக் குழுவில் வேளாண்மை மற்றும் நீர்ப்பாசனத்திற்கு ஆலோசனை கூறும் உறுப்பினர் ஒருவர் நியமனம் செய்யப்பட்டிருக்கிறார்.

இதேபோல தோட்டக் கலைக்கும், சம்பந்தப்பட்ட ஆலோசனை கூறுகின்ற மூத்த அரசு அதிகாரியை மாநிலத் திட்டக் குழுவிற்கு உறுப்பினராக நியமனம் செய்ய வேண்டுமென்று மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

மேலும், தோட்டக் கலை இயக்குநர் பதவிக்கு ஒரு ஐ.ஏ.எஸ். அதிகாரியை நியமனம் செய்து நிர்வாகம் சீராகவும், செம்மையாகவும், இலஞ்ச லாவண்யம் இன்றி நடைபெற ஆவன செய்ய வேண்டுமாய்க் கேட்டுக் கொள்கிறேன்.

வேளாண்மை மற்றும் தோட்டக் கலைத் துறையில் ஈராண்டு மற்றும் டிப்ளமா படிப்பு படித்தவர்கள் உதவி வேளாண்மை அலுவலர்களாகப் பணிபுரிந்து வருகிறார்கள். இவர்கள்தான் வேளாண்மைத் துறைக்கு முதுகெலும்பு போன்றவர்கள் என்ற நிலை இருக்கிறது. கடந்த திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியின்போது, பொதுப் பணித் துறை, நெடுஞ்சாலைத் துறைகளில் டிப்ளமா படித்து இளநிலைப் பொறியாளர்களாகப் பணிபுரிபவர்களுக்கு ஐந்தாவது ஊதியக் குழுவில் ரூபாய் 1,640 என அடிப்படைச் சம்பளம் அளிக்கப்பட்டது. ஆனால், வேளாண்மைத் துறையில் பணி புரியும் டிப்ளமா படித்த உதவி வேளாண்மை அலுவலர்களுக்கு 1,200 ரூபாய்தான் அடிப்படைச் சம்பளமாகக் கொடுக்கப்படுகிறது. எனவே, வேளாண்மைப் பெருங்குடி மக்களின் நலனுக்காகவும், நாட்டின் உணவு உற்பத்தியைப் பெருக்க உதவும் டிப்ளமா படித்த உதவி வேளாண்மை அலுவலர்களுக்கு, டிப்ளமா பொறியாளர்களுக்கு இணையான சம்பளமான 1,640 ரூபாயை அடிப்படைச் சம்பளமாக நிர்ணயம் செய்து அவர்களின் நீண்டகால, நியாயமானக் கோரிக்கையினை நிறைவேற்றித் தரும்படி கேட்டுக் கொள்கிறேன்.

வேளாண்மை ஒழுங்கு முறை விற்பனைக் கூடம் என்று தமிழ்நாட்டில் ஒவ்வொரு தாலுக்கா சென்டரிலும் கட்டப்பட்டு இயங்கி வருகின்றன. இங்கே விவசாயிகள் தங்கள் விளைபொருட்களை வெளி மார்க்கெட்டைக் காட்டிலும் கூடுதல் விலைக்கு விற்பனை செய்து கூடுதல் இலாபம் அடைய வேண்டுமென்ற நல்ல நோக்கத்திற்காகத் துவங்கப்பட்ட இந்த வேளாண்மை விற்பனைக் கூடம் இன்று செயலிழந்து எல்லா ஊர்களிலுமே, குறிப்பாக, மதுரை மாவட்டத்தில் உசிலம்பட்டி போன்ற ஊர்களில் கட்டப்பட்ட கூடங்கள் அப்படியே செயலிழந்து இருக்கின்றன. இத்துறையில் பணிபுரியும் கண்காணிப்பாளர்கள் மற்றும் விற்பனை ஆய்வாளர்கள் வியாபாரிகளிடம் லஞ்சத்தைப் பெற்றுக் கொண்டு, விவசாயிகள் விளை பொருட்களை விற்றுத் தரும்படி கோரினாலும், அவர்கள் தனியார் கமிஷன் மண்டிகளைக் காட்டிலும் குறைந்த விலைக்கு விற்றுத் தருவதாகக் கூறுகிறார்கள். இதனால் விவசாயிகள் பொருட்களை ஒழுங்கு முறை விற்பனைக் கூடங்களுக்கு எடுத்துச் செல்வதில்லை, வியாபாரிகள் ஒழுங்கு முறை விற்பனைக் கூடத்தில் கொள்முதல் செய்தால் அரசுக்கு வணிக வரி செலுத்த வேண்டிய நிலை இருப்பதால், வியாபாரிகள் இங்கு வருவதில்லை. எனவே இந்த நிலையை மாற்றி, கோடிக்கணக்கான ரூபாய் செலவு செய்து விவசாயிகள் நன்மை பெறுவதற்காகக் கட்டப்பட்ட அந்த ஒழுங்கு முறை விற்பனைக் கூடங்களை நல்ல முறையில் செயல்பட வைக்க இந்த அரசு நடவடிக்கை எடுக்க வேண்டுமாய் வேண்டுகிறேன்.



விதைச் சான்றைப் பொறுத்தமட்டில், வேளாண்மைத் துறையில் உள்ள வேளாண்மை வளர்ச்சி அலுவலர்கள் தங்களுக்கு வேண்டிய மற்றும் தங்கள் சொற்படி கேட்கின்ற விவசாயிகளையே விதைப் பண்ணை விவசாயிகளாகத் தேர்வு செய்கின்றனர். இவர்களுடைய விதைப் பண்ணையில் விதை உற்பத்தி குறைவாக இருந்தாலும் தனியாரிடம் விதை வாங்கி இவர்களது விதைப் பண்ணையில் உற்பத்தி செய்ததாகக் கூறி அரசிடம் விதை உற்பத்திக்கான மானியங்களைப் பெற்றுக்கொள்ளுகின்றனர்.

இதனால் விவசாயிகளுக்கு தரமற்ற விதைகள் கிடைக்கின்றன. சென்ற ஆட்சியில்......(மணியடிக்கப்பெற்றது)....உண்மைச்சான்று விதை (Truthful certificate) என வேளாண்மை வளர்ச்சி அலுவலர்கள் வாரச் சந்தைகளில் (கமிஷன் கடை) நெல் மற்றும் சிறு தானியம், நிலக்கடலை போன்றவற்றை வாங்கி, அதற்கு கிலோவிற்கு 50 பைசா மானியமாக அரசிடம் பெற்று, மாநிலம் முழுவதும் இலட்சக்கணக்கான ரூபாய்கள் கொள்ளையடித்தனர். இதனால், தரமற்ற விதைகளை விவசாயிகள் பெற்று, நஷ்டம் அடைந்தது மட்டுமல்லாமல், விவசாய உற்பத்தியும் பாதிக்கப்பட்டது. மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்கள் இதை சீர்திருத்தம் செய்ய வேண்டுமாய் கேட்டுக் கொள்கிறேன்.

அதற்கு அடுத்து, மானாவாரி நில மேம்பாட்டுத் திட்டம் என்ற திட்டத்தின்கீழ், 100 ஹெக்டேர் மானாவாரி நிலங்களில் மெகானிக் முறையில் பூச்சிகளை கட்டுப்படுத்த விளக்குப் பொறி வைப்பதற்காக ஒரு ஹெக்டேர் நிலத்திற்கு ரூ. 50 மானியமாக அரசு வழங்குகிறது. ஆனால், கடந்த ஆட்சியில் மானாவாரி நிலத்தில் விளக்குப் பொறிக்காக ஒரு பல்பு, ஒரு ஹோல்டர்.....(மணியடிக்கப் பெற்றது)........

பிற்பகல் 4-10

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** முடியுங்கள்.

**திரு. கே. தவசி :** 3 மீட்டர் ஒயர், சிறிய சில்வர் தட்டு போன்ற பொருட்களை மானியமாகக் கொடுக்கிறோம் என்று கூறி கொடுக்கவில்லை. மானாவாரி நிலங்களில் விவசாயிகள் மின்சாரத்திற்கு எங்கே செல்வார்கள் ? எனவே மின்சாரத்திற்கு இதுபோன்ற நடவடிக்கை முறைகளை மாற்றி, மாற்றுத் திட்டங்களை புரட்சித் தலைவி அவர்கள் செய்து கொடுக்க வேண்டுமாய் கேட்டு, என்னுடைய சிற்றுரையை முடிக்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** திரு. எம். சுந்தரசாமி. ஐந்து நிமிடத்தில் முடியுங்கள்.

**திரு. எம். சுந்தரசாமி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவசாயிகளினுடைய நிலையை எடுத்துக் கூறும் வகையிலே, முதன்மையாக ஒரு பழமொழியை ஆங்கிலத்திலே படிக்கிறேன். "An Agriculturist is born in debt, lives in debt; dies in debt and leaves in debt', என்ற பழமொழிக்கேற்ப, விவசாயிகள் பல கஷ்டங்களுக்கு உள்ளாக்கப்படுகிறார்கள். காரணம், அவர்களுடைய பற்றாக்குறை. அவர்களுடைய உற்பத்திச் செலவு, வருமானத்தை விட அதிகமாகிறது. எனவே, அவர்கள் அந்த நஷ்டத்தை ஈடுசெய்ய முடியாமல் மிகவும் கஷ்டப்படுகிறார்கள். எனவே, நெல்லின் விலையை உயர்த்தித் தர வேண்டும். கரும்பின் விலையை உயர்த்தித் தர வேண்டும். உரம், பூச்சி மருந்துகள் இவைகளை மானிய விலையிலே அளிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அம்பேத்கர், திருவண்ணாமலை சம்புவராயர் மாவட்டங்களில் பெரும்பான்மையாக கிணற்றுப் பாசனம், ஏரிப் பாசனம்தான். அணைக்கட்டுகள் கிடையாது. எனவே, போளூர் தொகுதியில், சண்பகத்தோப்பு அணையும், கலசப்பாக்கம் தொகுதியில் மேல் சோழங்குப்பம் என்ற இடத்தில் ஒரு அணையும் கட்டித் தரவேண்டுமென்று மிகவும் பணிவோடு கேட்டுக் கொள்கிறேன்.

கசிவு நீர்க் குட்டைகள் அதிகமாகக் கட்டித் தர வேண்டுமென்றும் கேட்டுக் கொள்கிறேன். விவசாயிகள் பணி செய்யும்போது, மின்சாரம் தாக்கி இறந்து விடுகிறார்கள். விஷ ஜந்துக்கள் கடித்து இறந்து விடுகிறார்கள். அவர்களுக்கு அரசாங்கம் மற்றவர்களுக்கு உதவி செய்வதுபோல, குறைந்தது ரூ. 25 ஆயிரம் கொடுத்து உதவ வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன். கலசப்பாக்கம் தொகுதியில் எந்தவித தொழிற்சாலையும் கிடையாது. அனைவரும்



விவசாயத் தொழிலை நம்பி வாழ்கிறார்கள். எனவே, போளூருக்கு அருகில் கரப்பூண்டி கிராம எல்லையில் ஓர் சர்க்கரை ஆலையை அமைத்துத் தர வேண்டுமென்றும் பணிவோடு கேட்டுக் கொள்கிறேன். இது ஏற்கனவே அரசாங்கத்தின் பரிசீலனையில் உள்ளது. விவசாயிகளுக்காக கலசப்பாக்கம் தொகுதியான எனது தொகுதியில ஒரு விவசாயக் கல்லூரி ஆரம்பித்துத் தரும்படியும் அன்போடு கேட்டுக் கொள்கிறேன்.

விவசாயிகள் வாங்கிய கடன்களை, சிறு விவசாயி, பெரு விவசாயி என்ற பாகுபாடு இல்லாமல் இதுவரை நிலுவையிலுள்ள அனைத்து கடன்களையும் ரத்து செய்ய வேண்டும். இப்போது விவசாயிகளுக்கு மின்சாரம் இலவசமாக அளிக்கப்படுகிறது. அதனைத் தொடர்ந்து அளிகக வேண்டுமென்றும் கேட்டுக் கொள்கிறேன. வேளாண்மை விரிவாக்க மையங்களில் விற்பனை செய்கிற பூச்சிக் கொல்லி மருந்துகள் தரமுள்ளவையாக இல்லை. அதை தரமுள்ள மருந்துகளாக விநியோகம் செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். மேலும் நெல் விதைகள், பூச்சி மருந்துகள் குறித்த காலத்தில் விவசாயிகளுக்கு வழங்கும்படியும் கேட்டுக்கொள்கிறேன். வேளாண்மை வயல் விளக்க அலுவலர்கள அடிமட்டத்திலுள்ள விவசாயிகளிடம் நேரடியாகத் தொடர்பு கொண்டு இப்பணிகளைச் செய்து வருகிறார்கள. இவர்களுக்கு மத்திய அரசுக்கு இணையான ஊதியம் வழங்கப்படவில்லை என்று சொல்லப்படுகிறது. கடந்த ஆண்டில் எல்லா ஊழியர்களுக்கும், மத்திய அரசுக்கு இணையான ஊதியம் வழங்கியிருக்கிறார்கள். எனவே, இவர்களுக்கும் மத்திய அரசுக்கு இணையான ஊதியத்தை வழங்க ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

பிற்பகல் 4-15

பொதுப்பணி நீர்ப்பாசன ஆய்வாளர்கள், சாலை ஆய்வாளர்கள் இவர்களுக்கும், வேளாண்மை வயல் விளக்க அலுவலர்களுக்கும் ஒரே மாதிரியான சம்பளம் வழங்கி விட்டார்கள். ஆனால், இப்போது பொதுப்பணி நீர்ப்பாசன ஆய்வாளர்களுக்கும், சாலை ஆய்வாளர்களுக்கும் சம்பள உயர்வு கொடுத்திருக்கிறார்கள். அதைப் போன்று இவர்களுக்கும் சம்பளத்தை உயர்த்திக் கொடுக்க வேண்டுமென்று மிகவும் பணிவோடு கேட்டுக் கொள்கிறேன்.

15 ஆண்டுகளாக இந்த இலாக்காவிலேயே பணிபுரிந்து வருகின்ற இவர்களுக்கு ஊதிய உயர்வு இல்லாமல் இருக்கின்ற நிலை இருக்கிறது. இவர்களுக்கு ஊதிய உயர்வு அளிக்கப்பட வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

இதற்கு முன்பு இந்தப் பணியிலே இருக்கின்ற 30 சதவிகிதம்
பேர்களுக்குப் பதவி உயர்வு தரவேண்டுமென்றும், மற்ற
70 சதவிகிதம் பேர்கள் நேரிடையாகத் தேர்வு செய்யப்
பெறவேண்டுமென்ற முறை இருந்தது. ஆனால் 30 சத
விகிதம் எடுக்கும்போது, மற்றவர்களைத் தேர்ந்தெடுப்பதில்
70 சதவிகிதம் இல்லையென்ற காரணத்தால், இந்த வகை
யில் அலுவலர்களை அந்த இடங்களுக்குப் பூர்த்தி செய்
திருக்கிறார்கள். இப்போது பூர்த்தி செய்து விட்டு ஏற்
கனவே இருக்கின்ற இந்த 30 சதவிகிதத்தைக் குறையுங்கள்
என்று சொல்லும்போது அவர்களுக்குப் ப்ரோமோஷன்
கொடுப்பதற்கு வகையில்லாமல் இருக்கிறது. எனவே, அதை
நீக்கி, இப்போது இருக்கின்ற 2,300 அலுவலர்களுக்குப்
பதவி உயர்வு தரவேண்டுமென்று மிகவும் பணிவோடு
கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, ஒரு அசிஸ்டெண்ட் அக்ரிகல்சுரல் ஆபீஸர்
800 பண்ணைக் குடும்பங்களுக்கு ஒருவராக நியமிக்க
வேண்டும் என்று அரசு உத்தரவு இருக்கிறது.
இப்போது 1,000, 1,200-க்கும் மேற்பட்ட பண்ணைக்
குடும்பங்களுக்கு ஒருவரை நியமனம் செய்து இருக்கின்றார்
கள். அதைக் குறைத்து, 800 பண்ணைக் குடும்பங்களுக்கு
ஒருவரை நியமனம் செய்து அவர்கள் தங்களுடைய பணி
களை நல்ல முறையில் செய்வதற்கு ஆவன செய்ய வேண்டு
மென்று மிகவும் பணிவோடு கேட்டுக் கொள்கிறேன். (மணி
யடிக்கப் பெற்றது.)

கடைசியாக, தமிழகத்திலே உள்ள விவசாயப் பெருங்
குடி மக்களுக்காகத் தன்னுடைய பதவியையே ராஜினாமா
செய்த எங்களுடைய அருமைத் தலைவர் வாழப்பாடி இராம
மூர்த்தி அவர்களுக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்
கொண்டு, காலையிலே என்னைப் பேசுவதற்குச் சேர்க்க
வில்லை என்றாலும், தர்ம ராஜா சபாநாயகர் அவர்கள்
இப்போது அனுமதி கொடுத்ததற்கு அவர்களுக்கும் என்
பணிவான நன்றியைக் கூறி இத்துடன் முடித்துக் கொள்
கிறேன். (சிரிப்பு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** திரு. தங்கமுத்து...
தர்ம ராஜா சரியாக ஏழு நிமிடத்தில் முடித்து வைப்பது
தான் அவருக்குரிய பணி.

***திரு. கு. தங்கமுத்து :** மாண்புமிகு பேரவைத் தலைவர்
அவர்களே, நாட்டிலே சாதாரண ஏழை, எளிய, நடுத்தர
மக்களுடைய அசைக்க முடியாத நம்பிக்கையைப் பெற்று,
ஆட்சிப் பொறுப்பை ஏற்றதற்குப் பின்னால் இதய
தெய்வம் புரட்சித் தலைவி அவர்கள் அந்த நம்பிக்கையை
ஈடேற்றுகின்ற வகையிலே சமர்ப்பித்திருக்கின்ற முதல் நிதி



நிலை அறிக்கையில், வேளாண்மைத் துறையைப் பொறுத்த வரை, முன்னிலைப்படுத்தி தன்னுடைய செயல் திட்டங்களை விரிவாக அறிவித்துள்ள இந்த மானியக் கோரிக்கையின் மீது பேசுகின்ற வாய்ப்பினைக் கொடுத்ததற்கு முதலிலே நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

'உழுவார் உலகத்திற்கு ஆணி' என்று சொல்லுகிற முதுமொழிக்கிணங்க, வேளாண்மைத் துறையில் ஈடுபட்டிருக்கின்ற அனைவருமே அச்சாணி போன்றவர்கள் என்று முதுமொழி சொல்கின்ற வகையில் கருதப்படுகிறார்கள். இந்த நிதிநிலை அறிக்கையைப் பொறுத்தவரை, கடந்த ஆண்டு நெல் உற்பத்தி குறைவாகவும், அதைப் போல அரிசி உற்பத்தியைப் பொறுத்தவரை, எதிர்பார்த்த இலக்கு 60 இலட்சம் மெட்ரிக் டன் என்றாலும், கிடைத்தது 57 இலட்சம் மெட்ரிக் டன் என்ற நிலையை உணர்ந்து மிகவும் எச்சரிக்கையோடு அந்த இலக்கை எட்டுகின்ற வகையிலே இந்த ஆண்டு வேளாண்மை இருக்க வேண்டுமென்ற நிலையிலே தயாரிக்கப்பட்டிருக்கின்ற இந்த நிதிநிலை அறிக்கையைப் பொறுத்தவரை, முதலிலே நான் வரவேற்று, வாழ்த்தக் கடமைப்பட்டிருக்கிறேன். இந்த நிதிநிலை அறிக்கையைப் பொறுத்தவரை, வேளாண்மைத் துறையில் தரிசு, கரம்பு நிலங்களைச் சாகுபடி நிலங்களாக மாற்றுவதிலும், அதைப்போல, தரமான விதைகளை உற்பத்தி செய்வதற்கு முன்னுரிமை கொடுத்தும், அதைப்போல புஞ்சையிலே வேளாண்மையைப் பொறுத்தவரை விஸ்தரிப்பு இப்படிப் பல வகையான மேம்பாடுகளை உள்ளடக்கித் திட்டங்கள் தீட்டப்பட்டிருக்கின்றன.

பிற்பகல் 4-20

குறிப்பாகச் சொல்லவேண்டுமென்று சொன்னால் இந்த விவசாயத்தில் இருக்கின்ற வருமான வரியைப் பொறுத்த வரையில் அறவே ஒழித்த நிலையை நான் குறிப்பாக வரவேற்கவும், வாழ்த்தவும் பாராட்டவும் கடமைப்பட்டிருக்கிறேன். இப்படிப்பட்ட திட்டங்களுக்கு முன்னுரிமை கொடுத்து நிறைவேற்றி இருக்கிறார்கள்.

குறிப்பாகத் தோட்டக்கலையைப் பொறுத்தவரையில மேம்பாடு செய்கிற வகையில் இப்படி, இப்படி இருக்க வேண்டும் என்று வரைமுறைப்படுத்தப்பட்டிருக்கிறது. அந்தத் தோட்டக்கலையைப் பொறுத்தவரை எந்த அளவுக்கு நாடு முழுவது நாம் விரிவாக்க முயல்கிறோமோ அந்த அளவுக்கு நமக்கு முன்னேற்றமும் அந்தத் துறையைப் பொறுத்தவரையில் மேம்பாடும் எதிர்பார்க்கிற அளவுக்கு இருக்கும் என்பதை நான் தெரிவித்துக்கொள்ளக் கடமைப் பட்டிருக்கிறேன்.

அதேபோல் 'நபார்ட்' திட்டத்தைப் பொறுத்த வரையில் இந்த அரசினுடைய நிலையில் எப்படி மத்திய அரசு ஒத்துழைப்பாக இருக்கவேண்டும் என்பதை உறுதி யாகத் தெரிவிக்க இருக்கிறோம் என்று தெரிவித்திருக்கிறார் கள். எனவே அதைப் பொறுத்தவரை நான் வரவேற்கவும், வாழ்த்தவும் கடமைப்பட்டிருக்கிறேன். இந்த அரசைப் பொறுத்தவரையில் இதனுடைய முதல்வர் மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித் தலைவி அவர்கள் காவிரிப் பிரச் சினையில் உறுதியாகவும், தன்னுடைய நிரந்தரமான கொள்கையைத் தெரிவித்து இருக்கிறார்கள். எனவே அதைப் பொறுத்தவரை காவிரிப் பாசனப் பகுதியினுடைய மக்கள் சார்பிலும் தமிழக விவசாயிகள் சார்பிலும் நான் வர வேற்கவும், பாராட்டவும் கடமைப்பட்டிருக்கிறேன். இந்த நேரத்தில் தன்னுடைய செயல்திட்டங்களை இந்த நிதிநிலை அறிக்கையில் தெரிவித்திருப்பதை நான் முழுமை யாக வாழ்த்தியும் வரவேற்றும் என்னுடைய கருத்தாகச் சிலவற்றைக் கோடிட்டுக் காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன.

வேளாண்மையைப் பொறுத்தவரையில் பல பகுதிகளில் அதாவது தமிழகம் முழுவதும் பல்வேறு நிலைகளில் வேளாண்மைத் துறை இருந்தாலும், இது மானாவாரி பகுதி யாகவும், காவிரிப் பாசனப் பகுதியாகவும் இரண்டு பகுதி களாகப் பிரித்துத்தான் இந்த விவசாயத் தொழில்களை நாம் பார்க்கிறோம். திட்டமிடுவதிலும் அப்படித்தான் திட்டமிடுகிறோம்.

என்னுடைய காவிரிப் பாசனப் பகுதியைப் பொறுத்த வரை அதிலும் குறிப்பாக தஞ்சை மாவட்டத்தைப் பொறுத்தவரை வேளாண்மைத் தொழிலில் ஈடுபடுகிற விவசாயிகள் இதை ஒரு மரபுத் தொழிலாகப் பார்க் கிறார்கள். இந்தத் தொழில் இலாபகரமான தொழில். இதில் இப்படி, இப்படி எல்லாம் செயல்பட்டால், நாம் இலாபம் ஈட்ட முடியும் என்று வகைப்பாடு செய்யாமல், இது என்னுடைய தாய், தந்தையர் மற்றும் முன்னோர்கள் செய்த தொழில், எனவே அதை நானும் செய்கிறேன் என்ற முறையில் மரபுத் தொழிலாக அதைச் செய்து கொண்டிருக்கிற நிலை தொடர்ந்து கொண்டிருக்கிறது. இந்தத் தொழிலைப் பொறுத்தவரையில், இலாபகரமான தொழில் இந்தத் தொழில், இதிலே ஈடுபட்டால் நமக்கு இலாபம் வரும் என்ற உறுதியை அந்த விவசாயிகளுக்குக் கொடுப்பது அரசினுடைய நடவடிக்கையாகத்தான் இருக்க வேண்டும். அந்த உறுதியைத் தஞ்சை மாவட்ட விவசாயி களுக்கு ஊட்டுவதற்கு இந்த அரசினுடைய திட்டங்கள் முன்வரவேண்டும் என்பதுதான் என்னுடைய எதிர்பார்ப்பாகும்,



முதலிலே தஞ்சை மாவட்டத்தைப் பொறுத்தவரை காவிரி பாசனப் பகுதியைப் பொறுத்தவரை முழுக்க, முழுக்க நெற்பயிரைத் தொழிலாகக் கொண்டிருந்தாலும் விவசாயப் பல்கலைக்கழகம் உருவாகிறபோது அதனுடைய நிலை ஒரு நிலை. அந்த மாவட்டம் முழுமைக்கும் அங்கே வேளாண்மைக் கல்லூரி இருக்கிறதா என்று சொன்னால் இல்லை. இதற்கு முன்னால் இதன் உபதொழிலாக இருக்கின்ற கால்நடை வளர்ப்பு, பொதுப்பணித்துறையில் வருகின்ற தொழில்கள் போன்ற இப்படிப்பட்ட தொழில்களைப் பொறுத்தவரையில் அங்கே ஆராய்ச்சி நிலையங்கள் வைத்திருந்தார்கள். அப்படிப்பட்ட நிலையங்கள் இப்போது இல்லை. எனவே அந்த மாவட்ட மக்களின் நம்பிக்கையை ஈடேற்றுகிற வகையில் விவசாயக் கல்லூரி ஒன்றை தஞ்சை மாவட்டத்திற்குக் கொடுத்து உதவ வேண்டும் என்பது என்னுடைய தாழ்மையான வேண்டுகோள் ஆகும். இந்த எண்ணத்தைத் தமிழகத்தினுடைய முதல்வர் இதய தெய்வம் மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்களிடம் நான் உங்கள் மூலமாகத் தெரிவித்துக்கொள்கிறேன். அதை ஈடேற்றுகிற தன்மையை வெகு விரைவில் உருவாக்கிக் கொடுக்க வேண்டும் என்று தாழ்மையுடன் நான் கேட்டுக் கொள்கிறேன்.

அதேபோல் தஞ்சை மாவட்டத்தைப் பொறுத்தவரை சிறப்பான உதவிகளைச் செய்யவேண்டும்; விவசாயிகளுக்குப் பாதுகாப்பு கொடுக்கவேண்டும் என்று கேட்பது மற்றொரு சிறப்பு நிலையில் உள்ளது என்பதை நான் கோடிட்டுக் காட்டக் கடமைப்பட்டு இருக்கிறேன். தமிழகம் முழுவதும் உள்ள விவசாயிகள், அவர்கள் விளைவிக்கிற விளை பொருட்களை எங்குவேண்டுமானாலும் வந்து நினைத்த விலையில் விற்க முடியும். ஆனால் தஞ்சை மாவட்டத்தைப் பொறுத்தவரையில் விளைவிக்கிற நெல்லை அரசு என்ன விலைக்கு நிர்ணயிக்கிறதோ அந்த ஏகபோகக் கொள்முதல் விலைக்கு மட்டும்தான் அதை விற்பனை செய்ய முடியும். ஆனால் தஞ்சை மாவட்டத்தைவிட்டு அடுத்த இடங்களுக்குச் சென்றால் ஒரு குவிண்டாலுக்கு 100-லிருந்து 150 ரூபாய் வரை வித்தியாசம் இருக்கும், விலையேற்றம் இருக்கும். ஆனால் அங்கே இவர்கள் விற்க முடியாது. அரசு நிர்ண யிக்கிற விலையில்தான் விற்கவேண்டிய கட்டாய சூழ்நிலை தஞ்சை மாவட்ட விவசாயிகளுக்கு வருகிறது. எனவே அந்த மாவட்ட விவசாயிகளைப் பாதுகாக்கவேண்டிய பொறுப்பு, அரசினுடைய தன்மை இங்கேதான் உருவாகிறது என்பதை நான் கோடிட்டுக் காட்ட விரும்புகிறேன். இத் தகைய நிலையில் அந்த மாவட்ட விவசாயிகளுக்குப் பாது காப்பான சூழ்நிலையில் சலுகைகளை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும்.

எவ்வளவோ நிலைகளில் இருக்கின்ற விவசாயிகளுக்கு, எவ்வளவோ சூழ்நிலையில் இருக்கிற அந்த மக்களுக்கு ஒவ்வொரு நிலையிலும் பாதுகாப்பும், சலுகைகளும், அளிக்கப்படுகின்றன. அந்த வகையில் விவசாயக் கல்லூரியாக இருந்தாலும், இன்ஜினியரிங் கல்லூரியாக இருந்தாலும் மருத்துவக் கல்லூரியாக இருந்தாலும் பலவகையான பிரிவுகளில் இருப்பவர்களுக்கு இட ஒதுக்கீடு நடக்கிறது.

பிற்பகல் 4-25

அந்த நிலையில் விவசாயிகளைப் பொறுத்தவரையில் 'பார்மர்ஸ் கோட்டா' என்று ஒன்று உருவாக்கி விவசாயிகளை ஊக்குவிக்கின்ற வகையில் சலுகைகள் அளிக்கின்ற நிலையை உருவாக்கிட-வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அதைப் போலவே, இன்னும் சொல்லவேண்டுமென்று சொன்னால், தஞ்சையிலே இருக்கும் அரசு மருத்துவ மனைக்கு பெயரே இராஜா மிராசுதார் மருத்துவ மனை என்றுதான் பெயர். அது விவசாயிகளுக்காகவே உருவாக்கப்பட்ட ஆஸ்பிட்டல், ஆனால் இன்றையதினம் அந்த மருத்துவர்கள் யாரும் அங்கே விவசாயிகளுக்கு முன் உரிமை கொடுப்பதே இல்லை.

அதைப் போலவே டூரிசம். சுற்றுலா வாரியம் எடுத்து செயல்படுகின்ற இராஜா சத்திரமும் இதற்கு முன்னால், விவசாயிகளுக்காக உருவாக்கப்பட்டதுதான். இதிலே விவசாயிகளுக்கு முன் உரிமை கொடுக்கின்ற வகையில், சலுகைகள் அளிக்கின்ற வகையில் இப்படிப்பட்ட நிலையங்களில் விவசாயிகளுக்காக தனி ஒதுக்கீடு ஒதுக்கிக் கொடுக்க வேண்டும் என்ற நிலையை உருவாக்கிக் கொடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

இந்தத் துறையிலே இருக்கின்றவர்கள் விதை தயாரிப்பதற்கு விதைப் பண்ணையை உருவாக்குகிறார்கள். ஆனால் நிலை என்னவென்றால் அங்கே இருக்கின்ற விரிவாக்க அலுவலர்களும், துணை வேளாண்மை அலுவலர்களும் சொந்த செல்வாக்கிலும் அல்லது விவசாயிகளிடம் சென்று கெஞ்சித்தான் அந்த விதைப் பண்ணைகளை உருவாக்குகிறார்கள். காரணம் தானியத்திற்கும் விதைக்கும் வேறுபாடான விலை இல்லை. எனவே விதையைப் பொறுத்தவரையில் விலையைக் கூட்டிக்கொடுக்கின்ற தன்மையை அரசு உருவாக்கிக் கொடுக்கவேண்டும். அதே போல விதை சுத்திகரிப்பு. அந்த சுத்திகரிப்பு வேலையை அரசாங்கம் எடுத்துக்கொள்ளவேண்டும். இதைப்போல தனியார் துறை நிறுவனங்கள் விவசாயிகளுடைய வயலிலே அந்த விதையை எடுத்துக்கொண்டு சுத்திகரிப்பு வேலையை அவர்களே செய்து முடித்துவிடுகிறார்கள்.



வேளாண்மை ஒழுங்கு முறை விற்பனைக் கூடம் என்ற கூடம் தமிழ்நாட்டில் ஒவ்வொரு தாலுக்கா சென்டரிலும் கட்டப்பட்டு இயங்கி வருகின்றன. இங்கே விவசாயிகள் தங்கள் விளைபொருட்களை வெளி மார்க்கெட்டைக் காட்டிலும் கூடுதல் விலைக்கு விற்பனை செய்து கூடுதல் இலாபம் அடைய வேண்டுமென்ற நல்ல நோக்கத்திற்காகத் துவங்கப்பட்ட இந்த வேளாண்மை விற்பனைக் கூடம் இன்று செயலிழந்து எல்லா ஊர்களிலுமே, குறிப்பாக, மதுரை மாவட்டத்தில் உசிலம்பட்டி போன்ற ஊர்களில் கட்டப்பட்ட கூடங்கள் அப்படியே செயலிழந்து இருக்கின்றன. இத்துறையில் பணிபுரியும் கண்காணிப்பாளர்கள் மற்றும் விற்பனை ஆய்வாளர்கள் வியாபாரிடம் லஞ்சத்தைப் பெற்றுக்கொண்டு, விவசாயிகள் விளை பொருட்களை விற்றுத் தரும்படி கோரினாலும், அவர்கள் தனியார் கமிஷன் மண்டிகளைக் காட்டிலும் குறைந்த விலைக்கு விற்றுத் தருவதாகக் கூறுகிறார்கள். இதனால் விவசாயிகள் பொருட்களை ஒழுங்கு முறை விற்பனைக் கூடங்களுக்கு எடுத்துச் செல்வதில்லை. வியாபாரிகள் ஒழுங்கு முறை விற்பனைக் கூடத்தில் கொள்முதல் செய்தால் அரசுக்கு, வணிக வரி செலுத்த வேண்டிய நிலை இருப்பதால், வியாபாரிகள் இங்கு வருவதில்லை. எனவே, இந்த நிலையை மாற்றி, கோடிக்கணக்கான ரூபாய் செலவு செய்து, விவசாயிகள் நன்மை பெறுவதற்காகக் கட்டப்பட்ட அந்த ஒழுங்கு முறை விற்பனைக் கூடங்களை நல்லமுறையில் செயல்பட வைக்க இந்த அரசு நடவடிக்கை எடுக்க வேண்டுமாய் வேண்டுகிறேன்.

ஆனால் சுத்திகரிப்பு வேலையையும் விவசாயியே செய்து கொடுக்க வேண்டும் என்றும், அப்படி அந்த விதையைக் கொடுத்ததற்குப் பின்னர் 6 மாத காலத்திற்கு பணத்திற்காக காத்திருக்க வேண்டிய கட்டாய சூழ்நிலை விவசாயிகளுக்கு ஏற்படுகிறது. எனவே இப்படிப்பட்ட சாதாரண சூழ்நிலையைப் போக்கி விதையை உருவாக்கவேண்டும், அதிகப்படுத்தவேண்டும். அப்படி விதையை உருவாக்குகின்ற போது நாம் நம் நாட்டிலுள்ள விவசாயிகள் மொத்த பரப்பளவு விவசாய நிலத்தில் 20 சதவிகிதம் தான் இந்த உண்மையான வீரிய விதை கொடுக்கிறோம். பொறுக்கு விதைகளைக் கொடுக்கிறோம். குறைந்தபட்சம் 50 சதவிகிதத்திற்காவது தமிழ்நாட்டிலே இருக்கின்ற விவசாய விதை நிலங்களில், விதை வித்துக்கள், தரமான வித்துக்கள் கொடுப்பதற்கு அரசு முயற்சிக்கவேண்டும். காரணம் ஒரு விதை 2 ஆண்டு காலத்திற்குத் தான் பலன் உள்ளதாக இருக்கும். 2 ஆண்டுகளுக்கு மேல் அந்த விதையினுடைய வீரியம், வித்துத் தன்மை கெட்டுப்போய்விடும். எவ்வளவுதான் விவசாயி கஷ்டப்பட்டாலும் விதையிலே

வீரியம் இல்லை என்றால் பயிரிலே வளம் இருக்காது. விளைவு சரியாக இருக்காது. எனவே கட்டாயமாக 2 ஆண்டு காலத்திற்கு ஒரு முறையில் விதையை மாற்றம் செய்கின்ற நிலையை உருவாக்கிக் கொடுக்கவேண்டும்.

இவை அனைத்தையும் விவசாயிதான் செய்யவேண்டும் என்றுதான் உணர்கிறார்கள். ஆனால் உணர்வதற்கு ஏற்ற முறையில் அதை செயலாக்கும் முறையில் அவர்களால் செயல்படமுடியவில்லை. எனவே அரசினுடைய துறையைச் சார்ந்தவர்கள், இந்த விவசாயத் துறையைச் சார்ந்த அலுவலர்கள், இந்த முறையில் செயல்படுகிறார்களா என்பதையும் பார்க்கவேண்டும். நான் ஒன்றை இங்கே கோடிட்டுக் காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். இந்த விவசாயத் துறையைப் பொறுத்தவரையில் பல்வேறு பிரிவுகளாகப் பிரித்திருக்கிறார்கள். அக்ரோ என்ஜினியரிங் பகுதி என்று ஒன்று. எண்ணை வித்துத் துறை, வேளாண்மைத் துறை இப்படிப் பல துறைகளாகப் பிரித்திருக்கிறார்கள். இப்படிப் பல துறைகளாக பிரித்திருக்கிறார்கள். அதற்கு என்று தலைமை நிர்வாகிகள் இருக்கின்றார்கள். ஆனால் விவசாயிகள் அங்கே சென்று வருகிறபோது இந்த விரிவாக்க அலுவலர்களை மட்டும்தான் விவசாயிகள் பார்க்கிறார்களேயொழிய மற்றவர்களைப் பார்க்க முடிவதில்லை.

அந்த விரிவாக்க அலுவலர்களை மற்றவற்றைப் பற்றி கேட்கிறபோது எனக்குத் தெரியாது என்று கைவிரித்து விடுவார்கள். மற்றவர்களை அணுகவேண்டும் என்று சொன்னால் அவர்கள் எங்கே இருக்கின்றார்கள் என்றே தெரியாது. எனவே என்னுடைய தாழ்மையான அபிப்பிராயம் அப்படிப் பிரித்து வைக்கப்பட்டிருக்கின்ற அந்த பல பகுதிகளை ஒன்றாக இணைத்து ஒரே செயல்பாட்டின் கீழ் விவசாயியின் முன்னால் நிறுத்தினால் விவசாயிகள் தேவையைப் பெற்றுக்கொள்கின்ற நிலை உருவாகும் என்பதை நான் இந்த சந்தர்ப்பத்திலே தெரிவித்துக் கொள்கிறேன்.

இதைப்போலவே, தஞ்சை மாவட்டத்தைப் பொறுத்த வரையில் ஒட்டுமொத்தமாக திட்டமிடுகிறார்கள். எல்லாப் பகுதிகளையும் காவிரி பாசனப் பகுதி என்று கணக்கில் எடுத்துக் கொள்கிறார்கள். அப்படி இல்லாமல் ஒரு பகுதி எங்கள் பகுதி, குறிப்பாக கடைசியாக என்னுடைய நிலைக்கு வர வேண்டும் என்று சொன்னால், திருவோணம் தொகுதியானது தஞ்சை மாவட்டத்தினுடைய தட்பவெப்ப சூழ்நிலைக்கு அப்பால் தொகுதியானது சரிபகுதியாக, பிரிக்கப்படுகிறது. வானம் பார்த்த பகுதியாகும். என்னுடைய தொகுதிக்கு கணக்கிடப்படுகிறபோது, திட்டமிடுகிறபோது, ஒன்றாகத் திட்டமிடுகின்ற காரணத்தினால் தஞ்சை வட்டமும் அதே



போல ஒரத்தநாட்டின் ஒரு பகுதியும் திருவோணம் பகுதி முழுமையும் இப்படி மானாவாரி பகுதியாக பிரிந்து விடுகின்ற தன்மையால் இந்த காவிரி பாசனப் பகுதியில் நிறைவேற்றுகிற திட்டத்தினுடைய பலனும் இந்தத் தொகுதிக்குக் கிடைப்பதில்லை. அதேபோல மானாவாரி பகுதிக்கு திட்டமிடுகின்ற திட்டமும் தஞ்சை மாவட்டத்திற்கு வந்து சேருவதில்லை. குறிப்பாக சொல்லவேண்டுமென்றால் சமூகப் பொருளாதாரத் திட்டத்தின் கீழ் அறிவிக்கப்படும் சலுகைகள் தஞ்சை மாவட்டத்திற்குக் கிடையாது. ஆனால் வானம் பார்த்த, உள்ளடக்கி இருக்கின்ற பகுதி இந்தப் பகுதியாகும். ஏரிகளும், குளங்களும் சீர்படுத்தப்படுகிறபோது புதுக்கோட்டை. மற்றும் வானம் பார்த்த பகுதியைப் போன்ற இந்த பகுதி இருக்கின்ற காரணத்தினாலே இதனை நிறைவேற்றிக் கொடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

பிற்பகல் 4-30

அந்த நிலையில் முதலமுத்து வாரி என்ற ஒரு வாரி இருக்கிறது. அந்த வாரியில் வெள்ளப் பெருக்கு எடுக்கும் போது 6 தாலுக்காக்களில் உள்ள பயிர்கள் எல்லாம் பாதிக்கப்படுகின்றன. ஆகவே, அந்த 6 தாலுக்காக்களுடைய பயிர்களைப் பாதுகாக்கின்ற வகையிலே, அந்த முதலமுத்து வாரி அணைக்கட்டுத் திட்டத்தை நிறைவேற்றினால், ஏறக்குறைய 10 ஆயிரம் ஏக்கர் பாசன வசதி பெறுகிற சூழ்நிலை இருப்பதால் அந்த முதலமுத்து வாரி அணைக் கட்டுத் திட்டத்தை நிறைவேற்றித் தர வேண்டுமென்று கேட்டு வாய்ப்புக்கு நன்றி சொல்லி விடைபெறுகிறேன், நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு, பேரவைத் தலைவர்:** திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள். வாக்குறுதி அளித்த காலத்திற்குள் முடித்துவிடக் கேட்டுக்கொள்கிறேன்.

***திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முடித்து விடுகிறேன்.

நம்முடைய அமைச்சர் அவர்களால் கொண்டு வரப் பட்டுள்ள மானியக் கோரிக்கை மீது ஒருசில கருத்துக்களைக் கூறி என்னுடைய உரையை முடித்துவிடுகிறேன்.

நம்முடைய முன்னாள் விவசாயத் துறை அமைச்சர் அவர்களும், காவல் துறையை நிர்வகிக்கிற போலீஸ் இலாக்கா அமைச்சராகவும் இருந்த கக்கன்ஜி அவர்கள் 10 ஆண்டுக் காலம் அமைச்சராக இருந்தார்கள். 10, ஆண்டுக் காலம் சட்டமன்ற உறுப்பினராக இருந்தார்கள். 5 ஆண்டுக் காலம் பாராளுமன்ற உறுப்பினராக இருந்தார் கள். அத்தனையும் இருந்தும் அவருடைய கடைசிக் காலத்திலே அமைச்சராக இல்லாமல் வெளியே சென்றபோது அவர்கள் உடல் நிலை பாதிக்கப்பட்டு ஆஸ்பத்திரியில்

அவரை துணியை விரித்து படுக்க வைத்திருந்தார்கள். பிறகு நான் போய் பார்த்து 'ஓ' என்று அழுதபோது, அது நம்முடைய முன்னாள் முதல்வர் அவர்களிடத்திலே தகவலாக வந்தது. எதிர்க்கட்சியிலுள்ள எம்.ஜி.ஆர். அவர்கள் வந்து பார்த்து அவர்களுக்கு என்னென்ன செய்ய வேண்டுமோ அத்தனையும் செய்து கொடுத்து உதவினார்கள். அந்த கறை படாத கரம் படைத்த தலைவனுக்கு. அரிசன சமுதாயத்தில் வந்த அந்த ஒப்பற்றத் தலைவனுக்கு நாம் மதுரையிலே இருக்கிற விவசாயக் கல்லூரிக்கு கக்கனஜீ விவசாயக் கல்லூரி என்று பெயர் வைத்தால் அவருடைய பெயரை நிலைநாட்ட முடியுமே என்ற யோசனையை இந்த அமைச்சரவைக்கு நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். எனவே அதை வைப்பார்கள் என்று நான் நம்புகிறேன்.

இன்றைக்கு விவசாயத்திலே உண்மையிலேயே நிலத்தடி நீர் கிடையாது. நான் எல்லாம் விவசாயத்தை நம்பிக் கொண்டிருக்கிறவள். கிராமத்திலே இருக்கிற விவசாய நிலத்தை யாருக்காவது விற்றுவிட்டு வெளியே சென்று விடலாம் என்றாலும் கூட அதை அங்கே வாங்குவதற்கு யாரும் தயாராக இல்லை. அப்படிப்பட்ட சூழ்நிலையில் மழையில்லாத சூழ்நிலையில் விவசாயம் மிகவும் பாதிக்கப்பட்டு, இங்கே வறுமைக் கோடு என்று சொல்லிக்கொண்டிருக்கிறோமே, உண்மையிலேயே நான் எல்லாம் பெரிய விவசாயி என்பதை ஒப்புக்கொள்கிறேன். பெரிய விவசாயியாக இருந்து என்ன செய்ய ? பெரிய விவசாயிக்கு வறுமைக் கோட்டுக்குக் கீழே ஒரு கோடு இருக்கிறதா என்று சொல்லும் அளவுக்கு அந்தக் கோட்டுக்குக் கீழே நாங்கள் எல்லாம் போய்க் கொண்டிருக்கிறோம். காரணம் மழை இல்லை. கிணற்றில் தண்ணீர் இல்லை. மிகவும் வறண்ட ஒரு நிலை இருந்து கொண்டிருக்கிறது. எனவே, நாங்கள் அரசாங்கத்துடம் சொல்லக்கூடிய நிலைமை என்னவென்றால், இப்பொழுது நாம் சிறு தொழில் செய்பவர்களுக்கு மானியத்தோடு பணம் கொடுக்கிறோம், பெரிய தொழில் செய்யக்கூடியவர்களுக்கு மானியத்தோடு பணம் கொடுக்கிறோம். ஆனால் விவசாயி தன்னுடைய நிலையை உயர்த்துவதற்காக ஒரு தண்ணீர் இருக்கிறதோ அந்த இடத்தைப் பார்த்து எங்கே பெரிய ராட்சசக் கிணறு போட்டு அதிலேயிருந்து வரும் தண்ணீர் மூலம் விவசாயம் செய்ய எத்தனித்தால் நாம் அவனுக்கு எந்தவகையில் உதவுகிறோம் என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சற்று சிந்தனை செய்து பார்க்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அந்த விவசாயிக்கு மானியம் கொடுப்பதில்லை. ஏதோ பாங்கிலே 10 ஆயிரம், 5 ஆயிரம் என்று பம்ப் செட் வாங்குவதற்கு, வண்டி மாடு வாங்குவதற்கு, ஏர் மாடு வாங்குவதற்கு பணம் கொடுக்கிறார்கள். அந்தப் பணம் கூட சில ஆபீசர்களால், மானேஜர்களால், இரக்கச் சிந்தனையில்லாத அப்படிப்



பட்டவர்களால், இவனுக்கு போய் பணம் கொடுப்பதா, என்று நினைத்து அதையும் தடுத்துவிடுகிறார்கள். ஆகவே, இரண்டொருவர் அந்தப் பணத்தை வாங்கினாலும் கூட அவர்களிடமிருந்து 'every three months', மூன்று மாதத்திற்கு ஒரு தடவை அந்த வட்டியையும், காம்பவுண்ட இன்டரஸ்ட்டும் போட்டு, கூடுதல் கூட்டு வட்டியும் போட்டு அந்த வட்டியே 4, 5 ஆண்டுகளில அசல் எவ்வளவு இருந்ததோ அதை விட இரண்டு மூன்று மடங்கு ஆகிற சூழ்நிலை இருக்கிறது. ஆகவே, இதை எல்லாம் தவிர்ப்பதற்கான முயற்சியினை நம்முடைய முதல்வர் அவர்களும், அமைச்சரவையும் எடுக்க வேண்டுமென்று இந்த நேரத்தில் நான் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

நாம் தரிசு நிலங்களை எல்லாம் விளை நிலங்களாக ஆக்க வேண்டுமென்று ஒரு திட்டம் போட்டிருக்கிறோம். அது மிகவும் வரவேற்கத்தக்க ஒன்று தான். எங்கே எல்லாம 50 ஏக்கர், 100 ஏக்கர் என்று இருக்கிறதோ, அவை எல்லாம் தனிப்பட்டவர்களுடைய நிலமாக இருந்தாலும் சரி, விவசாயத்திற்கு ஏற்ற நிலமாக இல்லாமல் இருந்தால் 'வாட்டர் டிவைவர்' வைத்து வாடடர் சோர்சஸ்' எங்கே இருக்கிறது என்று பார்த்து, அங்கே ராட்சசக் கிணறு போட்டு அதிலே பம்ப் செட்டு வைத்து அவர்கள் பாசனம் செய்வதற்கு ஏற்ற ஒரு நிலைமையை உருவாக்கிக் கொடுத்தால், ஏக்கரேஜ் அடிப்படையில் அதாவது ஒருவருக்கு 3 ஏக்கர், 4 ஏக்கர், 5 ஏக்கர், 10 ஏக்கர் என்ற அளவுக்கு நிலம் இருந்தால் அதற்கேற்ப 'டிப்பென்டஸ் அப்பான் தி ஏக்கரேஜ்' என்ற அடிப்படையில், கிணறு வெட்டும் பணத்தை எல்லாம் வசூல் செய்வதற்கான ஒரு நிலைமையை உருவாக்கினால் எல்லா இடங்களும் பாசன வசதி பெறக்கூடிய ஒரு நல்ல வாய்ப்பாக இருக்கும்.

பிற்பகல் 4-35

மழை இல்லாமல் ஒரு இடத்தில் பாதகமான சூழ்நிலை இருக்கும் நிலையில் இன்றைக்கு மேற்குத் தொடர்ச்சி மலைப் பகுதியில் பெரு மழை பெய்து, வெள்ளம் ஏற்பட்டு ஓடைகள் வழியாக வெள்ளம ஓடி வந்து அங்கேயுள்ள நிலங்களையும், பக்கத்திலே உள்ள குடிசைகளையும் அடித்துச் சென்று விடுகிறது. இப்படிப்பட்ட நிலையில் அங்கேயுள்ள மண்ணை அப்புறப்படுத்த முடியாமல் மிகவும் சிரமப்படக்கூடிய நிலையில் விவசாயி இருக்கிறான். ஆகவே, அதை எல்லாம் நம்முடைய விவசாயத் துறை அமைச்சர் அவர்களும், நம்முடைய முதல்வர் அவர்களும் சற்று மனதிலே வைதது, சிந்தனை செய்து பார்த்து எங்கே எல்லாம் விவசாயிகள் இவ்விதம பாதிக்கப்பட்டிருக்கிறார்களோ அங்கே எல்லாம் பெரிய 'புல்டோசர்கள' வைத்து அந்த

மண்ணை அப்புறப்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று இச்சந்தர்ப்பத்தில் கேட்டுக்கொள்கிறேன். அதுமாத்திரமல்லாமல் அங்கே தடுப்புச் சுவர்கள் கட்டி, தரையை உயர்த்தி, உடைப்பு இல்லாமல் செய்து, வெள்ளத்தைத் தடுக்கும் நிலைமையை உருவாக்கிக் கொடுத்தால் சாலச் சிறந்ததாக இருக்குமென்று தெரிவித்துக்கொள்கிறேன். அடுத்து, பழைய காலத்தில் 6 சதவீத வட்டி இருந்தது. பிறகு 10, 15 சதவிகிதம் ஆகி, இப்போது 1½ வட்டிக்கு மேலே வருகிறது. அதை 3 மாதங்களுக்கு ஒரு முறை கட்டவில்லை என்றால் காம்பவுண்ட் இன்டரஸ்ட் போடுகிறார்கள். 5,000 ரூபாய் கடன் வாங்கினால் 10 வருடங்கள் கட்டவில்லை என்றால் 20,000 கட்ட வேண்டியிருக்கிறது. எனவே விவசாயிகளுக்கெல்லாம் குறைந்த வட்டிக்கு கொடுக்கும் ஒரு நிலைமையை உருவாக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, கடன்களைத் தள்ளுபடி செய்தோம். உண்மையிலேயே விவசாயிகள் கடன் வாங்குகிறார்கள். சொசைட்டியில் கடன் வாங்குகிறார்கள், பாங்குகளில் கடன் வாங்குகிறார்கள். அந்தக் கடனை வாங்கிய பிறகு, விவசாயம் சரியாக இல்லாமல், கடனைத் திருப்பிக் கட்ட முடியவில்லை. சிலர், ஜப்திக்கு வெட்கப்படுபவர்கள், என்னைப் போன்றவர்கள், இன்னொருத்தர் மீது கடன் வாங்குவது, அதைத் திருப்பிக் கட்டுவது, மறுபடியும் கடன் வாங்குவது என்று இப்படிப்பட்ட நிலைமைகள் நாட்டிலே இருக்கிறது. எனவே [illegible] ஆங்காங்கே உள்ள அதிகாரிகளை வைத்து, [illegible] வைத்து, பிளாக் அதிகாரிகளை வைத்து [illegible] நிலைமையைத் தெரிந்து, கடன்களை முழுமையாகத் தள்ளுபடி செய்தால், விவசாயிகளுக்குச் செய்யும் நன்மையாக இருக்குமென்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்து பூச்சி மருந்து. நெல் அல்லது கரும்பு அல்லது திராட்சையில் பூச்சி விழுகிறது என்றால் அதற்கு மருந்து அடித்து அந்தப் பூச்சியைக் கொல்ல வேண்டுமென்று மருந்து அடிக்கிறோம். அப்போது அந்தப் பூச்சி சாவதில்லை. அதற்கு வால் முளைத்து மீண்டும் வருகிறது. இந்த நிலைமை இருக்கக்கூடாது. வால் முளைத்து பூச்சி மீண்டும் வரக்கூடாது. அந்தப் பூச்சி அபிவிருத்தி அடையக்கூடாது. எங்கே விவசாயிகள் பூச்சியால் பாதிக்கப்படுகிறார்களோ, அங்கே எல்லாம் விவசாயத்துறை ஸ்பெஷல்டிமென்ட்கள் மருந்தை அடித்து, அதற்கான பணத்தை கிஸ்தி வசூல் பண்ணும்போது சேர்த்து வசூலித்துக்கொண்டால் இன்னும் சாலச் சிறந்ததாக இருக்குமென்று தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்து தென்னை. நாங்களெல்லாம் என்ன விவசாயம் என்று கருதி, தென்னை போடலாமென்று போட்டோம். நன்றாகக் காய்த்தது. ஒரே ஒரு தடவை காய் வெட்டினோம். பிறகு மழையில்லை. 500 மரங்களுக்கு மேல் பட்டுப் போய்விட்டது.



இதனால் பல விவசாயிகள் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். விவசாயம் செய்ய முடியாதவர்கள் என்ன செய்வது என்று தெரியாமல் பாதிக்கப்பட்டு, மிகக் கொடூரமான நிலைமையை அனுபவிக்கும் நிலைமை இருக்கிறது. ஆகவே மாண்புமிகு அமைச்சரவைக்குச் சொல்லிக் கொள்கிறேன். குறிப்பாக விவசாய அமைச்சர் அவர்களுக்குச் சொல்லிக் கொள்கிறேன். எங்கேயெல்லாம் தென்னை மரம் வைத்து, அவை பட்டுப் போய்விட்டதோ, அவர்களுக்கெல்லாம் தென்னம்பிள்ளைகளை இலவசமாகக் கொடுத்து, அவற்றை வளர்க்கும் நிலைமைகளை உருவாக்கிக் கொடுத்தால், சாதாரண மக்கள் முன்னுக்குவர வாய்ப்பாக இருக்குமென்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

காலையிலே ஒரு கேள்வி வந்தது. அந்தக் கேள்வி வந்தபோது எனக்கெல்லாம் வருத்தம். எங்கேயெல்லாம் கண்மாய் புறம்போக்கு, குளத்துப் புறம்போக்கு, வாய்க்கால் புறம்போக்கு, சுடுகாட்டுப் புறம்போக்கு இவற்றில் குடியிருக்க பட்டா கேட்கும்போது, பட்டா போட்டுக் கொடுக்க வேண்டுமென்று நினைக்கிறோம். இதுபோன்று பட்டா போட்டுக் கொடுப்பதால், கண்மாய் புறம்போக்கில் பட்டா போட்டுக் கொடுப்பதால், மழை பெய்தால் தண்ணீர் தேங்காமல் இருக்கிறது. அதனால் பெர்குலேஷன் வாட்டர் இல்லாமல் இருக்கிறது. யார் நமக்கு வேண்டியவர்கள், வேண்டாதவர்கள் என்று பார்க்காமல், கண்மாயை ஆக்கிரமித்து இருந்தால் அவர்களை அப்புறப்படுத்தி, அந்தக் கண்மாயில் தண்ணீர் தேங்க ஏற்பாடுகளைச் செய்தாலொழிய, விவசாயிகளுக்கு விமோசனமில்லையென்பதை அழுத்தந்திருத்தமாகச் சொல்லிக் கொள்கிறேன். (மணி அடிக்கப்பெற்றது.) பலபேர்கள், ஏழைகள்தான் அங்கே குடிசைகளைப் போடுகிறார்கள். அவர்களுக்கு வேறு இடத்தை வாங்கிக் கொடுங்கள். அவர்களுக்குப் பட்டாவும் கொடுத்து, வீட்டையும் இலவசமாகக் கட்டிக் கொடுக்கலாம். அப்படிச் செய்தால் நன்றாக இருக்குமென்பதைச் சுட்டிக் காட்ட விரும்புகிறேன்.

பிற்பகல் 4-40

அடுத்து கரும்பு விவசாயம். மற்ற மாநிலங்களில் எல்லாம்கிட்டத்தட்ட 400 ரூபாய்க்கு மேலே கொடுக்கிறார்கள். 8.5 சதவிகிதம் ரிக்கவரி வந்தால்கூட அதற்கு 350 ரூபாய் என்று பிக்ஸ் பண்ணியிருக்கிறார்கள். நம்முடைய மாநிலத்தைப் பொறுத்தவரையில் 230 ரூபாய் என்று பிக்ஸ் பண்ணப்பட்டிருக்கிறது. இது விவசாயிகளுக்கு மிகப் பெரிய ஏமாற்றமாக இருக்கிறது. நம்முடைய மாண்புமிகு முதல்வரவர்கள் எம்.பி.-யாக இருந்தபோது பாண்டியராஜபுரம் மில்லை அரசாங்கத்திற்கு ஒப்படைக்கும் நிலைமையை அவர்கள்தான் உருவாக்கித் தந்தார்கள். அந்த மில்லிற்கு கரும்பு அனுப்பக்கூடிய விவசாயிகள் எங்களைப் போன்றவர்கள் எல்லாம் அவர்களுக்கு நன்றி சொல்லக் கடமைப்பட்டு இருக்கிறார்கள். பிறகு அலங்காநல்லூர் கூட்டுறவு

சர்க்கரை மில் என்று ஆரம்பித்தோம். அப்போது நான் மட்டும் ரூ. 7.50 லட்சம் வசூல் பண்ணிக் கொடுத்தேன். நானும் அதில் ஒரு டைரக்டர் ஆக இருந்தேன். பிறகு எக்சிகியூடிவ் துணை பிரசிடெண்ட் ஆகக் கூட இருந்தேன். விவசாயிகள் இன்றைய தினம் கரும்பு மூலமாக நல்ல லாபம் பெறுகிறார்கள். ஆனால் அவர்களுக்குப் போதுமான விலை கிடைக்காத காரணத்தால் மிகவும் கஷ்டப்படுகிற நிலை இருக்கிறது. ஆகவே அந்த கரும் புக்கு விற்பனை வரியை இப்போது 70 ரூபாய் போடப்படுவதைக் குறைக்க வேண்டும். பிற மாநிலங்களில் 35 ரூபாய்தான். இப் போது மேலும் ஒரு சதவீதம் அதிகமாக்கியிருக்கிறோம். அது மாதிரி விவசாயத்திற்கு வரி போடும் பணத்திலிருந்து விவசாயி களுக்கு டன்னுக்கு 35 ரூபாயை சேர்த்துக் கொடுத்தால் மிகவும் நன்றியோடு அதை வரவேற்பார்கள் என்பதை இந்த நேரத்தில் கூறிக்கொண்டு விவசாயத்திற்கு தண்ணீர் கிடைக்க அத்தனை ஏற்பாடுகளும் செய்து கொடுக்க வேண்டுமென்று கூறி, விவசாயி கள் யார் யார் கடன் பட்டிருக்கிறார்களோ, யாரால் திருப்பிக் கொடுக்க முடியாமல் இருக்கிறார்களோ, அவர்களுக்கு கடனை ரத்து செய்ய முயற்சிகள் எடுக்க வேண்டுமென்று கேட்டு முடித்துக் கொள்கிறேன். நன்றி, வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. எஸ். நாகூர் மீரான்.

திரு. எஸ். நாகூர் மீரான் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னை இந்த இளம் வயதில் இந்த மாமன்றத்தில் பணியாற்ற வாய்ப்புத் தந்த கழகக் காவல் தெய்வம், மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அவர்களின் பொற்பாதங் களில் என் நன்றியினை சமர்ப்பித்து என்னை 28 ஆயிரம் வாக்கு வித்தியாசத்தில் வெற்றி பெறச் செய்த கடையநல்லூர் தொகுதி வாக்காளப் பெருமக்களுக்கு நன்றியினைத் தெரிவித்து என் உரையைத் துவங்குகிறேன்.

கங்கை வற்றினாலும், காவேரி வறண்டாலும் வற்றாத கருணை உள்ளம் கொண்ட புரட்சித் தலைவி அவர்கள் ஆட்சியில் நமது நாட்டின் முதுகெலும்பு என்று அழைக்கப்படும் விவசாயப் பெருமக்கள் நிச்சயமாக நிமிர்ந்த முதுகெலும்பு உடையவர்களாக நிமிர்ந்து நிற்பார்கள் என்பதில் சந்தேகம் இல்லை.

'' உழவன் கணக்குப் பார்த்தால் உழக்குக் கூட மிஞ்சாது. அழுதுகொண்டே ஆயினும் உழுதுகொண்டே இரு, அழிவே ஆயினும் உழவே தலை, விதைமுதலே கண்டாலும், வேளாண் மையை விடாதே '' என்ற கூற்றின் அடிப்படையில் வேளாண் தில் எவ்வளவோ இன்னல்கள் வந்தாலும் தொடர்ந்து விவசாயத் தொழிலை மேற்கொண்டு இருக்கிறார்கள் விவசாயத் இந்த நாட்டின் முதுகெலும்பு என்று அழைக்கப்படுகிற விவசாயப் பெருமக்கள். பெருமக்களுக்குத் தேவையான உரம் மற்றும் பூச்சிக்கொல்லி



மருந்துகள், வித்துக்கள் ஆகியவை மானிய விலையில் கிடைப்ப தற்கு நமது மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் அவர்கள் வழிவகை செய்யவேண்டும். அதைப்போல வேளாண்மை வங்கி கள் மூலம் விவசாயிகளுக்கு டிராக்டர்கள் வழங்குவதில் கடனுக்கு வட்டி விகிதம் அதிகமாக இருக்கிறது. அவர்கள் ஆண்டுக்குரிய அந்தத் தொகையைக் கட்டி வருகிற நேரத்தில் வட்டி மட்டுமே கட்டமுடிகிறது. டிராக்டருக்கு வாங்கிய தொகை அப்படியே இருக்கிறது. எனவே வேளாண்மைக்கு உபயோகப்படுத்தும் அந்த டிராக்டர்களுக்கு கடன் வட்டி விகிதம் குறைந்த அளவில் கொடுக் கப்பட வேண்டுமென்று நான் இந்த நேரத்தில் கேட்டுக் கொள் கிறேன். தாயுள்ளம் கொண்ட புரட்சித் தலைவி அவர்களுடைய ஆட்சியில் விவசாயப் பெருமக்கள் உழவுத் தொழிலுக்குத்தேவை யான வித்துக்கள், உரம், பூச்சிகொல்லி மருந்துகள், நவீனக் கருவிகள் எல்லாம் மானிய விலையில் குறைந்த விலைக்குக் கொடுக்க வேண்டுமென்று எதிர்பார்க்கிறோம். அதைப்போல வேளாண்மைத் தொழிலுக்குத் தேவையான நீர்ப்பாசனத்தைப் பொறுத்தவரையில் வேளாண்மைப் பெருக்கத்திற்கும், விவசாயப் பெருமக்களின் வாட்டத்தைப் போக்குகிற வகையில், நெல்லை கட்டபொம்மன் மாவட்டத்தில் விவசாயத்தை முழுமையாக நம்பிக்கொண்டிருக்கிற கடையநல்லூர் தொகுதி மக்களின் விவசாயத்திற்குத் தேவையான நீர்பபாசனத்தைப் பெறுகிற வகையிலும் அடவிநயினார் திட்டத்தை மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்கள் தேர்தல் சுற்றுப் பயணத்தை கிராமங் களில் மேற்கொண்ட நேரத்தில், நாங்கள் ஆட்சிப் பொறுப்புக்கு வந்தவுடன் வடகரையில் அடவிநயினார் திட்டத்தை நிறைவேற் றித் தருவோம் என்று வாக்குறுதி தந்தார்கள். அந்தத் தாயுள்ளம் கொண்ட புரட்சித் தலைவி ஆட்சிக்காலத்தில் அந்த அடவிநயினார் அணைக்கட்டுத் திட்டத்தை விரைந்து முடித்துத் தரவேண்டும். கடையநல்லூர் தொகுதியின் தாய்கிராமமான சாம்பவர் வட கரையில் அத்திட்டத்தைக் கொண்டுவந்து சாம்பவர் வடகரை விவசாயப் பெருமக்கள் பயன்பெறுகிற வகையில் பெரியகுளத்தை யும் அந்த நீர்ப்பாசனத் திட்டத்தில் சேர்த்துக்கொள்ள வேண்டு மென்று கேட்டுக் கொள்கிறேன்.

பிற்பகல்4-45

மற்றும் கருப்பா நதியைப் பொறுத்தவரையில் இந்த மன்றத் திலே பணியாற்றிய ஒரு உறுப்பினர் தன்னுடைய நிலங்கள் லாபம் பெறுகிற வகையிலே கருப்பா நதி அணைகட்டி முடிக்கப்பட்டு பல பகுதிகளிலே மக்கள் கறுப்பா நதியின் மூலம் நீர் பெற முடியாத நிலையில் இருக்கிறார்கள். கருப்பா நதியைப் பொறுத்த வரை யில் சாம்பவர் வடகரையிலே இருக்கிற வண்ணான்குளம், கருங் குளம் என்று அழைக்கப்படுகிற குளங்களையும், கருப்பாநதி பாசனத்தில் இணைத்து இரட்டைக் குளம், குளயனேரி போன்ற

பகுதிகளும் பயன்பெறுகிற வகையிலே கருப்பா நதி பாசனத்தோடு இணைத்து மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் அந்தப் பகுதி விவசாய மக்கள் பயன்பெறும் வகையிலே அந்தத் திட்டத்தை மாற்றியமைத்துத் தர வேண்டும்.

வடகரையில் 250 ஏக்கர் நிலத்தில் எண்ணெய் வித்துப்பண்ணை ஒன்று அமைந்துள்ளது. அங்கே மூன்று யூனிட்டுகள் எண்ணெய் வித்து நாற்றுக்களை உற்பத்தி செய்கின்றன. எனவே தமிழ்நாடு வேளாண்மை ஆராய்ச்சி மையத்தோடு இணைத்து அந்தப் பகுதி வளம் பெறுகிற வகையிலே நமது மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் அந்தப் பண்ணையை அபிவிருத்தி செய்து தரவேண்டும். ஏனென்றால் அந்தப் பண்ணை நல்ல நீர் வளங்களைக் கொண்டு வற்றாத ஆழ் குழாய்க் கிணறுகளையும் கொண்டு அமைந்துள்ளது. அந்த 250 ஏக்கர் நிலத்திலும் சோயா பீன்ஸ் போன்ற எண்ணெய் வித்துக்களின் விதைகளைப் பயிரிட்டு நல்ல மகசூல் பெறக்கூடிய வகையிலே மண்வளம் பெற்றிருப்பதால் அதைச் சிறந்த முறையில் மாற்றித்தர வேண்டும். அங்கே இப்போது நெட்டை தென்னங்கன்றுகளை மட்டும் உற்பத்தி செய்து வருகிறார்கள். மேலும் நெட்டை, குட்டை தென்னங்கன்றுகளைப் பயிரிடும் வகையில் அமைச்சர் அவர்கள் அந்தப் பண்ணையை மாற்றித் தரவேண்டும் என்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

எங்கள் மாவட்டத்தைப் பொறுத்தவரையில் குற்றாலத்திலே ஒரு மாதிரி பழத் தோட்டப் பண்ணை அமைந்துள்ளது. அந்த மாதிரி பழத் தோட்டப் பண்ணையை பெரிய பழத் தோட்டப் பண்ணையாக மாற்றி, நெல்லை மாவட்டத்து விவசாயிகள் அனைவரும் பயன்பெறும் வகையில் உயர்ந்த ரக மாங்கனிகளை உற்பத்தி செய்து மானிய விலையிலே விவசாயிகளுக்குக் கிடைக்க ஏற்பாடு செய்தால் நெல்லை மாவட்டம் முழுவதும் மாங்கனி உற்பத்தியில் முன்னணி பெற முடியும் என்பதை மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வந்து அதைச் செய்திட வேண்டும் என்று வேண்டுகோள் வைக்கிறேன்.

வேளாண்மைத் தொழிலையே நம்பி வாழும் கடையநல்லூர் மக்கள் மீது மாண்புமிகு முதல்வர், நமது காவல் தெய்வம், புரட்சித் தலைவி அவர்களுடைய கருணையைக் காட்டி வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கடையநல்லூர் தொகுதியைக் கனிவுடன் கவனிக்க வேண்டும் என்று இந்த மாமன்றத்திலே கேட்டுக் கொள்கிறேன்.

நெல்லை மாவட்டத்திலே திருமலைக் குமாரசாமி திருக்கோவில் அமைந்துள்ளது. அந்தக் கோவிலினுடைய கும்பாபிசேகத்திற்கு ரூ. 25 இலட்சம் மானியமாக மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்கள் அளிக்க வேண்டும் என்று மாண்புமிகு பேரவைத் தலைவர் மூலமாகக் கேட்டுக்கொள்கிறேன்.



கடையநல்லூர் தொகுதியைப் பொறுத்தவரையில் 65, 70 கி.மீ. சுற்றளவிலே கல்லூரிகள் இல்லை. எனவே கடையநல்லூரில் ஒரு கலைக் கல்லூரியை அமைத்துத்தர வேண்டும் என்று இந்த நேரத்திலே கேட்டு எனக்கு வாய்ப்பளித்த மாண்புமிகு பேரவைத் தலைவருக்கு நன்றி கூறி விடைபெறுகிறேன். வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** திரு. வே. கண்ணன்.

**திரு. வே. கண்ணன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னை இந்த மன்றத்துல பேச அனுமதி அளித்த தங்களுக்கு என் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். 1951 ஆம் ஆண்டு தமிழகத்துல தேசிய பால்வள வாரியத்தின் நிதி உதவியில் மாண்புமிகு மறைந்த முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவர் அவர்கள் காலத்துலே ஆரம்பிக்கப்பட்ட தமிழ்நாடு கூட்டுறவு எண்ணெய் வித்து உற்பத்தியாளர்கள் இணையம், விவசாயிகளுக்கு விதை, உரம் மற்றும் பூஞ்சான் மருந்துகளைத் தந்து சிறந்த நவீன தொழில் நுட்பங்களையும் வழங்கி, உற்பத்தி செய்யப்படும் எண்ணெய் வித்துக்களுக்கு உரிய விலை கொடுத்து கொள்முதல் செய்து நம் நாட்டிலுள்ள முக்கிய பிரச்சினை ஆகிய சமையல் எண்ணெய் தட்டுப்பாட்டைப் போக்கி, எண்ணெய் வித்து உற்பத்தியில் நாம் தன்னிறைவு அடையும் வகையில செயலாற்றி வந்தது. ஆனால் சமீப காலமாக சிறந்த முறையில் செயல்பட இயலாத சூழ்நிலை உருவாகியுள்ளது. விவசாயிகளின் பெயரால் ஆரம்பிக்கப்பட்ட இணையம், இதுவரை தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகளிடம் நிர்வாகத்தை ஒப்படைக்கப்படாமல், அரசு அதிகாரிகளின் கீழே இயங்கி வருவது ஏன்? மற்ற மாநிலங்களான கர்நாடகம், ஆந்திரம், மகாராட்டிரம், குஜராத், ஒரிசா போன்ற மாநிலங்களில் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகளின் கீழ் நிர்வாகம் இருப்பதுபோல் நமமுடைய மாநிலத்திலும் மாற்றச் செய்யலாம் அல்லவா? குறைந்த பட்சம் தேர்தல் நடைபெறும் வரை நிர்வாகக் குழுவில் விவசாயப் பிரதிநிதிகளை நியமித்தால், விவசாயிகளின் பிரச்சினைகளை நேரடியாக நிர்வாகத்திற்கு எடுத்துரைக்க ஏதுவாக அமையும் அல்லவா?

பிற்பகல் 4-50

அரசு வழங்கும் விதை, பூச்சி மற்றும் பூஞ்சான் மருந்து இன்னும் பல இடுபொருட்களுக்கு வழங்கும் மானியம் குறித்த நேரத்தில் விவசாயிகளுக்குக் கிடைப்பது இல்லை. எனவே அரசு வழங்கும் மானியத்தை நேரடியாக இணையத்திடமே வழங்கினால், விவசாயிகள் குறித்த நேரத்தில் உபயோகிக்க ஏதுவாக அமையும். இணையம் ஆரம்பிக்கப்பட்டது முதல் விவசாய பால் வள வாரியத்தின் நிதி உதவியிலேயே இயங்கி வருவதால் நம்முடைய மாநிலத்தில் உற்பத்தி செய்யப்படும் தரமான எண்ணெய்

வெளி மாநிலங்களுக்கே விற்பனை செய்யப்படுகிறது. எனவே அரசு இணையத்திற்காக தனியாக நிதி ஒதுக்கியோ அல்லது கூட்டுறவு வங்கிகளிடமிருந்தோ சுமார் 50 கோடி அளவில் ஏற்பாடு செய்து கொடுத்தால உற்பத்தி செய்யப்படும் தரமான எண்ணெய்யை அரசே வாங்கி, எண்ணெய் தட்டுப்பாட்டைக் கட்டுப்பாடு மிகுந்த இந்த நேரத்தில் பாமாலினுக்காக நிறைந்த தொகையை மானியமாக இழக்காமல் நுகர்வோருக்கு பொது விநியோக முறையில் அடைப்பான்களில்அடைத்து வழங்கலாம் அல்லவா ? இதனால் கலப்படமற்ற தரமான எண்ணெய் மக்களுக்குக் கிடைக்க வழிகோலாக அமையும்.

ஆந்திரம், குஜராத் மற்றும் பல மாநிலங்களில் விவசாயிகளின் இணையத்திற்கு கொள்முதல் வரி, மார்க்கெட் செஸ், விற்பனை வரி— இவைகளுக்கு வரி விலக்கு அளித்து இருப்பதுபோல் நம்முடைய மாநிலத்துக்கும் அளிக்கலாம். இவ்வளவு வரிகளையும் சுமந்து வரும் இணையம், இவைகள் அனைத்தையுமே செலுத்தாமல் கலப்படம் செய்யப்பட்ட எண்ணெய்யை விற்பனை செய்யும் தனியார் வியாபாரிகளோடு போட்டி போட முடியவில்லை. இந்த வரி விலக்கு அளித்தால் அரசுக்கு அது ஒரு பெரிய இழப்பு ஒன்றுமில்லை.

தற்சமயம் 4 மாவட்டங்களில் செயல்படும் விவசாயிகளின் இணையம், எண்ணெய் வித்துக்கள் பயிரிடப்படும் மேலும் 6 மாவடடங்களில் ஆரம்பித்து உதவ வேண்டும். தேசிய பால்வள வாரியம் கோடிக்கணக்கான பணம் செலுத்தத் தயாராக இருந்தது இருந்தும் அரசு இதுவரையில் அனுமதி அளிக்காததன் காரணம் என்ன என்று தெரிவிக்கலாம் அல்லவா ? மற்ற மாநிலங்களில் கிராமிய அளவில் சங்கங்கள், மாவட்ட அளவில் ஒன்றியங்கள், மாநில அளவில் இணையம் என்று 3 அடுக்குகள சிறந்த முறையில் செயல்பட்டு வருவதுபோல் நம்முடைய மாநிலத்திலும் ஏன் அவ்வாறு மாவட்ட ஒன்றியங்கள் பதிவு செய்யப்படவில்லை ? தற்சமயம் தீபாவளிக்கு அரசு வழங்க உத்தேசித்துள்ள பாமாலின் எண்ணெய்யை இணையத்திடம் அளித்து அடைப்பான்களில் நிரப்பி பொது விநியோக முறையில் வழங்கினால் அதன் மூலம் விவசாயிகளின் இணையத்திற்கும் ஒரு வருமானத்தை ஏற்படுத்திக் கொடுத்ததுபோல் இருக்கும். எந்த நோக்கத்திற்காக இந்தத் திட்டம ஆரம்பிக்கப்பட்டதோ, அதன் முழு வெற்றியை அடைய இயலாத நிலையில் இணையம் உள்ளது. எனவே அரசு மேற்கூறி உள்ள பிரச்சினைகளுக்குத் தீர்வு கண்டால் விவசாயிகளுக்கு அரசு உதவி செய்வதோடு மட்டுமல்லாமல் நமது நாட்டின் முக்கியப் பிரச்சினையாகிய எண்ணெய்வித்து உற்பத்தியில் நாம் தன்னிறைவு அடைய வழிகோலாக அமையும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.





தமிழ்நாடு தோட்டக்கலை துறையில் 34 தோட்டக்கலைத் அலுவலர்கள் தற்காலிகப் பணியாளர்களாகப் பணியாற்றி வருகிறார்கள். இவர்களைப் பணி நிரந்தரம் செய்ய வேண்டும். இவர்களில் 14 பேர் பெண்கள் என்பது குறிப்பிடத் தக்கது. 1979-ல் இருந்து 11 ஆண்டுகளாக தோட்டக் கலைத் துறையில் பல உயர் பதவிகள் காலியாக உள்ளன. காலி இடங்களை நிரப்பி நிர்வாகம் சிறப்பாக நடைபெற வழிவகை செய்ய வேண்டும்.

பிற்பகல் 4-55

விவசாயத்திற்கான உபகரணங்கள், உரம், பூச்சிமருந்து போன்றவைகளுக்கு அதன் தயாரிப்பாளர்களே விலை நிர்ணயம் செய்யும்போது, பல துன்பங்களுக்கு ஆளாகி நிலை இல்லாத நிலையில் புயல் பாதிப்பும், கடும் வறட்சியும்— இவைகளுக்கு அப்பாற்பட்டு உற்பத்தி செய்யப்படும் நெல், மணிலா போன்ற விளை பொருட்களுக்கு விவசாயிகளே விலை நிர்ணயம் செய்யும் நிலை ஏன் வரவில்லை ? அப்படி வந்தால்தான் அவர்களுடைய வாழ்க்கை முன்னேற்றமடையும். ரூ. 5,000 முதல், முதல் வைத்து வியாபாரம் செய்யும் பெட்டிக் கடைக்காரருக்கு ஏற்படும் நிம்மதி 5 ஏக்கர் நிலம் வைத்து இருக்கும் விவசாயிக்கு ஏற்படுவதில்லை. இந்த நிலை என்று மாறும் ? தமிழக அரசு தயாரித்துள்ள பட்ஜெட்டில் அனைத்துத் துறைகளுக்கும் நல்ல சலுகைகள் வழங்கப்பட்டுள்ளது. ஆனால் விவசாயத் துறைக்கு கூட்டுறவுக்கடன் தள்ளுபடி போன்ற எந்த சலுகையையும் வழங்காதது வேதனையாக உள்ளது. மொத்தத்தில் விவசாயிகளின் இன்றைய நிலை ஒரு ஏக்கர் வைத்து இருப்பவன் வருடத்திற்கு ரூ. 1,000 நஷ்டப்பட்டால், 5 ஏக்கர் வைத்து இருப்பவன் வருடத்திற்கு 5 ஆயிரம் நஷ்டப்படுகிறான். அதிக நிலம் வைத்து இருப்பவனுக்கு பண்ணையார், முதலாளி என்று பெயரே தவிர அவர்கள் தான் அதிகம் நஷ்டம் அடைகின்றனர். எனவே சிறு விவசாயி, பெரு விவசாயி என்ற பாகுபாடின்றி, சிறிய டிராக்டர், ஆழ்துளைக் கிணறு, மின் இணைப்பு மற்ற மானியங்கள் அனைத்தையும் வழங்க வேண்டும். தொழில் துறையில் மட்டும் சிறு தொழில்களைவிட பெருந்தொழில் நிறுவனங்களுக்கு அதிக சலுகைகள் வழங்கப்படுவது மட்டும் நியாயம் தானா ? எட்டு மணி நேரம் வேலை செய்யும் அரசு ஊழியர்கள் பணியில் இருக்கும்போது இறந்தால் 50 ஆயிரம் ரூபாய் நஷ்டஈடு அடிப்படையில் வழங்கும் போது, இரவு பகல் பாராமல், எந்த இக்கட்டான சூழ்நிலையிலும் பணிபுரியும் விவசாயி பாம்பு கடித்தோ, மின்சாரம் தாக்கியோ, கிணற்றில் விழுந்தோ இறக்க நேர்ந்தால், அவர்களுக்கு வழங்கும் தொகை சுமார் ஐந்தாயிரம் ரூபாய் தான். ஆளை வைத்து வேலை வாங்கும் விவசாயி நஷ்டஈடாக நிலத்தை விற்று அவனுக்கு கொடுத்து விட்டு அவன் கூலிக்காரனாக

மாறிவிடுகிறான். இந்த நிலை மாற விவசாயம் செய்யும் போது யார் இறக்க நேரிட்டாலும் குறைந்தபட்சம் 50 ஆயிரம் நஷ்டஈடு வழங்க அரசு நடவடிக்கையெடுக்க வேண்டும்.

விவசாயிகளுக்கு தரமான விதைகள் வழங்குவதற்கு விவசாயிகள் நிலத்தில் விதைப் பண்ணை அமைத்து ஆதார விதை, சான்றிதழ் பெற்ற விதை போன்ற விதைகள் உற்பத்தி செய்யப்பட வேண்டும் என்பது அரசினுடைய திட்டம். ஆனால் விதைப் பண்ணை விவசாயிகளிடமிருந்து அதிகவிலை கொடுத்து தரமான விதைகளை கொள்முதல் செய்வதற்கு பதிலாக வெளிமார்க்கெட்டில் தரமற்ற விதைகளை குறைந்த விலையில் கொள்முதல் செய்து விவசாயிகளுக்கு வழங்குகிறார்கள். எனவே, விதைக்காக அரசு வழங்கும் தொகை விவசாயிகளுக்குச் சென்று அடையாமல் அதிகாரிகளுக்குப் போய்ச் சேருகிறது. ஏன் இந்த நிலை? எண்ணெய் வித்து உற்பத்தியில தன்னிறைவு காண வேண்டுமென்று தொலை நோக்கோடு 1978 ஆம் ஆண்டு தஞ்சை மாவட்டம், பட்டுக்கோட்டையில் முன்னாள் முதல்வர், பொன்மனச் செம்மல், புரட்சித் தலைவர் டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்கள் நெட்டை மற்றும் குட்டை வேளாண்மை உதவி இயக்குநர் அலுவலகத்தை நிறுவி, அதன் கட்டுப்பாட்டில் 5 ஒட்டுப் பண்ணை மையங்களையும், நெட்டை குட்டை தென்னை நாற்றங்கால் ஒன்றையும் அன்று நிறுவினார். அன்று தொட்டு இன்றுவரையில் அவரது எண்ணத்தை ஈடேற்றும் வகையில் இலக்கிற்கு மேலாக தரமான வீரிய ஒட்டு தென்னங் கன்றுகளை தஞ்சை மாவட்ட விவசாயிகளுக்கு மட்டுமின்றி, தமிழகத்தில் உள்ள அனைத்து மாவட்ட விவசாயிகளுக்கும் கொடுத்து, உற்பத்தியைப் பெருக்க உதவி வருகிறது. ஆனால் சென்ற தி.மு.க. ஆட்சியில் இந்த நெட்டை குட்டை தென்னை அலுவலகத்தை மூடி விடவும், ஒட்டு மையங்களில் நான்கை வேறு மாவட்டங்களுக்கு மாற்றவும் அரசு ஆணை எண். 297, வேளாண்மை, நாள் 21-6-1990 உத்தரவினைப் பிறப்பித்துள்ளது. இந்த உத்தரவை ரத்து செய்ய வேண்டும். வீரிய ஒட்டு தென்னை உற்பத்தியில் பட்டுக்கோட்டை நிலையம் மட்டுமே எதிர்பார்ப்புக்கு மேலாக அதிகமாக உற்பத்தி செய்து கொண்டிருக்கும் மையம் ஆகும். பட்டுக்கோட்டை மற்றும் பேராவூரணி தாலுக்காக்களில் நிலவும் தட்பவெப்ப நிலைமை தென்னை உற்பத்திக்கு ஏற்றதாக அமைந்து உள்ளது. ஏனைய இடங்களைக் காட்டிலும் நீர் வளமும், மண்வளமும் ஏற்றதாக உள்ளது. ஒட்டுச் சேர்க்கைக்கு தேவையான தாய்மரம் கிழக்கு கடற்கரை ஓரமாக இங்கே அதிக அளவில் உள்ளது. ஒட்டுச் சேர்க்கைப் பணியில் தேர்ச்சி பெற்ற தொழிலாளர்கள் இங்கே மிகுந்துள்ளனர். பட்டுக்கோட்டை தென்னங் கன்றுகள் என்று எல்லா இடங்களிலும் புகழ் பரப்பும் சிறந்த தென்னங் கன்றுகளை உற்பத்தி செய்வது இந்த மையம் ஆகும். ஒட்டுப்பணி வேலை காலை 7 மணி முதல் இரவு 10 மணி வரையில் நடைபெறுவதால் தனியாக வேளாண்மை உதவி இயக்குநரின் கீழ் இது இருப்பது தான் நல்லது.



எண்ணெய் வித்துக்கள் இறக்குமதியைக் குறைத்து அன்னியச் செலாவணியை மிச்சப்படுத்த மத்திய அரசு பல விதங்களில் எண்ணெய் வித்து திட்டங்களை செயல்படுத்தும் இந்தத் தருணத்தில் தமிழகத்தில் உள்ள தென்னை சாகுபடியில் 50 சதவீதம் பரப்பு கொண்ட தஞ்சை மாவட்டம், பட்டுக்கோட்டையில் தென்னைக்காக உள்ள ஒரே தலைமை அலுவலகத்தினை நீட்டிக்கச் செய்யாமல், மூடு விழா நடத்துவது தஞ்சைத் தரணி மக்களுக்கும், தென்னை சாகுபடியாளர்களுக்கும் பெரிய இழப்பாகும். (மணியடிக்கப்பெற்றது) மேற்கூறிய கருத்துக்களை வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டுவந்து தக்க நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு அமைச்சர் அவர்கள் .

பிற்பகல் 5-00

*மாண்புமிகு திரு. கு. ப. கிருஷ்ணன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வாழைத் தோப்புகளிலும், வரப்பின் ஓரத்திலும் வயல் வெளிகளிலும், வாழ்க்கைப் பயணத்தை ஓட்டிக் கொண்டு கையதுகொண்டு மெய்யது போர்த்தி வெந்ததைத் தின்று விதி வந்தால் சாவோம் என்று இருந்த எனக்கு, இந்த மாமன்றத்தில் அமர்வதற்கும், அமைச்சரவையில் அங்கம் வகிப்பதற்கும் என்ன தகுதி இருக்கிறது, எண்ணிப் பார்க்கிறேன்.

புரட்சித் தலைவியின் போர்ப்படையிலே நானும் ஒரு வீரன் என்பதைத் தவிர, வேறு எந்தத் தகுதியும் இல்லாத என்னை, இந்தச் சட்டமன்ற உறுப்பினராக ஆக்கி, அமைச்சரவையில் அங்கம் வகிக்க அரியதோர் வாய்ப்பை வழங்கிய நான் வணங்கும் தெய்வம், தமிழக முதல்வர், மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்களுக்கு நன்றி என்றபோதும், சொல் ஒரு கோடி சேர்த்தாலும், இன்று என் இதயப் புல்லரிப்பை உணர்த்திடாது.

அன்பின் திருவுருவம், அறிவின் ஜீவஊற்று, பண்பின் உறைவிடம், பாசத்தின் இருப்பிடம், அமைதியின் மறுவடிவம், ஆற்றலின் பேருருவம், கங்கையைப் போல், காவிரி போல் கருத்துக்கள் வடிவெடுக்கும் தங்கத் தமிழகத்தின் நம்பிக்கை நட்சத்திரம், வடவேங்கடம் தென்குமரி ஆயிடை, தமிழ் கூறும் நல்லுலகம் மட்டுமின்றி, விந்திய மலைக்கு அப்பால், இந்தியத் துணைக் கண்டமே எதிர் நோக்கிக் கொண்டிருக்கும் புதுமைத் தலைவி, எங்கள் புரட்சித் தலைவி, அவர்களின் தாளுக்குத் தலை வணங்குகிறேன்.

இன்று, இந்த இனிய வேளையிலே கிரேக்க நாட்டின் வரலாறு நிகழ்ச்சி என் நினைவிற்கு வருகிறது. அலெக்சாண்டர திகிரேட் என்று வரலாற்று வல்லுநர்களால் வர்ணிக்கப்படும்

[திரு. கு. ப. கிருஷ்ணன்] 1991 [செப்டம்பர் 24

மாவீரன், அலெக்சாண்டர் பிறந்தபோது. அலெக்சாண்டரின் தந்தை இரண்டாம் பிலிப் அகம் மகிழ்ந்து அச்செய்தியினை பேரறிஞர் அரிஸ்டாட்டிலுக்கு அனுப்புகிறார், ஓலை மூலம். அரிஸ்டாட்டிலும் பதிலுக்கு வாழ்த்து மடல் தருகிறார். வாழ்த்து செய்தியைப் பெற்ற மன்னன், இரண்டாம் பிலிப், காவலர்களை அழைத்து, அரிஸ்டாட்டிலை அத்தாணி மண்டபத்திற்கு அழைத்து வருமாறு ஆணையிடுகிறார். அரிஸ்டாட்டில் அவர்கள் அழைத்து வரப்படுகிறார், அரண்மனைக்கு. அரியணையில் வீற்றிருக்கும் மன்னன, அரிஸ்டாட்டிலை நோக்கி, தாங்கள் எனக்கு வழங்கிய வாழ்த்துச் செய்தியால், எனக்கோ, என் மகனுக்கோ, இந்த கிரேக்க சாம்ராஜ்யத்துக்கோ எந்தவிதப் பெருமையும் இல்லை என்று கூறுகிறார். அரிஸ்டாட்டில் அவர்கள், மன்னா, என்னை எதற்காக இவ்வாறு பேசுகிறீர்கள், என்னுடைய வாழ்த்துச் செய்தியில் தங்களுக்கும், தங்கள் மைந்தனுக்கும் பெருமை சேர்க்கும் வகையில்தானே வாழ்த்தியிருக்கிறேன் என்று கூறுகிறார். அதற்கு மன்னன் கூறுகிறார், அரிஸ்டாட்டில் என்ற பேரறிஞன் வாழ்கின்ற காலத்திலே எனக்கு மகன் பிறந்து இருக்கிறான். இதுதான் எனக்குப் பெருமை, என் மகனுக்குப் பெருமை, இந்த நாட்டுக்குப் பெருமை என்று சொல்கிறார். அதனைப்போல, புரட்சித் தலைவரின் காலத்திலே, வாழ்ந்தேன், புரட்சித் தலைவரின் அரசியல் வாரிசான, புரட்சித் தலைவி அவர்களின் அமைச்சரவையிலே நானும் ஒரு அங்கம் வகித்தேன் என்பதுதான் எனக்குப் பெருமை, என்னை ஈன்றோருக்குப் பெருமை, இந்த நாட்டுக்குப் பெருமை, இங்கு சொல்லிக்கொள்வதிலே எனக்கோர் தனிப் பெருமை. (மேசையைத் தட்டும் ஒலி.)

சங்கத் தமிழ், புறநானூற்றிலே ஒரு அற்புதமான பாடல், குமண வள்ளலிடம் பெருஞ்சித்திரனார் நாடிப் போகிறார், பாடிப் பரிசு பெற. புரவலரைப் பார்த்து புலவர், அரசே, என்னுடைய தகுதியை அறிந்து பரிசு கொடுத்துவிடாதீர்கள், உங்களுடைய பெருமை விளங்க எனக்கு பொருள் ஒன்று தாருங்கள் என்று, 'என் அளந்து அறிவினை நோக்காது சிறந்து, நின்னளந்து அறிமதி பெரும' எனப் பாடுகிறார். எனக்கு என்று எந்தத் தகுதியும் இல்லை, தனக்கு இருக்கும் உயரிய பெருமையிலே என்னையும் ஒரு பொருட்டாக எண்ணி, இந்த அமைச்சரவையில் அங்கம் வகிக்க அருள்தந்த அம்மா அவர்களின் தன்னேரில்லாப் பெருமையினை இன்று நான் இங்கு குறிப்பிடாது போவேனே யானால், 'தெள்ளுதமிழ் களஞ்சியம் யாத்த வள்ளுவப் பெருந்தகை கூறிய செய்நன்றி மறந்த குற்றத்திற்கு ஆட்பட்டுப் போவேன். நம்பிக்கை வைத்த அந்த நல்ல இதயத்திற்கு நன்றி சொல்லுகின்ற வேளையிலே என் மீது சுமத்தியிருக்கிற சிலுவையைப் பொறுப்போடு கொண்டு சேர்ப்பேன் என்ற உறுதியை உளமாறத் தந்து, வேளாண்மைத் துறையில் புதுமைகள் பல புகுத்தி, புரட்சியை உருவாக்கி, இந்த அரசுக்குப் பெருமை பல சேர்ப்பேன் என்று அடக்கத்தோடு கூறிக் கொள்கிறேன்.



1991 செப்டம்பர் 24] [திரு. கு.ப. கிருஷ்ணன்]

இந்த மன்றத்திற்கு என்னை அனுப்பி வைத்த திருவரங்கம் தொகுதி வாக்காளப் பெருமக்களுக்கும் என் நெஞ்சம் நிறைந்த நன்றியைச் சொல்லி, என் உரையைத் துவக்குகிறேன்.

வேளாண்மை மற்றும் வேளாண்மை குறித்த மூலதனச் செலவு ஆகிய மானியக் கோரிக்கைகளின் மீது மாண்புமிகு உறுப்பினர்கள் இங்கே வழங்கியிருக்கிற பண்பும் பயனும் மிக்க கருத்துக்களுக்கு நான் முதலிலே நன்றியினைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

வேளாண்மையைப் பொறுத்தவரையில் அதிகமான விளைச்சல் கிடைக்க வேண்டும் என்பது மட்டுமல்ல, அதனை உற்பத்தி செய்யக்கூடிய விவசாயப் பெருமக்கள் நல்ல வருவாயைப் பெற வேண்டும். நல்ல வாழ்க்கையைப் பெறவேண்டும் என்பதுதான் எங்களின் இதய தெய்வம், தமிழக முதல்வர், மாண்புமிகு புரட்சித் தலைவி அரசின் நோக்கம் என்பதை நான் இங்கே சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

'உழவன் உள்ளத்தில் புயல் வீசினால், வயலில் வளம்காண முடியாது' என்று பேரறிஞர் அண்ணா அவர்கள் சொன்னார்கள். வயலில் இருக்கக்கூடிய பசுமை, விவசாயிகளின் வாழ்விலே நிகழ வேண்டும் என்பது எங்களுடைய குறிக்கோள். இத்துறை பல்வேறு நல்ல திட்டங்களை வழங்கியிருக்கிறது. இந்த இனிய வேளையில் புதிய திட்டங்களை வழங்கவும் இருக்கிறது.

பிற்பகல் 5-05 மணி.

கடந்த 1990—91 ஆம் ஆண்டில் வடகிழக்குப் பருவமழை திருப்தியாக இல்லை. பயிரிடு நிலப்பரப்பு குறைந்தது. அதனால் நெல் உற்பத்தியில் 3 லட்சம் மெட்ரிக் டன்னும், எண்ணெய் உற்பத்தியில் 1.17 லட்சம் மெட்ரிக் டன்னும், இதர தானிய உற்பத்தியிலே 1.5 லட்சம் மெட்ரிக் டன்னும், உற்பத்தி அளவில் குறைந்தது. நடப்பு ஆண்டில், 1991—92 ஆம் ஆண்டில், இது வரையிலும் முந்தைய ஆண்டைவிட சிறப்பாக அமைந்துள்ளது. தென் மேற்கு பருவமழை பரவலாகக் கிடைத்துள்ளது. மொத்தத்தில் மழை அளவு திருப்தியாக உள்ளது. எனவே, வழக்கமான பரப்பு சாகுபடியாகும் என நம்பலாம். உணவு உற்பத்தியில் உயரும் நிலை உள்ளது. காவிரி நதி நீர்ப் பிரச்சினையில் நடுவர் மன்றம் தற்காலிக நிலையாக 205 டி.எம்.சி. தண்ணீரை அளிக்க வேண்டுமென ஆணையிட்டது. இது நமது கோரிக்கையான 300 டி.எம்.சி. தண்ணீரின் ஒரு பகுதியாகும். ஆனால் துரதிருஷ்டவசமாக கர்நாடக அரசு நடுவர் மன்றத்தீர்ப்பை எதிர்த்ததும், அதனால் குடியரசுத் தலைவர் அவர்கள் இது தொடர்பாக தலைமை நீதிமன்றத்தை அணுகியிருப்பதையும் யாவரும் அறிவர். நாம் நமது விவசாயிகளின் நீண்ட நாளைய கோரிக்கையான நீதியைப் பெறுவோம் என நம்புகிறோம்.

[திரு. கு. ப. கிருஷ்ணன்] [1991 செப்டம்பர் 24

1991—92-ஆம் ஆண்டில் கீழ்க்கண்ட சில முக்கிய திட்டங்கள் செயல்படுத்தப்பட உள்ளன.

சிறப்பு உணவு உற்பத்தித் திட்டம். முன்னதாக சிறப்பு உணவு உற்பத்தித் திட்டம் என்பது அரிசியை மட்டுமே கொண்டிருந்தது. தற்போது அது சோளம் மற்றும் கம்பு பயிர்களுக்கும் விஸ்தரிக்கப்பட்டுள்ளது. இது மத்திய அரசு நிதியுதவியுடன் செயல்படுத்தப்படும் ஒரு திட்டம். ஏற்கெனவே நடைமுறைப் படுத்தப்பட்ட 10 மாவட்டங்களுக்கு மேலாக இத்திட்டம் மேலும் இராமநாதபுரம், பசும்பொன் மற்றும் பெரியார் ஆகிய மூன்று மாவட்டங்களிலும் இந்த ஆண்டு விஸ்தரிக்கப்படுவதுடன் இத் திட்டத்தில் இவ்வாண்டு ரூ. 5.33 கோடி முதலீட்டில் விவசாயிகளுக்கு இடுபொருட்கள் மானியத்தில் வழங்கப்படும். விவசாயிகளுக்கு பயிற்சிகளும் அளிக்கப்படும்.

ஒருங்கிணைந்த மாநில எண்ணெய் வித்துக்கள் திட்டம். இத்திட்டம் நடப்பாண்டில் ரூ. 5 இலட்சம் செலவில் தர்மபுரி, வட ஆற்காடு அம்பேத்கார், திருவண்ணாமலை சம்புவராயர், தென்னாற்காடு, சேலம், செங்கற்பட்டு எம்.ஜி.ஆர். மற்றும் ராமநாதபுரம் ஆகிய மாவட்டங்களில் செயல் படுத்தப்பட உள்ளது. இத்திட்டத்தின்கீழ் தரம் வாய்ந்த வித்துக்கள், விவசாயிகளுக்கு வழங்கப்படுவதுடன், சொட்டு மற்றும் தெளிப்பு நீர்ப்பாசன வசதிகள் செய்து தரப்படும். அத்துடன் கோடை உழவன் மூலம் மண்ணுக்குள் மறைந்து பெரும் அழிவை ஏற்படுத்தக் கூடிய கம்பளிப் பூச்சிகளின் முட்டைகளை அழித்து, அவற்றின் இனப்பெருக்கம் கட்டுப் படுத்தப்படும்.

நுண்ணுயிர்க் கலவை உற்பத்தி நிலையத்தை மேம்படுத்தல். கடலூரிலுள்ள நுண்ணுயிர்க் கலவை உற்பத்தி நிலையம் ரூ. 11.50 இலட்சம் செலவில் கருவிகள் வாங்குவதன் மூலம் மேம்படுத்தப்படும். இத்திட்டத்தினால் அதன் உற்பத்தித் திறன் 10 இலட்சம் பாக்கெட்டிலிருந்து 15 இலட்சம் பாக்கெட்டுகளாக அதிகரிக்கும்.

தென்னங்கன்று பாதுகாப்பு மற்றும் விற்பனை மையங்கள் அமைத்தல். இந்தத் திட்டத்தில் தேர்ந்தெடுக்கப்பட்ட வேளாண்மை விரிவாக்க மையங்களில் ரூ. 4.26 இலட்சம் செலவில் தென்னங்கன்றுகள் பாதுகாப்பு மற்றும் விற்பனை மையங்கள் அமைக்கப்படும்.

மாநில விதைப் பண்ணைகளில் நீர்ப்பாசன வசதி மேம் படுத்தல். தேர்ந்தெடுக்கப்பட்ட அரசு விதைப் பண்ணை களில் ரூ. 24.97 இலட்சம் செலவில் நீர்ப்பாசன வசதிகள் மேம்பாடு செய்யப்படும்.



1991 செப்டம்பர் 24] [திரு. கு. ப. கிருஷ்ணன்]

தோட்டக் கலைத் திட்டங்கள். தோட்டக் கலை மேம் பாட்டு திட்டம். இத்திட்டம் நடப்பாண்டில் ரூ. 6 இலட்சம் செலவில் விரிவுபடுத்தப்பட உள்ளது. தோட்டக் கலைப் பண்ணைகளில் நீர்ப்பாசன வசதியை மேம்படுத்துதல். இத்திட்டத்தின் கீழ் ரூ. 10 இலட்சம் செலவில் 4 தோட்டக் கலைப் பண்ணைகளில் நீர்ப்பாசன வசதி மேம்படுத்தப்படும். தோட்டக் கலை பயிற்சி மையம் மேம்பாடு. சென்னை தரமணியிலுள்ள தோட்டக் கலை பயிற்சி மையம் ரூ. 5 இலட்சம் செலவில் இவ்வாண்டு விரிவுபடுத்தப்படும். சொட்டு மற்றும் தெளிப்பு நீர்ப்பாசனத் திட்டங்கள். இத்திட்டம் நடப்பாண்டில் ரூ. 40 இலட்சம் செலவில் செயல்படுத்தப்படும். இத்திட்டத்தின்கீழ் மானியம் மற்றும் தொழில் நுட்ப உதவிகள் வேளாண்மைப் பொறியியல் துறையால் வழங்கப்படும்.

விதைப் பரிசோதனை நிலையம். தர்மபுரியில் இயங்கி வரும் விதை ஆய்வுக் கூடத்தில் ரூ. 9 இலட்சம் செலவில் புதிய கட்டிடம் ஒன்றைக் கட்டி விரிவுபடுத்தப்படும்.

தேசிய நீர் வரத்துப் பகுதி மேம்பாடு திட்டம். மானாவாரி பகுதிகளில் இத்திட்டம் 17 மாவட்டங்களில் 84 வட்டாரங்களில் ரூ. 35.61 கோடி திட்டச் செலவில் 5 ஆண்டுகளில் செயல்படுத்தப்படும். இத்திட்டத்தில் கலப்பு பயிர் சாகுபடி செய்வதுடன் கலப்புப் பண்ணை அமைக்கப் படும் வழிவகைகள் மேற்கொள்ளப்படும். இதில் விவசாயம், கால்நடை வளர்ப்பு, காடு வளர்ப்பு, மீன் வளர்ப்பு ஆகியவை செயல்படுத்தப்படும்.

பிற்பகல் 5-10

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வேளாண் மையில் நவரத்தினமாகிய 9 திட்டங்களை மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்கள் அறிவித்திருக்கிறார்கள். அதனை இறுதியில் சொல்வதற்கு முன்பாக இங்கே மாண்பு மிகு உறுப்பினர்கள் சொல்லிய கருத்துக்களுக்கும், அவர்கள் கொடுத்திருக்கின்ற வெட்டுப் பிரேரணைகளுக்கும் சில கருத்துக்களைச் சொல்வது கடமை எனக் கருதி, சிலவற்றை மட்டும் குறித்துச் சொல்ல நான் ஆசைப்படுகிறேன்.

வணக்கத்திற்கும் பாராட்டுதலுக்கும் உரிய மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் ஒரு கேள்வி தொடுத் தார்கள். இங்கே முன்பு வைக்கப்பட்ட நிதிநிலை அறிக்கை யிலே கூட நம்முடைய மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் ஆண்டு ஒன்றுக்கு 550 கோடி ரூபாய் அதிலே இழப்பு

ஏற்படுகிறது என்று சொல்லியிருக்கிறார்கள். ஆனால் தொடர்ந்து முன்னாள் முதல்வராக இருந்தவர் தன்னுடைய பத்திரிகையிலே இலவச மின்சாரம் விவசாயிகளுக்கு வழங்குவதால் ஏற்படுகிற இழப்பு 30 கோடி ரூபாய் என்று எழுதியிருக்கிறார்கள். அது குறித்து, இது எப்படி என்பதை இப்போது இல்லாவிட்டாலும் கூட தன்னுடைய பதிலுரையில் அமைச்சர் அவர்கள் விளக்க வேண்டும் என்று மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் கேட்டுக் கொண்டார்கள். மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் தன்னுடைய நிதிநிலை அறிக்கையிலேயே குறிப்பிடுகிறபோது தமிழ்நாடு மின்சார வாரியத்திற்கு சுமார் ரூ. 550 கோடி இழப்பு ஏற்படுகிறது. இந்த ஆண்டில் இந்த வருவாய் இழப்பை ஈடுசெய்வதற்காக ரூ. 350 கோடியை ஒதுக்க உள்ளோம். ஆனால் மாநில அரசின் நிதிநிலையைக் கருத்தில் கொண்டு பார்க்கையில் ரூ. 250 கோடிதான் எங்களாலே வழங்க இயலும் என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். இந்த 550 கோடியிலே 350 கோடி ரூபாயை இந்த வேளாண்மைத் துறை ஏற்றுக் கொண்டிருக்கிறது. எனவே இது பற்றிய விளக்கமான அறிக்கையை வருகிற மின்சார வாரிய மானியக் கோரிக்கையின் போது மின்சார வாரிய அமைச்சர் அவர்கள் அறிவிப்பார் என்று கருதுகிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் இரா. பழனிசாமி அவர்கள் கூறும்போது தோட்டக்கலை என்ற ஒரு துறை இருக்கிறது என்பதே எனக்குத் தெரியாது என்று சொன்னார்கள். தோட்டக்கலை என்ற ஒரு துறை இருக்கிறது. அது மட்டும் அல்ல. வேளாண்மைத் துறையிலே இயங்கி வருகிற அத்துணை வேளாண்மைப் பிரிவு மையங்களும் ஊராட்சி ஒன்றிய வளாகத்தில்தான் அமைக்கப்பட்டிருக்கிறது. காரணம் பொது மக்களாலே தேர்ந்தெடுக்கப்பட்டு வரக் கூடியவர்கள் அந்த வேளாண்மைத் துறையைக் கண்காணிக்க வேண்டும் என்ற அடிப்படையிலே தான் அங்கே அமைந்திருக்கிறது. அது மட்டும் அல்லாது இனி எந்தத் தவறுகளும் நடைபெறா வண்ணம் இந்த அரசு பார்த்துக் கொள்ளும். வேளாண்மை விரிவாக்க மையங்களிலே அனைத்துப் பொருட்களும் விவசாயிகளுக்கு கிடைக்கக் கூடிய வகையில் இந்த அரசு ஆவன செய்யும் என்பதை நான் இங்கே சொல்லிக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதைப்போல பழனிசாமி அவர்கள் தஞ்சை மாவட்டத்திலே கொலைக்கொல்லி என்ற பூச்சிநோய்த் தாக்குதல் ஏற்பட்டதாக குறிப்பிட்டார்கள். தஞ்சை மாவட்டத்தில் பூச்சி நோய் ஒழிப்புப் பணிகள் தீவிரமாக மேற்கொள்ளப் பட்டிருக்கிறது. பூச்சி தோன்றினால் அதனைக் கட்டுப்படுத்த ஒருங்கிணைந்த அரசு திட்டத்தின்கீழ் பூச்சி பூஞ்சான ம



மருந்துகள் 20 சதவீதம் மானிய விலையில் வழங்கி கட்டுப்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளப் பட்டிருக்கிறது என்பதையும் இந்த நேரத்திலே நான் சொல்லிக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் நா. சா. பழனிசாமி அவர்கள் கூறும்போது நீர்ப் பிடிப்பு பகுதிகளில் விஞ்ஞான முறையில் செயற்கை மழை பெய்ய வைக்க வேண்டும் என்று சொன்னார்கள்.

'நல்லார் ஒருவர் உளரேல் அவர் பொருட்டு
எல்லோருக்கும் பெய்யும் மழை'

என்று சொல்லி, எங்கள் காவிரி தந்த கலைச் செல்வியே ஆட்சி பொறுப்பை ஏற்றவுடன், வட்டிக் கடைக்காரரின் அடகுப் பொருள்போல் காட்சியளித்த காவிரி, தடை கடந்து, மடை கடந்து இந்த தமிழகத்தின் நஞ்சை நிலங்களை கொஞ்சி முத்தமிட கரை புரண்டு ஓடிக்கொண்டிருந்த வரலாற்றுக் காட்சியை நாம் கண்டுகொண்டிருக்கிறோம் (மேசையைத் தட்டும் ஒலி) மற்றோர் இடத்திலே சொன்னார்கள்.

'ஆற்றங்கரையின் மரமும் அரசறிய வீற்றிருந்த வாழ்வும்
விழுமன்றே ஏற்றம் உழுதுண்டு வாழ்வதற்கு ஒப்பில்லை
கண்டீர் பழுதுண்டு வேறோர் பணிக்கு.'

என்ற பாடலைக் குறிப்பிட்டுச் சொன்னார்கள். பழம் பெருமை பேசவேண்டாம் என்றும் குறிப்பிட்டுச் சொன்னார்கள். வேளாண்மை என்பதே பழமை. அதிலே விஞ்ஞானத்தை புகுத்துவதுதான் புதுமை என்று பாரதி கண்ட புதுமைப் பெண் எங்கள் புரட்சித் தலைவி அவர்கள் புகுத்தியுள்ளார்கள், புதிய திட்டங்களை. சற்று பொறுத்திருங்கள். (மேசையைத் தட்டும் ஒலி).

வேளாண்மைப் பல்கலைக் கழகத்திலே புதிய ரக விதைகள் உற்பத்தி செய்யப்படுவதில்லை என்றும் அவைகள் தரமானதாக இல்லை என்றும் ஒரு குற்றச்சாட்டு சொன்னார்கள். ஒன்றை மட்டும் கனிவோடு அவர்களிடம் சொல்லிக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். ஏ.டி.டி. 34, ஏ.டி.டி. 37, ஏ.டி.டி. 38, ஏ.டி.டி. 39, கோ. -43, வெள்ளைப் பொன்னி, பொன்மணி போன்ற யாவும் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகத்தால் தயாரிக்கப்பட்டவைகள் என்பதை நான் இங்கே உங்களுடைய கவனத்திற்குக் கொண்டு வரக் கடமைப்பட்டிருக்கிறேன்.

[திரு. கு. ப. கிருஷ்ணன்] [1991 செப்டம்பர் 24

இங்கே மாண்புமிகு உறுப்பினர்கள் 18 பேர்கள் பேசினார்
கள். அவர்களுடைய குறைகளையெல்லாம் இந்த அரசு
தன்னுடைய கவனத்தில் கொள்ளும் இந்தத் துறையிலே
தவறுகள் நடைபெறா வண்ணம் அரசு பார்த்துக் கொள்ளும்
என்பதைச் சொல்லி, அப்படியும் தவறுகள் நடக்கிறது என்று
சொன்னால் தவறு செய்தவர்கள் கடுமையாக தண்டிக்கப்
படுவார்கள என்று சொல்லி இந்த அரசினுடைய நவரத்தின
திட்டமான மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்கள் அறிவித்
திருக்கிற திட்டத்தை இங்கே நான் அறிவிக்கின்றேன்.

பிற்பகல் 5-15 மணி

அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக
தேர்தல் அறிக்கையில் மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்
களால் அறிவிக்கப்பட்ட திட்டம் 25,000 ஏக்கர் தரிசு
நிலங்களில் பயிர் வளமாக்கும் புதிய திட்டத்தை தர்மபுரி,
மதுரை, திண்டுக்கல்-அண்ணா, இராமநாதபுரம், காமராசர்,
பசும்பொன், திருநெல்வேலி-கட்டபொம்மன், சிதம்பரனார்
ஆகிய எட்டு மாவட்டங்களில் ரூ. 150 இலட்சம் செலவில்
இவ்வாண்டு செயல்படுத்தவுள்ளது. (மேசையைத் தட்டும்
ஒலி).

இந்த நிலங்களில் பயன்தரும் மரங்களை வளர்ப்பதுடன்,
மரங்களுக்கு இடையே முதல் மூன்று ஆண்டுகளுக்கு, ஆண்டு
பயிர்களை வளர்த்து விவசாயிகளுக்கு இலாபம் தரத்தக்க
வகையில் செயல்படுத்தப்படும். இத்திட்டம் முடிந்து 10
ஆண்டுகளில் 300 இலட்ச ரூபாய் மதிப்புள்ள மரங்களும்,
மூன்று ஆண்டுகளுக்கு, ஆண்டு ஒன்றுக்கு ரூ. 150 இலட்சம்
மதிப்புள்ள ஆண்டு பயிரிலும் வருமானம் கிடைக்கும்.

சிலரைப்போல், வாய் வார்த்தையால் வெறும் பந்தல்
போடாமல், இத்திட்டத்தின் மூலம் "சொன்னதைச் செய்
வோம், செய்வதைச் சொல்வோம்" என்பதை நிரூபித்
துள்ளோம்.

மகளிர் மேம்பாட்டுத் திட்டம். நாட்டு நலனில்,
நாட்டம் கொண்ட, நீண்ட நெடுநோக்குப் பார்வையைச்
செலுத்திக்கொண்டிருக்கிற பண்பாளர்கள் கூறுகிறார்கள்
"நமது முதல்வர் அவர்கள் புரட்சித் தலைவி" என.
ஆம். புரட்சித் தலைவிதான். அரசியலில் ஓர் புரட்சி.
அன்பில் ஓர் புரட்சி; வேட்பாளர் தேர்வில் ஓர் புரட்சி;
வெற்றியிலோ ஓர் இமாலயப் புரட்சி; வரலாறு காணாத
அமளியென பத்திரிகைகளில் செய்தி வரா வண்ணம் அவை
நடத்துவதில் ஓர் புரட்சி; இத்தனை புரட்சிகளையும்



1991 செப்டம்பர் 24] [திரு. கு. ப. கிருஷ்ணன்]

படைத்துக் கொண்டிருக்கிற எங்களது புரட்சித் தலைவி
அவர்கள், வேளாண்மைத் துறையில் பெண்களுக்கோர்
புரட்சி படைத்திருக்கிறார்கள்.

ஆசிரியர் பணிபுரியும் ஆடவர்
ஆரணங்கைத் தேடுகிறார் மணமுடிக்க;
அலுவல் பணிபுரியும் பெண்ணை தனக்கு
மணமகளாக வரவேண்டுமென விரும்புகிறார்
பொருளாதார சீர்கேட்டைச் சீரமைக்க:

இதனைப்போல், மருத்துவர், பல்வேறு அரசுப் பணியாற்று
வோரும் விரும்புவதில் தவறில்லை. காரணம், வாழ்க்கையில்
ஏற்படும் பொருளாதார சீர்கேட்டை. சீரமைப்பதற்காக.
விவசாயியும் இதனை விரும்புவது இயற்கைதானே. இங்கே
தான் நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள்,
வரலாற்று சிறப்புமிக்க, தொலைநோக்குப் பார்வையோடு,
விவசாயியின் வாழ்க்கைத் துணைவியும் வேளாண்மைப்
பயிற்சி பெற்று, கணவனுக்கு விதை நேர்த்தி செய்வதிலும்,
வேளாண்மைப் பெருக்கத்திற்கு வேண்டிய அறிவினையும்,
தொழில்நுட்பப் பாங்கினையும் பெறவேண்டுமென, 400
கிராமங்களில் பெண்களுக்கான விரிவாக்க மையங்கள, ரூ. 5
கோடி செலவில் அமைத்து ஆண்டொன்றுக்கு 9,000 விவசாயப்
பெண்கள் வீதம் 8 ஆண்டுகளுக்கு 72,000 பேர்கள் பயன்
பெறுவார்கள். 400 பெண் உதவி வேளாண்மை அலுவலர்
கள் மூலம் பயிற்சி அளிக்க திட்டம் தீட்டி, இந்த ஆண்டே
இதனைச் செயல்படுத்த இருக்கின்றார்கள். இதற்கான
செலவு ரூ. 17.98 கோடியாகும்.

பயிர் விளைச்சல் போட்டி பரிசுத் திட்டம். அளப்பரிய
சாதனைகள் நிகழ்த்தும் வீரர்களுக்குப் பரிசுப் பொருட்கள்
வழங்குவதைத்தான் பார்த்திருக்கிறோம். அவர்களுக்குப்
பாராட்டு, பேருரைகள் வழங்குவதைக் கேட்டிருக்கிறோம்.
"உண்டி முதற்றே உணர்வின் பிண்டா" என புறநானூற்
றுப் பாடல்களின் மகத்துவம் அறிந்து நம்முடைய இதய
தெய்வம், மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள்
வேளாண் பெருமக்களின் நலனிலே அக்கறைகொண்டு,
உச்ச விளைச்சலை ஈட்டித்தரும் விவசாயிகளுக்கு ரூபாய்
பத்து இலட்சம் வரை பரிசு பொற்கிழிகளை இந்த ஆண்டு
முதல் தன் பொற்கரத்தால் வழங்கவிருக்கிறார்கள்.
(மேசையைத் தட்டும் ஒலி) மாநில அளவில் நெல்லுக்கு
முதல் பரிசு ரூ. 50,000. இரண்டாம் பரிசு ரூ. 25,000.
ஏனைய பயிர்களுக்கு முதல் பரிசு ரூ. 5,000 இரண்டாம் பரிசு
ரூ. 3,000. மாவட்ட அளவில் நெல்லுக்கு முதல் பரிசு,
ரூ. 5,000, இரண்டாம் பரிசு ரூ. 3,000. ஏனைய பயிர்
களுக்கு முதல் பரிசு ரூ. 2,000, இரண்டாம் பரிசு ரூ. 1,000.

இது ஊராட்சி ஒன்றிய அளவிற்கு விஸ்தரிக்கப்படும். இத்தோடு நில்லாது மீண்டும் ஒரு வாய்ப்பாக, பயிர் விளைச்சல் போட்டியில், பரிசு பெறும் விவசாயியின் மகன், மகள்கள் வேளாண் பல்கலைக் கழகத்தில், வேளாண்மை இளங்கலை பயில்வதற்கு முழுத் தகுதியும் பெற்றிருந்தால், அவர்களுக்கு தமிழ்நாடு வேளாண் பல்கலைக் கழகத்தில் 'வேளாண்மை இளங்கலை' பயில்வதற்கு 10 இடங்கள் ஒதுக்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி).

விஞ்ஞானிகளுக்கு ஒரு பரிசுத் திட்டம். வேளாண்மைத் துறையில் விஞ்ஞானத்தைப் புகுத்தி, வீரிய விதைகளைக் கண்டுபிடித்து, பொங்கல் திருநாளிலே, அறிவிப்பு வெளியிடுவது ஆண்டாண்டு காலமாக நடைபெறும் செய்தி. ஆராய்ச்சி வல்லுநர்கள் அயராது உழைத்து உருவாக்கும் புதிய ரக விதைகளுக்குப் பொற்கிழி வழங்கும் பரிசுத் திட்டத்தை இந்த ஆண்டு நமது முதல்வர் மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்கள் அறிவித்துள்ளார்கள். அதில் ஒரு நிபந்தனை. நீண்டகாலம் நிலைத்திருக்கக்கூடிய சிறந்த ரகமாகவும், வேளாண் பெருமக்களால் விரும்பி பயிரிடப்படக்கூடிய தகுதியான ரகமாகவும் இருக்க வேண்டும். இதனைக் கண்டுபிடிக்கும் வல்லுநர் மற்றும் வல்லுநர் குழுவிற்கு ரூபாய் ஒரு இலட்சம் பரிசு வழங்கப்படும்.

கடனிலே பிறந்து, கடனிலே வாழ்ந்து, கடனாளியாகவே மடிகிறவன்தான் விவசாயி என்ற இதயக் குமுறலை எடுத்துரைத்த பெருமை, எங்கள் இதய தெய்வம் புரட்சித் தலைவி அவர்களையே சாரும். யாரும் நினைக்காத, நினைக்க முடியாத, எட்டாத தூரத்தில் வாழ்ந்து கொண்டு

"கார்மேகம் இடிபடுமா,
கடுகி வரும் மாமழைதான் முத்தமிடுமா,
அண்ணாந்து பார்த்து, ஒட்டிய வயிறை
ஒரு கையால் தாங்கிப் பிடித்து,
தான் வாழ்ந்து, பிறரை தாராளமாக
வாழவைத்துக் கொண்டு இருப்பவன் தான் விவசாயி"

இவர்கள் அல்லல் போக்கிட, புரட்சித் திட்டம் ஒன்றைத் தீட்டி இருக்கிறார், நமது மாண்புமிகு முதல்வர் அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி).

பிற்பகல் 5-20

தமிழ்நாடு வேளாண்மை வளர்ச்சித் திட்டம் என்கிற பெயரில், உலக வங்கியிடம் நிதி உதவியாக ரூபாய் 310 கோடியைப் பெற்று, புதியதொரு புரட்சிகரமான வரலாற்றைப் படைத்து இருக்கிறார். நமது முதல்வர் மாண்புமிகு



புரட்சித் தலைவி அவர்கள். இந்தத் திட்டம் ஏழு ஆண்டு காலத்திற்குள் நிறைவேற்றப்படும். வேளாண் பணி சிறக்க, பரந்த குறிக்கோளுடன், வேளாண் விரிவாக்கப் பணி மேம்படுத்தப்படும். வேளாண்மையுடன் நெருங்கிய தொடர்புடைய கால்நடையின் தரம் மேம்படுத்தப்படும். மேற்கு மலைப்பகுதியில் உள்ள, கிராமங்களை ஒட்டிய காடுகள் அழிக்கப்பட்ட பகுதியில், பயன்தரும் வகையில் வேளாண் காடுகள் உருவாக்கப்படும்.

"சித்திரைச் சோலைகளே உம்மை
நன்கு திருத்த இப்பாரினிலே
எத்துணை தோழர்கள் ரத்தம் சொரிந்தனரோ
உந்தன் வேரினிலே"

என்றார் பாரதிதாசன். விவசாயியின் வேர்வையில் விளைந்த விளைபொருட்களை, கட்டை வண்டியில் ஏற்றி காத தூரம் செல்லும்போது, குழியிலே விழுந்த வண்டி, தலை நிமிர்க்க, தலையிலே துண்டைக்கட்டி, தூக்கிப் பிடிக்கும் 10 பேர் துணைக்குக் கொண்டு, பாங்காக வண்டியை, மேலேற்றுவதும், அச்சாணி முறிந்து, சாட்டையடி தாங்கிய சருகான மாடுகளுடன், ஓரத்தில் உட்கார்ந்து, ஒட்டிய வயிறுடன் ஒப்பாறி வைக்கும் வ்விவசாயின் நிலை கண்டு

சத்தியமே நித்தம் நித்தம் தவம் செய்ததால்
எங்கள் அன்னை சந்தியாவே பெற்றெடுத்த நன்முத்து

(மேசையைத் தட்டும் ஒலி) ஆட்சி பொறுப்பேற்றவுடன், விவசாயியின் அவலம் போக்க, அவன் பெருமையை அவனிக்கு உயர்த்திட, உருவாக்கப்பட்டதோர் திட்டம். இம்மாநிலத்தில் உள்ள 19 ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்திற்கு, தங்களுடைய விளைப்பொருட்களைக் கொண்டு செல்வதற்கு 800 கி.மீ. தொலைவிற்கு கிராம சாலைகள் அமைக்கப்படும். இத்திட்டத்திற்கு பொதுப்பணித்துறை பொறியாளர்கள் அயல்பணி முறையில் அமர்த்தப்படுவார்கள். (மேசையைத் தட்டும் ஒலி).

கோவை வேளாண்மை பல்கலைக் கழக பொறியியல் மாணவர்களின் நீண்ட நாள் கோரிக்கை முந்தைய ஆட்சியாளரால் அலட்சியப்படுத்தப்பட்டு, மாணவர்களின் உணர்வினைப், புரிந்துகொள்ளாத நிலையிலே, இருந்ததை இந்த நாடு அறியும். கோவை வேளாண்மைப் பல்கலைக் கழக பொறியியல் பட்டதாரி மாணவர்கள், உண்ணா நோன்போடு, கால்நடையாக, மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்களைக் காண வேண்டுமென்ற வேட்கையில், பாதயாத்திரையாக சென்னை நோக்கி வந்தார்கள். பசியின் கொடுமையால்

மயங்கி விழுந்து மருத்துவ மனையில் சேர்க்கப்பட்டார்கள். பால் நினைந்து ஊட்டும் தாயைப்போல், நம்முடைய முதல்வர் புரட்சித் தலைவி அவர்கள், தாய் உள்ளத்தோடு "என்னை சந்திக்க உங்களை வருத்திக்கொண்டு தான் சென்னைக்கு வந்து பார்க்க வர வேண்டுமா? என கேட்டதோடு அல்லாமல் என்னை எப்போது வேண்டுமானாலும் பார்க்கலாம்" என்று அன்புடன் கூறினார்கள். இதனை மனதில் நிறுத்தி, அவர்களுக்கும் வாழ்வளிக்க வேண்டுமென்ற நல்ல உள்ளத்தோடு,

"தவமிருந்து பெறுவது வரம்
பக்தி அறிந்து தருவது அருள்
வரம் தருவது ஆண்டவன்
வரம் பெற்றோர் வாழ்ந்ததில்லை—வரலாறு
அருள் தருவது சக்தி"

இங்கே அன்னையாக ஆதி பராசக்தியாக மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி அவர்கள் வேளாண் பொறியியல் பட்டதாரிகளுக்கு வேலை கொடுக்கும் எண்ணத்தோடு, வாழ்வளிக்க வேண்டும் என்ற உயரிய நோக்குடன் அருள் வழங்கியுள்ளார்கள். இதன் மூலமாக வேளாண் பொறியியல் மாணவர்கள், உள்ளத்தில் நீங்கா இடம் பெற்றுள்ளார்கள். குடிநீர் வசதி போதுமானதாக இல்லாத கிராமங்களில், வேலை இல்லா வேளாண் பொறியியல் பட்டதாரிகளைக் கொண்டு இத்துறையின் மூலம் செயல்படுத்திட மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி அவர்கள் ஆணை பிறப்பித்துள்ளார்கள்.

**'செம்பனை' யென சங்ககால இலக்கியங்களில் அழைக்கப் பெற்ற "பாமாயில் மரம்"**

பாமாயில் கிடைக்குமா? ஏழை எளிய பாட்டாளி மக்கள் பலகாரம் சமைக்க முடியுமா? என சர்ச்சைகள் எழுந்ததை இந்த மாமன்றத்திலே கேட்டோம். தீபத்திரு நாளாம் தீபாவளிக்கு வழங்கிடுவோம் என நம் அன்பிற்குரிய மாண்புமிகு முதல்வர் அவர்கள் அறிவித்தார்கள், இந்த அவையிலே.

சமையல் எண்ணெயில் தன்னிறைவு பெறவும், அந்நியச் செலாவணியை மிச்சப்படுத்தவும், சோதனை அடிப்படையில் அரசு பண்ணைகளில் 250 எக்டேரில் செம்பனை எனப்படும் பாமாயில் மரங்கள் சாகுபடி மேற்கொள்ளப்படும். படிப்படியாக விவசாயிகளின் நிலங்களுக்கும் விஸ்தரிக்க பட்டு, எண்ணெய் பிழியும் ஆலையும் நிறுவ நடவடிக்கை எடுக்கப்படும்.



**மருந்து மூலிகைகள் உற்பத்தி மற்றும் ஏற்றுமதித் திட்டம்.**

பெண்களின் கைவிரல்களைப்பற்றி, வர்ணிக்கும்பொழுது, அதனை "செங்காந்தள் விரல்கள்" என்று வருணிக்கிறார்கள் புலவர் பெருமக்கள். தமிழகத்தில் செங்காந்தள் மலருக்கு 'கார்த்திகைப்பூ' என்ற மறுபெயருமுண்டு. இதன் கிழங்கிற்கு 'கண்வலிக் கிழங்கு', 'கலப்பைக் கிழங்கு', 'மோளிக் கிழங்கு' என கிராமப் புறங்களில் அழைப்பார்கள். இன்று இம்மூலிகைகள் பெரும் அளவில் உற்பத்தியாகி, மேநைாலடுகளுக்கு ஏற்றுமதி யாகிறது'

பிற்பகல் 5-25

"கண்வலி விதை" "நித்திய கல்யாணி" இந்தத் தமிழ் மூலிகைகள் இத்தாலி, மேற்கு ஜெர்மனி மற்றும் ஐரோப்பிய நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டு, ரசாயன மருந்தாக உருமாற்றம் செய்யப்பட்டு திரும்ப இந்தியாவிற்கு உயிர் காக்கும் மருந்தாக வருகிறது.

இவைகளைச் சிலர் இரகசியமாக மேலைநாடுகளுக்கு ஏற்றுமதி செய்து வருகின்றார்கள். இந்த மருந்து மூலிகைச் செடிகள் சாகுபடி செய்வதைத் தீவிரப்படுத்தி, அவற்றை அரசே வியாபார ரீதியில் வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்வதற்கான திட்டத்தை ஆய்வு செய்ய மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி அவர்கள் ஆணை பிறப்பித்துள்ளார்கள். (மேசையைத் தட்டும் ஒலி).

தமிழகத்தில் நஞ்சை விளைநிலங்கள் ஓரளவுதான் இருக்கின்றன. ஆனால், புஞ்சை மற்றும் ஏனைய நிலங்கள் அதிக அளவில் உள்ளன. ஆதிதிராவிடர் நலத்துறை மானியக் கோரிக்கையின் போது, மாண்புமிகு உறுப்பினர்கள், ஆதிதிராவிடர்கள் குடியிருப்பதற்காக, நஞ்சை நிலங்களை வீட்டுமனைகளாக மாற்றுவதற்கு, உடனடியாக அரசு ஆணை பிறப்பிக்கவில்லை என்றும், ஆனால், பல்வேறு வசதி படைத்தவர்கள் வியாபார நோக்குடன் விளையும் நஞ்சை நிலங்களை, வீட்டுமனைகளாக மாற்ற, சம்பந்தப்பட்ட அலுவலர்களிடம் அனுமதிபெற்று, வீட்டுமனைகளாக மாற்றி வருகிறார்கள் என்று கூறினார்கள். அதனால் ஆண்டுக்காண்டு விளைநிலங்கள் குறைந்துகொண்டே வருவதால், உற்பத்திப் பெருக்கமும், குறைந்துகொண்டு வருவது, நாட்டுநலனுக்கு உகந்ததல்ல. எனவே, வீட்டுமனைகளாக மாற்றப்படும் விளைநிலங்களை, இந்த அரசு ஆய்வு செய்து, வீட்டு மனைகளாக மாற்றம் செய்யும் சம்பந்தப்பட்ட அனைத்து உயர் அலுவலர்களும், மற்றும் வட்டார

வளர்ச்சி அலுவலர்களும், இனி வேளாண்மைத் துறையின் முன் அனுமதி பெற்றபின்புதான் அவ்வித நிலங்களை வீட்டு மனைகளாக மாற்ற அங்கீகாரம், வழங்கவேண்டுமென்று மாண்புமிகு முதல்வர் அவர்கள் ஆணை வழங்கியுள்ளார்கள். (மேசையைத் தட்டும் ஒலி).

விதை நெல் கொள்முதல் மற்றும் விற்பனை விலை.

விதைநெல் விற்பனை மற்றும் கொள்முதல் செய்வதற்கு, விலை நிர்ணயம், வாரா வாரம் செய்யப்பட்டது. இதற்கு புள்ளியல் இலாக்காவிடம் இருந்து வாரா வாரம் விலை விவரம் வரவேண்டி இருந்தது. இந்த விவரங்கள் காலா காலத்தில் கிடைக்கப் பெறுவதில்லை. இதனால் காலத்தில் விலை நிர்ணயம் செய்ய முடிவதில்லை. அதனால் விவசாயிகளுக்கு முன்கூட்டியே விலை விவரங்களை தெரிவிக்க முடிவதில்லை. இதனால் விவசாயிகளுக்கு மிகுந்த சிரமம் ஏற்பட்டது. அத்துடன் ஊழல்களும் நடைபெற வாய்ப்பு இருந்தது. இந்த நிலை பல ஆண்டுகளாக நிலவியது. இந்த அவல நிலையைப் போக்க, ஆண்டு முழுவதும் ஒரே விலை இருக்குமாறு, மாவட்ட வாரியாக நிர்ணயிக்க, மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி அவர்கள் உத்தரவு இட்டுள்ளார்கள் என்பதை மகிழ்வுடன் தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி).

வேளாண்மையில், விஞ்ஞானத்தைப் புகுத்தி, நவீன, முறையில் உற்பத்தியைப் பெருக்கவேண்டுமென்ற உயரிய கருத்தில் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம் உருவாக்கப்பட்டது.

இப்பல்கலைக்கழகத்திற்கு, உலக அளவில், நற்பெயரும், பெரும் புகழும் நிலவி வந்தது. கடந்த ஆட்சியாளர்களின் சுயநல நோக்கோடு புகழ்மிக்க பல்கலைக் கழகத்தின் பெயரை தமிழ்நாடு ஜி.டி. நாயுடு வேளாண்மைப் பல்கலைக் கழகம் எனப் பெயர் மாற்றம் செய்திருந்தார்கள்.

மாமேதை ஜி.டி. நாயுடு அவர்களின் அறிவியல் திறனையும் அவர் கண்டுபிடித்த உயர்ந்த படைப்புக்களையும் இவ்வரசு பாராட்டுகிறது. அவருடைய பெயருக்கு புகழ் சேர்க்கின்ற பணியிலும் இவ்வரசு தொடர்ந்து பணியாற்றும்.

இந்தப் பல்கலைக்கழகத்தில் பயின்று பட்டம் பெற்று, வேலை வேண்டி, மேலை நாடுகளுக்குச் செல்ல விண்ணப்பிக்கும்போது இந்தப் பட்டம், ஒரு சுயநிதி, பல்கலைக் கழகத்தில் இருந்து பெற்றதைப்போல் தோற்றம் அளிக்கிறது.



இப்பெயர் மாற்றத்தினால் பிற ஆராய்ச்சி மையங்களும், உலக நாடுகளின் நிறுவனங்களும் இப்பல்கலைக்கழகத்திற்கு முக்கியத்துவம் வழங்குவதில் தயக்கம் காட்டுகிறார்கள். இப்பெயர் மாற்றத்தின் விளைவாக உலக அளவில் நமது பல்கலைக்கழக மாணவர்கள், பேராசிரியர்கள், அறிவியல் வல்லுநர்களின் திறமையின் பெருமைகளைக் குறைத்து மதிப்பிடுகிறார்கள்.

பெயர் மாற்ற காலத்தில் தங்களுடைய இன்னுயிர்களை துச்சமென மதித்து காலவரையற்ற உண்ணாநோன்பினை மாணவர்கள், பேராசிரியர்கள், பிற அலுவலர்கள் மேற்கொண்டார்கள்.

அண்ணல் காந்திஜி கண்ட மிகப்பெரிய ஆயுதமாம், இந்த உண்ணா நோன்பு கண்டு, எள்ளி நகையாடி, ஏளனப் பார்வை வீசி, கொத்தளத்தின் கோட்டையிலே கோலோச்சிக் கொண்டிருந்தவர்கள், இது 'என் மானப்பிரச்சினை' எனக் கூறி, தமிழ்நாட்டின் தன்மானத்தை தலைகுனிய வைத்தார்கள்.

"இழந்த பழம் பெருமை மீட்கவேண்டும்
எல்லோரும் தமிழர்களாய் வாழவேண்டும்
வழிந்தொழுகும் சுவைத் தமிழே பெருக வேண்டும்
விழுந்த தமிழ்நாடு தலைதூக்க வேண்டுமெனில்
என்றன் உயிர்தனையே வேண்டிடினும் தந்திடுவேன்"

என்று புரட்சிப்பண்பாடி வரும் புரட்சித் தலைவி அவர்கள் 'தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்' எனப் பெயர் மாற்றம் இன்றுமுதல் செய்திருக்கிறார்கள் (மேசையைத் தட்டும் ஒலி).

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர்கள் கூறிய கருத்துக்களை, இந்தத் துறையின் மீது அவர்கள் கொண்டிருக்கின்ற அக்கறையாகவும், இந்தத்துறை சிறந்து விளங்கவேண்டுமென்ற நல்ல நோக்கத்தோடு அவர்கள் கூறிய கருத்துக்களை இந்த அரசு கருத்திலே கொண்டு நிச்சயமாக அவைகளைச் செயல்படுத்தும் என்று கூறி, 'காய்த்த மரத்திலேதானே கல்லடி விழும்' என்ற பாங்கோடு இதனை ஏற்று, மாண்புமிகு உறுப்பினர்கள் வழங்கி இருக்கின்ற வெட்டுத் தீர்மானங்களைத் திரும்பப்பெற்று அரசு கோரிய தொகையினை நிறைவேற்றித் தருமாறு கேட்டு,

பிற்பகல் 5-30

விண்ணோ நிலவால் விளக்கம் பெற்றது;
தண்கடலோ முத்தால் தனிச் சிறப்புற்றது;
தரையோ தான் அறிந்ததைப் பிறர்க்குச் சாற்றும்
அருமை மக்களால் பெருமை உற்றது;
தமிழகமோ புரட்சித் தலைவியின் புனித ஆட்சியில்
பெரிதும் புகழ் பெற்று பெருமையுற்றது;
எனையீன்ற தந்தைக்கும் தாய்க்கும்
மக்கள் இனமீன்ற தமிழ்நாடு தனக்கும்
புரட்சித் தலைவியின் புனித பயணத்திற்கு என்னால்
தினையளவு நலமேனும் விளையுமெனில்
செத்தொழியும் நாள் எனக்கு இன்பத் திருநாள்

என்று கூறி அமர்கின்றேன்.

**திரு. ஆர். சிங்காரம் :** தலைவரவர்களே, ......

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** அடுத்த மானியக் கோரிக்கைகளை எடுக்க வேண்டும்.

**திரு. ஆர். சிங்காரம் :** ஒன்றே, ஒன்று, ......

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** திரு. ஆர். சிங்காரம்.

**திரு. ஆர். சிங்காரம் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பட்டுக்கோட்டையில் மிகச் சிறப்பாகச் செய லாற்றி வந்தவரும் நெட்டை, குட்டை தென்னை அலுவலகத்தையும், அதன் நான்கு கிளைகளையும் மூடு விழா செய்ய இடப்பட்ட உத்தரவை அரசு ரத்து செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கு. ப. கிருஷ்ணன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புரட்சித் தலைவி அவர் களுக்கு கொடுத்துத்தான் பழக்கமே தவிர, எடுத்துப் பழக்கம் இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** திரு. முனிவெங்கடப்பன்.

***திரு. கே. முனிவெங்கடப்பன் :** மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, சென்ற திராவிட முன்னேற்றக் கழக அரசில் வேளாண்மைப் பொறியியல் வேலைகளை அந்த அலுவலர்களே செய்யலாம் என்ற முறையில் செய்து



அவர்கள் ஏறத்தாழ 37 விழுக்காடுகள் வரை அதற்கு, கமிஷனாக எடுத்துக்கொண்டு, அதற்குப் பிறகு ஒப்பந்தக் காரர்களிடம் ஒப்படைத்து, அந்த ஒப்பந்தக்காரர்கள் 15 பர்செண்ட் இலாபம் எடுத்துக் கொண்டு, வேலை செய்து வந்தார்கள். இந்த நிலை இப்பொழுது நீடிக்குமா ? ஏறக் குறைய அது அதிகமாக, தர்மபுரி மாவட்டத்திலே இருக்கின்றது. இன்றைக்குத் தர்மபுரி மாவட்டத்திலே, பர்கூர் தொகுதியிலே அதிகமான வேலைகளைக் கொடுத் திருக்கின்றோம். இந்த நிலை மாறுமா ? மாறுவதற்கு, நம் அமைச்சர் அதற்கு ஆவன செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கு. ப. கிருஷ்ணன் :** மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினரின் கோரிக்கை பரிசீலிக்கப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** விவாதம் முடி வுற்றது. இப்போது வாக்கெடுப்பு. மானியக் கோரிக்கை எண். 20— வேளாண்மை. வெட்டுத் தீர்மானங்கள் வலி யுறுத்தப்படுகின்றனவா என அறிய விரும்புகிறேன். திரு. எச். எம். ராஜு.

**திரு. எச். எம். ராஜு :** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** திரு எச். எம். ராஜு அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெற்றுக் கொள்ளப் பெற்றது டாக்டர் தே. குமார தாஸ் தன்னுடைய தீர்மானத்தை வலியுறுத்த விரும்புகிறாரா என்று அறிய விரும்புகிறேன்.

**டாக்டர் தே. குமாரதாஸ்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** டாக்டர் தே. குமாரதாஸ் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெற்றுக் கொள்ளப் பெற்றது.

வேளாண்மை பற்றிய 20-ஆம் எண் மானியக் கோரிக்கையின் கீழ் ரூ. 607,51,97,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும் என்னும் மாண்புமிகு அமைச்சரவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் '' ஆம் '' என்க. (ஆம்)
மறுப்போர் '' இல்லை '' என்க. (இல்லை)
ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.
ஏற்போரே அதிகம் . தீர்மானம் நிறைவேறியது.
( மேசையைத் தட்டும் ஒலி).

அரசுக்கு கோரிய தொகை வழங்கப்பெற்றது.

மானியக் கோரிக்கை எண். 53—வேளாண்மை குறித்த மூலதனச் செலவு. வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப் படுகின்றனவா என அறிய விரும்புகிறேன். திரு. பி. வி. இராஜேந்திரன்.

**திரு. பி. வி. இராஜேந்திரன் :** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** திரு பி.வி. இராஜேந்திரன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெற்றுக்கொள்ளப் பெற்றது. திரு. ஜி. பழனிசாமி

**திரு. ஜி. பழனிசாமி :** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** திரு. ஜி. பழனிசாமி. அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெற்றுக் கொள்ளப் பெற்றது. டாக்டர் தே. குமாரதாஸ் தன்னுடைய வெட்டுத் தீர்மானத்தை வலியுறுத்த விரும்புகிறாரா என்று அறிய விரும்புகிறேன்.

**டாக்டர் தே. குமாரதாஸ் :** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெற்றுக் கொள்ளப் பெற்றது.

"வேளாண்மைக் குறித்த மூலதனச் செலவு பற்றிய 53-ஆம் எண் மானியக் கோரிக்கையின் கீழ் ரூ. 13,06,67,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்" என்னும் மாண்புமிகு அமைச்சரவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் "ஆம்" என்க. (ஆம்)
மறுப்போர் "இல்லை" என்க. (இல்லை)
ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.
ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.
(மேசையைத் தட்டும் ஒலி).

அரசுக்குக் கோரிய தொகை வழங்கப்பெற்றது.

(ஊ) கோரிக்கை எண். 13—நீதி நிருவாகம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** அடுத்து, மானியக் கோரிக்கைகள் மீது விவாதமும், வாக்கெடுப்பும். மானியக் கோரிக்கை எண். 13—நீதி நிருவாகம். மாண்புமிகு சட்ட அமைச்சர் அவர்கள்.



***மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,
"நீதி நிருவாகம் பற்றிய 13-ஆம் எண் மானியக் கோரிக்கையின் கீழ் ரூ. 35,30,41,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்" எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** வெட்டுத் தீர்மானங்கள். வெட்டுத் தீர்மானம் எண். 928. திரு. ஆர். சிங்காரம்.

**திரு. ஆர். சிங்காரம் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வழக்குமன்றங்களில் தேங்கிக் கிடக்கும் வழக்குகளை விரைந்து முடிக்க வேண்டியது குறித்து விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மானியக் கோரிக்கை எண். 13—நீதி நிருவாகம் என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 35,30,41,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்."

பிற்பகல் 5.35

(எ) கோரிக்கை எண். 14—சிறைச்சாலைகள்

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** மானியக் கோரிக்கை எண். 14 - சிறைச்சாலைகள். மாண்புமிகு சட்ட அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,
"சிறைச்சாலைகள் பற்றிய 14-ஆம் எண் மானியக் கோரிக்கையின் கீழ் ரூ. 19,48,70,00-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்" எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** வெட்டுத் தீர்மானங்கள் வெட்டுத் தீர்மானம் எண். 960 திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"To discuss the need to provide basic amenities and facilities to the convicted prisoners and under trial prisoners at Vellore Central Prison".

நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்.

"மானியக் கோரிக்கை எண் 14 - சிறைச்சாலைகள் என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 19,48,70,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** மானியக் கோரிக்களும், வெட்டுத் தீர்மானங்களும் பேரவை முன் விவாதிப்பதற்காக வைக்கப்படுகின்றன. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்னுரையாக ஏதாவது கூறவேண்டுமென்றால் கூறலாம்.

**மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நீதி நிருவாகம் பற்றிய 13-ஆம் எண் மானியக் கோரிக்கை மற்றும் சிறைச்சாலைகள் பற்றி 14-ஆம் எண் மானியக் கோரிக்கை பற்றிய கொள்கை விளக்கக் குறிப்புகள், தமிழிலும் ஆங்கிலத்திலும் அவைமுன் வைக்கப்பட்டுள்ளன. இவற்றை, நான் இந்த அவையில் படித்ததாகக் கருதி, அவைக் குறிப்பில் ஏற்றிக்கொள்ள வேண்டுகிறேன். மாண்புமிகு உறுப்பினர்கள் எடுத்துச் சொல்லும் ஆலோசனைகளின் அடிப்படையில், என்னுடைய பதில் உரையை இறுதியில், இந்த அவைக்கு அளிக்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** திரு. பெ. பொன்னுசாமி.

***திரு. பெ. பொன்னுசாமி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சிறைச்சாலைகள் மற்றும் நீதி நிருவாகம் குறித்த மானியங்களின் மீது பேசுவதற்கு வாய்ப்பைத் தந்த மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

முதலில் சிறைச்சாலைகள் என்பதைப் பற்றி, சில கருத்துக்களைச் சொல்லலாம் என்று ஆசைப்படுகிறேன். சிறைச்சாலைகளில் இன்றைக்கு இருக்கிற குடிநீர், கழிப்பிடம், சுகாதாரம் போன்ற அடிப்படை வசதிகளை இந்த அரசு கவனித்து செய்து கொடுக்க வேண்டுமென்று பணிவோடு கேட்டுக்கொள்கிறேன். அதே போல், 'சப்-ஜெயில்' களில் சுகாதார வசதியே இல்லை, மிகக் மிக குறைவான சுகாதார வசதியோடு அவை இயங்குகின்றன. ஆகவே, சுகாதார வசதிகளைச் செய்து கொடுக்க வேண்டுமென்று பணிவோடு கேட்டுக்கொள்கிறேன். உணவைப் பொறுத்தவரை, 1972க்குப் பிறகு கிட்டத்தட்ட 20 ஆண்டுகளுக்குப் பிறகு, ஓரளவுக்கு நல்ல முன்னேற்றங்கள் ஏற்பட்டிருக்கின்றன. நான் 1972-லே முதன்முதலிலே சிறைக்குச் சென்றபோது, கஞ்சியைக் கொடுத்தார்கள். சேலம் சிறையிலே கஞ்சியைக் கொடுத்தார்கள். ஆனால், இன்றைக்கு அவையெல்லாம் மாறி,

* 317 மற்றும் 356 ஆம் பக்கங்களில் இணைப்பு 2 மற்றும் இணைப்பு-3 ஆக அச்சிடப்பெற்றுள்ளது.



உணவைப் பொறுத்தவரை, ஓரளவுக்கு நல்ல முறையிலே கொடுத்துக் கொண்டிருக்கிறார்கள். இறுதியாக, சென்ற 1990-லே தலைவர் திரு. வாழப்பாடி இராமமூர்த்தி அவர்கள் அறிவித்த போராட்டத்திலே, சென்னையிலே சிறைச்சாலையிலே இருந்தபோது, அங்கே சில குறைபாடுகளை நான் கண்டேன். அங்கே கழிப்பிடம், குடிநீர் மற்றும் சுகாதாரம் போன்ற வசதிகள் மிக மிகக் குறைவாக இருந்தன. அதுவும் தவிர, அரசியல் கைதிகளுக்கு - என்னைப் பொறுத்தவரையில், அரசியல் கைதிகளுக்குத—தனியாக ஒரு சிறை இருக்கவேண்டுமென்று மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன். சில போராட்டங்களை நடத்தும் போது, அரசியல் கைதிகளோடு, சமூக விரோதிகளையும் சேர்த்து, போராட்ட காலங்களிலே கைது செய்து - இருவரையுமே, அரசியல் வாதிகளையும், சமூக விரோதிகளையும் ஒன்றாகச் சேர்த்து கொண்டு வருகின்ற ஒரு நிலை இருக்கிறது. அவற்றையெல்லாம், இந்த அரசு கவனித்து மாற்ற வேண்டுமென்று அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, நீதி நிருவாகத்தைப் பற்றி ஒரு சில வார்த்தைகளைச் சொல்ல வேண்டுமென்று ஆசைப்படுகிறேன். ஒருவர் வழக்கு மன்றத்திற்குச் செல்வாரேயானால், அவர் வாழ்நாள் முழுவதும் அந்த வழக்கு முடிவு பெறுவதில்லை. அதற்குக் காரணமே, மக்கள் தொகை அதிகரிப்பு, சட்ட திட்டங்கள் அதிகரிப்பு, ஆகியவை இன்றைக்கு நீதிமன்றத்திற்கு ஒருவர் சென்றால், அவர் வாழ்நாள் முழுவதும் அந்த வழக்கு முடிவு பெறுவதே இல்லை. ஆகவே, அதற்கேற்ப கூடுதலாக நீதி மன்றங்களை ஏற்படுத்தி, நீதிபதிகளை அமர்த்த வேண்டுமென்று பணிவோடு கேட்டுக் கொள்கிறேன்.

''Justice delayed is justice denied''

என்று சொல்வதுண்டு. வழக்குகள் விரைவாக முடிவு செய்யப்பட நீதி வழங்கப்படுவது மிக மிக அவசியம். ஓர் உரிமையியல் வழக்கு, விசாரணை நீதி மன்றத்தில் 6 மாத காலத்திற்குள் முடிவு பெற வேண்டும் அதே போல, ஒரு குற்றவியல் வழக்கு, குற்றப் பத்திரிக்கை சமர்ப்பித்த 3 மாத காலத்திற்குள்ளாக முடிவு செய்யப்படுதல் வேண்டும். இல்லையேல் மக்களுக்கு நீதி நிருவாகத்தின் மீது நம்பிக்கை அற்றுப் போகின்ற நிலை ஏற்பட்டுவிடும். ஆகவே, இந்த அரசு இதைக் கவனத்தில் கொண்டு, செயல்பட வேண்டுமென்று அன்போடு கேட்டுக்கொள்கிறேன். அடுத்து, "Taking justice to the door steps of the public என்ற கொள்கைக்கிணங்க, பொது மக்களுக்கும், வழக்காடு பவர்களுக்கும் வசதியாக decentralisation."

முறைப்படி, ஆங்காங்கே நீதிமன்றங்கள் நிறுவப்பட வேண்டும், நீதி மன்றங்கள் அமைக்கப்படுவதில் பொதுமக்களுக்கும் வழக்காடுபவர்களுக்கும் 'லிட்டிகன்ட்' பப்ளிக்ஸ்'க்கும் வசதி பார்த்து நீதி மன்றங்கள் அமைக்கப்படுதல் வேண்டும். ஒரு சிலரின் செல்வாக்குகாக, அல்லது ஒரு சிலரின் வருமானத் திறகாக நீதி மன்றங்கள் ஒரு குறிப்பிட்ட இடத்தில் அமைக் கப்படுதல் கூடாது. வழக்காடும் பொது மக்களுக்கு வசதி யாக, அவர்கள் பயணச் செலவு குறைகின்ற வகையிலே இடங் களைத் தேர்வு செய்து, நீதி மன்றங்களைப் பரவலாக அமைக்க வேண்டுமென்று மாண்புமிகு அமைச்சர் அவர்களை அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

பிற்பகல் 5-40

உயர்நீதி மன்றப் பிரிவு ஒன்றைக் கோயம்புத்தூரில் நிறுவ வேண்டுமென்றும் அமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன். அதேபோல் கூடுதல் மாவட்ட நீதிமன்றங் கள், மாவட்ட நீதி மன்றங்கள் இருக்கின்ற இடத்திலே நிறு வாமல் மாவட்டத்தில் பரவலாக நிறுவவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

ஒவ்வொரு தாலூக்கா தலைநகரிலும் நண்பர் சிங்காரம் அவர்களுடைய தொகுதி பேராவூரணி உட்பட உடனடியாக முன்சீப்-கம்-முதல் வகுப்பு மேஜிஸ்டிரேட் கோர்ட்டுகளை நிறுவ வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல, என்னுடைய மாவட்டத்தில் பாலக்கோடு, பெண்ணாகரம் இருக்கின்றது. பென்னாகரத்திலே ஒரு முதல் வகுப்பு மேஜிஸ்டிரேட் கோர்ட்டை உடனடியாக நிறுவ வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

தர்மபுரி மாவட்டத்திலே ஒரு கூடுதல் மாவட்ட செஷன்ஸ் கோர்ட் அமைக்க உயர்நீதி மன்றத்தால் பரிந்துரை செய்யப் பட்டு, அது அரசின் பரிசீலனையில் இருந்து கொண்டிருக்கிறது. கிருஷ்ணகிரியில் ஏழு, எட்டு வருடங்களாக கொலை வழக்கு போன்ற வழக்குகள் தேங்கிக் கிடக்கின்றன. அதனால், உடனடியாக அங்கே கூடுதல் அமர்வு நீதிமன்றம் decentralisation அடிப்படையில் தர்மபுரியில் அமைக்க வேண்டுமென்று அன்போடு கேட்டுக்கொளகின்றேன். ஏற்கனவே, கிருஷ்ண கிரியில் டிஸ்ட்டிரிக்ட் அண்டு செஷன்ஸ் ஜட்ஜ் கோர்ட் இயங்கிக் கொண்டிருக்கிறது என்பதையும் குறிப்பிட விரும்பு கின்றேன்.

அதே போல, சப்-கோர்ட் அமைக்கப்படுகிறது. தர்ம புரியிலே ஒரு சப்-கோர்ட் அமைக்கப்பட்டிருக்கிறது. ஆனால் அந்தக் கோர்ட்டுக்கு உள்ள முழு அதிகாரங்கள் அங்கே வழங்கப்படவில்லை. Land Acquisition O. P.



அதே போல் Motor, accident, O.P. போன்ற மனுக்களின் மீது அங்கே அந்த வழக்குகளை விசாரிப் பதற்கு அங்கேயிருக்கின்ற சப்-ஜட்ஜுகளுக்கு இன்னும் அதிகாரம் வழங்கப்படவில்லை என்று தெரிகின்றது. ஆகவே, அதிகாரம் உள்ள சப் ஜட்ஜுகளை அது மாதிரி கோர்ட்டுகளுக்குப் போடவேண்டுமென்று உங்களை அன்போடு கேட்டுக்கொள் கிறேன்.

பெரும்பாலான நீதிமன்றங்களில் நீதிபதிகள் நியமிக்கப் படுவதில்லை. அதனால் நீதி வழங்குவதிலும் பெருத்த கால தாமதம் ஏற்படுகிறது. மாவட்ட நீதிபதிகளை நியமிப்ப பதற்கான பட்டியலை உயர் நீதிமன்றம் அங்கீகரித்தும், சென்ற அரசு அதை அங்கீகரித்து ஆணையிடவில்லை. ஆகவே, இதனை உடனடியாக அங்கீகரித்து ஆணையிட வேண்டு மென்று மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு மாற்றுத் தலைவர் தலைமை.)

அதேபோல நீதிபரிபாலனம் செவ்வனே நடைபெறவேண்டு மானால் நீதிபதிகளுக்கு நாம் நீதி வழங்கவேண்டும். மற்ற அரசு அலுவலர்களைப் போல் அல்லாமல், நீதிபதிகளைத் தனிமைப்படுத்தப்பட்ட secluded life என்று வாழ்க்கை வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். ஆகவே, அவர் களுக்கு சிறப்பு உடையும் அணிய வேண்டிய சூழ்நிலை இருக் கிறது. எனவே, உத்திரப்பிரதேசம் போன்ற மாநிலங்களில் Judicial Robes Maintenance Allowance என்ற ஒரு அலவன்ஸ் வழங்கப்படுகின்றது. அதுபோல இங்கும் வழங்கப்பட வேண்டு மென்று அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

அதே போல, நீதிபதிகள் Vacation department இல் பணிபுரியும் அவர்களுக்கு மூன்று நாட்கள் மட்டுமே ஈட்டிய விடுப்பு வழங்கப்படுகிறது. ஆசிரியர்களுக்கு வழங்கப்படு வதைப்போல, அதிகமான அளவு ஈட்டிய விடுப்பு வழங்க வேண்டுமென்று அன்புடன் கேட்டுக்கொள்கின்றேன். மாவட்ட நீதிபதிகள், மாவட்டக் கூடுதல் நீதிபதிகள், சீப்-ஜுடிசியல் மாஜிஸ்டிரேட் அவர்களுக்கு மட்டும் ஒரு மாவட்டத்தில் கார்கள் வழங்கப்படுகின்றன. அதே அந்தஸ்தில் உள்ள நீதிபதிகளுக்கு Vehicle Maintenance Allowance வழங்கப்பட வேண்டுமென்று அன்புடன் மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொள்கின்றேன். அப்போதுதான் நீதிபதிகள் நியாயமான நிம்மதியான வாழ்க்கை வாழமுடியும் என்று சொல்லிக் கொள்ள ஆசைப்படுகிறேன்.

அதேபோல, தமிழகத்தில் நிறைய ஊர்களில் நீதிமன்றக் கட்டிடங்கள் தனியார் கட்டிடங்களில் இயங்கிக் கொண்டிருக் கின்றன. அதற்கு அதிகமான வாடகை கொடுக்கப்பட வேண்டியிருக்கிறது. வாடகை கொடுப்பதை விட்டு அரசே அந்தக் கட்டிடங்களைக் கட்டி, நீதிமன்றங்கள் அமைத் தால் அரசுக்கு செலவும் குறையும் என்று கருதுகிறேன். 'கோர்ட் காம்ளக்ஸ்' என்று ஒவ்வோர் இடங்களிலும் கோர்ட்டுகள் கட்டப்பட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். நீதி மன்றங்களுக்கு வருகின்ற பொது மக்களும் அவர்கள் பல மணி நேரம் நீதி மன்றங்களில் காத்துக் கிடக்கின்ற சூழ்நிலை இருக்கின்றது.

பிற்பகல் 5.45

நீதிமன்றத்திற்கு வருகிற பொதுமக்களுக்கு அரசு சில சௌரியங்களைச் செய்து கொடுக்கவேண்டுமென்று அன் போடு கேட்டுக்கொள்கிறேன். அவர்கள் உட்கார்வதற்கு இடம், கழிப்பிட வசதி, குடி தண்ணீர் வசதி போன்ற வசதிகளை நீதிமன்றத்திற்கு வருகின்ற பொதுமக்களுக்குச் செய்து கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதேபோல், நீதி மன்றங்களில் வக்கீல் சங்க அறைகளில் சரியாக நாற்காலிகள் போடப்படவில்லை. ஒவ்வொரு இடத்திலும் குறைவாக இருக்கின்றன. ஆகவே அதற்கு அரசு ஆவன செய்யவேண்டு மென்று அன்போடு கேட்டுக் கொள்கிறேன்.

அதே போல் ஒருவர் நீதி கோரி உரிமையியல் நீதிமன்றம், அதற்கடுத்து மாவட்ட நீதிமன்றம், அதற்கடுத்து உயர்நீதி மன்றம் ஆகிய நீதிமன்றங்களுக்கு செல்கிற நிலையில் கடை சியாக உயர் நீதிமன்றத்திற்கு விசாரணைக்கு வரும்போது 5 ஆண்டுகளுக்கு மேல் 10 ஆண்டுகள் வரை ஒரு வழக்கு முடிவு பெறுவதற்கு ஆகிவிடுகிறது. அப்படி உயர்நீதி மன்றத் யிற்கு வரும் போது ஏதாவது ஒரு பணியைச் செய்வதற்காக விசாரணை நீதிமன்றத்திற்கு அனுப்பும் முறை அதாவது ரிமாண்ட் செய்யும் முறை நடைமுறையில் இருந்து வருகிறது. அப்படி ஒரு சிறிய பணியைச் செய்வதற்காக உயர்நீதி மன்றம் சென்ற வழக்கு மீண்டும் விசாரணை நீதி மன்றத்திற்குத் திருப்பி அனுப்பப்படுகிற நிலைமையால் வழக்காடுபவர்கள் பந்தாடப்படு கிறார்கள். அந்த அவல நிலையைப் போக்க மாவட்ட நீதி மன்றமும், உயர்நீதி மன்றமும் என்ன காரியத்திற்காக ஒரு வழக்கை ரிமாண்ட் செய்கிறதோ அந்தக் காரியத்தை அந்த நீதிமன்றமே முடிவு செய்யவேண்டும் என்று சட்டத் திருத் தத்தை மாநில அரசு மத்திய அரசின் மூலமாகச் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதாவது ஒரு வழக்கை ரிமான்ட் செய்கிற அதிகாரத்தை தற்போதைய நடை முறைச் சட்டத்தில் இருந்து நீக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். ஒரு உரிமையியல் வழக்கில் முதல் மேல் முறையீடு, இரண்டாம் மேல் முறையீடு, உச்ச நீதிமன்ற மேல் முறை



யீடு அதற்கு மேல் ''ரெவ்யூ'' என்ற வகையில் ஒரு வழக்கு இறுதி முடிவடைவதற்கு பல ஆண்டுகள் பிடிக்கின்றன. அப் படிப்பட்ட நிலைமை இருந்து வருகிறது. இந்த நிலைமை அகற்றப்பட்டு ஓராண்டுக்குள்ளாக ஒரு வழக்கு இறுதி முடிவு அடைகிற வகையில் நிலைமைகளை உருவாக்க வேண்டு மென்று மிகவும் அன்போடு நான் கேட்டுக்கொள்கிறேன். அதேபோல் இன்றைக்கு சட்டக் கல்லூரிகளில் மாணவர்களைச் சேர்ப்பதில் பெண்களுக்கு 30 சதவீத ஒதுக்கீடு இருக்கும் என்று நம்புகிறேன். அதேபோல் நீதிபதிகள், மாஜிஸ்ட் ரேட்டுகள் நியமிக்கப்படுவதிலும் குறைந்தது பெண்கள் 30 சத வீதம் நியமிக்கப்பட வேண்டும் என்றில்லாமல் எப்படி 5-ம் வகுப்பு வரையில் பெண்களையே ஆசிரியர்களாக நியமிக் கிறோமோ அதுபோல் பெண்களையே அதிக அளவில் நீதிபதி களாக கோர்ட்டுகளில் நியமித்தால் இப்போதுள்ள தவறுகள் குறைவதற்கான வாய்ப்புகள் ஏற்படும். தவறுகள் குறையும். பெண்கள் நீதிபதிகளாக இருந்தால் சொத்துரிமை, விவாக ரத்து போன்ற வழக்குகளில் கூடுதலாக மனிதாபிமானத்தோடு சட்டப் பிரச்சினைகளை அவர்கள் அணுகுவார்கள். ஆகவே அதிகமாகப் பெண்களை நீதிபதிகளாக நியமிக்க வேண்டு மென்று அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல் அரசு வழக்கறிஞர்கள் நியமிக்கப்படும்போதும் அது அரசியல் ரீதியாக இருந்தாலும் கூட மாவட்ட காவல் துறையினர் யார், யாருக்கு சிபாரிசு செய்கிறார்களோ, அதா வது அவர்களுக்காக ஒரு பேனல் போட்டு 3 பேர்கள் என்று அனுப்பி வைப்பார்கள். அதிலே யாராவது ஒருவரை நீங்கள் நியமிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அந்த மாவட்ட நீதிபதிகள் காவல் துறையினருடைய சிபாரிசை மீறிச் செய்தால் அது சரியாக இருக்காது என்பதையும் இந்த நேரத்தில் சொல்லிக்கொள்கிறேன்.

அடுத்து குடியாத்தத்தில் மாவட்ட முன்சீப் கோர்ட்களில் வழக்கறிஞர்கள் (மணியடிக்கப்பெற்றது) ஒன்றரை மாத கால மாக வேலை நிறுத்தம் செய்துகொண்டிருக்கிறார்கள். இதை அரசு அவசியம் கவனிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள் கிறேன்.

இறுதியாக 1964-ல் சட்ட ஆட்சி மொழி ஆணையம் ஒன்று ஏற்படுத்தப்பட்டது. சென்ற திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியிலே அது மாற்றியமைக்கப்பட்டு இன்றைக்கு ஒருவர் தலைமையில் இயங்கிக் கொண்டிருக்கிறது. அதன் உறுப்பினர் திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந் தவர் 3 ஆண்டுகள் ஆகியும் அந்த ஆணையம் இன்னும் ஒரு சட்டத்தைக் கூட மொழிபெயர்க்கவில்லை. ஆகவே அது அரசியல் நியமனம் என்பதால் அதை இந்த அரசு மாற்றி

யமைக்க வேண்டும் என்று அன்போடு கேட்டுக் கொண்டு
எனக்கு இந்த வாய்ப்பினை கொடுத்த தலைவர் அவர்களுக்கு
நன்றியைத் தெரிவித்து விடைபெறுகிறேன். நன்றி வணக்கம்.

பிற்பகல் 5.50 மணி

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு க. அர்ச்சுனன்) :
திரு. செ. ரகுபதி.

திரு. செ. ரகுபதி : மாண்புமிகு பேரவை மாற்றுத் தலைவர்
அவர்களே, சட்டமன்றம், நீதி மன்றம் இவை தண்டவாளத்
தினுடைய இரண்டு பக்கங்கள். ஆட்சி என்கிற ரெயில் சிறப்
பாகச் செல்வதற்கு இந்தத் தண்டவாளம் இன்றியமையாத
ஒன்றாகும். சட்டமன்றமும், நீதிமன்றமும் ஒன்றையொன்று
சார்ந்தவை. ஆனால் அதே நேரத்திலே அவை ஒன்றோ
டொன்று ஒட்டிக்கொள்ளாதவை. இணையாத இருகோடுகள்
ஆகும். சட்டமன்றம் இயற்றித் தருகின்ற சட்டங்களை
நிலைநிறுத்தக் கூடிய தலையாய பொறுப்பு நீதிமன்றத்திற்கு
உண்டு. அத்தகைய சிறப்புடைய நீதி நிர்வாகம் மற்றும்
சிறைச்சாலை பற்றிய மானியக் கோரிக்கையிலே பங்கேற்க
வாய்ப்பளித்தமைக்கு முதலிலே என்னுடைய நன்றியைத்
தெரிவித்துக் கொள்கிறேன்.

சட்டம், காவிரியிலே புதுப்புனலாய் தீர்ப்பின் மூலமாக
205 டி.எம்.சி. தண்ணீரை தர ஆணையிட்டும் கர்நாடகம்
அணைகளைக் கட்டித் தண்ணிரைத் தேக்கி சிறை வைத்த
போதிலும் இயற்கையின் ஒத்துழைப்பால், புதுப்புனலின்
வருகையை, பொங்கி வரும் காவிரியை இன்றைக்கு இயற்கை
யின் ஒத்துழைப்பால் நம்முடைய காவிரி தந்த கலைச் செல்வி
யினுடைய ஆட்சியிலே நாம் பெற்றுக் கொண்டு இருக்கிறோம்.
எனவே சட்டமும் இயற்கையும் இன்றைக்கு ஒத்துழைக்கக்
கூடிய ஆட்சி, இந்த உத்தமத் தலைவி, புரட்சித் தலைவி
யினுடைய ஆட்சியிலே நிச்சயமாக நீதி நிர்வாகம் சிறப்
புடனும் செம்மையுடனும் செயல்படும் என்பதிலே அத்தனை
பேருக்கும் எந்தவிதமான சந்தேகமும் கிடையாது.

சட்டம் ஒரு இருட்டறை, அதிலே வழக்கறிஞரின் வாதம்
ஒரு வெளிச்சம். அந்த வெளிச்சம் ஏழைகளுக்குக் கிடைக்
காது என்றார் பேரறிஞர் பெருந்தகை அண்ணா அவர்கள்.
இதய தெய்வம் எம்.ஜி.ஆர். அவர்கள், 'நாணலைப்போல
வளைவதுதான் சட்டமாகுமா, அதை வளைப்பதற்கு வழக்
கறிஞர் பட்டம் வேண்டுமா' ஏன்று சொன்னார்கள். ஏழை
களுக்கு அந்த வெளிச்சம் கிடைத்தாக வேண்டும். வழக்கறி
ஞர்களுடைய உதவி அந்த ஏழைகள் பெற்றாகவேண்டும்
என்ற அந்த நல்ல எண்ணத்தோடு, இலவச சட்ட உதவி
ஆலோசனைக் குழுக்கள் அமைக்கப்பட்டு 'லீகல் எய்ட்ஸ் டு
பூர்' என்று இன்றைக்கு தமிழகத்திலே ஒவ்வொரு



மாவட்டத்திலும் இலவச சட்ட உதவி ஆலோசனைக்
குழுக்கள் அமைக்கப்பட்டிருக்கின்றன. அதற்காக இந்த
மானியக் கோரிக்கையிலே 70 லட்சம் ரூபாய் ஒதுக்கியிருப்
பதை வரவேற்கிறோம். அதே நேரத்திலே நாம்
ஒதுக்கியிருக்கிற 70 லட்சம் ரூபாய் ஏழைகளுக்கு
சட்ட உதவி பெறுவதற்கு, பயன் தருகிற வகையிலே அது
பயன் தரவேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்ளக்
கடமைப்பட்டிருக்கிறேன். அதே நேரத்திலே இலவச சட்ட
உதவி ஆலோசனைக் குழுக்களாக இருக்கின்ற வழக்கறிஞர்
களை ஏ.பி, என்று நாம் பிரித்திருக்கிறோம். அவர்களுக்கு
அங்கே ஊதியம் மிகக் குறைவாகக் கொடுக்கப்படுகிறது.
இலவசச் சட்ட உதவி தான் என்றாலும் அதையே சார்ந்து
இலவசச் சட்ட உதவி தான் என்றாலும் அதையே சார்ந்து
இன்றைக்கு பல வழக்கறிஞர்கள் இருக்கின்றார்கள். அவர்
களிலே 100-க்கு 40 பேர்கள் தான் நல்ல வருமானம்
பெறுகிறார்கள். பாக்கியுள்ள 60 பேர்களுடைய நிலைமையை
கருத்திலே நாம் கொள்ள வேண்டும். 1973-லே 'லீகல் பிராக்
டீசனர்ஸ் ரூல்ஸ்' என்று கொண்டுவரப்பட்டிருக்கிறது. இன்
றைக்கு அதிலே இருக்கிற ஊதிய உயர்வை, சட்டபூர்வ
மாக வழக்கறிஞர்களுக்கு கூடுதல் சம்பளம், வழக்கறிஞர்கள்
பீஸ் வாங்குவதற்கு தகுந்தபடி அதை மாற்றியமைத்துத்
தரவேண்டும் என்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்ளக்
கடமைப்பட்டிருக்கிறேன்.

அதைப்போல, மோட்டார் வாகன விபத்துக்கள் இன்
றைக்கு நீதிமன்றங்களிலே பல்லாயிரக்கணக்கான அளவிலே
தேங்கிக் கிடக்கிற வழக்குகளிலே ஒன்றாகும்.
விரைந்து முடிக்கப்பட வேண்டிய வழக்கு மோட்டார் வாகன
விபத்து வழக்காகும். ஏனென்றால் அவை நிலுவையிலே
இருப்பதாலே அந்த விபத்திலே இறந்தவர்களுடைய,
அடிபட்டவர்களுடைய குடும்பங்கள் மிகவும் கஷ்டப்பட்டுக
கொண்டு இருக்கின்றன. எனவே மோட்டார் வாகன
விபத்திலே ஒருவர் இறந்தால் அந்த சூழ்நிலை எப்படி
யிருந்தாலும் இறந்தவர்களுடைய குடும்பங்களுக்கு உடனடியாக
நிவாரணமாக 50 ஆயிரம் ரூபாய், காயம் பெற்றவர்களுக்கு
அந்தக் காயத்தினுடைய தன்மைக்கு ஏற்ப சதவிகிதத்திற்கு
ஏற்ப அவர்களுக்கு நஷ்ட ஈடும், அவர்களுக்கு காப்பீட்டுக்
கழகத்திலே இருந்து அதன் நீதி மன்றத்திலே தொடுத்து
இருக்கின்ற விபத்து நஷ்டஈடு வழக்குக்கு விரோதம் இன்றி
உடனடியாகக் கிடைப்பதற்கு வழிவகை செய்ய வேண்டும்
என்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்ள கடமைப்பட்டிருக்
கிறேன். 'லீகல் எய்ட்ஸ் டு பூர்' என்று அறிமுகப்படுத்தி
யிருக்கிறோம். அதே நேரத்திலே வசதி படைத்தவர்கள்
நீதிமன்றத்திற்கு வருகிறார்கள். அவர்களிடத்திலே இருந்து
நாம் நீதிமன்றத்திற்கு கட்டணமாக அதிகத் தொகையாக
வாங்கலாம். ஏனென்றால் தமிழ்நாடு கோர்ட் பீஸ் ஆக்ட்
1957லே கொண்டுவரப்பட்டது. அன்றைக்கு 23 ரூபாய்,

30 ரூபாய் என்று நாம் டைட்டில் சூட் -களுக்கு, உரிமை வழங்கல் பற்றிய வழக்குகளுக்கு நீதிமன்றக் கட்டணத்தை நிர்ணயித்து இருந்தோம். ஆனால் இன்றைய சூழ்நிலையிலே, அந்த வழக்குகள் 2 ஆண்டுக் காலத்திற்கு மேலாக ஒவ்வொரு நீதி மன்றத்திலும் தேங்கி இருந்து வருகிற சூழ்நிலையை கருத்திலே கொண்டு, நிச்சயமாக 1957-லே இருந்த விலைவாசிகளை கருத்திலே கொண்டு அன்றைக்கு 23, ரூபாய் 30 ரூபாய் என்று வைத்திருந்ததை இன்றைக்கு நிச்சயமாக நாம் உயர்த்தினால்தான் அதன் மூலம் பல கோடி ரூபாய் அரசுக்கு வருமானம் வரும் என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக் கிறேன்

பிற்பகல் 5-55 மணி

அதைப்போல 1957-ஆம் ஆண்டிலே கொண்டுவரப்பட்ட தமிழ்நாடு கோர்ட் பீஸ் ஆக்ட்டிலே அன்றைக்கு குறைந்த பட்சமாக மனுவுக்குக் கட்டணம் 75 பைசா என்று இருந்தது. அன்றைக்கு முக்கால் ரூபாய் என்பது மிகப் பெரும் தொகை யாக இருந்தது. ஆனால் இன்றைக்கு அது மிகச் சாதாரண மான தொகை. எனவே, அதையும் அதிக அளவு உயர்த்து வதன்மூலம் நிச்சயமாக அரசாங்கத்திற்கு அதிக வருமானம் கிடைக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதைப்போல இன்றைக்கு நீதிமன்றத்திற்கு நாம் முத்திரை தாள்களை வாங்குகிறோம். கிட்டத்தட்ட 40 இலட்சம் ரூபாய், 30 இலட்சம் ரூபாய்க்கான வழக்குகளை தாக்கல் செய்கிற போது 2 இலட்சம் ரூபாய், 3 இலட்சம் ரூபாய்க்கு முத்திரைத் தாள்கள் வாங்கவேண்டும். அதனால் அரசுக்கு பெரிய செலவு ஏற்படுகிறது. அதைத் தடுப்பதற்கு அவர்கள் நம்முடைய அரசாங்கத்தில் 'செலான்' ஆகச் செலுத்தி, அதன் மூலமாகப் பணத்தைக் கட்டச் செய்தால் நிச்சயமாக அரசுக்கு மிச்சம் ஏற்படும். அதே நேரத்தில் பெரிய புத்தகங்களாக முத்திரைத் தாள்களை நாங்கள் 'பைல்' செய்து கொடுக்கக் கூடிய சூழ்நிலையும் தவிர்க்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

நீதிமன்றங்கள் எல்லாம் ஒரே இடத்தில் இருக்க வேண்டு மென்ற விவாதம் வரவேற்கத்தக்க ஒன்றாகும். வழக்கறிஞர் களுக்கும் கட்சிக்காரர்களுக்கும் அது மிகவும் உதவியாக இருக்கும். இந்த நேரத்திலே நான் ஒரு கருத்தைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். தமிழ் நாட்டிலே இருந்த ஒரே ஒரு சமஸ்தானம் புதுக்கோட்டை சமஸ்தானம். அன்றைக்கு சென்னையிலே 'சீஃப் கோர்ட்' இருந்ததைப் போல புதுக்கோட்டை மாவட்டத்திலேயும் சீஃப் கோர்ட் இருந்தது. அதற்காக இன்றைக்கு நான் புதுக்கோட்டை



மாவட்டத்திற்கு சீஃப் கோர்ட் தாருங்கள் என்று கேட்க வில்லை. ஆனால் அந்த சீஃப் கோர்ட் என்று இருந்தது 'தர்பார் ஹால்' என்று சொல்கிறார்கள். இன்றைக்கு அந்த இடம் வருவாய்த் துறையின் பொருப்பிலே இருக்கிறது. அதிலே மாவட்ட நீதிமன்றம் செயல்பட வேண்டுமென்பது புதுக் கோட்டை மாவட்ட மக்களுடைய நீண்ட கால விருப்பமாகும். எனவே, அந்த வருவாய்த் துறையினுடைய பொறுப்பிலே இருக்கிற அந்த நீதிமன்ற வளாகத்திற்குள் இருக்கும் அந்த தர்பார் ஹாலை பெற்று புதுக்கோட்டை மாவடடத்தினுடைய நீதிமன்றங்களின் நீதிபதி அவர்கள் அங்கே பணியாற்று வதற்கு ஆவன செய்ய வேண்டுமென்று புதுக்கோட்டை மாவட்ட மக்கள் சார்பிலே தெரிவித்துக்கொள்ள நான் கடமைப்பட்டிருக்கிறேன்.

காவல் துறையினர் பல்வேறு பொய் வழக்குகளை அரசியல் காழ்ப்புணர்ச்சிகள் காரணமாக கடந்த ஆட்சியிலே போட்டிருக்கிறார்கள் என்பதை அத்தனைபேரும் அறிவீர்கள். அந்த வழக்குகளை வாபஸ் பெற்றுத்தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இன்றைக்கு நீதிமன்றத்திலே பல வழக்குகள் பல ஆண்டு காலமாக தேங்கிக் கிடக்கின்றன. அவற்றை எல்லாம் தீர்ப் பதற்கு துரித நடவடிக்கைகளை அரசு மேற்கொள்ள வேண்டு மென்று கேட்டுக்கொள்கிறேன்.

தொழிலாளர் நல நீதிமன்றங்களை வேலூர் சேலம், திருச்சி ஆகிய இடங்களிலே அமைக்க 23—2—1990-ஆம் ஆண்டிலே ஆணையிட்டு, அறிக்கையிலே தெரிவித்துள்ளீர்கள். ஆனால் 1½ ஆண்டு காலமாகியும் அந்த நீதிமன்றங்கள் இன்னும் அமைக்கப்படவில்லை. மாண்புமிகு புரட்சித் தலைவி ஆட்சியிலே அவற்றை விரைந்து அமைத்திட வேண்டு மென்று கேட்டுக்கொள்ளகடமைப்பட்டிருக்கிறேன்.

சிவில் உரிமைகள் பாதுகாப்புச் சட்டத்திற்கு ஒரு தனி நீதிமன்றமும் பொருளாதார குற்றங்களை விசாரிக்க ஒரு தனி நீதிமன்றமும்—இப்படி தனித்தனியாக நீதிமன்றங்கள் அமைக்கப் படுவது நிதிநிலையைக் கருத்தில்கொண்டு அந்தந்த மாவட்டத் திலே உள்ள உரிய நீதிமன்றங்களிடம் அதிகாரத்தை ஒப்படைக் கலாம் என்பதை என்னுடைய ஆலோசனையாகக்கூற கடமைப்பட்டிருக்கிறேன்.

சிறைச்சாலைகளைப் பற்றிச் சொல்லும்போது,
'சிறைகாக்கும் காப்பு என்செய்யும் மகளிர்
நிறைகாக்கும் காப்பே தலை'
என்றார் வள்ளுவர். ஒரு பெண்ணை நாம் சிறையிலே வைத்து காத்தாலும் அந்தப் பெண்ணே கற்புள்ளவளாகத் தன்னை

தானே காத்துக்கொள்ள வேண்டுமென்று சொன்னார். அதைப் போல இன்றைக்கும் நாம் நீதிமன்றங்கள் வைத்து, சிறைச் சாலைகள் அமைத்து, சிறையிலே, குற்றவாளிகளுக்குத் தண்டனை பெற்றுக் கொடுத்தாலும் அவர்கள் திருந்துவதற்கு உரிய சூழ்நிலைகளை உருவாக்கித்தர வேண்டியது அவசியமாகும். திருடனாய்ப் பார்த்துத் திருந்தாவிட்டால் திருட்டை ஒழிக்க முடியாது என்றார் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள். எனவே திருடர்கள் சிறையிலே திருந்துவதற்குரிய வழிவகைகளை உருவாக்க வேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக்கொண்டு, எனக்கு பேச அளித்த வாய்ப்புக்கு நன்றி கூறி முடிக்கிறேன்.

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் :** (திரு. க. அர்ச்சுனன்): திரு. எஸ். ஆண்டித்தேவர் அவர்கள்.

பிற்பகல் 6.00 மணி.

**திரு. எஸ். ஆண்டித்தேவர் :** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, நீதி நிர்வாகம்பற்றிய 13 ஆம் எண் மானியக் கோரிக்கையின் மீதும் சிறைச்சாலை மானியக் கோரிக்கையின் மீதும் அகில இந்திய பார்வர்ட் பிளாக் கட்சியின் சார்பிலே என் கருத்துக்களைச் சொல்லலாம் என்று கருதுகிறேன். ஒதுக்கப்பட்ட நேரமோ 7 நிமிடம் என்று சொல்கிறார்கள். 7 நிமிடத்திலே 7 பொருள் பற்றிய 7 வரிகளைக் கூட சொல்ல முடியாது. இருப்பினும் அந்த 7 நிமிடத்திற்குள்ளே என்னுடைய கருத்துக்களைச் சொல்லலாம் என்று நான் கருதுகிறேன்.

நீதி நிர்வாகம் என்பது நீதித் துறையிலே சட்டத் துறையும் சம்பந்தப்பட்டது. அதே போன்று கிரிமினல் வழக்கிலே போலீஸ் துறையும் சம்பந்தப்பட வேண்டும். அவர்களுக்கும் அதிலே பங்கு உண்டு. இன்றைக்கு உச்ச நீதிமன்றத்தை எடுத்துக்கொண்டால் பல லட்சம் வழக்குகள் தேங்கியிருப்பதாக சொல்கிறார்கள். உச்ச நீதிமன்றத்தில் இருக்கிற நீதிபதிகளுடைய அளவை அதிகப்படுத்தியும், நீதிபதிகளை இன்னும் நியமிக்காமல் இருக்கிறார்கள். வழக்குகள் இன்றைக்கு எந்த அளவுக்கு தேங்கியிருக்கின்றன என்று சொன்னால், நான் வழக்கறிஞராக இருந்து, 1985 ஆம் ஆண்டு நடத்திய ஒரு வழக்கு நம்முடைய உயர் நீதிமன்றத்தில் எந்த நிலையில் இருக்கிறது என்று நான் நேற்றைக்கு விசாரித்த போது, 1965 ஆம் ஆண்டு வழக்கே இன்னும் வரவில்லை. இதற்கு இன்னும் ஓராண்டுக் காலம் ஆகும் என்றார்கள். 6 ஆண்டுக் காலம் ஆகியும் ஒரு கிரிமினல் வழக்கு முடிவுறவில்லையென்று சொன்னால், சிவில் வழக்கு என்றால் இதைவிட சிரமமான விஷயம் தான்.



எனது தாத்தா ஒருவர் ஒரே வழக்கை 29 ஆண்டுக் காலம் நடத்தியிருக்கிறார்கள். கீழ்க் கோர்ட்டிலே இருந்து உயர் நீதிமன்றத்திற்கு வந்து மறுபடியும், ரிமான்ட் செய்தார்கள் ஒரு குறிப்பிட்ட கருத்துக்கு. இவர்களே அந்தக் கருத்துக்கு அவர்கள் வழக்கறிஞர் மூலம் கருத்தைக் கேட்டிருந்தால் 10 ஆண்டுக் காலத்திற்குள் அந்த வழக்கு முடிந்திருக்கும். ஆனால் 29 ஆண்டுக் காலமாக அது உயர் நீதிமன்றத்தில் இருக்கிறது.

அது போல நீதிபதிகள் நியமனத்தில் ஒரு இட ஒதுக்கீட்டு முறை இல்லை. இருந்தாலும் கன்வென்சன் என்ற முறையைக் கையாண்டு சிறுபான்மை சமுதாயத்திற்கு ஒரு இடம் இருந்து, அவர் ஓய்வு பெறுகிறார் என்றால் அந்த இடத்திலே அதே சமுதாயத்தைச் சார்ந்த வேறு ஒருவரை போடுகிறார்கள். பெரும்பான்மை சமுதாயத்தைச் சார்ந்தவர்களுக்கு பிரதிநிதித்துவம் இல்லையென்று சொன்னால் எப்படி? உயர் நீதிமன்றத்தில் அரசாங்கத்தின் ஆலோசனையின் பேரில் ஒருவரை நியமிக்கலாம். உயர்நீதிமன்றத்தில் தமிழகத்தில் 3-ல் ஒரு பங்கு இருக்கிற ஒரு ஜாதிக்கு, ஒரு இனத்துக்கு பிரதிநிதித்துவம் இல்லையென்று பல்வேறு சந்தர்ப்பங்களில், பல்வேறு மட்டங்களில் எடுத்துக்கூறியும் அந்தப் பெரிய சமுதாயத்தினுடைய பிரதிநிதித்துவம் உச்ச நிதிமன்றத்தில் இல்லை என்ற குறைபாட்டை நான் இந்த நல்ல நேரத்தில் சொல்லாமல் இருக்க முடியாது. இருக்கிற காலியிடத்தில் அதை நிரப்புவார்கள் என்று நான் கருதுகிறேன்.

அடுத்து உயர் நீதிமன்றம் சென்னையில் இருக்கிறது. கன்னியாகுமரியில் இருந்து ஒரு வழக்குக்கு சென்னைக்கு வருவது என்று சொன்னால் மிகக் கடுமையான பொருளாதார செலவோடு. தங்கள் வழக்கறிஞர்களும், சம்பந்தப்பட்டவர்களும் இங்கே வர வேண்டியிருக்கிறது. அதை மனதில் கொண்டுதான் பல்வேறு சந்தர்ப்பங்களில் உயர்நீதிமன்றத்தினுடைய பிரிவு ஒன்றை மதுரைக்குக் கொண்டுவரவேண்டுமென்று வலியுறுத்திப் பேசி, இப்பொழுது அரசு கொள்கை ரீதியாக ஏற்றுக்கொண்டு மதுரையிலே உயர்நீதிமன்றத்தினுடைய பிரிவு ஒன்றை ஏற்படுத்துவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஒப்புக்கொண்டிருக்கிறார்கள். அதே நேரத்தில் சென்ற 15ஆம் தேதி மாண்புமிகு சட்ட அமைச்சர் அவர்களும். உயர்நீதி மன்றத்தின் தலைமை நீதிபதி அவர்களும் மதுரை சென்று கோர்ட் வளாகத்தைப் பார்த்தபோது அங்கே நம்முடைய தலைமை நீதிபதி அவர்கள் இப்போது இருக்கின்ற இடத்திலே நீதிமன்றத்தை கொண்டு வர முடியாது. புதிய கட்டிடம் கட்டினால்தான் அது முடியும் என்கிற அளவுக்குச் சொன்னார்களாம். அங்கே இருக்கின்ற மூன்று மாடிக் கட்டிடங்கள் முன்பு இரண்டு

மாவட்டங்களுக்குச் சேர்த்து கட்டப்பட்டது. இப்போது இராமநாதபுரம் மாவட்டத்தைப் பொறுத்தவரையில் மதுரையிலுள்ள மாவட்ட நீதிமன்றத்தில் தான் வழக்குகள் நடந்துகொண்டிருக்கின்றன. ஆகவே, இராமநாதபுரம் மாவட்டத்திற்கு அதை மாற்றினால் மிகச் சிறந்ததாக இருக்கும். அதேபோன்று காமராஜர் மாவட்டத்தினுடைய செஷன்ஸ் நீதிபதி அலுவலகம் கூட மதுரையிலேதான் இருந்து கொண்டிருக்கிறது. அதை மாற்ற வேண்டுமென்று ஸ்ரீவில்லி புத்தூர் வழக்கறிஞர்கள் பல்வேறு கோரிக்கைகளை கொடுத்திருக்கிறார்கள். காமராஜர் மாவட்டம் என்ற பெயர் வைத்து விருதுநகரில் மாவட்ட தலைநகரம் அமைக்கப்பட்டுள்ளது. அதன் காரணமாக மாவட்ட ஆட்சித் தலைவருடைய அலுவலகமும் அங்கே தான் இருக்கிறது. மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகம் அங்கே இருப்பதால் —மாவட்ட நீதிபதி அலுவலகத்தையும் அங்கே கொண்டு போய் சேர்த்தால்—ஸ்ரீவில்லிப்புத்தூரில் தான் இப்போதே துணை நீதிமன்றம், சப்-கோர்ட் இருக்கிறது. முனிசிபல் கோர்ட்டும் அங்கே இருக்கிறது. கிரிமினல் கோர்ட்டும் அங்கே தான் இருக்கிறது. விருதுநகரைப் பொறுத்தவரையில் ஒரே ஒரு சப்-மேஜிஸ்டிரேட் கோர்ட் இருக்கிறது. அதுமட்டுமல்லாமல் ஜியாகிராபிகல் ரீதியாக எடுத்துப் பார்த்தாலும் ஸ்ரீவில்லிபுத்தூர் ராஜபாளையத்திலிருந்து வருகிறவர்களுக்கு, வத்திராயிருப்பிலிருந்து வருகிறவர்களுக்கு மத்திமமான இடம். இது ஏற்றுக்கொள்ளப்பட்டு, சென்ற ஆட்சிக் காலத்திலேயே ஸ்ரீவில்லிபுத்தூரில்தான் செஷன்ஸ் நீதிமன்றம் அமைக்கப்படுமென்று சொல்லப்பட்டது. (மணி அடிக்கப்பெற்றது).

பிற்பகல் 6.05 மணி.

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. க. அர்ச்சுனன்) :** திரு. சஞ்சய் ராமசாமி.

**திரு. சஞ்சய் ராமசாமி :** மாண்புமிகு தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் காமராஜர் மாவட்ட நீதிமன்றத்தை ஸ்ரீவில்லிபுத் தூரில்தான் வைக்க வேண்டுமென்று கூறினார்கள். அது ராஜபாளையத்தில் இருக்கிறவர்களுக்கு, வத்திராயிருப்பில் இருக்கிறவர்களுக்குப் பக்கத்தில்தான் என்று கூறினார்கள். ஆனால் சாத்தூர், சிவகாசி, விருதுநகர், அருப்புக்கோட்டை தொகுதியில் உள்ள மக்கள் எவ்வளவு தூரம் வரவேண்டுமென்பதை அவர் எடுத்துச் சொல்ல வேண்டுமென்று விரும்புகிறேன். அது தான் மிகப் பெரிய பிரச்சினை. அதைத் தயவு செய்து குறிப்பாக எடுத்துச் சொல்லுங்கள்.



**திரு. எஸ். ஆண்டித்தேவர் :** காமராஜர் மாவட்ட நீதிமன்றத்தை ஸ்ரீவில்லிபுத் தூரில் அமைக்க வேண்டுமென்ற கோரிக்கையை அரசு கொள்கை அளவில் ஏற்றுக்கொண்டிருக்கிறது. அதை முந்தைய அரசு இந்த மாமன்றத்தில் அறிவித்திருக்கிறது. அதற்கு முன்னால் புரட்சித் தலைவர் அவர்கள் ஆட்சிக் காலத்திலே ஒரு தனி நீதிபதியை அனுப்பி.....

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. க. அர்ச்சுனன்) :** திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன்.

**திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன் :** மாண்புமிகு மாற்றுத்தலைவர் அவர்களே, விருதுநகரில் அமைப்பதா ஸ்ரீவில்லிபுத்தூரில் அமைப்பதா என்ற தகராறு இருந்த நேரத்தில் இரண்டுக்கும் பொதுவாக இருக்கட்டும் என்று மாண்புமிகு புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் அதை நிறுத்தி வைத்திருக்கிறார்கள். விருதுநகர்தான் அதற்கு சரியான இடம். காரணம், நரிக்குடியில் இருந்து வருவதற்கும் சாத்தூர், சிவகாசியிலிருந்து வருவதற்கும் விருதுநகர்தான் சரியான இடம். ஆனால் ஸ்ரீவில்லிபுத்தூர் என்று சொன்னால் ராஜபாளையத்திலிருந்து 8 10 கிலோ மீட்டரோடு முடிந்து போகும். வத்திராயிருப்பு ஒன்றுதான் பக்கத்தில் இருக்கிறது. பசும்பொன் தேவர் மாவட்டத்திலிருந்து நம்முடைய ஸ்ரீவில்லிபுத்தூருக்கு வர வேண்டுமென்றால் 60 கிலோமீட்டர் தூரம் வரவேண்டும். எனவே விருதுநகர் தான் சரியான இடம் என்பதை மரியாதைக்குரிய நம் முடைய முதலமைச்சர் மாண்புமிகு இதயத் தெய்வம் புரட்சித் தலைவி அவர்களுடைய கவனத்திற்கு எடுத்துச் சென்றிருக்கிறோம். ஆகவே அரசாங்கம் அதற்கு வேண்டிய சரியான நடவடிக்கைகளை எடுக்க வேண்டுமென்று பணிவோடு வேண்டிக்கொள்கிறேன்.

**மாற்றுத் தலைவர் (திரு. க. அர்ச்சுனன்) :** திரு. ஜெ. பாலகங்காதரன்.

**திரு. ஜெ. பாலகங்காதரன் :** பேரவை மாற்றுத் தலைவர் அவர்களே, நான் சிவகாசியில் வழக்கறிஞராகப் பணியாற்றியதால் நானும் இதிலே ஒரு சில கருத்துக்களை கூறலாமென்று நினைக்கிறேன். மாவட்டக் கோர்ட்டானது ஸ்ரீவில்லிபுத்தூருக்குக் கொண்டு சென்றால், அங்கே வழக்கறிஞர்கள் 70 பேர் இருக்கிறார்கள். அங்கே சப்-கோர்ட் உள்ளது. விருதுநகர் மாவட்டத் தலைநகராக இருப்பதால் அங்கே எஸ்.பி. ஆபீஸ் மற்றும்கலெக்டர் ஆபீஸ் எல்லாம் அங்கே இருக்கின்றன. எனவே மாவட்டத் தலை

தலைநகருக்கு செஷன்ஸ் கோர்ட்டைக் கொண்டு சென்றால் நன்றாக இருக்கும். மேலும் சாத்தூரிலிருந்து வரும் வழக்கறிஞர்களுக்கும், அருப்புக்கோட்டையிலிருந்து வரும் வழக்கறிஞர்களுக்கும் அது ஒரு சென்டர் ப்ளேஸ்-ஆக இருக்கும். ஸ்ரீவில்லிபுத்தூர் என்பது ஒரு எக்ஸ்டிரீம் என்ட். அதனால் விருதுநகரில் மாவட்ட கோர்ட்டை அமைக்கும்படி பரிந்துரை செய்யும்படி கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு மாற்றுத் தலைவர் : (திரு. க. அர்ச்சுனன்) : மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆண்டித் தேவர் அவர்கள். உங்களுடைய டைம் ஏறக்குறைய முடிந்துவிட்டது.

திரு. சி. ஆண்டித்தேவர்: ஸ்ரீவில்லிப்புத்தூரில் அந்தக் கோர்ட் அமைய வேண்டுமென்ற நியாயத்தை நான் சொல்லுவதற்குக் காரணம் என்னவென்று சொன்னால், வழக்கறிஞர் என்ற முறையிலே கீழ் கோர்ட்டிலே ஒரு தண்டனை விதிக்கப்பட்டால் அதற்கு ஜாமீனில் கொடுக்கப் படவேண்டிய வழக்காக இருந்தால், காலையில் தண்டித்தால், மதியம், செஷன்ஸ் கோர்ட்டில ஜாமீனில் எடுக்க முடியும். இப்போது விருதுநகரில் மாவட்ட நீதிமன்றத்தை வைத்துக் கொண்டு, அனைத்து நீதிமன்றங்களும் ஸ்ரீவில்லிப்புத்தூரில் இருக்கும்போது, அவர்களுக்கு என்ன சட்டச் சிக்கல் இருக்கிறதென்பதை உணர வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன். அப்படியென்று சொன்னால் அத்தனை கோர்ட்டுகளையும் மாவட்டத் தலைநகருக்குக் கொண்டு செல்லுங்கள், இங்கே ஒரு முனுசீப் கோர்ட்டை மட்டும் வைத்துக்கொண்டு. நீண்டகாலமாக அங்கே சப்-கோர்ட் இருக்கிறது, முனிசிப் கோர்ட் இருக்கிறது, மாஜிஸ்டிரேட் கோர்ட் இருக்கிறது. இத்தனைக்கும் மேலாக மாவட்ட நீதிமன்றமும் அங்கே இருந்தால் நல்லது. இங்கே படம் இருக்கிறது. தூரம் எது? எது மத்தியில் இருக்கிறதென்று சொன்னால், இந்தப் படத்தைப் பார்த்தால் தெரியும். ஸ்ரீவில்லிபுத்தூர்தான் மத்தியமான இடம் என்று நான் சொல்லிக்கொள்கிறேன்.

திரு. சஞ்சய் ராமசாமி : மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே,............

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. க. அர்ச்சுனன்) : நீங்கள் அடுத்துப் பேச இருக்கிறீர்கள். நீங்கள் பேசும்போது உங்களுடைய கருத்தைச் சொல்லுங்கள். உட்காருங்கள்.

திரு. எஸ். ஆண்டித்தேவர் : இந்த அரசு என்னுடைய கருத்தைக் கேட்டு முடிவெடுக்க வேண்டும். மாண்புமிகு



அமைச்சரவர்கள் பதிலிலே திட்டவட்டமாகச் சொல்ல வேண்டும். இது நீண்டகாலமாக ஒரு பிரச்சினையாக இருந்து கொண்டிருக்கிறது அந்த மாவட்டத்திலே.

பிற்பகல் 6.10

அதுமாதிரி குற்றவியல் நீதிமன்றங்களில் பல பதவிகள் இன்னும் நிரப்பப்படாமல் இருக்கின்றன. சர்வீஸ் கமிஷனுக்குப் போனால் ஒரு ஆண்டு இரண்டு ஆண்டு என்று எடுத்துக்கொள்கிற நிலைமை இருக்கிறது.

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை.)

உயர்நீதிமன்றத்தின் நீதிபதிகளை அரசும் உச்சநீதிமன்றமும் தேர்ந்தெடுக்கும்போது, குற்றவியல் நீதிமன்ற முன்சீப்களை ஏன் உயர்நீதிமன்றமும் அரசாங்கமும் சேர்ந்து நியமிக்கக் கூடாது? அந்த இடங்களை நிரப்பாவிட்டால் வழக்குகளுக்குச் செல்பவர்கள் 6 மாதங்களுக்கு மேல் அலைய வேண்டியிருக்கிறது. அப்படி அலையும்போது, குற்றவியல் நீதிமன்றத்தில் மாஜிஸ்டிரேட் இல்லாமல் போனால் சம்மன் வருகிறபோது ஆஜராகத் தேவையில்லை என்று சொல்கிற அளவுக்கு அதற்கு அதிகாரம் இருக்கிறது. அப்படியாவது அந்த மாஜிஸ்டிரேட் இல்லாத கோர்ட்டுகளில், கிரிமினல் கோர்ட்டுகளுக்கு வருகின்றவர்கள், மாஜிஸ்டிரேட் நியமிக்கப் பட்டதற்கு பிறகு வரலாம் என்று விதி இருக்கிறது. அதை யாவது செய்ய வேண்டுமென்று கேட்டு, நான் உரையை நிறைவு செய்கிறேன். வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. சொக்கலிங்கம்.

திரு. பி. சொக்கலிங்கம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது தெய்வத்தாய் அவர்களே, நமது தமிழகத்தில் பணிபுரியும் நீதிபதிகள் பேசும் தெய்வங்களாக நீதி பரிபாலனம் நல்ல முறையில் செய்து வருகிறார்கள். அவர்களுக்கு உரிய வசதிகள் இதற்கு முன்னால் அரசாட்சி செய்த எந்த அரசும் செய்யவில்லை. சாதாரண குமாஸ்தாவாக பணிபுரிகின்ற ஒருவர் குடும்பத்துடன் சினிமா பார்க்கச் சென்றால் கூட கார்களில் செல்லக்கூடிய ஒரு சூழ்நிலை இருக்கிறது. ஆனால் பேசும் தெய்வங்களாகிய நீதிபதிகள் குடும்பத்துடன் வெளியில் செல்ல நேரிட்டால் சைக்கிள் ரிக்ஷாக்களில் தான் செல்ல முடிகிறது. இதற்குக் காரணம் அவர்களுடைய சம்பளம் குறைவாக இருக்கிறது. மேலும் அவர்களுக்கு வாகன வசதிகள் ஏதும் முந்தைய அரசால் செய்து தரப்படவில்லை. நீதிபதிகளுக்கு சம்பள உயர்வும்

வாகன வசதியும் செய்து தரப்பட்டால் மாண்புமிகு தெய்வத்தாய் அவர்களை மனமாரப் பாராட்டுவார்கள். அதற்கு முக்கியக் காரணமும் உளளது. ஏதேனும் ஒரு நபர் சண்டையிட்டோ அல்லது ஒரு பெண் கணவனால் துன்புறுத்தப்பட்டு உடல் அளவில் பாதிக்கப்பட்டாலோ மரணப் படுக்கையில் இருக்கும்போது மரணவாக்கு மூலம் குற்றவியல் நீதிபதிகள் மருத்துவ மனைக்குச் சென்று மரண வாக்குமூலம் பெறவேண்டுமென்று சட்டத்திலே இடம் உள்ளது. மரணத்தோடு போராடிக் கொண்டிருக்கிற அந்த நபரிடம் விரைவில் சென்று மரணவாக்குமூலம் குற்றவியல் நீதிபதி எடுக்கவேண்டுமானால் அதற்கு வாகன வசதி அவசியம் தேவை. அதை முன்னிட்டும், நீதிபதிகள் திருப்திகரமாக வாழ்ந்தால்தான் நல்ல முறையில் நீதி மக்களுக்கு கிடைக்கும் என்ற நிலையிலும், நமது பொற்கால அரசில் அவர்களுக்கு சம்பள உயர்வும், வாகன வசதியும், எரிபொருள் வசதியும் தகுதிக்கேற்ப செய்து தரவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். மேலும் எனது தொகுதியில் மதுராந்தகம் குற்றவியல் நீதிமன்ற நடுவருக்கும் அங்கே பணிபுரிகின்ற வழக்கறிஞர்களுக்கும் மன வேற்றுமை ஏற்பட்டு கடந்த 4 மாதங்களாக வழக்கறிஞர்கள் குற்றவியல் நீதிமன்றத்தை பகிஷ்காரம் செய்து வேலை நிறுத்தம் செய்துகொண்டு வருகிறார்கள். வழக்கறிஞர்கள் அது சம்பந்தமாக உரிய அதிகாரிகளிடம் பல முறை சொல்லியும் இதுவரை குற்றவியல் நீதிபதியை மாற்றம் செய்யவில்லை. உரிய நடவடிக்கை இல்லாததால் வழக்கறிஞர்கள் விரைவில் காலவரையற்ற உண்ணாவிரதம் இருக்கப் போவதாக என்னிடம் சொல்லியுள்ளார்கள். இதைத் தவிர்க்க மேற்படி குற்றவியல் நீதிபதியை மாறுதல் செய்யுமாறும் வேறு நீதிபதியை போடுமாறும் கேட்டுக் கொள்கிறேன். அச்சிறுபாக்கம் தொகுதி மற்றும் மதுராந்தகம் தொகுதிவாழ் மக்கள் மாவட்ட துணைநீதிமன்றம் செல்வதென்றால் சுமார் 60 கிலோ மீட்டர் பேருந்தில் சென்று நீதிமன்றத்தை அடையவேண்டியுள்ளது. அதனால் நீதிமன்றத்திற்கு செல்பவர்களுக்கு பொருள் விரயமும், கால தாமதமும் ஆகிறது. இதைத் தவிர்க்க மதுராந்தகம் நகரில் மாவட்ட துணை நீதிமன்றம் புதிதாகத் துவக்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

பிற்பகல் 6.15

மேலும் மதுராந்தகம் நகரில் குற்றவியல் நீதிமன்றமும் ஒரு மாவட்ட உரிமையியல் நீதிமன்றமும் உள்ளன. குற்றவியல் நீதிமன்றம் கடந்த நூறு ஆண்டுகளுக்கு முன்னால் குதிரை லாயத்தில் திறக்கப்பட்டு, அந்தச் சிறிய இடத்திலே நூறு ஆண்டுகளுக்குப் பிறகும் இயங்கிக் கொண்டிருக்கிறது. மாவட்ட உரிமையியல் நீதி மன்றம் ஜி.எஸ்.டி. ரோடில் வாடகைக்



கட்டிடத்தில் மாடியில் இயங்கி வருகிறது. சாலையில் பேருந்துகள், லாரிகள், கார்கள் செல்லும்போது, ஹார்ன் அடித்தால் வழக்கறிஞர்கள் என்ன சொல்லுகிறார்கள்; உரிமையியல் நீதிபதி என்ன பதில் சொல்லுகிறார் என்பது இருவருக்கும் கேட்பதில்லை. எனவே இதைத் தவிர்க்கும் பொருட்டு இந்த பொற்கால அரசு, அரசு செலவில் கட்டடங்களை விரைவிலே கட்டித்தர வேண்டுகிறேன். மேலும் மாவட்ட உதவி நீதிமன்றத்தை மதுராந்தகத்தில் திறந்து எனது தொகுதிவாழ் மக்களுக்கு நன்மை செய்ய வேண்டுகிறேன். நன்றி.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. தா. செழியன்.

திரு. தா. செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த அவையினுடைய நிகழ்ச்சிகளை பார்வையாளர்கள் மாடத்திலிருந்து நான் பார்த்திருக்கின்றேன். சட்டப் பேரவையில் ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவித்த தீர்மானத்தில் உறுப்பினர்கள் பேசினார்கள். அதே போன்று வரவு-செலவுத் திட்டத்தில் உறுப்பினர்கள் கலந்து கொண்டு பேசினார்கள். அதே போன்று மானியக் கோரிக்கையில் பல்வேறு சம்பந்தப்பட்டவற்றையும் உறுப்பினர்கள் பேசினார்கள் என்பதனை அன்றாட தினசரி செய்தித் தாள்களின் வாயிலாக படித்திருக்கிறேன். ஆனால் இன்று அந்த வாய்ப்பினையே பயன்படுத்தி இந்த அவையிலே பேசுகின்ற வாய்ப்பினையும், அது போன்ற ஒரு தகுதியினையும் எனக்கு ஏற்படுத்தித் தந்த அன்பின் சின்னமாக, பண்பின் சிகரமாக, பாசத்தின் பிறப்பிடமாக, நேசத்தின் இருப்பிடமாக, நெஞ்சத்தின் கலங்கரை விளக்கமாக, வஞ்சகமே இல்லாத வாஞ்சை கீதமாக, வரலாற்றுப் புகழ் மிக்க நாதமாக அகில உலக தாய்க் குலத்தின் ஒப்பற்றத் தலைவியாக, சிங்கத்தின் முழக்கம், சிறுத்தையின் பாய்ச்சல், வேங்கையின் கம்பீரம், புயலின் வேகம், இடியின் கர்ச்சனை, மின்னலின் வீச்சு, அருவியின் ஓட்டம், தென்றலின் தெம்மாங்கு, நிலவின் குளிர்ச்சி இத்தனைக்கும் எத்தனை சக்திகள் உண்டோ அத்துணை சக்திகளையும் தன்னிடையே ஒருங்கே அமையப்பெற்ற ஓரே ஒப்பற்றத் தலைவி மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அவர்கள், தாய்க் குலத்தின் சந்திரனும் அம்மாதானே, தமிழ்க் குலத்தின் குலவிளக்கும் அம்மாதானே, வாய் மணக்க புகழ்ந்திடுவோம் நம் அம்மாதானே, வரலாற்றுப் பொன் ஏட்டிலும் நம் அம்மாதானே, புத்தனின் போதனைகளாக, ஏசுவின் பைபிளாக, நபிகள் நாயகத்தின் குரானாக இவர்களின் மொத்த உருவமாக திகழ்பவர் மாண்புமிகு எனது இதய தெய்வம் புரட்சித் தலைவி அவர்கள்.

[திரு. தா.செழியன்] [1991 செப்டம்பர் 24

இந்திய சரித்தரத்திலே குப்தர் காலம் பொற்காலம். அன்பே உருவான மௌரிய மாமன்னன் அசோகனின் காலமும் ஒரு பொற்காலம். அதற்குப் பின்னாலே அகில உலகமே பார்த்து பாராட்டத்தக்க அளவிற்கு தாய்க் குலத்தின் தாமரையாம் தமிழகத்தின் தனிப் பெரும் தலைவி மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களுடைய ஆட்சியும் பொற்காலமே.

கடலிலேயிருந்து அலையைப் பிரிக்கலாம், கதிரவனிடமிருந்து ஒளியைப் பிரிக்கலாம், மலரிலேயிருந்து மணத்தைப் பிரிக்கலாம். ஆனால் மக்கள் மனத்திலே இருந்து புரட்சித் தலைவியை யாராலும் பிரிக்க முடியாது. எழுந்தால் இமயம், நடந்தால் கங்கை, சிரித்தால் வசந்தம், சீறினால் பிரளயம், அந்த என்னுடைய இதய தெய்வம் இருக்கின்ற திசை நோக்கி அவர்களுடைய பொற்பாத கமலங்களுக்கு வணக்கம் செலுத்தி எனது கண்ணியம் நிறைந்த கன்னித் தமிழ் பேச்சை துவங்குகிறேன்.

என்னை இந்த அவையினுடைய சட்டமன்ற உறுப்பினராக்கிய ஏறத்தாழ அரை இலட்சம் வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றி பெறச் செய்த வாக்காளார் பெருமக்களுக்கும், கழக கண்மணிகளுக்கும், தோழமை இயக்கத்தைச் சேர்ந்த தலைவர்களுக்கும், தொண்டர்களுக்கும் எனது மனமார்ந்த நன்றி கலந்த வணக்கத்தினை எனது இதயத்தின் பிடரியிலிருந்து காணிக்கையாக்குகிறேன்.

நீதி நிருவாகம் மற்றும் சிறைத் துறை சம்பந்தமான மானியக் கோரிக்கையில் பேசுவதற்கு வாய்ப்பினைத் தந்த பேரவைத் தலைவர் அவர்களுக்கு மீண்டும் ஒரு முறை எனது பணிவான நன்றியினைத் உள்ளத்தின் அடித்தளத்திலிருந்து உளமாற சமர்ப்பிக்கிறேன்.

இந்தியாவில் அனைத்துத் துறைகளிலும் குறிப்பாக கல்வி மற்றும் வேலை வாய்ப்பு ஆகிய துறைகளில் தாழ்த்தப்பட்ட, பழங்குடியினருக்கு ஒதுக்கப்படும் 18 சதவீதம் இட ஒதுக்கீடு பின்பற்றப்பட்டு வருகிறது. ஆனால் அரசு வழக்குரைஞர்களை ஒவ்வொரு நீதிமன்றங்களிலும் நியமிக்கின்றபோது இந்த இட ஒதுக்கீடு சதவீதம் பின்பற்றப்படுவதில்லை. எனவே மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்கள் தங்களின் புனிதமான ஆட்சியிலாவது தாழ்த்தப்பட்ட, பழங்குடியினர் சமுதாய வழக்குரைஞர்களை நீதி மன்றங்களில் நியமிக்க இந்த மாமன்றத்தின் பேரவைத் தலைவர் மூலம் தமிழக முதல்வர் அவர்களிடம் பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன்.



1991 செப்டம்பா 24] [திரு. தா. செழியன்]

இந்தியாவின் அரசியல் சட்டத்தை உருவாக்கிய அறிவுலக மேதையும், தொழிலாளர், பெண்கள், ஏழையெளியோர், தாழ்த்தப்பட்டோர் ஆகியோருக்கான சட்டங்களை உருவாக்கிய வராம் அண்ணல் அம்பேத்கார் அவர்களின் நூற்றாண்டு விழாவினை சிறப்போடு எடுத்து வருகின்ற இந்த ஆண்டில் கட்டப்படும் நீதிமன்ற கட்டடங்கள் மற்றும் சென்னை உயர்நீதி மன்றத்தில் புதிதாக கட்டப்பட்டுள்ள சென்னை உயர்நீதி மாமன்ற கட்டிடத்திற்கு அண்ணல் டாக்டர் அம்பேத்காரின் பெயரினைச் சூட்ட வேண்டுமென்று இம்மாமன்றத்தின் மூலமாக மாண்புமிகு தமிழக முதல்வர், புரட்சித் தலைவி அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

பிற்பகல் 6.20

அதேபோன்று திருச்சியிலே இருக்கிற அரசு சட்டக் கல்லூரிக்கு அரசினால் கையகப்படுத்தப்பட்ட இடம் இருந்தும் அதனுடைய பணியைத் துரிதப்படுத்தாமல் நிலுவையிலே இருக்கிறது. எனவே திருச்சியிலே இருக்கிற அரசு சட்டக் கல்லூரிக்கு அந்த இடத்திலே கட்டிடங்களைக் கட்டுவதற்கு மாண்புமிகு முதல்வர் அவர்களையும் மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் அவர்களையும் அதற்கான பணிகளைத் தொடங்க வேண்டுமென்று இந்த மாமன்றத்தின் மூலமாக நான் கேட்டுக்கொள்கிறேன்.

அதே போன்று இந்த மாமன்றத்திலே மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அவர்கள் திருச்சியை இரண்டாகப் பிரித்து பெரம்பலூரை தலைநகரமாகக் கொண்டு புரட்சித் தலைவரால் அறிவிக்கப்பட்ட திருவள்ளுவர் மாவட்டம் அடுத்த நிதி ஆண்டில் துவங்கப்படும் என்ற இனிப்பான செய்தியினை என்னுடைய தொகுதி மக்களுக்கு வழங்கி இருக்கிறார்கள். எனவே மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அவர்களுக்கு என்னுடைய தொகுதி மக்களின சார்பாகவும், என் சார்பாகவும், பெரம்பலூரைத் தலைநகரமாகக் கொண்டு திருவள்ளுவர் மாவட்டத்தினைத் தொடங்குவதற்கு என்னுடைய நன்றியினைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அதேபோன்று பெரம்பலூர் தொகுதி ஒரு பிற்படுத்தப் பட்ட தொகுதி; எந்தவிதமான தொழிற்சாலையும், எந்த விதமான வியாபார நிலையமும் இல்லாத தொகுதி ஆகும். எனவே அங்கே ஒரு தொழிற்சாலையை அமைப்பதற்கு மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் உத்தரவினை வழங்க வேண்டும் என்றும், அதேபோல் அங்கே ஒரு அரசுக் கலைக் கல்லூரியையும், பெண்களுக்கான மேல்நிலைப் பள்ளியையும் துவங்க வேண்டும் என்றும் இந்த நேரத்திலே மாண்புமிகு முதல்வர் அவர்களை பேரவைத் தலைவர் அவர்கள் மூலம் நான் கேட்டுக் கொள்கிறேன்.

அதே போன்று 1958 ஆம் ஆண்டு பெரம்பலூர் தொகுதியிலே அடங்கிய பூலாம்பாடியில் அரசினுடைய நிலுவையில் உள்ள கலிங்கா நீரோடைத் திட்டத்தினை மாண்புமிகு முதல்வர் அவர்கள் விரைவில் துரிதப்படுத்த வேண்டுமென்றும் இந்த மாமன்றத்திலே கேட்டுக் கொள்கிறேன்.

என்னுடைய தொகுதியினுடைய தலையாய பிரச்சினை தண்ணீர்ப் பிரச்சினைதான். அதை நிறைவேற்றும் பொருட்டு பெரம்பலூருக்கு கொள்ளிடத்திலே இருந்து நீர் கொண்டு வரும் திட்டத்தை உடனடியாகச் செயல்பட வைக்கவேண்டுமென்று பேரவைத் தலைவர் மூலமாக மாண்புமிகு முதல்வர் அவர்களை நான் கேட்டுக் கொள்கிறேன். மலையாளப்பட்டி – சின்னமுட்டம் டேம் திட்டத்தையும் நிறைவேற்ற வேண்டுமென்று மாண்புமிகு முதல்வர் அவர்களை நான் கேட்டுக் கொள்கிறேன்.

கிடப்பில் உள்ள பேரையூர் பாசனத் திட்டத்தையும் நிறைவேற்றித் தருமாறு மாண்புமிகு இதய தெய்வம் தமிழக முதல்வர் அவர்களை மாண்புமிகு பேரவைத் தலைவர் மூலமாக நான் கேட்டுக்கொள்கிறேன்.

அதுபோன்று திருவாளந்துறை வெள்ளாற்றுப் பாலம் கட்டும் நிலை நிலுவையில் இருக்கிறது. எங்களது தலையாய பிரச்சினையான இந்த வெள்ளாற்றுப் பாலத்தைக் கட்டித் தந்தால் தென் ஆற்காடு மாவட்டத்துக்கும், திருச்சி மாவட்டத்துக்கும் இடையே நட்பும், வியாபாரமும் எளிமையான நிலையில் எளிதாக நடைபெறுவதற்கு ஒரு வாய்ப்பாக இருக்கும். எனவே வெள்ளாற்றுப் பாலத்தைக் கட்டும் பணியினைத் துவக்கித் தருமாறு மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

எத்தனையோ பிரச்சினைகளைக் கொண்ட எனது தொகுதியின் பிரச்சினைகளை இந்த அவையிலே எடுத்துச் சொல்ல காலம் போதாமையால் எனது உரைக்கு வாய்ப்புக் கொடுத்தமைக்கு, இந்த வரலாற்றுப் புகழ் மிக்க இந்த மாமன்றத்தில் என்போன்ற சாதாரண இளைஞர்கள் பேசுவதற்கு வாய்ப்புக் கொடுத்த மாண்புமிகு பேரவைத் தலைவருக்கும் எங்களது இயக்கத்தினுடைய பொதுச் செயலாளர் புதுமைத் தலைவி, பொன்மனத் தலைவி, புரட்சித் தலைவி என்று சொல்லி முடிக்க முடியாத காரணத்தால், தங்கத்தாய், தமிழே கண்ணில் காட்சி தருவதுபோல் தமிழ்த் தாய், எங்களது சிங்கநிகர் செந்தமிழ் முதல்வர், செயல் ஒன்றே கடமையாகக் கொண்டிருக்கிற கன்னித் காவியத் தலைவி, காவிரித்தாயை பூவிரியும் தெய்வீகச் சக்தி தலைவி, களால் அழைத்து வந்த மாண்புமிகு தமிழக முதல்வர்





அவர்களுக்கும் எனது சார்பாகவும், எனது தொகுதி மக்களின் சார்பாகவும் தங்களுடைய பொற்பாதங்களுக்கு என்னுடைய நன்றியினைத் தெரிவித்து விடை பெற்று அமைகிறேன். நன்றி.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. என். ஆர். சிவபதி.

திரு. என். ஆர். சிவபதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மாமன்றத்தில் இப்படிப்பட்டவர்கள்தான் சட்டமன்ற உறுப்பினராக ஆகமுடியும் என்ற நிலை இருந்ததை மாற்றி எப்படிப்பட்டவர்களையும் என்னால் சட்டமன்ற உறுப்பினர்களாக உருவாக்க முடியும் என்று புரட்சி ஏற்படுத்தி சாதனை படைத்த எனது இதய தெய்வம் மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்களைப் பாராட்டுவதற்கும் வாழ்த்துவதற்கும் வயது இல்லை; நன்றியுடன் வணங்குகிறேன். அதுபோல திருச்சி மாவட்டம், தொட்டியம் தொகுதியில் 52 ஆயிரம் வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றி பெறச் செய்த எனது தொகுதி வாக்காளப் பெருமக்களுக்கும் எனது நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்து இந்த மாமன்றத்தில் பேச விழைகிறேன்.

இன்றைக்கு சட்டமன்றம் மற்றும் நமது நாட்டிலே இருக்கிற பாராளுமன்றம், சொல்லப்போனால் எல்லோரும் ஒரே குரலில் நீதித் துறையைப்பற்றிச் சொல்லி வருகின்ற குற்றச்சாட்டு என்னவென்றால் நிறைய வழக்குகள் பைசல் ஆகாமல் தேங்கிக் காலதாமதம் ஏற்பட்டு வருகிறது என்பது தான்.

பிற்பகல் 6.25.

இந்த நிலை மாற வேண்டுமானால் நிறைய நீதிமன்றங்களில் மாவட்ட நீதிபதிகள், சார்பு நீதிபதிகள், டிஸ்ட்ரிக் முன்சீப்ஸ், நீதித் துறை நடுவர் நிரப்பப்படாமல் உள்ளது. அவற்றை விரைவில் நிரப்ப வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மேலும் இதற்கு முன்பு 5,000 ரூபாய் மதிப்புள்ள வழக்குகளை விசாரிக்கும்போது இருந்த ஊழியர்கள், நீதிபதிகள் இன்று அதே கோர்ட்டுகளில் ரூபாய் 15,000 மதிப்புள்ள வழக்குகளையும் விசாரிப்பதால் காலதாமதமும், ஊழியர்கள் பற்றாக்குறையும் ஏற்படுகிறது. ஆகவே, நீதிபதிகளையும் ஊழியர்களையும் தேவைக்கேற்ப பணியில் அமர்த்த வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

ஒவ்வொரு நீதிமன்றத்துக்கும் விரிவாக நூலகம் அமைத்து நீதிபதிகள், வழக்கறிஞர்கள் ரெபரன்ஸ் செய்துகொள்ள கோர்ட் லைப்ரரி அமைத்துத்தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

வழக்கறிஞர்களுக்கு உதவிட அவர்களுக்கு நீதிமன்றங் களில் ஆலோசனை நடத்த வசதியாக 'லா சேம்பர்ஸ், ஒவ்வொரு நீதிமன்றத்திலும் தேவைக் கேற்ப கட்டிக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

தமிழகத்தில் மருத்துவப் பல்கலைக் கழகம், கால்நடை பல்கலைக் கழகம், விவசாயப் பல்கலைக்கழகம், பொறி யியல் பல்கலைக்கழகம் என்று அனைத்துத் துறைகளுக்கும் பல்கலைக்கழகம் உள்ளது. ஆனால் சட்டத் துறைக்கு மட்டும் இல்லை. புரட்சித் தலைவர் அவர்கள் பாடிய 'நாளை வரும் திட்டம்; நானே போடப்போறேன் சட்டம்' என்ற பாட்டுக்கு ஏற்ப நம்முடைய இதய தெய்வம் புரட்சித் தலைவி சட்டம் போடுகிற வாய்ப்பை பெற்றிருக்கிற இந்த நேரத்தில் சட்டத் துறைக்கும் ஒரு பல்கலைக்கழகம் (லா யூனிவர்சிட்டி) அமைத்துத்தர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

தமிழகத்தில் உள்ள அனைத்து பின்தங்கிய பகுதிகளும் தொழில் துறையில் முன்னேற வேண்டும் என்று சட்டம் பிறப்பித்து, அந்தச் சட்டத்தின் கீழ் எனது தொட்டியம் தொகுதியில் ஒரு வாழை ஆராய்ச்சி நிலையம் அமைத்துத் தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து டி.என்.பி.எல்., தமிழ்நாடு பேப்பர் போர்டு லிமிடட்டின் சப்-யூனிட்டை அமைக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

சென்னை சட்டக் கல்லூரி இந்த ஆண்டு 100-வது ஆண்டை கொண்டாடுவதை ஒட்டி சிறப்பாக விழா எடுக்கவேண்டுமென்று கேட்டு கல்லூரி வளாகததில் முன்னாள் முதலமைச்சர் புரட்சித் தலைவர் அவர்களின் சிலை அமைக்க வேண்டு மென்று கேட்டுக்கொள்கிறேன்.

திருச்சி சட்டக் கல்லூரிக்கு இன்று 102 இலட்சம் பெறுமானமுள்ள புதிய கட்டடங்களைக் கட்ட அனுமதி வழங்கியதைப் போல, விடுதி வசதி செய்து கொடுக்கவேண்டு மென்று கேட்டுக் கொள்கிறேன்.

இன்றைக்கு நிறைய வழக்கறிஞர்கள் வேலை வாய்ப்பு இல்லாமல், வருமானம் இல்லாமல இருக்கிற காரணத்தால் ஒவ்வொரு காவல் நிலையத்திலும். தாலுகா அலுவலகத்திலும் நிலப் பதிவு அலுவலகத்திலும் 'லீகல் அட்வைசர்ஸ்' சட்ட ஆலோசகர்களை பணியில் அமர்த்த வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.



மேலும் படித்த அனைத்து வழக்கறிஞர்களுக்கும் ஊக்கத் தொகை வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இன்று விபத்து மற்றும் விஷ மருந்துகளால் உயிர் இழந்தவர்களின் போஸ்ட் மார்ட்டம் ரிப்போர்ட் கிடைக்க காலதாமதம் ஆகிறது. காரணம் 3, 4 மாவட்டங்களுக்கு ஒன்று தான் மண்டல குற்றவியல் ஆய்வகம், 'போரன்சிக் சயன்ஸ் லேபரட்டரி' இருக்கிறது. இந்த காலதாமதத்தைத் தவிர்க்க அந்தந்த டிஸ்ட்ரிக்ட். ஹெட்குவார்ட்டர்ஸ் ஆஸ்பிட்டல்களிலும் மாவட்ட மருத்துவமனைகளிலும் இந்த ஆய்வகம் அமைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்கள் மதுவிலக்கு திட்டத்தை தீவிரமாக அமல்படுத்துகிற இந்த நேரத்தில் காய்ச்சுபவர்களுக்கும், விற்பவர்களுக்கும் கடும் தண்டனை வழங்குவதைப் போல, குடிப்பவர்களுக்கும் குடித்துவிட்டு கலாட்டா செய்பவர்களுக்கும் கடுமையான தண்டனை கொடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பிற்பகல் 6.30 மணி

புரட்சித் தலைவி அவர்கள் இன்று அறநிலையத் துறை யின்கீழ் அனைத்து கோவில்களையும் நல்ல முறையில் பாது காக்க வேண்டுமென்ற எண்ணத்தில் செயல்படுகிற காரணத் தால்—இன்று தமிழகத்தில் மிகப்பெரிய கோவில்களுக்கு நிறைய நன்செய், புன்செய் நிலங்கள் உள்ளன. அந்த கோவில் களுக்கு உள்ள நிலங்களில் விளைச்சல் அதிகமாக உள்ளது. இருந்தாலும் அந்த கோவில்களுக்கு கிடைக்க வேண்டிய குத்தகை மிகவும் குறைவு. ஏனென்றால் பல ஆண்டுகால மாக கோவில் நிலங்களை பரம்பரை பரம்பரையாக அனு பவித்து வருகிறார்கள். இந்த நிலையை மாற்றி ஆண்டுக்கு ஒரு முறை அல்லது இரண்டாண்டுகளுக்கு ஒரு முறை அரசு அதிகாரிகள் அந்தந்த ஆலயங்களுக்குச் சென்று பகிரங்க ஏலம் விட்டு குத்தகையை வசூலிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். இதனால் கோவில்களுக்கு அதிக வருமானம் கிடைக்க வாய்ப்பு உள்ளது. எனவே, பரம்பரை பரம்பரையாக இருந்து அனுபவிப்பதை மாற்ற சட்டத் திருத்தம் கொண்டுவர வேண்டுமென்றும் கேட்டுக் கொள்கிறேன். மேலும் ஒவ்வொருவரும் எல்லா உரிமைகளும், வசதிகளும் பெறவேண்டும் என்று சட்டம் இயற்றி, அந்தச் சட்டத்தின் கீழ் எனது தொட்டியம் தொகுதியில் நாகைநல்லூர் ஏரிப் பாசனம், காவிரி குடிநீர்த்திட்டம் மற்றும் பல கிராமங்களுக்கு ரோடு வசதி களைச் செய்து கொடுக்க வேண்டுமெனக் கேட்டுக் கொள்கிறேன்.

ஒவ்வொரு மாவட்ட நீதிமன்றங்களிலும் துரித பிரிவு நீதிமன்றம் என்ற அமைப்பை ஏற்படுத்தி, அதன் மூலம் விபத்து மற்றும் ஆக்கபூர்மான வழக்குகளை உடன் விசாரித்து, துரித நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். ஏன் என்றால், விபத்தில் இறந்தவர்களுக்கு, உடல் உறுப்புகளை இழந்தவர்களுக்கு நஷ்டஈட்டுத் தொகை வழங்குவதற்கு காலதாமதம் ஆகிறது. சில வழக்குகள் பல ஆண்டுக்காலமாக இருந்து கொண்டிருக்கின்றன. ஆகவே, இந்த துரித பிரிவு நீதிமன்றம் அமைக்க வேண்டுமென பணிவுடன் கேட்டுக் கொள்கிறேன்.

எனக்குப் பொது மானியக் கோரிக்கையில் பேச வாய்ப்புக் கிடைக்காத காரணத்தால், இந்த சட்ட மானியக் கோரிக்கையில் எனது தொகுதிக்கான ஒரு சில திட்டங்களை இந்த மன்றத்தில் எடுத்துரைத்துள்ளேன்.

கடைசியாக மாண்புமிகு சட்ட அமைச்சரவர்கள் சமர்ப்பித்த நீதி நிர்வாகம், மற்றும் சிறைச்சாலைகள், மானியக் கோரிக்கைகள் மீது பேசுவதற்கு வாய்ப்பு அளித்தமைக்கு நான் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன், 'தட்டுங்கள் திறக்கப்படும், கேளுங்கள் கொடுக்கப்படும்' என்ற ஏசுவின் பொன்மொழிக்கு ஏற்ப, நமது இதய தெய்வம், புரட்சித் தலைவியின் பொற்கால ஆட்சி நடக்கின்றதால், எனது தொகுதி மக்களுக்கு பல வசதிகளைச் செய்து கொடுக்க வேண்டும் என்ற எண்ணத்தில் சில திட்டங்களை பணிவோடு கேட்டுள்ளேன். தாய் உள்ளம் கொண்ட நமது முதல்வர் அவர்கள் கொடுப்பார்கள் என்ற நம்பிக்கையில் அமர்கிறேன். நன்றி, வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. சஞ்சய் ராமசாமி.

**THIRU SANJAY RAMASAMI :** Hon. Speaker, Sir, there is a saying in Tamil "Penn Paavam Polladhathu". The best people to experiment this upon is the DMK Party simply because of the atrocities they committed on our beloved Chief Minister. But, she could not get justice then and she had to go to the people. The people have given her the justice by giving her such a wonderful majority. (Thumping of desks.)

Now, it is the turn of our people to approach the Hon. Chief Minister for justice. I mean the people from four Constituencies out of six in Kamarajar District. The people from Virudhunagar, Aruppukkottai, Sivakasi and Sathur have a long-felt need for the District Court to be



situated in Virudhunagar. There are many reasons for this. The main reason, of course, is the viability of having the Court situated at Virudhunagar. There are many opinions about the fact that the DMK Government which had announced that the Court would be had at Srivilliputhur withdrew it due to political considerations. But the actual fact is that the DMK Government had, in fact, said that the Court would be situated at Srivilliputhur only out of political considerations and not for practical reasons. Practically speaking, there cannot be any other place that is more viable than Virudhunagar. Even the late Puratchi Thalaivar MGR was convinced and said that the Court must be situated only at Virudhunagar and not at Srivilliputhur. The people from those Constituencies look forward to having justice done through our beloved Chief Minister. I am sure that the Hon. Law Minister must be thinking : "Why is he breaking my head on this problem ?" But, this problem has been going on for too long now and it has to be sorted out soon. As one of my hon. colleagues said, justice delayed is justice denied. My hon. friend sitting just in front of me just now says that justice hurried is justice buried as well. How long are the people of Virudhunagar, Sathur, Aruppukottai and Sivakasi to wait for the District Court ? In a democracy, majority is supposed to be the guiding factor. May I tell the Hon. Law Minister that the majority of the people, that is, four out of the six Constituencies, are in favour of having the District Court at Virudhunagar ? I am sure that this fact itself should rest the case. I am not talking as a lawyer. In fact, Virudhunagar is situated .....

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு சட்டத்துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு சஞ்சய் ராமசாமி அவர்கள், வழக்கறிஞர் இல்லை என்றாலும் கூட அவர்களுடைய தந்தையார் மாண்புமிகு ராமசாமி அவர்கள் ஒரு வழக்கறிஞர். அவர்களுடைய தாத்தா மாண்புமிகு வீராசாமி அவர்கள் ஒரு வழக்கறிஞர். ஆக, வழக்கறிஞர் குடும்பத்திலிருந்து வந்தவர் தான், என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

பிற்பகல் 6-35

**THIRU SANJAY RAMASAMI:** Thank you Hon'ble Law Minister. I also wish to bring one particular aspect, with the permission of the Speaker, to the notice of the House. Recently I was threatened in this Assembly by one of the Hon'ble Members of this Assembly.

**HON'BLE SPEAKER :** You should not take up that point here. In this context it should not be raised.

**Thiru SANJAY RAMASAMI:** I withdraw that I hope that the Law Minister would consider and more than considering would make it sure that the Court is situate at Virudhunagar and not in Srivilliputhur. My Hon'able Colleague Mr. Andi Thevar while speaking said that it should be kept at Srivilliputhur. He spoke out of personal reasons. His Constituency (Thirupparankundram) is situate only about 25 miles away from Srivilliputhur. That would enable him to attend the Court more often. Does that mean that we won't have him in the Asssembly to help us and guides. That it a different point I leave it anyway to the House. Anyway the important thing is I hope that the Law Minister decide in favour of having the Court situate at Virudhunagar.

Without lingering on only to that particular aspect let me move on to other aspects. which are also important in the Law Ministry. One among them is the backlog of cases. There is a rule that in a District Munsif Court if there are more than 450 cases there must be an Additional Court. But unfortunately although the courts are having more than 1,000 cases there are no additional courts situate. This, I am sure, is one of the reasons for the backlog of cases. Apart from that there are no proper buildings and even if there are proper buildings thereare no proper furniture, probably you would have to conceive a situation where the Judges could have to sit on the Floor and not on Chairs to give judgement. How it may effect the judgements, God alone knows.

Under the Lawyers' Welfare Act, one rupee is being collected by way of Vakalat. I would suggest that an amendment is being made to this Lawyers' Welfare Fund and the amount should be increased to Rs. 5 so that at the time of the Lawyer's death or his retirement he could get one lakh rupees. This would benefit every lawyer in this State. May I bring it to the notice of this Hon'ble Assembly that this has already being followed in Uttar Pradesh, Bihar and Andhra Pradesh.

There is another matter which I wanted to bring out. Please do not accuse me of being one who comes from higher society. This Assembly this Hon'ble House was Air-conditioned recently. We are only wearing simple shirts and pants. But imagine our colleagues in my profession which is basically legal profession who wear heavy gown and coat. There is not enough room in the Courts even to move about. It is merely suffocating. In most States the Courts are air-conditioned. My request is that the Hon'ble Minister make it convenient to air condition atleast the rooms where the Lawyers and Judges work in the High Court. One big problem is when the revenue collected from the Court is huge. It runs to crores of rupees, not even one tenth of it has been spent for



பிற்பகல் 6.40 மணி

developing the Courts. Not even a tenth of the amount received by way of revenue to the Courts is spent on the Courts. I am sure that, if this money at least 10 per cent is transferred, to say a Court Fund where they themselves can look after their needs, it would help the development of the judicial system in this State. There is another problem which we face in the High Court in Madras. It is the xerox machines. You have stated in the policy note that there are only going to be two xerox machines. There are tens and thousands of cases in the High Court. How can we manage only with two xerox machines. We should at least have twenty. Please, Mr. Law Minister, I would request you to kindly improve the facilities for not only the Lawyers but as well as the judges. When they are frustrated and annoyed that facilities given to them are not enough, that is the end of our case. Before I end my speech, I once again bring up the issue of Virudhunagar Court just to remind the Honourable Law Minister in case he forgets by the time I finish. Please think about the majority of the people, their wishes ; think about the injustice that has been done to our beloved Chief Minister and I am sure that you will bring justice to our four Constituencies. Thank you.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. சி. இராமசுவாமி.

திரு. சி. இராமசுவாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தின் காவல் தெய்வம், தானைத்தலைவி, தங்கத்தலைவி எங்கள இதய தெய்வம் மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்களின் பொற்பாதங்களில் விழுந்து வணங்கி நீதி நிர்வாகம் மற்றும் சிறைச்சாலைகள் பற்றிய மானியக் கோரிக்கையில் பேச விழைகின்றேன். ஒரு நாட்டிற்கு நீதித்துறையும் காவல் துறையும் மிக முக்கியமானவை. காவல் துறையினர் குற்றவாளிகளைக் கண்டுபிடித்து நீதித்துறையிலே கொண்டு செல்வார்கள். நீதிபதிகளாக இருக்கின்றவர்கள் அந்த வழக்கிலே நன்கு ஆராய்ந்து thousand accused can be acquitted but one innocent cannot be punished என்ற வகையில் ஆயிரம் குற்றவாளிகள் விடுவிக்கப்படலாம் ஆனால் ஒரு நிரபராதி தண்டிக்கப்படக்கூடாது என்பதுதான் நியதி. அந்த முறையில் இந்த நீதிபதிகள் இன்று செயல்பட்டுக் கொண்டு வருகின்றார்கள். நீதித்துறையைப் பற்றிச் சொல்லும்போது தாயில்லாப் பிள்ளைகள் என்றும் வாயில்லாப் பிள்ளைகள் என்றும் குறிப்பிடுவது உண்டு. அவர்களுடைய கோரிக்கைகளை எடுத்துச் சொல்ல எந்தவகையிலும் இடம் இல்லாததால் ஒரு வழக்கறிஞர் என்ற முறையில் சீனியர் என்ற முறையில் அவர்களுடைய குறைகளை அவர்களைப் பற்றிய கோரிக்கைகளை இந்த அவையிலே வற்புறுத்த விரும்புகிறேன்.

தமிழ்நாட்டில் மாவட்ட நீதிபதிகள் என்று 65 நீதிபதிகள் இருக்கின்றனர். அவர்களில் 16 மாவட்ட நீதிபதிகளுக்கு மட்டும் ஸ்டாஃப் கார் staff car என்ற வகையில் காரை கொடுத்துள்ளார்கள். மற்ற நீதிபதிகளுக்கு கார் கொடுக்கப்படவில்லை. சென்னையில் 3 மாவட்ட நீதிபதிகளுக்கு கார் கொடுக்கப்பட்டிருக்கிறது. மற்றும் Camping ஆஃபிசர்ஸ் என்று சொல்லப்படுகிற லேபர் கோர்ட்டில் 7 நீதிபதிகளும் கோவாப்பரேடடிவ் டிரிப்யூனலில் 2 நீதிபதிகளும், special courts unde; the essential commodities Act என்ற வகையிலே 6 நீதிபதிகளும் செயல்படுகிறார்கள் அவர்களுக்கும் கார் கொடுக்கப்படவில்லை. எனவே மாண்புமிகு புரட்சித்தலைவி அவர்கள் அந்த நதிபதிகளின் குறைகளை பரி வோடு பரிசீலிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். அதன் பிறகு Convey Allowance Conveyance Allowace to Subordinate Judges and District Munsif *cum* Judicial Magistrates களுக்கு என்ற வகையில் ஒரு மாதத்திற்கு 750 ரூபாய்க்கு அளவுக்கு conveyance அலவன்ஸ் கொடுக்கப்பட வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். தமிழ்நாட்டிலே உளள Dis'rict Munsifs and District Munsif *cum* Judieial Magistrates களுக்கு ரெசிடென்சியல் போன் வசதி கொடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன. இன்றைய நீதிபதிகளுக்கு Grant of 15 days of special earned leave கொடுக்க வேண்டும் என்ற கோரிக்கையை விடுக்கிறேன். தமிழ்நாட்டில் ஆசிரியர் மற்றும் அரசு அலுவலர்களுக்கு வருடத்திற்கு 15 நாள யேர்ன்ட் லீவ் earned leave கொடுக்கப்படுகிறது. அவர்களும் 265 நாட்கள வேலை செய்கிறார்கள். நீதிபதிகளும் 225 நாட்கள் வேலை செய்கிறார்கள். அதனால் நீதிபதிகளுக்கும் Grant of 15 days of special earned leave கொடுக்க வேண்டும் என்று கேட்டு கொள்கிறேன். raising of the basic pay of District Munsif *cum* Judicial Magistrates என்ற வகையில் அவர்களுடைய ரூ. 2,500 சம்பளத்தை 3,000 ஆக உயர்த்த வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

பிற்பகல் 18-45

அத்துடன் to Upgrade the Post of Chief Judicial Magistrate போஸ்டை அப்கிரேட் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள் கிறேன். சென்னை உயர் நீதிமன்றத்தில் இப்போது தலைமை நீதிபதியைச் சேர்த்து 28 நீதிபதிகள் இருக்கிறார்கள். இப்போது 32 நீதிபதிகளை நியமிக்கலாம் என்ற ஒரு உத்திரவு வந்துள்ளது. அவர்களில் 32 நதிபதிகளில் ஒன் தேர்டு 1/3 நீதிபதிகளை மாவட்ட நீதிபதிகளிலிருந்து தேர்ந்தெடுத்து நியமிக்கும்படி கேட்டுக் கொள்கிறேன். ஹைகோர்ட்டில் தேங்கிக் கிடக்கும் வழக்குகள் பல்லாயிரக்கணக்கில் இருக்கின்றன. அவற்றை விரைவிலே முடித்துத்தர புதிய நீதிபதிகளை நியமிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.



எனது ஊரான கள்ளக்குறிச்சியில் வழக்கறிஞர்களின் கோரிக்கையான சப்-கோர்ட் இதுவரை திறக்கப்படவில்லை. எனவே கள்ளக்குறிச்சியில் சப்-கோர்ட் கொண்டுவர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதே போல கள்ளக்குறிச்சியில் அடிஷனல் கோர்ட் ஒன்று அனுமதி கொடுக்கப்பட்டதாக கேள்விப்பட்டேன். இடம் பார்த்தார்கள். இதுவரை அடிஷனல் கோர்ட் திறக்கப்படவில்லை. எனவே உடனடியாக திறக்கப்பட வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். கள்ளக்குறிச்சி கோர்ட்டில் ஃபர்னிச்சர்ஸ் மிகவும் மோசமான நிலையில் உள்ளது. எனவே மாண்புமிகு சட்ட அமைச்சர் அவர்கள் கோர்ட்டுகளுக்கு பர்னிச்சர்களை நல்ல முறையில் அமைத்துக் கொடுக்க வேண்டுமென்று கேடடுக் கொள்கிறேன்.

சிறைச்சாலையைப் பற்றி சில விவரங்களைச் சொல்ல கடமைப் பட்டிருக்கிறேன். சிறைச்சாலையில் கொடுக்கப்படுகின்ற உணவில் புழுக்கள் இருப்பதாக கைதிகள் முறையிடுகிறார்கள். அந்த உணவை சுகாதார முறையிலே செய்து கொடுப்பதில்லை. மாண்புமிகு சட்ட அமைச்சர் அவர்கள் கைதிகளுக்கு கொடுக்கின்ற உணவுகளை தூய்மையாகவும் புழுக்கள் இல்லாமலும் நல்ல உணவாகக் கொடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். மேலும் grant of dress allowance என்று ஜுடிஷியல் ஆபீசர்களுக்கு உத்திரப் பிரதேசத்தில் வருஷத்திற்கு 3,600 ரூபாய் கொடுக்கிறார்கள். அதேபோல தமிழ்நாட்டிலும் இந்த கிரேண்ட் ஆஃப் டிரஸ் அலவன்ஸை ஜுடிக்ஷியல் ஆபீசர்களுக்கு கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதே நேரத்தில் வழக்கறிஞர்களுக்கு நான் ஏற்கனவே கூறியுள்ளேன் அவர்கள் இறந்தால் 1 இலட்சம் நிதி கொடுக்க வேண்டுமென்று. இன்று மீனியல் இறந்தால் கூட 60,000 நிதி கொடுக்கிறீர்கள். வழக்கறிஞர்கள் இறந்தால் 1 லட்சம் கொடுக்க வேண்டுமென்று சொல்லிக்கொள்ள ஆசைப் படுகிறேன். அதே போல என்ரோல்மென்ட் ஃபீஸ் என்று ஏகப்பட்ட பணங்கள் ஹைகோர்ட்டில் இருக்கின்றன. வழக்கறிஞர்கள் ஷேமநல நிதி என்று 30 ரூபாய் வசூலிக்கிறார்கள். எனவே அந்த என்ரோல்மெண்ட் ஃபீசிலிருந்து வழக்கறிஞர்களுக்கு அதாவது வழக்குகளே இல்லாத வழக்கறிஞர்களுக்கு நீண்டகால கடனாக அந்த நிதியிலிருந்து கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். நான் விடுத்துள்ள கோரிக்கைகளை மாண்புமிகு சட்ட அமைச்சர் அவர்கள் அருள்கூர்ந்து கவனிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதுபோன்று நீதிபதிகள் பிரச்சினைகளை நன்கு ஆராய்ந்து அதற்கு ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டு வாய்ப்பினை அளித்த பேரவைத் தலைவருக்கு நன்றி கூறி விடை பெறுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** திரு. கு. க. துரை முருகன்.

திரு. கு. சு. துரைமுருகன் : பேரவைத் தலைவர் அவர்களே. நீதி நிர்வாகத்தின் மானியக் கோரிக்கை மீது எனக்கு பேச வாய்ப்பு அளித்திருக்கின்ற பேரவைத் தலைவர் அவர்களுக்கு என்து மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

நீதி பற்றி இங்கே பேசிய மாண்புமிகு உறுப்பினர்கள் எல்லாம் பல்வேறு கருத்துக்களைத் தெரிவித்திருக்கிறார்கள். பேரறிஞர் அண்ணா அவர்கள் சட்டம் ஒரு இருட்டறை அதில் வழக்கறிஞர்களுடைய வாதம் ஒரு வெளிச்சம், அது ஏழைகளுக்கு கிடைப்பதில்லை என்று சொன்னார்கள். Jus ice delayed is justice denied. காலம் தாழ்த்தப்பட்டு கொடுக்கப்பட்ட நீதி மறுக்கப்பட்ட நீதியாகும் என்றும், ஆயிரம் குற்றவாளிகள் தப்பித்திருக்கலாம் ஆனால் ஒரு நிரபராதி தண்டிக்கப்படக்கூடாது என்கின்ற கருத்துக்களையும் இங்கே பேசிய மாண்புமிகு உறுப்பினர்கள் எல்லாம் தெரிவித்தார்கள். அதே போல Judiciary is the most important organ of our Indian constitution. நான்கு முக்கியமான அங்கங்களிலே நீதித்துறை ஒரு முக்கியமான அங்கமாகும். நீதித்துறையும், சட்டமன்றமும் இணைந்து செயல்படுகின்ற ரெயில் தண்டவாளங்களாக இருக்க வேண்டும் என்பது பற்றியும் இங்கே எடுத்துரைத்தார்கள். நான் ஒரு பணிவான கருத்தை இங்கே சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். நம்முடைய இந்திய சட்டங்களிலே இருக்கின்ற நீதிமன்றங்கள் எல்லாம்* ஆகவே, அடிப்படையாக (மணியடிக்கப்பெற்றது.)

பிற்பகல் 6-50 மணி

மாண்புமிகு பேரவைத் தலைவர் :** அது இந்த அவையில் இருப்பது நல்லதல்ல. அது அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது. நீதிமன்றங்கள் குறித்து சட்டப் பேரவையில் அத்தகைய ஒரு குறிப்பு இருப்பது நல்லது அல்ல. அதை தவிர்க்கவும். நீங்கள் சொல்லுவது போல் சட்டத்தினுடைய மன்றங்களாக இருப்பதே அடுத்தது நீதியினுடைய மன்றங்களாக இருப்பதற்கு அர்த்தம்தான்.

திரு. கு. சு. துரைமுருகன் : தலைவர் அவர்களே, இந்த கருத்தை இந்தியாவில் இருக்கக்கூடிய எல்லோரும் என்ற கருத்தை நம்முடைய தந்தை பெரியார் அவர்கள் சொன்ன கருத்து என்பதை இந்த நேரத்தில் நான் குறிப்பிட விரும்புகிறேன். (சிரிப்பு.)

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.



மாண்புமிகு பேரவைத் தலைவர் : தந்தை பெரியார் அவர்கள் நம்முடைய சட்டமன்றத்தில் வந்து பேசவில்லை. (சிரிப்பு) அது அவைக் குறிப்பில் வேண்டாம்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, the aim of law is to do justice, என்பதுதான் அடிப்படை. எனவே நீதியைப் பெறுவதற்காகத்தான் சட்டம்.

திரு. கு. சு. துரைமுருகன் : தலைவர் அவர்களே, இன்றைக்கு தமிழ்நாட்டிலே கடந்த ஆட்சிக் காலத்திலே . . . .

திரு. டி. வேலைய்யா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நமது நீதிமன்றங்களில் வழங்கப்படுவது முழுமையாக சட்டமும் இல்லை ; முழுமையாக நீதியும் இல்லை. It is justice according to law. A new phenomenon.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அது இருக்கலாம்.** என்பது போல அவர் சொன்னார். அது அவைக் குறிப்பிலே இருக்க வேண்டாம் என்பதுதான் என்னுடைய கருத்து.

திரு. கு. சு. துரைமுருகன் : தலைவர் அவர்களே,** என்று நான சொல்லவில்லை. நம்முடைய கோர்ட்டுகள் சட்டக் கோர்ட்டுகள் என்ற கருத்தைத்தான் நான் பணிவோடு தெரிவித்தேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அது இருக்கலாம்.

திரு. கு. சு. துரைமுருகன் : தலைவர் அவர்களே, கடந்த கால ஆட்சியில் பல்வேறு மாவட்ட நீதிமன்றங்களிலே நியமிக்கப்பட்ட அரசு வழக்கறிஞர்கள், பப்ளிக் பிராசிகூட்டர்ஸ், கவர்ன்மென்ட் பிளீடர்ஸ் எல்லாம் இன்றும் அந்தப் பதவியில் தொடர்ந்து கொண்டு மக்களுக்கு எதிரான செயல்களில் அவர்கள் ஈடுபட்டுக் கொண்டிருக்கிறார்கள். ஆகவே, மக்களுடைய பெரும்பான்மையான ஆதரவோடு நாம் இன்று அரசு அமைத்து, தாயுள்ளம் கொண்ட மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்கள் ஆட்சியிலே உடனடியாக கடந்த கால ஆட்சியிலே நியமிக்கப்பட்ட Public prosecutors Government pleaders and also Legal Advisors to various Government Departments இவர்களை எல்லாம் உடனடியாக நீக்கிவிட்டு புதிதாக அந்த இடங்களுக்கு அரசு வழக்கறிஞர்களை நியமிக்க வேண்டும் என இந்த நேரத்தில் நான் மாண்புமிகு சட்ட அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

** மாண்புமிகு பேரவைத்தலைவரின் ஆணைக்கிணங்க. அகற்றப்பெற்றது.

அதேபோல் இங்கே இன்னொரு பணிவான கருத்தை எடுத்து கூற விரும்புகிறேன். உச்ச நீதிமன்றத்தினுடைய ஒரு பிரிவை நம்முடைய சென்னை மாநகரில் அமைக்க வேண்டுமென்று கடந்த 20 ஆண்டு காலமாக நாம் பேசி வருகின்றோம். ஆகவே, இன்றைக்கு தமிழகத்திலே தன்னிகர் இல்லா ஒரு தலைவியாக இருக்கின்ற நம்முடைய மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்கள் ஆட்சியில் அந்தப் பெருமைமிகு சுப்ரீம் கோர்ட்டினுடைய ஒரு பென்ச், உச்ச நீதிமன்றத்தினுடைய ஒரு பிரிவு தென் இந்தியாவினுடைய தலைநகரமாக இருக்கின்ற சென்னை மாநகரில் அமைப்பதற்கு நமது அரசு மத்திய அரசை வலியுறுத்த வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி.)

அதேபோல் நமது உயர்நீதிமன்றத்தினை 600 கிலோ மீட்டருக்கு அப்பால் இருந்து வந்து அடைய வேண்டியிருக்கிறது. ஆகவே, உயர்நீதிமன்றத்தினுடைய ஒரு பிரிவை கோவையிலும், இன்னொரு பிரிவை மதுரையிலும் அமைப்பதற்கு நமது அரசு முயற்சி எடுக்க வேண்டுமென்று பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல் என்னுடைய பல்லடம் தொகுதியில் அது தனி தாலூகாவாக பிரிக்கப்பட்டு, திருப்பூரிலிருந்து தனியாக பிரிக்கப்பட்டு அந்த தனி தாலூகாவுக்கு ஒரு மாவட்ட உரிமையியல் நீதிமன்றம் (District munsil Court) இதுவரை அமைக்கப்படவில்லை. நம்முடைய அரசு கொள்கை விளக்கத்தின்படி ஒவ்வொரு வருவாய் வட்டத்திலும் ஒரு மாவட்ட உரிமையியல் நீதிமன்றம் அமைக்கப்படும் என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்கள்.

பிற்பகல் 6-55

ஆகவே, அந்தக் கருத்தின்படி எனது பல்லடம் தொகுதியில், பல்லடம் நகரிலே மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், டிட்ஸ்ட்ரிக்ட் முன்சீப் கோர்ட் ஒன்று அமைக்க வேண்டுமென்று மாண்புமிகு சட்டத்துறை அமைச்சர் அவர்களை நான் அன்போடு வேண்டி கேட்டுக்கொள்கிறேன். இன்றைக்கு தமிழகத்திலே இளம் வழக்கறிஞர்களாக இருக்கக்கூடியவர்கள் நிலை மிகவும் பரிதாபத்துக்குரியது என்பதை நான் சொல்லித் தெரியவேண்டியதில்லை. இங்கே இருக்கக்கூடிய சட்டமன்ற உறுப்பினர்களே ஏறத்தாழ 50 பேர் இருக்கின்றோம். இன்னும் ஒரு விஷயத்தைச் சொல்லப்போனால், வழக்கறிஞர்களுக்கெல்லாம் நீதிமன்றங்களிலே சரியான வேலை கிடைக்காத காரணத்தால்தான் அவர்கள் அந்தத் தொழிலையே விட்டுவிட்டு இன்றைக்கு அரசியலுக்கு மட்டுமல்ல, பல்வேறு துறைகளுக்கும் செல்ல வேண்டிய நிலை இருக்கிறது. வழக்கறிஞர்கள் இன்றைக்குப் பரிதாபமான நிலையிலே நல்ல ஒரு கோட்டும், கவுனும்கூட போடமுடியாத ஒரு நிலையிலே அவர்களுடைய வாழ்க்கைத்தரம் மிவும் . . . . (மணியடிக்கப்பெற்றது).



மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சட்டமன்ற உறுப்பினர்களாக வரக்கூடியவர்கள் சட்டம் படித்தவர்களாக இருந்தால், நல்ல உதவிகரமாக இருக்குமே என்றுதான் ஒவ்வொரு கட்சியிலேயும் சட்டம் படித்தவர்களை, சட்டமன்ற உறுப்பினர்களாக தேர்ந்தெடுக்க வேண்டுமென்று கருதுகிறார்கள். எனவே அவர் நினைக்கிறபடி வேலை கிடைக்காமல் வருகிறார்கள் என்று சொல்வது அவ்வளவு பொருத்தமாக இருக்காது. எனவே சட்டம் படித்தவர்களே இப்படியெல்லாம் எங்களைப்போட்டு மிரட்டினால் சட்டம் படிக்காத எங்களைப் போன்றவர்கள் மிக பயந்துகொண்டிருக்க வேண்டிய அவசியம் ஏற்படுகிறது. (மேசையைத் தட்டும் ஒலி) எனவே, நீதி மன்றத்தைப் பற்றியெல்லாம் இப்படி சொல்கிறபோது, பயம் ஏற்படாத அளவிற்கு ஒரு நம்பிக்கை ஏற்படுகிற அளவிற்கு கருத்துக்களைச் சொன்னால் நன்றாக இருக்கும் என்று கருதுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. சஞ்சய் ராமசாமி.

**Thiru SANJAY RAMASAMY :** Hon'ble Speaker, the main reason why so many lawyers are not able to get enough cases is because there are too many lawyers. I wish to make one suggestion. If there is some kind of a system to restrict the flow of students from the colleges into the Courts, then I am sure we will be able to . . . (குறுக்கீடு)

. . .

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. ராமசாமி. அவர்கள் சொன்னதிலே நீங்கள் கிளாரிபிகேஷன்தான் கேட்கலாம். நீங்கள் இன்னொரு சஜஸனையெல்லாம் சொல்லிக்கொண்டு இருக்கக் கூடாது. (குறுக்கீடு) திரு. துரைமுருகன். நீங்கள் பேசுங்கள். (குறுக்கீடு) அவருடைய பேச்சிலே நீங்கள் ஏதாவது கிளாரிபிகேஷன் கேட்கலாம். (குறுக்கீடு) you are going apart from his speach நீங்கள் உட்காருங்கள். அவர் பேசட்டும். திரு. துரைமுருகன்.

திரு. கு. க. துரைமுருகன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைக்கு இந்த சென்னை மாநகரத்திலே சைதாப்பேட்டை கோர்ட்டுக்கோ அல்லது எக்மோர் கோர்ட்டுக்கோ சென்று பார்த்தால் வழக்கறிஞர்களுடைய வாழ்க்கைத் தரம் எவ்வளவு பரிதாபகரமாக, மோசமாக இருக்கிறது என்பதை இங்கே நான் சொல்லித் தெரிய வேண்டியது இல்லை. அங்கு போய்ப் பார்த்தால் ஒரு நாளைக்கு அவர்கள் தங்களுடைய உணவுக்குக்கூட சம்பாதிக்க முடியாத ஒரு மோசமான, பரிதாபகரமான நிலையிலே இருப்பதை நான் மனதார பார்த்து இருக்கிறேன். . . . (மணியடிக்கப்பெற்றது) (குறுக்கீடு).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இதிலே என்ன இருக்கிறது அவர் என்ன சொல்கிறார் என்றால் அவர்கள் வாழ்க்கையிலே ரொம்ப கஷ்டப்படுகிறார்கள் என்பதைச் சொல்கிறார். (குறுக்கீடு) மோசமாக அவர் பேசவில்லை. ரொம்ப பரிதாபகரமாக இருக்கிறார்கள் ; ரொம்பக் கஷ்டப்படுகிறார்கள் என்றுதான் சொல்கிறார். உட்காருங்கள். திரு. க. சின்னசாமி.

**Thiru K. CHINNASAMY :** This also should not be taken advantage of....

**Thiru C. RAMASWAMY :** That should be avoided.

**மாண்புமிகு திரு. சு. முத்துசாமி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் துரைமுருகன் அவர்கள் நல்ல கருத்தை சொல்லிக் கொண்டிருக்கிறார்கள்.. இங்கே வழக்கறிஞர்களுக்கு வேலை கிடைக்கவில்லை என்று சொன்னால் நாட்டிலே குற்றம் குறைந்து கொண்டே வருகிறது என்றுதான் பொருள். எனவே அது ஒரு நல்ல முன்மாதிரியாகக் கூட இருக்கலாம். எனவே அவர் சொல்வதிலே தவறு இல்லை என்று கருதுகிறேன். எனவே, அந்த நிலைமைகளை அவர் எடுத்துச் சொல்கிறார் என்று கருதுகிறேன். (குறுக்கீடு).

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** இதிலே ஒன்றும் இல்லை. அவருடைய கருத்தைச் சொல்கிறார். (குறுக்கீடு) திரு. துரைமுருகன்.

**திரு. கு. சு. துரைமுருகன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நானும் ஒரு வழக்கறிஞராக இருந்து, நீதிமன்றங்களிலே இருக்கிற உண்மையான நிலையைத்தான் நான் மனந்திறந்து சொல்கிறேனே தவிர (மேசையைத் தட்டும் ஒலி) இதையெல்லாம் இங்கே ஏன் நான் குறிப்பிட விரும்புகிறேன் என்றால், வழக்கறிஞர்களுடைய எண்ணிக்கை நம்முடைய நாட்டினுடைய தேவையைவிட அதிகரித்துவிட்ட காரணத்தால் . . . (மணியடிக்கப்பெற்றது).

**மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் துரைமுருகன் அவர்கள் ஒரு கருத்தைத் தெரிவித்தார்கள். வழக்கறிஞர்களெல்லாம் வேலையில்லாமல் வறுமையோடு வாடிக்கொண்டிருக்கிறார்கள் என்று சொன்னார்கள். ஆனால், தகுதியானவர்கள், திறமையானவர்கள், விவரம் தெரிந்தவர்கள் அத்தனைபேரும் உரிய இடத்தில், இன்னும் சொல்லப்போனால் நீதிமன்றத்தில், வசதாப்பேட்டையில் மட்டும் வக்கீலுக்கு வேலை இல்லை— இன்றைக்கு எத்தனையோ டிரிபியூனல்கள்



எல்லாம் வந்து இருக்கின்றன வங்கிகளெல்லாம் வந்திருக்கின்றன. சட்டம் படித்தவர்களுக்கு அதிக வாய்ப்பு, இன்னும் சொல்லப்போனால், சட்டக் கல்லூரியிலே இன்றைக்கு 5 மடங்கு, 6 மடங்கு சேரவேண்டுமென்று காகிதங்களை. எம்.எல்.ஏ.-க்கள் இன்னும் தினமும் கொடுத்துக் கொண்டிருக்கிற அளவிற்கு அது விரிந்து கொண்டிருக்கிறது. ஆகவே, அவர் சொல்லுவது பொருத்தம் அல்ல.

பிற்பகல் 7-00

**திரு. டி. வேலையா தலைவரவர்களே:** கிளாரிபிகேஷன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** அது, கிளாரிபிகேஷனிலே வராது. சரி சார். ஏற்கனவே ஒரு கிளாரிபிகேஷன் கேட்டீர்கள் அல்லவா ?

**திரு. டி. வேலையா :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வேலையில்லாமல்தான் நாங்கள் எம்.எல்.ஏ.-வாக ஆகியிருக்கிறோம் என்று அவர் சொல்லியிருக்கிறார். இது ரிக்கார்டில் இருக்கும் என்று சொன்னால், எங்கள் தொகுதி மக்களே எங்களைத் தவறாக நினைப்பதற்கு வாய்ப்பு இருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** இல்லை. அவரைச் சொல்லிக் கொள்கிறார். தப்பு இல்லை. உட்காருங்கள். திரு. துரைமுருகன்.

**திரு. கு. சு. துரைமுருகன் :** மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, நான் இதையெல்லாம் ஏன் இங்கே குறிப்பிட்டேன் என்றால், நாட்டினுடைய தேவையைவிட வழக்குகளின் எண்ணிக்கை அதிகரித்து விட்டது. இந்த மாதிரி சட்டக் கல்லூரிகளிலே மாணவர்கள் படித்து வழக்கறிஞர்களை உருவாக்குவதைவிட, இந்த மாணவர்களுக்குத் தொழில் கல்வியிலே, பாலிடெக்னிக், என்ஜினியரிங் காலேஜ் போன்ற இடங்களில் அவர்களுக்குக் கல்வி பயிற்றுவித்து இந்த நாட்டினுடைய கன்ஸ்ட்ரக்ஷன் ஒர்க்ஸ்— நிர்மாணப் பணியிலே அவர்களை ஈடுபடுத்த வேண்டும் என்பதற்காகத்தான் இந்தக் கருத்தை நான் தெரிவித்தேன் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். நானே ஒரு வழக்கறிஞராக இருந்து கொண்டு . . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம் :** மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களே பி.இ. படித்துவிட்டு பி.எல்.-க்கு வந்தவர். (சிரிப்பு)

திரு. கு. எ. துரைமுருகன் : மாண்புமிகு அமைச்சரவர் கள் என்னைப் பற்றிக் குறிப்பிட்டதற்கு எனது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். இன்னொரு கருத்தை நான் இங்கே சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். உதாரணமாக எங்களது கோவை மாநகரத்திலே ஏறத்தாழ இருபது நீதிமன்றங் கள் இருக்கின்றன. அந்த நீதிமன்றங்கள் ஐந்தாறு இடங்களிலே பரவலாக இருக்கின்றன. அதனால் வழக்கறிஞர்கள் அந்தக் கேஸ்களை நடத்துகின்றபொழுது, ஒரே நேரத்திலே பல்வேறு கோர்ட்டுகளிலே கேஸ்கள் வருகிறபொழுது, அங்கும் இங்கும் ஓடி நாங்கள் அலைய வேண்டியிருக்கிறது. ஆகவே, நான் அமைச் சரவர்களுக்குப் பணிவோடு தெரிவித்துக் கொள்கிறேன். கோர்ட் காம்ப்ளெக்ஸ் என்று உருவாக்கி, எல்லா நீதிமன்றங்களையும் ஒரே வளாகத்திற்குள் அமைப்பதற்கு நீங்கள் முயற்சியை மேற் கொள்ள வேண்டும். இனிமேல், எதிர்காலத்திலேயாவது நீதி மன்றங்களை அமைக்கின்றபொழுது எல்லாக் கோர்ட்டுகளும் ஒரே இடத்திலே வந்தால் வழக்கறிஞர்களுக்கும், அந்த வழக்கை நடத்த வருகின்ற கட்சிக்காரர்களுக்கும் மிகப் பயன் உள்ளதாக இருக்கும் என்பதை இந்த நேரத்தில் நான் பணிவோடு தெரிவித் துக் கொள்கிறேன்.

நம்முடைய புரட்சித் தலைவர் ஆட்சியிருந்த நேரத்திலே, டைரக்டரேட் ஆப் ப்ராசிகியூஷன் என்கின்ற ஒரு தனி டிபார்ட் மெண்டை உருவாக்க உத்தேசம் இருந்தது. இன்றைக்கு நம்முடைய புரட்சித் தலைவியினுடைய ஆட்சியிலே டைரக்ட ரேட் ஆப் ப்ராசிகியூஷன் என்கின்ற தனியான ஒரு துறையை உருவாக்கி அதன் மூலம் அரசு குற்றவியல் வழக்கறிஞர்களை நியமிக்க வேண்டுமென்று இந்த நேரத்திலே நான் பணிவோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

அதேபோல, காவல் நிலையங்களில் வழக்குகள் வருகின்ற பொழுது பதிவு செய்வதிலே எப்.ஐ.ஆர்., சார்ஜ்ஷீட் போடுவது, ஸ்டேட்மெண்ட் ரிக்கார்டிங் ஆஃப் விட்னெஸஸ், இதையெல் லாம் செய்கின்றபொழுது, அங்கே செய்கின்றவர்கள் அந்தச் சட்ட அறிவு குறைவாக—வழக்கறிஞர்களுக்கு இருகின்ற அளவிற்குசட்ட அறிவு இல்லாத நிலையிலே அவர்கள் இருக்கிறார்கள். ஆகவே, ஒவ்வொரு காவல் நிலையத்திற்கும் ஒரு வழக்கறிஞரை நியமிக்க வேண்டுமென்ற ஒரு கருத்து புரட்சித் தலைவருடைய ஆட்சியில் இருந்தது. அப்படி நியமித்தால் வழக்கறிஞர்களுக்கு வேலை வாய்ப்பும் கிடைக்கும்; உண்மையான குற்றவாளிகள் சட்டத் தினுடைய பிடியிலிருந்து தப்பித்துக் கொள்வதையும் நாம் தடுக்க முடியும். ஆகவே, ஒவ்வொரு காவல் நிலையத்திற்கும் ஒரு வழக் கறிஞரை நியமிக்கின்ற உத்தேசத்தை அரசு ஏற்படுத்த வேண்டு மென்று இந்த நேரத்திலே நான் தெரிவித்துக் கொள்கிறேன்.



இதேபோல, ஜூனியர் வக்கீல்களுக்குத் தனியாக ஆபீஸ் போட முடியாத ஒரு நிலைமையிருக்கிறது. ஆகவே, அந்தந்த நீதிமன்ற வளாகத்திற்குள்ளேயே ஜூனியர் லா சேம்பர்ஸ், பெரி யார் மாவட்டத்திலே இருப்பதைப்போன்று, பெரியார் மாவட் டத்திலே, நல்லமுறையிலே நீதிமன்றமும், ஜூனியர் வக்கீல்களுக் குத் தனியாக சேம்பர்ஸ் கட்டிக் கொடுத்திருக்கிறார்கள். அதே போல, எல்லா மாவட்டங்களிலும் இளம் வழக்கறிஞர் களுக்காக தனியாக லா சேம்பர்ஸ் ஹைகோர்ட்டிலே உள்ளதைப் போலவும், பெரியார் மாவட்டத்திலே உள்ளதைப் போலவும் கட்டிக் கொடுக்க அரசு ஆவன செய்ய வேண்டுமென்று இந்த நேரத்திலே நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

அதேபோல, நீதிபதிகளை நியமிக்கின்ற அகில இந்திய, அளவிலே இந்தியன் ஜூடிஷியல் சர்வீஸ் என்று, ஐ.ஜே.எஸ்., என்ற அமைப்பை உருவாக்க பல ஆண்டுகளாகப் பேசி வருகிறார் கள். அது நடைபெறுகிறதோ இல்லையோ, நம்முடைய தமிழக அளவிலே தமிழ்நாடு ஜூடிஷியல் சர்வீஸ் என்கின்ற ஒருஅமைப்பை உருவாக்கி அதன் மூலம் நீதிபதிகளைத் தேர்ந்தெடுக்கின்ற ஒரு முறையைக் கொண்டுவர வேண்டுமென்றும் நான் இந்த நேரத் திலே தெரிவித்துக்கொண்டு, வீழ்ச்சி உறுகின்ற தமிழகத்திலே ஒரு எழுச்சி ஏற்படுத்த வேண்டும், வசையொடிந்த தேசத்திலே வண்மை ஏற்படுத்த வேண்டும்; சூழ்ச்சிதனை வஞ்சகத்தை பொறாமைதனை தொகையாய் எதிர்நிறுத்தும் தூள் தூளாக் கும் காலச் சிந்தை மறச்சிகளை உருவாக்குவதற்கு இந்தச் சட்ட மும் வழக்கறிஞர்களும் இந்த நாட்டுக்கு எப்படிச் சுதந்திரம் வாங்கிக் கொடுத்து அரும்பாடு பட்டார்களோ அதுபோல, எதிர் காலத்திலே பாடுபடுவோம் என்கின்ற கருத்தை இந்த நேரத் திலே எடுத்துக் கூறி, வாய்ப்பளித்த தலைவரவர்களுக்கும், எனது புரட்சித் தலைவி அவர்களுக்கும் நன்றி கூறி, விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம்.

பிற்பகல் 7-05

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. மு. வெங்கடராம ரெட்டி.

*Thiru M. VENKATARAMA REDDY : Honourable Speaker, before I place my views on the Demand for Courts and its administration. I may be permінted to thank our Honourable Chief Minister on behalf of me and on behalf of the people of my Constituency for having sanctioned an amount of one crore at Bargur function recently to provide drinking water to the people of Denganikottai Taluk which is in my Constituency. The Dharmapuri district is considered to be

a backward district in the entire Tamil Nadu and my Constituency, thali i.e., Denganikotai Taluk is considered to be the most backward in Dharmapuri district. The people of Thali Constituency whom I represent, are very happy and they expect much from our Honourable Chief Minister as she represents Dharmapuri district in the Ministry and leads the Ministry and the Government. It is no doubt Tamil Nadu Judiciary was known for the quick diposal of cases when compared to other South Indian States especially Karnataka and other States and the judiciary was disposing civil cases within 3 years and criminal cases within 6 months. But now the pendency is so alarming that criminal cases are not diposed of in the lower Courts within 5 years and civil cases are pending for more than 10 years, 15 years and this alarming pendency will bread corruption also. Everybody says and the proverb is well known—that justice delayed is justice denied and add, it breeds also corruption. I am afraid and my apprehension is that corruption is slowly creeping in the administration of justice.

ஒரு ஜோக்காக சொல்வார்களோ, அல்லது பழமொழியாகச் சொல்வார்களோ தெரியவில்லை. அதைச் சொல்ல வேண்டும் இங்கே. அதாவது ஒரு 'லிடிகன்ட்' 10 வருடங்களாக கோர்ட்டிலே வந்து சுற்றி, கடைசி நாள் 'ஜட்ஜ்மென்ட்' ஆன பிறகு, அந்த 'கேஸ்' ஜெயித்த பிறகு, ஒரு தூண் -pillar of the court- அங்கேபோய் தேங்காயை உடைத்து, பூஜை செய்து கொண்டிருந்தானாம்; பக்கத்திலே ஒருவன் வந்து ஏன் இதைச் செய்கிறாய் என்று கேட்டதற்கு, 10 வருடங்களாக இது ஒன்றுதான் பணம் கேட்காமல் இருக்கிறது. அதற்காகத் தான் நான் இதை பூஜை செய்துவிட்டுப் போகிறேன் என்று சொன்னான். (சிரிப்பு). சாந்தியாய், 10 வருடங்களாக அந்த ஒரு தூண்தான் பணம் கேட்கவில்லை; என்னுடைய ஆத்ம சாந்திக்காக அதை பூஜை செய்துவிட்டுப்போகிறேன் என்று சொன்னான். எனவே, அந்தமாதிரி ஒரு நிலைமை வரக்கூடாது என்பதற்காகத்தான்.

We have to tone up the administration of justice. What are the remedies or I can suggest some of them. One is setting up a Court in every Taluk. Of course, it is a policy declared in the policy note which I see here in the Preamble which is the policy of the Government which I happily welcome.

The next aspect is fillin up of vacancies as and when they ariseg immediately, because I known from Hosur where I am practising for the past 26 years, the Criminal Court was not functioning for 2 years at a stretch. So actually every case is postponed and the pendency increases. So, such instances are there.



The Third one I would like to suggest is to set up a time limit for disposal of cases and the fourth aspect is to select Judicial Officers based on merits without any stigma of political affiliation and the most important aspect to which I like to draw the attention of the Honourable Chief Minister and also the Honourable Law Minister, is that the salaries of the Judicial Officers when compared to others is very very less. The Judicial Officer in the lowest grade i.e., Magistrate or Munsif-cum-Magistrate is paid only 3,000 rupees compared to a teacher in an elementary school who passes S.S.L.C. and gets training and gets 3,000 rupees per month and compared to that work, the work of the Magistrate, Munsif is a brainy work and he has to sit tightly in the Court, record evidence, hear the arguments and also do the administrative work of the Clerks concerned in the Court. When he goes home, also in the night he has to peruse the records, evidence and then write judgements.

பிற்பகல் 7-10

So, the responsibility is too much. He works not only the allotted 8 hours but also more in the house. When the brain work involved is so much they must be well paid. If they are well paid corruption may not take place. Otherwise corruption will creep in and will continue. These aspects can be discussed with our Chief Justice of the High Court as to how to solve these problems.

Now coming to my Constituency, Denkanikottai Taluk which was bifurcated from Hosur Taluk in the year 1965 has no Court at all even till this date, and the litigant public from Border Cauvery—Cauvery river runs in my Constituency—have to travel a distance of 70 K.Ms to reach Hosur where there are two Courts—Judicial Magistrate and Judicial Munsiff Court *cum* Sub-divisional Magistrate Court. The people from Natrampalayam, Anchetty area where there is thickest forest in Tamil Nadu, have to walk a distance of about 20,30 miles—elephant ridden forest is there—to go and take a bus from Anchetty to reach Hosur. It takes 2 days for them. Return journey also takes 2 days. A litigant public has to waste four days to attend a sitting and if there are four sittings means 16 days in a month has to be wasted. We cannot expect the poor litigant public to stay in a luxurious place. Now Hosur is industrially very forward and costly town. They can not afford to waste 16 days to attend the court. When such is the condition we have represented, as a practising Advocate and President of the Bar Association of Hosur, myself, my colleagues and also the public of Denkanikottai Taluk, for the past 10 years and have been representing to the Government to establish a Court at Denkanikottai. The

[திரு. மு. வெங்கடராம ரெட்டி] [1991 செப்டம்பர் 24

High Court has also called for statistics and we have furnished the statistics and in fact 60 % of the cases are from Denkanikottai and only 40% are from Hosur, Based on the statistics the High Court has sanctioned, approved the Court and the then Chief Judicial Magistrate of Krishnagiri visited Denkanikottai Town and I also accompanied him to locate the court and we have seen two private buildings for accommodation also. But unfortunately to the people of my constituency, the D.M.K. Regime has kept the same in cold storage. So I request the Hon'ble Chief Minister and the Hon'ble Law Minister—my reliable information is that High Court has approved the Court and the matter is pending with the Finance Department—to expedite the matter and establish a Court at Denkanikottah this year itself as per the Policy of this August Assembly.

பிற்பகல் 7-15

There is another aspect I would like to place before this August Assembly. Hosur is in the Industrial Map of the world and for the labour disputes between the labour and the factory people we have to go to Coimbatore which is at a distance of 300 K.Ms. It is better to have a Labour Court. I bring to the notice of the Government to have a Labour Court at Hosur, which is fast coming up as an Industrial Town in Tamil Nadu. Recently an Act was passed amending the Hindu Succession Act of 1956 wherein equal opportunity is given to sons and daughters both in the ancestral property and in the self-earned property and this is known as Tamil Nadu Amendment Act 1 of 1990. But, unfortunately, the wife, who is called better-half, has been denied the opportunity of any share and no share is given to the wife. Such an unequal status should not be there. Therefore, I request the Hon. Law Minister to bring a suitable amendment so that the wife will also be given a share along with the other ladies. Sir, what I have said so far is about the aspects of this Demand. Because I did not get an opportunity to speak earlier, there is one more thing which is apart from the subject of Courts. It is regarding my Constituency. The late Puratchi Thalaivar M.G.R., whose name is embedded in the hearts of the poor and down-trodden classes, was kind enough to sanction two dams in my Constituency. One is known as Dhoddahalla near Anchetty and the name of another dam is Sanathkumar. Preliminary work on these dams was also carried out. Unfortunately, these schemes were kept in cold storage by the D.M.K. Government. Half of the people of my Constituency live in forest area. I, therefore, request the Hon. Chief Minister to expedite these two dams initiated by the late Dr. M.G.R. so as to perpetuate his memory. In fact, these dams may be named after him.



1991 செப்டம்பர் 24] [திரு. மு. வெங்கடராம ரெட்டி]

With these words, I thank the Hon. Speaker for giving an opportunity to speak on this occasion. I also thank the people of my Constituency whom I represent in this August Assembly.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. கே. ஆர். முருகானந்தம்

* திரு. கே. ஆர். முருகானந்தம் : மாண்புமிகு சட்டப் பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு சட்ட அமைச்சர் அவர்கள் நீதி நிர்வாகம், சிறைச்சாலைகள் என்ற வகையில் கொண்டு வந்திருக்கின்ற இந்த மானியக் கோரிக்கைகளில் என்னுடைய கருத்துக்களைத் தெரிவிக்க நீங்கள் வாய்ப்பளித்ததற்காக உங்களுக்கு நன்றி கலந்த வணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் மாவட்டத்தின் நீண்ட காலக் கோரிக்கையான சிவகெங்கையிலே மாவட்ட நீதிமன்றத்தை அமைக்க வேண்டும் என்பதைப் பொறுத்த வரையிலே நம்முடைய அரசு இன்றையதினம் அரசின் கொள்கைக் குறிப்பிலே அதை சிவகெங்கைக்கு மாற்றி உத்தரவிட்டு இருக்கிறார்கள். அதற்காக நம்முடைய இதய தெய்வம் நீதி தேவதை புரட்சித் தலைவி அவர்களுக்கும், நம்முடைய சட்ட அமைச்சர் அவர்களுக்கும் எங்களுடைய பசும்பொன் தேவர் மாவட்ட மக்களின் சார்பாகவும், அங்குள்ள வழக்கறிஞர்கள் சார்பாகவும் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். இங்கே நான் ஒருசில கருத்துக்களைச் சொல்லி விடைபெறலாம் என்று ஆசைப்படுகிறேன்.

அன்றையதினம் நம்முடைய பேரறிஞர் அண்ணா அவர்கள் 1967-லே ஆட்சி அமைத்தபோது இங்கே சென்னை மாகாணம் என்றிருந்த பெயரை தமிழ்நாடு என்று மாற்றினார்கள். அதுபோல் சென்னை உயர் நீதிமன்றம் என்றிருப்பதை—அது சென்னைக்கு மட்டும் உயர் நீதி மன்றம் இல்லை—தமிழ்நாடு உயர் நீதி மன்றம் என்று நம்முடைய இதய தெய்வம் புரட்சித் தலைவி அவர்களின் ஆட்சியிலே மாற்ற வேண்டும் என்ற என்னுடைய கருத்தை இங்கே தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

எனக்கு முன்னால் பேசியவர்கள் எல்லாம் நீதி நிர்வாகத்தைப் பொறுத்தவரையில் தமிழகத்தில், அதாவது, மாநிலத்திலும் சரி, இந்தியத் துணைக் கண்டத்திலும் சரி, அமெரிக்காவிலும் சரி, இங்கிலாந்திலும் சரி, பல்வேறு நாடுகளிலும் கூட வழக்குகள் எல்லாம் காலதாமதமாக பைசல் செய்யப்படுகின்றன என்ற கருத்தை இங்கே சொன்னார்கள். அதற்கு நம்முடைய அரசு சில துரித நடவடிக்கைகளை எடுக்கவேண்டும். காலதாமதம் இல்லாமல் விசாரிப்பதற்கு வேண்டிய நடவடிக்கைகளை

எடுத்தாகவேண்டும். அந்த அடிப்படையிலேதான் ஒரு வழக்கு, அதாவது ரூ. 100-லிருந்து ரூ. 1,000 வரை மதிப்புள்ள வழக்குகள் நீதிமன்றங்களில் தாக்கல் செய்யப்படுகிற போது பிரதிவாதி ஸ்டேட்மென்ட் போடுவது என்றால் அங்கே ஒரு 5 மாதம் அல்லது 6 மாதம் என்று எடுத்துக் கொள்கிறார்கள். அப்படி நீதிமன்றத்திலே அவர்கள் காலதாமதம் செய்கிறபோது அதற்கான காஸ்ட் விதிப்பதற்கு நீதிபதிகளுக்கு அதிகாரம் வழங்கப்பட்டிருக்கிறது. ஆனால் அவர்கள் அதைச் சரியாகப் பயன்படுத்துவதில்லை. அப்படி அந்த 'காஸ்'ட்களும் அதிகமாக விதிக்கப்படுவதில்லை. இதனால் காலதாமதம் ஆகிக்கொண்டிருக்கிறது. இதற்காகத்தான் இந்த 'சிவில் ரூல்ஸ் ஆஃப் ப்ராக்டீஸ்'' என்பதைத் திருத்தி அதாவது மகாராஷ்டிராவில் முதல் விசாரணையிலே வக்காலத்து ஒரு பிரதிவாதி போடுகிற நேரத்தில் அங்கே அந்த ஸ்டேட்மெண்டைப் போட்டு துரிதமாக வழக்கை விசாரிக்க வேண்டும் என்று அங்கே உத்தரவு போட்டிருக்கிறார்கள். அதுபோல தமிழகத்திலேயும் பல்வேறு நீதிமன்றங்களில் எல்லாம் இதுபோன்ற உத்தரவை, அதாவது முதல் விசாரணை என்று வைத்துக்கொள்வதற்கு ஒரு அளவைக் கொடுத்து அதிலேயே ஸ்டேட்மெண்ட் போட்டு அந்த விசாரணையை முடிக்கலாம் என்ற என்னுடைய கருத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்து நம்முடைய தமிழகத்தைப் பொறுத்தவரையில் வழக்குகள் ஏன் அதிகமாகக் கூடிக்கொண்டிருக்கிறது என்றால் 'கல்டிவேட்டிங் டெனன்ட்ஸ் ஆக்ட்' அதாவது நிலக் குத்தகைதாரர்களுடைய உரிமைச் சட்டங்கள தான். அந்த உரிமை சட்டங்களிலே அங்கே இருக்கின்ற தாசில்தார் அவர்கள் அந்த டெனன்ட்ஸ் உரிமைதாரர்கள் அதாவது உழுபடையாளர்கள பற்றி நிர்ணயிப்பதற்கு, உரிமை வழங்கப்பட்டிருக்கிறது.

பிற்பகல் 7.20

(மாண்புமிகு மாற்றுத் தலைவர் தலைமை.)

ஆனால் அவர்கள் உரிமையை நிர்ணயிக்க விசாரணை பண்ணுகின்ற நேரத்திலே, நிலச்சுவான்தாரர்கள் நேரடியாக சிவில் கோர்ட்டிலே அந்த நிலம் எங்களுக்குப் பாத்தியதைப் பட்டது என்று சொல்லி, அந்த உழவுதாரருடைய பாத்தியதையை மறைத்து அங்கே இன்ஜெக்ஷன் சூட் வாங்கி விடுகிறார்கள். ஆகவே இந்த கல்டிவேடிங் டெனன்ட்ஸ் ஆக்ட்-லே அங்கே தாசில்தார் இடத்திலே ஒரு வழக்கு பெண்டிங்-ஆக இருக்கிறது. இங்கே சிவில் கோர்ட்டிலே



இன்ஜெக்ஷன் சூட் பெண்ட்டிங்-ஆக இருக்கிறது. இந்த இரண்டு வழக்குகளும் முடிவதற்குள்ளே, ஒரு தாசில்தார் அது உழவுதாரருக்கு என்று முடிவு செய்து அது அப்பீல் என்று சப்-கலெக்டர், ஆர்.டி.ஓ.-க்கு செல்கின்றார்கள். அதற்கு அடுத்து டீ.ஆர்.ஓ.-க்கு செல்கிறார்கள். இப்படி தொடர்ந்து அந்த வழக்குகள் போய்க்கொண்டிருக்கின்றன. அதுபோல் இந்த வழக்குகளை எல்லாம் கல்ட்டிவேட்டிங் டெனன்ட்ஸ் ஆக்டி-லே தாசில்தாருக்குக் கொடுக்காமல் இந்த சிவில் நீதி மன்றங்களுக்கே மாவட்ட உரிமை இயல் நீதி மன்றங்களுக்கே, அவர்களே, நிர்ணயம்செய்து இவர்கள் டெனன்டஸ் தானா என்று நிர்ணயம் பண்ணுகின்ற அந்த உரிமையை நிர்ணயம் பண்ணுகின்ற, நிலை நாட்டுகின்ற அதிகாரத்தை டிஸ்ட்ரிக்ஸ் முன்சீப் கோர்ட்டுக்குக் கொடுக்கலாம். ஏனென்றால் நம்முடைய ரென்ட் கன்ட்ரோல் ஆக்ட்-படி இருக்கக்கூடிய 20 ரூபாய்க்கு மேலே மதிப்புள்ள ஒரு வாடகை சம்பந்தமான, வாடகை நிர்ணயிக்கக்கூடிய, வாடகை சம்பந்தமான பிரச்சினைகளை, கட்டடங்களை நிர்ணயிக்கக்கூடிய அந்த ரென்ட் கன்ட்ரோல், வாடகை சம்பந்தப்பட்டதை ஒரு டிஸ்ட்ரிக்ட் முன்சீப் தான், ரென்ட் கன்ட்ரோலர் ஆக்டிலே இருந்து, ரென்ட் கன்ட்ரோலராக இருந்து, அவர்கள் அந்த தீர்ப்பை வழங்குகிறார்கள். ஆனால் இந்த டெனன்சியிலே, பல லட்சக்கணக்கான சொத்துக்கள் இருக்கின்றன. 10 ஏக்கர், 20 ஏக்கர் என்று உழவர்கள் பாத்தியதை கொண்டாடுகின்ற போது ஏன் இதை டிஸ்ட்ரிக்ட் முன்சீப் கோர்ட்டிலே இதை விசாரணைக்கு எடுத்துக்கொண்டால் வழக்குகள் குறையும். கால தாமதமாவது தவிர்க்கப்படும் என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்து கடன் நிவாரணச் சட்டத்திலே பல வழக்குகள் அதிகமாகி இருக்கின்றன. ஒரு நெகோசியபில் இன்ஸ்ட்ருமெண்ட் ஆக்ட்-படி, அங்கே வழக்கு, 10 ஆயிரம், 20 ஆயிரம் ரூபாய் தரவேண்டுமென்று ஒரு வாதி வழக்கிடுகிறார். அந்த பிரதிவாதி கடன் நிவாரண சட்டத்திலே தகுதியுள்ளவர் என்று வாதிட முற்படுகிறார். ஆனால் அதை சிவில் நீதி மன்றம் அவர் கடன் நிவாரண சட்டத்திலே தகுதி பெற்றவர்தான் என்று நிர்ணயிப்பதற்கு அங்கே சட்டத்திலே சிவில் கோர்ட் ஜட்ஜுகளுக்கு, டிஸ்ட்ரிக்ட் முன்சீப்களுக்கு அங்கே கொடுக்கப்படவில்லை. அதை தாசில்தார் நிர்ணயிக்கிறார். இந்த கடன் நிவாரணச் சட்டத்திலே தகுதியுள்ளவர் என்று நிர்ணயிக்கிறார். அப்படி நிர்ணயிக்கின்ற பட்சத்திலே அந்த சர்டிபிகேட்டை வாங்கிக்கொண்டு வந்து இங்கே வழக்கு நடத்த வேண்டியிருக்கிறது. ஆகவே இதுபோன்ற கடன் நிவாரணச் சட்டங்களைக்கூட அந்த

தாசில்தார்கள் விசாரிக்காமல், நேரடியாக சிவில் கோர்ட்டுக்கே அவர்களுடைய ஆவணங்களை, கிராம அதிகாரிகளுடைய ஆவணங்களையெல்லாம் வைத்து அவர் சிறு விவசாயிதானா, கடன் நிவாரணச் சட்டத்திலே தகுதியுடையவரா என்ற பொறுப்பை மாவட்ட நீதிமன்றங்களுக்கு, மாவட்ட முன்சீப் நீதிமன்றங்களுக்குக் கொடுத்தால் வழக்குகள் குறையும்.

அடுத்து, உயர்நீதி மன்றங்களிலே வழக்குகள் அதிகமாக இருக்கின்றன என்று இங்கே சொல்கிறார்கள். அதிலே ரிட் ஜூரிஸ்டிக்ஷனிலே, 226-வது இந்திய அரசியல் சட்டப்படி, அது உயர்நீதி மன்றத்திலே தான் ரிட் பெட்டிஷன் போடலாம் என்று சொல்லப்படுகிறது. ரிட் என்பது பெரிய கேஸ் என்றெல்லாம் உயர்நீதிமன்ற வழக்கறிஞர்கள் சொல்வார்கள். அவர்கள் அபிடவிட் போட்டு, ஒரு பெட்டிஷனைப் போட்டுதான் அந்த நேட்சுரல் ஜஸ்டிஸ் வருகிறபோது, அந்த அடிப்படையிலே சில கருத்துக்களை வைத்து பேசுகிறார்கள். ஆகவே, ரிட் பெட்டிஷன்கள் அங்கே உயர் நீதி மன்றங்களிலே அதிகமாகக் குவிக்கப்படுவதற்குப் பதிலாக இந்த அரசியல் சட்ட அமைப்பு 226-வது ஆர்ட்டிக்கிளை திருத்த மாவட்ட நீதிமன்றங்களிலேயே அந்த உரிமையைக் கொடுக்கின்ற ரிட்டை, மாவட்ட நீதிமன்றங்களிலே போடலாம் என்று அந்த ஒரு கருத்தைக் கொண்டு வந்து இந்திய அரசியல் அமைப்பிலே திருத்துவதற்கு மத்திய அரசுக்குப் பரிந்துரை செய்யலாம் என்ற என்னுடைய தாழ்மையான கருத்தை இங்கே தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்து, சில வழக்குகளுக்கு அதிகம் செலவு ஆகின்றது. சாதாரண மிஸ்செல்லேனியஸ் வழக்குக் கூட அங்கே 50 ரூபாய், 100 ரூபாய் மதிப்புள்ள வாய்க்கால் தகராறு, வரப்புத் தகராறு, நடைபாதை தகராறு இதற்கெல்லாம் வழக்குகளைப் போட்டு நீதிமன்றங்களிலே வழக்குகள் அதிகமாகி விசாரணை செய்யப்படவில்லை என்ற அளவில் பணச் செலவெல்லாம் ஏழைகளுக்கு ஏற்படுகிறது. இப்படிப்பட்ட சிறு விஷயங்களை நடைபாதை, வாய்க்கால் போன்ற வழக்கு விசாரணைகளை நடத்துவதற்கு, சட்டப்பூர்வமாக நீதிமன்றங்கள் இருந்தாலும், ஆங்காங்கே, கிராமங்களிலே, கிராம நீதிமன்றங்கள் என்று அந்த காலத்திலே இருந்தது போல அமைத்து இதுபோன்ற சிறிய வழக்குகளை எல்லாம் விசாரிக்கலாம். அந்த மாதிரி கிராம நீதிமன்றங்களைக் கூட நம்முடைய நீதி தெய்வத்தினுடைய ஆட்சியிலே ஏற்படுத்தலாம் என்று இந்த நேரத்திலே சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

[illegible] அடுத்து மாவட்ட உரிமை இயல் நீதிமன்றங்களிலே, வழக்குகளை விசாரிக்கின்றபோது அங்கே இருக்கின்ற மாவட்ட உரிமை இயல் நீதிபதி, குற்றவியல் [illegible]



இவர்கள் எல்லாம் அங்கே கையால் எழுதிக்கொண்டிருக்கின்றார்கள். அவர்களே டிக்டேஷன் போல வாக்கு மூலங்களை எடுத்துக்கொண்டிருக்கிறார்கள். அவர்களுக்கு ஒரு டைப்பிஸ்ட், அல்லது ஸ்டெனோகிராபர் என்ற அடிப்படையிலே ஆங்காங்கே பதவிகளைக் கொடுத்தால், அவர்கள் வாக்குமூலங்களை விரைவாகப் பதிவு செய்வார்கள். சாட்சியங்களுடைய வாக்கு மூலங்கள் எல்லாம் பதியப் பெற்று விரைவிலே வழக்குகளை முடிப்பதற்கு, தீர்ப்புகள் வழங்கப் படுவதற்கு உறுதுணையாக அது இருக்கும். அந்த நிலையில் இந்த வழக்குகளை காலதாமதம் இன்றி விசாரித்து தீர்ப்பளிக்கலாம். தேங்கி கிடக்கின்ற வழக்குகளை விசாரணை செய்து துரிதமாக முடிக்கலாம் என்று இந்த நேரத்தில் சொல்லிக்கொள்கிறேன்.

பிற்பகல் 7-25

அடுத்து கிரிமினல் வழக்குகள் எல்லாம் பல கோர்ட்டுகளிலே இருக்கின்றன. கிரிமினல் விசாரணை ஏற்படுகிறது. குற்றம் சாட்டப்பட்டவர், அங்கே நீதிமன்றத்திற்கு கைதியாக வருகிறபோது, அந்த குற்றம் சுமத்தியவர்கள், அங்கே போலீஸ்காரர், காவல் துறையைச் சார்ந்தவர் தான் கூட வருகிறார்கள். அவர்களே இந்த சாட்சிகளைக் கொண்டு வந்து விசாரணைக்கு அனுப்புகிறார்கள். 'சம்மன்' நீதிமன்றத்திலிருந்து அந்த காவல் நிலையத்திற்கு தான் போக வேண்டியிருக்கிறது. அது எப்படி என்றால், வாதி ஒழுங்காக சாட்சிகளைக் கொண்டு வருவதில்லை. ஏன் என்றால் வேண்டுமென்றே அலைய வைக்கவேண்டும் என்று நினைக்கிறார்கள். ஆகவே, சம்மன்களை எல்லாம் சிவில் கோர்ட்டிலே இருக்கிற புராசஸ் சர்வர் மூலம் அல்லது ரெஜிஸ்டர்ட் போஸ்ட் மூலம் அனுப்பினால் சீக்கிரம் கோர்ட்டுகளுக்கு, நீதிமன்றங்களுக்கு, கிரிமினல் நீதிமன்றங்களுக்கு சாட்சிகள் எல்லாம் வர ஏதுவாகும். அந்த வகையிலே நீதிபதிகள் துரிதமாக சாட்சிகளை விசாரித்து தீர்ப்புகளை வழங்கி வழக்குகள் தேங்காத, சுமை எல்லாம் குறையக் கூடிய நிலை உருவாகும்.

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. க. அர்ச்சுனன்) : சீக்கிரம் முடியுங்கள்.

திரு. கே. ஆர். முருகானந்தம் : அடுத்து, சிலர் வழக்கறிஞர்களைப் பற்றி எலலாம் இங்கே சொன்னார்கள். சாதாரணமாக டீச்சராக இருப்பவர் 2, 3 வருடம் டீச்சராக பணியாற்றியிருந்தால் கூட பி.ஏ., எம்.ஏ., எழுத

முடியும். ஆனால் வழக்கறிஞர்களாக இருப்பவர்கள் எம்.எல். படிப்பதற்கு உயர் நீதிமன்றத்திலே, நகரங்களிலே இருப்பவர்களுக்கு தான் Part Time படித்து M.L. எழுதுவதற்கு வாய்ப்பு இருக்கிறது. ஆனால் நம்முடைய கிராமங்களிலே, தாலுக்காக்களிலே, வழக்கறிஞர்களாக இருப்பவர்கள் 5, 6 வருடங்கள் வழக்கறிஞர்களாக இருந்தாலும், கூட 'மாஸ்டர் ஆப் லா' பிரைவேட்டாக எழுதுவதற்கு வாய்ப்பு தற்போது இல்லையாதலால், அதற்கான வாய்ப்பை கொடுக்கும்படி நம்முடைய இதயதெய்வம் புரட்சித் தலைவி அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன். (மணியடிக்கப் பெற்றது) வழக்கறிஞர்கள் இறந்தால், இர்ரெஸ்பெக்டிவ் ஆப் சர்வீஸ், அவர்களுடைய சர்வீஸ் அனுபவத்தைப் பார்க்காமல் அந்த இழப்பீட்டுத் தொகையை கொடுக்க வேண்டுமென்று கேட்டு, வாய்ப்பளித்தமைக்கு நன்றி கூறி விடைபெறுகிறேன், நன்றி, வணக்கம்.

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. க. அர்ச்சுனன்) : திரு. சி. ஞானசேகரன்.

திரு. சி. ஞானசேகரன் : மாற்றுத் தலைவர் அவர்களே, நீதி நிர்வாகம், சிறைச்சாலைகள் பற்றிய மானியக் கோரிக்கைகளின் கீழ் என் கருத்துக்களை எடுத்துரைப்பதற்கு வாய்ப்பளித்தமைக்கு முதற்கண் தங்களுக்கு என் நன்றியினை உரித்தாக்குகின்றேன்.

ஏழையெளிய மக்களுக்கு எளிதிலே, விரைவிலே குறைந்த செலவிலே நீதி கிடைக்க வேண்டும் என்பது தான் நம்முடைய நீதி நிர்வாகத்தின் கொள்கை. ஆனால் நாம், நீதி எங்கே, நிர்வாகம் எங்கே என்று தேடி அலைந்து கொண்டிருக்கிறோம். நீதிபதி பதவிக்கு முதலில் வருகிற பொழுதே லஞ்சத்தை ஆயிரக்கணக்கில், இலட்சக் கணக்கிலும் அள்ளிக் கொடுத்து பதவியை எட்டிப் பிடித்தவர்களிடம் நீதி கிடைக்குமா என்று ஒரு கணம் எண்ணிப் பார்க்கிறோம். இந்திய மக்கள் நீதி கிடைக்குமா என்று ஏங்கித் தவிக்கிறார்கள். நீதிக்கும் நிதிக்கும் இடையே கடும் போர் எல்லா அத்தியாயங்களிலும் நடந்து முடிந்து, கடைசியில் நிதியே வென்றது, அநீதி இழைக்கப்பட்டது என்று தான்........

**Thiru V. Dhandayuthapani** . Point of order. Point of order.

**Thiru Sanjay Ramasamy**: Point of order

நீதித்துறையில் லஞ்சம் வாங்குகிறார்கள் என்று ஜுடிஷியரியைப் பற்றித் தவறாக........



**Thiru C. Gnanasekaran**: It is my opinion. Nobody can object it. It is my opinion. You cannot object it.

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. க. அர்ச்சுனன்) அந்த நோக்கத்தில் அவர் சொல்லவில்லையென்று சொல்கிறார். திரு. ஞானசேகரன் பேசுங்கள்.

திரு. சி. ஞானசேகரன் : மாற்றுத் தலைவர் அவர்களே, நீதிக்கும் நிதிக்கும் இடையே கடும் போர் எல்லா அத்தியாயங்களிலும் நடந்து, கடைசியிலே நிதியே வென்றது அநீதி இழைக்கப்பட்டது என்றுதான் ஏழைகளினுடைய அவலக் குரல் ஆங்காங்கே ஒலித்துக் கொண்டிருக்கிறது.

உதாரணமாக, எங்களுடைய இதய தெய்வம் ராஜீவ் காந்தி கொலை வழக்கை எடுத்துக்கொள்ளுங்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. பீட்டர் அல்போன்ஸ் இங்கே கூறுகிற போது முதல்வருடைய அஞ்சா நெஞ்சத்தை குறிப்பிடுகிற காலையிலே அவர் தன் டெத் வாரண்டிலே கையெழுத்திட்டதாக குறிப்பிட்டார்கள். மாண்புமிகு முதல்வர் அவர்கள் பாயும் புலியாக இன்று கூடு விட்டு பாயத்தான் விடுதலைப் புலிகளை வேரறுக்க அதிரடி நடவடிக்கைகளை எடுத்திருக்கிறார்கள். அது கண்டு விடுதலைப் புலிகளோ தங்களின் உயிரான மரண சாசனங்களை அவர்களாகவே எழுதிக் கொண்டு இன்று தற்கொலை செய்துகொள்கிறார்கள்.

விடுதலைப் புலிகளை தமிழகத்திலிருந்து வெளியேறி வந்துவிடுங்கள் என்று கூறி பிரபாகரன் போன்றவர்கள், ஒரு முடிவுக்கு வந்துவிட்டார்கள். வீரம் மிக்க முதல்வர், சமுதாய நீதியை தன் அதிரடி நடவடிக்கையை அதிலே கொண்டு வந்து சேர்த்திருக்கிறார்கள். அப்படிப்பட்ட, ஒரு பாயும் புலியை, அதிரடி நடவடிக்கை கொண்டு வந்து விடுதலைப் புலிகளை வேரறுக்க முன் வந்திருக்கிற மாண்புமிகு முதல்வர் அவர்களை நான் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். கொலை வழக்கு என்று நீதிமன்றத்திலே நடந்திருந்தால் நமது சாட்சிகளும், குற்றவாளிகளும் நீதிமன்றத்திற்கு வந்த பிறகு, ஆண்டுக் கணக்கிலே பொறுத்துக் கிடக்கிற அந்த நீதியை விட இந்த சமுதாய நீதி எவ்வளவோ மேல் என்கிற வகையிலே இங்கே வரலாறு படைக்கப்பட்டிருக்கிறது.

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

உயர்நீதி மன்றத்தினுடைய ஒரு பிரிவை மதுரையிலேயும், இன்னொரு பிரிவை கோவையிலேயும் வைத்து, வழக்குகள் தேங்கிக் கிடைப்பதற்கு உடனடியாக அரசு ஒரு முடிவு ஏற்படுத்த வேண்டுமென்று, நான் இங்கே சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன். அதைப்போல உச்ச நீதிமன்றத்தினுடைய ஒரு பிரிவை சென்னையிலே கொண்டு வந்து அமைக்க வேண்டுமென்று பலகாலமாக நம்முடைய தமிழ் நாட்டு மக்கள் கோரி வருகிறார்கள். சென்னை மாநகரத்தில் நிறைய மக்கள் தொகை இருக்கிற காரணத்தால், இன்று இடம் போதாத காரணத்தால், பக்கத்திலேயுள்ள வேலூரிலே உச்ச நீதிமன்றத்தினுடைய ஒரு பிரிவை அமைக்க வேண்டுமென்ற கோரிக்கையை நான் வைக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். ஆண்டுக் கணக்கிலே ரிட் வழக்குகள் இன்று தேங்கிக் கிடக்கின்றன. மாண்புமிகு, பேரவைத் தலைவர் அவர்களே...... (மணி அடிக்கப் பெற்றது).

பிற்பகல் 7-30.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** திரு. ம. தனபால்.

**திரு. ம. தனபால் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஞானசேகரன் அவர்கள் பேசும்போது நீதிக்கும், நிதிக்கும் ஏற்பட்ட ஒரு போட்டியில் நிதி வென்றது என்று நீதியை பங்கப்படுத்தும் வகையிலே இந்த அவையிலே பேசியிருக்கிறார்கள். அதை அவைக் குறிப்பிலிருந்து எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** இல்லை, இல்லை. அது சாதாரண வாசகம்தான். திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைக்கு ரிட் ஜுரிஸ்டிக்ஷன் என்பது உயர்நீதி மன்றத்திலேதான் ஆர்ட்டிக்கிள் 226-படி இருக்கிறதென்று மாண்புமிகு உறுப்பினர் திரு. முருகானந்தம் அவர்கள் தெரிவித்தார்கள். இன்று அரசியல் சாசனத்திலே ஆர்ட்டிகிள 226-படி ஜில்லா கோர்ட்டுகளிலே கூட ரிட் ஜுரிக்ஸ்டிக்ஷனை ஏற்படுத்திக் கொடுக்க முடியும். அதற்கான முயற்சிகளை அரசு எடுத்து, மாவட்ட நீதி மன்றங்களுக்கு ரிட் ஜுரிஸ்டிக்ஷன் பிரித்துக் கொடுக்க வேண்டும். அதற்கான ஏற்பாடுகளை அரசு செய்ய வேண்டுமென்று நான் மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் மூலமாகக் கேட்டுக்கொள்கிறேன்.



நீதிபதிகளுடைய சம்பளம் இன்று மற்ற துறைகளை விட குறைவாக இருக்கிறது. (மணி அடிக்கப்பெற்றது).

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** திரு. ஓ. எஸ். அமர்நாத்.

***திரு. ஓ. எஸ். அமர்நாத் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆர்ட்டிக்கிள் 226-படி. ரிட் ஜுரிஸ்டிக்ஷனை பிரிக்க முடியாது என்று சொல்லிக்கொண்டு அவர் சொன்னதை அவைக் குறிப்பிலிருந்து நீக்கும்படி கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** இல்லை. இல்லை. எல்லாவற்றையும் நீக்க முடியாது. உங்கள் கருத்தைச் சொல்வது சரி. அப்படிப் பிரிக்க முடியாதென்று சொல்லுகிறீர்கள்.

***திரு. டி. எம். ரங்கராஜன் :** பேரவைத் தலைவர் அவர்களே, on a point of order. In Article 226 of the Constitution, it has been clearly stated, "Notwithstanding anything contained in Article 32, every High Court shall have the power" என்று இருக்கிறது. ஹைக்கோர்ட்டுக்கு மாத்திரம் தான் ரிட் ஜுரிஸ்டிக்ஷன் என்டர்டெயின் செய்யும் அதிகாரம், பவர் இருக்கிறது அதுபோல மற்ற கோர்ட்டுகள் செய்யவேண்டுமென்றால், கான்ஸ்டிடியூஷன் அமென்ட்மென்ட் மிகவும் முக்கியம். எனவே கான்ஸ்டிடியூஷன் அமென்ட்மென்ட் கொண்டு வராமல் இதைச்செய்ய முடியாது என்பதைத் தான் தாழ்மையுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** கான்ஸ்டிடியூஷன் அமென்ட்மென்ட் செய்ய வேண்டுமென்றால் அதை நாடாளுமன்றம்தான் செய்ய வேண்டும். மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. சு. முத்துசாமி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்று சட்டமன்றம் ஒரு நீதிமன்றம் போல் காட்சியளிப்பது மகிழ்ச்சியாக இருக்கிறது. ஆனால் நேரம் ஆகிக்கொண்டு போகிறது. விரைவாக முடித்தால் நன்றாக இருக்கும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** நல்ல வக்கீல் போல் பேசி முடிக்கவும்.

திரு. சி. ஞானசேகரன் : ஆர்ட்டிக்கிள் 32 படியும், மாண்புமிகு உறுப்பினர் ரங்கராஜன் அவர்கள் குறிப்பிட் டார்கள். அரசியல் சாசனத்தில் நான் பெரிய வல்லுனர் களைக் கேட்டிருக்கிறேன். ஆர்ட்டிக்கிள் 226 படியும் 32 படியும் மாவட்ட நீதி மன்றங்களுக்கு ரிட் ஜூரிஸ்டிக்ஷன் கொடுக்கலாமென்ற நியதி இருக்கிறதென்று குறிப்பிடு கிறார்கள். அப்படி இல்லையென்றால் பாராளுமன்றத்தில் அமென்ட்மென்ட் கொண்டு வந்து, மாவட்ட நீதி மன்றங் களுக்கு ரிட் ஜூரிஸ்டிக்ஷன் கொண்டுவர பேரவைத் தலைவர் அவர்கள் ஏற்பாடு செய்து கொடுக்கும்படி நான் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, இங்கு கொள்கை அளவிலே சென்னை உயர் நீதி மன்றத்திலே 32 நீதிபதிகளை நியமிக்க வேண்டுமென்று ஏற்பாடு செய்திருக்கிறார்கள். இன்று நிறைய வழக்குகள் தேங்கிக் கிடக்கிற காரணத்தாலே, உடனடியாக 32 நீதி பதிகளை சென்னை உயர்நீதி மன்றத்திலே நியமித்து, வழக்குகளை டிஸ்போஸ் செய்ய மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் சட்ட அமைச்சர் அவர்கள் மூலமாக நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

நீதிபதிகள் சம்பளம் பற்றி எனக்கு முன்னால் பேசிய மாண்புமிகு உறுப்பினர்கள் குறிப்பிட்டார்கள். ஆசிரியர்கள் வாங்கும் சம்பளத்தைவிட கம்மியாக வாங்கும் நீதிபதிகள் இன்று சைக்கிள் ரிக்ஷாவிலும், சைக்கிளிலும் சென்று கொண்டிருக்கும் அவலக் காட்சியைப் பார்க்கும்போது நம் உள்ளம் வேதனை அடைகிறது. அதைபோல அரசு வழக்குரைஞருடைய சம்பளமும் குறைவாக இருக்கிறது.

திரு. சி. இராமசாமி: சைக்கிள் ரிக்ஷாவில் எங்கே போகிறார்கள் ?

திரு. சி. ஞானசேகரன்: என் ஊரில் போகிறார்கள். நடந்துகூட போகிறார்கள். எங்கள் ஊரில் உள்ள நிகழ்ச் சியைச் சொல்லுகிறேன். கோர்ட்டுகளிலே பணியாற்றிக் கொண்டிருக்கிற எம்.சி.-க்கள் டி.வி.எஸ். 50-லும், மற்ற வற்றிலும் போய்க் கொண்டிருக்கிறார்கள். நீதிபதிகள் சைக்கிள் ரிக்ஷாக்களிலும், சைக்கிளிலும் போகக்கூடிய காட்சியை, இன்று வந்தால்கூட நிரூபிக்கத் தயாராக இருக்கிறேன். (குறுக்கீடு.)



**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** அவர்கள் அனுமதித் தால் தான் நீங்கள் பேசலாம். உட்காருங்கள். அவர் அனு மதிக்காததால் யாரும் கிளாரிபிகேஷனுக்காக எழுந்திருக்க வேண்டாம். திரு. ஞானசேகரன்.

பிற்பகல் 7.35

திரு. சி. ஞானசேகரன் : நீதிபதிகளுடைய சம்பளத்தையும் அரசு வழக்கறிஞர்களின் சம்பளத்தையும் உடனடியாக அரசு ஏற்றிக் கொடுக்க ஆவன செய்ய வேண்டும். வேலூர் நகரில் புரட்சித் தலைவர் அவர்கள் வாங்கிக் கொடுத்த 10 ஏக்கர் 22 சென்ட் நிலத்தில் உடனடியாக நீதிமன்றத்தைக் கட்டிக்கொடுத்து, அங்கே பணிபுரிகின்ற வழக்கறிஞர்கள்மீது சுண்ணாம்புத் தூள் விழாமல் பாதுகாக்க உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும். ஒரு ஏக்கர் 22 சென்ட் குளம் புறம்போக்கு நிலத்தை இதுவரையில் கொடுக்காமல் இருந்த நில கமிஷனரைக் கொடுக்க வைத்திருக்கிற மாண்புமிகு சட்ட அமைச்சருக்கு முதற்கண் எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இங்கே நீதித்துறைக்கும், நிர்வாகத் துறைக்கும் இடையே கம்யூனிகேஷன் கேப் இருக்கிறது. அதனால் டைப் டிசைன் வரைவதற்காக எல்லா மாவட்ட நீதிமன்றங்களின் படங் களையும் வரைவதற்காக, உயர் நீதிமன்றத்திலே 3 ஆண்டுக் காலமாக அந்த மேட்டர் பென்டிங் ஆக இருக்கிறது. அது வேதனை தருவதாக இருக்கிறது. உடனடியாக உயர்நீதி மன்றத்திலிருந்து இந்த மாடல் ஸ்டாண்ட் டைப் டிசைன் கட்டிடங்களை உடனே பெற்று நீதிமன்றத்தை வேலூரில் கட்டிக் கொடுக்க வேண்டுமென்று மாண்புமிகு சட்ட அமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன். தமிழ் நாடு முழுவதும் 10 செஷன்ஸ் ஜட்ஜ் பதவிகள் காலியாக இருப்பதை உடனடியாக நிரப்ப நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். எல்லா மாவட்டத் திற்கும் உடனடியாக ஒரு லேபர் கோர்ட் வீதம் தொடங்க வேண்டும். திருச்சி, சேலம், வேலூர் போன்ற இடங்களில் துவங்க இருக்கிற தொழிலாளர் நல கோர்ட்டை இந்த ஆண்டே துவங்க சட்ட அமைச்சர் ஏற்பாடு செய்யவேண்டு மென்று அன்போடு கேட்டுக் கொள்கிறேன். குடும்ப கோர்ட்டில் இன்று வழக்கறிஞர்கள் ஆஜராவதற்கு வழி யில்லை. அதனாலே பெண்கள் தங்கள் வழக்குகளை எடுத்து வைப்பதற்கு முடியவில்லை. ஆகவே இந்த குடும்ப கோர்ட்டுகளில் வழக்கறிஞர்கள் ஆஜராவதற்கு அரசு ஆவன செய்யவேண்டுமென்ற கோரிக்கையை வைக்கக் கடமைப் பட்டிருக்கிறேன். தீண்டாமை ஒழிப்பு நீதிமன்றங்களை,

மாவட்டத்திற்கு ஒன்று என்று அமைக்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அப்போதுதான் இந்த தீண்டாமை ஒழிப்பின் கீழ் வருகிற வழக்குகளை உடனடியாக நீதி மன்றங்கள் முடிக்க முடியும். வேலூரை எடுத்துக் கொண்டால் அது சந்தனக் கட்டைகள் ஏராளமாக இருக்கின்ற மாவட்டம். அந்த இடத்திலே வன சம்பந்தமான குற்றங்களை விசாரிக்க உடனடியாக ஸ்பெஷல் கோர்ட்டை நிறுவ வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். போலீசார் சாட்சிகளை நீதிமன்றத்திற்கு உரிய நேரத்தில் கொண்டு வந்து ஆஜர் படுத்தாத காரணத்தாலும், புலன் விசாரணை செய்கிற அதிகாரிகள் மாற்றப்படுகின்ற காரணத்தாலும், இந்த நீதிமன்றங்களிலே ஆண்டுக்கணக்கில் வழக்குகள் தேங்கிக் கிடக்கின்றன. அந்த நிலையை மாற்றுவதற்காக மாண்புமிகு முதல்வர் அவர்களும், மாண்புமிகு சட்ட அமைச்சர் அவர்களும் ஆந்திராவில் இருப்பதைப் போல ஒவ்வொரு காவல் நிலையத்திற்கும் பிராசிகியூட் இன்ஸ்பெக்டர்கள் என்று வழக்கறிஞர் படிப்பு படித்தவர்களை நியமித்தால் சட்டப் பிரிவுகள் தெரியாமல் இருக்கிற காவலர்களுக்கு உதவியாக இருக்கும். அதனால் பல வழக்குகள் உரிய நேரத்தில் உரிய செக்ஷன்படி போடப்பட்டு, நீதி கிடைப்பதற்கு வழியாக அமையும். ஆகவே ஒவ்வொரு காவல் நிலையத்திலும் பிராசிகியூட் இன்ஸ்பெக்டர்களை நியமிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்

ஸ்டேட் பிரீப், அமெக்குஸ் கியூரி போன்ற வழக்குகளை நடத்துவதற்கு தமிழக அரசு இன்றைக்கு ரூ. 35, ரூ. 40, ரூ. 50 என்று கொடுக்கிறார்கள். கொலை வழக்குகளை நடத்துகிற வழக்கறிஞருக்கு கிடைப்பது ரூ. 35 தான். அதனால்தான் திறமை மிக்க வழக்கறிஞர்கள் கேசை நடத்த முடியாமல் இருக்கிறார்கள். உடனே ஸ்டேட் பிரிவுக்கும் அமெக்குஸ் கியூரிக்கும் கொடுக்கிற பணத்தை ஏற்றிக் கொடுக்கும்படி மாண்புமிகு சட்ட அமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன். பப்ளிக் பிராசிகியூட்டரும் ஜி.பி.யும் புதிய அரசு அமைகிறபோது உடனடியாக வேறு நபர்களை நியமனம் செய்தாகவேண்டுமென்ற நிலையை மாண்புமிகு முதல்வர் அவர்கள் எடுத்தாக வேண்டும். கடந்த காலத்தில் இருந்த பி.பி யும், ஜி.பி.யும் இன்னமும் தொடர்ந்து இருக்கிறார்கள். திறமை மிக்க வழக்கறிஞர்களை உடனடியாக அந்தப் பதவிகளில் நியமிக்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

தமிழகத்தில் பெண்களை ஆபாசமாக சித்தரிப்பதைத் தடுப்பதற்காக சுவர்களில் ஆபாச சுவரொட்டி தடுப்புச் சட்டம் ஒன்று 1986-ஆம் ஆண்டு கொண்டு வரப்பட்டாலும் அது இன்னமும் உறங்கிக் கொண்டேயிருக்கிறது ஆபாச



போஸ்டர்கள் தமிழகத்திலே அதிகமாக இருக்கிறது. பெண்களின் அழகை சுவர்களில் காணமுடியாத அளவுக்கு உள்ள விளம்பரங்களைத் தடுத்தாகவேண்டும். ஆகவே ஆபாச காட்சிகளை சுவர்கள் மூலமாகவும், வால் போஸ்டர்கள் மூலமாகவும் வரவொட்டாமல் தடுக்க சட்ட அமைச்சர் அவர்கள் உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

பிற்பகல் 7-40

சிறைச்சாலை என்றாலே ஆட்டோ சங்கர்தான் நம்முடைய ஞாபகத்திற்கு வருகிறது. ஆட்டோ சங்கர் எப்படி தப்பினான்? உயர் போலீஸ் அதிகாரிகளும், சில அரசியல்வாதிகளும், சிறைத் துறை அதிகாரிகளும் அதற்கு உடந்தையாக இருந்தார்கள். அதனாலேதான், தப்பித்தான் என்று கூறுகிறார்கள். அதைப்பற்றி பல பத்திரிகைகளில் செய்திகள் வெளி வந்தன. ஆனால் இதுவரை அது பற்றி விசாரித்த இஸ்மாயில் கமிஷன் அறிக்கை வெளியே வராமல் இருக்கிறது மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அந்த அறிக்கையை இந்த அவையின் முன்னால் வைப்பதாக காலையிலே குறிப்பிட்டார்கள். அதற்கு முதலமைச்சர் அவர்களுக்கு முதற்கண் என் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன் ஆட்டோ சங்கர் வழக்கில், அதன் பின்னணியில் இருக்கக் கூடிய எப்படிப்பட்ட தலைவர்களாக இருந்தாலும், எப்படிப்பட்ட போலீஸ் அதிகாரிகளாக இருந்தாலும் அவர்களையெல்லாம் உடனடியாக கிரிமினல் புராசிகியூஷன் செய்ய வேண்டும் என்று இந்த அவையின் மூலமாகக் கேட்டுக் கொள்கிறேன்.

சிறையிலே இன்று ஊழல் தலைவிரித்தாடிக் கொண்டிருக்கிறது. ஆண் சிறையிலே பெண்களைத் தவிர, மது, மட்டன், கஞ்சா போன்ற பொருள்களைக் காசு கொடுத்து வாங்கலாம் என்ற நிலை இருக்கிறது. அதற்குக் காரணம், நேர்மையற்ற சிறைத்துறை அதிகாரிகள்தான். விதிகள் காற்றில் பறக்கின்றன. அதிகாரிகள் ஆட்சி செய்கின்ற இந்த நிலை தவிர்க்கப்பட வேண்டும். உடனடியாக சிறையிலே இருக்கக் கூடிய நிர்வாகக் கோளாறுகளை நிவர்த்தி செய்து அந்த இடத்திலே விதிப்படி நடக்க மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

சிறைவாசிகளிடம் இரண்டு ரூபாய் கொடுத்து நாள் தோறும் வேலை வாங்கப்படுகிறது. இன்று வேறு எங்கு இல்லாதபடி லேபர், ஜெயிலில்தான் சீப்பாக இருக்கிறது சிறைச்சாலைகளில் பல தொழில்கள் நடக்கின்றன. மத்திய

சிறைச்சாலையில் மற்றும் உள்ள சிறைகளிலே தயாரிக்கப் படும் பொருள்கள் அரசாங்க அலுவலகங்களுக்கு மட்டும்தான் விற்கப்படுகின்றன. எந்த அரசுத் துறையும் சிறைச்சாலைக்கு பணத்தைச் செலுத்தியதாக வரலாறு கிடையாது. பேப்பர் அட்ஜெஸ்ட்மெண்ட் தான் செய்கிறார்கள் என்று சொல்லு கிறார்கள். ஜெயிலுக்கு மற்றத் துறைகள கொடுக்க வேண்டிய பணத்தை 'ரைட்-ஆப்' செய்கின்ற நிலை இருக்கிறது. ஜெயில் துறை பட்ஜெட்டில் ஒதுக்கப்படும் பணத்திலேயிருந்துதான் இந்தத் தொழில்கள் நடத்தப் படுகின்றன. ஆகவே ஜெயிலுக்கு வருமானம் இல்லை. இதைத் தவிர்க்கும் பொருட்டு அரசு உடனடியாக தொழில் நிறுவனத்தை ஏற்படுத்தி ஜெயில் துறைக்கும், அங்கு உழைக்கும் சிறைவாசிகளுக்கும் வருவாயை ஈட்டித் தர வேண்டும் என்று மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் அவர்களை நான் கேட்டுக் கொள்கிறேன்.

விளவன்கோடு தாலுக்காவில், குழித்துறையில் சப்- ஜெயில் இல்லை. அங்கே வருவாய்த் துறையினர் நிலத்தை வைத்துக் கொண்டு சிறைத் துறைக்கு அந்த நிலத்தைக் கொடுக்க மறுக்கிறார்கள் ஆகவே, அந்த நிலத்தை உடனடியாக சப்-ஜெயிலுக்குக் கொடுக்க மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுத்து சப்-ஜெயிலைக் கொண்டு வர வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன் இந்த இனிய வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுத்த மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கு நன்றி சொல்லி விடைபெறுகிறேன். வணக்கம். நன்றி- ஜெய்ஹிந்த்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு சட்ட அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்று நம்முடைய இனிய மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி அவர்கள் ஆட்சிப் பொறுப்பேற்ற பிறகு மூன்று மாதங்கள் கடந்து, நான்கா வது மாதத்தில் இந்த நீதித் துறை, சிறைத் துறை ஆகிய துறைகளினுடைய மானியத்தை மிக விரிவாக இங்கே விவாதித்துக் கொண்டிருக்கிறோம். ஒரு 90 நாட்களை, அவர்கள் புயல் வேகத்திலே அரசியல் நடத்தி அற்புதமான சாதனைகளைச் சாதித்திருக்கிறார்கள். நம்முடைய பாரதத் தில் ஒரு பழமொழி உண்டு. கர்ணன் பிறக்கிறபோதே, குண்டலத்தோடு பிறந்தான் என்பதைப் போல மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்கள் ஆட்சியை எடுக்கிறபோதே ஒரு அராஜகத்தை வீழ்த்திவிட்டு, இன்றைக்கு வன்முறையைக்



கட்டுப்படுத்துகிற அந்த திருப்பணியில் ஈடுபட்டிருக் கிறார்கள். அதிலே வெற்றியும் பெற்றிருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி). First hundred days என்று சொல்லுவார்கள். 3 மாதங்கள் முடிந்து இன்றைக்கு ஒரு புது யுகமாக இருக்கிறது.

பிற்பகல் 7.45

நேற்று எனக்கு இலண்டன் மாநகரிலேயிருந்து ஒரு கடிதம் வந்தது. அங்கே "இந்தியா அப்ராட்" என்ற ஒரு பத்திரிச்கை வருகிறது. அந்தப் பத்திரிகையில் நம்மு டைய மாண்புமிகு புரட்சித் தலைவி முதல்வர் அவர்களைப் பற்றி ஒரு நீண்ட நெடிய ஆழமான கட்டுரை வெளி வந்திருக்கிறது என்ற தகவலை எனக்குத் தெரிவித் திருக்கிறார்கள். The Chief Minister of Tamil Nadu Jayalalitha makes an impressive start" நல்ல தொடக்கம்" என்று லண்டன் மாநகரத்திலே இருந்து வருகிற "இந்தியா அப்ராட்" என்ற பத்திரிக்கைகள் எல்லாம் புகழ்கின்ற வகையில் நம் முடைய புரட்சித் தலைவியின் ஆட்சியின் தொடக்கம், நல்ல தொடக்கம் என்று எழுதியிருக்கிறார்கள். இன்று, காலை போலீஸ் மானியத்தில் அவர்கள் மிகத் தெளிவாகச் சொன்னது போல எல்.டி.டி.இ. என்ற menace ஒரு தீயசக்தியை அடக்கி கட்டுப்படுத்தி இன்றைக்கு தமிழகத்திலே ஒரு அமைதியை உண்டாக்கி இருக்கிறார்கள். அதுபோல அவர்கள் இந்த 3 மாத காலத்தில் கவர்ன ருடைய உரையின் மீது நடைபெற்ற விவாதம், பிறகு பட்ஜெட் விவாதம், இதற்கு மத்தியிலே பெரியாருடைய பிறந்ததினம், அண்ணாவினுடைய பிறந்ததினம் என இப்படி பரபரப்பான நாட்கள் இந்த 3 மாதங்கள். இன் றைக்கு ஒவ்வொரு அமைச்சரும் கடந்த 10 நாட்களாக புயல் வேகத்தில், போர்க்காலம் போல, காலை மாலை, 30 ஆம் தேதிக்குள்ளாக இதை முடிக்க வேண்டுமென்ற கட்டாயம் காரணமாக இன்றைக்கு தங்களுடைய மானியக் கோரிக்கையின் மீது மாண்புமிகு உறுப்பினர்களுடைய ஒப்பு தலைப் பெற்று இருக்கிறார்கள். அந்த வகையிலே தான் இன்றைக்கு நீதித் துறை, சிறைத் துறை இரண்டும் மிகமிக முக்கியமான துறைகள. நீதி தான் ஒரு ஆட்சியினுடைய அச்சாணியாகத் திகழ வேண்டும். அதனைக் காக்கின்ற பொறுப்பை மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி அவர்கள் எனக்கு நல்கி இருக்கிறார்கள். அதைப்போலவே குற்றவாளிகள் தப்பித்துக் கொள்ளக் கூடாது; அவர்களைக் காக்க வேண்டும் என்பதற்காகச் சிறைச்சாலையும், அந்த சிறைச்சாலையிலே குற்றவாளியாகச் சென்றவர்கள் திரும்பி வருகிறபொழுது நல்ல மனிதர்களாக வர வேண்டும் என்ற நோக்கத்தோடு இன்றைக்கு புதிய அணுகுமுறையோடு சிறைத் துறைப் பொறுப்பையும் என்னிடத்திலே

அளித்து இருக்கிறார்கள். அதற்காக மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி அவர்களுக்கு என்னுடைய நன்றியை அவர் இருக்கிற திசை நோக்கித் தெரிவித்துக்கொள்கிறேன்.

இங்கே ஏறத்தாழ 11 மாண்புமிகு உறுப்பினர்கள், ஆழமாக விவரமாக நல்ல கருத்துக்களைச் சொல்லி இருக்கிறார்கள். அதுபோல வெட்டுத் தீர்மானங்கள் வாயிலாக பல உணர்வுகளை வெளிப்படுத்தி இருக்கிறார்கள். அதுபோல நான் இன்றைக்கு 'பாலிசி நோட்'-டினுடைய, வழியாக மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி அரசினுடைய, நீதித்துறையினுடைய அம்சங்கள் என்ன, சிறைத் துறையினுடைய, நிர்வாகத்தினுடைய அம்சங்கள் என்ன என்பதையும் கவனத்துக்குக் கொண்டு வந்து இருக்கிறேன். குறிப்பாக அந்த வெட்டுப் பிரேரணையின் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர்கள் 8 கருத்துக்களை நல்கி இருக்கிறார்கள். ஒன்று பல இடங்களுக்கு நீதிமன்றங்கள் வேண்டுமென்று பரவலாகக் கேட்டு இருக்கிறார்கள். இரண்டாவது, பல ஆண்டுகளாகத் தேங்கிக் கிடக்கும் வழக்குகள் 'டிஸ்போசல் ஆஃப் பெண்டிங் கேசஸ்' விரைந்து முடிக்கப்பட வேண்டுமென்று கேட்டு இருக்கிறார்கள். மூன்றாவது, நீதிமன்றங்களில் காலியாக உள்ள இடங்களை நிரப்ப வேண்டுமென்று வலியுறுத்தி இருக்கிறார்கள். நாலாவது, நீதிமன்றங்களில் வசதிகள் வழக்கறிஞர்களுக்கும் வேண்டும்; பொதுமக்களுக்கும் வேண்டும், நீதிபதிகளுக்கும் வேண்டும் என்று விவரமாக மாண்புமிகு உறுப்பினர்கள் தெரிவித்து இருக்கிறார்கள்.

அதுபோல கள்ளச் சாராய குற்றவாளிகளுக்குக் கடும் தண்டனை வழங்க வேண்டும் என்று வெட்டுத் தீர்மானத்தின் மூலம் தகவலை அளித்து இருக்கிறார்கள். அதுபோல விபச்சார சட்டத்தில் இன்றைக்கு பெண்ணுக்கு மட்டும் தான் தண்டனை அளிக்கப்படுகிறது.; இது பாரபட்சம். எனவே அந்த விபச்சாரக் குற்றத்திற்கு ஆணுக்கும் தண்டனை கொடுக்க வேண்டும் என்றும் அவர்கள் இன்றைக்கு ஆலோசனை சொல்லி இருக்கிறார்கள். அதுபோல போற்றுகின்ற தமிழ் இன்றைக்கு உயர்நீதிமன்றத்திலேயும் இடம் பெற வேண்டும்; தமிழ் அறிந்தவர்கள் தான் உயர்நீதிமன்ற நீதிபதிகளாக நியமிக்கப்பட வேண்டும் என்றும் வற்புறுத்தி இருக்கிறார்கள். இறுதியாக 'லா ஆபீசர்ஸ் தி.மு.க. ஆட்சி காலத்தில் ஏறத்தாழ ஒரு 500 லா ஆபீசர்ஸ்' எங்கும் உயர்நீதிமன்றத்திலே இருந்து டிஸ்ட்ரிக்ட் கோர்ட்டிலே இருந்து சபார்டினேட் கோர்ட் வரையிலே, டிஸ்ட்ரிக்ட் முன்சிப் கோர்ட், மாஜிஸ்ட்ரேட் கோர்ட் என்று பரவலாக, அதுபோல ட்ரிப்பியூனல்களில்,



ஸ்டேட் அட்மினிஸ்ட்ரேடிவ் டிரிப்பியூனல், லேண்ட் டிரிப்பியூனல், லேபர் டிரிபியூனல், இப்படி பல அமைப்புகளில் இன்றைக்கு பரவி இருக்கிற அமைப்புகளிலே தி.மு.க. போட்ட கட்சிக்காரர்களே இருக்கிறார்கள். அவர்களை அப்புறப்படுத்த வேண்டும் என்றும் தங்களுடைய ஆழ்ந்த உணர்வுகளைத் தெரிவித்து இருக்கிறார்கள். ஆக 8 விவரங்களை வெட்டுத் தீர்மானங்கள் மூலமாக சொல்லி இருக்கிறார்கள். அதுபோல 11 மாண்புமிகு உறுப்பினர்கள் இங்கே நல்ல கருத்துக்களை எல்லாம் நல்கி இருக்கிறார்கள்.

முதலிலே நான ஒரு விவரத்தை இங்கே தெரிவிப்பது கடப்பாடு என்று கருதுகிறேன். குறிப்பாக மாண்புமிகு உறுப்பினர்கள் பேசிய எல்லாக் கருத்துகளிலும் ஒரு, இழையோட்டத்தை, 'பென்டன்ஸி ஆஃப் கேசஸ் இன் கோர்ட்ஸ்' பார்க்கிறேன். இன்றைக்கு நீதிமன்றங்களில் ஏராளமான வழக்குகள் தேங்கி இருக்கின்றன. அதற்கு அரசு என்ன செய்யப் போகிறது, உயர் நீதிமன்றம் என்ன செய்யப் போகிறது, பொதுமக்களுக்கு என்ன பதில் என்று ஆர்வம் சொட்டச் சொட்ட இங்கே விவரத்தைச் சொன்னார்கள.

பிற்பகல் 7.50

தமிழகத்தைப் பொறுத்தவரையில் 1988-வது ஆண்டு, 1989-வது ஆண்டு, 1990-ஆவது ஆண்டு— இந்த மூன்று, ஆண்டுகளில் தேங்கிய வழக்குகளின் எண்ணிக்கை, 1988-ல் 10 இலட்சத்து 36 ஆயிரத்து 92 வழக்குகள், இன்றைக்கு சிவில் மற்றும் கிரிமினல், இந்த இரண்டு துறையிலே தேங்கி இருக்கின்றன. அடுத்த 1989-வது ஆண்டில 10 இலட்சத்து 91 ஆயிரத்து 562 வழக்குகள். அதுபோல சென்ற ஆண்டு 1990-ல் 10 இலட்சத்து 87 ஆயிரத்து 530. ஆக ஏறத்தாழ 11 இலட்சம் வழக்குகள் பைசல் ஆகாமல் நிலுவையில் இருக்கின்றன. இதற்கு மாற்றம் என்ன? இந்த அரியர்சை எப்படிப் போக்குவது என்பது தான் இன்றைக்கு உறுப்பினர்களுடைய ஆதங்கமும், அதைப்போல எங்களைப் போன்றவர்களுடைய ஆதங்கமும் ஆகும். இதுகுறித்து உயர்நீதிமன்றத்தின் மாண்புமிகு தலைமை நீதிபதி அவர்களிடத்தில் மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி அவர்களின் கட்டளையின்படி கலந்து பேசி இருக்கிறேன். அவர்களும் இதை துரிதப்படுத்தி எல்லா நடவடிக்கைகளும் நீதிமன்றங்கள் வாயிலாக செய்வதாக உறுதி அளித்து இருக்கிறார்கள். அதுமட்டுமல்லாமல் இன்றைக்கு நீதிமன்றம் ஒத்துழைத்தால் மட்டும் போதாது, வழக்கறிஞர்களும் ஒத்துழைக்க வேண்டும். ஏனென்றால் வழக்கறிஞர்கள் ஒரு வழக்கு என்று வந்தால் பல வாய்தாக்களை வாங்கி

விடுகிறார்கள். ஆகவே, நீதிபதிக்கு மட்டும் பொறுப்பு அல்ல, அரசாங்கத்துக்கு மட்டும் அல்ல. வழக்கறிஞர்களுக்கும் அதிலே பொறுப்பு இருக்கிறது என்பதை இந்த நேரத்தில் சொல்லிக்கொள்ள கடப்பாடு உடையவனாக இருக்கிறேன். ஆகவே, வழக்கறிஞர்கள், அதே நேரத்தில நீதிபதிகள், அரசாங்கமும், எல்லோருக்கும் பொறுக்கு உள்ளது.

அதைப்போல காலியாக இருக்கிற நீதிபதிகள் இடங்களைப் பற்றி எல்லாம் பரவலாகச் சொன்னார்கள். இன்றைக்கு முன்சீப் பதவி காலியாக இருக்கிறது, செஷன்ஸ் கோர்ட்டில காலியாக இருக்கிறது என்றெல்லாம் சொன்னார்கள். எனக்குத் தெரிந்த தகவலின்படி இன்றைக்கு மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்கள் வந்த பிறகு காலியாக இருக்கிற இடங்கள் எல்லாம் நிரப்பப்பட்டிருக்கின்றன என்பதைத் தகவலுக்காகச் சொல்கிறேன். ஆங்காங்கு ஏதாவது விடுப்பட்டிருந்தால் என்னுடைய கவனத்திற்குக் கொண்டு வாருங்கள். விரைவில் அதையும் நிரப்புவதற்கு மாண்புமிகு முதலவர் புரட்சித் தலைவி அவர்களுடைய ஒப்புதலோடு அந்தக் காரியத்தைச் செய்வோம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

குறிப்பாக, உயர்நீதிமன்றத்தில் இன்றைக்கு 32 ஸ்ட்ரெங்த், கெபாசிட்டி இருக்கிறது. ஏற்கெனவே 26,6 என்று அனுமதித்து இருக்கிறார்கள. அண்மையில் மாண்புமிகு இராமலிங்கம் அவர்கள் ரிடையர் ஆகிவிட்டார்கள். எனவே, 25. ஆகவே 7 இடங்கள் இருக்கின்றன. அந்த இடத்தை யும் விரைவில் நிரப்ப அரசாங்கமும் தன்னுடைய பட்டி யலைக் கொடுக்கும். நம்முடைய உயர்நீதிமன்றம், பட்டியலைக் கொடுத்து, டெல்லி விரைவில் நிரப்பும் என்று மனதாரக் கருதுகிறேன். அந்த முயற்சியிலும் மாண்புமிகு முதல்வர் புரட்சித்தலைவி அவர்கள ஈடுபட்டு, உயர்நீதி மன்றத்திலிருந்து— அது டிஸ்ட்ரிக்ட் கோர்ட்டாக இருந்தாலும் சரி, சபார்டினேட் கோர்ட்டாக இருந்தாலும் சரி, கீழே இருக்கிற டிஸ்ட்டிரிக்ட் முன்சீப் கோர்ட்டாக இருந்தாலும் சரி, மாஜிஸ்ட்ரேட் கோர்ட்டாக இருந்தாலும் சரி, எல்லா நீதிமன்றங்களிலும் காலியாக இல்லாமல் இருக்க எல்லா முயற்சிகளையும் இந்த அரசு எடுத்துக்கொண்டிருக்கிறது என்பதை இந்த நேரத்தில் நான் தெரிவிக்கக் கடமைப்பட்டி ருக்கிறேன்.

அடுத்து இன்றைக்கு நம்முடைய உறுப்பினர்கள் ஒரு கருத்தைச் சொன்னார்கள். ஏழைகளுக்கு நீதி கிடைக்க வேண்டும். இன்றைக்கு வசதி படைத்தவர்களுக்கு, மேட்டுக் குடியினருக்கு, செல்வந்தர்களுக்கு, செல்வாக்கு மிக்கவர்களுக்கு, பணம் இருக்கிற காரணத்தால், நீதி எளிமையாக கிடைத்து



விடுகிறது. ஆனால் நூற்றுக்கு தொண்ணூறு பேராக இருக்கிற ஏழைகளுக்கு எப்படி நீதியைப் பெறுவது? இதை உத்தேசித்து தான் இங்கே படமாக வீற்றிருக்கிறார்களே அம்பேத்கார் அவர்கள் அரசியல் சட்டத்தை உருவாக்குகிற போதே அவர் மிகத் தெளிவாக ஒரு விதியை 'டைரக்டிவ் பிரின்சிபிளில' உருவாக்கினார்கள். அன்றைக்கு வழிகாட்டுகிற— டைரக்ட்டிவ் பிரின்சிபிளில் சொல்னார்கள். இலவச சட்ட உதவி ஏழைகளுக்கு ஒவ்வொரு அரசாங்கமும் கொடுக்க வேண்டும். எப்படி கட்டாய கல்வியை கொடுக்க வேண்டுமோ எப்படி என்வைரான் மெண்டலில் சுற்றுப்புறத்தை தூய்மையாக வைத்துக்கொள்ள வேண்டுமோ, அப்படி கட்டாய இலவச சட்ட உதவியை அளிக்க வேண்டுமென்று டைரக்டிவ் பிரின்சிபிளில் ஆர்டிக்கிள் 39-ஏ-ல் மிகத் தெளிவாகச் சொல்லியிருக்கிறார்கள். அதைப் பின்பற்றி தமிழக அரசு அந்தக் காரியததில் குறிப்பாக அதிலே ஈடுபட்டு மிக சாமானியர்களுக்குக் கூட இன்றையதினம் நீதி கிடைப்பதற்காக அந்தக் காரியத்தைச் செய்து கொண்டிருக்கிறார்கள். அதற்கு நம்முடைய உயர்நீதிமன்றத்தினுடைய நீதிபதி மாண்புமிகு ஆனந்த் அவர்கள் உறுதுணையாக இருக்கிறார்கள். இதற்கு ஒரு அமைப்பு இருக்கிறது. 'லீகல் எய்ட்' ஏழைகளுக்கு இலவச சட்ட ஆலோசனை வழங்குகிற ஒரு அமைப்பு தமிழ் நாட்டிலே இருக்கிறது. மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி அவர்கள் அதற்காக 70 இலட்சம் ரூபாய் ஒதுக்கியிருக்கிறார்கள்— ஆண்டு தோறும். ஏழைகளுக்கு இலவச சட்ட வசதி செய்வதற்காக அதிலே ஒரு அமைப்பு 'லோக் அதாலத்' மக்கள் நீதிமன்றம். இங்கே பேசுகிற போது பல மாண்புமிகு உறுப்பினர்கள் மோட்டார் வெகிகிள்ஸ் ஆக்ட் காரணமாக பல விபத்துகள் நடைபெறுகின்றன. அந்த விபத்து நடைபெற்ற பிறகு இன்ஷ்யூரன்ஸ் கம்பெனி போதுமான நிவாரணத்தை உடனடியாகக் கொடுப்பதில்லை. இடையில் இதற்காக சில வழக்கறிஞர்கள் இருக்கிறார்கள். அவர்கள் தட்டி பறித்துக் கொள்கிறார்கள். போலீசில், அந்தத் துறையில் இருக்கிற நண்பர்கள் உடந்தையாக இருந்து காலதாமதம் ஆக்குகிறார்கள் என்பதற்காக இதைப் போக்குவதற்காக 'லோக் அதாலத்' மக்கள் நீதிமன்றம் என்ற அமைப்பு இருக்கிறது. நம்முடைய மாண்புமிகு முதல்வர் புரட்சித்தலைவி அவர்கள் 70 இலட்சம் ரூபாய் இந்த ஆண்டு கொடுத்து அதனை துரிதப்படுத்திக்கொண்டிருக்கிறார்கள். இதிலே மாண்புமிகு உயர்நீதிமன்ற தலைமை நீதிபதி ஆனந்த் அவர்கள் மிக அக்கறையோடு இருக்கிறார்கள். நம்முடைய மேதகு ஆளுநர் அவர்கள் அதனுடைய தலைவராக இருக்கிறார்கள். அதனுடைய பேட்ரனாக சீப் ஜஸ்டிஸ் இருக்கிறார்கள். லா-மினிஸ்டர் என்ற வகையிலே நான் இருக்கிறேன். மற்ற பொறுப்புமிக்க,

[திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி] [1991 செப்டம்பர் 24
பிற்பகல் 7.55

பைனான்ஸ்' செக்ரடடரி போன்ற பலர் இருக்கிறார்கள்.
அதனுடைய 100-வது நாள், வருகின்ற 28ஆம் தேதி
அன்றைய தினம் செங்கற்பட்டு-எம்.ஜி.ஆர். மாவட்டத்தில்
நடைபெற்ற இருக்கிறது. உச்ச நீதிமன்றத்தினுடைய,
சுப்ரீம் கோர்ட்டினுடைய சீப் ஜட்ஜ் மிஸ்ரா
வர இருக்கிறார்கள். இதுவரையிலே ஏறத்தாழ 10 ஆயிரம்
வழக்குகளை மக்கள் நீதிமன்றம் தீர்த்திருக்கிறது. சம்பந்தப்
பட்ட 2 பேரையுமே, பாதிக்கப்பட்டவர்களை எல்லாம்
அழைத்து, உடனே அங்கே பணம் நிர்ணயம் செய்யப்படு
கிறது. செக். அப்படி 10 ஆயிரம் வழக்குகள், தீர்க்கப்பட்டு
இருக்கின்றன. இதனுடைய 100-வது கூட்டம்தான், வருகிற
28ஆம் தேதி அன்றைய தினம் செங்கற்பட்டு-எம்.ஜி.ஆர்.
மாவட்டத்தில் உள்ள செங்கற்பட்டிலே நடைபெறவிருக்கிறது.
அதற்கு டெல்லியிலேயிருந்து, அவரும் வருகிறார். சுப்ரீம்
கோர்ட் சீப் ஜஸ்டிஸ், ஹானரபிள் மிஸ்ரா, அதேபோல்
நம்முடைய உயர்நீதிமன்றத்தினுடைய தலைமை நீதிபதி,
ஹானரபிள் சீப் ஜஸ்டிஸ், ஆனந்த் அவர்கள் கலந்துகொள்கி
றார். அதிலே நானும் கலந்துகொள்கிறேன். மாண்புமிகு
முதல்வர் புரட்சித் தலைவி அவர்களின் சார்பாக. ஆகவே
இந்த அமைப்புகளின் மூலமாக இன்றைக்கு இந்திய
அரசியல் சட்டத்திலே, 39A-வது பிரிவிலே சுட்டிக் காட்டிய
ஏழைகளுக்கும் இலவசச் சட்ட உதவி செய்யவேண்டும் என்ற
அந்தத் திட்டம் மிக சிறப்பாக நடைபெற்றுக் கொண்டிருக்
கிறது. குறிப்பாக இந்த நீதிமன்றத்தின் மூலமாக 10
ஆயிரத்திற்கும் மேற்பட்ட வழக்குகள் தீர்ந்திருக்கிறது.
இதன் மூலம் 22 கோடி ரூபாய்கள் பாதிக்கப்பட்டவர்களுக்கு
வழங்கப்பட்டிருக்கிறது. 10 ஆயிரம் வழக்குகள் தீர்க்கப்
பட்டிருக்கின்றன. 22 கோடி ரூபாய் இந்த மக்கள் நீதி
மன்றத்தினுடைய சார்பாக வழங்கப்பட்டு இருக்கிறது.
இதனுடைய 100-வது நாள் விழாதான் வருகிறது 28ஆம்
தேதி. இரண்டு நாட்களுக்கு முன்பு, சென்ற ஞாயிற்றுக்கிழமை
என்று கருதுகிறேன், மதுரையில் இதுபோன்ற நீதிமன்ற
விழா நடைபெற்றபோது, ஒரு நல்ல செய்தியை நம்முடைய
உயர்நீதிமன்ற சீப் ஜஸ்டிஸ் மாண்புமிகு ஆனந்த் அவர்கள்
சொல்லியிருக்கிறார்கள். இனி, ரென்ட் கன்ட்ரோல் போன்ற
வழக்குகளும், அதேபோல், பெண்கள் மெயின்டெனன்ஸ்
கேட்கிறார்கள் அல்லவா, அந்த வழக்குகளும், அதே
போல், லேண்ட் அக்குவிசிசன் வழக்குகள் இருக்கின்றன,
அந்த வழக்குகள், இவைகளையும் மக்கள் நீதிமன்றத்தி
னுடைய வாயிலாக, 'லோக் அதாலத்' வழியாக, எப்படி
மோட்டார் ஆக்சிடெண்ட் வழக்குகளைத் தீர்த்தோமோ,
அப்படி ரெண்ட் கன்ட்ரோல் ஆக்ட், மெயின்டெனன்ஸ் ஆக்ட்,
லேண்ட் அக்குவிசிசன் ஆக்ட் போன்றவைகளின் கீழ் வருகிற
சிறிய சிறிய வழக்குகள் அங்கங்கே வருகிற வழக்குகளைத்



1991 செப்டம்பர் 24] [திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி]

தீர்க்கலாம் என்ற ஆலோசனையை மாண்புமிகு உயர்நீதி மன்றத்தினுடைய சீப்-ஜஸ்டிஸ் ஹானரபிள் ஆனந்த் அவர்கள் தெரிவித்திருக்கிறார்கள். அப்படி வருகிறபோது நான் ஏற்கெனவே சொன்னதைப் போல, ஏறத்தாழ 10 லட்சம் வழக்குகள் அங்கே தேங்கியிருக்கின்றன. அந்த வழக்குகள் எல்லாம் துரிதமாக பைசலாவதற்கும், வழி இருக்கிறது.

அதேபோல், குடும்ப நீதிமன்றம், பேமிலி கோர்ட், தவிர்க்க இயலாத காரணங்களினாலே, பிணக்கு ஏற்படும் குடும்பங்களிலே, அமைதியை ஏற்படுத்தவும், இயலாத நிலையிலே பிரிந்து வாழும் ஆண், பெண் இருபாலருக்கும் நீதி விரைவில் கிடைக்கவும், குடும்ப நீதிமன்றங்கள் இன்றைக்கு தமிழகத்திலே சென்னையில் செம்மையாக செயல்பட்டு வருகின்றன. இதன் செயல்பாடுகளை மேம்படுத்தவும், இந்த அரசு முயற்சி எடுத்து வருகிறது.

அதேபோல், தமிழ்நாடு மாநில நிர்வாக தீர்ப்பு ஆயம், Tamil Nadu State Administrative Tribunal தமிழக அரசிலே 10 லட்சம் எம்ப்ளாயிஸ் இருக்கிறார்கள். இவர்களது நிர்வாகப் பிரச்சினையில் ஏற்படும் வழக்குகளை விரைவில் தீர்ப்பதற்கு என்றே மாநில நிர்வாக தீர்ப்பு ஆயம் ( State Administrative Tribunal ) என்ற அமைப்பு தனியே செயல்பட்டு வருகிறது. மாண்புமிகு புரட்சித் தலைவர் ஆட்சிக் காலத்தில், இது செயல்படத் துவங்கியது. இன்றைக்கு முதல்வர் மாண்புமிகு புரட்சித் தலைவி இதைத் துரிதப்படுத்தியிருக்கிறார்கள். இதன் மூலம் 10 லட்சம் கவர்ன்மெண்ட் எம்ப்ளாயிஸ், அவர்களுடைய பிரச்சினைகளைத் துரிதமாகத் தீர்க்க இன்றைக்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது.

அதேபோல் லேண்ட் ரிபார்ம்ஸ். நிலச் சீர்திருத்தத்தின் காரணமாக பல சிக்கல்கள் ஏற்பட்டு இருக்கின்றன. Tamil Nadu LandReforms Special Appellate Tribunal தமிழ்நாடு நிலச் சீர்திருத்த சிறப்பு மேல் முறையீட்டு தீர்ப்பாயம். ஏறத்தாழ சுமார் 1 கோடி விவசாயத் தொழிலாளர்கள் இதிலே சம்பந்தப்பட்டு இருக்கிறார்கள். அன்-ஆர்கனைஸ்டு லேபர். தமிழகத்திலே 10 லட்சம் பேர்கள்தான் ஆர்கனைஸ்டு லேபர். கோயம்புத்தூரிலேயுள்ள டெக்ஸ்டைல் இண்டஸ்ட்ரியாக இருந்தாலும் சரி, அதேபோல், இங்கேயிருக்கிற அம்பத்தூர் ஆவடி போன்ற இடங்களில் உள்ள ஆட்டோமொபைல் என்ஜினியரிங் இன்டஸ்ட்ரியாக இருந்தாலும் சரி, அதேபோல், கோயம்புத்தூரிலே இருக்கிற பவுண்டரிகளாக இருந்தாலும் சரி, இப்படிப்பட்ட துறையிலேதான், தொழிற்சங்கங்கள் இருக்கின்றன. தொழிலாளர்களுக்குச் சட்டங்கள் இருக்கின்றன. ஆனால் அதற்குப் அப்பாலேயும் ஒரு கோடி பேர் அன்-ஆர்கனைஸ்டு லேபர் இருக்கிறார்கள். இதே விவசாயத்

தொழிலாளர்கள், 'அக்ரிகல்சுரல் லேபர்' இருக்கிறார்கள். அதேபோன்று கல் உடைப்பவன் இருக்கிறான். மரம் ஏறுபவன் இருக்கிறான். கடலில் சென்று மீன் பிடிப்பவன் இருக்கிறான். இவர்கள் எல்லாம் 'அன்-ஆர்க்கனைஸ்டு'. இவர்களுக்கு எல்லாம் தொழிற்சங்கங்கள் கிடையாது. இவர் களுக்கு எல்லாம் Tamil Nadu Land Reforms Special Appellate Tribunal என்ற அந்த அமைப்பின் மூலம் விவசாயத் சீர்திருத்த வழக்குகளை விசாரிக்க மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி அவர்கள் உறுதுணையாக பல நடவடிக்கைகள் எடுத்து வருகிறார்கள்.

பிற்பகல் 8.00

அடுத்து மாண்புமிகு உறுப்பினர்கள் எல்லாம் ஒரு உணர்ச்சிகரமான பிரச்சினையை, ஆனால் அவசியமான பிரச்சினையைப் பற்றிச் சொன்னார்கள். ஒவ்வொரு இடத் திலும் நீதிமன்றங்கள் வேண்டுமென்ற கருத்தைச் சொன் னார்கள். அது நியாயமான கோரிக்கை. அவசியமான கோரிக்கை. நீதிமன்றங்கள் இருந்தால்தான் பொது மக்களுக்கு நீதி கிடைக்கும் என்பதனை மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவர் அவர்கள் காலத்திலிருந்து மிகச் சீராக, மிகக் கவனமாக மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவர் அவர்களிடத்திலே அணுக்கமாக இருந்த தம்பிகள் என்ற வகை யிலே சொல்லிக்கொள்வேன். அவர்கள் நீதிமன்றத்திற்கு என்றைக்குமே தனி மதிப்பைக் கொடுத்தவர். நீதிமன்றத்தி னுடைய நடவடிக்கைகளிலே தலையிட்டது கிடையாது. நீதிபதிகளைப் பற்றி கண்ணியக் குறைவாகத் துளிகூட, அது சட்டமன்றமாக இருந்தாலும் சரி, பொதுக் கூட்டமாக இருந் தாலும் சரி. பேசிய மரபு இனிய தலைவர் மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்களுக்குக் கிடையாது. அவருடைய வழி காட்டியாக இருக்கின்ற மாண்புமிகு புரட்சித்தலைவி அவர்களுக்கும் கிடையாது. அந்த நீதிமன்றத்தினுடைய சுதந்திரத்தைக் காப்பதில் புரட்சித் தலைவர் எப்படியோ, அப்படியே இன்றைக்கு மாண்புமிகு முதல்வர் புரட்சித்தலைவி அவர்களும். எனவேதான் இன்றைக்கு புதிய நீதிமன்றங் களைப் பரவலாக Decentralisation ஒவ்வொரு தாலுக்காவிற்கும் ஒரு நீதிமன்றம், ஒவ்வொரு மாவட்டத் திற்கும் ஒரு நீதிமன்றம் வேண்டுமென்று சொல்வது ஒரு அவசியமான, ஒரு உள்ளக்கிடக்கை, உங்கள் உணர்ச்சியை, நானும் ஒரு எம்.எல்.ஏ., நானும் மக்களி னால் தேர்ந்தெடுக்கப்பட்ட எம்.எல்.ஏ. என்ற முறையில் அதனுடைய சுக துக்கங்கள் தெரியும். வாக்காளர் என்ன கேட்பார்கள்? வேண்டுமானால் எனக்கு கோர்ட் பிரச்சினை இல்லையே தவிர, மற்ற பிரச்சினைகள் எல்லாம் இருக்கின்றன. சென்னையிலே கோர்ட் பிரச்சினை எனக் கில்லை. ஆனால் மற்ற பிரச்சினைகள் எல்லாம் இருக் கின்றன.



இன்றைக்கு குடிசை மாற்று வாரியத்திலே கேட்பார்கள். அண்ணன் கே.ஏ.கே. அவர்களே, வாக்குகள் போட்டோமே, எனக்கு வீடு வாங்கிக் கொடுங்கள். இதோ தெருவிலே இருக்கிறேனே, ரிக்ஷா ஓட்டிக்கொண்டு. எனக்கு ஒரு வேலை வாங்கிக் கொடுங்கள் என்று கேட்பார்கள். சென்னைக்கு அப்பாற்பட்டு இருக்கிற சகோதரர்களுக்கு நீதிமன்றப் பிரச்சினை இருக்கிறது. சென்ற ஆண்டு கூட மாண்புமிகு சாதிக்பாட்சா அவர்கள் அப்போது சட்ட அமைச்சராக இருந்தார். நிலக்கோட்டைக்கு 'டிஸ்ட்ரிக்ட் முன்சீப்' அனு மதித்து வீடு கிடைக்கவில்லை என்று அவர் சொன்னார். மாண்புமிகு உறுப்பினர் திருமதி பொன்னம்மாள் அவர்களுக்கு சொல்லிக்கொள்கிறேன். தை பிறந்தால் வழி பிறக்கும். நிலக்கோட்டையிலே விரைவிலே நீதிமன்றம் வர மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி அவர்கள் ஏற்பாடு செய்திருக்கி றார்கள். சேங்ஷன்டு.

அதேபோல, கொடைக்கானல். கொடைக்கானலுக்கும் நீதிமன்றம் வர இருக்கிறது. அதேபோல தேன்கனிக்கோட் டைக்கும் நீதிமன்றம் அனுமதிக்கப்பட்டுள்ளது. உயர்நீதிமன்றம் ஆணையைப் பிறப்பித்து, அதைத் தொடர்ந்து மாண்பு மிகு புரட்சித் தலைவி அவர்கள் தேன்கனிக்கோட்டை யிலே ஒரு District Munsif Court மாவட்ட உரிமை யியல் நீதிமன்றம் உருவாக்க முடிவு எடுக்கப்பட்டி ருக்கிறது என்பதையும் மாண்புமிகு உறுப்பினருக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

பிற்பகல் 8.05

வேதாரண்யத்தில் நீதிமன்றம் வரவிருக்கிறது. (குறுக்கீடு) இது இராஜேந்திரன் தொகுதியாக இருந்தாலும் பக்கத்து தொகுதியான நாகப்பட்டினத்திலே 'Protection of Civil Right Court' உருவாக்க மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி அவர்கள் அனுமதி அளித்திருக்கிறார்கள்.

அதேபோல தூத்துக்குடியில் நம்முடைய மாண்புமிகு எதிர்க்கட்சியினுடைய துணைத் தலைவர் அவர்கள் அடிக்கடி சொல்கின்ற அந்த இடத்திலேயும், தூத்துக்குடியில் 'Additional District Sessions Court' விரைவிலே வர இருக்கிறது. அவர் அடிக்கடி சொல்லுகிற அந்த தூத்துக் குடியிலும் அடிஷனல் ஸ்பெஷல் கோர்ட் விரைவிலே வர இருக்கிறது. அதைப்போல மாண்புமிகு உறுப்பினர் வேணு கோபால் அவர்கள் தொகுதி ராணிப்பேட்டையிலும் கூட அதுவும் அடுத்த மாதத்திற்குள்ளாகவே வர இருக்கிறது என்பதை யும் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன். காமராசர் மாவட்டத்தைப் பற்றி ஆர்வமாக, உணர்ச்சிமிக்க, எழுச்சி மிக்க நல்ல கருத்துக்களைச் சொன்ன

நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் சஞ்சய் ராமசாமி அவர்கள் விருதுநகரிலே அமைக்க வேண்டும் என்று வற்புறுத்தினார்கள். அவர்களுடைய கடமை உணர்வை நான் பாராட்டுகிறேன். அவருடைய தவிப்பை என்னால் உணர முடிகிறது. ஆனால் மாண்புமிகு உறுப்பினர்களின் மேலான கவனத்திற்கு நான் கொண்டு வர விரும்புகிறேன். ஒரு மாவட்டத்தினுடைய நீதிமன்றம் ஒரு இடத்திலே அமைப்பதென்றால் அதற்கு தூரம் மட்டும் ஒரு 'கிரைட்டீரியன் கெய்ட் லைனாக' ஆகாது. அது மட்டும் அல்ல, அது எப்படி அமைக்கப்படுகிறது என்று அவருக்கு விளக்கமாக தெரியும். ஏனென்றால் நான் ஏற்கெனவே சொன்னேன். மாண்புமிகு உறுப்பினர் இராமசாமி அவர்களுடைய தந்தை ஒரு வழக்கறிஞர், அது மட்டுமல்ல ஹரியானாவிலே சீஃப் ஜஸ்டிசாக இருந்தவர். அது போல் அவருடைய தாத்தா மாண்புமிகு வீராசாமி அவர்கள் தமிழகத்தினுடைய உயர்நீதிமன்ற சீஃப் ஜஸ்டிசாக இருந்தவர். அவருக்கு தெரியும் நீதிமன்றங்கள் எல்லாம் அமைக்கப்படுவதற்கு நம்முடைய உயர்நீதிமன்றத்தினுடைய ஒப்புதலும் அங்கீகாரமும் பெற வேண்டும். அதிலே ஒரு அரசியல் இருக்கிறது. எங்கள் இனிய தலைவர் மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் 1985 வது ஆண்டு மூன்றாகப் பிரித்தார்கள். ஒப்பற்ற தலைவர் பெரும் தலைவர் காமராசர் புகழைக் காக்க காமராசர் மாவட்டம். ஒப்பற்ற ஒரு தேசியத் தலைவர் பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர்—அவர்கள் புகழ் காக்க, நிலை நாட்ட, பசும்பொன் தேவர் மாவட்டம். சேது மன்னன்—விவேகானந்தாரையே அமெரிக்காவிற்கு அனுப்பிய நல்ல குடும்பம். தமிழை வளர்த்தவர். அவர் வாழ்ந்த பூமி இராமநாதபுரம் மாவட்டம் என்று இப்படி பிரிக்கிறபோதே அவர்கள் சொன்னார்கள். இவை ரெவின்யூ டிஸ்டிரிக்ட்ஸ் என்று. அதைப்போல மூன்று ஜுடிஷியல் டிஸ்டிரிக்களும் ஆங்காங்கே வைக்க வேண்டும் என்று. பிறகு ஒரு முடிவு எடுக்கப்பட்டது. நம்முடைய இராமநாதபுரம் மாவட்டத்தில் ஒரு நீதிமன்றம்—இராமநாதபுரத்திலேயும், நம்முடைய பசும்பொன் மாவட்டத்திற்கு சிவகெங்கையிலும், பிறகு ஸ்ரீவில்லிபுத்தூரிலும் என்று முடிவு எடுக்கப்பட்டது, நீதி மன்றத்தினுடைய கட்டளைகளின்படி.

இது தி.மு.க. ஆட்சியில் இருக்கிறபோது இரண்டு ஆண்டுகளாக இதே சபையில் பல முறை சொல்லிச் சொல்லி, வரும் வரும் என்றார்கள். ஆனால் வரவில்லை. அந்தச் கோப்பு என்னிடத்திலே இருக்கிறது. முன்னாள் முதல்வர் கருணாநிதி அவர்கள், அவர்களிடத்திலே கேட்டபோது, அங்கே வைக்காதீர்கள் மதுரையிலே இருக்கட்டும் என்று சொன்னார்கள். கோப்பு இருக்கிறது. அதன் காரணமாக என்ன



நிலைமை என்றால், சிவகெங்கையிலே கோர்ட் வரவில்லை. இராமநாதபுரத்திலே கோர்ட் வரவில்லை. அங்கேயும் கட்டிடம் இருக்கிறது. இங்கேயும் கட்டிடம் இருக்கிறது. ஸ்ரீவில்லிபுத்தூரிலும் கட்டிடம் இருக்கிறது.

அவர்கள். கேட்கலாம். விருதுநகரிலே வைக்கக்கூடாதா என்று. விருதுநகரிலே எங்களுக்கு அக்கறை இல்லாமல் இல்லை. ஆனால் ஏற்கெனவே எடுக்கப்பட்ட முடிவு இது. அந்த முடிவு எடுத்ததன் காரணத்தாலே—அதை அரசியலாக்கி ஒரு நடவடிக்கை எடுத்தார் முன்னாள் முதல்வர் கருணாநிதி. அவர் சொன்னார், ஸ்ரீவில்லிபுத்தூருக்கு வரக்கூடாது என்று. முன்னாள் மாண்புமிகு அமைச்சர் சாதிக்பாட்சா அவர்கள் பாலிசி நோட்டிலேயே சொன்னார்கள். உங்களுக்குத் தெரியும். பி. கே. சேதுராமன், ஜஸ்டிஸ் ஸ்ரீவில்லிபுத்தூருக்கு சென்றார். அங்கே பார்த்து விட்டு வந்து அறிக்கை கொடுத்தார். அரசாங்கத்திற்கு அனுப்பினார். அதை ஏற்றுக்கொண்டார்கள். இங்கேயிருந்து பதிலும் எழுதப்பட்டது, ஐகோர்ட்டிற்கு. பிறகு திடீரென்று இதில் முதலமைச்சர் பேசினார்—கருணாநிதி பேசினார்—எனவே அது மதுரையிலே இருக்கும் என்று முடிவு எடுத்தார்கள்—இன்றைக்கும் கோப்பு இருக்கிறது.

எனவே தான் மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி அவர்கள் ஒரு நியாயத்தை வழங்க வேண்டும் என்பதற்காக ஸ்ரீவில்லிபுத்தூரிலே, காமராசர் மாவட்டத்திற்கும் சிவகெங்கையிலே பசும்பொன்தேவருக்கும், இராமநாதபுரத்திற்கு, ராமநாதபுரத்திலும் ஆக மூன்றிற்கும் உத்திரவு போட்டிருக்கிறார்கள் என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன். இதில் நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் சஞ்சய் ராமசாமி அவர்கள் கௌரவப் பிரச்சினையாக ஆக்க வேண்டாம். வேறு எவ்வளவோ வசதிகளை நீங்கள் மாண்புமிகு முதல்வர்

பிற்பகல் 8.10

அவர்களிடத்திலே இருந்து பெறப்போகிறீர்கள். எவ்வளவோ வாய்ப்பு இருக்கிறது. ஆனால் எடுக்கப்பட்ட முடிவு இது உயர்நீதிமன்றத்தினுடைய பரிந்துரை. அதன் மீதுஇன்றைய தினம் திருவில்லிப்புத்தூரிலே விரைவில் காமராசர் மாவட்டத்தினுடைய தலைமை நீதிமன்றம் அமைய இருக்கிறது. சிவகெங்கையிலே நம்முடைய பசும்பொன் மாவட்டத்தினுடைய தலைமை அமைய இருக்கிறது. இராமநாதபுரத்திலே மூன்று ஆண்டுகளாக, 4 ஆண்டுகளாக தீராத பிரச்சினைக்கு மாண்புமிகு முதல்வர் புரட்சி தலைவி அவர்கள் ஒரு உறுதியான நடவடிக்கை எடுத்திருக்கிறார்கள். புரட்சித் தலைவி அவர்கள் இன்றைக்கு ஒரு முடிவை எடுக்கிறார்கள் என்றால் எண்ணித் துணிக கருமம் என்ற வகை

யிலே தான். விருதுநகரா, ஸ்ரீவில்லிபுத்தூரா, ராஜபாளையமா, அருப்புக்கோட்டையா என்பது அவர்களுக்கு முக்கியம் அல்ல. அவர்கள் அந்த மாவட்டத்திற்கு என்று பார்க்கிறார்கள். இதை உயர்நீதிமன்றமும் பரிந்துரை செய்துள்ளது. அதைவிட இதை தி.மு.க. அரசியலாக ஆக்கியது. அதற்கு கோப்பிலே பல ஆதாரங்கள் இருக்கின்றன. எனவே தான் மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்கள் இன்றைக்கு திருவில்லிபுத்தூருக்கு அந்த தலைநகரத்தையும், பசும்பொன் மாவட்டத்திற்கு சிவகங்கையைத் தலைநகரமாகவும், அதுபோல முகவை மாவட்டத்திற்கு இராமநாதபுரத்தைத் தலைநகரமாகவும் கொண்டு அவர்கள் ஆணையிட்டிருக்கிறார்கள். அந்த ஆணை இன்னும் இரண்டு மாதங்களுக்குள்ளாக— 3 மாவட்டங்களில் 3 நீதி மன்றங்கள் வர இருக்கின்றன என்பதை தெரிவித்துக்கொள்கிறேன். 90 நாட்களுக்குள்ளாக 3 மாவட்ட நீதிமன்றங்களை உருவாக்கிய பெருமை மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவிக்கு உண்டு என்பதையும் இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி.)

அடுத்து இங்கே சொன்னார்கள். தி.மு.க. காலத்தில் ஏராளமான அரசு வழக்கறிஞர்கள் அட்வகேட் ஜெனரல்— போன்ற வழக்கறிஞர்கள் இருந்தார்கள், பப்ளிக் ப்ராஸிக்கியூட்டர் இருந்தார்கள். கவர்ன்மெண்ட் ப்ளீடர்கள் இருந்தார்கள். அது போல சென்னை உயர் நீதிமன்றத்தில் ஏறத்தாழ 46 அரசு வழக்கறிஞர்கள், அதில் ஏறத்தாழ 40-க்கு மேற்பட்டவர்கள் இன்றைக்கு மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்கள் போட்டிருக்கிறார்கள். இன்னும் ஒரு வார காலத்திற்குள்ளாக மற்ற இடங்களும் நிரப்பப்படும் என்பதையும் இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன். அது போல மாவட்டங்களில் டிஸ்ட்ரிக்ட் கோர்ட்டிலே இன்றைக்கு ஏறத்தாழ 175 பொறுப்பிலே ஏற்கெனவே தி.மு.க.வினுடைய சார்பாக இருந்த கட்சி நண்பர்களும் இருக்கிறார்கள். இன்றைக்கு மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்கள் இந்த இடத்திற்கு போடுகின்றபோது அவர்கள் சிரமைக்கிறார்களே தவிர கட்சிக் கண்ணோட்டத்தோடு போடுவதில்லை; ஏனென்றால் நமக்கு நம்பிக்கையான ஆள்— லாயல்ட்டி அங்கே வேண்டும் காம்பிடென்சி வேண்டும். இன்றைக்கு முதல்வர் மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்கள் எடுக்கிறார்கள் என்றால் அதற்குதகுதி இருக்கிறதா, அதே நேரத்திலே விஸ்வாசம் இருக்கிறதா என்று. இன்றைய இண்டியன் எக்ஸ்பிரஸ்சிலே, 'Indian Express'— HC Orders re-opening of sandalwood smuggling case.' Justice Pratap Singh. தி.மு.க.காலத்தில் இப்படிப்பட்ட அரசு வழக்கறிஞர்களை வைத்துக்கொண்டு மோசடியைச் செய்தார்கள். இன்றைக்கு— உங்கள் அனுமதியோடு— கோர்ட்டினுடைய ஒரு தீர்ப்பு வழங்கியிருக்கி



றார்கள் ஜஸ்டிஸ் பிரதாப் சிங். இதே பிரச்சினையை நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் அரச்சுனன் அவர்கள் 1989 ஆம் ஆண்டு இங்கே கிளப்பினார்கள். கோவை மாவட்டத்தில் தொண்டாமுத்தூர் தொகுதி, அதிலே ஒரு கிராமத்திலே தி.மு.க.வைச் சார்ந்தவர்கள் சந்தனத்தைக் கடத்தினார்கள். ஒரு அதிகாரி பிடித்து கோயம்புத்தூர் மேஜிஸ்ட்டிரேட் கோர்ட்டிலே வழக்கு போட்டார். அன்றைக்கு அமைச்சர் மாண்புமிகு கே. பி. கந்தசாமி அவர்கள் பாரஸ்ட் மினிஸ்டராக இருந்தார்கள். அவர் அழைத்து, தி.மு.க. காரன் எனவே, வழக்கை வாபஸ் வாங்கு என்று சொன்ன நேரத்திலே அந்த அதிகாரி வாபஸ் வாங்க மறுத்துவிட்டார். உடனடியாக அந்த வழக்கை போட்ட அசிஸ்டெண்ட் பப்ளிக் ப்ராசிக்கியூட்டர் அவர் அரசாங்கத்தினுடைய வழக்கறிஞர் அவரிடத்திலே சொல்லி அந்த வழக்கை வாபஸ் பெற்றிருக்கிறார்கள். பாதிக்கப்பட்டவன் உயர் நீதிமன்றத்திற்கு வந்தான். சரி, இதோ இந்த சந்தனக் கடத்தலிலே ஈடுபட்டவன் தி.மு.க. காரன். அமைச்சர் சொன்னார், கேட்க மறுத்த காரணத்தினாலே என்னையும் வேலையை விட்டு நீக்கிவிட்டார்கள், நியாயம் வழங்க உயர்நீதிமன்றத்தில் வழக்குப் போட்டார் என்கிறார். இன்றைக்கு உயர்நீதிமன்ற நீதிபதி அவர்கள் அந்த வழக்கை மீண்டும் விசாரிக்க வேண்டுமென்று உத்தரவு இட்டிருக்கிறார்கள்.

"The High Court has quashed the order of the Coimbatore Fifth Judicial Magistrate, permitting the Government to withdraw a case against four persons, who allegedly smuggled sandalwood and directed the lower court to restore and proceed with the case in accordance with the law.

Justice S. Pratap Singh gave the direction while allowing a criminal original petition from S. Shunmugham, forest Range Officer, Bolampatti, Coimbatore District.

பிற்பகல் 8.15

In his petition, Shanmugham submitted that the Government accepted the proposal of the Conservator of Forests and passed an order on April 26 last withdrawing a sandlwood smuggling case filed in the court of the magistrate in 1989-90 against Mani (DMK); Dhanapal (DMK), Angamuthu (DMK) and Shanmugham (DMK). On a petition from the assistant public prosecutor, magistrate dismissed the case as withdrawn. தி.மு.க. ஆட்சி காலத்தில் அது வாபஸ் வாங்கப்பட்டது. அவருடைய பெயர் 'அக்கியூஸ்டு' மணி. அவர் ஒரு தி.மு.க., தனபால் ஒரு தி.மு.க., அங்கமுத்து ஒரு தி.மு.க., சண்முகம் ஒரு தி.மு.க.

"....The Petitioner alleged that one of the accused, Mani, who had close connections with the then ruling party, used his influence and the District Forest Officer directed the Petitioner to withdraw the case. As he refused, he was directed by the Conservator of Forests to meet the then Minister of Forest...."— Mr. K. P. Kandasamy, the Editor of Dinakaran— தி.மு.க. அமைச்சர் கூப்பிட்டுச் சொல்லி அந்த வழக்கை வாபஸ் வாங்கச் சொல்லி மிரட்டியிருக்கிறார். இவர் மிரட்டலுக்கு அஞ்சாமல் இருந்த காரணத்தால் இவரை வேலையிலிருந்து நீக்கியிருக்கிறார்கள். அது இன்றைக்கு உயர்நீதிமன்றத்தில் அனுமதிக்கப்பட்டிருக்கிறது. எதற்குச் சொல்கிறேன் என்றால் தி.மு.க. ஆட்சியில் எப்படி நீதித் துறையில் அவர்கள் எல்லாம் நுழைந்து அதனுடைய தூய்மையைக் கெடுத்தார்கள் என்பதற்காகச் சொல்கிறேன்.

Independence of Judiciary -ஐ திமு.க. கெடுத்தது, தி.மு.க. காலத்தில் இருந்த ஒரு அமைச்சர் தலையிட்டு இருக்கிறார் என்பதுதான். இன்றைக்கு நான் சொல்வது உயர்நீதிமன்றத்தினுடைய தீர்ப்பு. 'லா ஆபிசர்' அவர் தி.மு.க. காரராக இருக்கிற காரணத்தால் வழக்கை வாபஸ் பெற்றார். தி.மு.க. காலத்தில் அப்படி அரசு அதிகாரிகளைப் போட்டு நீதியை முடக்கினார்கள். இதே மன்றத்தில் 1989-ல் மாண்புமிகு உறுப்பினர் திரு. அர்ச்சுனன் எழுந்து கேட்கிறார். இப்படி சந்தனக் கட்டை வழக்கில் ஒரு தி.மு.க. நண்பரை விடுவித்து இருக்கிறீர்கள் என்று கேட்டவுடன் அன்றைக்கு அமைச்சராக இருந்த துரைமுருகன் தலையிட்டு ஆதாரம் இருக்கிறதா? என்று ஆர்பரித்து இருக்கிறார். அது நமது எம்.ஜி.ஆர். பத்திரிக்கையில் வெளியாகி இருக்கிறது. அந்த விவரங்கள் எல்லாம் என்னிடத்தில் கோப்பில் இருக்கிறது. துருவித்துருவிப் பார்த்தேன். இதே மன்றத்தில் மாண்புமிகு உறுப்பினர் திரு. அர்ச்சுனன் கிளப்புகிறார், அதோ தொண்டாமுத்தூர் தொகுதியில் அந்த கிராமத்தில் மாணிக்கவாசகம் (குறுக்கீடு) அதைத்தான் சொல்கிறேன் நான். இதைச் சொன்னார்; அன்றைக்கு தி.மு.க.வின் அமைச்சராக இருந்த துரைமுருகன் மறுத்தார். மறுத்ததோடு மட்டுமல்ல, இவரை உட்காரச் சொன்னார். மாண்புமிகு உறுப்பினர் திரு. அர்ச்சுனன் இங்கே இருக்கிறார், அந்த விவரங்களை எல்லாம் வைத்து இருக்கிறார். கோப்பும் என்னிடத்தில் இருக்கிறது. மதியம் முழுவதும் அதைப் பார்த்தேன். இதை எதற்காகச் சொல்கிறேன் என்றால், தி.மு.க. ஆட்சிக் காலத்தில் நீதிமன்றத்தில் தலையீடு இருந்தது, இன்றைக்கு சொல்கிறார்கள், தூய்மையானவர்கள் என்றும், நேர்மையானவர்கள் என்றும். ஏன் தோற்றுவிட்டீர்கள் நூற்றுக்கு



நூறுபேரும், ஏன் தோற்று விட்டீர்கள் என்றால் இதன் காரணமாகத்தான் வாய்ப்பை இழந்தீர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) இன்றைக்கு தி.மு.க. தலைவர் கருணாநிதி ஆராய்ந்து கொண்டிருக்கிறார், ஏன் தோற்று விட்டோம் என்று, சந்தனக் கடத்தல்காரனுக்கு நீங்கள் சோரம் போனால் நாட்டு மக்கள் எப்படி வாக்கு அளிப்பார்கள்? எனவே இவைகள் எல்லாம் ஒரு பானை சோற்றுக்கு ஒரு பருக்கு பதம் போல, மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி அவர்கள் (Loyalty and competence) உள்ள, நல்ல திறமையானவர்களை, அதே நேரத்தில் கட்சியில் இருப்பவர்களைப் போடக்கூடாது என்று இல்லை, கட்சியில் உள்ளவர் திறமையானவர்கள், தகுதியானவர்கள் என்று கருதினால் அதற்காக தொண்டு ஆற்றுவதற்கு உரிமையுண்டு. அதே நேரத்தில் அங்கே கம்பீரமாக வாதாடுவதில் திறமையானவர்களைத் தேர்ந்து எடுத்து விரைவில் அவர்களை அந்த இடங்களில் நிரப்பி அதன் மூலம் அந்தத் துறைக்கு ஒரு சிறப்பைக் கொடுப்பார்கள் நமது மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்கள்.

இனி ஒரு தவிக்கின்ற பிரச்சினையைப் பற்றி சொல்கிறேன். மதுரையில் ஹைக்கோர்ட் பெஞ்ஜ் 1977 ஆம் ஆண்டு முதல் மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவர் முதலமைச்சராக இருந்த நேரத்திலிருந்து நான் பார்க்கிறேன். அந்தக் கோப்பில் 20 முறைக்கு மேலாக மத்திய அரசுக்கு எழுதி, சோராமல் எழுதியிருக்கிறார். அது இன்றைக்கு நம்முடைய புரட்சித் தலைவி அவர்கள் காலத்தில் தான் நடக்கவேண்டும் போல் இருக்கிறது, அதற்கான நம்பிக்கை ஒளி வந்திருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி) கடந்த 17 ஆம் தேதி ஹைபவர் கமிட்டி என்ற வகையில் ரிஜிஸ்ட்ராரை அழைத்து இங்கே அமர்ந்து இருக்கின்ற ஹோம் செகரட்டரி, பைனான்ஸ் செகரட்டரி, சம்பந்தப்பட்ட துறையினுடைய அமைச்சர் என்ற வகையில் நான், சீப் இன்ஜினியர், பி.டபிள்யூ.டி. (பில்டிங்) இவர்கள் எல்லாம் அமர்ந்து மதுரையில் உயர்நீதிமன்றத்தின் கிளையினை நிறுவுவது குறித்து விவாதித்தோம். மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் காலத்தில்— 1986 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் எனக்கு நன்றாக நினைவு இருக்கிறது. இன்றைக்கு ஜனாதிபதியாக இருக்கின்ற மாண்புமிகு ஆர். வெங்கட்ராமன் அவர்கள் சென்னை உயர்நீதிமன்றத்தின் விரிவாக்க கட்டிடத்திற்கு வந்து அடிக்கல் நாட்டினார்கள். அவரோடு என்னை உடன் செல்வதற்கு மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் அனுப்பினார்கள். அது எனக்கு பசுமையாக நினைவில் இருக்கிறது. அடிக்கல் நாட்டி, 4 கோடி ரூபாய் கொடுத்து அந்தக் கட்டிடம் இன்றைக்கு கம்பீரமாக எழும்பி 2 நாட்

களுக்கு முன்பு நம்முடைய மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்கள் சென்னை நீதிமன்றத்திற்கு அந்த 4 கோடி ரூபாய் கட்டிடத்தை கொடுத்திருக்கிறார்கள்.

பிற்பகல் 8.20

அதிலேதான், ஒரு சிக்கல் இருந்தது. சென்னையில் இடமில்லாத காரணத்தினாலேதான், உயர்நீதிமன்றத்தினுடைய ஒரு பிரிவை, மதுரையிலே அமைப்பதற்கு சிரமம் இருக்கிறது என்றெல்லாம் வாதம் வைத்துக் கொண்டிருந்தார்கள். நம்முடைய முதல்வர் புரட்சித் தலைவி அவர்கள், இந்த மூன்று மாதத்திற்குள் துரிதப்படுத்தி அந்தக் கட்டிடத்தையும் கட்டி முடித்து, இன்றைக்கு 'ஹாண்ட்-ஓவர்' செய்திருக்கிறார்கள். நம்முடைய 'பி.டபிள்யூ.டி எஞ்சினியர் மூலமாக இரண்டு நாட்களுக்கு முன்பு அதற்கான கடிதத்தையும் 'ஹோம் செக்ரடரி' மூலமாக அனுப்பி விட்டார்கள். எனவே சென்னை உயர்நீதிமன்றத் திற்கு போதிய கட்டிட வசதி அமைத்துவிட்டதால் இனி மதுரையில் உயர்நீதிமன்றம் அமையும் பணி துரிதமாக நடை பெறும். மதுரையில் 15 ஆண்டுகள் எந்தக் குறிக்கோளுக் காக, மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் பாடு பட்டார்களோ அது நம்முடைய இனிய மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி அவர்களுடைய காலத்தில் நிறை வேறும் என்பதை மட்டும் இந்த நேரத்தில் சொல்லிக் கொண்டு, துரிதப்படுத்த வேண்டிய அந்தக் காரியங் களை நான் அரசின் சார்பாக சட்ட அமைச்சர் என்ற வகையில் மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி அவர் களுடைய தூதுவனாக செய்வேன் என்பதையும் இங்கே பேசிய மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவருக்கும் தெரிவித் துக் கொள்கிறேன்.

அடுத்து, மிக முக்கியமானது, வழக்கறிஞர்களை பற்றி யெல்லாம் மாண்புமிகு உறுப்பினர்கள் ஆங்காங்கே பேசினார் கள். அவாகளுக்கு இருக்கிற பலவீனம், வருவாய் கேடு இவைகளையெல்லாம் அவர்கள் எடுத்துச் சொன்னார்கள். அது சம்பந்தமாகவும் மாண்புமிகு புரட்சித் தலைவர் காலத்திலே ( Advocates' Welfare Fund ) என்று ஒரு சட்டத்தைக் கொண்டு ந்து, இன்றைக்கு தமிழ் நாட்டிலே 25,000 அட்வகேட்ஸ் இருக்கிறார்கள்; 25,000 வழக்கறிஞர் கள் இருக்கிறார்கள். இவர்கள் நோயுற்ற காரணத்தி னாலோ, சிலர் வயோதிகத்தின் காரணத்தாலோ. விபத்து காரணத்தினாலோ இயற்கை எய்தினால், வயோதிகத்தின் காரணமாக வழக்காடும் டணியை தொடர்ந்து மேற் கொள்ள இயலாமை ஏற்படும்போது, அவர்களது குடும்பத் தாருக்கு உதவும் வகையில் வழக்கறிஞர் சங்கத்தில் பதிவு செய்துள்ளவர்களுக்கு டயன்படும் வகையில், வழக்கறிஞர்கள்



நல வாழ்வு நிதித் திட்டம் மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் காலத்தில் ஆரம்பிக்கப்பட்ட அந்த நல்ல திட்டம் (Advocates' Welfare Fund ) அதிலே, சில ( lapses and inadequacies ) இருக்கின் றன. இன்றைக்கு, மாண்புமிகு முதல்வர் புரட்சித்தலைவி அவர்கள் அதைப் பற்றி கேட்டார்கள். அதில் இரண்டு குறைபாடுகள் உள்ளன. ஒன்று, இன்றைக்கு ஒரு ரூபாய் மட்டும் செலுத்துகிறார்கள், வக்காலத்தில், அதை இரண்டு ரூபாயாக ஆக்க வேண்டும். அதுபோல எல்லா வழக்கறிஞர் களும் உறுப்பினர்களாக இருக்க வேண்டும். இது போன்று கேரளத்திலே இருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் திரு. சஞ்சய் உத்திரப்பிரதேசம் போன்ற மாநிலத்திலும் இருக்கிறது என்ற தகவலைச் சொன்னார்கள். எனக்குத் தெரிந்தவரையிலே, கேரளத்திலே இருக்கிறது. அதனை முன்மாதிரியாக வைத்து கொண்டுதான் இன்றைக்கு அதற்கு ஒரு சட்டத் திருத்த மசோதாவை மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி அவர் களுடைய ஒப்புதலுக்காக சட்டத்துறை அனுப்பியிருக்கிறது. நிச்சயமாக விரைவில் நல்ல முடிவைக் கொண்டுவந்து, இதே சட்டமன்றத்திலே திருத்தத்தைக் கொண்டு வந்து, அந்த 25,000 வழக்கறிஞர்களுடைய வாழ்க்கையிலே ஒரு ஒளியை ஏற்ற இந்த அரசு முடிவு செய்திருக்கிறது என்பத னையுமி தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி.)

அடுத்து, சிறைச்சாலைக்குச் செல்கிறோம். (சிரிப்பு) உங்களுக்குத் தெரியும்; சென்னை மத்திய சிறை உட்பட தமிழகத்தில் 134 சிறைக் கூடங்கள் இருக்கின்றன. 134 சிறைகள் இருக்கின்றன. அதிலே, 23,423 பேரை வைத்துக் கொள்ள இடவசதி இருக்கிறது. 'அகாமடேஷன் அதாவது, 'கெபாசிடி' இருக்கிறது. இவைகள் தவிர, 'பார்ஸ்டல் ஸ்கூல்', மகளிர் தனிச் சிறைகள் இருக்கின்றன. பெண்களுக்காக இரண்டு சிறைகள் இருக்கின்றன. ஒன்று, வேலூரிலும், இன்னொன்று மதுரையிலும் இருக்கிறது, திறந்த வெளி சிறை இருக்கிறது. நன்னடத்தை பிரிவு, அரசு மறு வாழ்வு இல்லம் ஆகியவை சிறைத் துறையின் கட்டுப்பாட்டில் இருக்கின்றன. 134 சிறைக் கூடங்களில் 23,423 பேர் இருக்கிறார்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. பொன்னு சாமி அவர்கள் பேசுகிறபோது, அரசியல் கைதிகளுக்காக, தனியாக ஒரு சிறைச்சாலை வேண்டுமென்று கேட்டார்கள். அது ஆபத்தான யோசனை. அரசியல் வாதிகளுக்கு தனி சிறைச்சாலை தேவையில்லை என்பது மட்டுமல்ல; உங்களுக்குத் தெரியும், நான் சட்ட அமைச்சராக, மாண்புமிகு முதல்வா புரட்சித் தலைவி அவர்கள் எனக்கு கடமையைக் கொடுத்திருக் கிறார்கள். கடந்த ஜனவரிமாதம், 20-ஆம் தேதி,

நான் மதுரை சிறைசச்ாலையிலே கைதி; இன்றைக்கு சிறைக்கு அமைச்சர். அந்தச் சாவியை கொடுத்திருக்கிறார். கள். மாண்புமிகு முதலவர் புரட்சித் தலைவி அவர்கள். ஜனவரி மாதம் அன்றைக்கிருந்த தி.மு.க. என் மீது ஒரு கொலை வழக்கு போட்டது. யாரை கொலை செய்தேன் தெரியுமா? முன்னாள் முதலமைச்சர் கருணாநிதியை. கருணாநிதியைக் கொன்றேன் என்று 302, 307, 117-அது போல, 120-பி ஆகிய பிரிவுகளில் போட்டார்கள். சாலை மறியலுக்காக மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி அவர்கள் சொன்னார்கள், நீங்கள் சென்று ஆங்காங்கே உள்ள நண்பர்களை கட்டுப்பாடோடு இருக்கச் சொல்லுங்கள்; போலீஸார் கைது செய்தால், சிறைச் சாலைக்குச் செல்லச் சொல்லுங்கள். நீங்கள் பேசிவிட்டு, கோயம்பத்தூருக்குப் புறப்பட்டுச் செல்லுங்கள் என்று எனக்கு மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி அவர்கள் அன்றைக்கு கட்டளையிட்டார்கள். நான், தஞ்சாவூர் சென்று பிறகு புதுக்கோட்டை சென்று, பிறகு திருச்சி சென்று, பிறகு திண்டுக்கல் சென்று மதுரையிலே பேசுகிறேன். அப்போது, இங்கேயிருந்து இன்றைக்கு அவர் உள்துறை செயலாளராக இல்லை. உங்களுக்குத் தெரியும். இன்றைக்கு நெல்லை சீமையிலே இருந்து, ஜாமீன் கைதியாக இருக்கிறாரே முன்னாள் உள்துறை செயலாளர் நாகராஜன் அவர்களுடைய கட்டளையின்படி, என்னை கைது செய்ய உத்தரவிட்டார்கள். நான் பரமக்குடிக்குச் சென்றுவிட்டு, அதுபோல, ராமேஸ்வரம் எல்லாம் சென்றுவிட்டு, விருதுநகருக்கு 12 மணிக்கு வருகிறபோது, 12 மணிக்கு என்னைக் கைது செய்து, மதுரை சிறைச் சாலையில் அடைத்தார்கள். அடுத்த நாள் நீதிமன்றத்திற்குச் செல்கிறபொழுது என் மீது சாட்டப்பட்ட குற்றங்கள் 302, 307 நீதிபதியே கேட்டார்கள் மாண்புமிகு உறுப்பினர் கே.ஏ.கே. அவர்கள் இந்தக் குற்றத்தைச் செய்திருக்க முடியாது, ஏனென்றால் அவருக்கென்று ஒரு பாரம்பரியம் இருக்கிறது; அவர் நாடாளுமன்ற உறுப்பினராக இருந்தவர்; மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவருக்கு அணுக்கமான தம்பி; அதேபோல சட்டமன்றத்திலே இரண்டு முறை வென்றவர்; நிர்மூலமாக்கியவர்; ஆக இப்படிப்பட்ட ஒரு பாரம்பரியம் மிக்கவர்; படித்தவர். வழக்கறிஞர்; பத்திரிகை ஆசிரியர், அப்படிப்பட்ட ஒரு பெருமை மிக்கவர் மீதா 302, 307 போடுவது என்று கேட்ட நேரத்திலே போலீஸ அதிகாரிகள் தலை குனிந்தார்கள்.

பிற்பகல் 8.25

இன்றைக்கு அழகாகச் சொன்னார்கள். மாண்புமிகு) முதல்வர் புரட்சித் தலைவி அவர்கள், மீனம்பாக்கத்திலே லாரி விபத்தின்போது அங்கே பாண்டிச்சேரியிலே தேர்தலை



முடித்துவிட்டு, பிறந்த தினத்திலே எங்களைப் போன்ற சகோதரர்களிடத்திலே அன்பைப் பெறவும் அன்பைக் கொடுக்கவும் வந்த நேரத்திலே, திட்டமிட்டு அதிகாலையில் விடிந்தும் விடியாப்பொழுதில, மாண்புமிகு முத்துசாமியும் மற்றவர்களும் வந்த பொழுது தாக்கிய அந்த வழக்கு பத்து நாளிலே முடிந்தது. 1,700 ரூபாயிலே முடித்துக் கொண்டார்கள். அதை நீங்கள் ஏன் ரீ-ஓப்பன் செய்யக் கூடாது என்று கேட்ட நேரத்திலே, பரந்த உள்ளம் படைத்த மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி என்ன சொன்னார்கள்? அலட்சியம் செய்யுங்கள்; இன்றைக்கு அந்த வழக்கு போட்டவரையெல்லாம் மக்கள் தெருவிலே நிறுத்தியிருக்கிறார்களே. அதுவே தண்டனை என்று--அவர்கள் அவர்களின் பெருந்தன்மை; ஒரு விரிந்த மனம், ஒரு பொறுப்புக்கு வரவர எவ்வளவு அடக்கமாக உயர்ந்து விட்டார்களே:

இதேபோலத்தானே மாண்புமிகு புரட்சித் தலைவருடைய வாழ்க்கையிலே ஒரு சம்பவம், அவர்கள் நெல்லைச் சீமைக்கு சென்று விட்டுத் திரும்புகிறார்கள். அந்த நெல்லைச் சீமையிலேயிருந்து திரும்புகிறபொழுது மணியாச்சி ஜங்ஷனிலே இருக்கிறபொழுது ஒருவன் கத்தியாலே தாக்க முயலுகிறான் மாண்புமிகு புரட்சித் தலைவரை. உடனடியாகப் போலீஸ் வருகிறது. கைது செய்கிறது. அப்பொழுது புரட்சித் தலைவர் சொன்னார்கள். விட்டு விடுங்கள், அவன் செய்வது அவனுக்கே தெரியாது என்று விரிந்த மனத்தோடு அவர் அன்றைக்கு மன்னித்தார். மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி இன்றைக்கு. அதேவகையில் தனக்கு தீங்கு இழைத்தவர்களையும் மன்னித்தார்.

உயர்ந்த பிறகு அடக்கத்தோடு இருக்கிறார்கள். உருக்கமாகச் சொன்னார்கள், வேண்டாம், மாண்புமிகு உறுப்பினர் தண்டாயுதபாணி அவர்களே, வாள் எடுத்தவன் வாளாலேயே சாவான் என்று அழகாகக் கூறினார்கள்.

இதை எதற்காகச் சொல்கிறேன் என்றால் என்னைப் போன்றவர்களுக்கு அந்தச் சிறைச்சாலையிலே இருந்து அதனுடைய சுக துக்கங்கள் தெரியும். எனவே, பத்தாயிரம் பேர் மதுரை சிறைச்சாலையிலே் இருந்தோம். மதுரையிலே ஆயிரம்பேர்தான் இருக்கலாம், ஆனால் முகவை மாவட்டத்திலேயிருந்து, காமராஜர் மாவட்டத்திலேயிருந்து, பக்கத்திலேயிருக்கிற அண்ணா மாவட்டத்திலேயிருந்து, ஆயிரம் ஆயிரம் பேர் வந்தார்கள் இந்திய தேசிய காங்கிரசைச் சார்ந்தவர்களும், அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சார்ந்தவர்களும் சாலை மறியலை ஒட்டி.

அங்கே ஒரு மரணம் கூட நிகழ்ந்துவிட்டது. திண்டுக்கல்லிலே இந்திய தேசிய காங்கிரஸைச் சேர்ந்த பாபா என்ற ஒரு இஸ்லாமிய உடன்பிறப்பு அங்கே மரித்தார். இரங்கல் கூட்டம் கூட போட்டு அங்கே நம்முடைய மாண்புமிகு முதல்வர் சார்பாக நான் அவர்களுக்கு இரங்கலைத் தெரிவித்தேன்.

அடுத்து, ஒரு கருத்து, நம்முடைய மாண்புமிகு திரு. சஞ்சய் ராமசாமி அவர்கள் பேசுகின்றபொழுது, நீதித் துறையிலே இன்றைக்கு வருகின்ற வருவாயையெல்லாம் எடுத்துக் கொண்டு, அதில் பத்து சதவீதம் கூட நீதிமன்றத்திற்குச் செலவு செய்யவில்லை என்ற தகவலை—அவருக்குத் தெரிந்த தகவலைச் சொன்னார்கள். இன்றைக்கு எனக்குக் கொடுக்கப்பட்டிருக்கின்ற தகவல் நீதி நிர்வாக வருவாய் 19 கோடியே 20 இலட்சம். இந்த நீதிமன்றங்களுடைய வாயிலாக நம்முடைய கஜானாவிற்கு மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவியினுடைய கருவூலத்திற்கு— கோட்டைக்கு வருவது 19 கோடியே 20 இலட்சம். ஆனால் இந்த நீதி மன்றங்களுக்காக ஆகிற எக்ஸ்பென்டிச்சர் 39 கோடியே 19 இலட்சம். ஆக, ஏறத்தாழ 20 கோடி இன்றைக்கு அரசாங்கம் நீதித் துறைக்காகச் செலவு செய்கிறதே தவிர, நீதித் துறையிலேயிருந்து பெற்று மற்றத் துறைகளுக்குக் கொடுக்கவில்லை என்ற தகவலையும் மாண்புமிகு நம்முடைய உறுப்பினர் சஞ்சய் அவர்களுடைய மேலான கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

பிற்பகல் 8.30

அடுத்து, இறுதியாக ஒரே ஒரு கருத்து. நம்முடைய சிறை நிருவாகம் என்பது உங்களுக்குத் தெரியும்; 40, 45 ஆண்டுகளுக்கு முன்பு உத்தமர் காந்தியடிகளும், பண்டித ஜவகர்லால் நேரு அவர்களும், வ. உ. சி. அவர்களும் திலகர் அவர்களும் விடுதலைப்போராட்டத்திலே போன சிறை வேறு; இன்றைக்கு சுதந்திரத்திற்குப் பிறகு இருக்கிற சிறை வேறு. அது மட்டுமல்ல; 1947-க்குப் பிறகு, இரண்டாண்டுகள் வரையிலே நடைபெற்ற குற்றங்கள்-கஸ்டமரி அஃபென்ஸஸ்'. கொலை நடக்கும்; 'மர்டர்' நடக்கும்; 'டகாய்ட்டி' நடக்கும்; அதைப்போல கொள்ளை நடக்கும்; 'ரேப்பிங்' - இவையெல்லாம் பரம்பரையாகச் செய்கிற குற்றங்கள்- ஆனால், இந்த இரண்டாண்டுகளாக தி. மு. க. ஆட்சிக்கு வந்த பிறகுதான், தேச விரோதக் குற்றங்களெல்லாம் வந்துவிட்டன. அதுவும் 'எல்.டி.டி.ஈ. என்ற ஒரு தீய சக்தி நுழைந்தது. அதைப்போல இங்கே இருக்கிற வகுப்புவாத சக்திகள் எல்லாம் கிளம்பின. ஆகவே, இன்றைக்கு சிறை நிர்வாகம்—'கஸ்டமரி அஃபெண்டர்ஸ்' இருக்கிறார்கள் அல்லவா, பரம்பரைக் குற்றவாளிகள்—கொலை செய்தவன்; கொள்ளையடித்தவன்; கற்பழித்தவன்; திருடியவன் இப்படிப்பட்ட குற்றங்களுக்காக மட்டுமல்லாமல், தேச



விரோதமாக இருக்கிற 'செக்யூரிடி பிரிசனர்ஸ்' இன்றைக்கு கோயம்பத்தூரில் 30 பேர் காஷ்மீரத்திலே இருந்து கொண்டு வந்து வைக்கப்பட்டிருக்கிறார்கள். 'மிலிடண்ட்ஸ்' அங்கே இன்றைக்கு கோயம்பத் தூர் சிறைச் சாலையிலே 30 அறைகளில் பாதுகாப்பாக ஜம்மு காஷ்மீர் அரசாங்கம், தமிழ்நாடுதான் பாதுகாப்பான இடம்; இந்தச் சிறை நிர்வாகம்தான் சரியான நிர்வாகம்; மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்களுடைய ஆட்சியிலேதான் பாதுகாப்பு இருக்கும் என்று ஜம்மு காஷ்மீர் மிலிடன்ட்ஸ் 30 பேர் இன்றைய தினம் கோவையிலே இருக்கிறார்கள். அதைப்போல எல்.டி.டி.ஈ.— மாண்புமிகு முதலமைச்சர் இன்றைக்கு காலையிலே, எல்.டி.டி.ஈ. யினர் எத்தனை பேர் சிறையிலே இருக்கிறார்கள் என்று சொன்னார்கள். அதற்கு ஆதரவாளர்கள் எத்தனை பேர் இருக்கிறார்கள் என்று சொன்னார்கள். அதைப்போல, கொள்ளைக் கூட்டத்திலே ஈடுபட்ட 'எகனாமிக் அஃபன்டர்ஸ்' எத்தனை பேர் இருக்கிறார்கள் என்று சொன்னார்கள். ஆக, இந்த குற்றவாளிகள் எல்லாம் இன்றைக்கு சிறைச்சாலையிலே இருக்கிற காரணத்தினாலே, அந்தச் சிறைச்சாலை இன்றைக்கு 'சென்சிடிவ் ஏரியா' அது மட்டுமல்ல; ஒப்பற்றத் தலைவர் இராஜீவ் காந்தி அவர்களை கொலை செய்த குற்றவாளிகள்கூட இன்றைக்கு பூந்தமல்லி 'சப்-ஜெயிலே' இருக்கிறார்கள். செங்கற்பட்டிலேயும் அவர்களைப் பாதுகாப்பதற்காக 500 போலீஸ். ஏனென்றால், இராஜீவ் காந்தியை கொலை செய்து, இன்றைக்கு நளினி, அவளுக்குப் பக்கத்திலே இருக்கிற முருகன் இவர்கள் எல்லாம் சாட்சியங்கள். அதுவும் சிவராஜன் தற்கொலை செய்து கொண்டான்; சுபா தற்கொலை செய்து கொண்டாள். அடுத்து இருக்கிற சாட்சியங்கள்; அதனை அழிக்க வேண்டும் என்பதற்காக திட்டமிட்டிருக்கிற நேரத்திலே, சிறைத் துறைதான் பாதுகாப்பு. ராஜீவ் காந்தியைக் கொலை செய்தவனுக்கு தண்டனையை அளித்தே தீர வேண்டும் என்பதற்காக இன்றைக்கு ஒரு கட்டுக்கோப்போடு, பூந்தமல்லியிலேயும் செங்கற்பட்டிலேயும் அந்த சென்சிடிவ் அஃபன்டர்ஸ்'— அவர்களையெல்லாம் வைத்து, எல். டி. டி .ஈ. -க்களை வைத்து, அதைப்போல 'மிலிடென்ட்'களை வைத்து இருக்கிற பொறுப்பு நம்முடைய சிறைக்கு வந்திருக்கிறது.

அதுமட்டுமல்ல; நான் 16 ஆம் தேதி— அன்றைய தினம் மதுரை சிறைக்குச் சென்றேன். மதுரை சிறைக்கு கைதியாக அல்ல; அமைச்சராகச் சென்றேன் அங்கே இருக்கிற குறைகளைக் கேட்க. தங்களுடைய குறைகளைச் சொன்னவர்களெல்லாம் மதுரை சிறைச் சாலையிலே இரண்டு மணி நேரம் சொன்னார்கள். அதிலே 10 ஆயுள் கைதிகள் பெண்கள். அதிலே ஒரு நல்ல பால்வடிகின்ற முகத்தைக்

கொண்ட என்னுடைய பெண் போல ஒரு பிள்ளை அங்கே.
அவரைக் கேட்டேன். என்னம்மா தவறு செய்தாய் என்று
கேட்டேன். அண்ணா, நான் கொலை செய்து விட்டேன்.
எந்த ஊர்—கரூர்; பெயர்—தமிழ் மணி; அவள் சொன்னாள்
ஒரு குறை அண்ணா, நான் இன்றைக்கு உயர்நீதி மன்றத்
திற்கு முறையீடு செய்திருக்கிறேன் எனக்கு அதிகாரிகள்
ஒத்துழைப்பு இல்லை என்று. அந்தச் சகோதரியிடத்திலே
சொன்னேன்; மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடத்திலே
சொல்லி, அதைப் போல உயர் நீதிமன்றத்தின் கவனத்திற்கு
கொண்டுவந்து உன்னுடைய வழக்கைத் துரிதப்படுத்துகிறேன்
அம்மா என்றேன். தமிழ்மணி என்ற அந்தப் பெண்
சொன்னாள்; நான் செய்தது தப்புதான்; நான் திருந்தி
விட்டேன் என்று. தமிழ்மணி என்ற அந்த 24 வயது பெண்
18 வயதிலே சிறைச்சாலைக்கு வந்தாள். ஆறு ஆண்டுகளாக
மதுரையில் தண்டனை அனுபவித்து வருகிறாள்.

இனி ஒரு ஆயுள் கைதி, அங்கே. சோமசுந்தரம் என்பவன்.
எந்த ஊர் என்று கேட்டேன். அண்ணா, நான்
எழும்பூர். எத்தனை ஆண்டுக்கு முன் இங்கே வந்தாய்?
10 ஆண்டுகளுக்கு முன்பு. ஏன்? நான் கொலை செய்து
விட்டேன். ஆனால், அவன் நுழைகிறபோது—மதுரை சிறைச்
சாலைக்கு நுழைகிறபோது, 10வது-டென்த் ஸ்டாண்டர்டு'
இன்றைக்கு சட்டக் கல்லூரியிலே அவனுக்கு இடம் கிடைத்
திருக்கிறது. அவன் சொன்னான்: அண்ணா, நான் பி.ஏ.
பாஸ் செய்தவன்; எம். ஏ. பாஸ் செய்திருக்கிறேன்.
வக்கீலாக ஆக வேண்டும். 10 ஆண்டுகள் எனக்கு நான்
விட்டது. இன்னும் இரண்டு ஆண்டுகள் இருக்கிறது அண்ணா. முடிந்து
இந்த முறை எனக்குத் தகுதியின் அடிப்படையில் 'லா
காலேஜில்' அட்மிஷன் கிடைத்திருக்கிறது.
புரட்சித் தலைவி அவர்களிடத்திலே சொல்லி, மாண்புமிகு
கல்லூரிக்கு விடுங்கள் என்று சொன்னார். என்னை வெளியே
களுக்கு முன்பு, மாண்புமிகு புரட்சித் தலைவி இரண்டு நாட்
திலே சொன்ன பிறகு, இன்றைக்கு அவன் மதுரை அவர்களிடத்
கல்லூரியிலே சென்று படித்து வருகிறான். சட்டக்
சுந்தரம். பெயர் சோம

அதைப்போல, பாளையங்கோட்டையிலே
தரன்; அவன் எம். ஏ. முடித்துவிட்ட பிறகு பி. எல். ஒரு சகோ
விட்ட பிறகு, இன்றைக்கு டாக்டர் முடித்து
படித்துக் கொண்டு வருகிறான். பட்டத்திற்காக

பிற்பகல் 8-35

இதை எதற்காகச் சொல்கிறேன் என்றால், மாண்புமிகு
புரட்சித் தலைவி அவர்களுடைய ஆட்சிக்காலத்தில் இந்த சிறைச்
சாலை என்பது Humanised Prison House
சாலை மனித நேயம் உள்ள இடமாக, மனிதனாக ஆக்குவது. சிறைச்



குற்றவாளிகள் அங்கே சென்று திரும்புகிறபோது அவர்களை
மனிதனாக ஆக்குகிறது. அது தண்டிக்க அல்ல, திருத்த.
நல்ல மனிதனாக ஆக்க. Humanised Prison House
என்ற அளவிலே மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்கள்
கல்விக்காகக் கொடுக்கிறார்கள், பிறகு சிறையிலே இருந்து
வருகிறவர்களுக்கு வேலை வாங்கிக் கொடுக்கிறார்கள். 'லீகல்
எய்டு' சட்ட உதவி கொடுத்து இன்றைக்கு இது சிறை அல்ல
ஒரு திருந்துகிற இடம். மனிதனைத் திருத்துகிற, புதிய
மனிதனாக ஆக்குகிற இடம். Humanised Prison House
அது சிறை அல்ல. ஆனால் மனிதனை மனிதனாக ஆக்க,
திருந்த, உணர, அந்த முறைகளை எல்லாம் மாண்புமிகு
புரட்சித் தலைவி அவர்கள் எடுத்திருக்கிறார்கள். ஆக,
இன்றைக்கு Security Prisoners அதிகமாக
இருக்கின்ற காரணத்தால், அவர்களுடைய வலிமை, இன்
றைக்கு மத்திய அரசாங்கத்திற்குக் கூட மாண்புமிகு புரட்சித்
தலைவி அவர்கள் சொல்லியிருக்கிறார்கள், ஜே. கே.
மிலிடன்ட்ஸ் வைத்து இருக்கிறபோது, பாதுகாப்புச் செலவு
அதிகமாக இருக்கிறது. மத்திய சர்க்காரும் இதில் பங்கு
கொள்ள வேண்டுமென்றெல்லாம் எழுதியிருக்கிறோம். அவர்
களும் அதற்கு ஒத்துழைப்புத் தருவார்கள் என்ற ஆழ்ந்த
நம்பிக்கை இருக்கிறது. இன்றைக்கு நீதித் துறை,
சிறைத் துறை இந்த இரண்டு துறைகளிலும் ஒரு
பொன்னேட்டை உருவாக்குவதற்கு மாண்புமிகு புரட்சித்
தலைவி அவர்கள் முயன்று கொண்டிருக்கிறார்கள். ஆக,
இங்கே வெட்டுத் தீர்மானங்கள் கொடுத்த நண்பர்கள் நீங்கள்
சொன்ன கருத்துக்களை மனதிலே கொண்டு, உரிய அதிகாரி
களோடு துரிதமாகப் போர்க்கால நடவடிக்கை எடுத்து, அவை
களைச் செயலாற்றுவோம் என்று சொல்லி, நீங்கள் அளித்
திருக்கிற வெட்டுத் தீர்மானங்களைத் திரும்பப் பெற்று
இன்றைக்கு இந்த மானியத்தை அருள்கூர்ந்து நீங்கள் நிறை
வேற்றித் தருமாறு. பணிவுடன் மாண்புமிகு பேரவைத்
தலைவர் மூலமாக நான் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. என். பன்னீர்,
செல்வம்.

**திரு. என். பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத்
தலைவர் அவர்களே, பேரறிஞர் அண்ணா அவர்கள் பிறந்த
தினத்திலே ஆயுள் கைதிகளுக்கும், வருடக் கைதிகளுக்கும்
பல வருடங்கள் மார்க்குகள் கொடுத்துத் தள்ளுபடி செய்யப்
பட்டுள்ளது. இப்போது அது செய்யப்படுகிறதா; அப்படிச்
செய்யவில்லையென்றால், அது செய்யப்படுமா என்பதை அறிய
விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் அண்ணா பிறந்த தினத்திற்கு மதுரைக்குச் சென்றிருந்தேன். அப்போது அங்கே இருக்கின்ற ஆயுள் கைதிகள் இதைச் சொன்னார்கள். எப்படியோ இந்தக் குறை நிர்வாகத்திலே ஏற்பட்டுவிட்டது. இதைப் போக்குகின்ற வகையில், மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் பிறந்த தினம் ஜனவரி 17-ஆம் தேதி வருகிறது. அடுத்து நம்முடைய மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்களுடைய பிறந்ததினம் பிப்ரவரி 24 ஆம் தேதி வருகிறது. ஆக, இதனை மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வந்து, இந்த இரண்டு தினங்களிலும் அந்த இழந்த இழப்பை ஈடு செய்ய முயற்சி எடுப்பேன் என்று, மாண்புமிகு உறுப்பினருடைய மேலான கவனத்திற்குக் கொண்டுவருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள்.

**திரு. எஸ். ஆர். பாலசுப்ரமணியன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நீதி மன்றங்களில் தமிழ் ஆட்சி மொழியாக வரவேண்டுமென்ற நோக்கத்தோடு, காமராஜர் அவர்கள் முதலமைச்சராக இருந்த நேரத்தில் சட்ட ஆட்சி மொழி ஆணையம் ஒன்று அமைக்கப்பட்டது. அன்றைய தினம் நீதிபதியாக இருந்த அனந்தநாராயணன் அதற்குத் தலைவராக இருந்தார். அதனுடைய அடிப்படையிலே சில தமிழ் நூல்கள் கூட சட்டத் தமிழ் நூல்கள் வந்திருக்கின்றன. கடந்த திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில், அதே ஆணையம் புதுப்பிக்கப்பட்டது. புதுப்பிக்கப்பட்டாலும் கூட, இன்று வரையிலும், தமிழ் நூல்கள் எதுவும் வந்ததாகத் தெரியவில்லை. எனவே, நீதி மன்றங்களில் தமிழ் ஆட்சி மொழியாக வரவேண்டுமென்ற வண்ணம், அந்த சட்ட ஆட்சி மொழி ஆணையம் திருத்தியமைக்கப்பட்டு விரைவிலே மத்திய மாநில சட்டங்கள் அனைத்தும் தமிழிலே வருவதற்கு வழிவகை காணப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்களுடைய ஆட்சிக் காலத்தில் அது துரிதமாகச் செயல்பட்டது. இடையிலே ஒரு தேக்கம். நிச்சயமாக, மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் சொன்ன கருத்தைப் பரிசீலித்து ஆவன செய்யப்படும்.



**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** திரு. எஸ். ஜெயக்குமார்.

**திரு. எஸ். ஜெயக்குமார் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கார்ப்பரேஷன் மஸ்டர் ரோல் கேஸில் திராவிட முன்னேற்றக் கழகக்காரர்கள் என்ற காரணத்தால் அரசால் அச்சுறுத்தலானதை எதிர்த்து சுப்ரீம் கோர்ட்டில் நமது அரசு அப்பீல் செய்ய முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே அது பரிசீலனையில் இருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** திருமதி ஜீனத்சர்புதீன்.

**திருமதி ஜீனத் சர்புதீன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ரயில் மறியலின்போது நாங்கள் எல்லாம் மத்தியச் சிறையில் அடைக்கப்பட்டோம். அப்போது மிகமிக மோசமாக எங்களை நடத்தினார்கள். அப்போது திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி இருந்தது. அப்போது இருந்த ஜெயில் சூப்பிரண்டிடம் சென்று, நாங்கள் எல்லாம் அரசியல் கைதிகள். எங்களை இப்படி நடத்துகிறீர்களே என்று கேட்டோம். அரசியல்வாதியாக இருந்தாலும்சரி மற்றவர்களாக இருந்தாலும் சரி. சிறைச்சாலைக்கு வந்து விட்டால் எல்லோரும் ஒன்றுதான் என்று சொன்னார்கள். சட்டம் அப்படி இருக்கிறதா என்று நான் அறிய விரும்புகிறேன்.

*பிற்பகல் 8-40*

**மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னையும் அப்படித்தான் நடத்தினார்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** திரு. வ. சத்தியமூர்த்தி.

**திரு. வ. சத்தியமூர்த்தி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதய தெய்வம் புரட்சித் தலைவருடைய ஆட்சிக் காலத்தில் டைரக்டரேட் ஆஃப் ப்ராசிக்யூஷன் ஏற் படுத்த வேண்டும் என்பதற்கான ஒரு கோப்பு தயாரிக்கப்பட்டு உத்தரவிடும் நிலையில் இருந்தது. கடந்த ஆட்சியாளர்கள் அதைக் கிடப்பில் போட்டுவிட்டார்கள். அதை மறு பரி சீலனை செய்து டைரக்டர் ஆஃப் ப்ராசிக்யூஷன் உடனே ஏற்படுத்த அரசு முன் வருமா என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதுபற்றிய விவரம் என் கையிலே தற்போது இல்லை. மாண்புமிகு உறுப்பினர் சொன்ன அந்தக் கருத்தை அரசு பரிசீலனை செய்யும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** திரு. வி. தண்டாயுதபாணி.

**திரு. வி. தண்டாயுதபாணி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கேட்டார்ப் பிணிக்கும் தகையவாய்' என்ற வகையில் மாண்புமிகு அமைச்சர் அவர்களின் பதிலுரை அமைந்திருந்தது. குடியாத்தத்திலே கடந்த இரண்டு மாத காலமாக வழக்கறிஞர்கள் சங்கத்தினர் வேலை நிறுத்தம் செய்து வருகிறார்கள். பொதுமக்கள் அவதிக்கு ஆளாகி இருக்கிறார்கள். அந்த வேலை நிறுத்தம் எப்போது முடிவுக்கு வரும் என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கூறுவார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திரு. தண்டாயுதபாணி அவர்கள் கடந்த 10 நாட்களுக்கு முன்பு அந்த வேலை நிறுத்தத்திற்கான காரணத்தை ஒரு மனுவின் வாயிலாக தெரிவித்திருக்கிறார்கள். அது சம்பந்தமாக சம்பந்தப்பட்ட உங்களுக்குத் தெரியும். நீதிபதிகள் பற்றிய நடவடிக்கை எடுக்கவேண்டுமென்றால் உயர்நீதி மன்றத்திலேதான் தகவல் அளிக்கவேண்டும். அவர்கள் அரசாங்கப் பணியாளர்கள் அல்ல. அவர்கள் அரசு ஊழியர்கள் அல்ல. ஆகவே சம்பந்தப்பட்ட நீதிபதி அங்கே ஒரு முறைகேடாக நடந்துவிட்டார். எனவே வழக்கறிஞர்கள் அதை உயர்நீதி மன்றத்தினுடைய கவனத்திற்குக் கொண்டு வந்து, சீரமைத்து, வழக்கறிஞர்கள் பணிக்கு வர ஆவன செய்வோம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** திரு. க. அர்ச்சுனன்.

***திரு. க. அர்ச்சுனன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள், வனச் சரகத்தில் நடைபெற்ற தி.மு.க. திருட்டு சம்பந்தமாக ஹைக் கோர்ட்டினுடைய ஜட்ஜ்மெண்ட் பற்றி தெரிவித்தார்கள். இது இந்த அமைச்சருக்குச் சம்பந்தப்பட்ட விஷயமாக இல்லாவிட்டாலும் கூட ஹோம் டிப்பார்ட்மெண்ட் மூலமாக விசாரணை மேற்கொண்டு அதில் நிமிர்ந்து நின்ற அதிகாரி வேலை நீக்கம் செய்யப்பட்டிருக்கிறார்கள். வளைந்து கொடுத்த அதிகாரிகள் பதவி உயர்வு பெற்றிருக்கிறார்கள்.



இதை அமைச்சர் அவர்கள் கவனித்து பாதிக்கப்பட்ட அதிகாரிகளை மீண்டும் வேலையில் சேர்த்துக்கொள்வதற்கும், வளைந்து கொடுத்து ப்ரோமோஷன் பெற்றிருக்கின்ற அதிகாரிகள் மீது நடவடிக்கை எடுப்பதற்கும் பரிசீலிப்பார்களா என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடத்திலே இதற்கான ஒரு மனு கொடுக்கப்பட்டிருக்கிறது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சம்பந்தப்பட்ட ஃபாரஸ்ட் டிப்பார்ட்மெண்ட் உடைய தலைமை அதிகாரிகளுக்கு எழுதி இதுபற்றி கருத்துக் கேட்டுக் கொண்டிருக்கிறார்கள். விரைவில் மாண்புமிகு முதலவர் புரட்சித் தலைவி அவர்களே உரிய நடவடிக்கை எடுத்து அதில் தவறு செய்த அதிகாரிகள் யாராக இருந்தாலும் தண்டிப்பார்கள் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** பார்வையாளர் மாடத்தில் இருந்து இரண்டு முறை வெளிச்சம் ஃப்ளாஷ் லைட் செய்ததாகத் தெரிகிறது. காவலர்கள் அதுபற்றி சோதிக்குமாறு கேட்டுக்கொள்கிறேன். திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சட்ட அமைச்சர் மீது 302-வது பிரிவின் கீழ் வழக்கு தொடுக்கப்பட்டதாகச் சொன்னார்கள். எனவே, அப்போது கொலை செய்யப்பட்டதாகச் சொல்லப்படுகிற கருணாநிதி உயிரோடு இருக்கிறாரா, இல்லையா என்பதை நான் அறிய விரும்புகிறேன். (சிரிப்பு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** திரு. சஞ்சய் ராமசாமி.

**Thiru Sanjay Ramasamy** Disappointed We are, no doubt, Honourable speakerThe Honourable Law Minister stated that it was a matter of pride for me. I just wish to correct him that it is a matter of my duty. But I want to thank him for having given a Court atleast in Kamarajar district now and not elsewhere outside the district. We may have wanted it in Virudhanagar. We expect justice but if this is justice we do accept it. Thank you.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** திருமதி ஏ.எஸ். பொன்னம்மாள்.

**திருமதி ஏ.எஸ். பொன்னம்மாள் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நிலக்கோட்டையிலே கோர்ட் சாங்ஷன் செய்து நீண்ட நாட்கள் ஆகிவிட்டன. அதை ஆரம்பிப்பதற்காக அங்கே பக்கத்தில் லோகல் பண்ட் ஆஸ்பிடல்

**இருந்த இடம் காலியாக இருக்கிறது. அந்த இடத்தை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பொதுப்பணித்துறை அமைச்சரிடத்திலே சொல்லி, வாங்கி உடனடியாக அங்கே கோர்ட் ஆரம்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.**

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நிலக்கோட்டை அண்ணா மாவட்டத்தில் இருக்கிறது. அண்ணாவின் மீது எவ்வளவு மரியாதையும், மதிப்பும் வைத்திருக்கிறோம் என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரியும். எனவே, விரைவில் நல்ல செய்தியை உங்களுக்குக் கொடுப்பேன் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. டி.எம். ரங்கராஜன்.

பிற்பகல் 8-45

திரு. டி. எம். ரங்கராஜன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம் ஒப்பற்ற தலைவி, புரட்சித் தலைவி அவர்கள் முதல்வர் ஆனவுடன்தான் நீதித் துறைக்கும் தமிழக அரசுக்கும் சுமூக உறவு உள்ளது. ஆனால் இன்றைக்கு நடைமுறைக்கு ஒவ்வாத பல சட்டங்கள் நடைமுறையில் உள்ளன. உதாரணத்திற்கு குதிரை வண்டி சட்டம் என்பது ஒன்று அந்த சட்டங்களிலே. அவற்றை ஆய்வு செய்து திருத்த 'ஸ்டேட் லா கமிஷன்' அமைக்க அரசு முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கருத்தை நான் மனதிலே கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அந்த வெளிச்சம், பிளாஷ் வந்தது— வெளியிலே மழை பெய்து கொண்டிருக்கிறது. மின்னல் அடித்த காரணமாக வந்திருக்கிறது.

விவாதம் முடிவுற்றது. இப்போது வாக்கெடுப்பு. கோரிக்கை எண் 13—நீதி நிருவாகம் மாண்புமிகு பேரவைத் தலைவர் மானிய கோரிக்கை எண். 13 நீதி நிருவாகம். வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்படுகின்றனவா என அறிய விரும்புகிறேன். திரு. ஆர். சிங்காரம்

திரு. ஆர் சிங்காரம்; இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. ஆர். சிங்காரம் அவர்களுடைய வெட்டுத்தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெற்றுக் கொள்ளப் பெற்றது.



''நீதி நிருவாகம் பற்றிய 13-ஆம் எண் மானியக் கோரிக்கையின் கீழ் ரூ. 35,30,41,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்''

என்னும் மாண்புமிகு சட்ட அமைச்சர் அவர்களுடைய தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் ''ஆம்'' என்க. (ஆம்).
மறுப்போர் ''இல்லை'' என்க. (இல்லை).
ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது. அரசுக்குக் கோரிய தொகை வழங்கப்பெற்றது.

கோரிக்கை எண் 14 — சிறைச்சாலைகள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மானியக் கோரிக்கை எண். 14. ''சிறைச் சாலைகள்''. மானியக் கோரிக்கைக்கான வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்படுகின்றனவா என்பதை அறிய விரும்புகிறேன். திரு. சி. ஞானசேகரன்.

திரு. சி. ஞானசேகரன் : இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. சி. ஞானசேகரன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெற்றுக்கொள்ளப்பெற்றது.

''சிறைச்சாலைகள் பற்றிய 14-ஆம் எண் மானியக் கோரிக்கையின் கீழ் ரூ. 19,48,70,000-க்கு மேற்படாத என்றும் தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்''

என்னும் மாண்புமிகு சட்ட அமைச்சர் அவர்களுடைய தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)
மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை).
ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது. அரசுக்குக் கோரிய தொகை வழங்கப்பெற்றது

பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. பேரவை மீண்டும் நாளை (25—9—1991) முற்பகல் 9.30 மணிக்குக் கூடும். வணக்கம்.

பின்னர், பேரவை 8-47 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.

[1991 செப்டம்பர் 24

அ. சட்டப்படிக்கான விதிகளும், ஆணைகளும்.

109. 1987—88 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு குடிசை மாற்றுவாரியத்தின் ஆண்டு கணக்குகளின் மீதான தணிக்கை அறிக்கை. (1971 ஆம் ஆண்டு தமிழ்நாடு குடிசைப் பகுதி அபிவிருத்தி மற்றும் அகற்றுதல்) சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 11/1971) 72(2) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது. (ஆங்கிலம்).

110. 1987-88 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு அரசு பண்ணைகள் கழகத்தின் பதிமூன்றாம் ஆண்டறிக்கை (1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்திய சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப் பெற்றது (தமிழ், ஆங்கிலம்).

111. 1988-89 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு அரசு பண்ணைகள் கழகத்தின் பதினான்காம் ஆண்டறிக்கை (1956-ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்திய சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது (தமிழ், ஆங்கிலம்).



1991 செப்டம்பர் 24]

112. 1987-88 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு கோழியின வளர்ச்சிக் கழகத்தின் பதினைந்தாம் ஆண்டறிக்கை (1956-ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்திய சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது. (தமிழ், ஆங்கிலம்).

ஆ. அறிக்கைகள், அறிவிக்கைகள் ஏனைய தாள்கள்.

93. ஊரக மற்றும் சிறு தொழில்கள் துறையின் சாதனைத் திட்டம், 1991-92 (தமிழ்).

94. கோரிக்கை எண். 2 (மாநில ஆயத் தீர்வைத் துறையின் கொள்கை விளக்கக் குறிப்பு (தமிழ், ஆங்கிலம்).

95. கோரிக்கை எண். 27—தமிழ் நாடு கதர் கிராமத் தொழில் வாரியத்தின் கொள்கையும் திட்டங்களும், 1991—92 (தமிழ், ஆங்கிலம்).

96. கோரிக்கை எண். 48- பட்டு வளர்ச்சித் துறை மற்றும் தமிழ் நாடு கைத்திறப் பொருட்கள் வளர்ச்சித் துறையின் கொள்கையும் திட்டங்களும், 1991-92. (தமிழ், ஆங்கிலம்).

97. ஊரக வளர்ச்சித் தொழில் சிறு தொழில்கள் துறையின் செயலாக்க ஆய்வு, 1990-91. (தமிழ், ஆங்கிலம்).

98. பட்டு வளர்ச்சித் துறையின் சாதனைத் திட்டம், 1991—92 (தமிழ், ஆங்கிலம்).

99. கோரிக்கை எண். 13-நீதி நிருவாகத் துறையின் கொள்கை விளக்கக் குறிப்பு, 1991-92. (தமிழ், ஆங்கிலம்).

100. கோரிக்கை எண். 14. சிறைச்சாலைகள் நிருவாகம் குறித்த கொள்கை விளக்கக் குறிப்பு, 1991-92 (தமிழ், ஆங்கிலம்).

101. கோரிக்கை எண். 20 வேளாண்மை குறித்த கொள்கை வளக்கக் குறிப்பு, 1991-92 (தமிழ், ஆங்கிலம்).

102. வேளாண்மைத் துறை குறித்த செயல்வினை முறைத் திட்டம், 1991-92. (தமிழ், ஆங்கிலம்).

103. தமிழ்நாடு வேளாண்மைத் தொழில்கள் கழகம் மீதான ஆய்வுரை, 1990-91 (தமிழ், ஆங்கிலம்).

104. தமிழ்நாடு வேளாண்மைப் பொறியியல் மற்றும் பணிக் கூட்டுறவு இணையம் மீதான ஆய்வுரை, 1990-91. (தமிழ், ஆங்கிலம்).

105. தமிழ்நாடு கூட்டுறவு எண்ணெய் வித்துக்கள் உற்பத்தியாளர்கள் இணையம் மீதான ஆய்வுரை, 1991-92 (தமிழ், ஆங்கிலம்).

106. ஊரக வளர்ச்சி மற்றும் சிறு தொழில்கள் துறையின் சாதனைத் திட்டம், 1991-92. (ஆங்கிலம்).

## இணைப்பு—1.

( 56 ஆம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க)

### 1991-92 ஆம் ஆண்டுக்கான வேளாண்மை குறித்த கொள்கை விளக்கக் குறிப்பு.

### வேளாண்மை.

தமிழ்நாட்டில் நாளுக்கு நாள் குறைந்து வருகிற நீர் வளங்களைக் கருத்தில் கொண்டு, உரிய அளவிற்கு வேளாண் உற்பத்தியைப் பெருக்குவதற்கு கடந்த பல ஆண்டுகளாக வேளாண்மைத் துறையில் குறிப்பாக வேளாண் கொள்கை திட்டமிடுதலில் கவனம் செலுத்தப்பட்டு அவற்றிற்கு முக்கியத்துவம் அளிக்கப்பட்டுள்ளது. மேற்சொன்ன சிக்கல்களைச் சமாளிக்க பரந்த நோக்குடைய வேளாண்மை விரிவாக்கத் திட்டம் செயல்படுத்துவதுடன் குறிப்பாக மானாவாரிப் பயிர்களுக்கு தொழில்நுட்பங்களை மாற்றியமைத்தல், நல்ல தரமான விதைகள் கிடைக்கச் செய்தல், கிடைக்கும் இடுபொருட்களைப் பயனுள்ள வகையில் பகிர்ந்தளித்தல் போன்ற வேளாண் விரிவாக்க நடைமுறைகளைச் சிறந்த முறையில் பயன்படுத்துவது அவசியமாகிறது.

### 1990-91 ஆம் ஆண்டில் பெய்த மழையளவும் 1991-92 ஆம் ஆண்டில் எதிர்பார்க்கப்படும் மழையளவும்.

1990-91 ஆம் ஆண்டில் பருவமழையளவு தமிழ்நாட்டில் வேளாண் உற்பத்துககு ஆதரவாக இல்லை. 1990 ஆம் ஆண்டில் பெய்த ஆண்டு மழையளவு வழக்கமான மழையளவாக இருப்பதாகத் தோன்றினாலும், பெரியார், திருச்சிராப்பள்ளி, புதுக்கோட்டை, தருமபுரி, சேலம், வட ஆற்காடு-அம்பேத்கார், திருவண்ணாமலை-சம்புவராயர் ஆகிய மாவட்டங்களில் பருவ மழைக்காலங்கள் இரண்டிலும் 20 சதவீதத்திலிருந்து 40 சத வீதம் வரை குறைவாகவே இருந்தது. மழை குறைந்ததன் காரணமாகவும் நீர்த்தேக்கங்களில் நீர் இருப்புகுறைந்ததன் காரணமாகவும் 1990-91 ஆம் ஆண்டில் நீர்ப்பாசன பகுதிகள் கணிசமான அளவிற்குக் குறைந்தன எனினும், காமராசர் திருநெல்வேலி கட்டபொம்மன், சிதம்பரனார், கன்னியாகுமரி ஆகிய தென் மாவட்டங்களில் வடகிழக்குப் பருவ காலத்தில் அதிக அளவு மழை பெய்தது. இது நெல் உற்பத்தியில் ஏற்பட்ட சரிவை ஓரளவிற்கு ஈடு செய்ய இம்மாநிலத்திற்கு உதவியது.

1991-92 ஆம் ஆண்டில் எதிர்பார்க்கப்படும் மழையளவும் மன நிறைவளிப்பதாகவும் இல்லை. பருவமழையளவு வழக்கத்தை விடச் சற்று குறைவாக இருக்கலாமென்று வானிலை ஆய்வு



மையம் அனுமானித்துள்ளது. இக்கட்டான இச்சூழ்நிலையில் 1991 ஜூன் திங்கள் முதல் 1992 மேத் திங்கள் வரை தமிழ்நாட்டிற்கு 205 டி.எம்.சி. தண்ணீர் விடுமாறு காவிரி நீர்த் தகராறு குறித்த நடுவர் மன்றம் இடைக்காலத் தீர்ப்பு வழங்கியது சற்று ஆறுதலளிக்கக் கூடிய ஒரு விஷயமாகும். ஆனால் இந்த இடைக்காலத் தீர்ப்பைக் கர்நாடக அரசு எதிர்ப்பதால் தமிழ்நாட்டில் வேளாண்மை தொழில் நிலைமை இப்பிரச்சினையின் இறுதித் தீர்ப்பைப் பொறுத்தே அமையும். இருப்பினும் இவ்வாண்டு ஜூலைத் திங்கள் முதல் பெய்த கணிசமான மழையின் காரணமாக மேட்டூர் நீர்த்தேக்கம் நிரம்பியுள்ளதால் விவசாய பணிகள் தீவிரமடைந்துள்ளது.

### 1991-92 ஆம் ஆண்டில் பயிரிடப்பட்ட நிலப்பரப்பும் வேளாண் உற்பத்தியும்.

தமிழ்நாட்டில் கிடைக்கிற நிலையற்ற நீர் ஆதார நிலைமையைக் கருத்தில் கொண்டு, 1991-92 ஆம் ஆணடில் பயிரிடப்பட்ட மதிப்பீட்டு நிலப்பரப்பு வேளாண் உற்பத்தி குறித்த விவரங்களும் முந்தைய ஆண்டில் (1990-91) பயிரிடப்பட்ட மதிப்பீட்டு நிலப்பரப்பு வேளாண் உற்பத்தி குறித்த விவரங்களும் கீழே கொடுக்கப்பட்டுள்ளன :—

| | 1991-92-ல் | | 1990-91-ல் | |
|---|---|---|---|---|
| | பயிரிட உத்தேசிக்கப்பட்ட நிலப்பரப்பு (இலட்சம் எக்டேர்). | மதிப்பீடு செய்யப்பட்ட உற்பத்தி (இலட்சம் மெட்ரிக் டன்.) | பயிரிடப்பட்ட நிலப்பரப்பு (இலட்சம் எக்டேர்) | மதிப்பீடு செய்யப்பட்ட உற்பத்தி (இலட்சம் மெட்ரிக் டன்). |
| (1) | (2) | (3) | (4) | (5) |
| நெல் .. .. | 21.10 | 62.50 | 18.75 | 57.00 |
| சிறு தானியங்கள் .. | 16.00 | 17.00 | 12.38 | 14.50 |
| பயிறு வகைகள் .. | 10.00 | 4.60 | 9.39 | 3.94 |
| பருத்தி .. | 2.30 | 6.00 | 2.37 | 5.30 |
| கரும்பு .. .. | 2.00 | 24.00 | 2.36 | 24.25 |
| எண்ணெய் வித்துக்கள் | 12.91 | 14.50 | 12.11 | 12.6[illegible] |

## இடுபொருட்கள்.

**விதைகள் :**

கலப்பின விதையைக் கொண்டு, சான்றளிக்கப்பட்ட நிலை களில் ஆதாரவிதை உற்பத்தியைப் பெருக்குவதற்கு, மாநிலம் சிறந்த முறையில் அமைக்கப்பட்ட திட்டமொன்றைக் கொண்டுள்ளது. தமிழ்நாடு ஜி.டி. நாயுடு வேளாண்மைப் பல்கலைக்கழகம், மாநில விதைப் பண்ணைகள் ஆகியவற்றின் உதவியுடனும் முற்போக்கு உழவர்களின் உதவியுடனும் பல்வேறு பயிர்களுக்கான விதைகள் உற்பத்தி செய்யப்பட்டு, செய்முறைப்படுத்தப்பட்டு வழங்கப்படுகின்றன. முன்னர் இருந்ததைவிட பெருமளவில் விதை உற்பத்தி செய்வதற்குத் தனியார் விதை உற்பத்தி உழவர்களை ஈடுபடுத்தவும் கொள்கை முடிவு எடுக்கப்பட்டுள்ளது.

உரவிலை ஏற்றத்தை கருத்தில் கொண்டு இயற்கைஉரமான பசுந்தாள் உரமிடுவதன் மூலம் மண்வளத்தைப் பெருக்கு வதற்காக 200 மெட்ரிக் டன் பசுந்தாள் உர விதைகள் 1991-92 ஆம் ஆண்டில் வழங்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

**இரசாயன உரங்கள் :**

1990-91ஆம் ஆண்டில் 8.58 இலட்சம் மெட்ரிக் டன் என்.பி.கே. (N.P.K.) இரசாயன உரம் வழங்கத் திட்டமிடப் பட்டது. அதில் 1991 மார்ச்சு திங்கள் வரை 8.54இலட்சம் மெட்ரிக் டன் உரம் வழங்கப்பட்டது.

1991-92ஆம் ஆண்டில் என்.பி.கே. (N.P.K.) இரசாயன உரம் வழங்கும் திட்டம் விவரம் வருமாறு :—

| | |
|---|---|
| நைட்ரஜன் (N.) | 5.28 இலட்சம் மெட்ரிக் டன். |
| பாஸ்பரஸ் (P) | 1.98 இலட்சம் மெட்ரிக் டன். |
| பொட்டாசியம் (K) | 1.90 இலட்சம் மெட்ரிக் டன். |
| மொத்தம் | 9.16 இலட்சம் மெட்ரிக் டன். |

எனினும் நிலுவைத் தொகையைத் திருப்பிச் செலுத்துவதில் பாதகமான நிலைமை ஏற்பட்டதாலும் அந்நியச் செலாவணி குறைந்ததாலும் இரசாயன உரம் இறக்குமதி பெரிதும் பாதிக் கலாம் என்பது சாத்தியமான ஒன்றாகும். இதனால் இரசாயன உரம் கிடைப்பதும் பாதிக்கப்படும் எனினும் இச்சூழ்நிலை நம்



மாநிலத்தை மட்டுமல்லாது நம் நாடு முழுவதையுமே பாதிக்கும் இத்தகைய சூழ்நிலை தொடர்ந்து நிலவுமானால் நம் மாநிலத்தில் கிடைக்கக் கூடிய உரங்களைக் கொண்டு அதன் பாதிப்பைக் குறைக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

**தரக்கட்டுப்பாடு.**

1990-91ஆம் ஆண்டில் 11,298 இரசாயன உர மாதிரிகளில், தரக்கட்டுப்பாட்டு ஆய்வு செய்யப்பட்டது. இவற்றில் 940 உர மாதிரிகள் தரம் குறைந்தவையாக இருந்தன. தரம் குறைந்த உரங்களை உற்பத்தி செய்த உரத்தயாரிப்பாளர்கள், உர வியாபாரிகள் ஆகியோர் மீது கடுமையான நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. இவ்வாண்டு 384 உரிமங்கள் தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்பட்டுள்ளன; ஒரு உரிமம் ரத்து செய்யப்பட்டுள்ளது. இவ்வழக்குசன் தொடர்பாக நீதிமன்றங்களில் 10 தீர்ப்புகளில் குற்றவாளியென தீர்ப்புகள் பெறப்பட்டுள்ளன. விற்பனை மையங்களில், உடனடிச் சோதனை மேற்கொள்வதற்காக, தரக்கட்டுப்பாட்டுப் பணியாளர்களுக்கு விரைவாக உரத்தின் தரத்தைச் சோதனையிடும் கருவிகள் அடங்கிய சிறுபெட்டிகள் 25 வழங்கப்பட்டது. உழவர்களுக்கு நல்ல தரமான இசராயன உரங்கள் கிடைப்பதை உறுதி செய்ய 1985 ஆம் ஆண்டு இசராயன உரக் கட்டுப்பாட்டு ஆணை கண்டிப்பாகச் செயற்படுத்தப்பட்டு வருகிறது.

**பயிர்ப்பாதுகாப்பு :**

பயிர்ப்பாதுகாப்புத் திட்டத்தின் கீழ் 1990-91ஆம் ஆண்டில் 58.74 இலட்சம் எக்டேர் நிலப்பரப்புக்குப் பயிர் பூச்சிப் பாதுகாப்புக்கும், 20.47 இலட்சம் எக்டேர் நிலப்பரப்பு நோய்த் தடுப்புப் பாதுகாப்புக்கும் வகை செய்ய இலக்கு நிர்ணயிக்க பட்டிருக்க, முறையே 60.92 இலட்சம் எக்டேர் நிலப்பரப்புக்கும் 22.66இலட்சம் எக்டேர் நிலப்பரப்புக்கும் மேற்கூறிய வசதிகள் அளிக்கப்பட்டன. பயிர்ப் பூச்சி இரசாயன மருந்துகளை தவறான வகையிலும் வகைதொகையற்ற வகையிலும் பயன் படுத்தியதால் சுற்றுச்சூழல் மாசுபடுவதுடன் எஞ்சிய வகை யிலும் நச்சுத் தன்மை கலந்துவிட ஏதுவாகியுள்ளது. பயிர்ப் பூச்சிகளையும் பயிர் நோய்களையும் கட்டுப்படுத்துவதற்காக ஒருங்கிணைந்த மேலாண்மை தொழில்நுட்ப உத்தியைப் பின்பற்றவும் தேவையான இரசாயனப் பொருள்கள் கட்டுப் பாட்டை மேற்கொள்ளவும் உத்தேசிக்கப்பட்டுள்ளது. 1991-92ஆம் ஆண்டில் உணவுப்பயிர் மற்றும் உணவுப்பயிர் அல்லாத ஏனையப் பயிர்களுக்கு 44.14 இலட்சம் எக்டேர் நிலப்பரப்பில் பயிர்ப்பூச்சிக் கட்டுப்பாட்டை மேற்கொள்ளவும்

16.90 இலட்சம் எக்டேர் நிலப்பரப்பில் பயிர் நோய்க் கட்டுப்பாட்டை மேற்கொள்ளவும் உத்தேசிக்கப்பட்டுள்ளது, பயிர்பூச்சிக் கொல்லி மருந்துகளைச் சலுகை விலையில் விற்பனை செய்யும் பணியை வேளாண்மைத்துறை இயக்குநர் மேற்கொண்டார்.

பயிர் பூச்சி கண்காணிப்பு பணி 7,324 இடங்களில் மேற்கொள்ளப்பட்டுள்ளது. மேற்சொன்ன கண்காணிப்புத் தகவல் விவரங்கள் வாராந்திர அடிப்படையில் சேகரிக்கப்படுகின்றன. மாவட்ட அளவில் சேகரிக்கப்பட்டு தமிழ்நாடு ஜி. டி. நாயுடு வேளாண்மைப் பல்கலைக் கழக அறிவியல் வல்லுநர்களின் உதவியுடன் ஆய்வு செய்யப்பட்டு வேளாண்மை முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் குறித்த செய்திகள் தயாரிக்கப்பட்டு அவை வானொலி, தொலைக்காட்சி ஆகியவற்றின் மூலம் விவசாயிகளுக்கு தெரிவிக்கப்படுகின்றன. இத்திட்டம் 1991-92 ஆம் ஆண்டிலும் தொடர்ந்து செயல் படுத்தப்படும்.

ஒருங்கிணைந்த பயிர்ப் பூச்சி தடுப்பு நிருவாகம்.

பயிர்ப் பூச்சிகளைக் கொல்லுகின்ற விலங்குகள், ஒட்டுண்ணிகள் ஆகியவற்றின் உதவியுடன் உயிரியல் சார்ந்த கட்டுப்பாட்டு உத்திகளைக் கையாண்டு பயிர்ப் பூச்சிகளைத் திறம்பட்ட முறையில் கட்டுப்படுத்த ஒருங்கிணைந்த பயிர்ப் பூச்சித்தடுப்பு நிருவாகத் திட்டம் (I.P.M) விவசாயிகளிடையே பிரபலப்படுத்தப்படுகிறது. விவசாயிகளுக்குப் பயிற்சி அளித்தும் சிறிய வகை பொறிகள் ஒட்டுப் பசை நாடாக்கள், பயிர்பூச்சி வகைகளைப் பெரிதாக கண்ணுக்குக் காட்டும் உருப் பெருக்காடிகள் உள்ளட்ட சில சாதனங்களை விவசாயிகளுக்கு அளிப்பதாலும் இந்த தொழில்நுட்ப உத்திகளைப் பின்பற்றுவது எளிதாக இருக்கும். ஒருங்கிணைந்த பயிர் பூச்சித்தடுப்பு நிருவாக முறைகளைப் பரவலாக நீர்ப்பிடிப்பு பகுதிகளில் 150 இடங்களில் ஒவ்வொன்றிலும் 20 எக்டேரிலும் நீர்பிரிமுகடுப் பகுதிகளில் 84 இடங்களில் ஒவ்வொன்றிலும் 40 எக்டேரிலும் செயல்முறைவிளக்கப்பண்ணைகள் ஏற்படுத்தப் பட்டன. இவை நவிர 150 கிராமங்கள் (ஒவ்வொரு உட்கோட்டத்திலும் ஒரு கிராமம்) ஒருங்கிணைந்த பயிர்பூச்சித் தடுப்பு நிருவாகத்தின் கீழ் வருகின்ற கிராமங்களாக ஏற்றுக் கொள்ளப்பட்டன. 1990-91 ஆம் ஆண்டில் 4,950 விவசாயிகளுக்குப் பயிற்சி அளிக்கப்பட்டு ரூ. 20 இலட்சம் செலவில் பயிரிட்டவர்களுக்கு 50 சதவீதம் மானிய சலுகையுடன் ஒருங்கிணைந்த பயிர்ப் பூச்சித் தடுப்பு நிருவாக சாதனங்கள் வழங்கப்பட்டுள்ளன. 1991-92 ஆம் ஆண்டில் 9,750 விவசாயிகளுக்குப் பயிற்சி அளிக்கப்பட்டு மொத்தம் ரூ. 25 இலட்சம் செலவில் 14.640 எக்டேர் நிலப்பரப்பிற்கு பயன்படும் வகையில் சாதனங்கள் வழங்கக் கருதப்பட்டுள்ளது.



தரக்கட்டுப்பாடு:

1990-91ஆம் ஆண்டில் 17,994 பயிர்ப் பூச்சிக் கொல்லி மருந்து மாதிரிகள் ஆய்வுக்காக பெறப்பட்டு பயிர்ப்பூச்சிக் கொல்லி ஆய்வுக் கூடத்திற்கு அனுப்பப்பட்டன; அதில் 376 மாதிரிகள் தரம் குறைந்தவையாக இருந்தன; 1968ஆம் ஆண்டு பயிர்ப்பூச்சிக் கொல்லி மருந்துகள் சட்டத்தின் கீழ் விதியை மீறியதற்காக தயாரிப்பாளர்கள், வியாபாரிகள் ஆகியோர் மீது நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுவருகிறது.

மண் வள ஆய்வு பரிசோதனைக் கூடங்கள் :

வேளாண்மை நிலங்களில் இருந்து சேகரிக்கப்படும் மண் மாதிரிகளைப் பகுப்பாய்வு செய்யும் நோக்கத்துடன் இம் மாநிலத்தில் மண் வள ஆய்வுப் பரிசோதனை கூடங்கள் 14-ம் மண்வள ஆய்வு நடமாடும் பரிசோதனைக் கூடங்கள் 15-ம் செயல்பட்டு வருகின்றன; மேலும், மண்வளத் தரத்தின் அடிப்படையில் சில உரங்களைப் பயன்படுத்துமாறு பரிந்துரை செய்வதும் அதன் நோக்கமாகும். 1990-91 ஆம் ஆண்டில் எய்திய சாதனை விபரங்களும், 1991-92 ஆம் ஆண்டிற்கான திட்டம் குறித்த விவரங்களும் கீழே கொடுக்கப்பட்டுள்ளன:—

| | மண் வளப் பகுப்பாய்வு செய்யப் பட்ட மாதிரிகளின் எண்ணிக்கை | | |
|---|---|---|---|
| | 1990-91 | | 1991-92 |
| | இலக்கு. | எய்திய சாதனை. | இலக்கு. |
| (1) | (2) | (3) (இலட்சத்தில்) | (4) |
| மண் வள ஆய்வு பரிசோதனைக் கூடங்கள் .. | 7.08 | 6.84 | 7.08 |
| மண் வள ஆய்வு நடமாடும் பரிசோதனைக் கூடங்கள் .. | 2.70 | 2.69 | 2.70 |
| மொத்தம் .. | 9.78 | 9.53 | 9.78 |

தற்போதுள்ள மண்வள ஆய்வுப்பரிசோதனை குறித்த
தகவல் விவரங்களின் அடிப்படையில், பெருமளவில் பயிரிடப்
படும் பயிர்கள் ஒவ்வொன்றுக்கும் கிராம அளவில் பயன்படுத்த
வேண்டிய உரங்கள் குறித்த பரிந்துரைகள் 1990-91 ஆம்
ஆண்டில் தயாரிக்கப்பட்டுள்ளன. இத்திட்டங்கள், 1991-92
ஆம் ஆண்டும் தொடர்ந்து மேற்கொள்ளப்படும்.

**நுண் ஊட்டச் சத்து உரக்கலவை உற்டத்தித் திட்டம் :**

விளைச்சல் உற்பத்தியை அதிகரிப்பதில் நுண் ஊட்டச்
சத்து உரக் கலவையின் முக்கியப் பங்கினை உணர்ந்த உழவர்
கள், தற்போது பல்வேறு பயிர்களுக்கு நுண் ஊட்டச் சத்து
உரக் கலவையைப் பயன்படுத்தத் தொடங்கியுள்ளனர்.
நுண் ஊட்டச்சத்து உரக் கலவைக்கான தேவை படிப்படியாகத்
தொடர்ந்து அதிகரித்து வருகிறது. தரமான நுண் ஊட்டச்
சத்து உரக் கலவையை உற்பத்திச் செய்வதற்காக குடுமியான்
மலையில் உற்பத்தி மையம் ஒன்று செயல்பட்டு வருகின்றது.
1990-91 ஆம் ஆண்டில், உற்பத்தி இலக்கு 1,000 மெட்ரிக்
டன் என நிர்ணயிக்கப்பட்டிருக்க, 674 மெட்ரிக் டன் அளவே
உற்பத்தி செய்யப்பட்டது. 1991-92 ஆம் ஆண்டிலும் இத்
திட்டம் தொடர்ந்து மேற் கொள்ளப்படும். 1,000 மெட்ரிக்
டன் நுண் ஊட்டச் சத்து உரக் கலவை உற்பத்திச் சாதனை
மேற்கொள்ளப்படும்.

**நுண்ணுயிர் உரங்கள் :**

நமது மாநிலத்தில் நீலப் பச்சைப் பாசி, அஜோஸ்ஸபரில்
லம், அசோல்லா ரிசோபியம் போன்ற நுண் உரங்களை,
உழவர்கள் அதிக அளவில் பயன்படுத்தத் தொடங்கியுள்ளனர்.
இத்திட்டத்தின்படி 1990-91 ஆம் ஆண்டில் 2.60 இலட்சம்
எக்டேர் நிலத்தில் நீலப் பச்சைப்பாசி பயிரிடப்பட்டது.
1990-91 ஆம் ஆண்டில் 12 இலட்சம் அஜோஸ் பைரில்லம்
பொட்டலங்கள் விநியோகிக்கத் திட்டமிடப்பட்டது. அவற்றில்
11.90 இலட்சம் பொட்டலங்கள் விநியோகிக்கப்பட்டுள்ளன.
இத்திட்டம் 1991-92 ஆம் ஆண்டிலும் தொடர்ந்து செயலில்
இருக்கும்.

பயறு வகைகளையும், எண்ணெய் வித்துக்களையும் அதிக
அளவில் பயிரிடுவதில் உழவர்களிடையே ரிசோபியம் கலவை
யின் தேவை அதிகரித்துள்ளது. 1990-91 ஆம் ஆண்டில்
இராமநாதபுரம், கடலூர் ஆகிய இடங்களிலுள்ள பிரிவுகளில்
8 இலட்சம் நுண்ணுயிர் கலவை உற்பத்தி செய்வதற்கான இலக்கு
நிர்ணயித்திருக்கையில் 8.46 இலட்சம் பொட்டலங்கள் உற்
பத்தி செய்யப்பட்டுள்ளன. இத்துடன், கடலூரில் தற்போ
துள்ள நுண்ணுயிர்க் கலவைத் தயாரிக்கும் பிரிவை வலுப்படுத்து





வதுடன் சேலம் குடுமியான்மலை ஆகிய இடங்களில் மேலும்
புதிதாக இரு நுண்ணுயிர்க் கலவைத் தயாரிக்கும் பிரிவுகள்
தொடங்கப்படவுள்ளன. இவ்விரு புதிய பிரிவுகளில் 1991-92
ஆம் ஆண்டில் உற்பத்தியைத் தொடங்கும்.

**பயிர் மேம்பாடு;**

**நெல் :**

1990-91 ஆம் ஆண்டில் 24 இலட்சம் எக்டேர் நிலத்தில்
நெல் பயிரிடுவதெனவும் அதில் 22.00 இலட்சம் எக்டேரில்
உயர்ரக விளைச்சல் நெல் பயிடவும் திட்டமிடப்பட்டது.
மாறாக, மழை பொய்த்து விட்டதன் காரணமாக 18.75
இலட்சம் எக்டேர் நிலப் பரப்பில் மட்டுமே பயிரிடப்பட்டது.
உயர் விளைச்சல் நெல் ரகங்கள் பயிரிடுவதன் கீழ் மொத்தம்
17.80 இலட்சம் எக்டேர் நிலம் கொண்டு வரப்பட்டது.

1991-92 ஆம் ஆண்டில் 21 இலட்சம் எக்டேர் பரப்பளவில்
நெல் பயிரிடுவதென திட்டமிடப்பட்டுள்ளது. இதில் 19.95
இலட்சம் எக்டேர் பரப்பளவில் உயர் விளைச்சல் நெல் ரகங்கள்
பயிரிடப்படும்.

**அரிசி உற்பத்தியை மேம்படுத்துவதற்கான ஒருங்கிணைந்த திட்டம் :**

நவீன தொழில் நுட்ப உத்திகள், முன்னணி செய்முறை
விளக்கங்கள், பயிற்சி ஆகிய பிரச்சாரத்தின் மூலமாகவும்
பயிற்சி பகுதிக்கேற்ற உயர் விளைச்சல் தரும் விதைகள்,
களைக் கொல்லி மருந்து, பயிர்ப் பூச்சிக் கொல்லிகள், நுண்
உரச் சத்துக்கள், நவீன உழவு கருவிகள் ஆகியவற்றை வழங்கு
வதன் மூலமும் குறைவான விளைச்சல் தரும் பகுதிகளில் அரிசி
உற்பத்தியை மேம்படுத்தும் நோக்கத்துடன், அரிசி உற்டத்தியை
மேம்படுத்தும் ஒருங்கிணைந்த மத்திய அரசுத் திட்டம் ஒன்று
கொண்டு வரப்பட்டுள்ளது.

1988-89 ஆம் ஆண்டிலிருந்து தெரிந்தெடுக்கப்பட்ட மாவட்
டங்களில் இத்திட்டம் செயற் படுத்தப்பட்டு வருகிறது.
1990-91 ஆம் ஆண்டில் இத்திட்டத்தைச் செயற்படுத்த பத்து
மாவட்டங்கள் தெரிந்தெடுக்கப்பட்டன. அதற்கான மொத்த
மூலதனச் செலவு ரூ. 516.90 இலட்சமாகும். அதில் ரூ.516.83
இலட்சம் செலவிடப்பட்டது.

கடந்த ஆண்டில் இத்திட்டம் செயல் படுத்தப்பட்ட பத்து
மாவட்டங்களோடு மேலும், மூன்று மாவட்டங்கள் தெரிந்
தெடுக்கப்பட்டுள்ளன. தெரிந்தெடுக்கப்பட்ட 13 மாவட்டங்
கள் வருமாறு :—

(1) செங்கற்பட்டு-எம்.ஜி.ஆர்., (2) தென்னாற்காடு;
(3) வடஆற்காடு—அம்பேத்கார்; (4) திருவண்ணாமலை-
சம்புவராயர்; (5) திருச்சிராப்பள்ளி, (6) தஞ்சாவூர்;
(7) புதுக்கோட்டை; (8) மதுரை; (9) திருநெல்வேலி-
கட்டபொம்மன்; (10) சேலம்; (11) பெரியார்; (12) இராம
நாதபுரம்; (13) பசும்பொன் முத்துராமலிங்க தேவர்.

1991-92 ஆம் ஆண்டுத் திட்டத்தின் பல்வேறு கூறுகளுக்கான இலக்குகள் வருமாறு :

| தொடர் எண் திட்டக் கூறுகளின் பெயர். (1) | நிர்ணயிக்கப்பட்ட இலக்கு. திட்ட இலக்கு. (2) | நிர்ணயிக்கப்பட்ட இலக்கு. நிதி இலக்கு. (3) |
|---|---|---|
| | (ரூபாய் இலட்சத்தில்) | |
| 1. விதை மான்யம் (மெ.டன்) .. | 21,850 | 218.500 |
| 2. துத்தநாக சல்பேட் விநியோகம் (மெ. டன்). | 1,500 | 97,500 |
| 3. பயிர் பாதுகாப்பு இரசாயன (எக்). | 40,000 | 40,000 |
| 4. பயிர் பாதுகாப்புச் சாதனங்கள் (எண்ணிக்கை). | 6,000 | 30,000 |
| 5. நவீன உழவுக் கருவிகள் வழங்குதல் (எண்ணிக்கை). | 2,237 | 22,370 |
| 6. களைகொல்லி மருந்து விநியோகம் (எக்) | | |
| 7. கூட்டுச் செயல் விளக்கங்கள் (எக்) | 1,00,000 | 50,000 |
| 8. உழவர்களுக்குப் பயிற்சி (எண்ணிக்கை). | 5,900 | 23,600 |
| | 29,500 | 14,750 |
| 9. வேளாண் தொழிலாளர்களுக்குப் பயிற்சி. | 29,500 | 5.900 |
| 10. பிரச்சாரம் .. .. | | |
| 11. ஜிப்சத்திற்கான நிதி .. .. | .. | 5.900 |
| | .. | 24.810 |
| | | 533.330 |

1991-92 ஆம் ஆண்டில் ரூ. 533.33 இலட்சம் செலவில் இத்திட்டம் செயல்படுத்தப்படும். இதற்கான செலவை 75 : 25 என்ற விகிதாச்சார அடிப்படையில் மத்திய அரசும் மாநில அரசும் ஏற்கும்.

**ஆழமற்ற குழாய்க் கிணறுகள் - திறந்தவெளி கிணறுகள்—சிறப்பு உணவு தானியங்கள் உற்பத்தி திட்டம் :**

நெல் உற்பத்திப் பெருக்கத்திற்கான ஒருங்கிணைந்த திட்டம் செயல்படும் மாவட்டங்களில் வேளாண் விளைபொருள் உற்பத்தியைப் பெருக்குவதற்கான பாசன வாயில்களைப் பெருக்குவதற்காக தமிழ்நாட்டில், ஆழமற்ற குழாய்க் கிணறு கள்- திறந்த வெளி கிணறுகள் தோண்டும் திட்டம் செயல்





படுத்தப்படுகின்றது. இத்திட்டத்தின் கீழ் 1990-91 ஆம் ஆண்டில், மொத்தம் 311.54 இலட்சம் ரூபாய் செலவில் 10,673 கிணறுகளைத் தோண்டுவதற்காக சிறிய சொற்ப நிலம் வைத்திருக்கும் உழவர்களுக்கு வேளாண்மைத் துறை இயக்குநர் நிதியுதவி வழங்கினார். வேளாண் பொறியியல் துறை 4,203 கிணறுகளைத் தோண்டுவதற்காக ரூ 73.05 இலட்சம் செலவிட்டுள்ளது. ஒட்டு மொத்தமாக 14,870 கிணறுகளைத் தோண்ட ரூ. 384.59 இலட்சம் நிதியுதவி வழங்கப்பட்டுள்ளது. இத்திட்டம் ரூ. 400 இலட்சம் செலவில் 1991-92 ஆம் ஆண்டிலும் தொடர்ந்து மேற்கொள்ளப்படும். இதற்கான செலவுத் தொகையினை மத்திய அரசும் மாநில அரசும் 50 : 50 என்ற விகிதத்தில் பகிர்ந்து கொள்கின்றன. 1990-91 ஆம் ஆண்டில் நெல் உற்பத்தி மேம்பாட்டுத் திட்டம் மேற்கொள்ளப்படும் மாவட்டங்களில் 13 ஒருங்கிணைந்த திட்டங்களைச் செயல்படுத்த 8,000 ஆழமில்லாக் கிணறுகள்-திறந்த வெளிக் கிணறுகள் தோண்ட இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

**சிறு தானியங்கள் :**

1990-92 ஆம் ஆண்டில் 16 இலட்சம் எக்டேர் பரப்பில் சிறு தானியங்கள் பயிரிடுவதனை உத்தேசிக்கப்பட்டுள்ளது. இதில் 10 இலட்சம் ஏக்கர் பரப்பில் உயர் விளைச்சல் வகைகளைப் பயிரிடவும் திட்டமிடப்படடுள்ளது. ஆனால் இதில் 12.38 இலட்சம் எக்டேர் பரப்பில் மட்டுமே சிறு தானியங்கள் பயிரிடப்பட்டதுடன் 8.16 இலட்சம் எக்டேர் பரப்பில் மட்டுமே உயர் விளைச்சல் வகை தானியங்கள் பயிரிடப்பட்டுள்ளன. 1991-92 ஆம் ஆண்டில் 16 இலட்சம் எக்டேரில் சிறு தானியங்களைப் பயிரிடவும் அதில் 10.36 இலட்சம் எக்டேரில் உயர் விளைச்சல் வகைகளைப் பயிரிடவும் உத்தேசிக்கப்பட்டுள்ளது.

**சிறப்பு உணவு தானிய உற்பத்தித் திட்டம்.**

**சிறு தானியங்கள் :**

உழவர்களிடையே சிறப்பு உணவு தானிய வகை உற்பத்தித் திட்டம் நெல் ஏற்படுத்திய சாதகமான தரத்தின் அடிப்படையில் இந்திய அரசு சிறப்பு உணவு தானிய உறபத்தித் திட்டத்தை மக்காச் சோளம், கேழ்வரகு ஆகிய பயிர்களுக்கும் 1990-91 ஆம் ஆண்டிலிருந்து நீட்டித்தது. 1990-91 ஆம் ஆண்டில் மக்காச் சோளம் பயிரிடும் திட்டம் சேலம், திருச்சிராப்பள்ளி கோயம்புத்தூர் ஆகிய மூன்று மாவடடங்களில் ரூ. 45 இலட்சம் செலவில் மேற்கொள்ளப்பட்டது. கேழ்வரகு பயிரிடும் திட்டம் ரூ. 20 இலட்சம் செலவில் சேலம், தருமபுரி ஆகிய இரு மாவட்டங்களில் மேற்கொள்ளப்படடது. இதற்கான செலவுத் தொகை முழுவதையும் இந்திய அரசு வழங்கியது.

[1991 செப்டம்பர் 24

கடந்த ஆண்டில் மேற் குறிப்பிட்ட மூன்று மாவட்டங்களில் மக்காச் சோளம் பயிரிடும் திட்டம் மேற்கொள்ளப்பட்டதுடன் கூடுதலாக 1991-92 ஆம் ஆண்டில் திண்டுக்கல் அண்ணா, தருமபுரி, பெரியார் ஆகிய மாவட்டங்கள் ரூ. 50 இலட்சம் செலவில் இத்திட்டத்தை செயல்படுத்துவதற்காக தெரிந்தெடுக்கப்பட்டன. இதற்கான செலவுத் தொகை முழுவதையும் இந்திய அரசு ஏற்றுக்கொண்டது.

1991-92 ஆம் ஆண்டு மக்காச் சோளம் பயிரிடும் திட்டத்தின் கீழ் பல்வேறு கூறுகளுக்கு நிர்ணயிக்கப்பட்ட இலக்கு விவரம் வருமாறு :—

| தொடர் எண் திட்டத்தின் கூறுகள். (1) | நிர்ணயிக்கப்பட்ட இலக்கு. சாதனை அளவு. (2) | நிதி. (3) (ரூபாய் இலட்சத்தில்.) |
|---|---|---|
| 1. விதைக்கான உதவித் தொகை (மெ. டன்). .. .. .. | 170.50 | 3.410 |
| 2. புல் பூண்டு அழிப்பான் விநியோகம் (எக்டேர்). .. .. | 10.000 | 10.000 |
| 3. விதை பக்குவப்படுத்தும் இரசாயனப் பொருள்கள் விநியோகம் (எக்டேர்). .. .. .. | 50.000 | 4.000 |
| 4. பயிர் பாதுகாப்பு இரசாயனப் பொருட்களின் விநியோகம் (எண்ணிக்கை) .. .. .. | 20,000 | 5.000 |
| 5. பயிர் பாதுகாப்பு சாதனைகள் (எண்ணிக்கை) .. .. .. | 2,200 | 11.00 |
| 6. வேளாண் கருவிகள் விநியோகம் (எண்ணிக்கை) .. .. .. | 1,100 | 10.335 |
| 7. ஒட்டு மொத்த கள செய்முறை விளக்கம் (எக்டேர்) .. .. | 695 | 3.475 |
| 8. உழவர்களுக்குப் பயிற்சி (எண்ணிக்கை) .. .. .. | 6,950 | 2.780 |
| | மொத்தம் | 50.000 |



1991 செப்டம்பர் 24]

1991-92 ஆம் ஆண்டில் கேழ்வரகு பயிரிடும் திட்டம் கடந்த ஆண்டுகளில் இத்திட்டம் ஏற்கெனவே செயல்பட்டுவந்த இரு மாவட்டங்களுடன் (தர்மபுரி, சேலம்) சேர்ந்து கூடுதலாக வட ஆற்காடு-அம்பேத்கார், திருவண்ணாமலை - சம்புவராயர், தென் ஆற்காடு ஆகிய மூன்று மாவட்டங்களுக்கு மேலும் விரிவுபடுத்தப்பட்டது. இத்திட்டத்திற்கான மொத்தச் செலவு ரூ. 25 இலட்சமாகும். 1991-92ஆம் ஆண்டில் இத்திட்டத்தின் பல்வேறு கூறுகள் தொடர்பாக நிர்ணயிக்கப்பட்ட இலக்கு வருமாறு :—

| தொடர் எண் திட்டத்தின் கூறுகள். (1) | நிர்ணயிக்கப்பட்ட இலக்கு. சாதனை அளவு. (2) | நிதி. (3) (ரூபாய் இலட்சத்தில்) |
|---|---|---|
| 1. விதைக்கான உதவித் தொகை (மெ. டன்). .. .. | 1.657 | 1.657 |
| 2. பயிர் பாதுகாப்பு இரசாயனப் பொருட்கள் விநியோகம் (ஹெக்) | 5.000 | 2.500 |
| 3. பயிர் பாதுகாப்பு அதன் விநியோகம் (எண்ணிக்கை) .. | 2,000 | 9,750 |
| 4. வேளாண்கருவிகள் விநியோகம் (எண்ணிக்கை) .. .. .. | 400 | 3.843 |
| 5. புல், பூண்டு அழிப்பான் விநியோகம் (ஹெக்டேர்) .. | 5.000 | 5,000 |
| 6. ஒட்டு மொத்த கள செய்முறை விளக்கம் (எக்டேர்) .. .. | 250 | 1.000 |
| 7. உழவர்களுக்குப் பயிற்சி (எண்ணிக்கை) .. .. .. | 6,250 | 1.250 |
| மொத்தம் .. | | 25.000 |

இதற்கான செலவுத் தொகை முழுவதையும் இந்திய அரசு ஏற்றுக்கொள்கிறது.

**சோளம், கம்பு, கேழ்வரகு. மக்காச்சோளம் ஆகியவற்றைப் பயிரிடுவது குறித்து ஆதி திராவிடர் - பழங்குடியினர் பகுதிகளில் மும்மர பயிரிடுமுறை குறித்து செய்முறை விளக்கம் :**

ஒரு குறிப்பிட்ட பரப்பில் விளைச்சலைப் பெருக்கும்
நோக்குடன் மக்காச்சோளம், சோளம், கம்பு, கேழ்வரகு ஆகிய
பயிர்களின் விளைச்சலுக்கான தொழில் நுட்ப உத்தியினை
ஆதிதிராவிடர்-பழங்குடியினர் ஆகியவற்றைச் சேர்ந்த உழவர்
களுக்கு அளிக்க மத்திய அரசு உதவிபெறும் திட்டத்தின் கீழ்
ஆதிதிராவடர்-பழங்குடியினர் பகுதிகளில் செய்முறை
விளக்கங்கள் நடத்தப்படுகின்றன. 1990-91 ஆம் ஆண்டில்
210 செய்முறை விளக்கங்கள் நடத்தப்பட்டன. 1991-92-ஆம்
ஆண்டில் 1,32,250 ரூபாய் செலவில் ஆதிதிராவிடர் பகுதியில்
160 ஹெக்டேரிலும், பழங்குடியினர் பகுதில் 50ஹெக்டேரிலும்
இத்திட்டம் தொடர்ந்து மேற் கொள்ளப்பட்டது. இத்
திட்டத்திற்கான செலவு முழுவதையும் மத்திய அரசு ஏற்கும்.

**சிறு தளைப்பைகள் :**

புதிய ரக விதைகளை விரைந்து பரவச் செய்வதற்கான
உத்தியே சிறுதளைப் பைகள் வழங்கும் திட்டமாகும். வெளி
வராத விதை ரகங்களை பின்பற்றுவதற்கான வாய்ப்புகளை
கண்டறிவதற்கும். இத்திட்டம் உதவுகிறது.

மத்திய அரசு உதவிபெறும் திட்டத்தின்கீழ் (இந்திய
அரசின் 100 சதவீத நிதி உதவி) நெல், சிறுதானிய சிறுதளைப்
பைகள் மிகக் குறைந்த விலையில் புதிய ரகங்கள் பயிரிடு
வதை ஊக்குவிப்பதற்காக உழவர்களுக்கு வழங்கப்பட்டன.

1990-91 ஆம் ஆண்டில் 1,00,000 நெல் அடங்கிய சிறு
தளைப் பைகளும் 82,000 சிறு தானியங்கள் அடங்கிய சிறு
தளைப் பைகளும் வழங்க வேண்டுமென இலக்கு நிர்ணயிக்கப்
பட்டது. ஆனால், 1,10,885 நெல் அடங்கிய சிறுதளைப்
பைகளும் 1,26,024 சிறுதானியம் அடங்கிய சிறுதளைப்
பைகளும் வழங்கப்பட்டன.

ரூ. 18.86 இலட்சம் செலவில் 70,000 நெல் அடங்கிய
சிறுதளைப் பைகளும் ரூ. 6,47,750 செலவில், 82,000 சிறு
தானியம் அடங்கிய சிறுதளைப் பைகளும் வழங்கும் வகை
களில் இத்திட்டம் 1991-92 ஆம் ஆண்டிலும் தொடர்ந்து
மேற்கொள்ளப்படவுள்ளது.

**பயறு வகைகள் :**

1990-91 ஆம் ஆண்டில் 11 இலட்சம் ஏக்கரில் பயறு வகை
களைப் பயிரிட வேண்டுமென்று திட்டமிடப்பட்டிருக்க, 1991
மார்ச்சு வரை 9.39 இலட்சம் எக்டேரில் பயறு வகைகள் பயிரிடப்
பட்டன. 10 இலட்சம் எக்டேர் பரப்பில் பயறு வகைகள்



பயிரிடுவதன் மூலம் 1991-92 ஆம் ஆண்டில் 4.60 இலட்சம்
மெ. டன் உற்பத்தி அளவை எட்டுவதற்குப் பின்வரும் திட்டங்
கள் செயற்படுத்தப்படும்.

பயறு வகைகள் பயிரிடப்படும் மொத்தப் பரப்பில் 12 சத
வீதம பரப்பில் பயிரிடுவதற்கு மேம்படுத்தப்பட்ட பயறு வகை
களின் தரமான விதைகள் பன்மடங்கு பெருக்கப்பட்டு வழங்கப்
படுகின்றன. 1990-91 ஆம் ஆண்டில் 2,900 மெ.டன்
பயிறு விதைகள் உற்பத்தி செய்யப்பட வேண்டுமென இலக்கு
நிர்ணயிக்கப்பட்டிருக்க 1,828 மெ.டன் உற்பத்தி செய்யப்பட்டு
2,066 மெ. டன் வழங்கப்பட்டது. 1991-92 ஆம் ஆண்டில்
2,500 மெ. டன் பயிறு விதைகள் உற்பத்தி செய்யப்பட்டு
உழவர்களுக்கு வழங்கப்படும்.

விண்வெளியில் உள்ள நைட்ரஜனை நிலைப்படுத்துவதற்கு
பயிறு வகைகளின் விதைகளை நேர்த்தி செய்வதற்குப்பரிந்துரைக்
கப்பட்டுள்ளது. இதற்காக விதையோடு நுண்ணுயிர் கலவைப்
பொட்டலங்கள் வழங்கப்படடு வருகிறது. 1990-91 ஆம்
ஆண்டில் 6.00 இலட்சம் ரைசோபியஸ் கலவைப் பொட்டலங்கள்
வழங்கப்பட வேண்டுமென இலக்கு நிர்ணயிக்கப்படிருக்க 633
இலட்சம் பொட்டலங்கள் வழங்கப்பட்டன. 1991-92 ஆம்
ஆண்டிலும் 6 இலட்சம் பொட்டலங்கள் தயாரிக்கப்பட்டு
வழங்கப்படும்.

**தேசிய பயறு வகை மேம்பாட்டுத் திட்டம் :**

திட்டவட்டமான பயிர், அவற்றைப் பயிரிட வேண்டிய
இடம் ஆகியவற்றைப் பற்றிய தொழில் நுட்பங்களைப்பின்
பற்றுவதன்மூலம் அதிக பரப்பில் பாசனம் பெற்ற நிலைகளில்
குறுகிய கால-மேம்படுத்தப்பட்ட பயறு வகைகள் பயிரிடப்படும்
பரப்பைஅதிகரிப்பதன் மூலம் பயறு உற்பத்தியில் குறிப்பிடத்தக்க
உயர்வை எட்டுவதே இம் மத்திய, மாநில அரசுத் திட்டத்தின்
நோக்கமாகும்.

1990-91 ஆம் ஆண்டில் ரூ. 38 இலட்சம் செலவில் தெரிந்
தெடுக்கப்பட்ட 7 மாவட்டங்களில் இத்திட்டம் செயற்படுத்தப்
பட்டது. 1991-92 ஆம் ஆண்டிலும் ரூ. 79.35 இலட்சம்
மொத்தச் செலவில் தெரிந்தெடுக்கப்பட்ட மாவட்டங்களில்
அதாவது தென்ஆற்காடு, வடஆற்காடு-அம்பேத்கார், திருவண்ணா
மலை-சம்புவராயர், தஞ்சாவூர், சேலம், கோயம்புத்தூர் ஆகிய
மாவட்டங்களில் செயற்படுத்தப்பட்டு வருகிறது. இச்செலவை
மத்திய அரசும், மாநில அரசும் பங்கிட்டுக்கொள்கின்றன.
மத்திய அரசின் பங்கு ரூ. 61.310 இலட்சமாகும், மாநில
அரசின் பங்கு ரூ. 18.040 இலட்சமாகும்.

1992-91 ஆம் ஆண்டில் இத்திட்டத்தின் பல்வேறு கூறுகளுக்கான இலக்கு வருமாறு :—

| தொடர் எண். | திட்டக்கூறு. | திட்ட இலக்கு. | நிதி இலக்கு (ரூபாய் இலட்சத்தில்.) |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| 1 | சிறுதளைப் பைகள் (ஒவ்வொன்றும் ரூ. 40 என்ற விதத்தில்) .. .. | 17,500 (எண்ணிக்கை) | 7,000 |
| 2 | ஒவ்வொருவருக்கும் ரூ. 10,000 என்ற விதத்தில் பயிற்சி .. .. | 2 (எண்ணிக்கை) | 0.200 |
| 3 | 10 எக்டேர் நிலப்பரப்பு செயல்முறை விளக்கம் (ஒவ்வொன்றுக்கும் செலவு ரூ. 5,125).. .. | 400 (எண்ணிக்கை) | 20.500 |
| 4 | ஆதாரக் கிராமங்கள் (குவிண்டாலுக்கு ரூ. 200) | 5,000 (குவிண்டால்). | 10.000 |
| 5 | அடிப்படை விதை மானியம் (குவிண்டாலுக்கு ரூ. 400) .. .. | 1,900 (குவிண்டால்) | 7.600 |
| 6 | சான்றளிக்கப்பட்ட விதை மானியம் (குவிண்டாலுக்கு ரூ. 300). .. .. | 5,300 (குவிண்டால்) | 15.900 |
| 7 | பயிர் பாதுகாப்பு இரசாயனங்கள் (50 சதவீத மானியம்) (எக்டேருக்கு ரூ. 75) .. .. | 3,333 (எக்டேர்) | 2.500 |



| (1) | (2) | (3) | (4) |
|---|---|---|---|
| 8 | பயிர் பாதுகாப்பு சாதனங்கள் (50 சதவீதம் மானியம்) சாதனம் ஒன்றுக்கு ரூ. 500 .. | 1,080 (எண்ணிக்கை) | 5.400 |
| 9 | விவசாயக் கருவிகள் (50 சதவீத மானியம் ஒவ்வொன்றுக்கும் ரூ. 500) .. | .. | 2.000 |
| 10 | ரைசோபியஸ் கலவைப் பொட்டலங்கள் (50 சதவீத மானியம், எக்டேர் ஒன்றுக்கு ரூ. 15) .. | 1,500 (எக்டேர்) 3.00 (இலட்சம்) | 2.250 |
| 11 | பணியாளர் சம்பளமும் சில்லறைச் செலவுகளும் .. | .. | 6.000 |
| | மொத்தம் .. | | 79.350 |

உணவு தானிய உற்பத்தி சிறப்புத் திட்டம், கோடையில் பயறு பெருக்கத் திட்டம் ஆகியவற்றின்கீழ் துவரை காய்ப்புழு தாக்குதலைக் கட்டுப்படுத்தி பயிர்ப்பாதுகாப்பு இரசாயன உரங்கள் வழங்குதல்.

இது மத்திய அரசின் முழு உதவி பெறும் மற்றுமொரு திட்டமாகும். இத்திட்டம் 1991-92 ஆம் ஆண்டிலும் தொடர்ந்து செயற்படுத்தப்படுகிறது. இத்திட்டத்தின் கீழும் உணவு தானிய உற்பத்தி சிறப்புத்திட்டத்தின் கீழும் கோடையில் பயறு பயிரிடும் பரப்பை அதிகரிப்பதே இத்திட்டத்தின்நோக்க மாகும் சிறுதளைப் பைகள் உழவர்களுக்கு சலுகை வீதத்தில் வழங்கப்படுகிறது. 1990-91 ஆம் ஆண்டில் தெரிந்தெடுக்கப் பட்ட 9 கிராமங்களில் இத்திட்டத்தைச் செயற்படுத்துவதற்காக வேளாண்மைத்துறை இயக்குநருக்கு ரூ. 10 இலட்சத்திற்கு ஒப்புதலளிக்கப்பட்டது. 1991-92ஆம் ஆண்டில் இத்திட்டம் ரூ. 10 இலட்சம் செலவில் தெரிந்தெடுக்கப்பட்ட 13 உணவு தானிய உற்பத்தி சிறப்பு திட்ட மாவட்டங்களில் செயற்படுத் படும். சிறு உழவர்களுக்கும் ஓரளவு நிலம்வைத்துள்ள உழவர் களுக்கும் ஒரு சிறுதளைப் பையை ரூ. 50 என்ற சலுகை வீதத்தில் ஒவ்வொன்றும் 10 கி.கி. எடையுள்ள 20,000 பயிறு சிறு தளைப் பைகள் வழங்குவதே திட்ட இலக்காகும். துவரைப் பயிறு காய்ப்புழு பூச்சி தாக்குதலிலிருந்து காப்பாற்றும்பொருட்டு எக்டேர் ஒன்றுக்கு உயரளவு ரூ. 75-க்கு உட்பட்டு 50 சதவீத உதவித்தொகையில் இரசாயன உரங்கள் உழவர்களுக்கு வழங்கப் படுகின்றன. 1991-92 ஆம் ஆண்டில், தெரிந்தெடுக்கப்பட்ட 13 உணவு தானிய உற்பத்தி சிறப்புத் திட்ட மாவட்டங்களில் மொத்தம் ரூ. 9 இலட்சம் செலவில் 12,000எக்டேர் பரப்பிற்கு இத்திட்டம் விரிவுப்படுத்தப்படும். இத்திட்டத்தின்கீழ் ஏற்படும் செலவு முழுவதையும் மத்திய அரசே ஏற்கும்.

**பருத்தி :**

பருத்தி மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் 1990-91 ஆம் ஆண்டில் 2.37 இலட்சம் எக்டேர் பரப்பில் பருத்தி பயிரிடப்பட்டுள்ளது. 1991-92 ஆம் ஆண்டில் ரூ. 6 இலட்சம்பேல் உற்பத்தி இலக்குடன் 2.50 இலட்சம் எக்டேர் பரப்பில் பருத்தி பயிரிட திட்டமிடப்பட்டுள்ளது.

**தீவிர பருத்தி சாகுபடி மேம்பாட்டுத் திட்டம் :**

மூலப் பருத்தி நூல் துணிப் பொருட்கள் ஆகியவற்றின் பயனும் துணியின் தனி நபர் பயனும் வெகு வேகமாக அதிகரித்து வருகிறது. எனினும் பருத்தி பயிரிடும் பரப்பை அதிகரிப்பதற்கு வாய்ப்பில்லாததால் முக்கியமாக தீவிர சாகுபடியின் மூலமும் மேம்படுத்தப்பட்ட கலப்பின் விதைகளை அதிகப்பரப்பில் பயிரிடுவதன் மூலமும் உற்பத்தித்திறனை உயர்த்தி கூடுதல் பருத்தியைப் பெற வேண்டியுளளது.

1990-92 ஆம் ஆண்டில் ரூ. 16.23 இலட்சம் மொத்தச் செலவில் இத்திட்டம் செயற்படுத்தப்பட்டது. இச் செலவை, மத்திய அரசும், மாநில அரசும் சமமாக ஏற்றன.

1991-92 ஆம் ஆண்டில் இத்திட்டம் ரூ. 20.38 இலட்சம் மொத்தச் செலவில் காமராஜர், மதுரை, திருநெல்வேலி-கட்டபொம்மன் ஆகிய மாவட்டங்களில் செயற்படுத்தப்படும். இச் செலவை மத்திய அரசும், மாநில அரசும் சமமாக ஏற்கும்.

1991-92 ஆம் ஆண்டில் இத் திட்டத்தின் பல்வேறு கூறுகளுக்கான இலக்கு வருமாறு :

| தொடர் எண். (1) | திட்டக்கூறு. (2) | | திட்ட இலக்கு. (3) | நிதி இலக்கு. (4) (ரூபாய் இலட்சத்தில்) |
|---|---|---|---|---|
| 1 | பயிர் பாதுகாப்பு சாதனங்களை 50 சதவிகிதம் விலையில் வழங்குதல் | .. | 1,600 (எண்ணிக்கை) | 8.00 |
| 2 | பயிர் பாதுகாப்பு இரசாயனங்களை 50 சதவிகித விலையில் வழங்குதல் | .. .. | 3,052 (எக்டேர்) | 12.21 |
| 3 | உழவர்களுக்குப் பயிற்சி | .. | 100 (உழவர்கள்) | 0.2 |
| 4 | பயிர்ப் பூச்சிகளை அயல் பால் மணமுடைய இரசாயன மருந்துப் பொருட்களால் ஈர்த்துக் கொள்ளுதல். | | 30 (எக்டேர்) | 0.15 |
| | மொத்தம் | .. | .. | 20.38 |



**கரும்பு:**

1990-91 ஆம் ஆண்டில் கரும்பு சாகுபடி செய்யத் திட்டமிட்லி பரப்பு 2.00இலட்சம் எக்டேர். ஆனால் 2.36 இலட்சம் எக்டேரில் கரும்பு பயிரிடப்பட்டது. 24.25 இலட்சம் மெட்ரிக் டன் வரை கரும்பு வெல்லம் உற்பத்தி எதிர்பார்க்கப்படுகிறது. 1991-92 ஆம் ஆண்டிலும், கரும்பு பயிரிடும் திட்டத்தின் கீழ், 2.00 இலட்சம் எக்டேர் பரப்பில் கரும்பு பயிரிடப்படுவதன்மூலம் 24 லட்சம் மெ. டன் கரும்பு வெல்லம் உற்பத்தி செய்யவேண்டுமென இலக்கிடப்பட்டது. கரும்புப்பயிரைத்தாக்கும் இளங்குருத்துப்புழு, இடைக்கணீப்புழு ஆகியவற்றை ஒட்டுண்ணிகள் மூலம் கட்டுப்படுத்த 21 ஒட்டுண்ணி வளர்ப்பு நிலையங்களில் இனப் பெருக்கம் செய்யப்பட்டு கரும்பு பயிரிடப்பட்டுள்ள நிலத்தில் விடப்படுகின்றன. 1991 மார்ச் வரையில் 10,500 எக்டேர் கரும்பு சாகுபடி நிலத்தில் ஒட்டுண்ணிகளை விடுவதற்கு இலக்கிடப்பட்டதற்கு ஏற்ப 10,070 எக்டேர் நிலப் பரப்பில் ஒட்டுண்ணிகள் விடப்பட்டன. இத்திட்டம், 1991-92 ஆம் ஆண்டிலும் தொடர்ந்து மேற்கொள்ளப்படும், இது தவிர விவசாயிகளுக்கு கரும்பு சாகுபடி தொழில்நுட்பங்கள் குறித்து விளக்குவதற்கு, 1991 மார்ச் வரையில் 575 செயல்விளக்கங்கள் அளிக்கப்பட்டன. 1991-92 ஆம் ஆண்டிலும் 575 செயல் விளக்கங்கள் அளிக்கப்படும்.

**பகுதி மேம்பாட்டுத் திட்டம் :**

**ஒருங்கிணைந்த புன்செய் நில பண்ணைத் திட்டம் (I.D.E.P.) :**

புன்செய் பயிர் உற்பத்தித் திறனை அதிகரித்தல், புன்செய் பயிர்களைச் சாகுபடி செய்யும் விவசாயிகளின் பொருளாதார நிலையை மேம்படுத்தல் ஆகியவற்றை நோக்கமாகக் கொண்டு மொத்தம் ரூ. 5 கோடி செலவில் 1990-91 ஆம் ஆண்டுமுதல் மாநில அரசு நிதியுடன் மூன்றாண்டுத்திட்டம் ஒன்று செயல் படுத்தப்பட்டு வருகிறது. ஒவ்வொன்றும் 100 எக்டேர் பரப்பளவு கொண்ட 300 இடங்கள் (30,000 எக்டேர்) தெரிந் தெடுக்கப்பட்டு, அங்கு புன்செய் பயிர் சாகுபடி குறித்த தொழில் நுட்ப உத்திகள் பின்பற்றப்படுகின்றன. ஒவ்வொரு எக்டேருக் கும் உதவித் தொகையாக மொத்தம் ரூ. 500 வழங்கப்படுகிறது இத்திட்டத்தின் கீழ் 1990-91 ஆம் ஆண்டில் ஏற்பட்ட முன் னேற்றம், 1991-92 ஆம் ஆண்டுக்கான திட்டங்கள் ஆகியவை பற்றிய விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன. கூறு வாரி யாக, இத்திட்டத்தின் பயன்களை மதிப்பிட்ட பின்னர் இத் திட்டம் சற்றே மாற்றியமைக்கப்பட்டுள்ளது. சீரமைப்பு நடவடிக்கையாக சில கூறுகள் கைவிடப்பட்டு வருகின்றன.

பகுதி மேம்பாட்டுத் திட்டம.

ஒருங்கிணைந்த புன்செய் நில பண்ணைத் திட்டம் (I.D.E.P.)

| வரிசை எண். | திட்டக் கூறு. | 1990-91 திட்டம் இலக்கு. | 1990-91 திட்டம் சாதனை. | 1990-91 நிதி இலக்கு. | 1990-91 நிதி சாதனை | 1991-92 திட்ட இலக்கு. | 1991-92 நிதி இலக்கு. |
|---|---|---|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) (ரூபாய் இலட்சத்தில்.) | (6) | (7) | (8) (ரூபாய் இலட்சத்தில். |
| 1 | கோடை உழவு 50 சதவீத உதவித் தொகை எக்டேர். | 30,000 | 29,868 | 54.0 | 50.93 | 30,000 | 60,00 |
| 2. | ஊட்டமேற்றிய தொழு உரமிடுதல் 20 சதவீத உதவித் தொகை எக்டேர். | 30,000 | 29,936 | 18.0 | 18.85 | 30,000 | 18,00 |
| 3 | இருபோகப் பயிர் (விதைகள், உயிரியல் இரராயன உரங்கள் முதலியன வழங்குதல்) 50 சதவீத உதவித் தொகை எக்டேர். | 30,000 | 18,891 | 15.0 | 10.78 | 30,000 | 15,00 |
| 4 | தீவன மேம்பாடு 50 சதவீத உதவித் தொகை எக்டேர் | 30,000 | 24,195 | 7.5 | 5.81 | .. | .. |
| 5 | நைட்ரஜன் மேலுரமிடுதல் 50 சதவீத உதவித் தொகை எக்டேர். | 30,000 | 28,796 | 10.5 | 9.36 | 30,000 | 12,000 |
| 6 | ஐ. பீ. எம். தொழில் நுட்ப உத்தி பெரோனைன் கண்ணிகள், செப்டாஸ் முதலியன வழங்குதல். 50 சதவீத உதவித் தொகை எக்டேர். | 30.000 | 29,398 | 15.0 | 14.58 | 30,000 | 15,00 |
| 7 | பயிற்சி (உழவர்) எண்ணிக்கை | 30.000 | 34,633 | 15.0 | 14.88 | 30,000 | 6.00 |
| 8 | விளம்பரம் | | | 15.0 | 14.97 | | |
| 9 | வேளாண்மைக் கருவிகள் (எண்ணிக்கை) | | | | 9.15 | | |
| | மொத்தம் | | | 150.00 | 149.31 | | 126.00 |



1991 செப்டம்பர் 24]

வானவாரிப் பயிர்களுக்கான நீர்பிரிமுகடு மேம்பாட்டுத் தேசிய திட்டம்

1991-92 வரை இத்திட்டம் மத்திய அரசு பொறுப்பேற்கும் திட்டமாக இருந்தது. இத்திட்டம் குறித்து ஏற்ப செலவை, மாநில அரசும், மத்திய அரசும் சமமாக ஏற்பது வழக்கம். இத்திட்டம் 1990-91 ஆம்ஆண்டில் தருமபுரி மாவட்டத்தில் மட்டும் செயல்படுத்தப்பட்டது. வேளாண்மை, வேளாண் பொறியியல், தோட்டக்கலைத் துறையாலும், தமிழ்நாடு வேளாண் பல்கலைக் கழகத்தாலும் இத்திட்டம் செயற்படுத்தப்பட்டது. மண் அரிப்பைத் தடுக்கும் வகையில் சம உயர நிலங்களில் விதை விதைத்தல், வேளாண்காடு வளர்ப்பில் 50 ஹெக்டேர் பரப்பில் செயல் விளக்கப் பாத்திகள் அமைத்தல்,. அவசரதேவைக்கென விதைகளை இருப்பில் வைத்தல், காடு வளர்த்தல், பயிற்சி, கருத்தரங்குகள், விவசாயிகளுக்கான ஆய்வு சுற்றுலா ஆகியவற்றை நடத்துதல், சிறு உழவர்கள் ஓரளவு நிலம் வைத்திருக்கும் உழவர்களின் நிலங்களில் பயிர் வளமண் மாதிரிகளை ஆய்வு செய்தல் ஆகிய பணிகள் இத்திட்டத்தில் அடங்கும். மேற்கண்ட பணிகளுக்காக ரூ. 73.18 இலட்சம் செலவிடப்பட்டது.

எட்டாம் ஐந்தாண்டுத் திட்டத்தில், வானாவாரி பயிர்களின் சாகுபடியை அதிகரிக்கும் பொருட்டு. வானவாரி பயிர்களுக்கான நீர்பிரிமுகடு மேம்பாட்டுத் தேசியத்திட்டத்தை விரிவான வகையில், சீரமைக்கப்பட்ட முறையில் செயல்படுத்த மத்திய அரசு கருதியுள்ளது. மத்திய அரசு வழங்கியுள்ள நெறிமுறைக் குறிப்புகளின் அடிப்படையில் எட்டாவது ஐந்தாண்டுத்திட்டக் காலத்தின் எஞ்சிய கால அளவில் இத்திட்டம் 14 மாவட்டங்களில் 84 வளர்ச்சி வட்டாரங்களில் செயற்படுத்தப்படும். மாவட்டங்களையும் வட்டாரங்களையும் தெரிந்தெடுப்பதற்கான நடவடிக்கைகளை நாங்கள் எடுத்துள்ளோம். இத்திட்டப் பணியைக் கண்காணிப்பதற்காக, மாவட்டக் குழுக்களும், வட்டாரக் குழுக்களும் அமைக்கப்பட்டுள்ளன. நாற்றங்கால்கள் வளர்த்தல், உழவர்களின் நண்பர்களுக்குப் பயிற்சியளித்தல் (மித்ர கிசான்), நீர்பிரி முகடு மேம்பாடு போன்ற தொடக்கப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. நீர்பிரி முகடுப் பகுதிகள் தீர்மானிக்கப்பட்டு திட்ட அறிக்கைகள் தயாரிக்கும் பணி நடந்தேறி வருகின்றன. நீர்பிரி முகடுகளில், வனத்துறை நிலம் பட்டா நிலம் போன்ற அரசு நிலங்களில், தடுப்பு அணைகள், நீர்க்கசிவுக் குட்டைகள் அமைத்தல், மண் வளம், ஈரப்பசை ஆகியவற்றைப் பாதுகாப்பதற்கு, நீர் ஆதாரங்கள் குறித்து பயிற்சியளித்தல் ஆகிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதுடன் இலவசமாகவும் சீரமைப்படும், நீர்பிரி முகடுகள் ஒவ்வொன்றின் தேவைகளுக்கிணங்க இந்த நடவடிக்கைகள் எடுக்கப்படும். இப்பணிகள் விவசாயிகளுக்கு இலவசமாக செய்து தரப்படும். நீர்பிரி முகடுகளிலுள்ள வட்டார நிலங்கள் மேம்படுத்தப்படுவதைப் பொறுத்தவரையில். இதற்கான இடுபொருட்களை விவசாயிகள் குறைந்த

விலையில் பெறுவர். மண்வளம், ஈரப்பசை ஆகியவற்றைப் பாது
காப்பதற்குத் தனியார் பண்ணைகளிலுள்ள நில வளைவு வரப்பு
களில் நடுவதற்கென வெட்டிவேர்கள். பழம் தரும் வெவ்வேறு
வகை மரங்கள், மூங்கில், விறகு ஆகியவற்றுக்கான மரக்கன்றுகள்
தீவனம் முதலிய இடுபொருட்களும் இதில் அடங்கும். விவசாய
களே இத்திட்டத்திற்கு ஏற்பளித்து, துறையின் உதவியுடன்
இவற்றை நிறைவேற்றுவதால். இத்திட்டத்தில் பயனீட்டாளர்
களின் பங்கு மிக அதிகமாகும். எட்டாவது ஐந்தாண்டுத்
திட்டக் காலத்தில் 89,000 ஹெக்டேர் நிலம் சீரமைக்கப்படும்,
இப்பணிக்காக, மத்திய அரசு ரூ. 35.61 கோடி நிதி உதவி அளி
ப்பதாக உறுதியளித்துள்ளது. இத்தொகையில் 75 சதவீதம்
மாநில அரசுக்குக் கடனாகவும் 25 சதவீதம் மானியமாகவும்
வழங்கப்படும்.

**வேளாண்-காடு வளர்ப்பு :**

இத்துறை மூலம் செயல்படுத்தப்படும் புன்செய் நிலத்
திட்டத்தின் கீழ்வரும் வேளாண்-காடு வளர்ப்பானது ஸ்வீடன்
நாட்டு நிறுவன நிதியுதவி மூலம் செயல்படுத்தப்படும் சமூகக்
காடு வளர்ப்புத் திட்டத்தின் (நிலை-//) ஓர் அங்கமாகும். இத்
திட்டத்தின் கால அளவு 1988-89 முதல் 1992-93 ஆம் ஆண்டு
வரையிலாகும். இத்திட்டத்தின்கீழ், எரிபொருள், தீவனம்,
பழ வகைகள், மர வகைகள் போன்றவற்றுக்கான கன்றுகள்
விவசாயிகளின் நிலங்களில் வளர்க்கப்பட்டு, 5 ஆண்டுகளுக்கு
வழங்கப்படவுள்ளன. இத்திட்டம் நான்காவது ஆண்டாகச்
செயல்படுத்தப்பட்டு வருகிறது.

இத்திட்டம், குறைந்த அளவு மழையையும், அதிக அளவு
தரிசு நிலத்தையும் கொண்ட மாவட்டங்களில் முக்கியமாக
செயல்படுத்தப்படுகிறது. பழம், தீவனம், எரிபொருள், மூங்கில்
நார் போன்றவற்றைக் கொடுக்கும் சுமார் 500 மரக் கன்றுகளை
வழங்குவதற்கு சிறு குறு உழவர்களுக்கும் தெரிந்தெடுக்கப்படு
கின்றனர். இரண்டு ஆண்டுகளுக்கு மேல் செடிகள் உயிர்வாழ்ந்
திருக்குமாயின், செடி ஒன்றுக்கு ரூ. 2.50 என்ற விதத்தில்
அவர்களுக்கு ஊக்கத் தொகையும் வழங்கப்படுகிறது. நாற்று
வளர்க்கும் பணி சிறு, குறு உழவர்களிடம் ஒப்படைக்கப்படு
கின்றன. ஒரு நாற்றுப்பண்ணையில் 10,000 நாற்றுகள் வரை
இருக்கலாம்.

1990-91 ஆம் ஆண்டில், 70.00 இலட்சம் நாற்றுகளை
வளர்க்கக் கருதப்பட்டது. இதில், எற்கெனவே 73,39 இலட்சம்
நாற்றுகள் வளர்க்கப்பட்டு, விநியோகிக்கப்பட்டன. இதற்காக
ஒதுக்கப்பட்ட ரூ. 104.00 இலட்சம் தொகையில் ரூ. 109.87
இலட்சம் செலவிடப்பட்டது. வெவ்வேறு மாவட்டங்களில்
சிறு/குறு உழவர்களின் நிலத்தில் 120 ஹெக்டேர் வட்டாரத்தில்
தோட்டங்கள் ஏற்கெனவே அமைக்கப்பட்டுள்ளன.



1991-92 ஆம் ஆண்டில், 80 லட்சம் நாற்றுகளை வளர்த்து
விநியோகிக்கவும், மாநிலம் முழுவதிலும் 120 ஹெக்டேர் பரப்
பளவில் சோதனை அடிப்படையில் அவற்றை வளர்க்கவும் திட்ட
மிடப்பட்டுள்ளது.

**விவசாயக் குடும்பங்களைச் சேர்ந்த மகளிரை இத்திட்டத்தின்
கீழ் கொண்டு வருவதைச் சிறப்பு நோக்கமாகக்
கொண்ட திட்டம்.**

தமிழ்நாடு மகளிர்-(TANWA)
வேளாண்மைப் பணிகளில் உதவித் தொகை பெறும் இத்
'டானிடா' நிறுவனத்தின் 3.21 கோடி செலவில், செயல்படுத்
திட்டம், மொத்தம் ரூ. இது 1986-87 ஆம் ஆண்டில் தொடங்கி
தப்படும் திட்டமாகும். வேளாண்மைப் பணி
7 ஆண்டுகளுக்குச் செயல்படுத்தப்படும். வாழ்க்கைத்தரத்தை மேம்
களில் ஈடுபடும் விவசாய மகளிரின் செயல்படுத்தப்பட்டு
படுத்தும் நோக்கத்துடன் இத்திட்டம் தென்
வருகிறது. இத்திட்ட செங்கல்பட்டு-எம்.ஜி.ஆர்., இராமநாதபுரம்,
ஆற்காடு, தஞ்சாவூர், புதுக்கோட்டை, மவட்டங்களிலுள்ள
திருநெல்வேலி கட்டபொம்மன் ஆகிய செயல்படுத்தப்படு
6 விவசாயப் பயிற்சி நிலையங்கள் மூலம் 96 பயிற்சித்
கிறது. ஒவ்வொராண்டும், கிராம அடிப்படையிலான இத்திட்டம், 1991-
திட்டங்கள் நடத்தக் கருதப்பட்டுள்ளது. 1992-94 ஆம் ஆண்டு
92 ஆம் ஆண்டிலும் தொடரப்பட்டு,
வரையில் செயல்படுத்தப்படும்.

**அமைப்பு :**

தற்போதுள்ள பயிற்சி-வழி தொடர்பு விரிவாக்கத்திட்டத்
தின் மூலமாக உழவர்களுக்கு எண்ணெய் வித்துக்கள் பற்றிய
ஆலோசனைகள் கிடைக்கும், பொருட்டு எண்ணெய் வித்துக்கள்
துறை 1-4-1991 ஆம் நாளிலிருந்து வேளாண்மைத் துறையுடன்
இணைக்கப்பட்டுள்ளது.

**தமிழ்நாடு வேளாண்மை வளர்ச்சித் திட்டம் :**

தமிழ்நாடு அரசு, மத்திய அரசுடன் சேர்ந்து ''தமிழ்நாடு
வேளாண்மை வளர்ச்சித் திட்டம்' என்கிற திட்டத்திற்காக
112.80 மில்லியன் அமெரிக்க டாலரை நிதி உதவியாகப்பெற
உலக வங்கியுடன் ஒப்பந்தம் செய்துள்ளது. இதற்காகும்
மொத்தத் திட்டச் செலவு ரூ. 310 கோடியாகும் இத்தொகை
7 ஆண்டுகளில் பயன்படுத்தப்படும்.

**இத்திட்டத்தின் பின்வரும் கூறுகள் அடங்கும் :**

வேளாண்மை விரிவாக்கப் பணியைப் பரந்துபட மேற்
கொள்ளுதல். அதாவது ''பயிற்சி-வழி தொடர்புத் திட்டம்''
பணியாளர்கள், நெல் சிறு தானியம் மற்றும் பொதுவான

பயிர்கள், பயிறு வகைப் பயறுகள் எண்ணெய் வித்துப் பயிர்கள்
தோட்டகலைப் பயிர்கள் மற்றும் கால்நடைத் தீவனப் பயிர்கள்
குறித்து உழவர்களுக்கு ஆலோசனை அளிப்பர். இதனால்,
உழவர்கள் தங்கள் நிலங்களில் பயிர்களைப் பொருந்தமாள
முறையில் கலந்து உரிய கால இடைவெளியில் பயிரிடுவதற்கும்
பெரிதும் உதவியாக இருக்கும். உறை விந்துக்களைப் பயன்
படுத்தி, நவீன செயற்கை முறைக் கருத்தரிப்பு வசதிகள் செய்து
தருதல் தீவனப் பயிர் வளர்ப்பது குறித்து ஆலோசனை
அளித்தல் நோய்கள் பரவுவதைக் கண்காணித்தல் ஆகிய வழி
களில் கால்நடைகளை வளர்ப்பவர்களுக்கு உதவி அளிக்கப்படும்
குறிப்பாக மேற்கு மலைத் தொடர் பகுதியில் உள்ள கிராமங்
களை ஒட்டி காடுகள் அழிக்கப்பட்டப் பகுதிகளில் பயன்தரும்
மரவகைகள் மீண்டும் நடப்படும். இதேபோன்று வள நிலங்
களை ஒட்டியுள்ள பொது நிலங்களிலும் மரங்கள் நடப்படும்.
இவ்வாறு செய்வது சுற்றுச் சூழலைக் காக்கவும் மண் அரிப்பைத்
தடுக்கவும், வன மரங்கள் வெட்டப்படாமல் அதே சமயத்தில்
கிராமங்களுக்கு விறகுகளும், கால்நடைகளுக்குத் தீவனங்களும்
கிடைக்கவும் பெரிதும் உதவும். செங்கல்பட்டு-எம்.ஜி.ஆர்.,
வட ஆற்காடு-அம்பேத்கார், தென் ஆற்காடு, திருச்சிராப்பள்ளி,
தஞ்சாவூர் மாவட்டங்களில் அமைந்துள்ள 19 ஒழுங்குமுறை
விற்பனைக் கூடங்களுக்குச் செனறுவர பயன்படும் வகையில் 800
கிலோ மீட்டர் தொலைவிற்குக்கிராமப்புறச் சாலைகள் அமைக்
கப்படும். இச்சாலைகள் உழவர்கள் தங்களுடைய உற்பத்திப்
பொருட்களை ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்திற்கு எடுத்துச்
சென்று, நியாயமான விலை பெற அவர்களுக்கு மிகவும் உதவி
யாக இருக்கும். வடஆற்காடு-அம்பேத்கார், தென் ஆற்காடு,
சேலம், தருமபுரி மாவட்டங்களில் தற்போதுள்ள குடிநீர் வசதி
போதுமானதாக இல்லாத கிராமங்களில் சுமார் 10,000 முதல்
12,000 வரையில் துளைக் கிணறுகள், வடிமுனைக் குழாய்க்
கிணறுகள் அமைப்பதன் மூலமாக குடிநீர் வசதி அளிக்கப்படும்.
இத்திட்டம், 7 ஆண்டுக் காலத்தில் செயற்படுத்தப்படும், நடப்பு
ஆண்டில், இத்திட்டச் செயலாக்கப் பணி தொடங்கப்படுவதை
உறுதிப்படுத்த இத்திட்டப்பணிகளைக் கண்காணிக்கும் அதிகாரக்
குழு ஒன்றை அமைப்பதற்கான ஆயத்த நடவடிக்கைகள் ஏற்
கெனவே எடுக்கப்பட்டுள்ளன.

**மனித வள மேம்பாடு :**

**மாநில அளவிலான பயிற்சி நிலையம், குடுமியான்மலை :**

குடுமியான்மலையில் உள்ள மாநில அளவிலான பயிற்சி
நிலையத்தில் புதிதாகப் பணிக்கமர்த்தப்பட்ட வேளாண்மை
அலுவலர்களுக்குத் தொடக்கப் பயிற்சியும், கள விளக்க
அலுவலர் பதவித் தரத்திலிருந்து பதவி உயர்வு பெற்ற உதவி





வேளாண்மை அலுவலர்களுக்கு நினைவு கூர் பயிற்சியும்;
வேளாண்மை விரிவாக்கப் பணி குறித்து அதாவது (அ) ஒருங்
கிணைந்த பண்ணை முறை (ஆ) வேளாண் காடு வளர்ப்பு,
(இ) மண் வளப் பாதுகாப்பு, வரப்பமைத்தல், (ஈ) கால்நடைத்
தீவன மேம்பாடு மற்றும் கால்நடை ஊட்டச்சத்து ஆகியவை
குறித்து சிறப்புப் பயிற்சியும் அளிக்கப்படுகின்றன. ஒரே நேரத
தில் வேளாண்மை அலுவலர்கள் வேளாண்மைப் பாடத்தின
சிறப்பு வல்லுநர் 35 பேர் அடங்கிய ஒரு பிரிவுக்கும், உதவி
வேளாண்மை அலுவலர்கள் 50 பேர் அடங்கிய ஒரு பிரிவுக்கும்
5 நாட்களுக்கு வகுப்பறைப் பாடத்திலும், களப்பணி நடை
முறைப் பயிற்சியும் அளிக்கப்படுகின்றன. மேலும் மத்திய அரசுப்
பயிற்சித் திட்டத்தின்கீழ் ஐதராபாத் விரிவாக்க கல்வி நிலையப்
பணியாளர்களால் மக்கள் தொடர்பு சாதனங்களின் உதவியுடன்
ஊர் ஊராகச் சென்று அளிக்கப்படும் நேரிடை விளக்கப்
பயிற்சியும் வேளாண்மைத் துறை முதுநிலை உதவி இயக்குநர்
களுக்கு அளிக்கப்படுகிறது.

**இலக்குகள், சாதனைகள் குறித்த விவரம் வருமாறு :**

| தொடர் எண், இனம். | கலந்துகொள்பவர்களின் எண்ணிக்கை. 1990-91 ஆம் ஆண்டிற்கான சாதனை. | 1991-92 ஆம் ஆண்டிற்கான இலக்கு. |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| 1. வேளாண்மை அலுவலர்களுக்குத் தொடக்கப்பயிற்சி. | 1991-92 ஆம் ஆண்டிற்கு ஒத்திப் போடப் பட்டது. | 50 |
| 2. உதவி வேளாண்மை அலுவலர்களுக்கு நினைவுகூர் பயிற்சி. | 33 | 55 |
| 3. சிறப்புப் பயிற்சி :— | | |
| (அ) வேளாண்மை அலுவலர்கள் | 1217 | 1400 |
| (ஆ) உதவி வேளாண்மை அலுவலர்கள். | 1836 | 2000 |
| மொத்தம் .. | 3086 | 3505 |

இப்பயிற்சி நிலையத்தில் உதவி வேளாண்மை அலுவலர்கள்
வேளாண்மை அலுவலர்கள் நிலையில் பயிற்சி அளிப்பதற்கு
மட்டுமே வசதி உள்ளது. இடைநிலை நிர்வாக அதிகாரிகளுக்கும்
அதாவது வேளாண்மை உதவி இயக்குநர்கள் வேளாண்மைதுணை
இயக்குநர்கள்-வேளாண்மை இணை இயக்குநர்கள்
ருக்கும் நவீன வேளாண்மையின் மாறிவரும் சூழலில் வளர்ச்சிப்
பணிகள் குறித்து பயிற்சி அளிக்க வேண்டியதும் அவசியமாகிறது
எனவே, இந்தப் பயிற்சி நிலையத்தை ஐதராபாத்திலுள்ள
''மேனேஜ்'' நிறுவனம் மற்றும் சென்னையிலுள்ள அண்ணா
மேலாண்மை நிறுவனம் ஆகியவற்றை மாதிரியாகக் கொண்டு
தமிழ்நாடு வேளாண்மை வளர்ச்சித் திட்டத்தின்கீழ் ''மாநில
அளவிலான வேளாண்மை நிருவாக நிலையமாக'' நிலையர்த்த
கருதப்பட்டுள்ளது. இவ்வாறு நிலை உயர்த்துவதன் மூலம்
வேளாண்மைத் துறை அதன் துணைத்துறைகள மற்றும் சார்புத்
துறைகள் ஆகியவற்றின் பயிற்சித் தேவைகளையும் நிறைவு
செய்ய முடியும்.

**உழவர் பயிற்சி மையங்கள் :**

உழவர்களுக்குப் பயிற்சி அளிப்பதாக நமது மாநிலத்தில்
12 உழவர் பயிற்சி மையங்கள் உள்ளன. கோயம்புத்தூர்,
மதுரை, நீலகிரி, பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர்,
காமராசர், சிதம்பரனார், திண்டுக்கல் அண்ணா, திருவண்ணா
மலை-சம்புவராயர் ஆகிய மாவட்டங்கள் நீங்கலாக ஏனைய
மாவட்டங்கள் ஒவ்வொன்றிலும் ஒவ்வொரு பயிற்சி மையம்
உள்ளது. ஒவ்வொரு பயிற்சி மையமும், ஒவ்வொர் ஆண்டும்
உழவுத் தொழிலில் ஈடுபட்டுள்ள ஆண்கள் மற்றும் பெண்களுக்
கென 22 நிறுவனப்பயிற்சியும் உழவர்கள் விவாதக்குழு அமைப்
பாளர்களுக்காக (Formers Discussion group Convenors)
10 பயிற்சிகளையும் 110 இடங்களில் நேரிட விளக்கப் பயிற்சி
களையும் (Periapetatic Training) நடத்துகிறது. மேலும்
பண்ணைச் செய்தி, உழவர்களின் வினாக்களுக்குவிடை அளித்
தல் தொழில் நுட்ப தகவல் வெளியீடுகள் வெளியிடுதல் திரைப்
படங்கள்-விளம்பரப் படங்கள் காட்டுதல் உழவர் விழா, உழவர்
சுற்றுலா போன்ற விரிவாக்கப்பணிகளும் இப்பயிற்சி மையங்
களுக்கு அளிக்கப்படுகின்றன. மேலும் இட அமைவு குறிப்பிட்ட
கலாச்சார நடவடிக்கைகள் ஆகியவற்றைக் கருத்திற் கொண்டு
தெரிந்தெடுக்கப்பட்ட மாவட்டங்களைச் சேர்ந்த விரிவாக்கப்
பணியாளர்களுக்கு குறித்த காலத்திற்கொருமுறை பயிற்சி
அளிக்கும் விதத்தில் இந்த உழவர் பயிற்சி மையங்களின் பணி
களுக்குப் புத்துயிரூட்டவும் கருதப்பட்டுள்ளது.





உழவர் பயிற்சி மையங்களின் சாதனை, 1991—92 ஆம் ஆண்டுத் திட்டம் பற்றிய விவரங்கள் வருமாறு :—

| தொடர் எண். | இனம். | 1990-91 ஆம் ஆண்டு சாதனை. | 1991-92 ஆம் ஆண்டு இலக்கு. |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| 1. | நிறுவனப் பயிற்சிகள் எண்ணிக்கை | 267 | 264 |
| 2. | உழவர்கள் விவாதக் குழு அமைப்பாளர்களுக்கு நிறுவனப் பயிற்சி. | 138 | 120 |
| 3. | நேரிட விளக்கப் பயிற்சி இடைநிலை கட்புல விளக்கம் | 1394 | 1320 |

**வேளாண்மைப் பள்ளிகள் :**

வேளாண்மைத்துறைக் கட்டுப்பாட்டின்கீழ் 12 வேளாண்மைப் பள்ளிகள் இயங்கி வருகின்றன. பள்ளி ஒன்றுக்கு 25 கிராமப்புற இளைஞர்கள் என்ற வீதத்தில் 300 கிராமப்புற இளைஞர்களுக்கு பயிற்சி அளிக்கப்படுகிறது. இப் பள்ளிகள் அவை அமைந்துள்ள மாவட்டங்களின் தேவைகளை நிறைவு செய்கின்றன. திண்டுக்கல்-அண்ணா மாவட்டத்தைச் சேர்ந்த இளைஞர்கள் மதுரை மாவட்டம் மேலூரிலும், கோயம்புத்தூரைச் சேர்ந்த இளைஞர்கள் பவானிசாகரிலும், திருவண்ணாமலை-சம்புவராயர் மாவட்டத்தைச் சேர்ந்த இளைஞர்கள் நவ்லாகிலும் பசும்பொன்முத்துராமலிங்கத் தேவர், காமராசர் மாவட்டங்களைச் சேர்ந்த இளைஞர்கள் பரமக்குடியிலும் . சிதம்பரனார் மாவட்டத்தைச் சேர்ந்த இளைஞர்கள் கிள்ளிக்குளத்திலும் சேர்த்துக் கொள்ளப்படுகின்றனர். குறைந்தது எட்டாவது வகுப்புவரை படித்துள்ள விவசாயக் குடும்பங்களைச் சேர்ந்த 18 முதல் 30 வயதுள்ள வேலையற்ற கிராமப்புற இளைஞர்களுக்கு மேம்பட்ட நவீன வேளாண்மை உத்திகளில் முறைப்படி பயிற்சி அளிக்கப்படுகிறது. இவ்வாறு பயிற்சிபெறும் இளைஞர்கள் ஒவ்வொருவருக்கும் ஆண்டொன்றுக்கு ரூ. 100 பயிற்சி உதவித் தொகை அளிக்கப்படுகிறது. பயிற்சி முடிவுற்றதும் ஒரு சான்றிதழ் வழங்கப்படுகிறது.

1990-91 ஆம் ஆண்டில் சேர்த்துக் கொள்ளப்பட்ட மற்றும் 1991-92 ஆம் ஆண்டில் சேர்த்துக்கொள்ள உத்தேசிக்கப்பட்டுள்ள மாணவர்களின் எண்ணிக்கை வருமாறு :

| | | 1990-91 | 1991-92. |
|---|---|---|---|
| (1) | | (2) | (3) |
| மாணவர்களின் எண்ணிக்கை | .. | 300 | 300 |

எண்ணெய் வித்துகள் :

தமிழ்நாட்டில் எண்ணெய்வித்துக்களின் உற்பத்தி அளவு, உற்பத்தித் திறன் ஆகியவற்றினை அதிகரிக்கும் நோக்குடன் வேளாண்மை இயக்கத்தின் எண்ணெய்வித்துக்கள் உற்பத்திப் பிரிவு கீழ்க்கண்ட முக்கிய எண்ணெய் வித்துக்கள் உற்பத்தித் திட்டங்களைச் செயற்படுத்துகிறது :—

(1) தமிழ்நாட்டில் எண்ணெய்வித்துகளின் உற்பத்தியை அதிகரித்தல் (மாநிலத் திட்டம்).

(2) எண்ணெய்வித்துக்கள் உற்பத்தித் திட்டம்(மத்திய அரசு பொறுப்பேற்கும் திட்டம்).

75:25 என்ற விகிதாச்சார அடிப்படையில் மத்திய மாநில அரசுகள் செலவினை ஏற்கின்றன.

(3) தென்னை அபிவிருத்தித் திட்டம்.

தமிழ்நாட்டில் எண்ணெய் வித்துகளின் உற்பத்தியை அதிகரித்தல்

1990-91 ஆம் ஆண்டில் 12.89 இலட்சம் ஹெக்டேர் பரப்பளவில் எண்ணெய்வித்துக்கள் சாகுபடி செய்யவும், 13.85இலட்சம் டன் எண்ணெய்வித்துக்களை உற்பத்திச் செய்யவும் திட்டமிடப்பட்டது. மிகவும் மோசமான பருவநிலை காரணமாகவும் போதுமான மழையின்மையாலும் எண்ணெய்வித்துக்கள் பயிரிடக்கூடிய பகுதி 12.13 இலட்சம் ஹெக்டேராகவும்எண்ணெய் வித்துக்களின் உற்பத்தி 12.58 இலட்சம் டன்னாகவும் மதிப்பிடப்பட்டுள்ளது.



1991-92 ஆம் ஆண்டுத் திட்டம் :

1991-92 ஆம் ஆண்டில் 12.91 இலட்சம் ஹெக்டேர் பரப்பளவில் எண்ணெய்வித்துக்களை சாகுபடி செய்யவும், 14.50 இலட்சம் டன் எண்ணெய்வித்துக்களை உற்பத்தி செய்யவும் திட்டமிடப்பட்டுள்ளது.

எண்ணெய்வித்துகள் உற்பத்தித் திட்டம் :

இத்திட்டம், தமிழ்நாட்டிலுள்ள சிறு உழவர்களுக்கும் குறு உழவர்களுக்கும் இடுபொருளான விதைகள், ஜிப்சம், பயிர்ப் பாதுகாப்புச் சாதனங்கள், பயிர்ப் பாதுகாப்பு இரசாயனப் பொருட்கள், ரைசோபியம் கலவை, நுண்ணுயிர்ச் சத்துக்கலவை, மனித உழைப்பைக் குறைக்கும் வகையிலான சாதனம், தண்ணீரைச் சிக்கனமாகப் பயன்படுத்துவதற்கான சாதனங்கள் போன்ற இடுபொருட்களுக்கான உதவித்தொகை அளிப்பதன் மூலம் எண்ணெய்வித்துக்களின் உற்பத்தி மற்றும் உற்பத்தித் திறனை உயர்த்தக்கூடிய மத்திய அரசு நிதியுதவிபெறும் திட்டமாகும். 1991-92 ஆம் ஆண்டின் இத்திட்டம்6.36கோடி மூலதனச் செலவில் செயற்படுத்தப்படுகிறது. இந்த மூலதனச் செலவை 75 சதவீதம் மத்திய அரசும், எஞ்சிய 25 சதவீத செலவை மாநில அரசும் ஏற்றுக்கொள்ளும் (மத்திய அரசின் பங்கு ரூ. 4.85 கோடி; மாநில அரசின் பங்கு ரூ.1.51 கோடி) நடப்பாண்டில் இத்திட்டத்தின் கீழ் கூடுதல் மூலதனத்தொகை பெறுவதற்கு வாய்ப்புள்ளது.

(இ) தென்னை அபிவிருத்தித் திட்டம்:

1990-91 ஆம் ஆண்டில் விவசாயிகளுக்கு 8.00 இலட்சம் நெட்டைத் தென்னை கன்றுகளும், 7.00 இலட்சம் ஒட்டு வீரிய தென்னங்கன்றுகளும் வழங்க திட்டமிடப்பட்டது. இருப்பினும் 1990-91 ஆம் ஆண்டில் 8.06 இலட்சம் நெட்டை தென்னங் கன்றுகளும் 5.51 இலட்சம் ஒட்டு வீரிய தென்னங்கன்றுகளும் விவசாயிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது. 1991-92 ஆம் ஆண்டில் 8 இலட்சம் நெட்டை தென்னங்கன்றுகளும் ஏழு இலட்சம் ஒட்டு வீரிய தென்னங்கன்றுகளும் வழங்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

புதிய முயற்சி:

தமிழ்நாட்டில் எண்ணெய்வித்துக்கள் எண்ணெய்வித்துப் பயிர்கள் ஆகியவற்றின் உற்பத்தியையும் உற்பத்தித்திறனையும் அதிகரிக்கவும், அதன்மூலம் இறக்குமதியை நம்பி இருக்கும்

நிலையைக் குறைக்கவும், மாநில அரசு எண்ணெய்வித்துக்கள் குறித்து தொழில் நுட்ப நல்லெண்ணத்தின் அடிப்படையில் கீழ் கண்ட குழுக்களை அமைத்துள்ளது.

1. மாநில அளவிலான குழு.

2. பயிர்ப்பாதுகாப்பு தொழில்நுட்பம்.

3. அறுவடைக்குப் பிந்திய தொழில்நுட்பம்.

4. உழவர் ஆதரவு செயல்முறை அமைப்பு.

மேற்குறிப்பிட்ட நான்கு குழுக்களும் குறிப்பிட்ட காலத்திற் கொருமுறை கூட்டப்பட்டு உரிய நேரங்களில் உழவர் சமுதாயத்திற்கு புதிய பயிர் உத்தி முறைகளை பரப்புவதில் உதவுகின்றன.

**சிறப்புத் திட்டங்கள் :**

தேசிய எண்ணெய்வித்துக்கள் தாவர எண்ணெய் மேம்பாட்டுக்குழு, மத்திய அரசின் தன்னாட்சி அமைப்பாகும். இது செங்கல்பட்டு எம்.ஜி.ஆர், சேலம், மதுரை, திண்டுக்கல் அண்ணா ஆகிய மாவட்டங்களில் சம்பா பருவங்களில் ரூ. 3.75 இலட்சம் செலவில் சூரியகாந்தியைப் பயிரிட 100 சதவீதம் நிதியுதவியை வழங்குகின்றது. இத்திட்டம் 1991-92 ஆம் ஆண்டிலும் இம் மாவட்டங்களில் தொடர்ந்து செயல்படுத்தப்படும்.

தமிழ்நாட்டிலுள்ள இந்து ஆதிதிராவிடர் குடும்பங்களின் சமூகப்பொருளாதார நிலையினை மேம்படுத்துவதற்காக 1990-91 ஆம் ஆண்டில் ரு. 34.45 இலட்சம் செலவில் வேளாண்மை இடுபொருட்களான எண்ணெய்வித்துக்கள் தென்னங்கன்றுகள், பயிர்ப்பாதுகாப்பு இரசாயனப் பொருட்கள் போன்றவை 23,850 இந்து ஆதி திராவிட குடும்பங்கள் பயன்பெறும் வகையில் 50 சதவிகித மானிய விலையில் வழங்கப்பட்டுள்ளன. இத்திட்டம் 1991-92 ஆம் ஆண்டில் ரூ.36.64 இலட்சம் செலவில் நிறைவேற்றப்படும்.

**தமிழ்நாடு வேளாண்மை மேம்பாட்டுத்திட்டம் :**

இத்திட்டம் உலக வங்கியின் நிதியுதவியுடன் 1-4-1991-ல் இருந்து தமிழ்நாட்டில் செயல்படுத்தப்பட்டுள்ளது. உழவர்களுக்கு விரிவான அடிப்படையில் வேளாண்மைபணிகள் கிடைக்கச்செய்யும் பொருட்டு உலக வங்கி ஆலோசனை வழங்கியதன் பேரில் முன்னாள் எண்ணெய்வித்துக்கள் இயக்கம் 1-4-1991 ஆம் நாளிலிருந்து வேளாண் இயக்கத்துடன் இணைக்கப்பட்டுள்ளது.





**தமிழ்நாடு கூட்டுறவு எண்ணெய்வித்துகள் உற்பத்தியாளர் இணையம் (டான்காப்) :**

தமிழ்நாடு கூட்டுறவு எண்ணெய்வித்துக்கள் உற்பத்தியாளர் இணையம் (டான்காப்) 1-1-1981 ஆம் ஆண்டு பதிவு செய்யப்பட்டு தமிழ்நாட்டில் தாவர எண்ணெய்த் திட்டத்தைச் செயல்படுத்துவதற்காக உருவாக்கப்பட்டது. இதற்கு தேசியபால்வள மேம்பாட்டு வாரியம் நிதி உதவி அளிக்கிறது.

**நோக்கங்கள் :**

இந்த இணையகத்தின் முக்கிய நோக்கம், கூட்டுறவு சங்கங்களை ஏற்படுத்தி எண்ணெய்வித்து உற்பத்தியாளர்களின்சமூக-பொருளாதார நிலையினை மேம்படுத்துவதும் எண்ணெய்வித்து உற்பத்தி, கொள்முதல், எண்ணெயைப்பதப்படுத்தல், எண்ணெய்யை விற்பனை செய்தல் ஆகிய பணிகளை செம்மையாக ஒருங்கிணைப்பதும் ஆகும்.

**திட்ட மூலதனச் செலவு :**

இந்த இணையம் தேசிய பால்வள மேம்பாடடு வாரியத்தின் தாவர எண்ணெய்த் திட்டத்தை 1981 ஆம் ஆண்டு முதல் செயல்படுத்தி வருகிறது. இத்திட்டம், இரண்டு அடுக்கு நிருவாக அமைப்பைக்கொண்டது, கிராம அளவில் எண்ணெய்வித்துக்கள் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு சங்கங்களும், மாநில அளவில் இணையமும் சேர்ந்து செயல்படுகின்றன. இத்திட்டத்தின் மொத்த மூலதனச் செலவு ரூ. 15.61 கோடி ஆகும். இதில் 8.42 கோடியினை கடனாகவும், ரூ. 7.19 கோடியினை மானியமாகவும் தேசிய பால்வள மேம்பாட்டு வாரியம் 54%: 40% என்ற வீதத்தில், டான்காப் நிறுவனத்திற்கு வழங்குகிறது. தேசிய பால்வள மேம்பாட்டு வாரியம், எண்ணெய் வித்துக்களை கொள்முதல் செய்வதற்கென டான்காப் நிறுவனத்திற்கு குறுகிய காலக் கடன்களையும் வழங்குகிறது. இந்நிறுவனம், வளர்ச்சிப் பணிகளுக்காக இதுவரை ரூ. 10.21 கோடி செலவிட்டுள்ளது.

**திட்டப்பகுதி :**

நான்கு மாவட்டங்களில் உள்ள 20 வட்டங்களில், அதாவது திருவண்ணாமலை-சம்புவராயர், வடாற்காடு-அம்பேத்கார் (9 வட்டங்கள்), தென்னாற்காடு மாவட்டம்(8, வட்டங்கள்) செங்கல்பட்டு எம்.ஜி.ஆர். மாவட்டம் (3 வட்டங்கள்) இத்திட்டப்பகுதி செயல்படுகிறது. டான்காப் நிறுவனம், இதுவரை 335 எண்ணெய்வித்து உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்கங்களை ஏற்படுத்தி 76,723 விவசாயிகளை உறுப்பினர்களாக்கி,

1,492 கிராமங்களைத் தன்னுடைய கூட்டுறவு அமைப்பின்கீழ்க் கொண்டு வந்துள்ளது. 31—3—1991 அன்றுள்ளபடி 1.26 இலட்சம் எக்டேர் பரப்பினை எண்ணெய்வித்து உற்பத்தியின் கீழ் கொண்டு வந்துள்ளது.

**கொள்முதல் :**

டான்காப் நிறுவனம் அனைத்து பருவங்களிலும் விவசாயிகளிடமிருந்து எண்ணெய் வித்துக்களைக் கொள்முதல் செய்கிறது. 1990-91-ல், டான்காப் நிறுவனம் 15,258 டன் நிலக்கடலைக்கொட்டை மற்றும் 1,021 டன் நிலக்கடலை வித்துக்களை தனது கூட்டுறவுச் சங்கங்களின் மூலம் உறுப்பினர்களிடமிருந்து கொள்முதல் செய்துள்ளது. டான்காப் நிறுவனம் ஒவ்வொரு பருவத்திலும் கொள்முதல் செய்யப்படும் மொத்த மதிப்பில் 1.5 சதவீதத்தினை, பணிக்கட்டணமாக, கூட்டுறவுச் சங்கங்களுக்கு வழங்குகிறது. மேலும் டான்காப் நிறுவனம் மாவட்ட ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களிலிருந்து, நிலக்கடலையினை நேரடியாகக் கொள்முதல் செய்கிறது. மேற்படி காலத்தில் திட்டப்பகுதியில் அமைந்துள்ள ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களிலிருந்து 25,913 டன் நிலக்கடலை (நிலக்கடலைக் கொட்டைகளாக) கொள்முதல் செய்துளளது.

**பதப்படுத்துதல் :**

டான்காப் நிறுவனத்தின் எண்ணெய் பிழியும் ஆலைகள், விருத்தாசலத்தில் ஒன்றும் திருவணணாமலையில் ஒன்றும் (ஒரு நாளைய மொத்த பிழியும் சக்தி 165 டன்) இயக்கி வருகின்றன இவ்வாலைகள 1990-91-ல் 19,575 டன் நிலக்கடலைப் பருப்பினைப் பிழிந்து, 7,399 டன் எண்ணெய், 475 டன் சுத்தகரிக்கப்பட்ட எண்ணெய், 11,794 டன் பிண்ணாக்கு, 188 டன் பிண்ணாக்கிலிருந்து பிழிந்த எண்ணெய், 2,472 டன் எண்ணெய் நீக்கப்பட்ட பிண்ணாக்கு ஆகியவற்றை உற்பத்தி செய்துள்ளது.

**விற்பனை :**

டான்காப் நிறுவனம் சென்னை, கிண்டியில் எண்ணெய் நிரப்பும் நிலையம் ஒன்றினை அமைத்துள்ளது. ஒரு நாளைய திறன் 45 டன்கள இந்நிலையம் எண்ணெய்யை அடைப்பான்களில் அடைத்து, 1 கிலோ டின்கள்), 5 கிலோ , 15 கிலோ பாலிதின் பாட்டில்கள்-பைகள், 1/2 கிலோ (பாலிதின் பைகள்) ஆகிய வெவ்வேறு அளவுகளில் நுகர்வோருக்கென வழங்கி வருகிறது. டான்காப் நிறுவனம் 'பியூர்நெட்' (பிழியப்பட்ட கடலைஎண்ணெய் மற்றும் '-வின்னர்' (சுத்திகரிக்கப்பட்ட கடலை எண்ணெய்) என்ற பெயரில் எண்ணெய்யை அங்காடிகளில் விற்பனைக்கு



கொண்டு வந்துள்ளது. 1—4—1990 முதல் 31—3—1991 வரையிலான காலத்தில், டான்காப் நிறுவனம் 7,399 டன் ''பியூர் நெட்'' எண்ணெய், 358 டன் ''வின்னர்'' எண்ணெய் 2,634 டன் பிண்ணாக்கு, 184 டன் பிண்ணாக்கிலிருந்து பிழிந்த எண்ணெய் மற்றும் 1,610 டன் எண்ணெய் நீக்கப்பட்ட பிண்ணாக்கு முதலியவற்றை விற்பனை செய்துள்ளது.

இது போன்ற திட்டத்தை மேலும் ஆறு மாவட்டங்களில் செயல்படுத்துவதற்கு தேவையான நிதியுதவியைப்பெற தேசிய பால்வள மேம்பாட்டு வாரியத்தினை அணுக இம்மாநில அரசு உத்தேசித்துள்ளது.

**தோட்டக்கலை மற்றும் மலை ப்யிர்கள் துறை:**

நாட்டில் செல்வவளத்திற்குத் தோட்டப்பயிர்களும், மலைத் தோட்டப்பயிர்களும் முக்கிய ஆதாரங்களாக உள்ளன. தமிழ் நாட்டில் பயிரிடத்தக்க பரப்பில் 50 சதவீதத்திற்கு அதிகமான நிலங்கள் வானம் பார்த்தவை, எனவே அவற்றில் அடிக்கடி பருவ மழை தவறி விடுவதால், ஓர் ஆண்டு முழுவதும் வளர்ந்து பலன் தரும் பயிர்களைப் பயிரிடுவதில் அதிக இடர்பாடு ஏற்படுகிறது. தோட்டப் பயிர் வளருவதற்கு நீண்ட காலம் ஆகுமென்றாலும் மழை இல்லையென்றால், ஆண்டு பயிர்களைப் காட்டிலும் தோட்டப் பயிர்கள் தாக்குப் பிடிக்கும். எனவே நம்முடைய மாநிலத்தில் தோட்டப் பயிர்களை வளர்ப்பதற்கு அதிக வாய்ப்புள்ளது. நம்முடைய வேளாண் தட்ப வெப்ப நிலை, வெப்ப மண்டல மிக வெப்ப மண்டலப் பகுதிகளில் பயிராகும் பல்வேறு வகைப்பட்ட பழங்கள், காய்கறிகள் ஆகியவற்றைப் பயிரிடப் பொருத்தமாக உள்ளது, தோட்டப் பயிர்களும்வணிகப் பயிர்களும் உயர் சத்து வாய்ந்தவையாகும். அவை உழவர்களின் வருமானத்தை அதிகரிப்பதோடு, வேலைவாய்ப்பையும் பெருக்குகிறது.

காய்கறிகள், பழம் தரும் பயிர்களுக்கு நல்ல தரமான விதைகள் கன்றுகள் ஆகியவற்றை விவசாயிகளுக்கு அளிப்பதும், பயிர்ச் சுழற்சிமுறை, பயிர் நிர்வாகம் குறித்து நல்ல ஆலோசனை அளிப்பதும் தோட்டக்கலை— மலைத்தோட்டப் பயிர்த் துறையின் பொறுப்பாகும். தரமான பயிர்ப் பொருள்களையும் விதைகளையும் உற்பத்தி செய்து உழவர்களுக்கு வழங்குவதன்மூலமும் அவர்கள் அதிக உற்பத்தி செய்து வருவாயை அதிகரிப்பதற்காக பண்ணைகளை ஏற்படுத்தி. பராமரித்து மேம்படுத்துவதில் அவர்களுக்குத் தொழில் நுட்ப உதவி அளிப்பதன் மூலம் ஒவ்வொரு ஆண்டும் அதிகப்பரப்பில் தோட்டம், மலைத்தோட்டப்பயிர்களை பயிரிடுவதை இத்துறை நோக்கமாகக் கொண்டுள்ளது.

மார்ச் 1991 வரை தோட்டக்கலை துறை செயற்படுத்திய பல்வேறு தோட்டக்கலை பயிர்த்திட்டங்களின் கீழ் 46,117 விவசாயிகள் பயனடைந்தனர். புதிதாக 38,457 ஏக்கரில் தோட்டப் பயிர்கள்பயிரிடப்பட்டுள்ளன. மலிவு விலையில் 1,06,40.412 வெவ்வேறு வகை செடிகள் விவசாயிகளுக்கு வழங்கப்பட்டுள்ளன. விவசாயிகள் பயன்படுத்திய, மலிவு விலையில் வழங்கப்பட்ட செடிகள், சாதனங்கள், பயிர்ப் பூச்சிக் கொல்லி மருந்து ஆகியவற்றின் மதிப்பு ரூ. 114.50 இலட்சமாகும்.

தோட்டக்கலை துறை தற்போது 53 அரசு தோட்டக்கலைப் பண்ணைகளைப் பராமரித்து வருகிறது. தரமான பழம் தரும் பயிர்கள், பணமதிப்புடைய செடிகள் ஆகியவை பண்ணைகளில் பயிரிடப்பட்டு, மலிவு விலையில் விவசாயிகளுக்கு வழங்கப்பட்டன. 1990-91 ஆம் ஆண்டில், அரசுக்குச் சொந்தமான 53தோட்டக் கலைப் பண்ணைகளில் உற்பத்திசெய்யத் திட்டமிட்டுள்ள விதைகளின் அளவு, செடிகளின் எண்ணிக்கை குறித்த இலக்குகளும் அதற்கெதிராக 31—3—1991 ஆம் நாள் வரை அவற்றில் உற்பத்தி செய்து வழங்கிய செடிகள் விதைகளின் எண்ணிக்கையும் அளவும் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

| | இலக்கு. (31-3-1991 (எண்ணிக்கை | சாதனை. வரை இலட்சத்தில்). |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| 1 பழமரக் கன்றுகள் (மாங்காய், சப்போட்டா, கொய்யா, மாதுளை, பலா, ஆரஞ்சு முதலியன). | 20.00 | 19.00 |
| 2 நறுமணப் பொருட்கள் (மிளகு, ஏலக்காய், சாதிக்காய், இலவங்கம் முதலியன.) | 7.50 | 8.14 |
| 3 மலைத் தோட்டப் பயிர்கள் (தேயிலை, காப்பி, முந்திரி முதலியவை.) | 130.00 | 134.71 |
| 4 பூ ஏனைய வணிகப் பயன் செடிகள் | 42.50 | 38.80 |
| மொத்தம் .. | 200.00 | 200.65 |



5. காயகறி விதைகள் அளவு 40 மெட்ரிக் டன் 40 மெட்ரிக் டன்.

மாநில அரசும் மத்திய அரசும் ஒப்புதலளித்து பல்வேறுதிட்டங்களை தோட்டக்கலைத்துறை செயல்படுத்துகிறது. இத்திட்டங்கள் மாநிலம் முழுவதிலும் குறிப்பிட்ட பகுதிகளில் செயற்படுத்தப்படுகின்றன. 1990-91 ஆம் ஆண்டில் மாநிலம் முழுவதுமுள்ள விவசாயிகள் தங்கள் நிலங்களில் மேற்கொள்ள திட்டமிடப்பட்ட தோட்டப் பயிர்களின் மொத்த உற்பத்தி ஆலக்கு, எய்திய சாதனை மற்றும் 1991-92 ஆம் ஆண்டின் இலக்கு ஆகியவை குறித்த விவரங்கள் வருமாறு :

(பரப்பு எக்டேரில்).

| | 1990-91 ஆம் ஆண்டின் இலக்கு. | 1991 மார்ச் வரையிலான சாதனை. | 1991-92 ஆண்டில் பயிரிடக் கருதப் பட்ட பரப்பு. |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| கீழே குறிப்பிட்டுள்ள பயிர்கள் பயிரிடப்படும் புதிய பகுதியின் பரப்பு : | | | |
| 1 பழங்கள் .. .. | 10,565 | 13,727 | 10,705 |
| 2 காய்கறிகள் .. | 10,500 | 16,630 | 10,500 |
| 3 நறுமணப் பொருட்கள் | 5,550 | 6,754 | 5,300 |
| 4 மலைத் தோட்டப் பயிர்கள். .. .. | 951 | 1,225 | 965 |
| 5 பூக்கள் .. .. | 132 | 121 | 132 |
| மொத்தம் .. | 27,698 | 38,457 | 27,602 |

| தமிழ்நாடு முழுவதிலும் தற்போதுள்ள மலைத் தோட்டம்-பழத்தோட்டங்களிலிருந்து கிடைக்கும் உற்பத்தி. | 1990-91 ஆம் ஆண்டின் இலக்கு. (இலட்சம் மெட்ரிக் டன்னில்.) | 1991 மார்ச் வரையிலான சாதனை. | 1991-92 ஆம் ஆண்டில் பயிரிடக் கருதப் பட்ட பரப்பு. (பரப்பு எக்டேரில்.) |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| 1 பழங்கள் .. .. | 26.060 | 28.513 | 36.34 |
| 2 காய்கறிகள் .. | 32.050 | 33.318 | 32.56 |
| 3 நறுமணப் பொருட்கள் | 2.490 | 2.490 | 2.55 |
| 4 மலைத் தோட்டப் பயிர்கள். | 1.342 | 1.870 | 1.35 |
| 5 பூக்கள் .. .. | 0.450 | 0.451 | 0.45 |
| மொத்தம் .. | 62.392 | 66.642 | 63.25 |

தோட்டக்கலைத் துறை செயற்படுத்திய பல்வேறு திட்டங்களின் சுருக்க விவரம் வருமாறு :

ஒருங்கிணைந்த தோட்டக்கலை மேம்பாட்டுத் திட்டம் :

இது ஒரு மாநில அரசுத் திட்டம். இத்திட்டத்தின் கீழ் தோட்டப் பயிர்களையும் காய்கறிகளையும் அதிக பரப்பில் பயிரிடுவதற்காக சிறு விவசாயிகளுக்கும் குறைளவு நிலம் வைத்துள்ள விவசாயிகளுக்கும் 50 சதவீத உதவித்தொகையில் பழமரக் கன்றுகளும், பொருளாதார மதிப்புடைய ஏனைய செடிகளும் வழங்கப்படுகின்றன. காய்கறி விதைகளுக்கு உதவித்தொகை வழங்கப்படுவதில்லை. 1991 மார்ச் வரை ஒவ்வொரு வகையும் 6,300 எக்டேரில் பயிரிடப்பட வேண்டும் என்று இலக்கு நிர்ணயிக்கப்பட்டது. பழம் தரும் பயிர்கள் 6,400 எக்டேரிலும் காய்கறிகள் 6,600 எக்டேரிலும் பயிரிடப்பட்டது. இத்திட்டத்தின் கீழ் 27,432 விவசாயிகள் பயனடைந்தனர்.



ஒருங்கிணைந்த பழங்குடியினர் மேம்பாட்டுத் திட்டம் :

இது மத்திய அரசு பொறுப்பேற்ற திட்டமாகும். இத்திட்டத்தின்கீழ் தோட்டக்கலைக்கான மூலதனச்செலவு ரூ. 31.33 இலட்சமாகும். இத்திட்டத்தின் கீழ் பழங்குடி விவசாயிகள் ஒவ்வொருவரும் 1 ஏக்கர் நிலத்தில் பழத் தோட்டத்தை ஏற்படுத்துவதற்காக 100 சதவீதம் உதவித் தொகையாக ஒரு குடும்பத்திற்கு ரூ. 1,000 வீதம் வழங்கப்படுகிறது. இத்தொகை தரமான பயிர் பொருட்கள், பயிர் பூச்சிக் கொல்லி மருந்துகள், பயிர்ப் பாதுகாப்புச் சாதனங்கள் ஆகியவற்றை வாங்குவதற்கும் பயன்படுத்தப்படும். இத்திட்டத்தின்கீழ் 1991 மார்ச் வரை 2,600 பழங்குடியினர் குடும்பங்கள் பயனடைந்துள்ளன, 1990-91 ஆம் ஆண்டில் 2,600 ஏக்கர் நிலத்தில் பழத் தோட்டங்கள் வளர்க்கப்பட வேண்டுமென இலக்கு நிர்ணயிக்கப்பட்டிருக்க பழங்குடி மக்கள் 2,600 ஏக்கர் நிலத்திலும் பழத் தோட்டங்களை ஏற்படுத்தியுள்ளனர். 1991-92 ஆம் ஆண்டில் ரூ. 90 இலட்சம் மூலதனச் செலவில் இத்திட்டம் பழங்குடியினர் பகுதிகளில் 2,600 ஏக்கர் நிலததில் பழத் தோட்டங்களை ஏற்படுத்தும் வகையில் நிறைவேற்றப்படும்.

தமிழ்நர்டு வேளர்ண்மை மேம்பர்ட்டுத் திட்டம் :

இது ஊரக வங்கியின் உதவிபெறும் திட்டமாகும். தானியம் எண்ணெய் வித்துப் பயிர்களுக்கான பயிற்சி வழித் தொடர்புத் திட்டம் வேளாண்மை இயக்குநர் கட்டுப்பாட்டின்கீழ் உள்ளது. தோட்டக்கலை பயிர்களுக்கென பயிற்சி வழி தொடர்புத் திட்டம் தோட்டக்கலைத்துறை இயக்குநரின் கட்டுப்பாட்டின் கீழ் உள்ளது. தோட்டக்கலை விரிவாக்கத்திற்கான பயிற்சி வழித் தொடர்புப் பணியாளர்கள் மாநிலத்தின் முக்கியமான தோட்டப் பயிர் பயிரிடப்படும் பகுதிகளில் அதாவது நீலகிரி மாவட்டம், திண்டுக்கல் அண்ணா மாவட்டத்தில் கொடைக்கானல் வட்டம் ஆகிய இடங்களில் உள்ளனர். இத்திட்டத்தின் முக்கிய நோக்கம் பயிர் வளர்ப்பு குறித்து அன்மைக்காலத் தொழில் நுட்ப உத்திகளில் விவசாயிகளுக்கு பயிற்சி அளிப்பதாகும்.

ஒருங்கிணந்த முந்திரி மேம்பாட்டுத் திட்டம் :

இது 100 சதவீதம் மத்திய அரசின் உதவி பெறும் திட்டமாகும். இதை நடுவதின் மூலம் முந்திரி பயிரிடுவதை மேம்படுத்துவதற்கும் புதியும் நடும் முந்திரி பயிரிடும் பரப்பை விரிவுபடுத்துவதற்கும் இத்திட்டம் செயற்படுத்தப்படுகிறது. இத்திட்டத்தின்கீழ் தமிழ்நாடு மாநிலத்தின் முந்திரி பயிரிடப்படும் 1.06 இலட்சம் எக்டேர் மொத்தபரப்பில் 3280 எக்டேர் முந்திரிதோட்டத்தில் இந்த ஆண்டில் பயிர்பாதுகாப்புக்காக எடுத்துக்கொள்ளப்

பட்டுள்ளன. மேலும் பதியம் நடுவதற்கான முந்திரி மரத் தோட்டங்கள் 15 எக்டேரில் மரக்கன்று வளர்ப்பும் பண்ணைகள் 8 பிரிவிலும் ஏற்படுத்தப்பட்டுள்ளன. முந்திரி பயிரிடுவோருக்கு எக்டேர் ஒன்றுக்கு ரூ. 250 பயிர்பாதுகாப்பு உதவித் தொகையும், எக்டேர் ஒன்றுக்கு ரூ. 1,150 பதியக் கன்றுகள் குறித்து உதவித் தொகையும் வழங்கப்படுகின்றன. இது பயிர் செலவில் 75 சதவீதம் ஆகும்.

**நறுமணப் பொருள் மேம்பாட்டு ஒருங்கிணைப்புத் திட்டம் :**

இது 100 சதவீதம் மத்திய அரசின் உதவி பெறும் திட்டமாகும். இத்திட்டத்தின் கீழ் 3,000 சிறு பைகள், 25 தெளிப்பான்கள், 5,000 நறுமணப்பொருள் செடிகள் ஆகியவை விவசாயிகளுக்கு வழங்கப்படும். பயிர்பாதுகாப்பு தெளிப்பான்கள், பயிர் பாதுகாப்பு சாதனங்கள் ஆகியவற்றின் விலையில் 50 சதவீதம் உதவித் தொகையாக வழங்கப்படுகிறது. இத்திட்டத்தின் கீழ் சுமார் 3,000 விவசாயிகள் பயனடைவர்.

**மேற்கு மலைத் தொடர் மேம்பாட்டுத் திட்டம் :**

இது மத்திய அரசு பொறுப்பேற்கும் திட்டமாகும். 1990-91 ஆம் ஆண்டுக்கான மூலதன செலவு ரூ. 47.58 இலட்சமாகும். இத்திட்டத்தின் கீழ் பழங்கள் நறுமணப் பயிர்கள், குறைந்த செலவில் வளர்க்கக் கூடிய மரங்கள் முதலியவற்றின் கன்றுகள் 50 சதவீதம் உதவித் தொகையில் விவசாயிகளுக்கு வழங்கப்படுகின்றன. 1990-91 ஆம் ஆண்டில் 2,100 எக்டேர் பரப்பில் ஆண்டு முழுவதும் பயன் தருகிற தோட்டப் பயிர்கள் பயிரிடப்பட வேண்டுமென இலக்கு நிர்ணயிக்கப்பட்டிருக்க 1991 மார்ச் வரை 2,317 எக்டேர் பரப்பில் ஆண்டு முழுவதும் பயன் தருகின்ற தோட்டப் பயிர்கள் பயிரிடப்பட்டுள்ளன. 1991 மார்ச்சு வரை இத்திட்டத்தின் கீழ் 1,819 விவசாயிகள் பயனடைந்துள்ளனர். 1991-92 ஆம் ஆண்டில் ரூ. 52.50 இலட்சம் செலவில் இத்திட்டம் செயற்படுத்தப்படும்.

**மலைப்பகுதி மேம்பாட்டுத் திட்டம் :**

இது மத்திய அரசு பொறுப்பேற்கும் திட்டமாகும். 1990-91 ஆம் ஆண்டுக்கான மூலதனச்செலவு ரூ. 1.73 கோடியாகும். இத்திட்டத்தின் கீழ் உயர் விளைச்சல் பதியன் தேயிலைச் செடிகள் பழம் தரும் பயிர்கள் பொருளாதார மதிப்புடைய மரக்கன்றுகள் ஆகியவை ஆதிதிராவிடர் பழங்குடியினர்களைச் சேர்ந்த சிறு உழவர்கள் குறு உழவர்கள் ஆகியோருக்கு வழங்கப்படுகின்றன. பதியன் தேயிலைச்செடிகள் 75 சதவீதம் உதவித்தொகையிலும் ஏனைய செடிகள் 50 சதவீதம்உதவித்தொகையிலும் வழங்கப்



படுகின்றன. இரசாயன உரங்கள், பயிர்ப்பூச்சிக்கொல்லி மருந்துகள், பயிர்பாதுகாப்பு சாதனங்கள் போன்ற இடு பொருட்கள் 50 சதவீதம் உதவித் தொகையில் வழங்கப்படுகின்றன. பதியன்கள் 500 எக்டேரில் பயிரிடப்பட வேண்டுமென இலக்கு நிர்ணயிக்கப்பட்டிருந்து 1991 மார்ச் வரை 550 எக்டேரில் பயிரிடப்பட்டுள்ளன 1991 மார்ச்சு வரை 5394 விவசாயிகள் பயனடைந்தனர். 1991-92 ஆம் ஆண்டில் ரூ. 2 கோடி மூலதனச் செலவில் இத்திட்டம் செயற்படுத்தப்படும்.

**தோட்டக்கலை கல்விப் பயிற்சி :**

தரமணியிலுள்ள தோட்டக்கலைப் பயிற்சி நிறுவனத்தில் மூன்று பயிற்சி படிப்புகள் நடைபெற்று வருகின்றன. அதாவது இரண்டாண்டும் பட்டயப்படிப்பு, ஓராண்டு சான்றிதழ் படிப்பு, ஆறுமாதத் தலைமைத் தோட்டக்காரர் படிப்பு, ஆகியவை நடத்தப்படுகின்றன. ஒவ்வொரு ஆண்டும் ஒவ்வொரு படிப்பிலும் 20 மாணவர்களுக்கு பயிற்சி வழங்கப்படுகிறது. இத்திட்டம் 1991-92 ஆம் ஆண்டிலும் தொடர்ந்து செயற்படுத்தப்படும்.

குடுமியான்மலையிலுள்ள மத்திய தோட்டக்கலைப் பயிற்சி மையம் தோட்டக்கலைப் பயிர்களைப் பொறுத்தமட்டில் அண்மைக்கால உற்பத்தித் தொழில் நுட்ப பாத்திகள் குறித்துக் களப்பணியாளர்கள் அறிந்து கொள்வதற்காக அவர்களுக்கு பணியிடைப்பயிற்சி அளிக்கிறது. ஒவ்வொரு ஆண்டும் 220 கள செயல்முறை விளக்க அதிகாரிகளுக்கும், 55 உதவிவேளாண்மை அதிகாரிகளுக்கும் பயிற்சி அளிக்கப்படுகிறது. இத்திட்டம் 1991-92 ஆம் ஆண்டிலும் தொடர்ந்து செயற்படுத்தப்படும்.

**வேளாண்மைப் பொறியியல் துறை**

இம்மாநிலத்தில் மண் வளத்தையும் நீர் ஆதாரங்களையும் பாதுகாத்தல், மேம்படுத்துதல், நிருவகித்தல் ஆகிய பணிகளில் வேளாண்மைப் பொறியியல் துறை ஈடுபட்டு வருகிறது. இத்துறை பின்வருவனவற்றில் உழவர்களுக்குத் துணை புரிகிறது :-

(1) மண் அரிப்பைத் தடுத்தல் :

(2) பாசன வளங்களை உருவாக்குதல்/நிலைப்படுத்துதல்;

(3) கிணறு, ஏரி, ஆற்றுப்பாசனப் பகுதிகளில் நீர் நிருவாகம்;

(4) வேளாண்மைப் பணிகளை உரிய நேரத்தில் மேற்கொள்வதற்கு நிலத்தைப் பண்படுத்துவதற்குத் தேவையான பண்ணைக் கருவிகள் அளித்தல்.

கிராமப்புற மக்களுக்கு வேலை வாய்ப்பு அளிப்பதற்காக பெருமளவில் வேலைவாய்ப்பினை உருவாக்கும் திட்டங்களை இத்துறை மேற்கொள்கிறது.

மண், நீர் வளப் பாதுகாப்பு, சிறுபாசனம், பாசனப் பகுதி மேம்பாடு, நில மேம்பாட்டுத் திட்டம், ஜவஹர்வேலைவாய்ப்புத் திட்டம் ஆகியற்றைச் செயல்படுத்துவதன் மூலம் மேற்சொன்ன பணி நிறைவேற்றப்படுகிறது.

**மண்-நீர் வளப் பாதுகாப்பு :**

மலைப் பகுதிகளில் மண் அரிப்பைக் கட்டுப்படுத்துதல், நிலப் பயன்பாடடை முறைப் படுத்துதல், மலைப் பகுதிகளில் உயிரின வாழ்க்கைச் சூழலைப் பாதுகாத்தல், சீரமைத்தல் ஆகியவற்றிற்காக வேளாண்மைப் பொறியியல் துறை பின்வரும் திட்டங்களைச் செயல்படுத்துகிறது.

மத்திய அரசு நிதியுதவி பெறும் குந்தா, கீழ்பவானி ஆற்றுப் பள்ளத்தாக்குத் திட்டத்தின் கீழ் வருகின்ற நீர் பிடிப்புப் பகுதிகளில் மண்வளப் பாதுகாப்பு, ஆற்றுப் பள்ளத்தாக்குத் திட்டம்.

முன்னுரிமை அளிக்கப்பட்ட நீர்ப்பிரிமுகட்டுப் பகுதிகளில் வண்டல் உற்பத்தியாவதைக் கட்டுப்படுத்துவது இத்திட்டத்தின் நோக்கமாகும். காடு வளர்ப்பு, சரிவு நிலப் பாத்திகள, நில விளைவிற்கேற்ப கற்சுவர், வண்டல் தடுப்பணைகள், தடுப்பணைகள் அமைத்தல் ஆற்றுப் பராமரிப்புப் பணி போன்ற மண்வளப் பாதுகாப்பு பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன. 1990–91 ஆம் ஆண்டில் மொத்தம் ரூ. 215.00 இலட்சம் செலவில் 5,048 ஹெக்டேர் நிலப்பரப்பு வண்டல் படிவிலிருந்து பாதுகாக்கத் திட்டமிடப்பட்டு 1991 மார்ச் திங்கள் முடிய 6,623 எக்டேர் நிலப்பரப்பு ரூபாய் 244.66 இலட்சம் செலவில் பாதுகாக்கப்பட்டது. 1991–92 ஆம் ஆண்டில் 8,021 எக்டேர் நிலப்பரப்பு, ரூ. 350.00 இலட்சம் செலவில் பாதுகாக்கப்படும்.

மத்திய அரசு நிதியுதவி பெறும், மேற்கு மலைத் தொடர்மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் மண்-நீர் வளப் பாதுகாப்பு :

1990-91 ஆம் ஆண்டில் மொத்தம் ரூ. 200 இலட்சம் செலவில், அமராவதி நீர் பிடிப்புப் பகுதியிலும், வகை நீர்ப் பிடிப்பு பகுதியிலும் 1,144 எக்டேர் நிலப்பரப்பு பாதுகாக்கப்பட வேண்டியிருந்தது. இத்திட்டத்தின்படி, 1990-91-ல் 1,394 எக்டேர் பரப்பில் ரூ. 200.28 இலட்சம் செலவில் மண்வளப்



பாதுகாப்புப் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. 1991-92 ஆம் ஆண்டில் 1,430 எக்டேர் நிலப்பரப்பு ரூபாய் 252.00 இலட்சம் செலவில் பாதுகாக்கத் திட்டமிடப்பட்டுளளது. இத்திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்பட்ட பணிகள் காடு வளர்ப்பு, நிலவிளைவிற்கேற்ப, கற்சுவர் அமைத்தல், வண்டல் தடுப்பு ஏரிகள் அமைத்தல் ஆகியவையாகும்.

**மலைப் பகுதி மேம்பாட்டுத் திட்டம் :**

இத்திட்டம், நீலகிரி மாவட்ட மலைப் பகுதியில் செயலாக்கப்பட்டு வருகின்றது. 1990-91 ஆம் ஆண்டில் மொத்தம் ரூ. 142.19 இலட்சம் செலவில் 1,300 எக்டேர் நிலப்பரப்பு பயனடையும் வகையில் மண்வளப் பாதுகாப்பு நடவடிக்கைகளும், நிலச் சரிவு ஏற்படக்கூடிய பகுதிகளைப் பாதுகாப்பதற்கான பணிகளும் மேற்கொள்ள திட்டமிடப்பட்டிருக்க, மொத்தம் 1,654 எக்டேர் நிலப்பரப்பு ரூபாய் 142.19 இலட்சம் செலவில் பாதுகாக்கப்பட்டு பயனடைந்துள்ளது. 1991-92 ஆம் ஆண்டில் 1,500 எக்டேர் நிலப்பரப்பு பயனடையும் வகையில், பணிகள் மேற்கொளளக் கருதப்பட்டுள்ளது.

**மண்வளப் பாதுகாப்பு திட்டங்கள்-மாநிலத் திட்டங்கள் :**

**மலைப் பகுதிகளிலும் சமவெளிகளிலும் மண்வளப் பாதுகாப்பு :**

நம் மாநிலத்தில், சிறு தானியங்கள், பயிறு வகைகள், எண்ணெய் வித்துக்கள் ஆகிய பயிர் வகைகள், மானாவாரி சாகுபடியில் பெருமளவில் பயிர் செய்யப்படுகின்றன. கனமானதாக இருந்து அதிக மழை பெய்தல், இப்பகுதிகளில் குறிப்பாக மண்ணரிப்பு ஏற்படும். மண் சரிவையும் மண்ணரிப்பையும் குறைக்க இந்நிலங்களில் நில விளைவிற்கேற்ப கரை அமைக்கும் பணி மேற்கொள்ளப்படுகிறது. இப் பணிகளால் இந்நிலங்களிலுள்ள மண்ணிலுள்ள மண்ணின் ஈரப்பதம் காக்கப்படுகிறது. 1990-91-ல் 56,500 எக்டேர் பரப்பைக் காக்க நீர்சேமிப்பு அடிப்படையில் மண்வளப் பாதுகாப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டி இருந்தது. இதனால் 76,352 எக்டேர் பயனடைந்துள்ளது. 1991-92-ல் 75,000 எக்டேர் பரப்பில் ரூ. 675.54 இலட்சம் செலவில் மண்வளப் பாதுகாப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளக் கருதப்பட்டுள்ளது.

**கற்றரிப்பைக் கட்டுப்படுத்துதல் :**

திருநெல்வேலி–கட்டபொம்மன், சிதம்பரனார் மாவட்டங்களில் காற்றரிப்பைக் கட்டுப்படுத்தும் திட்டம் செயற்படுத்தப்படுகிறது. அங்கு, காற்றினால், மண் அரிப்பது பெரும் பிரச்சினையாக உள்ளது. காற்றரிப்பின் கடுமையிலிருந்து

இப்பகுதியைப் பாதுகாப்பதற்கு, அரசு செலவில் காற்று வீசும் திசைக்கு குறுக்கே 5 வரிசைகளில் மரங்கள் நட்டு பாதுகாப்பு அரண்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. மொத்தம் 1,000 எக்டேர் பரப்பைக் காப்பது என இலக்கு நிர்ணயித்திருக்க, 1990-91 ஆம் ஆண்டில் 1,015 எக்டேர் நிலப்பரப்பு ரூபாய் 47·96 இலட்சம் செலவில் பாதுகாக்கப்பட்டது. 1991-92 ஆம் ஆண்டில் 1,000 எக்டேர் நிலப்பரப்பை ரூ. 54.46 இலட்சம் செலவில் பாதுகாக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

**பழங்குடியினர் வாழும் பகுதிகளில் மண்வளப் பாதுகாப்பு :**

பழங்குடியினருக்குப் பயனளிக்கும் வகையில் தென்ஆற்காடு, அம்பேத்கார், சேலம், திருச்சிராப்பள்ளி, தருமபுரி, ஆகிய மாவட்டங்களில் பழங்குடியினர் வாழும் பகுதிகளில் மண்வளப் பாதுகாப்புத் திட்டம் செயற்படுத்தப்படுகிறது. 1990-91 ஆம் ஆண்டில், 373 எக்டேர் நிலப் பரப்பில், இத் திட்டத்தை ரூ. 31.90 இலட்சம் செலவில் செயற்படுத்தத் திட்டமிடப்பட்டது. அதன்படி, 435 எக்டேர் நிலப்பரப்பு, ரூபாய் 34.46 இலட்சம் செலவில் பயனடைந்துள்ளது. மேற்கூறிய 5 மாவட்டங்களிலும், 1991-92 ஆம் ஆண்டில், 370 எக்டேர் நிலப்பரப்பில் ரூபாய் 31.90 இலட்சம் செலவில் இத்திட்டத்தைச் செயற்படுத்தக் கருதப்பட்டுள்ளது.

**தொலை தூர இயற்கை வள ஆய்வு :**

மேற்கு மலைத் தொடர் நீர்பிடிப்புப் பகுதிகளின் வளநிலை அறிக்கைகளைத் தயாரிப்பதற்குத் தொலை தூர இயற்கை வள ஆய்வு தொடர்பான தொழில் நுட்ப உத்திகள் பயன்படுத்தப் படுகின்றன. 1990-91 ஆம் ஆண்டில் குடகனாறு, சிற்றாறு, ஆழியாறு ஆகிய நீர்ப்பிடிப்புப் பகுதிகளுக்கான வளநிலை அறிக்கைகள் தயாரிக்கப்பட்டன. தவிரவும் மண்வளப் பாதுகாப்புத் திட்டங்களைத் தயாரிக்கப் பயன்படுத்துவதற்காக மேற்கு மலைத் தொடர் மேம்பாட்டுத் திட்டத்திற்கான நீர்ப் பிரிமுகட்டு வரைப்படங்களும் தயாரிக்கப்பட்டு வந்தன, 1991-92 ஆம் ஆண்டில் கன்னியாகுமரி மாவட்ட நீர் பிடிப் பகுதிகளுக்கும், பேரணைப் பொறி மற்றும் பரம்பிக்குளம் ஆளியாறு திட்டத்தின் சில பகுதிகளுக்கும் வளநிலை அறிக்கைகள் தயாரிக்கப்படும்.

**நீர் ஆதர நிர்வாகம்:**

**நிலத்தடி நீர் மேம்பாடு :**

கிணற்றுப் பாசனம் மூலம் பாசனம் பெறும் நிலப்பரப்பு அதிகரித்து வருகிறது. நிலத்தடி நீர் மேம்பாடு மிகுந்த முக்கியத்துவம் வாய்ந்ததாகக் கருதப்படுகிறது. புவியியர்பியல்



ஆய்வுகள் மூலம், கிணறுகளை அமைக்க ஏற்ற இடம் பற்றி அறிந்து கொள்ளவும், குழாய் கிணறுகளை அமைக்கவும், வடிமுனைக் குழாய்க் கிணறுகளை அமைக்கவும், வறண்டு போன கிணறுகளின் பக்கத்தில் துளைகள் அமைப்பதன் மூலம் அல்லது வெடி வைத்து ஆழப்படுத்துவதன் மூலம் அக்கிணறுகளில் மீண்டும் மீண்டும் நீர் வளம் அதிகரிக்கவும் வேளாண் பொறியியல் துறை உழவர்களுக்கு உதவுகிறது.

1990-91 ஆம் ஆண்டில், 5,500 குழாய் கிணறுகளையும், 3,300 வடிமுனைக் குழாய்க் கிணறுகளையும் அமைக்கவும், 6,000 கிணறுகளில் மீண்டும் நீர் வளத்தை அதிகரிக்கவும் திட்டமிடப்பட்டுள்ளது. அதன்படி 5,836 குழாய் கிணறுகளும், 3,457 வடிமுனைக் குழாய்க் கிணறுகளும் அமைக்கப்பட்டுள்ளன. 6,426 கிணறுகளில் மீண்டும் நீர் வரத்து அதிகரிக்கப்பட்டுள்ளது. 1991-92 ஆம் ஆண்டில், 5,500 குழாக்கிணறுகளும், 3,300 வடிமுனைக் குழாய்க் கிணறுகளும் அமைக்கப்படும். 6,000 கிணறுகளில் மீண்டும் நீர் வரத்து அதிகரிக்கப்படும்.

**சிறப்பு உணவு தானிய உற்பத்தித் திட்டம் :**

**கிணறுகள் அமைக்க ஆழப்படுத்த மானியம் வழங்குதல்:**

சிறப்புதானிய உற்பத்தித் திட்டத்தின் கீழ் வேளாண்மைப் பொறியியல் துறை, கிணறுகள், குழாய்க் கிணறுகள் அமைக்க, ஆழப்படுத்த, சிறு குறு மற்றும் பழங்குடியினர் இனத்தைச் சார்ந்த உழவர்களுக்கு முறையே ரூ. 3,000. 4,000 மற்றும் 5,000 உதவித் தொகை வழங்குகிறது. 1990-91 ஆம் ஆண்டில், 4,203 உழவர்களுக்கு ரூ. 73·05 இலட்சம் உதவித் தொகையாக வழங்கப்பட்டது.

பாசன வளங்களை ஏற்டுத்துவதில் கவனம் செலுத்துவதோடு மட்டுமின்றி நீர் நிருவாக உத்திகளை நடைமுறையில் வெற்றிகரமாகச் செயல்படுத்தவும், நிலத்தடி நீர் மேம்பாட்டு நடவடிக்கைகள் மீண்டும் மேற்கொள்ளப்படும். சமுதாயக் கிணறுகளை அமைத்தல், விவசாயிகளுக்கான அமைப்புகளை (சங்கங்கள்) ஏற்படுத்துதல், நிலத்தடி நீர் மற்றும் நிலத்தின்

மேற்பரப்பில் கிடைக்கும் நீர் ஆகியவற்றை ஒன்றாகப் பயன் படுத்துதல், சொட்டு நீர்ப்பாசனம்/தெளிப்பு நீர்ப்பாசனம் இரட்டைக் குழாய்ப் பாசனம் ஆகிய பாசன முறைகளைப் பின்பற்றுதல் ஆகிய நடவடிக்கைகளுக்கும் கவனம் செலுத்தப் படும்.

நீர் பயன்பாடு— நிலத்தடி நீர் ஆதாரத்தைப் பெருக்குதல் :

நிலத்தடி நீரை அதிக அளவு பயன்படுத்துவதால் நிலத்தடி நீர் மட்டம் வேகமாகக் குறைந்து வருகிறது. நிலத்தடி நீர் ஆதாரத்தைப் பெருக்க, ஜவஹர் வேலை வாய்ப்புத்திட்டத் தின்கீழ், நீர்க்கசிவுக் குட்டைகளை பெருமளவில் அமைக்கும் பணி மேற்கொள்ளப்பட்டுள்ளது. 1989-90 ஆம் ஆண்டு வரை 5,710 நீர்க்கசிவுக் குட்டைகள் அமைக்கப்பட்டுள்ளன. மேலும் 455 நீர்க்கசிவுக் குட்டைகள் அமைக்க 1990 நவம்பர் திங்களில், 661 இலட்சம் ரூபாய்க்கு அரசு அனுமதியளித்துள்ளது. இந்தக் குட்டைகள், நிலத்தடி நீர் ஆதாரங்களைப் பெருக்கு வதில் நல்ல பயனளித்துள்ளது. இதனால் கிணறுகளில் நீர் மட்டம் அதிகரித்துள்ளது.

பாசனப் பகுதிகளில் நீர் நிர்வாகம்:

பாசனப் பகுதி மேம்பாட்டுத் திட்டம் :

காவிரி, கீழ்பவானி, சாத்தனூர், பரம்பிக்குளம், ஆளியாறு திட்டப் பாசனப் பகுதிகளில் மத்திய அரசின் உதவி பெறும் பாசனப் பகுதி மேம்பாட்டுத்திட்டம் செயல்படுத்தப்படுகிறது, பெரியாறு, வைகை பாசனப் பகுதிகளில், உலக வங்கியின் உதவி பெறும் நவீனப் படுத்தும் திட்டத்தின் ஒரு பகுதியாக இத் திட்டம் செயல்படுத்தப்படுகிறது.

(1) நிலத்திற்கு நிலம் பாசனமளிக்கும் ஏற்பாடுகளை நீக்கவும், (2) பாசனம் உரிய அளவுக்குக் கிடைக்கச் செய்ய வும். (3) பாசனத்திற்குச் சுற்று முறையில் நீர் வழங்கும் ஏற் பாட்டின் மூலம், உபரியாகவும், குறைவாகவும் நீர் கிடைக்கும் காலங்களில் நீரைச் சமமாகப் பகிர்ந்து கொள்வதை உறுதி செய்யவும், பண்ணை மேம்பாட்டுப் பணிகள் மேற்கொள்ளப் படுகின்றன.



உழவர்களின் பங்கேற்பு:

கீழ்பவானி பாசனப் பகுதியில், உழவர்களைப் பங்கேற்கச் செய்து சோதனை அடிப்படையில் பாசனத்திற்குச் சுற்று முறையில் நீர் வழங்கும் ஏற்பாடானது ஒரு முன்னோடித் திட்டமாக விவசாயிகள் பலர் சேர்ந்த செயல்பட வேண்டும் அறிமுகப்படுத்தப் பட்ட வேளாண் நடவடிக்கைகளில் என்ற எண்ணம் தோற்றுவிக்கப்பட்டுள்ளது. பாசனத்திற்கான நீரைச் சமமாகப் பங்கிட்டுக் கொள்வதை உறுதி செய்யவும், இந்த திட்ட ஏற்பாட்டை நன்முறையில் பொறுப்பேற்று நிருவகிக் கவும், விவசாயிகள் சங்கம் ஒன்றை ஏற்படுத்தியுள்ளனர். அவர்களின் முழுமையான பங்கேற்புடன் பண்ணை மேம்பாட்டுப் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. விவசாயிகள் பங்கேற்கும் இத்திட்டம், வெற்றிகரமாகச் செயல்பட்டுள்ளதுடன் ஏனைய் பாசனப் பகுதிகளிலும் இத்திட்டம் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. உலக வங்கியின் நிதி உதவி 1990-91 ஆம் ஆண்டு வரையில் மட்டுமே கிடைக்குமென்பதால், 1991-92 ஆம் ஆண்டில் பெரியாறு வைகைப் பாசனப் பகுதி, மத்திய அரசின் உதவி பெறும் பாசனப் பகுதி மேம்பாட்டுத் திட்டத் தின்கீழ் கொண்டு வரப்படும்.

உழவர் சங்கங்களுக்கு நிர்வாக உதவித் தொகை :

வேளாண் நடவடிக்கைகளில், உழவர்கள் பங்கேற்கின்ற புதிய திட்ட அணுகு முறையைப் பின்பற்றுவதில், உழவர் சங்கங்களை ஏற்படுத்துவது மிகவும் அவசியமாகும். உழவர் களுக்கு, முதல் இரண்டாண்டுகளுக்கு எக்டேர் ஒன்றுக்கு 100 ரூபாய் வீதமும், மூன்றாவது ஆண்டிற்கு எக்டேர் ஒன்றுக்கு 75 ரூபாய் வீதமும் நிருவாக உதவித் தொகை அளிக்கப்படுகிறது. கீழ்பவானி திட்ட பாசனப் பகுதியிலுள்ள 63 உழவர் சங்கங்களுக்கு, நிருவாக உதவித் தொகையாக அரசு 1.70 இலட்சம் ரூபாய் அனுமதியளித்துள்ளது. சாத்தனூர் நீர்த்தேக்க திட்டத்திற்கு நிர்வாக உதவித் தொகை 0.46 இலட்சம் ரூபாய் அனுமதிக்கப் பட்டுள்ளது. இத்தொகை சந்தந்த உழவர்கள் சங்கத்திற்கு வழங்கப்பட்டுள்ளது.

1990-91 ஆம் ஆண்டில் இலக்கு மற்றும் சாதனைகள், 1991-92 ஆம் ஆண்டிற்கான இலக்கு ஆகிய விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன. அவை வருமாறு :—

| தொடர் எண். | திட்டத்தின் பெயர். | அளவு. | 1990-91 ஆம் ஆண்டு இலக்கு. | 1990-91 ஆம் ஆண்டு சாதனை. | 1991-92 ஆம் ஆண்டிற்கான இலக்கு. |
|---|---|---|---|---|---|
| 1. | பாசனப் பகுதி மேம்பாட்டுத் திட்டத்தின் கிழ் பண்ணை மேம்பாடு | | | | |
| 1. | காவிரி பாசனப் பகுதி .. | எக்டேர் | 24,000 | 26,130 | 24,000 |
| 2. | கீழ்பவானி பாசனப் பகுதி | ,, | 5,000 | 4,621 | 5,000 |
| 3. | சாத்தனூர் பாசனப் பகுதி | ,, | 1,000 | 852 | 1,000 |
| 4. | பரம்பிக்குளம்—ஆழியாறு பாசனப் பகுதி | ,, | 11,000 | 8,617 | 10,000 |
| 2. | சுழற்சி முறை பாசனத் திட்டத்தை அறிமுகப்படுத்துதல். : | | | | |
| 1. | காவிரி பாசனப் பகுதி | எக்டேர் | 2,000 | 2.174 | 3,000 |
| 2. | கீழ்பவானி பாசனப் பகுதி | ,, | 2,000 | 3,034 | 3,000 |
| 3. | பெரியாறு வைகை பாசனப் பகுதியில் மேம்பாட்டுப் பணிகள் : | | | | |
| 1. | பண்ணை மேம்பாட்டுப் பணிகள். | எக்டேர் | 3,200 | 3,648 | 3,200 |
| 2. | சுழற்சி முறைப் பாசன திட்டத்தை அறிமுகப் படுத்துதல். | ,, | 7,500 | 7,524 | 9,000 |
| 3. | கதிரடிக்கும் தளம் கட்டுதல் | ,, | 40 | 86 | .. |

குறிப்பு.—1990-91-ல் உலக வங்கி நிதி உதவியுடன் நவீனப்படுத்தும் திட்டத்தின் பகுதியாக தொடர் எண் 3-ல் காணும் திட்டம் செயல்படுத்தப்படுகிறது. 1990-91 ஆம் ஆண்டு வரையில் மட்டும் உலக வங்கி நிதியுதவி கிடைக்குமென்பதால் 1991-92 ஆம் ஆண்டில் மத்திய அரசு நிதி உதவி பெறும் பாசனப் பகுதி மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் இத்திட்டம் கொண்டுவரப்படும்.



**சிறப்புத் திட்டங்கள் :**

**வானாவாரி வேளாண்மை தேசிய நீர்ப்பிரி முகடு மேம்பாட்டுத் திட்டம்.**

வானாவாரி வேளாண்மை தேசிய நீர்ப்பிரி முகடு மேம்பாட்டுத்திட்டத்தின் கீழ், 1990-91 ஆம் ஆண்டிற்கு, தருமபுரி மாவட்டத்திற்கு ரூ. 75.19 இலட்சம் அரசு அனுமதித்துள்ளது. 1990-91 ஆம் ஆண்டிற்கு வேளாண்மைப் பொறியியல் திட்டத்திற்கான தொகை ரூ. 43.73 இலட்சமாகும். இத்துடன், மண்வளப் பாதுகாப்பு, ஆழ உழுதல், தடுப்பணைகள் கட்டுதல், பண்ணைக் குட்டைகள், நீர்க் கசிவுக் குட்டை அமைத்தல் போன்ற பணிகளும் இத்திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

மொத்தம் 14 மாவட்டங்களிலுள்ள 84 வட்டாரங்களில் மண்ணின் ஈரப்பதக் காப்புத் பணிக்காக, 1991-92 ஆம் ஆண்டிற்கு ரூ. 100.00 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**ஒருங்கிணைந்த நீர்ப்பிரி முகடு மேம்பாட்டுத் திட்டம் (C.W.D.P)**

சிதம்பரனார் மாவட்டம், திருநெல்வேலி-கட்டபொம்மன் மாவட்டங்களில் தரம் பாதிக்கப்பட்ட 17,500 எக்டேர் நிலப்பரப்பை மேம்படுத்துவதற்கு 1990 ஆம் ஆண்டு அக்டோபர் திங்களில் இத்திட்டத்திற்கு மொத்தம் ரூ. 625 இலட்சம் அரசு அனுமதித்துள்ளது. இத்திட்டம் 3½ ஆண்டுகளில் டானிடா DANIDA உதவியுடன் செயல்படுத்தப்பட உள்ளது. இத்திட்டத்தில் அடங்கியுள்ள திட்டப் பகுதிகள் பின் வருமாறு :—

(1) 5,000 எக்டேர் பரப்பில் நீர் ஆதார மேம்பாடு.

(2) 3,000 எக்டேர் பரப்பில் காற்றரிப்புக் கட்டுப்பாட்டுத் திட்டம்.

(3) 6,500 எக்டேர் பரப்பில் தேரி நில மேம்பாட்டுத் திட்டம்.

(4) 3,000 எக்டேர் பரப்பில் தரிசு நில மேம்பாட்டுத் திட்டம் ஆகியவை இதில் அடங்கும். 1991-92-ல் இந்நான் பணிகளும், 5,725 எக்டேர் பரப்பில், ரூபாய் 134.30 இலட்சம் செலவில் செயல்படுத்தப்படும்.

**எரி பொருளுக்கான மரம் வளர்ப்புத் திட்டம் :**

திருநெல்வேலி கட்டபொம்மன் மாவட்டத்தில் எரி பொருளுக்கான மரங்களை வளர்க்கும் முன்னோடித் திட்டம் ஒன்றை வேளாண்மை பொறியியல் துறை வெற்றிகரமாக முடித்துள்ளது 523 எக்டேர் பரப்பில் விறகு மரங்கள் வளர்க்கப்பட்டுள்ளன. விரிவான மேம்பாட்டுத் திட்ட அணுகு முறையைப் பயன் படுத்தி, வளமிழந்த நிலங்களைப் பயனுக்குக் கொண்டுவர செயல் முறை விளக்கம் செய்து காட்டப்பட்டுள்ளது.

**நில மேம்பாட்டுத் திட்டம்:—**

வேளாண்மைப் பொறியியல் துறை நிலத்தைச் சரிசம மாக்கவும், பண்படுத்தவும், இயந்திரங்களைக் கொண்டு சாகுபடிப் பணிகளை மேற்கொள்ளவும் நில மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் விவசாயிகளுக்குப் பரம்புப் பொறிகளையும் (புல்டோசர்) டிராக்டர்களையும் வாடகைக்குக் கொடுக்கிறது.

1990-91 ஆம் ஆண்டில், இந்தியன் வங்கியின் நிதி உதவியுடன் தமிழ்நாடு வேளாண் தொழில் கழகத்தின் மூலம் மொத்தம் ரூ. 500 இலட்சம் செலவில், 30 பரம்புப் பொறிகளை (புல்டோசர்) வாங்க அரசு ஒப்புதல் வழங்கியுள்ளது. 1991-92 ஆம் ஆண்டில் பரம்புப் பொறிகள் எண்ணிக்கை 115 ஆகவும், டிராக்டர்களின் எண்ணிக்கை 177 ஆகவும் இருக்கும்.



1990-91 ஆம் ஆண்டின் இலக்கு மற்றும் சாதனை 1991-92 ஆம் ஆண்டின் இலக்கு ஆகியவற்றின் விவரங்கள் வருமாறு:

| தொடர் எண். | திட்டத்தின் பெயர். | அளவு. | ஆண்டு இலக்கு. | திட்டச் சாதனை (1990—91) | 1991—92 ஆம் ஆண்டு இலக்கு. |
|---|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) |
| 1. | டிராக்டர்கள் மற்றும் பரம்புப் பொறிகளை வாடகைக்கு விடும் திட்டம் : | | | | |
| | (அ) நிலத்தைச் சமன் படுத்துதல். | மணி<br>எக்டேருக்கு. | 1,20,000<br>43.00 | 1,76,743<br>70.70 | 1,54,000<br>61.60 |
| | (ஆ) இயந்திரங்கள் உதவியுடன் சாகுபடி | மணி<br>எக்டேருக்கு. | 90,000<br>25,720 | 1,27,652<br>36,472 | 93,8000<br>26,800 |

## விதை சான்றளிப்புத் துறை.

விதைச் சான்றளிப்புத் துறையின் முக்கிய அலுவல்கள் வருமாறு :—(1) விதைசச் சான்றளிப்பு (2) விதை ஆய்வு (3) விதைப் பரிசோதனை (4) விதைச் சான்றளிப்பில் பயிற்சி அளித்தல் ஆகும். இத்துறை சான்றளிக்கப்பட்ட விதைகள் கிடைப்பதை உறுதி செய்யும் பொருட்டு, 1966-ஆம் ஆண்டு மத்திய விதைச் சட்டத்தின் விதித் துறைகளுக்கிணங்கவும், 1968-ஆம் ஆண்டு விதை விதிகளின் படியும் விதைச் சான்றளிப்பு நிறுவனத்தின் அலுவல்களை இத்துறை நிறைவேற்றியது. தொடர்ந்து பரிசோதனைகள் நடத்தியும் பல்வேறு வகை விதைகளைத் தீவிரமாகச் சோதித்தும் மிக உயர்வகை விதைகளை உருவாக்கிய ஆராய்ச்சியாளர்களின் சாதனைகளால் விளைந்த பயன்கள் ,பொதுவாக எல்லா உழவர்களுக்கும் கிடைக்கச் செய்வதும், இதன் வாயிலாக சான்றளிக்கப்படாத விதைகள் அளிக்கும் விளைச்சலைவிடவும் குறைந்தது 10 சதவீதமாவது அதிக விளைச்சல் விளைக்கச் செய்வதுமே இதன் நோக்கமாகும்.

**விதைச் சான்றளிப்பு :**

1990-91-ஆம் . ஆண்டில் விதைச் சான்றளிப்பிற்காக, 33,755 எக்டேர் பரப்பளவில் உள்ள பயிர்கள் பதிவு செய்யப்பட்டன. 21,340 மெட்ரிக் டன் விதைகள் சான்றளிக்கப்பட்டுள்ளன. 1991—92-ஆம் ஆண்டில் விதைச் சான்றளிப்பின் கீழ் 30,200 எக்டேர் பரப்பளவில் உள்ள பயிர்களைப் பதிவு செய்யத் திட்டமிடப்பட்டுள்ளது.

**விதை ஆய்வு :**

1966-ஆம் ஆண்டு விதைகள் சட்டம், 1968-ஆம் ஆண்டு விதைகள் விதி சட்டத்தைச் செயல்படுத்த, சான்றளிக்கப்பட்ட தரமான விதைகளை விதை விற்பணையாளர் மூலம் உழவர்களுக்கு வழங்கப்படுவதை உறுதி செய்யும் வகையில் விதை ஆய்வுப் பிரிவு, வீதை விற்பனை நிலையங்களை ஆய்வு செய்கின்றன.

1990-91 ஆம் ஆண்டில், விதைச் சான்றளிப்பு இயக்ககத்தின் விதை ஆய்வுப் பிரிவு, 9184 விதை விற்பனை நிலையங்களை ஆய்வு செய்தது. 8,651 விதை மாதிரிகளை எடுத்துப் பகுப்பாய்வு செய்தது; குற்றம் புரிந்தோர் மீது 90 வழக்குகளைத் தாக்கல் செய்தது. தரம் குறைந்த 1,529 விதை வகைகளை விற்பனை செய்யக்கூடாது எனவும், நிறுத்தி



வைத்துள்ளது. 1991—92ஆம் ஆண்டில், விதை விற்பனையாளர்களிடமிருந்து 9,400 விதை மாதிரிகளை, சோதனைக்காக எடுக்கவும், 9.400 விதை விற்பனை நிலையங்களை ஆய்வு செய்யவும் திட்டமிடப்பட்டுள்ளது.

**விதைப் பரிசோதனை :**

பன்னாட்டு விதைப் பரிசோதனை சங்கம் அளித்துள்ள வழிமுறைகளின்படி விதைகளின் தூய்மை முளைக்கும் தரம் ஈர பதம் மற்றும் ஏனைய பயிர்கள் விதைகளின் கலப்பு, பிற ஏயர்வகை விதைகள், மரவிதைகள், ஆகியவற்றை அறிய விதை மாதிரிகள் பயிரிசோதனை செய்யப்படுகின்றன. மூன்று விதைப் பரிசோதனை ஆய்வுக் கூடங்கள் கோயம்புத்தூர், மதுரை, குடுமியான்மலை ஆகிய இடங்களில் செயல்படுகின்றன. தருமபுரியில் ரூ. 6.00 இலட்சம் செலவில் நான்காவது விதைப் பரிசோதனை ஆய்வுக் கூடம் அமைக்க அனுமதிக்கப்பட்டுள்ளது. இங்கு விதைப் பரிசோதனைப் பணி விரைவில் தொடங்கப்பட உள்ளது.

1990—91 ஆம் ஆண்டில் 32,136 விதை மாதிரிகள் பரிசோதனை செய்யப்பட்டன. 1991—92ஆம் ஆண்டில் விதைப் பரிசோதனை ஆய்வுக் கூடங்களில் 30,800 விதை மாதிரிகளைச் சோதனை செய்யத் திட்டமிடப்பட்டுள்ளது. கோயம்புத்தூரிலுள்ள கண்ணாடி இல்லத்திலும், கோயம்புத்தூர் கண்ணம்பாளையத்திலுமுள்ள மாநில விதைப் பண்ணைகளில் விதைகளுக்குச் சான்றளிக்கும் முன்னர், வீரிய ஒட்டு விதைகள் மற்றும் அவற்றின் தாய்ச் செடிகளின் இனத் தூய்மையை அறிய வளர்ச்சி எல்லை சோதனை மற்றும் சிறப்புச் சோதனைகள் நடத்தப்பட்டுள்ளன. உழவர்களுக்கு வழங்கப்படும் விதைகளின் தரத்தை அறியும் வகையில் விதைப் பரிசோதனை பிரிவிலிருந்து பெறப்பட்ட விதை மாதிரிகளின் இனத் தூய்மை பரிசோதனை செய்யப்படுகிறது.

**விதைச் சான்றளிப்பில் பயிற்சி அளித்தல் :**

விதை உற்பத்தி செய்து வழங்குவதில் ஈடுபட்டுள்ள தனியார் விதை உற்பத்தியாளர்கள், விதை வளர்ப்போர், உழவர்கள் விதை வணிகர்கள் ஆகியோருடன் விதைச் சான்றளிப்புத் துறை களப்பணியாளர்களுக்கும் அதன் கிளைத் துறைப் பணியாளர்களுக்கும் முறையாகப் பயிற்சி அளிக்கப்படுகிறது. 1990-91ஆம் ஆண்டில் 11,274 பேருக்குப் பயிற்சி அளிக்கப்பட்டது. 1991—92 ஆம் ஆண்டில் 11,000 பேர்களுக்குப் பயிற்சி அளிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

1989—90ஆம் ஆண்டில் பதிவுக் கட்டணங்கள், சான்றளிப்புக் கட்டணங்கள், குறிப்பு சீட்டுகளின் விலை, விதைப் பரிசோதனைக் கட்டணங்கள் ஆகியவற்றுக்காக ரூ. 40.71 இலட்சம் வசூலிக்கப்பட்டது.

## வேளாண் விளை பொருள் விற்பனை.

வேளாண் விற்பனைத் துறை பின்வரும் திட்டங்களைச் செயலாக்குகின்றது.—

1. உழவர் சமுதாயத்தின் பயனுக்காக, ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களை அமைத்தலும் பராமரித்தலும்.

2. வேளாண் விளை பொருட்களையும், கால்நடை உற்பத்திப் பொருட்களையும், "அக்மார்க்" என்ற இனத்தின் கீழ் தரம் பிரித்தல்.

3. வேளாண் விளை பொருட்களை வணிகப் பயனுக்காகத் தரம் பிரித்தல்.

4. வேளாண் விற்பனையில் பணியாளர்களுக்குப் பயிற்சி அளித்தல்.

5. பருத்தி சான்றளித்தல், செயலாக்கத் திட்டம்.

### ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்கள் :

உழவர்களுக்கு ஆதாயமான விலைகள் கிடைப்பதை உறுதி செய்யும் பொருட்டு, நம் மாநிலத்தில், 14 அங்காடிக் குழுக்களின் கட்டுப்பாட்டின் கீழ் 270 ஒழுங்கு முறை விற்பனைக் கூடங்கள் செயல்பட்டு வருகின்றன. அனைத்து அங்காடிகளுக்குமாக 31—3—1991 வரை வந்து சேர்ந்த நெல், சிறு தானியங்கள், வேர்க்கடலை, எள் முதலியன போன்றவற்றின் அளவு 5.38 இலட்சம் மெட்ரிக் டன் ஆகும் 1989—90ஆம் ஆண்டில் இவற்றின் உற்பத்தியளவு 3.99 இலட்சம் டன் மெட்ரிக் டன்னாகும்.

தற்போது, 93 கிராமக் கிடங்குகள் கட்டப்பட்டுள்ளன. மேலும் 5 கிராமக் கிடங்குகள் கட்டும் பணி நடைபெற்று வருகின்றது. உழவர்கள் இடர்பாடான காலத்தில் குறைந்த விலையில் விளை பொருட்களை விற்காமல் இக்குழுக்கள் அவர்களுக்குப் பெரிதும் உதவுகின்றன.



### "அக்மார்க்" தரம் பிரித்தல் :

பயனீட்டாளர்களுக்குத் தரமான பொருள் கிடைப்பதற்கு உதவுவதே இத்திட்டத்தின் முக்கிய நோக்கமாகும். தற்போது 34 'அக்மார்க்' தரம் பிரிக்கும் ஆய்வுக் கூடங்கள் செயல்பட்டு வருகின்றன. மத்திய கட்டுப்பாட்டிற்கு உட்பட்ட பொருளாகிய சமையல் எண்ணெய் வகைகள், நெய், தேன் மசாலாப் பொடிகள் ஆகியவை தரம் பிரிக்கப்படுகின்றன. மத்திய கட்டுப்பாட்டின் கீழ் வராத பொருட்களான அரிசி, பருப்பு வகைகள், உருளைக் கிழங்கு, மஞ்சள், பாக்கு ஆகியவையும் தரம் பிரிக்கப்படுகின்றன. பிற மாநில 'அக்மார்க்' ஆய்வுக் கூடங்கள் ஆய்வு செய்த 'அக்மார்க் மாதிரிகளை திருச்சிராப்பள்ளியில் செயல்பட்டு வருகின்ற முதன்மை ஆய்வுக் கூடம் மேலாய்வு செய்கின்றது. இந்த ஆய்வுக் கூடம் மாநில அக்மார்க் ஆய்வுக் கூடங்களில் பணிபுரியும் ஆய்வுக் கூட உதவியாளர்களுக்குப் பயிற்சி அளித்து அவர்களின் திறமை மேம்பட உதவுகிறது. 1991—92ஆம் ஆண்டில் 31—3—1991 ஆம் நாள் வரையில் மத்திய அரசின் கட்டுப்பாட்டின் கீழ் வருகின்ற 1.83 இலட்சம் குவிண்டால் பொருள்கள் தரம் பிரிக்கப்பட்டன. மத்திய அரசின் கட்டுப்பாட்டின் கீழ் வராத பொருட்களைப் பொருத்தமட்டில் 2.08 இலட்சம் குவிண்டால் பொருட்கள் தரம் பிரிக்கப்பட்டன.

### வணிக முறை தரம் பிரிப்பு :

இத்திட்டம், 102 ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களில் செயல்பட்டு வருகின்றது. விற்பனைககு வருகின்ற பல்வேறு வேளாண் விளை பொருட்கள் தரம் பிரிக்கப்படுகின்றன. இதனால், உயர் தர விளை பொருட்களுக்கு அதிக விலை கிடைக்கிறது. பல்வேறு ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களில், செயல்முறைப் படுத்தப்படாத பருத்தி தரம் பிரிப்பு மையங்கள் 11 செயல்பட்டு வருகின்றன. புகையிலை தரம் பிரிப்பு மையம் ஒன்று தஞ்சை புளியம்பட்டியில் செயல்பட்டு வருகின்றது. இத்தரம் பிரிப்பு மையங்கள், 1—12—1989 முதல் அந்தந்த அங்காடிக் குழுக்களின் கட்டுப்பாட்டிற்கு மாற்றப்பட்டுள்ளன.

### பயிற்சி :

சென்னையிலுள்ள மாநில வேளாண் விற்பனை வாரியத்தில் பயிற்சி மையம் ஒன்று செயல்பட்டு வருகின்றது. இம்மையம் உதவி வேளாண்மை அலுவலர்கள், அங்காடிக் குழுக்களின் மேற்பார்வையாளர்கள் ஆகியோருக்கு, பல்வேறு தரம் பிரிப்பு முறைகளில் மூன்று மாத பயிற்சி அளிக்கிறது. 'அக்மார்க்' தரம் பிரிப்பு, வணிக முறை தரம் பிரிப்பு ஆகியவற்றில் இது

வரை 850 பேருக்கு பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது. முறையில் தரம் பிரித்தல் 51.63 லட்சம் குவிண்டால் வணிக முறை படுத்தப்படாத பருத்தி தரம் பிரித்தல் 2.77 லட்சம் குவிண்டால், புகையிலையைத் தரம் பிரித்தல், 0.12 லட்சம் குவிண்டால். செயல்

பருத்திச் சான்றளித்தல், செயலாக்கத் திட்டம் :

பருத்தியின் சுத்தத் தன்மையைக் காக்கவும், பருத்தி விதை நீக்குதல், பஞ்சடித்தல், தொழிற்சாலைகளில் பல்வேறு வகைப் பருத்திகள் கலப்படம் செய்யப்படுவதைத் தடுக்கவும் இம் மாநிலத்தில் உற்பத்தி செய்யப்படும் பருத்திகளின் அளவையும், பிற மாநிலத்திலிருந்து தருவிக்கப்படுகின்ற பருத்தியின் அளவையின் மதிப்பிடவும் இத்திட்டம் செயலாக் கப்படுகின்றது. 1990—91 ஆம் ஆண்டில் 1,32,670 உரிமங் கள் வழங்கப்பட்டன. இவ்வகையில் ரூ. 8.32 இலட்சம் வருவாய் கிடைத்தது.

மாநில வேளாண் விற்பனை வாரியம் :

உழவர்களுக்கு உயரளவுப் பயன் கிடைக்கும் வகையில் செயல் முறைகளும் நடைமுறைகளும் ஒரே சீராக இருப்பதை உறுதி செய்ய, இவ்வாரியம் அங்காடிக் குழுக்களுக்கிடையே ஒரு பாலமாகச் செயல்படுகிறது.

விற்பனைக் கூடங்களில் கட்டுமானப் பணிகளை மேற் கொள்ள பொறியியல் பிரிவு ஒன்று இவ்வாரியத்திடம் உள்ளது. 1989—90., 1990—91-ஆம் ஆண்டுகளில் பல்வேறு ஒழுங்கு முறை அங்காடிகளில் 50 குடிநீர் வழங்கும் பணிகளையும், 53 துப்புரவுப் பணிகளையும் நிறைவேற்றும் வகையில் ரூ. 1.11 கோடி செலவிட அங்காடிக் குழுக்களுக்கு அரசு, 1989—90-ல் அனுமதி அளித்தது. இதில் 11 குடிநீர் வழங்கு பணிகளும் 2 துப்புரவுப் பணிகளும், பல்வேறு காரணங்களினால் தளளி வைக் கப்பட்டன. ஒரு பணி தவிர அனைத்துப் பணிகளும் நிறை வேற்றப்பட்டு விட்டன. சேலம் அங்காடிக் குழுவின் கீழ் செயல் படும் தம்மம்பட்டி மேல்நிலைத் தொட்டி கட்டும் இந்த ஒரு பணி இலங்கை அகதிகள் குடியிருப்பதால் நடைபெறவில்லை.

உழவர்களுக்கு அடமானக் கடன் உதவி :

உழவர்கள் இடர்பாடான காலங்களில் தம்முடைய விளை பொருட்களை, மிகக்குறைந்த விலைக்கு விற்பனை செய்ய நேரிடுவதைத் தடுக்கவும், அவர்களுக்கு ஆதாயமான விலைகள் கிடைப்பதை உறுதி செய்யவும், ஒழுங்கு முறை விற்பனைக்



கூடங்கள், நெல் நிலக்கடலை, சிறு தானியங்கள், எள், சூரிய காந்தி விதைகள், போன்ற வேளாண் விளை பொருட்கள் மற் றும் மலைத் தோட்டப் பயிர்கள் ஆகியவற்றின் அடமானத்தின் பேரில் சிறு ஸழவர்களுக்கும், குறு ஸழவர்களுக்கும் குறுகிய காலக் கடன் வழங்குகிறது. இத்திட்டத்தின் கீழ் ரூ. 10,000 என்ற உயரளவுக்கு உட்பட்டு அடமானம் வைக்கப்படும் வேளாண் விளைபோருட்களின் மொத்த மதிப்பில் சிறு மற்றும் குறு உழவர்களுக்கு 75 சதவிதம் கடனாகவும், ஏனைய உழவர் களுக்கு 50 சதவீதம் கடனாகவும் வழங்கப்படுகிறது. இதில் சிவீ மற்றும் குறு உழவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படுவதுடன் சிறு மற்றும் குறு உழவர்களுக்கு கடன் வழங்க மொத்த தொகையில் குறைந்த பட்சம் 50 சதவீதம் தொகை ஒதுக்கீடு செய்யப்படும். ஒவ்வொரு கிராமப்புற கிடங்கும் ரூ. 2 இலட் சத்திலிருந்து ரூ. 5 இலட்சம் வரை அதனுடைய நிதிநிலையைப் பொறுத்து, கடன் வழங்கும். இந்த வேளாண் விளை பொருட்கள் ஒழுங்குமுறை அங்காடிக் கிடங்குகளில், அதிகபட்சம் ஆறுமாத காலம் வைத்திருக்கப்படும். உழவர்களிடமிருந்து கிடங்குகள் கட்டணம் ஏதும்தனியாக வசூலிப்பதில்லை. கடன் தொகைக்கு முதல் மாதம் வட்டியேதும் வசூலிக்கப்படுவதில்லை. எனினும் கடன் தொகைக்கு, இரண்டாம் மாதத்திலிருந்து ஆறாம் மாதம் வரையில் ஐந்து மாதங்களுக்கு, ஆண்டொன்றுக்கு 12 சதவீதம் சாதாரண வட்டி விதிக்கப்படுகிறது. 1990—91-ல் 1200 உழவர்கள் இவ்வகையில் பயனடைந்துள்ளனர்.

கரும்புச்சாலை மேம்பாட்டுத் திட்டம் :

கரும்பு பயிரிடப்படும் பகுதிகளுக்கும் சர்க்கரை ஆலை களுக்கும் இடையே இணைப்புச் சாலைகள் அமைப்பதற்காக கரும்பு சாலை மேம்பாட்டுத்திட்டம் வகுக்கப்பட்டது. கரும்பு போக்குவரததை எளிதாக்குவதே இச்சாலை அமைப்புத் திட் டத்தின் நோக்கமாகும். 1949 ஆம் ஆண்டு தமிழ்நாடு சர்க்கரை ஆலைகள் கட்டுப்பாட்டுச் சட்டத்தின் விதிமுறைகளின் கீழ் ஆலைகளுக்கு வரும் கரும்புகளுக்கு ஒரு டன்னுக்கு ரூ. 5 வீதம் இம்மாநிலத்தில் கட்டணம் விதித்து வசூலிக்கப்படும். கரும்பு மேல்வரி நிதியின் ஒரு பகுதி, கரும்பு சாலை மேம்பாட்டுத் திட்டத்திற்காக ஒதுக்கப்படுகிறது.

சம்பந்தப்பட்ட சர்க்கரை ஆலைகளைச் கலந்தாலோசித்து சர்க்கரைத்துறை ஆணையர் பரிந்துரைக்கும் சாலைகளி லிருந்து புதிய சாலைப் பணிகளை அரசு தேர்வு செய்கிறது.

கடந்த 5 ஆண்டுகளில், புதிய சாலைப் பணிகளுக்கும் பராமரிப்புப் பணிகளுக்கும் இத்திட்டத்தின் கீழ் செலவிடப்பட்ட தொகை பற்றிய விவரம் பின் வருமாறு:—

| | ஆண்டு. | ரூபாய் (இலட்சத்தில்) |
|---|---|---|
| 1. | 1986—87 | 200.72 |
| 2. | 1987—88 | 200.17 |
| 3. | 1988—89 | 200.16 |
| 4. | 1989—90 | 200.03 |
| 5. | 1990—91 | 300.00 |

புதிய சாலைப் பணிகளுக்காகவும் தனியார் சர்க்கரை ஆலைகள் அமைந்துள்ள பகுதிகளில் உள்ள சாலைப்பணிகள் உட்பட பழைய சாலைகளைப் பராமரிப்பதற்காகவும் 1650 இலட்சம் ரூபாய் செலவிட நடப்பாண்டில் உத்தேசிக்கப்பட்டுள்ளது.

### நகராட்சி நிர்வாக இயக்ககம்.

**நகர்ப்புற கலவை எருத்திட்டம் (Urban Compost)**

1991—92 ஆம் ஆண்டில் 2,83,900 மெட்ரிக் டன் கலவை உரத்தை தயாரிக்க இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. நகராட்சிகள், பேரூராட்சிகள் போன்ற உள்ளாட்சி மன்றங்களில் கலவை தயாரிக்கப்படுகிறது. கலவை உரத்தைத் தயாரிப்பதற்கான ஒவ்வொரு உள்ளாட்சி மன்றத்தின் உற்பத்தித் திறன், மக்கள் தொகையில் 3 சதவீதம் (மெட்ரிக் டன்னில்) என்று மதிப்பிடப்பட்டுள்ளது.

இந்த ஆண்டிலும், நகராட்சிகளின் தகுதி நிலைகளுக்கேற்ப கலவை உரம் தயாரிப்புப் போட்டி நடத்தப்படும். கலவை உரம் உரத்தின் தரம், அதன் விற்பனை ஆகியவற்றின் அடிப்படையில் பரிசுகள் அறிவிக்கப்படும். 1991—92 ஆம் ஆண்டில் ரூ. 37,500 பரிசு வழங்கவும் கருதப்பட்டுள்ளது.

**கழிவு நீரைப் பயன்படுத்துதல் :**

23 உள்ளாட்சி மன்றங்களில் கழிவு நீர்ப் பண்ணைகள் பராமரிக்கப்படுகின்றன. தீவனப் புல், தேங்காய், சிறு தானியங்கள், கரும்பு மற்றும ஏனைய பயிர்கள் இந்தப் பண்ணைகளில் பயிரிடப்பட்டுள்ளன. இந்தப் பண்ணைகளை முறையாகப் பராமரிக்க உள்ளாட்சி மன்றங்களுக்கு தொழில் நுட்ப ஆலோசனை அளிக்கப்படுகிறது.





**வறட்சிக்கு உட்பட்ட பகுதிகள் திட்டம்.**

வறட்சிக்கு இலக்காகும் பகுதிகள் திட்டமானது பகுதி மேம்பாட்டுக்கான ஒருங்கிணைந்த தனித் திட்டமாகும். இத்திட்டத்தில் மண் ஈரப் பாதுகாப்பு, நில மேம்பாடு அபிவிருத்தி, காடு வளர்ப்பு, புல் வளர்ப்பு, நீர் வள மேம்பாடு, பணிகளுக்கு மிகவும் முக்கியத்துவம் அளிக்கப்படுகிறது. இத்திட்டம் தொடர்ந்து வறட்சிக்கு இலக்காகக்கூடியவை எனக் கண்டறியப்பட்ட வட்டாரங்களில் கூடுதல் திட்டமாக செயற்படுத்தப்படுகிறது. இத்திட்டத்திற்கான செலவினை மத்திய அரசும் மாநில அரசும் சம அளவில் ஏற்றுக்கொள்கின்றன.

ஏழாவது ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் (1985—90) 70.289 ஹெக்டேர் நிலப்பரப்பினை இத்திட்டத்தின் கீழ் மேம்படுத்த இலக்கு நிர்ணயிக்கப்பட்டு 74,522 ஹெக்டேர் நிலப்பரப்பு மேம்படுத்தப்பட்டு அதற்காக ரூ. 74,3031.98 இலட்சம் செலவிடப்பட்டுள்ளது. இத்திட்டம், இம்மாநிலத்தில் பின்வரும் 43 வட்டாரங்களில் செயற்படுத்தப்படுகிறது.

| மாவட்டத்தின் பெயர். | வறட்சிக்கு இலக்காகும் பகுதிகள் திட்ட வட்டாரங்களின் எண்ணிக்கை |
|---|---|
| தருமபுரி | 12 |
| சிதம்பரனார் | 8 |
| இராமநாதபுரம் | 7 |
| பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் | 6 |
| காமராசர் | 5 |
| புதுக்கோட்டை | 4 |
| திருநெல்வேலி கட்டபொம்மன் | 1 |
| மொத்தம் | 43 |

1990—91 ஆம் ஆண்டில் (மார்ச் 1 ஆம் நாள் வரையில்) ஒதுக்கப்பட்ட மற்றும் செலவிடப்பட்ட தொகைகளின்விவரம் பின்வருமாறு:—

| | ஒதுக்கப்பட்ட தொகை. | செலவழிக் கப்பட்ட தொகை. |
|---|---|---|
| | (ரூபாய் இலட்சத்தில்) | |
| 1990—91 நடப்பாண்டு .. | 569.69 | 101876 |
| முந்தைய ஆண்டின் தொடர்பானவை | 162.98 | 137.51 |
| மொத்தம் | 732.67 | 739.38 |

*செலவிடப்பட்ட கூடுதல் தொகை முகமை அமைப்பு களின் சொந்த நிதி ஆதாரங்களிலிருந்து செலவிடப்பட்டது.

1990—91 ஆம் ஆண்டின் செயல் இலக்கு (ஹெக்டேரில்)

| | இலக்கு | சாதனை. |
|---|---|---|
| 1990—91 ஆம் நடப்பு ஆண்டிற்கு | 23,779 | 22,292 |
| முந்தைய ஆண்டு தொடர்பானவை | 3,499 | 3,454 |
| மொத்தம் .. | 27,278 | 25,746 |

**1991—92 ஆம் ஆண்டுத் திட்டம். :**

1991—92 ஆம் ஆண்டுத் திட்டத்தின்கீழ் 657.00 இலட்சம் ரூபாய் செலவில் 22,653 ஹெக்டேர் நிலத்தை மேம்படுத்துவதற்கான திட்டத்திற்கு அரசு ஒப்புதல் அளித்தது.

**தமிழ்நாடு வேளாண் தொழில்கள் கழகம் :**

சொந்தமாகத் தொழில்கள் ஏற்படுத்தி மேம்படுத்துவதன் மூலம் வேளாண்மையை நவீனப்படுத்துவது போன்ற முக்கிய பணிகளில் தமிழ்நாடு வேளாண் தொழில்கள் கழகம் ஈடுபடுகிறது. தமிழ்நாடு வேளாண் தொழில்கள் கழகம் வேளாண்மை றபத்திப் பொருட்களை செய்முறைப் படுத்தி, நியாயமான விலையில்



விவசாயிகளுக்கு இரசாயன உரங்கள், பயிர்ப் பூச்சிக் கொல்லி மருந்துகள், வேளாண்மை எந்திரங்கள், டயர் டியூப்கள், பேட்டரிகள், உதிரிப் பாகங்கள் முதலியவற்றை விற்பனை முகவரமைப்பாகவும் செயல்படுகிறது.

1990—91-ல் இக்கழகம் 57,698 மெட்ரிக் டன் இரசாயன உரங்கள், ரூ. 369.00 இலட்சம் மதிப்புள்ள உதிரி பாகங்கள் கருவிகள், 141 டிராக்டர்கள், 447 விசைக் கலப்பைகள் ஆகியவற்றை விற்பனை செய்துள்ளது. பயிர் பூச்சிக் கொல்லி மருந்து தயாரிக்கும் கழகத்தின் பிரிவு 2,474 மெட்ரிக் டன் பயிர் பூச்சிக் கொல்லி மருந்துகள், 2,70,038 இலட்சம் லிட்டர் திரவப் பயிர் பூச்சிக் கொல்லி மருந்து ஆகியவற்றைத் தயாரிக்கத் தக்கது. மீன் வலை தயாரிக்கும் பிரிவு 36,448 மெட்ரிக் டன் மீன் பிடி வலையைத் தயாரித்தது, உடுமலைப்பேட்டையிலுள்ள மணப்புல் வகை கால் நடை தீவன ஆலை (Alfaela Meal Plant) 231 மெடரிக் டன் கால் நடைத் தீவனம் தயாரித்தது. போச்சாம்பளளி எண்ணெய் ஆலைத் தொகுதி 2,810 மெட்ரிக் டன் சூரிய காந்தி விதைகளை செய்முறைப்படுத்தி எண்ணெய் எடுத்தது. ஏனைய எண்ணெய் ஆலைகளிடமிருந்து வாங்கப்பட்ட 4,020 மெட்ரிக் டன் எடையுள்ள கச்சா சூரிய காந்தி எண்ணெயை இந்த ஆலை சுத்திகரித்தது. இந்த ஆலை 4,841 மெட்ரிக் டன் 'சனோலா' சூரியகாந்தி எண்ணெய்யைத் தயாரித்தது. 'சனோலா மற்ற எண்ணெகளை விட மிகப் பிரபலமானது. பனைகுளம் கரைசல் முறையில் தவிட்டு எண்ணெய் எடுக்கும் ஆலை 501 மெட்ரிக் டன் அரிசி தவிட்டு எண்ணெயைத் தயாரித்தது.

1991—92 ஆம் ஆண்டில், கழகம் 70,000 மெட்ரிக் டன் இரசாயன உரங்கள், 198 டிராக்டர்கள், 375 விசைக் கலப்பைகள், 405.00 இலட்சம் மதிப்புள்ள உதிரி பாகங்கள் :கருவிகளை விற்கத் திட்டம் இடப்பட்டுள்ளது. இக்கழகம் 3,000 மெட்ரிக் டன் பயிர் பூசசிக் கொல்லி மருந்துத்தூள், 3.10 இலட்சம் லிட்டர் திரவ பயிர் பூச்சிக் கொல்லி மருந்து 60 மெட்ரிக் டன் எடையுள்ள மீன் பிடி வலைகள் ஆகியவற்றை தயாரிக்க கருதியுள்ளது. போச்சம்பள்ளியில் 9,475 மெட்ரிக் டன் சூரியகாந்தி விதைகளை செய்முறைப் படுத்தவும், 1975 மெட்ரிக் டன் கச்சா சூரியகாந்தி எண்ணெயைச் சுத்திகரிக்கவும் கருதியுள்ளது. 5,400 மெட்ரிக் டன் சனோலாவும், 5,120 மெட்ரிக் டன் சனோலா எண்ணெய் எடுக்கப்பட்ட பிண்ணாக்கும் விற்பனை செய்யப்பட்டன. பனைக்குளத்திலுள்ள கரைசல் முறையில் தவிட்டு எண்ணெய் எடுக்கும் ஆலை, 2—1—1991 ஆம் நாள் முதற் கொண்டு தமிழ்நாடு நுகர் பொருள் வாணிபக் கழகத்திற்கு

மாற்றப்பட்டது. நாமக்கல்லிலுள்ள தவிட்டு எண்ணெய் எடுக்கும் ஆலையை விற்றுவிடும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் இருப்பதால், இந்த ஆலைக்கு 1991—92ஆம் ஆண்டிற்குரிய இலக்கு ஏதும் நிர்ணயிக்கப்படவில்லை. மாநிலத்தில், உணவு செயற்முறைப்படுத்தும் தொழிற்சாலைகளை மேம்படுத்த உதவும் வகையில் இக்கழகம் செயல்படும்.

தமிழ்நாடு வேளாண் பொறியியல் மற்றும் பணிக் கூட்டுறவு இணையம். :

தமிழ்நாடு வேளாண் பொறியியல் மற்றும் பணிக் கூட்டுறவு இணையம் (ENCOFED) 1972-ம் ஆண்டில் அமைக்கப்பட்டது தற்போது வட்டார அளவில் 176 வேளாண்மை பொறியியல் பணிக் கூட்டுறவு மையங்களும், மாவட்ட அளவில் 12 வேளாண பணி சங்கங்களும் வேளாண் பொறியியல் பணிக் கூட்டுறவு இணையத்துடன் இணைக்கப்பட்டுள்ளன. மாவட்ட, வட்டார அளவில் வேளாண் பணி மையங்களை நிறுவி அதன்மூலம் கிராமப்புற விவசாயிகளுக்கு வேளாண் பொறியியல் பணிகளைச் செய்வதே இவ்விணையத்தின் முக்கியக் குறிக்கோளாகும். இந்த வேளாண் பணி மையங்கள், கிராமப்புற விவசாயிகளுக்கு, உழவுக் கருவிகளையும், எந்திரங்களையும் வாடகைக்கு அளித்தல், உழவுக் கருவிகளைப் பழுது பார்த்தல், விதைகள் உரம், பூச்சிக் கொல்லி மருந்துகள் போன்ற இடு பொருட்களை வழங்குதல் போன்ற இன்ன பிற சேவைகளைச் செய்து வருகிறது.

சிறப்பு வகைப் பணிகளும் திட்டங்களும் :

மத்திய அரசு பொருப்பேற்கும் திட்டத்தின்கீழ் அமைக்கப்பட்ட விவசாயிகள் வேளாண் மையங்கள் 1984-85 லிருந்து செயல்படுகின்றன. இத்திட்டத்தின் முக்கியக் கூறுகளாவன.—

(i) விவசாயிகள் வேளாண் பணி மையங்களை நிறுவி, 50 சத உதவித் தொகையுடன் வாடகைக்கு விடப்படும் இயந்திரங்களை அந்நிலையங்களுக்கு வழங்குதல்.

(ii) மேம்படுத்தப்பட்ட வேளாண் கருவிகளையும், சிறு கருவிகளையும் கொண்டு செயல்முறை விளக்கங்கள் நடத்துதல்.

(iii) மேம்படுத்தப்பட்ட விவசாயக் கருவிகளையும், சிறு கருவிகளையும் பரவலாக மக்களிடம் கொண்டு செல்வதற்காக, 50 சதவீத உதவித் தொகைத் திட்டத்தின் கீழ் அவற்றை விவசாயிகளுக்கு வழங்குதல்.



வேளாண் பொறியியல் மற்றும் பணிக் கூட்டுறவு இணையத்தின் மூலம் 1990—91-ஆம் ஆண்டில் செயல்படுத்தப்பட்டுள்ள முக்கிய திட்டங்கள், திட்டப் பணிகள், 1991—92-ஆம் ஆண்டில் செயல்படுத்தக் கருதப்பட்டுள்ள திட்டங்கள், திட்டப் பணிகள் பற்றிய விவரங்கள் கீழே அளிக்கப்பட்டுள்ளன.

| தொடர் எண் மற்றும் திட்ட நடவடிக்கைகளும் திட்ட அலகும். | திட்டம். 1990—91 இலக்கு | 1990—91 சாதனை | 1991—92-ஆம் ஆண்டு இலக்கு | நிதி (ரூபாய் இலட்சத்தில்) 1990—91 இலக்கு | 1990—91 சாதனை | 1991—92-ஆம் ஆண்டு இலக்கு. |
|---|---|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) |
| 1. வேளாண் எந்திரங்களை வாடகைக்கு விடுதல். | | | | | | |
| (அ) டிராக்டர்கள் (மணிக்கணக்கில்). | 1,51,000 | 2,16,752 | 1,65,000 | 75.50 | 115.32 | 82.00 |
| (ஆ) விசைக் கலப்பை (மணிக்கணக்கில்). | 24,000 | 17,626 | 20,000 | 8.40 | 6.19 | 7.00 |
| 2. அனைத்து வகைத் தெளிப்பான்களையும், தூவு கருவிகளையும், விற்பனை செய்தல் எண்ணிக்கை. | 17,000 | 27,774 | 19,000 | 153.00 | 321.03 | 170.00 |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 3. சீரமைப்புத் திட்டம் : | | | | | | |
| (அ) மின் மோட்டார் பம்பு செட்டுகள் (எண்ணிக்கை). | 220 | 97 | .. | .. | .. | .. |
| (ஆ) டீசல் எஞ்சின் பம்பு செட்டுகள் (எண்ணிக்கை). | 175 | 79 | .. | .. | .. | .. |
| 4. சாலையைச் சமன் செய்யும் உருளை எந்திரத்தை வாடகைக்கு விடுதல் (மணிக்கணக்கில்). | 600 | 04 | 900 | 2.40 | 3.62 | 3.60 |
| 5. பயிர்ப்பூச்சிக்கொல்லி மருந்துகள், உரம் மற்றும் விதைகளை விற்பனை செய்தல். | .. | .. | .. | 290.00 | 200.77 | 1100.00 |
| 6. பராமரித்தல், பழுது பார்த்தல். | .. | .. | .. | 800.00 | 776.58 | 960.00 |



தமிழ்நாடு ஜி. டி. நாயுடு வேளாண்மைப் பல்கலைக் கழகம்.

1990-91 ஆம் ஆண்டில் வேளாண் கல்வி, ஆராய்ச்சி விரிவாக்கக் கல்வி ஆகிய துறைகளில், பல்கலைக் கழகம் எய்திய சாதனைகள் இனி எடுக்க வேண்டிய பெரு முயற்சிகள பற்றி கீழே கொடுக்கப்பட்டுள்ளன:—

1990-ஆம் ஆண்டில் பல்கலைக் கழகத்தில் நான்கு வளாகங்களில் பட்டப் படிப்பிற்கு 489 மாணவர்களும் பட்ட மேற்படிப்பிற்கு 249 மாணவர்களும் சேர்த்துக் கொள்ளப் பட்டனர்.

வனவியல் ஆராய்ச்சி மையம் கோயம்புத்தூரிலிருந்து மேட்டுப்பாளையத்திற்கு மாற்றப்பட்டு வனவியல் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம் என்ற நிலைக்கு உயர்த்தப் பட்டது.

தோட்டக் கலை ஆராய்ச்சி மையம் கோயம்புத்தூரிலிருந்து பெரியகுளத்திற்கு மாற்றப்பட்டு தோட்டக்கலை கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம் என்ற நிலைக்கு உயர்த்தப்பட்டது.

மாணவர்கள பட்டப்படிப்பு முடிந்தவுடன் சுயவேலைத் தொடங்க வாய்ப்பளிக்கும் வகையில் இந்தப் பல்கலைக் கழகம் ''வணிக ரீதியில் வேளாண்மை'' என்ற பாடத் திட்டத்தை இளநிலை பட்டப்படிப்பில் புதியதாகப் புகுத்தியுள்ளது. இந்தப் புதிய பாடத் திட்டத்தில் நுண்ணுயிர் உரங்கள் தயாரித்தல், உயர் ரக தென்னங் கன்று உற்பத்தி, காளாண் உற்பத்தி, விதை உற்பத்தி, கறிக் கோழி உற்பத்தி, பதப்படுத்திய உணவு மற்றும் உயிரியல் கட்டுப்பாடு முதலியன அடங்கும்.

வெளிநாடுகளுக்குப் பழங்கள், காய்கறிகள், தேயிலை, காப்பி, ரப்பர் போன்றவற்றை ஏற்றுமதி செய்து அதன் மூலம் நல்ல பலன் ஈட்ட வாய்ப்பு மற்றும் நல்ல எதிர் காலம் தென்படுவதைக் கருத்தில் கொண்டு இளநிலை பட்டப்படிப்பு பாடத் திட்டத்தில் ''ஏற்றுமதி ஒட்டிய வேளாண்மை'' புதியதாக சேர்க்கப்பட்டுள்ளது.

திருச்சிராப்பள்ளி மாவட்டம், லால்குடி தாலுக்காவில் உள்ள குமுளூரில் வாழை ஆராய்ச்சி மையம் ஒன்றைத் தொடங்க இந்திய வேளாண்மை ஆராய்ச்சிக் கழகம் முடிவு செய்துள்ளது. தமிழ்நாடு அரசு இதற்காக 100 ஏக்கர் நிலத்தை இந்திய வேளாண்மை ஆராய்ச்சிக் கழகத்திடம் ஒப்படைக்க உள்ளது.

தமிழ்நாடு ஜி. டி. நாயுடு பல்கலைக் கழகம், பின்வரும் 24 வகைப் பயிர்களை அறிமுகப்படுத்தியுள்ளது:—

| பயிர்கள். | வகைகளின் எண்ணிக்கை. |
|---|---|
| நெல் .. .. .. .. .. | 2 |
| சோளம் .. .. .. .. | 2 |
| பருப்பு வகைகள் .. .. .. | 3 |
| பருத்தி .. .. .. .. | 2 |
| காய்கறிகள் .. .. .. | 6 |
| வரகு .. .. .. .. .. | 1 |
| நறுமணப் பொருள்கள் .. .. .. | 2 |
| தீவனப் பயிர்கள் .. .. .. | 2 |
| முந்திரி .. .. .. .. | 1 |
| கரும்பு .. .. .. .. | 1 |
| மலர் .. .. .. .. .. | 1 |

பின் வரும் சாதனங்களும், எந்திரங்களும் மேம்படுத்தப் பட்டன.

எள் விதைகளைத் தரம் பிரிக்க கையால் இயக்கும் கருவி.

சில ஊட்டச் சத்துக்கள் கொண்ட தானியம், காய்கறி பழங்களுக்கான விதைகளை விதை நேர்த்தி செய்யும் கருவி மின்கலத்தால் இயங்கும் சுழலும் தெளிப்பான்.

கிராம வளர்ச்சியில், கிராமங்களிலுள்ள மகளிர் பங்கேற்பதை ஊக்குவிக்கும் வகையில், மதுரை வட்டாரத்தைச் சேர்ந்த 5 மாவட்டங்களில் உணவு வகை காளான்களின் ''உற்பத்தி-விற்பனை'' ஆகியவற்றில் 75 மகளிருக்கு பயிற்சி அளிக்கப்பட்டது. நாளொன்றுக்கு கிலோ



என்ற வீதத்தில் ஓராண்டில் முன்னூறு நாட்களில் செய்யப்படும் காளாண் உற்பத்தி மூலம் ஆண்டொன்றுக்கு ரூ. 16,500 நிகர லாபம் கிடைக்கிறது. இதன் உற்பத்தி உள்ளூர் விற்பனை ஆகியவற்றில் பெரும்பாலும் அந்தந்த குடும்பத்தைச் சேர்ந்தவர்களே ஈடுபடுத்தப்படுகின்றனா. ஆட்டோகிளேவ் (Autoclave Equipments) போன்ற சாதனங்கள் வாங்குவதற்குரிய சிறு முதலீட்டுத் தொகை தவிர, காளாண் உற்பத்திக்குத் தேவையான மூலப் பொருட்கள் பெரும்பாலும் உள்ளூர் பகுதிகளிலேயே கிடைக்கின்றன. மேலும், இது பொருளாதார வகையில் நல்ல லாபம் ஈட்டுகிறது.

விஞ்ஞானிகள் பல ஆண்டுகள் கடினமாக உழைத்து, புதியதொரு ரகத்தை உருவாக்குகின்றனர். அந்த ரகத்தை வெளியிடுவதற்கு முன்னர் அதனை நன்முறையில் பயன்படுத்த இயலுமா என்பதைப் பற்றி ஆராய்ச்சி சோதனைகளுக்கும் பல இட சோதனைகளுக்கும் அதனை உட்படுத்துகின்றனர். அவ்வாறு, பயன்பாட்டுக்காக வெளியிடப்படுகிற ஒவ்வொரு வகை புதிய ரகமும் சில சிறப்புத் தன்மைகளைப் பெற்றுள்ளதால், அவை தற்போதுள்ள ரகத்தைவிட சிறந்ததாகத் திகழ்கிறது. 1990—91 ஆம் ஆண்டில் வெளியிடப்பட்ட சில முக்கியமான ரகங்களின் விவரங்கள், அவை உருவாக்கப்பட்ட ஆராய்ச்சி நிலையங்களின் பெயர்கள் அவற்றின் சிறப்புத் தன்மைகள் ஆகியவை குறித்த விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

அம்பாசமுத்திரத்தில் உருவாக்கப்பட்ட ASD 18 ரக நெல் :

கேடைக்கால/குருவைக் காலத்தில் பயிரிடப்படுகிற ஐ.ஆர் 50— ரகம் என்ற நடப்பு ரக நெல்லுடன் ஒப்பிடுகையில் இவ்வகை நெல், குலை நோயை (கொடிய பூஞ்சான் வகை நோய்) எதிர்த்துத் தாங்கக்கூடிய ஆற்றல் வாய்ந்தது.

மதுரையில் உருவாக்கப்பட்ட MDU—4 ரக நெல் :

தற்போதுள்ள எம். டி. யு. 2, ஐ. ஆர். 20 ஆகிய ரகங்களைக் காட்டிலும் மிகக் குறைந்த வெப்பத்தை தாங்கிக் கொள்ளக் கூடிய ரகமாகும்.(12 செ.கி. வரையிலான வெப்பம்). மதுரையில் உள்ள கம்பம் பள்ளத்தாக்குப் பகுதி, சேலம், தர்மபுரி பகுதிகள் உட்பட இம்மாநிலத்தின் குளிர்ப் பகுதிகளில் பயிரிட ஏற்றதாகும்.

**கோவில்பட்டியில் உருவாக்கப்பட்ட கே.— 10 ரக சோளம் :**

நடப்பு ரகப் பயிர்களான கே. 3, கே. 7 சோளங்களை விட, இந்த ரகம் உயர் விளைச்சலையும் கால்நடைத் தீவனத்தையும் அளிக்கிறது.

பையூரில் உருவாக்கப்பட்ட பையூர்-1 ரக சோளம் (தலை விரிச்சான் சோளம்).

இந்த ரகப்பயிர், மிக ஆழமாக வேர்விடக் கூடியதாகையால், இது வறட்சியைத் தாங்கும் ஆற்றல் வாய்ந்தது. இதன் வைக்கோல் சாறு மிகுந்தது. எனவே கால்நடைகள் இதனை விரும்பி உண்கின்றன. இதன் கதிர்கொத்து உறுதியற்றவையாக இருக்கின்றன. எனவே பறவைகள் இதன்மீது உட்கார முடியாததால், பறவைகளினால் இவற்றுக்குச் சேதம் இல்லை. இது மழை நீரை எளிதில் வெளியேற்றக்கூடியதாகும். எனவே, மழை பெய்த பிறகு கூட இந்தத் தானியத்தின் நிறம் வெளிவருவதில்லை. ஆகவே நடப்பு வகை கே. ஓ. 19 SNC—13 ரகத் தானியங்கள்ளை விட இது சிறந்ததாகும்.

கடலூரில் உருவாக்கப்பட்ட COC— 16 வகைக் கரும்பு :

மண்ணிலிருந்து தோன்றக்கூடிய 'செவ்வழுகல் நோய்' (ரெட்காட்.) என்ற கொடிய நோய் இந்தரகக் கரும்பைத் தாக்காது. இரசாயன மருந்துகளைக் கொண்டு செவ்வழுகல் நோயைக் கட்டுப்படுத்துவது மிகவும் கடினமானதால் இயல்பாகவே இந்நோய் எதிர்ப்பு சக்தி வாய்ந்த ரகங்களை உருவாக்குவதன் மூலம் இதனைக் கட்டுப்படுத்த வேண்டியுள்ளது. தென் ஆற்காடு மாவட்டத்தில் கரும்புப் பயிரிடும் பகுதியில், செவ்வழுகல் நோய் அதிகமாகப் பரவியுள்ளது. எனவே, இவ்வகை ரகத்தின் மூலம் தென் ஆற்காடு மாவட்டத்திலுள்ள விவசாயிகள் சிறப்பான வகையில் பயனடைவர். இந்த ரகம் தற்போதுள்ள COC— 671 என்ற ரகத்தை விட சிறந்ததாகும்.

கோயம்புத்தூரில் உருவாக்கப்பட்ட CO.— 6 வகை துவரை:

நெடுங்காலமாகவே தற்போதைய 'SA'—1. வகை துவரையைவிட சிறந்த ரகம் எதுவும் உருவாக்கப்படவில்லை. 'CO—6' ரகமானது உயர் விளைச்சல் தரும் ரகமாகும். அதாவது ஹெக்டேர் ஒன்றுக்கு சராசரியாக 893 கிலோ கிராம் விளைச்சல் கொடுக்கும். ஆனால் 'SA'—1 ரகம்



ஹெக்டேர் ஒன்றுக்கு 775 கி.கி. விளைச்சல் மட்டுமே கொடுக்கிறது. இப்பயிரானது வறட்சியைத் தாங்கக்கூடிய சக்தி வாய்ந்தது. மேலும் இது ஹெலியோதிஸ் என்ற பூச்சி நோயை எதிர்க்கும் ஆற்றலுடையது.

**புதிய திட்டங்கள் :**

ரூபாய் 32.96 லட்சம் மதிப்பீட்டில் 17 ஆராய்ச்சி திட்டங்களை தமிழ்நாடு ஜி.டி. நாயுடு வேளாண்மைப் பல்கலைக் கழகம் 1991—92 ஆம் ஆண்டின் புதிய திட்டப் பணிகளாக (பகுதி II) கொண்டுவர உத்தேசிக்கப்பட்டுள்ளது.

1991–92 ஆம் ஆண்டில் பின் வரும் பகுதி இரண்டு திட்டங்கள் செயல்படுத்தப்படும்.

| வரிசை எண். | திட்டத்தின் பெயர். | 1991—92க்-கான செலவு. (ரூபாய் இலட்சத்தில்.) |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| வேளாண்மை : | | |
| 1 | கரம்பு, தரிசு நிலங்களில் பயிரிடுவதற்கான புதிய பணித்திட்டம். | 75.00 |
| 2 | மாநில எண்ணெய் வித்துக்கள் ஒருங்கிணைந்த மேம்பாட்டுத் திட்டம். | 50.00 |
| 3 | கடலூரிலுள்ள நுண்ணுயிர் வளர்ப்புப் பிரிவிற்கு சீர்வளி வசதிகள் செய்து கொடுத்தல். | 2.00 |
| 4 | நுண்ணுயிர் வளர்ப்புப் பிரிவை வலுப்படுத்துவதற்காகச் சாதனங்கள் வாங்குதல். | 11 50 |
| 5 | உழவர் பயிற்சி மையத்தை வலுப்படுத்துதல். | 4.50 |

| | | (ரூபாய் இலட்சத்தில்.) |
|---|---|---|
| 6 | தெரிந்தெடுக்கப்பட்ட 12 இடங்களில் தென்னங்கன்றுகளை விநியோகிக்க பாதுகாப்பு-விற்பனைப் பிரிவுகளை கட்டுதல். | 4.26 |
| 7 | பவானிசாகரிலுள்ள அரசு எண்ணெய் வித்துக்கள் பண்ணையில் வாய்க் காலுக்குக் காரை பூசுதல். | 0.88 |
| 8 | உலக வங்கி உதவி பெறும் தமிழ்நாடு வேளாண்மை வளர்ச்சித் திட்டத்தின் கீழ் அரசு விதைப் பண்ணைகளில் அடிப்படை வசதிகளை மேம்படுத்தும் திட்டம். | 24.97 |
| | மொத்தம் .. | 173.11 |

தோட்டக்கலை மலைத் தோட்டப் பயிர்கள் :

| | | (ரூபாய் இலட்சத்தில்.) |
|---|---|---|
| 9 | இம்மாநிலத்தில் ஒருங்கிணைந்த தோட்டக்கலை மேம்பாட்டுத் திட்டப் பணிகளை விரிவுபடுத்துதல். | 6.00 |
| 10 | தெரிந்தெடுக்கப்பட்ட மாநிலத் தோட்டக்கலைப் பண்ணைகளில் பாசன வசதிகளைப் பெருக்குதல், கம்பி, வேலியும் சுவர்க் கம்பி முள் வேலியும் அமைப்பதற்கு வகை செய்தல். | 10.00 |
| 11 | சென்னை, தரமணியில் உள்ள தோட்டக்கலைப் பயிற்சி மையத்தையும் துணை இயக்குநர் அலுவலகத்தையும் வலுப்படுத்துதல். | 5.00 |
| | மொத்தம் .. | 21.00 |



வேளாண்மைப் பொறியியல் :

| | | (ரூபாய் இலட்சத்தில்.) |
|---|---|---|
| 12 | சொட்டு நீர்ப் பாசனம், தெளிப்புப் பாசனத்தைப் பிரபலப்படுத்துவதற்கான திட்டம். | 40.00 |

விதைச் சான்றளிப்பு :

| | | |
|---|---|---|
| 13 | தருமபுரியில் விதைகளைச் சோதனைச் செய்யும் ஆய்வுக் கூடங்களுக்காகக் கட்டிடங்கள் கட்டுதல். | 4.00 |

தமிழ்நாடு ஜி. டி. நாயுடு வேளாண்மைப் பல்கலைக் கழகம் :

| | | |
|---|---|---|
| 14 | ஆராய்ச்சி குறித்த புதிய திட்டங்களைச் செயல்படுத்தி தமிழ்நாடு ஜி. டி. நாயுடு வேளாண்மைப் பல்கலைக் கழகத்திற்கு நிதியுதவி. | 20.45 |
| | பெரு மொத்தம்—வேளாண்மைத்துறை .. | 258.56 |

## இணைப்பு - 2.

(160 ஆம் பக்கத்திலுள்ள அடிக் குறிப்பைக் காண்க.)

மானியக் கோரிக்கை எண். 13.

நீதி நிருவாகம்— 1991-92.

கொள்கை விளக்கக் குறிப்பு.

இந்திய அரசியலமைப்புச் சட்டத்தில் குறிப்பிட்டுள்ள கோட்பாடுகளுக்கிணங்க, அனைத்துக் குடிமக்களுக்கும் நீதி வழங்குவது இவ்வரசின் கொள்கையாகும். நீதியை நிருவகிப்பது நீதிமன்றங்களின் பொறுப்பாகும். அரசின் செயற்பிரிவு மற்றும் நிருவாகப் பிரிவினின்றும் இது தனித்து செயல்படுகிறது. வழக்கு நிலுவைகளை அகற்ற, அவசியமான இடங்களிலெல்லாம், உயர் நீதி மன்றத்தின் பரிந்துரையின் பேரில், புதியதாகவும் கூடுதலாகவும் நீதி மன்றங்கள் ஏற்படுத்த ஒப்புதல் வழங்குவதன் மூலமும், நீதிமன்றங்களுக்குத் தேவையான இடவசதி, பணியாளர், அறைகலன்கள் போன்றவை உட்பட அனைத்து வசதிகளுக்கும் வகை செய்து கொடுப்பதன் மூலமும் அரசு தனது பணிகளை ஆற்றுகிறது.

2. நீதி நிருவாகம் பற்றிய சிறப்புக் கூறுகள் வருமாறு :— 13 ஆம் எண் மானியக் கோரிக்கையும் " நீதி நிருவாகம் " தொடர்பான மானியங்களும் இதன் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள நீதிமன்றங்கள், அதிகாரிகள், பணியாளர் அமைப்பு ஆகியவை தொடர்பான செலவினங்கள் பற்றி குறிப்பிடுகின்றன.

(1) உயர் நீதிமன்றம், சென்னை ;

(2) நொடித்தவர், சொத்தாட்சியர், உயர்நீதி மன்றம், சென்னை ;

(3) சிவில் செஷன்ஸ் நீதிமன்றங்கள் (சென்னை மாநகர் சிவில் நீதிமன்றம் உட்பட) ;

(4) சிறு வழக்கு நீதிமன்றங்கள், சென்னை ;

(5) பெருநகர் மாஜிஸ்ட்டிரேட் நீதிமன்றங்கள் ;

(6) குற்றவியல் சார்நிலை நீதிமன்றங்கள் (நீதித்துறைத் தலைமை மாஜிஸ்ட்டிரேட் நீதிமன்றங்கள், நீதித்துறை மாஜிஸ்ட்டிரேட் நீதிமன்றங்கள்) ;



(7) அரசு பொறுப்புச் சொத்தாட்சியர், சென்னை ;

(8) அரசு சட்ட ஆலோசகர்கள், வழக்குரைஞர்கள் ;

(9) சென்னை, மதுரை, கோயம்புத்தூர் ஆகிய இடங்களிலுள்ள தொழிலாளர் நீதிமன்றங்கள், சென்னையிலுள்ள தொழில் நடுவர் மன்றம்.

விற்பனை வரி மேல் முறையீட்டு நடுவர் மன்றம், அரசுப் போக்குவரத்து மேல் முறையீட்டு நடுவர் மன்றம், கூட்டுறவுச் சங்கங்களின் வழக்குகளுக்கான நடுவர் மன்றங்கள், மாநில நிருவாக நடுவர் மன்றம், 1976ஆம் ஆண்டு தனியார் கல்லூரிகள் (முறைப்படுத்தல்) சட்டத்தின்படி செய்துகொள்ளப்படும் மேல் முறையீடுகளைக் கவனிக்கும் மேல் முறையீட்டு நடுவர் மன்றம் போன்ற நடுவர் மன்றங்கள் அந்தந்தத் துறையின் நிதிக் கட்டுப்பாட்டில் இயங்குகின்றன. அத்தகைய நடுவர் மன்றங்களின் செலவு, அந்தந்தத் துறைக் கணக்குகளில் பற்று எழுதப்படுகிறது.

(10) குடும்ப விவகாரங்கள் குறித்த நீதிமன்றம், சென்னை மாநகர்.

3. நீதிமன்றங்கள், அலுவலர்களிடையே பின்வருவனவற்றை பற்றிய செலவு " சாட்டிய செலவினம் " என்றும் " அனுமதிக்கப்பட்ட செலவினம் " என்றும் வகைப்படுத்தப்படுகிறது :—

| சாட்டியவை. | அனுமதிக்கப்பட்டவை. |
|---|---|
| (1) | (2) |
| (1) உயர்நீதிமன்றம் (நீதிபதிகள், பதிவாளர், அசல் வழக்குகள், மேல் முறையீடுகள் ஆகியவற்றைக் கவனிக்கும் பணியாளர் அமைப்பு, மொழிபெயர்ப்பு மற்றும் அச்சுத்துறை, சட்டத்தீர்ப்பு அறிக்கையாளர் மற்றும் பணியாளரமைப்பு, உதவிப் பதிவாளர், புதுச்சேரி, புதுச்சேரிக்கு அதிகார வரம்பை நீட்டித்தல் தொடர்பான பணியாளரமைப்பு, சென்னை மாநகர ஷெரீப் மற்றும் அவரது பணியாளர்கள்). | 1. சென்னை மாநகர் சிவில் நீதிமன்றம் உட்பட சிவில் செஷன்ஸ் நீதி மன்றங்கள்.<br>2. சிறு வழக்குகள் நீதி மன்றம், சென்னை.<br>3. பெருநகர் மாஜிஸ்ட்டிரேட் நீதிமன்றங்கள், சென்னை.<br>4. குற்றவியல் சார்நிலை நீதிமன்றங்கள். |

| சாட்டியவை. | அனுமதிக்கப்பட்டவை. |
|---|---|
| (1) | (2) |
| (2) நொடித்தவர், சொத்தாட்சியரும் அவரது பணியாளரமைப்பும். | 5. அரசுப் பொறுப்புச் சொத்தாட்சியர், சென்னை. |
| | 6. அரசு சட்ட ஆலோசகர்கள், வழக்குரைஞர்கள். |
| | 7. சென்னை, மதுரை, கோயம்புத்தூர் ஆகிய இடங்களில் உள்ள தொழிலாளர் நீதிமன்றங்கள், சென்னையிலுள்ள தொழில் நடுவர் மன்றம். |
| | 8. பதிப்பு ஆசிரியர், பணியாளர்கள், தமிழ் சட்ட இதழ் வெளியீடு சென்னை. |
| | 9. குடும்ப விவகாரங்கள் குறித்த நீதிமன்றங்கள். |

4. **சென்னை உயர் நீதிமன்றம்.**—மாநிலத்தில் மிக உயரிய நீதிமன்றம் சென்னை உயர் நீதிமன்றமாகும். உயர் நீதிமன்றத்திற்கு ஒப்புதல் அளிக்கப்பட்ட நீதிபதிகளின் எண்ணிக்கை தலைமை நீதிபதியையும் சேர்த்து 28 ஆகும். உயர்நீதிமன்ற நீதிபதிகளின் எண்ணிக்கையை அதிகரிப்பதற்காகவும் உயர் நீதிமன்றத்தில் முடிவுறாமலுள்ள வழக்குகளைத் துரிதமாக முடிக்கவும் தமிழ்நாடு அரசு கேட்டுக் கொண்டதற்கிணங்க, உயர்நீதிமன்ற நீதிபதிகளின் எண்ணிக்கையை 32 ஆக உயர்த்த மத்திய அரசு கொள்கை அளவில் ஒப்புக்கொண்டுள்ளது.

5. உயர்நீதி மன்றம், உரிமை வழக்குகளில் அசல் தரப்பு வழக்குகளையும், 'ரிட்' வழக்குகளையும் விசாரணை செய்யும் அதிகாரம் பெற்றதாகும். உரிமை வழக்குகளிலும், குற்றவியல் வழக்குகளிலும் மேல் முறையீடுகளை விசாரிக்கும் அதிகாரம் இதற்கு உண்டு. சென்னை மாநகருக்குள் ரூ. 1,00,000-க்கு அதிகமான மதிப்புள்ள அசல் தரப்பு வழக்குகளை சென்னை உயர்நீதிமன்றம் விசாரணை செய்கிறது. தலைமை நீதிபதி, ஏனைய நீதிபதிகளுக்குப் பணிகளை பிரித்து வழங்குகிறார்,



தலைமை நீதிபதியின் ஊதியமும் பிற நீதிபதிகளின் ஊதியமும், இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின்படி வரையறுக்கப்படுகிறது. அவர்களுடைய பணி நிலைமைகள் உயர் நீதிமன்ற நீதிபதிகளின் (பணி நிலைமைகள்) சட்டத்திற்குட்பட்டவையாகும்.

6. பதிவாளர், உயர்நீதிமன்ற அலுவலகத்தின் நிருவாகத் தலைவர் ஆவார். இவருக்கு உதவியாகப் பல அதிகாரிகள் உள்ளனர்; அதாவது கூடுதல் பதிவாளர், மாஸ்டர், துணைப் பதிவாளர்கள், நீதிமன்றம் நியமித்த கணக்கு ஆய்வாளர், வழக்குகளை வகைப்படுத்தும் தனி அதிகாரி, உதவிப் பதிவாளர்கள், நிருவாக அதிகாரிகள், முதுநிலை கணக்கு அதிகாரி ஆகியோர் உள்ளனர்.

உயர்நீதிமன்ற அலுவலகம் பல பிரிவுகளைக் கொண்டது. அவை நிருவாகத் துறை, நூலகம், அசல் தரப்பு வழக்குப் பிரிவு, மேல் முறையீட்டுத் தரப்பு வழக்குப் பிரிவு, நொடிப்பு நிலை வழக்குப் பிரிவு, உச்ச நீதிமன்றப் பிரிவு, குற்றவியல் வழக்குப் பிரிவு, புதுச்சேரி பிரிவு, நீதிமன்ற அதிகாரிகள் பிரிவு, மேல் முறையீடுகள் பரிசீலனையாளர்கள் பிரிவு, மாண்புமிகு நீதிபதிகளுக்கான நேர்முக உதவியாளர்கள் பிரிவு, மொழி பெயர்ப்பு மற்றும் அச்சுத்துறைப் பிரிவு, நகல் எடுப்போர் பிரிவு, வரவு-செலவுத் திட்டப் பிரிவு மற்றும் ஆவணப் பிரிவு ஆகியவைகளாகும்.

புதுச்சேரி (மத்திய அரசின் நேரடி ஆட்சிப் பகுதி) தொடர்பான வழக்குகளை விசாரணை செய்யும் அதிகாரமும் உயர்நீதிமன்றத்திற்குரியதாகும். புதுச்சேரி தொடர்பான வழக்குகளை உயர்நீதிமன்றத்தில் கவனிக்கும் அதிகாரிகள், பணியாளர் ஆகியோர் குறித்த செலவினை தமிழ்நாடு அரசு முதலில் ஏற்றுக் கொள்கிறது. பின்னர், புதுச்சேரி அரசு அத்தொகையைத் திருப்பிச் செலுத்துகிறது.

நீதி வழங்குவதோடு, மாநில நீதித்துறையின் நிருவாகத்திற்கும் உயர்நீதிமன்றம் முழு பொறுப்பு வகிக்கிறது.

7. **சட்ட அதிகாரிகள்.**—மாநகரிலும், வெளியூர்களிலும் உள்ள சட்ட அதிகாரிகள், அரசு சார்பில் உச்ச நீதிமன்றத்தில் வழக்காட நியமிக்கப்பட்டுள்ள வழக்குரைஞர் குறித்த செலவுகளையும் வழக்கு தாக்கல் செய்வது தொடர்பான செலவுகள் உட்பட அரசு உரிமையியல் வழக்குரைஞர்களால் செய்யப்படுகிற செலவுகளையும் செய்வதற்கு இத்தலைப்பின் கீழ் நிதி ஒதுக்கப்படுகிறது. உயர்நீதி மன்றத்தில் மாநில தலைமை வழக்குரைஞர் ஒருவரும் அரசு உரிமையியல் வழக்குரைஞர் ஒருவரும் உள்ளனர். அரசு உரிமையியல் வழக்குரைஞர் தவிர, 8 கூடுதல் அரசு உரிமையியல் வழக்குரைஞர்களும் 28 அரசு வழக்குரைஞர்களும் (உரிமையியல்), இரு அரசு உரிமையியல் சிறப்பு வழக்குரைஞர்களும், உரிமையியல் வழக்குகளைக் கவனித்து வருகின்றனர்.

குற்றவியல் வழக்குகளைப் பொறுத்த மட்டில், ஒரு குற்றவியல் அரசு வழக்கு நடத்துனர் உள்ளார். குற்றவியல் அரசு வழக்கு நடத்துநர் ஒருவரைத் தவிர, இரு கூடுதல் அரசு வழக்கு நடத்துநர்கள், மூன்று அரசு வழக்குரைஞர்கள் (குற்றவியல்) உயர்நீதி மன்றத்தில் உள்ளனர். இவர்களைத் தவிர. மாநகர் அரசு வழக்கறிஞர், மாநகர் அரசு கூடுதல் வழக்கு நடத்துநர்கள். மாநகர அரசு வழக்கு நடத்துநர், மாநகர் அரசு கூடுதல் வழக்கு நடத்துநர்கள், அரசு உதவி வழக்கு நடத்துநர்கள்; நிலை-I, நிலை-II ஆகியோரும் உள்ளனர்.

வெளியூர்களில் ,அரசு வழக்குரைஞர்களும், அரசு வழக்கு நடத்துநர்களும் உள்ளனர். அவர்கள் பதவிக்கால அடிப்படையில் நியமிக்கப்படுகின்றனர். மேலும், அரசு உதவி வழக்குநடத்துநர்கள் நிலை-I, நிலை-II ஆகியோரும் உள்ளனர். இவர்கள் நிரந்தர காலச் சம்பள ஏற்ற முறையில் சம்பளம் பெறும் முழு நேர அதிகாரிகள் ஆவர். மாவட்ட முன்சீப் நீதிமன்றங்களிலும், சார்நிலை நீதிமன்றங்களிலும் அரசுப் பணியாற்றுவதற்காக வழக்குரைஞர்கள் நியமிக்கப்படுகின்றனர். அவர்கள் ஆற்றும் பணியைப் பொறுத்து அவர்களுக்கு அனுமதிக்கப்பட்ட கட்டணம் வழங்கப்படுகிறது. அவர்கள் வழக்குரைஞர் அமர்த்துக் கட்டணம் பெற இயலாது. சட்ட அதிகாரிகளுக்கு வழங்கப்படும் அனுமதிக்கப்பட்ட கட்டணங்கள், சம்பந்தப்பட்ட துறையின் வரவு-செலவுத் திட்டத் தலைப்பில் பற்று எழுதப்படுகின்றன. அவர்கள் ஆற்றும் பணியைப் பொறுத்து அவர்களுக்கு அனுமதிக்கப்பட்ட கட்டணத்திற்கு அரசினால் அல்லது சம்பந்தப்பட்ட துறைத் தலைவரால் ஒப்புதல் அளிக்கப்படுகிறது.

8. **குற்றவியல் அரசு உதவி வழக்கு நடத்துநர்கள்.**—மாநகரிலும், வெளியூர்களிலும் உள்ள குற்றவியல் உதவி வழக்கு நடத்துநர்கள் (நிலை-I, நிலை-II) மாஜிஸ்ட்டிரேட் நீதிமன்றங்களிலுள்ள வழக்குகளைக் கவனிக்கின்றனர். அவர்கள் 1973 ஆம் ஆண்டு குற்றவியல் நடைமுறை சட்டக் கோவையின் 25 ஆம் பிரிவின் கீழ் (மத்தியச் சட்டம் 2-1974) மாநில அரசால் நியமிக்கப்படுகின்றனர். இவர்கள் முறையான சம்பள விகிதம் பெறும் முழு நேர அரசு பணியாளர்களாவர். குற்றவியல் நீதிமன்றங்களின் வழக்குகளில் விசாரணையை விரைவுபடுத்த வேண்டுமென்றல் நோக்குடன் ,ஒவ்வொரு குற்றவியல் நீதிமன்றத்திற்கும், குற்றவியல் உதவி வழக்கு நடத்துநர் (நிலை IL) ஒருவரை அரசு நியமித்துள்ளது.

அரசு குற்றவியல் உதவி வழக்கு நடத்துநர்களை மேற்பார்வை செய்வதற்கும், கண்காணிப்பதற்கும், தற்போது துறைத் தலைவர் யாருமில்லை. நிருவாக வசதிக்காக, வெளியூர்களிலுள்ள குற்றவியல் உதவி வழக்கு நடத்துநர்கள் மாவட்ட ஆட்சியர்களின் நிருவாகக் கட்டுப்பாட்டின் கீழும், சென்னை மாநகரிலுள்ள குற்றவியல் உதவி வழக்கு நடத்துநர்கள் சென்னை மாநகர காவல் துறை ஆணையரின் நிருவாகக் கட்டுப்பாட்டின் கீழும் உள்ளனர்.



9. பல்வேறு அரசுத் துறைகள் சார்பில் உரிமையியல் வழக்குகளைத் தாக்கல் செய்வதற்காக நீதிமன்ற முத்திரைத்தாள் வாங்கும் வகையில் கணிசமான தொகையை அரசு உரிமையியல் வழக்குரைஞர் செலவிடுகிறார். மேற்சொன்ன செலவு, தற்போது '' 2014. நீதி நிருவாகம்-114. சட்ட ஆலோசகர்கள், வழக்குரைஞர்கள்-ஏ.பி. அரசு உரிமையியல் வழக்கறிஞர்-05. அலுவலகச் செலவுகள் '' என்பதன் கீழ் பற்று வைக்கப்படுகிறது.

1991—92 ஆம் ஆண்டில் '' சட்ட அதிகாரிகள் '' என்ற தலைப்பின் கீழ் ஆகக்கூடிய மொத்த செலவுத் தொகை ரூ. 2,28,06,000 என்று மதிப்பிடப்படுகிறது. மேற்குறிப்பிட்ட செலவில் வெளியூரிலுள்ள I, II ஆம் நிலை குற்றவியல் உதவி வழக்கு நடத்துநர்களின் சம்பளமும், படியும் அவர்களது பணியாளர்களின் சம்பளமும் படியும் அடங்கும். மாவட்ட ஆட்சித் தலைவர்களின் நிருவாகக் கட்டுப்பாட்டின் கீழுள்ள சட்ட அதிகாரிகள் (வெளியூர்), அதாவது I, II ஆம் நிலை குற்றவியல் அரசு உதவி வழக்கு நடத்துநர்கள் தொடர்பான செலவு, 1981—82-ம் ஆண்டு முதல் '' 114. சட்ட ஆலோசகர்கள், வழக்குரைஞர்கள் '' என்ற தலைப்பின் கீழ் காட்டப்பட்டு வருகிறது.

10. **தலைமை ஆட்சியாளர்—பொறுப்பு சொத்தாட்சியர், சென்னை.**—சென்னை தலைமை ஆட்சியாளர்—பொறுப்பு சொத்தாட்சியர், மாவட்ட நீதிபதி பதவித் தரத்தில் உள்ள ஓர் அதிகாரியாவார். அவருக்கு உதவியாக, துணைத் தலைமை ஆட்சியாளர்—பொறுப்பு சொத்தாட்சியர் ஒருவர் உள்ளார். இவ்விரு அதிகாரிகளும், முதிராவயதினர் Minor சொத்துக்கள், மரணமடைந்தவர்களின் எஸ்டேட்டுகள் ஆகியவற்றை கவனித்து வருகின்றனர். அவர்கள், தலைமை ஆட்சியாளர் சட்டத்திலும், பொறுப்பு சொத்தாட்சியர் சட்டத்திலும் உள்ள விதித்துறைகளுக்கு இணங்க அவர்களிடம் ஒப்படைக்கப்படும்—கடமைகளை நிறைவேற்றி வருகின்றனர். இவ்வதிகாரிகளுக்குத் தொழில் நுட்ப முறையில் உதவி செய்வதற்காக உதவிப் பொறியாளர் ஒருவர் உள்ளார். பட்டயக் கணக்கர் கல்வித் தகுதியுடைய சிறப்பு கணக்கர் பதவி ஒன்றும் இவ்வலுவலகத்தில் உள்ளது.

1991-92 ஆம் ஆண்டிற்கு இத்தலைப்பின் கீழ் ரூ. 9,88,000 செலவாகுமென மதிப்பிடப்படுகிறது.

11. **பெருநகர் மாஜிஸ்ட்டிரேட் நீதிமன்றங்கள்.**— சென்னை மாநகரில், பெருநகர் தலைமை மாஜிஸ்டிரேட் நீதிமன்றம்,, பெருநகர் கூடுதல் தலைமை மாஜிஸ்டிரேட் நீதிமன்றம் உட்பட

25 பெருநகர் மாஜிஸ்ட்ரேட் நீதிமன்றங்கள் செயற்பட்டு வருகின்றன. மாநகர மாஜிஸ்டிரேட்டுகள் இருவர், நடமாடும் நீதிமன்றங்கள் இரண்டில் மாஜிஸ்டிரேட்டுகளாக பணியாற்றுகின்றனர். பெருநகர் தலைமை மாஜிஸ்டிரேட் மாவட்ட நீதிபதி பதவித் தரத்தைச் சேர்ந்தவராவார். பெருநகர் கூடுதல் தலைமை மாஜிஸ்டிரேட், சார்நிலை நீதிபதி பதவித் தரத்தைச் சேர்ந்தவராவார். பொருளாதாரக் குற்றங்கள் குறித்து விசாரணை நடத்த, மாவட்ட நீதிபதிகள் பதவித் தரத்தில் கூடுதல் தலைமைப் பெருநகர் மாஜிஸ்டிரேட் பதவிகள் இரண்டும் உள்ளன. இரண்டாம், மூன்றாம், நான்காம், பத்தாம், பதினொன்றாம் பெருநகர் மாஜிஸ்டிரேட்களும் சார்நிலை நீதிபதிகள் பதவித் தரத்தைச் சேர்ந்தவர்களாவர். ஏனைய அனைத்துப் பெருநகர் மாஜிஸ்டிரேட்டுகளும் மாவட்ட முன்சீப் பதவித் தரத்தைச் சேர்ந்தவராவர். பெருநகர் மாஜிஸ்டிரேட்கள் சென்னை மாநகர் காவல் நிலையங்களில் பதிவு செய்யப்படும் வழக்குகளை விசாரிக்கும் அதிகாரமுடையோராவர்.

1991-92 ஆம் ஆண்டில் சென்னை மாநகரிலுள்ள பெருநகர் மாஜிஸ்டிரேட் நீதிமன்றங்கள் தொடர்பாக ஏற்படும் செலவு ரூ. 74,42,000 ஆக இருக்குமென மதிப்பிடப்படுகிறது.

12. **மாநகர் சிவில் நீதிமன்றம், சென்னை**— சென்னை மாநகர் சிவில் நீதிமன்றத்தில் 26 நீதித்துறை அதிகாரிகள் (8 மாவட்ட நீதிபதிகள், 18 சார் நிலை நீதிபதிகள்) பணிபுரிகின்றனர். மாநகர் சிவில் நீதிமன்றத்தில், மாவட்ட முன்சீப் பதவித் தரத்தில் தனியாக ஒரு பதிவாளர் பதவி உள்ளது. இவர் நிருவாகத்திற்கு பொறுப்பு வகிக்கிறார். மாநகர் சிவில் நீதிமன்றத்தில் அதிகார வரம்பு, சென்னை மாநகர் முழுவதுமாகும். சென்னை மாநகர் சிவில் நீதிமன்றம், ரூபாய் 1,00,000 வரை பண அதிகார வரம்பையும் ரூ. 30,000 வரை மேல் முறையீட்டு அதிகார வரம்பையும் கொண்டுள்ளது. சென்னை மாநகர் சிவில் நீதிமன்றம் ,சென்னை மாநகர் செஷன்ஸ் நீதிமன்றமாகவும் செயற்பட்டு வருகிறது. குற்றவியல் சட்டத்திருத்தச் சட்டத்தின் கீழ் பட்டியலிடப்பட்ட வழக்குகளை Calender cases விசாரிக்கும் தனி நீதிபதிகளுக்கான அதிகாரம், சென்னை மாநகர் சிவில் நீதிமன்றத்தில் மாவட்ட நீதிபதி பதவித் தரத்தைச் சேர்ந்த சில நீதிபதிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது.

மாநகர் சிவில் நீதிமன்றங்கள் தொடர்பாக 1991—92 ஆம் ஆண்டிற்கு மொத்தம் ரூ. 96,64,000 செலவாகுமென்று மதிப்பிடப்படுகிறது.

13. **மாவட்டங்களிலுள்ள சிவில் நீதிமன்றங்கள்.**— இம்மாநிலத்தில் 17 மாவட்ட நீதிமன்றங்கள் உள்ளன. கோயம்புத்தூர் தென் ஆற்காடு (கடலூர்), இராமநாதபுரம், வட ஆற்காடு அம்பேத்கார் (வேலூர்), மதுரை பெரியார் (ஈரோடு) ஆகிய



மாவட்டங்கள் ஒவ்வொன்றிலும் கூடுதல் மாவட்ட-செஷன்ஸ் நீதிமன்றங்கள் அமைந்துள்ளன. சேலம், திருச்சிராப்பள்ளி, திருநெல்வேலி கட்டபொம்மன் ஆகிய மாவட்டங்கள் ஒவ்வொன்றிலும் கூடுதல் மாவட்ட நீதிபதி நீதிமன்றங்கள் இரண்டு உள்ளன. மாவட்ட நீதிபதிகளே அந்தந்த கோட்டங்களின் செஷன்ஸ் நீதிபதிகளாக செயல்படுகின்றனர். தொழிலாளர் காப்புறுதிச் சட்டம், எஸ்டேட் ஒழிப்புச் சட்டம், மோட்டார் வண்டிகள் சட்டம் போன்ற சில தனிச் சட்டங்களின் கீழ் சிறப்பு நடுவர் மன்றங்களாகவும் இந்த நீதிபதிகள் பணியாற்றுகின்றனர். சம்பந்தப்பட்ட கோட்டங்களில் சார்நிலை சிவில் நீதிமன்றங்களையும் நீதித்துறைத் தலைமை மாஜிஸ்டிரேட் நீதிமன்றங்களையும் மாவட்ட நீதிபதிகள் ஆய்வு செய்கின்றனர். மதுரை கோயம்புத்தூர், திருச்சிராப்பள்ளி ஆகிய மாவட்ட நீதிபதிகள அடுத்துள்ள மூன்று அல்லது அதற்கும் அதிகமான மாவட்டங்களில் குற்றவியல் சட்டத்திருத்தச் சட்டத்தின் கீழ் வரும் வழக்குகளை விசாரணை செய்யும் அதிகார வரம்பு கொண்ட சிறப்பு நீதிபதிகளாகச் செயல்படுகின்றனர். இந்நீதிபதிகள் ரூ. 30,000 வரையிலும் சிவில் மேல் முறையீட்டு அதிகார வரம்பு கொண்டவர்களாயுள்ளனர்.

மேலும் இன்றியமையாப் பொருட்கள் சட்டத்தின் கீழ் வழக்குகளை விசாரணை செய்வதற்காக, மாவட்ட-செஷன்ஸ் நீதிபதி பதவித் தரத்தில் ஆறு சிறப்பு நீதிமன்றங்களை சென்னை தஞ்சாவூர், புதுக்கோட்டை, மதுரை, கோயம்புத்தூர், சேலம் ஆகிய இடங்களில் அமைக்க அரசு 1982 ஆம் ஆண்டு ஆகஸ்டு மாதம் அனுமதி வழங்கியுள்ளது. இது தொடர்பான செலவு "2014 நீதி நிருவாகம்" என்ற கணக்குத் தலைப்பின் கீழ் "108-ஏ குற்றவியல் நீதிமன்றங்கள்" என்பதில் பற்று எழுதப்படுகிறது.

மத்திய அரசு தெரிவித்த யோசனையின் அடிப்படையில், இந்த அரசு, சென்னை உயர்நீதிமன்றத்துடன் கலந்தாலோசனை செய்த பின்னர் ,உள் துறையின் (நீதிமன்றங்கள்-பி) 29-1-1990 ஆம் நாளிட்ட 219 எண் அரசாணையில், 1989 ஆம் ஆண்டு ஆதி திராவிடர்-பழங்குடியினர் (அட்டூழியங்களைத் தடுத்தல்) சட்டத்தின் (மத்திய சட்டம் 33/1989) 14 ஆம் பிரிவின் கீழ் சென்னையிலுள்ள முதன்மை செஷன்ஸ் நீதிமன்றம் உட்பட ஒவ்வொரு மாவட்டத்திலுமுள்ள செஷன்ஸ் நீதிமன்றங்களை 30-1-1990 ஆம் நாளிலிருந்து, அவற்றின் செஷன்ஸ் கோட்டங்களை உள்ளடக்கிய அதிகார வரம்பெல்லைக்கு உட்பட்ட பகுதிகளில் ஆதி திராவிடர்-பழங்குடியினருக்கு எதிராக இழைக்கப்படும் அட்டூழியங்களை விசாரிக்கும் சிறப்பு நீதி மன்றங்களாகச் செயற்படும் எனக் குறிப்பிட்டுள்ளது, அரசு. உணவு-நுகர்வோர் பாதுகாப்புத் துறையின் 30-6-1988 ஆம் நாளிட்ட 879 ஆம் எண் அரசாணையில், தமிழ்நாடு 1988 ஆம் ஆண்டு நுகர்வோர்

பாதுகாப்பு விதிகளை இயற்றியுள்ளது. இன்றியமையாப் பொருள்கள் சட்ட வழக்குகள் குறித்த சிறப்பு நீதிமன்றங்களின் நீதிபதிகள் மற்றும் மாவட்ட நீதிபதிகள், மாவட்ட நுகர்வோர் பிரச்சினைகளைத் தீர்க்கும் அமைப்புகளுக்குத் தலைமை வகிக்க அதிகாரம் அளிக்கப்பட்டுள்ளனர்.

14. **சார்நிலை நீதிமன்றங்கள்.**— இம்மாநிலத்தில் 66 சார்நிலை நீதிமன்றங்கள் (Sub Courts) உள்ளன. இவற்றில், கோயம்புத்தூர், மதுரை ஆகிய இரு இடங்களிலுள்ள விற்பனை வரி மேல் முறையீட்டு நடுவர் மன்றக் கூடுதல் ஆயங்களைச் சேர்ந்த நீதிபதி பதவிகள் இரண்டும் அடங்கும். சார்நிலை நீதிபதிகள் அசல் தரப்பு வழக்குகளில், வரம்பேதுமின்றி வழக்குகள் அனைத்தையும் விசாரிக்கும் அதிகாரம் உடையவராவர். இவர்களுடைய அதிகார வரம்பு பற்றி சிவில் நீதிமன்றங்கள் சட்டத்தில் விளக்கிக் கூறப்பட்டுள்ளது. இவர்கள் 15,000 ரூபாய் வரை மதிப்புடைய பண வழக்குகளை விசாரிக்கும் அதிகாரம் உள்ள மாவட்ட முன்சீப்புகள் வழங்கும் தீர்ப்புகளுக்கெதிராகச் செய்யப்படும் மேல் முறையீடுகளையும் விசாரித்துத் தீர்ப்பு வழங்கும் அதிகாரமுடையவராவர். சார்நிலை நீதிபதிகளே செஷன்ஸ் உதவி நீதிபதிகளுமாவர். மேலும் தற்போது சார்நிலை நீதிமன்றங்கள் அனைத்தும் மோட்டார் வண்டி விபத்து கோரிக்கை நடுவர் மன்றங்களாக அமைக்கப்பட்டுள்ளன; 10 ஆண்டுகள் நீதித்துறையில் பணியாற்றிய அனுபவமுள்ள சார்நிலை நீதிபதிகளே மோட்டார் வண்டி விபத்து உரிமைக் கோரிக்கை நடுவர் மன்றங்களாகவும் செயல்படுவதுடன் இந் நடுவர் நீதிமன்றங்களின் நீதிபதிகளாகவும் பணியாற்றுகின்றனர்.

15. **மாவட்ட உரிமையியல் நீதிமன்றங்கள்.** — District Munsif Court .—இம்மாநிலத்தில் 127 மாவட்ட உரிமையியல் நீதிமன்றங்கள் உள்ளன. இவற்றோடு மாவட்ட உரிமையியல் நீதித்துறை மாஜிஸ்டிரேட் நீதிமன்றங்கள் 8 உள்ளன. 1981ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 7 ஆம் நாளிலிருந்து ரூ. 15,000 வரையிலும் பண வழக்குகளை விசாரித்து தீர்ப்பு வழங்கும் அதிகாரத்தை மாவட்ட உரிமையியல் நீதிபதிகள் பெற்றுள்ளனர். மாவட்ட உரிமையியல் நீதிமன்றம் ஒவ்வொன்றும் வரையறுக்கப்பட்ட அதிகார வரம்பைக் கொண்டுள்ளன. இவை ரூ. 500 வரை சிறு வழக்கு அதிகார வரம்பையும் செலுத்துகின்றன. மேலும் இந்நீதிபதிகள் அவர்களுடைய அதிகார வரம்பிற்குட்பட்ட பகுதிகளில் வாடகைக் கட்டுப்பாட்டு அதிகாரிகளாகவும் செயல்படுகின்றனர்.

நகலெடுப்போர், நீதிமன்றக் கட்டளைகளைச் சார்வு செய்வோர் ஆகிய பணியாளர் அமைப்புகள் உட்பட வெளியூர்களிலுள்ள மாவட்ட நீதிமன்றங்கள், சார்நிலை நீதிமன்றங்கள், மாவட்ட உரிமையியல் நீதிமன்றங்கள் ஆகியவை தொடர்பாக 1991—92 ஆம் ஆண்டில் 15,41,76,000 ரூபாய் செலவு ஏற்படு



மென்று மதிப்பிடப்படுகிறது. இச்செலவில் அதிகாரிகளின் சம்பளம், படிகள், அரசுப் பணி அஞ்சல் வில்லைகள், கட்டண வீதங்கள், வரிகள், வாடகைகள், அலுவலகச் செலவுகள், புத்தகங்கள், குறித்த கால வெளியீடுகள், மின் கட்டணம், தொலை பேசிக் கட்டணம், அறைகலன்கள் போன்றவையும் செஷன்ஸ் நீதிமன்றங்கள் முதலியவற்றில் சாட்சியம் அளிக்க வரும் சாட்சிகளுக்கு வழங்கத்தக்க உணவு, போக்குவரத்துக் கட்டணம் முதலிய சில்லறைச் செலவுகளும் அடங்கும்.

16. சென்னை, மதுரை, கோயம்புத்தூர் ஆகிய இடங்களிலுள்ள தொழிலாளர் நல நீதிமன்றங்கள்.— சென்னையில் நான்கு, மதுரையில் இரண்டு, கோயம்புத்தூரில் ஒன்று என மொத்தம் ஏழு தொழிலாளர் நல நீதிமன்றங்கள் செயல்பட்டு வருகின்றன. தொழிலாளர் நலன்— வேலை வாய்ப்புத் துறையின் 23-2-1990 ஆம் நாளிட்ட 279 ஆம் எண் அரசாணையில் வேலூர், சேலம், திருச்சிராப்பள்ளி ஆகிய இடங்களில் தொழிலாளர் நல நீதிமன்றங்களை அமைப்பதற்கும், சென்னையிலுள்ள III கூடுதல் தொழிலாளர் நல நீதிமன்றத்தை கடலூருக்கு மாற்றவும் மதுரையிலுள்ள கூடுதல் தொழிலகளர் நல நீதிமன்றத்தை திருநெல்வேலிக்கு மாற்றவும் ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது. மாநிலம் முழுவதிலும் அதிகார வரம்பைச் செலுத்தும் தொழில் நடுவர் மன்றம் ஒன்றும் சென்னையில் உள்ளது. தொழிலாளர் நல நீதிமன்றங்கள், தொழில் நடுவர் மன்றம் ஆகியவற்றின் நீதிபதிகள் மாவட்ட நீதிபதி பதவித் தரத்தைச் சேர்ந்தவர்களாவர். அரசு அனுப்புகின்ற தொழில் தகராறுகள் குறித்தும் சம்பந்தப்பட்ட தரப்பினர் தாக்கல் செய்யும் கோரிக்கை மனுக்கள் குறித்தும் தொழிலாளர் நல நீதிமன்றங்கள் விசாரணை செய்து தீர்ப்பு வழங்குகின்றன.

தொழிலாளர் நல நீதிமன்றங்கள், தொழில் நடுவர் நீதி மன்றம் ஆகியவற்றின் நீதிபதிகள் அனைவரும் முகாம் அதிகாரிகள் ஆவர். அவர்கள் அனைவரும் முகாம் நீதிமன்றங்களை அமைத்து, அவரவர் அதிகார வரம்பிற்குட்பட்ட பகுதிகளில் எழும் தொழிலாளர் தகராறுகளையும் கோரிக்கை மனுக்களையும் விசாரித்து தீர்வு செய்கின்றனர்.

தொழிலாளர் நல நீதிமன்றங்கள் தொடர்பாக ஏற்படும் செலவு கோரிக்கை எண். 13-ன் கீழ் " 2230. தொழிலாளர் நலன்-வேலை வாய்ப்பு-01. தொழிலாளர்-101. தொழில் உறவு -I. திட்டத்தில் சேராதது-ஏ.சி. சென்னை, மதுரை, கோயம்புத்தூர் ஆகிய இடங்களிலுள்ள தொழிலாளர் நல நீதிமன்றங்கள்" என்ற தலைப்பின் கீழ் பற்று எழுதப்படுகிறது.

தொழிலாளர் நல நீதிமன்றங்கள், சென்னை தொழில் நடுவர் மன்றம் ஆகியவை தொடர்பாக 1991-92 ஆம் ஆண்டில் மொத்தம் 26,45,000 ரூபாய் செலவு ஏற்படுமென்று மதிப்பிடப்படுகிறது.

17. சிறு வழக்கு நீதிமன்றம், சென்னை.—மாவட்ட நீதிபதி பதவித் தரத்தைச் சேர்ந்த நீதிபதியே இந்த நீதிமன்றத்தின் தலைமை நீதிபதியாவார். சார்நிலை நீதிபதி (Sub Judge) பதவித் தரத்தைச் சேர்ந்த 7 நீதிபதிகளும், மாவட்ட முன்சிப் பதவித் தரத்தைச் சேர்ந்த 8 நீதிபதிகளும் உள்ளனர். இந்நீதி மன்றத்தில், மாவட்ட முன்சீப் பதவித் தரத்தைச் சேர்ந்த பதி வாளர் பதவி ஒன்று தனியாக உள்ளது. இப்பதிவாளரே நிருவா கத்திற்கும் பொறுப்பு வகிக்கிறார். குறிப்பிட்ட சில ஆணை நிறைவேற்று மனுக்களை முடிவு செய்தல் போன்ற சில நீதித் துறை அலுவல்களையும் இவர் கவனித்து வருகின்றார். மாநகர் சிறு வழக்கு நீதிமன்றங்கள் சட்டத்தின் கீழ் சிறு வழக்குகளை விசாரிக்கும் அதிகாரத்தை தலைமை நீதிபதியும், துணை நீதிபதி களும் செலுத்துகின்றனர். மோட்டார் வண்டிகள் சட்டத்தின் கீழ் வழக்குகளை விசாரிப்பதற்கென்றே நடுவர் மன்றமாக நீதிபதி கள் V & VI ஆகியோர் பணியாற்றி வருகின்றனர். தமிழ்நாடு கட்டிடங்கள் (குத்தகை-வாடகைக் கட்டுப்பாடு) சட்டத்தின் கீழ் மேல் முறையீட்டு அதிகாரிகளாக நீதிபதிகள் VII & VIII ஆகியோர் பணியாற்றுகின்றனர். IX லிருந்து XV வரையிலான நீதிபதிகள் சென்னை மாநகரத்தில் வாடகைக் கட்டுப்பாடு அதிகாரிகளாகப் பணியாற்றுகின்றனர். தலைமை நீதிபதி மற்றும், II, III, IV, VII, VIII, நீதிபதிகள், வாடகைக் கட்டுப்பாடு, மேல் முறையீடு களை விசாரணை செய்வதற்குரிய அதிகாரம் உடையவராவர். சிறு வழக்குகள் நீதிமன்றம் தொடர்பாக, 1991—92 ஆம் ஆண்டில் 50,27,000 ரூபாய் செலவு ஏற்படும் என்று மதிப்பிடப் படுகிறது.

மேற்கூறிய செலவுத் தொகையில், முன்னாள் ஜமீன் எஸ்டேட் டுகள், இனாம் எஸ்டேட்டுகள் ஒழிப்பு குறித்து இழப்பீட்டுத் தொகையைப் பங்கிட்டுப் பகிர்ந்தளிக்கும் பணிக்காக, திருச்சிராப் பள்ளியிலும், இராமநாதபுரத்திலும் உள்ள நடுவர் மன்றம் தொடர்பாக இந்தச் சிறு தலைப்பின் கீழ் ஏற்படும் 90,000 ரூபாய் செலவுத் தொகையும் அடங்கும்.

18. மாவட்டங்களிலுள்ள குற்றவியல் நீதிமன்றங்கள் : (i) நீதித்துறை தலைமை மாஜிஸ்ட்டிரேட் நீதிமன்றங்கள்.—இம் மாநிலத்தில் நீதித்துறை தலைமை மாஜிஸ்ட்டிரேட் நீதிமன்றங் கள் 14 உள்ளன. இவற்றுடன், கும்பகோணத்தில் ஒன்றும் கன்னியாகுமரியில் ஒன்றுமாக நீதித்துறை கூடுதல் தலைமை மாஜிஸ்ட்டிரேட் நீதிமன்றங்கள் உள்ளன. பொருளாதார குற்றங்களை விசாரணை செய்ய மதுரையில் கூடுதல் தலைமை நீதித்துறை மாஜிஸ்ட்டிரேட் ஒருவர் உள்ளார். இதற்காக தரும புரி மாவட்டத்தில் கிருஷ்ணகிரியில் கூடுதல் தனி நீதிபதி ஒருவர் உள்ளார். இந்நீதிமன்றங்களிலுள்ள நீதிபதிகள் சார்நிலை நீதிபதி பதவித் தரத்தைச் சேர்ந்தவர்களாவர். நீதித்துறைத் தலைமை மாஜிஸ்ட்டிரேட்டுகள் தங்கள் மாவட்டங்களிலுள்ள குற்றவியல்



சார்நிலை நீதிமன்றங்களை ஆய்வு செய்கின்றனர். நீதித் துறை தலைமை மாஜிஸ்ட்டிரேட்டுகள் தங்களுடைய நிருவாகப் பணியோடு, 1973 ஆம் ஆண்டு குற்றவியல் நடைமுறைச் சட்டக் கோவையின் விதித்துறைகளின் கீழ், மாவட்ட-செஷன்ஸ் நீதிபதி களின் முன் தாக்கல் செய்யப்படும் மேல் முறையீடுகள் அவர்களால் மேற்கூறிய நீதித்துறை தலைமை மாஜிஸ்ட்டிரேட்டுகளுக்கு அனுப்பி வைக்கப்படும்போது அவற்றை இவர்கள் விசாரணை செய்ய மேற்கூறிய சட்டக் கோவையின் கீழ் அதிகாரம் அளிக்கப் பட்டுள்ளனர்.

(ii) நீதித்துறை மாஜிஸ்ட்டிரேட் நீதிமன்றங்கள் : நீதித் துறை இரண்டாம் வகுப்பு மாஜிஸ்ட்டிரேட் பதவி, நீதித்துறை முதல் வகுப்பு மாஜிஸ்ட்டிரேட் பதவியாக நிலை உயர்த்தப்பட வேண்டுமென்றும், நிலை உயர்த்தப்பட்ட பதவி தமிழ்நாடு மாநில நீதித்துறைப் பணியின் கீழ் மாவட்ட முன்சிப் பதவியுடன் ஒரே பதவியாக ஒருங்கிணைக்கப்பட வேண்டுமென்றும், உள் துறை யின் 31-1-1976 ஆம் நாளிட்ட 202 ஆம் எண்ணில் அரசு ஆணை பிறப்பித்தது.

தமிழ்நாடு மாநில நீதித்துறைப் பணி விதிகளைத் தகுந்த வாறு திருத்தி அரசு உள் துறையின் 6-10-1988 ஆம் நாளிட்ட 2196 ஆம் எண்ணில் ஆணை பிறப்பித்துள்ளது. திருத்த விதிகள் 6-10-1988-லிருந்து செயலுக்கு வந்துள்ளன. உயர்நீதி மன்றம் 31-10-1988 ஆம் நாளிட்ட தன்னுடைய 102/88 ஆம் எண். அறிவிக்கையில் மாவட்ட முன்சீப்புகள், நீதித்துறை முதல் வகுப்பு மாஜிஸ்ட்டிரேட்டுகள், உட்கோட்ட நீதித்துறை மாஜிஸ்ட்டிரேட் டுகள், நீதித்துறை இரண்டாம் வகுப்பு மாஜிஸ்ட்டிரேட்டுகள் ஆகியோருக்கு மாவட்ட முன்சீப் நீதித்துறை மாஜிஸ்ட்டிரேட்டுகள் என மறு பதவிப் பெயர் அளித்துள்ளது. நீதித்துறை மாஜிஸ்ட் டிரேட் நீதிமன்றங்கள் 224 உள்ளன.

வெளியூர்களிலுள்ள குற்றவியல் நீதிமன்றங்கள் அனைத்திற்கும் 1991-92 ஆம் ஆண்டில் 7,19,59,000 ரூபாய் செலவு ஏற்படும் என்று மதிப்பிடப்படுகிறது.

இவை தவிர, இரயிலில் பயணச் சீட்டின்றிப் பயணம் செய்வது போன்ற குற்றங்களை இந்திய இரயில்வே சட்டத்தின் கீழ் விசா ரணை செய்ய இரயில்வே மாஜிஸ்ட்டிரேட் நீதிமன்றங்கள், எழும்பூர் இரயில் நிலையத்தில் ஒன்றும், சென்ட்ரல் இரயில் நிலையத்தில் ஒன்றும் இருப்பதுடன், வட ஆற்காடு அம்பேத்கார், தென் ஆற்காடு, கோயம்புத்தூர், மதுரை, சேலம், தஞ்சாவூர், திருச்சிராப்பள்ளி ஆகிய மாவட்டங்களிலும் இரயில்வே மாஜிஸ் டிரேட் நீதிமன்றங்கள் உள்ளன. இரயில்வே மாஜிஸ்ட்டிரேட் நீதிமன்றங்களுக்குரிய செலவை நீதித்துறையே ஏற்கிறது. மேற் குறிப்பிட்ட நீதிமன்றங்கள் வசூலிக்கும் அபராதத் தொகை, நீதித்துறை மேற்கொண்ட செலவிற்குப் பதிலாக அத்துறைக் கணக்கில் வரவு வைக்கப்படுகிறது.

ஏழாம் நிதிக்குழு நீதித்துறையின் நிலையை உயர்த்துவதற்காக குற்ற வழக்கு நீதிமன்றங்கள் நான்கினை அதாவது நெய்வேலியில் நீதித்துறை இரண்டாம் வகுப்பு மாஜிஸ்ட்டிரேட் நீதிமன்றத்தையும், திருவண்ணாமலை, கோபிசெட்டிப்பாளையம், வள்ளியூர் ஆகிய இடங்கள் ஒவ்வொன்றிலும் ஓர் உட்கோட்ட நீதித்துறை மாஜிஸ்ட்டிரேட் நீதிமன்றத்தையும் ஏற்படுத்துவதற்காக 1979 ஆம் ஆண்டிலிருந்து 1984 ஆம் ஆண்டு வரையிலான கால அளவிற்கு 10.04 இலட்சம் ரூபாயை ஒதுக்கியது. நீதித்துறை, மேற்குறிப்பிட்ட நிதி ஒதுக்கத்தை முழுவதுமாகப் பயன்படுத்தியுள்ளது. அத்துறை மேற்குறிப்பிட்ட கால அளவில் 12,47,439 ரூபாய் செலவிட்டுள்ளது. மேற்குறிப்பிட்ட நான்கு நீதிமன்றங்களுக்கு, மாஜிஸ்ட்டிரேட்டுகள் மாவட்ட முன்சீப் பதவிகள் ஒருங்கிணைப்பு குறித்த அரசு ஆணையின்படி மறு பதவிப் பெயர் கொடுக்கப்பட்டிருக்கிறது. அவை இப்போதும் செயல்பட்டு வருவருகின்றன. அந்நீதிமன்றங்களுக்கான செலவைத் தமிழ்நாடு அரசு 1984-85ஆம் ஆண்டிலிருந்து மேற்கொண்டு வருகிறது.

19. **தனி நீதிமன்றங்கள்.**—1955 ஆம் ஆண்டு சிவில் உரிமைகள் பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் வழக்குகளை விசாரணை செய்வதற்காக, மதுரை, திருச்சிராப்பள்ளி, கும்பகோணம், திருநெல்வேலி ஆகிய இடங்கள் ஒவ்வொன்றிலும் ஒன்று என்ற வகையில் நீத்துறை முதல் வகுப்பு மாஜிஸ்ட்டிரேட் நீதிமன்றங்கள் நான்கிற்கும் உள்துறையின் 13-11-1981 ஆம் நாளிட்ட 2688 ஆம் எண் அரசாணையில் அனுமதி அளிக்கப்பட்டது. மேற்குறிப்பிட்ட நீதிமன்றங்களுக்கான செலவில் 50 சதவீதத் தொகை மத்திய அரசிடமிருந்து பெறத் தக்கதாகும். பொருளாதாரக் குற்றங்களை விசாரணை செய்வதற்கு மூன்று தனி நீதிமன்றங்களை (சென்னையில் இரண்டும், மதுரையில் ஒன்றுமாக) அரசு அமைத்துள்ளது. சிவில் உரிமைகளைப் பாதுகாப்பதற்கான தனி நீதிமன்றங்கள், பொருளாதாரக் குற்றங்களை விசாரணை செய்யும்—தனி நீதிமன்றங்கள் ஆகியவை தொடர்பாக ஏற்படுகின்ற செலவைப் பற்றெழுதுவதற்காக இரண்டு தனியான கணக்குத் தலைப்புகள் தொடர்பாக ஏற்பட்ட செலவு இதற்கு முன்னர் '' குற்ற வழக்கு நீதி மன்றங்கள்'' என்னும் கணக்குத் தலைப்பின் கீழ் பற்றெழுதப்பட்டன. மேற்சொன்ன நீதிமன்றங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. சிவில் உரிமைகள் பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் வழக்குகளை விசாரணை செய்யும் தனி நீதிமன்றங்களுக்காக 1991-92-ம் ஆண்டு வரவு-செலவுத் திட்டத்தில், 9,47,000 ரூபாயும், பொருளாதாரக் குற்றங்களை விசாரணை செய்யும் தனி நீதிமன்றங்களுக்காக 9,56,000 ரூபாயும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. குடும்பத் தகராறுகளைத் தீர்த்து வைக்கும் நீதிமன்றம் ஒன்றை சென்னையில் ஏற்படுத்த அரசு உள் துறையின் 21-9-1988 ஆம் நாளிட்ட 2062 ஆம் எண்ணுள்ள ஆணையில் அனுமதியளித்துள்ளது. இந்நீதிமன்றம் 3-10-1988 முதல் செயல்பட்டு வருகிறது. இந்நீதிமன்றத்திற்கு 1991 ஆம் ஆண்டு, ஏப்ரல் திங்களில், கூடுதல் நீதிபதி ஒருவர் நியமிக்கப்பட்டார். குடும்பத் தகராறு நீதிமன்றம் தொடர்பாக 1991-92 ஆம் ஆண்டில் 11,39,000 ரூபாய் செலவு ஏற்படும் என்று மதிப்பிடப்பட்டுள்ளது.



1987 ஆம் ஆண்டு **பயங்கரவாதிகள்—நாசவேலைகள் (தடுப்பு) சட்டத்தின் கீழ் குறிப்பிட்ட வழக்கை விசாரிப்பதற்கென்றே அமைக்கப்பட்ட நீதிமன்றம்.**— பயங்கரவாத-நாசவேலைகளைத் தடுப்பதற்கும் அவற்றைச் சமாளிக்கவும் அவை தொடர்பான அல்லது உடன் நிகழ்வுகளைத் தடுப்பதற்கெனவும் மத்திய அரசு 1987 ஆம் ஆண்டு பங்கரவாதிகள்-நாசவேலைகள் (தடுப்புச்), சட்டத்தை இயற்றியுள்ளது. மேற்சொன்ன சட்டத்தின் கீழ் தமிழ்நாடு முழுவதிலும் குற்றங்களை விசாரணை செய்வதற்காக சென்னை, உயர்நீதி மன்றத்தின் மாண்புமிகு தலைமை நீதிபதியின் இசைவுடன், சென்னை மாநகர முதல் வகுப்பு கூடுதல் சிவில்-செஷன்ஸ் நீதிமன்றத்தைக் குறிப்பிட்ட வழக்குகளை விசாரணை செய்வதற்கென்றே தனி நீதிமன்றமாக அரசு அமைத்துள்ளது.

20. **தமிழில் சட்ட இதழ்.**—'' தீர்ப்புத் திரட்டு '' என்னும் மாத சட்ட இதழ் ஒன்றைத் தமிழில் உயர்நீதி மன்றம் வெளியிட்டு வருகிறது. மாவட்ட நீதிபதி நிலை II பதவித் தரத்தில் தலைமைப் பதிப்பாசிரியர் ஒருவரும், சார்நிலை நீதிபதி பதவித் தரத்தில் இணைப் பதிப்பாசிரியர் ஒருவரும், உதவிப் பதிப்பாசிரியர்கள், சுருக்கெழுத்துத் தட்டச்சர்கள், தட்டச்சர்கள், படி திருத்துபவர்கள், அலுவலக உதவியாளர்கள் ஆகிய பணியாளர்களை நியமிக்க அரசு அனுமதி அளித்துள்ளது. தமிழ் சட்ட இதழ் தலைமைப் பதிப்பாசிரியர் அலுவலகப் பணியாளர்களுக்கு வழங்கப்படும் சம்பளம், படிகள் குறித்தச் செலவு '' 2014. நிதி நிருவாகம்— 800, ஏனைய செலவு—ஏ.சி. சட்ட இதழ் வெளியிடுதல் '' என்னும் கணக்குத் தலைப்பில் பற்றெழுதப்படுகிறது. 1999-92 ஆண்டுக்கான செலவு ரூ. 6,71,000 என்று மதிப்பிடப்பட்டுள்ளது. தீர்ப்புத் திரட்டு என்னும் சட்டத் தமிழ் (திங்கள்) இதழ், வழக்குரைஞர்களுக்கும், பொதுமக்களுக்கும் ஓர் இதழ் ரூ 5 என்று குறைந்த விலையில் விற்பனைக்கு கிடைக்கிறது.

21. **நீதிமன்றக் கட்டிடங்கள்.**— நீதித்துறையில் உயர்நீதி மன்றக் கட்டிடங்களையும் ஏனைய கட்டிடங்களையும் பராமரிப்பதற்குரிய செலவு 13 ஆம் எண் மானியக் கோரிக்கையில் '' 2059. பொதுப்பணிகள் '' என்கிற கணக்குத் தலைப்பின் கீழ் காட்டப்படுகிறது. 1991-92 ஆம் ஆண்டில் செய்யக் கருதியுள்ள செலவு 66,47,000 ரூபாய்ஆகும்.

[1991 செப்டம்பர், 24

22. 1990-91ஆம் ஆண்டின் (1991 ஜுன் வரை) பின்வரும் இனங்களுக்கான செலவிற்கு அரசு அனுமதி அளித்துள்ளது.

**கட்டிடங்கள் — கட்டுவதற்கான செயற்குறிப்பு.**

(i) உயநீதிமன்றக் கட்டிடத்தின் இரண்டாம் மாடியிலுள்ள நீதிபதிகளின் இரண்டு அறைகளில் தடுப்புக்கு வகை செய்வற் காகவும் கூடுதல் மின் அமைப்புகளை நிறுவுவதற்காகவும் 45,000 ரூபாய்க்கு அனுமதி அளிக்கப்பட்டது.

(ii) சேலத்தில் 3.25 கோடி ரூபாய் மதிப்பீட்டுச் செலவில் படிப்படியாக நிறைவேற்றப்படும் திட்டத்தின் கீழ் நீதிமன்றத் துடன் இணைந்த கட்டிடங்களைக் கட்டுவதற்கு, சென்னை, உயர்நீதி மன்றம் அனுப்பிய செயற்குறிப்புக்கு அரசு, உள்துறை யின் 27-7-1990 ஆம் நாளிட்ட 1764 ஆம் எண். ஆணையில் ஒப்புதல் அளித்துள்ளது. மேற்சொன்ன பணிக்காக, 1990-91ஆம் நிதியாண்டில் 25 இலட்சம் ரூபாய்க்கு அனுமதி அளிக்கப்பட்டது.

(iii) திருச்சிராப்பள்ளி மாவட்டம், ஜெயங்கொண்டம் என்னும் இடத்திலுள்ள நீதித்துறை மாஜிஸ்ட்டிரேட் நீதிமன்றக் கட்டிடத்தில் முக்கியமான பழுதுபார்ப்புப் பணிகளை மேற்கொள் வதற்காக 2.55 இலட்சம் ரூபாய்க்கு (ரூபாய் இரண்டு இலட் சத்து ஐம்பத்தைந்தாயிரம் மட்டும்) அனுமதியளிக்கப்பட்டது.

(iv) திருவண்ணாமலை-சம்புவராயர் மாவட்டத்தில், வந்தவாசியிலுள்ள நீதித்துறை மாஜிஸ்ட்டிரேட் நீதிமன்றத்தில் முக்கியமான பழுது பார்ப்புப் பணிகளை மேற்கொள்வதற்காக 14,000 ரூபாய் அனுமதியளிக்கப்பட்டது.

(v) திருச்சிராப்பள்ளி மாவட்டம், அரியலூரிலுள்ள மாவட்ட முன்சீப் நீதிமன்றக் கட்டிடத்தில் உடனடியாகச் செய்ய பட வேண்டிய அவசியமான பழுதுபார்ப்பு பணிகளை மேற் கொள்ள 1.60 இலட்சம் ரூபாய்க்கு அனுமதியளிக்கப்பட்டது.

(vi) சென்னை, உயர்நீதிமன்றத்தின் மூன்று சிறிய பேருந் துகளை நிறுத்துவதற்கு வசதியாக வண்டிகள் நிறுத்துமிடங்களைக் கட்டுவதற்காக 2.83 இலட்சம் ரூபாய்க்கு அனுமதியளிக்கப் பட்டது.

(vii) சென்னை, உயர்நீதி மன்றத்தில் அடித்தளத்திலுள்ள பல்வேறு அலுவலகங்களில் கூடுதல் மின் அமைப்புகளுக்கும் மின் விசிறிகளுக்கும் வகை செய்வதற்காகவும் இன்கேண்டசன்ட (In candecent) விளக்குகளுக்கு பதிலாக புளோரசன்ட் விளக்குகளைப் பொறுத்துவதற்காகவும் 28,840 ரூபாய்க்கு அனுமதியளிக்கப்பட்டது.

(viii) கும்பகோணத்தில் நீதித் துறை அதிகாரிகளின் குடி யிருப்புகளுக்குக் குடிநீர் வழங்க வகை செய்வதற்காக 55,000 ரூபாய்க்கு அனுமதியளிக்கப்பட்டது.



1991 செப்டம்பர் 24]

(ix) தற்போதுள்ள உயர்நீதி மன்றக் கட்டிடத்திற்கும், புதிய கட்டிடத்திற்கும் இடையிலுள்ள அடித்தளம் மற்றும் முதல் மாடியில் இணைப்புக் கட்டிட வசதிக்கு வகை செய்வதற்கு 10.50 இலட்சம் ரூபாய்க்கு அனுமதியளிக்கப்பட்டது.

(x) 2.50 இலட்சம் ரூபாய் செலவில் உயர்நீதி மன்றக் கூடுதல் கட்டிடங்களின் மூன்று தொகுதிகளின் வெளிப்புற முகப் பில் சிமிட்டி வண்ணப் பூச்சு வேலை செய்வதற்கான பொதுப் பணித்துறை (கட்டிடங்கள்) தலைமை பொறியாளரின் செயற் குறிப்புக்கு அரசு ஒப்புதல் அளித்தது.

(xi) இராணிப்பேட்டையில் அமைக்கக் கருதியுள்ள துணை நீதிமன்றத்திற்கு இடவசதியளிக்க வட ஆற்காடு-அம்பத்கார் மாவட்டம், இராணிப்பேட்டையில் தற்போதுள்ள மாவட்ட முன்சீப் நீதிமன்றக் கட்டிடத்தில் மேம்பாட்டுப் பணிகளையும் அவசியமான பழுது பார்ப்புப் பணிகளையும் மேற்கொள்ள, 1 இலட்சம் ரூபாய்க்கு (ரூபாய் ஒரு இலட்சம் மட்டும்) அனுமதி யளிக்கப்பட்டது.

**அறைக்கலன்கள் (Furniture).**

(i) நீதிமன்றத்தின் கூடங்கள், நீதிபதிகளின் அறைகள் ஆகியவற்றில் பயன் படுத்துவதற்காகவும் சென்னை, உயர்நீதி மன்றத்தின் புதிய நிருவாகத் தொகுதியைச் சேர்ந்த நிருவாக அதிகாரிகள் மற்றும் பணியாளர்கள் ஆகியோர் பயன்படுத்துவதற் காகவும், மேசை நாற்காலிகள் போன்றவற்றை வாங்க 27.91 இலட்சம் ரூபாய்க்கு அனுமதி அளிக்கப்பட்டது.

(ii) விருத்தாசலத்தில் புதிதாகச் கட்டப்பட்ட நீதிமன்றத் துடன் இணைந்த கட்டிடத்தில் இலவசதி அளிக்கபடவுள்ள நீதிமன்றங்களில் பயன்படுத்துவதற்காக, மேசை, நாற்காலிகள் முதலியவற்றை வாங்க, 4.33 இலட்சம் ரூபாய்க்கு அனுமதி அளிக்கப்பட்டது.

(iii) சென்னை மாநகர சிவில் நீதிமன்றத்திலுள்ள நூலகத் திலுள்ள நூலகத்தில் பயன் படுத்துவதற்காக ஐந்து இரும்பு அலமாரிகளையும் பதிவுருக்கள் வைப்பதற்கான மூன்று இருப்பு நிலை அடுக்கங்களையும் (Rack) வாங்க 18,820 ரூபாய்க்கு அனுமதியளிக்கப்பட்டது.

(ix) சென்னை, உயர்நீதிமன்றத்தில் பயன்படுத்துவதற்காக, மின்னோட்டத்தைச் சமன் படுத்தும் சாதனத்துடன் கூடிய மோது ஜெராக்ஸ் 1025 ஜூம்சத் எந்திரங்களை (Zoom Sath Machine) வாங்க 2.15 இலட்சம் ரூபாய்க்கு அனுமதி அளிக்கப்பட்டது.

**23. மதுரையில் உயர்நீதிமன்றத்தில் ஆயம் ஒன்றினை நிறுவுதல்.**—மதுரையில் உயர்நீதிமன்றத்தில் ஆயம் ஒன்றினை நிறுவுவதன் அவசியம் குறித்து 1972 ஆம் ஆண்டிலேயே அரசு பரிசீலித்தது. இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் 246-ம் பிரிவின்படி உயர்நீதிமன்றத்தினை அமைத்து நிருவகிக்கும் அதிகாரம் நாடாளுமன்றத்திற்கு மட்டுமே உரியதாகும். எனவே, இம்மாநிலத்தின் தென் மாவட்டங்களிலுள்ள வழக்கு தொடுக்கும் பொதுமக்கள் தேவையினை நிறைவு செய்யும் வகையில், உயர் நீதிமன்றத்தின் ஆயம் ஒன்றையாவது அல்லது முகாம் நீதிமன்றத்தையாவது அமைப்பதற்கான நடவடிக்கை எடுக்குமாறு 1973 ஆம் ஆண்டிலேயே மத்திய அரசுக்கு இம்மாநில அரசு கடிதம் எழுதியது. மாநிலத் தலை நகரங்கள் தவிர ஏனைய இடங்களில் உயர்நீதிமன்றத்தின் ஆயத்தை அமைப்பது குறித்து அனைத்துக் கூறுகளையும் கண்டறிவதற்காக உச்சநீதிமன்றத்தில் ஓய்வு பெற்ற நீதிபதியான திரு. ஜஸ்வந்த் சிங் என்பவர் தலைமையில் குழு ஒன்றை மத்திய அரசு நியமித்தது. தமிழக அரசின் மேற்படி கோரிக்கையை மத்திய அரசு இக்குழுவின் பரிசீலனைக்கு அனுப்பியது. திரு. ஜஸ்வந்த் சிங் தலைமையிலான குழு 1984-ல் தமிழ்நாட்டிற்கு மூன்று முறை வருகை தந்து இம்மாநில, அரசின் பிரதிநிதிகளுடன் கலந்துரையாடியது. கோயம்புத்தூர், உதகமண்டலம், திருச்சிராப்பள்ளி, தஞ்சாவூர், மதுரை, கொடைக்கானல், திருநெல்வேலி, சென்னை ஆகிய இடங்களில் வசிக்கும் வழக்காடு மக்கள், இதில் ஆர்வமுள்ள மக்கள், நிறுவனங்களின் பிரதிநிதிகள் ஆகியோரின் கருத்துக்களைக் கேட்டறிந்தது. சென்னை உயர் நீதிமன்றத்தின் மாண்புமிகு தலைமை நீதிபதியுடனும் தமிழக அரசின் ஏனைய அதிகாரிகளுடனும் விவாதித்தது. குழு தம்முடைய அறிக்கையை மத்திய அரசிடம் அளித்தது. மத்திய அரசு கமிஷன் அறிக்கையையும் பரிந்துரையையும் தமிழ்நாடு ஆளுநர் முதலமைச்சர், சென்னை உயர்நீதிமன்றத் தலைமை நீதிபதி ஆகியோருக்கு அனுப்பி, சென்னை உயர்நீதிமன்றத் தலைமை நீதிபதியைக் கலந்தாலோசித்துக் குறிப்புரைகளை அளிக்குமாறு மாநில அரசைக் கேட்டுக்கொண்டது. இது குறித்து சென்னை உயர்நீதிமன்றத் தலைமை நீதிபதியுடன் கலந்தாலோசிக்கப்பட்டது மதுரையில் உயர்நீதிமன்றம் ஆயம் ஒன்றை நிறுவுவதற்கான அடிப்படை வசதிகளுக்கு வகை செய்வது பற்றி, சென்னை உயர்நீதி மன்றத்துடனும் சென்னை பொதுப் பணித்துறை தலைமைப் பொறியாளருடனும் கலந்தாலோசித்து அரசு பரிசீலித்து வருகிறது.,

**24. சென்னையில் உச்ச நீதிமன்றத்தின் ஆயம் ஒன்றை நிறுவுதல்.**— இந்திய அரசியல் அமைப்புச் சட்டத்தின் 246 ஆம் பிரிவின்படி உச்சநீதி மன்றத்தினை நிறுவுயல், அமைத்தல், விதிகார வரம்பினை வரையறுத்தல், அதிகாரங்களை நிர்ணயித்தல் ஆகியவை நாடாளுமன்றத்துக்கு மட்டுமே உரிய அதிகாரமாகும். இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின்--130 ஆம் பிரிவின்படி. இந்தியக் குடியரசுத் தலைவரின் ஒப்புதலுடன் இந்தியத் தலைமை நீதிபதி அவ்வப்போது குறிப்பிடக் கூடியவாறு டில்லியில் அல்லது



வேறு இடம் அல்லது இடங்களில் உச்சநீதிமன்றம் கூடும். சென்னை உச்சநீதி மன்றத்தின் ஆயம் ஒன்றை நிறுவுவதற்கு மத்திய அரசின் இசைவினைப் பெற வேண்டியது அவசியமாகும். இது தொடர்பாக விரைவில் முடிவு எடுக்குமாறு மாநில அரசு மத்திய அரசைக் கேட்டுக்கொண்டது. அமைக்கக் கருதியுள்ள உச்சநீதி மன்ற ஆயத்திற்கான கட்டிடங்கள், நீதிபதிகளுக்கான குடியிருப்பு போன்ற தேவையான வசதிகளைச் செய்து தருவதாகவும் இம்மாநில அரசு மத்திய அரசுக்குத் தெரிவித்துள்ளது. இது தொடர்பான செயற் குறிப்பு இந்தியத் தலைமை நீதிபதிக்கு அனுப்பப்பட்டுள்ளதாக மத்திய அரசு 1983 ஆம் ஆண்டு, ஜூன் திங்களில் இம்மாநில அரசுக்கு தெரிவித்தது. சென்னையில் உச்சநீதி மன்றத்தின் ஆயத்தை நிறுவுவதற்கு உச்சநீதிமன்ற நீதிபதிகள் ஆதரவளிக்கவில்லை என்று 1989 மார்ச்சு திங்களில் மத்திய அரசு தெரிவித்தது. இருப்பினும், இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் 246 ஆம் பிரிவின் கீழ் சென்னையில் உச்ச நீதிமன்ற ஆயத்தை விரைவில் நிறுவ, மத்திய அரசு இசைவளிக்கும்படி 1989 ஜூலைத் திங்களில் தமிழ்நாட்டின் முன்னாள் முதலமைச்சர் கேட்டுக் கொண்டார். இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் 130 ஆம் பிரிவின்படி உச்ச நீதிமன்ற ஆயத்தை நிறுவுவது தொடர்பாக இந்தியத் தலைமை நீதிபதியின் கருத்துக்களை அறிந்து தெரிவிக்கும்படி இந்திய உச்சநீதிமன்றப் பதிவாளரிடம் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது என்று 1989 நவம்பர் திங்களில் மத்திய அரசு தெரிவித்தது. இது மத்திய அரசு, உச்சநீதிமன்றம் ஆகியவற்றின் பரிசீலனையின் கீழ் உள்ளது.

**25. நீதிமன்றங்கள் அமைந்தல்** : கீழே குறிப்பிடப்பட்டுள்ள நீதிமன்றங்களை ஏற்படுத்த அரசு ஆணைகளைப பிறப்பித்துள்ளது.

**சிவில் நீதிமன்றங்கள்:**

(i) தற்போது மதுரையில் செயல்பட்டு வருகின்ற மாவட்ட செஷன்ஸ் நீதிமன்றம் மற்றும் துணை நீதிமன்றத்தை இராமநாதபுரத்திற்கு மாற்றுவதன் மூலம், இராமநாதபுரம் மாவட்டத்திற்கென இராமநாதபுரத்திலேயே மாவட்ட செஷன்ஸ் நீதிமன்றம் மற்றும் சார்பு நீதிமன்றம் ஆகியவற்றை நிறுவுதல் ;

(ii) மதுரையில் தற்போது செயல்பட்டு வருகின்ற இராமநாதபுரத்தின் கூடுதல் மாவட்ட செஷன்ஸ் நீதிமன்றத்தினை, காமராசர் மாவட்டத்திற்கான மாவட்ட செஷன்ஸ் நீதிமன்றமாக மாற்றி, காமராசர் மாவட்டத்திற்கான மாவட்ட செஷன்ஸ் நீதிமன்றம் மதுரையில் அமைத்தல்;

(iii) பசும்பொன் முத்துராமலிங்க தேவர் மாவட்டத்திற்காக, மாவட்ட செஷன்ஸ் நீதிமன்றம் சிவகங்கையில் நிறுவுதல்.

(iv) திருநெல்வேலியில் தற்போது செயல்பட்டு வருகின்ற கூடுதல் மாவட்ட செஷன்ஸ் நீதிமன்றத்தை தூத்துக்குடிக்கு மாற்றுவதன் மூலம் சிதம்பரனார் மாவட்டத்திற்காக மாவட்ட செஷன்ஸ் நீதிமன்றத்தை தூத்துக்குடியில் அமைத்தல்.

(v) வட ஆற்காடு-அம்பேத்கார் மாவட்டம், வேலூரில் உள்ள உள்ள கூடுதல் துணை நீதிமன்றத்தை மாற்றுவதன் மூலம், சார்பு நீதிமன்றத்தை இராணிப்பேட்டையில் நிறுவுதல்.

(vi) திண்டுக்கல்-அண்ணா மாவட்டம், நிலக்கோட்டையில் முன்சீப் நீதிமன்றத்தை நிறுவுதல்.

### குற்றவியல் நீதிமன்றங்கள்

(i) காமராசர் மாவட்டத்திற்காக, மதுரையில் தலைமை நீதித்துறை மாஜிஸ்ட்டிரேட்டு நீதிமன்றத்தை அமைத்தல்.

(ii) இராமநாதபுரம் மாவட்டத்திற்காக இராமநாதபுரத்தில் தலைமை நீதித்துறை மாஜிஸ்டிரேட்டு நீதிமன்றத்தை அமைத்தல் ;

(iii) சிவகங்கையில் தற்போது செயல்பட்டு வருகின்ற தலைமை நீதித்துறை மாஜிஸ்டிரேட்டு நீதிமன்றத்தின் பெயரை மாற்றம் செய்து பசும்பொன் முத்துராமலிங்க தேவர் மாவட்டத்திற்கான தலைமை நீதித்துறை மாஜிஸ்டிரேட் நீதிமன்றத்தை சிவகங்கையில் அமைத்தல் ;

(iv) சந்தன மரங்களைக் கடத்திச் செல்லும் குற்றங்கள் தொடர்பாகத் தாக்கல் செய்யப்பட்டு முடிவுறாமலுள்ள வழக்குகளை விசாரிக்கும் பொருட்டு வட ஆற்காடு-அம்பேத்கார் மாவட்டம், திருப்பத்தூரில் நீதித்துறை மாஜிஸ்டிரேட்டு தனி நீதிமன்றம் ஒன்றை அமைத்தல்.

(v) விழுப்புரத்தில் உள்ள நீதித்துறை மாஜிஸ்டிரேட் நீதிமன்றத்தை (எண். II) மாற்றுவதன் மூலம் வானூரில் நீதித்துறை மாஜிஸ்டிரேட் நீதிமன்றத்தை அமைத்தல்.

26. பொது.- குறிப்பிட்ட ஒரு பகுதியில் நீதிமன்றங்கள் அதிக அளவில் இருப்பதைத் தவிர்ப்பதற்காகவும் வழக்குத் தொடுக்கும் பொது மக்கள் தங்களுடைய வழக்குகளுக்காகத் தலைமை இடங்களுக்குச் செல்வது தற்போது கடினமாக உள்ளது என்பதால் அவர்களுக்கு தகுந்த உதவி அளிப்பதற்காகவும் சார்நிலை நீதிமன்றங்களை வெளியூர்களில் அமைக்க வேண்டும் என்று கொள்கையளவில் முடிவு செய்யப்பட்டுள்ளது.

தற்போது உள்ளவாறு, வெளியூரிலுள்ள சிவில் நீதிமன்றங்களின் அதிகார வரம்பு, தமிழ்நாடு சிவில் நீதிமன்றங்கள் சட்டத்தின் கீழ் நிர்ணயிக்கப்படுகிறது. இது போன்றே, சென்னை மாநகர் சிவில் நீதிமன்றத்தின் அதிகார வரம்பு, சென்னை மாநகர் சிவில் நீதிமன்றங்கள் சட்டத்தின் கீழும் சிறு வழக்குகள் நீதிமன்றங்களின் அதிகார வரம்பு, மாகாண சிறு வழக்கு நீதிமன்றங்கள் சட்டத்தின் கீழும் நிர்ணயிக்கப்படுகிறது.



மாவட்ட முன்சீப் நீதிமன்றத்தின் அதிகார வரம்பு, ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட வட்டங்களுக்கு நீட்டிக்கப்பட்டு உள்ளது. சார்நிலை நீதிமன்றத்தின் அதிகார வரம்பு ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட முன்சீப் நீதிமன்றத்திற்கு நீட்டிக்கப்பட்டுள்ளது. மாவட்ட-செஷன்ஸ் நீதிமன்றத்தைப் பொறுத்த மட்டில் அதன் அதிகார வரம்பு வருவாய் மாவட்டம் முழுவதற்கும் நீட்டிக்கப்பட்டுள்ளது. ஆனால் தஞ்சாவூர், இராமநாதபுரம், திருநெல்வேலி கட்டபொம்மன் மற்றும் வட ஆற்காடு அம்பேத்கார் ஆகிய மாவட்டங்களில் இவ்வாறில்லை.

தஞ்சாவூர் வருவாய் மாவட்டம், இரு நீதித்துறைப் பிரிவுகளாக அதாவது தஞ்சாவூர் (மேற்கு), தஞ்சாவூர் (கிழக்கு) எனப் பிரிக்கப்பட்டுள்ளது. இவை தனி மாவட்ட-செஷன்ஸ் நீதிபதிகளைக் கொண்டு முறையே தஞ்சாவூரிலும் நாகப்பட்டினத்திலும் செயல்படுகின்றன.

வட ஆற்காடு வருவாய் மாவட்டம், வட ஆற்காடு-அம்பேத்கார் மாவட்டம், திருவண்ணாமலை-சம்புவராயர் மாவட்டம் ஆக இரு வருவாய் மாவட்டங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளது. வட ஆற்காடு அம்பேத்கார் மாவட்ட நீதிபதி மேற்சொன்ன இரு மாவட்டங்கள் மீது அதிகார வரம்பு செலுத்துகிறார். முந்தைய வட ஆற்காடு மாவட்டத்தை இரு நீதித்துறை மாவட்டங்களாகப் பிரிப்பது பற்றி அரசு பரிசீலித்து வருகிறது. சென்னை உயர்நீதிமன்றத்துடன் கலந்தாலோசித்து ,திருநெல்வேலி கட்டபொம்மன் மற்றும் சிதம்பரனார் ஆகிய மாவட்டங்களில் நீதித்துறை தலைமை மாஜிஸ்டிரேட் நீதிமன்றங்கள் ஏற்படுத்தும் செயற்குறிப்பு அரசின் பரிசிலனையில் உள்ளது. குற்றவியல் நீதிமன்றங்களுக்கு 1973 ஆம் ஆண்டு குற்றவியல் நடைமுறைச் சட்டக் கோவையின் (மத்திய சட்டம் 2/1974) கீழ் அதிகார வரம்பு நிர்ணயிக்கப்படுகிறது. நீதித்துறை மாஜிஸ்டிரேட் நீதிமன்றங்களின் அதிகார வரம்பு இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட காவல் நிலையங்களின் மீது செலுத்தப்படுகிறது.

புதிதாக நீதிமன்றங்களை அமைக்குமாறு கோரி வழக்கறிஞர்கள் சங்கத்திடமிருந்து அல்லது வழக்காடும் பொதுமக்களிடமிருந்து முறையீடுகள் வரும் பொழுது, உயர்நீதிமன்றம், அந்த முறையீடுகளைப் பரிசீலித்த பின்னர், புதிதாக நீதிமன்றங்களை அமைப்பதற்குரிய செயற் குறிப்புகளை அனுப்புகிறது. உயர்நீதிமன்றம், அந்தந்த மாவட்ட நீதிபதிகளுடன் அல்லது நீதித்துறை தலைமை மாஜிஸ்ட்ரேட்டுகளுடன் கலந்தாலோசித்து முறையீடுகளை கவனமாகப் பரிசீலித்த பின்னர், புதிதாக நீதிமன்றத்தை ஏற்படுத்துவது அவசியமென்று உயர்நீதிமன்றம் மனநிறைவடைந்தால் அது பற்றி அரசுக்கு எழுதுகிறது.

[1991 செப்டம்பர் 24

பிரித்தல் குழு (Separation Committee) அறிக்கையின் பத்தி 209-னபடி ,குறிப்பிட்ட ஒரு நீதிமன்றத்தில் முடிவடையாமலுள்ள வழக்குகள், ஒரு மாஜிஸ்ட்டிரேட்டுக்கு இரு மாதங்களுக்கான அல்லது அதற்கு மேற்பட்ட கால அளவிற்கான பணியாக இருக்கும்போது, அவற்றிற்கு கூடுதலாக ஒரு மாஜிஸ்ட்டிரேட்டை நியமிப்பதன் மூலம் உடனடியாக நிவாரணம் அளிக்கப்பட வேண்டும். கூடுதல் மாஜிஸ்ட்டிரேட்டுகளை நியமிப்பதில் காலம் தாழ்த்துவதால் செலவு குறையும் என்று எண்ணுவது தவறான கருத்தாகும. ஏனெனில் மேலும் மேலும் பணி கூடுதலாகச் சேர்ந்து கொண்டு வரும் நிலையில் கூடுதல் அதிகாரி தேவைப்படும் கால அளவும் அதற்கு நிகராக அதிகரிக்கும்.

புதிய இடங்களில் புதிய நீதிமன்றங்களை ஏற்படுத்துவது தவிர, உரிமையியல் வழக்குகள், சமாளிக்க முடியாத அளவுக்கு முடிவடையாமல் இருந்தால், வழக்காடும் பொது மக்களின் நலனைக் கருத்தில் கொண்டு அவற்றை விரைவில் முடிப்பதற்காக கூடுதலாக உரிமையியல் வழக்கு நீதிமன்றங்களை ஏற்படுத்துமாறு உயர்நீதிமன்றம் அவ்வப்போது அரசுக்குப் பரிந்துரைக்கிறது.

சாதாரணமாக, மாவட்ட முன்சீப் நீதிமன்றங்களில் விசாரிக் கப்பட வேண்டிய 200 பழைய வழக்குகள அல்லது சார்நிலை நீதிமன்றங்களில் விசாரிக்கப்பட வேண்டிய 75 வழக்குகள் முடி வடையாமல் இருப்பின், கூடுதலாக நீதிமன்றங்களை ஏற்படுத்து வது போதுமானதாகுமென்று முடிவு செய்யப்பட்டுள்ளது.

1975 ஆம் ஆண்டில் கடன் நிவாரண அவசரச் சட்டத்தைச் செயற்படுத்தியதன் விளைவாக முடிவடையாமலுள்ள சில வழக்குகளில் மேற்கொண்டும நடைமுறைகள் நிறுத்தி வைக்கப் பட்டன. புதிதாக சில வழக்குகள் தாக்கல் செய்வதும் தடை செய்யப்பட்டது. தடையாணை பிறப்பிக்கப்பட்டு, விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்படாமலிருந்த வழக்குகளும் வழக்கு நடவடிக்கைகளும் 1978 ஆம் ஆண்டில் கடன் நிவாரண அவசரச் சட்டம் நீக்கப்பட்ட பின்னர் விசாரணைக்கு எடுத்துக் கொளளப்பட்டன. மேலும், புதிதாக வழக்குகளும் அதிகமாக தாக்கல் செய்யப்பட்டன. இதனால் உரிமையியல் நீதிமன்றங் களில் அதிக வழக்குகள முடிவடையாமலுள்ளன.

27. உயர்நீதிமன்றத்தின் அசல் தரப்பு, மேல் முறையீட்டு தரப்பு ஆகியவற்றின் கீழ் வரும் வழக்குகளின் மூலமும், சார் நிலை குற்றவியல் நீதிமன்றங்களின் மூலமும் ''நீதிநிருவாகம்'' என்ற தலைப்பின் கீழ் வருவாய் பெறுவது முக்கியமானதொரு கூறு ஆகும்.



1991 செப்டம்பர் 24]

1986-87 முதல் 1991-92 வரை ''0070.01.102 நீதி நிருவாகம்'' மற்றும் ''0030.01.101 நீதித்துறை முத்திரைத் தாள்கள (முத்திரைத்தாள் வகையில் வசூலிக்கப்பட்ட நீதிமன்ற கட்டணங்கள்)'' என்ற தலைப்பின் கீழ் கிடைத்த வருவாய் இனங்கள் ''2,014. நீதி நிருவாகம் என்ற தலைப்பின் கீழ் ஏற்பட்ட செலவு ஆகியவை குறித்த விவரங்கள் வருமாறு :—

| | 1987—87-ம் ஆண்டுக் கணக்கு. | 1987—88-ம் ஆண்டுக் கணக்கு. | 1988—89-ம் ஆண்டுக் கணக்கு. | 1989—90-ம் ஆண்டுக் கணக்கு. |
|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) |
| | | (ரூபாய் இலட்சத்தில்.) | | |
| வரவுகள் — 0070 01 602 நீதி நிருவாகம் .. .. .. | 375.78 | 417.18 | 483.26 | 1,428.53 |
| 0030 01 101 நீதித்துறை முத்திரைத்தாள்கள் .. .. | 1,225.84 | 1,310.58 | 1,330.99 | 1,428.48 |
| மொத்த வரவு .. | 1,601.62 | 1,727.76 | 1,914.25 | 2,857.01 |
| செலவு— 2014. நீதி நிருவாகம் . .. .. | 1,938.05 | 2,155.01 | 2,448.31 | 2,969.56 |

| (1) | | 1990—91-ம் ஆண்டு வரவு-செலவு திட்ட மதிப்பீடு. (6) | 1990—91-ம் ஆண்டு திருத்த மதிப்பீடு. (7) | 1991—92-ம் ஆண்டு வரவு-செலவு திட்ட மதிப்பீடு. (8) |
|---|---|---|---|---|
| | | (ரூபாய் இலட்சத்தில்.) | | |
| வரவுகள்— | | | | |
| 0070 01 101 நீதி நிருவாகம் | .. .. .. .. .. | 706.02 | 1,180.38 | 1,144.42 |
| 0030 01 101 முத்திரைத்தாள்கள் | .. .. .. .. .. | 1,708.67 | 1,709.45 | 1,776.11 |
| மொத்த வரவு | .. .. .. | 2,414.69 | 2,889.83 | 1,920.54 |
| 2014. நீதி நிருவாகம் | .. .. .. .. .. .. | 3,048.97 | 3,387.30 | 3,919.66 |



**28. ஏழை எளியவர்களுக்கு சட்ட ஆலோசனை உதவி.**— இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் 39-ஏ– பிரிவின்படி, ஏழை எளியவர்களுக்குச் சட்ட ஆலோசனை அளிக்க வேண்டியது அரசியலமைப்புச் சட்டப்படி அரசின் கடமையாகும். ஏழை, எளியவர்களுக்குச் சட்ட ஆலோசனை நல்கும் பொருட்டு, 1977 ஆம் ஆண்டில் தமிழ்நாடு அரசு அமைத்த தமிழ்நாடு மாநிலச் சட்ட உதவி ஆலோசனைக் குழு, உயர்நீதிமன்ற ஓய்வுபெற்ற சிறந்த நீதிபதிகள் இருவரின் கீழ் செயற்பட்டு வருகிறது. சட்ட உதவி அளிப்பதற்கென்று மாவட்ட வட்டக் குழுக்கள் இருப்பதுடன் மாநகரிலும் மாவட்டங்களிலும் சட்ட ஆலோசனை மையங்களும் அமைக்கப்பட்டுள்ளன. இச்சட்ட ஆலோசனைக் குழுவில் 35 சட்ட உதவி மையங்கள், 149 சட்ட ஆலோசனை மையங்கள் 76 இணக்க ஏற்பாட்டு மையங்கள், 25 மகளிர் ஆலோசனை மையங்கள் ஆகியவை இருப்பதுடன் 18 மாவட்டக் குழுக்களும் 88 வட்டக் குழுக்களும் உள்ளன.

இக்குழு, ஏழை எளியவர்களுக்கும் சட்ட ஆலோசனை அளிக்கப்பட வேண்டியவர்களுக்கும் சமுதாயத்தில் நலிந்த பிரிவினருக்கும் சட்ட ஆலோசனை வழங்கி வருகிறது. மோட்டார் விபத்துக்களில் பாதிக்கப்பட்டவர்களுக்கு இழப்பீடு வாங்கித்தர இக்குழு சட்ட உதவி அளிக்கிறது. மாவட்ட நீதிமன்றங்கள், நடுவர் மன்றங்கள் ஆகியவற்றிலுள்ள அதிகாரிகள் மூலமாக நிவாரணம் வாங்கித்தர உதவுவதும், மகளிருக்கும் குழந்தைகளுக்கும் வாழ்க்கைச் செலவுப் படியைத் பெற்றுத்தர உதவுவதும் இக் குழுவின் பணித் திட்டங்களில் அடங்கும்.

இக்குழுவின் பணிகளை அரசு அலுவலர்களும் அரசு அலுவலர் அல்லாத ஏனையோரும் அடங்கிய நிருவாகக் குழு கவனிக்கிறது. அரசு, தமிழ்நாடு மாநில சட்ட உதவி ஆலோசனைக் குழுவிற்கு, அதன் செலவுகளுக்காக ஆண்டு தோறும் மானியம் வழங்குகிறது. இக் குழுவிற்கு 1991-92 ஆம் ஆண்டிற்கென ரூ. 70.00 இலட்சம் மானியமாக வழங்கப்படவுள்ளது. சாதாரணமாக, தமிழ்நாடு மாநிலச் சட்ட உதவி ஆலோசனைக் குழுவிற்கு, ஓராண்டின் நான்கு காலாண்டுகளுக்கு, நான்கு சம தவணைகளில் மானியம் வழங்கப்படுகிறது. 1991-92 ஆம் ஆண்டிற்கான 50 சதவீத மானியம் குழுவிற்கு ஏற்கெனவே வழங்கப்பட்டுள்ளது.

இந்நாட்டின் பல்வேறு மாநிலங்களில் செயற்பட்டு வரும் சட்ட உதவித் திட்டப் பணிகளுக்குச் சட்டப்படிக்கான ஆதார நிலை அளிக்கும் பொருட்டும் அவற்றை மிகவும் பயனுள்ள வகைகளில் செயற்படுத்தும் பொருட்டும் 1987 ஆம் ஆண்டு சட்டப்பணிகள் விவகார மன்றங்கள் சட்டத்தை(மத்தியச் சட்டம் 39/1987) மத்திய அரசு இயற்றியுள்ளது. இச்சட்டம் இன்னும் செயலுக்குக் கொண்டுவரப்படவில்லை.

**29. மக்கள் நீதிமன்றம்.**— தமிழ்நாடு மாநிலச் சட்ட உதவி ஆலோசனைக் குழுவின் பல திட்டங்களில், மக்கள் நீதிமன்றங்களின் கூட்டங்களைக் கூட்டும் திட்டமும் ஒன்றாகும். லோக்

அதாலத் என்பது மக்கள் நீதிமன்றம் என்று பொருள்படும். சம்பந்தப்பட்ட தரப்பினர்களுக்கிடையேயான சட்டப்படிக்கான. பிரச்சினைகளைப் பேச்சு வார்த்தைகள் மூலமும், இணக்கப் பேச்சு வார்த்தைகள் மூலமும் தீர்த்துவைப்பதும், சமூக நலனை நோக்க மாகக் கொண்ட அனுபவம் வாய்ந்தவர்கள் அடங்கிய குழு உறுப் பினர்களின் உதவியுடன், இசைவு, பொது அறிவு, மனிதாபிமான அணுகுமுறை ஆகியவற்றின் மூலம் அவர்களின் பிரச்சினைகளைத் தீர்ப்பதுமே இத்திட்டம் நோக்கமாகக் கொண்டுள்ளது. இத் திட்டத்தின் நோக்கங்கள் (i) இதுவரையில் நீதிமன்றங்களுக்குச் செல்லாத பிரச்சினைகளையும் (வழக்குத் தொடர்வதற்கு முன்னர் (ii) நீதிமன்றத்தின் தீர்ப்பாகமலுள்ள வழக்குகளையும் (நிலுவை யாகவுள்ள வழக்குகள்) தீர்ப்பதே ஆகும். இரண்டாவது நோக்கம் தொடர்பாக நீதிமன்றங்களிலும் நடுவர் மன்றங்களிலும் தீர்ப்பா பாகாமலுள்ள வழக்குகள், மக்கள் நீதிமன்றத்தின் தீர்ப்பிற்காக, சம்பந்தப்பட்ட தரப்பினர்கள் அனைவரின் இசைவைப்பெற்று, மக்கள் நீதி மன்றத்தில் எடுக்கப்பட்ட முடிவுகளையொட்டி ஆணைகளைப் பெறுவதற்காக சம்பந்தப்பட்ட நீதிமன்றங்களுக் கும், நடுவர் மன்றங்களுக்கும் திரும்ப அனுப்பி வைக்கும் வகையில் இக்குழு திட்டம் ஒன்றை வகுத்துள்ளது. வழக்கிற்கு ஒரு முடிவை எடுக்க இக்குழு திட்டம் ஒன்றை வகுத்துள்ளது. ஈட்டுறுதி செய் யப்பட்ட வண்டிகள் சம்பந்தமான மோட்டார் விபத்துக்கள் உரிமைக் கோரிக்கைகள், நீதிமன்றங்களிடம் தீர்ப்பாகமலுள்ள உரிமை கோரிக்கைகள் அரசு போக்குவரத்துக் கழகங்களுக்குச் சொந்தமான வண்டிகள் தொடர்பான ஒரு சில வழக்குகள் ஆகிய வற்றை முடிப்பதற்காகவும் இக்குழு இதுவரையில் மக்கள் நீதிமன்றக் கூட்டங்கள் பலவற்றைக் கூட்டியுள்ளது. இதுவரை யில், பல்வேறு குழுக்கள் 8,853 வழக்குகளுக்குத் தீர்ப்பளித்தது. ரூ. 19.99 கோடி வழங்க உத்திரவிட்டுள்ளது,.

30. **நடமாடும் நீதிமன்றங்கள்.** — போக்குவரத்துத் தொடர் பான குற்றங்களை விசாரணை செய்வதற்கென்று நடமாடும் நீதிமன்றங்கள் நான்கு செயற்பட்டு வருகின்றன. சென்னை யில் இரண்டும் கோயம்புத்தூரில் ஒன்றும் மதுரையில் ஒன்றுமாக மொத்தம் நான்கு நடமாடும் நீதிமன்றங்கள் செயல்பட்டு வருகின்றன.

31 **உரிமையியல் நீதிமன்றங்களில் தமிழில் தீர்ப்பு வழங்குதல்.**— உயர்நீதி மன்றத்தின் கீழுள்ள, நடுவர் மன்றங்கள், வாடகை குறித்த நீதிமன்றங்கள், வருவாய் நீதிமன்றங்கள் உட்பட உரிமை யியல் நீதிமன்றங்களில் 1-2-1982 ஆம் நாளிலிருந்து தமிழில் தீர்ப்பு வழங்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

32. சென்னை உயர்நீதி மன்றத்திலும் சார்நிலை நீதிமன்றங் களிலும் (உரிமையியல், குற்றவியல் நீதிமன்றங்கள் இரண்டிலும்) 1988, 1989, 1990 ஆகிய மூன்று ஆண்டுகளில் தொடரப்பட்ட வழக்குகள், தீர்ப்பளிக்கப்பட்ட வழக்குகள், விசாரணை முடிவுறா மலுள்ள வழக்குகள் ஆகிய விவரங்களைக் காட்டுகின்ற விவர அறிக்கை இணைப்பில் கொடுக்கப்பட்டுள்ளது.





இணைப்பு.

1988, 1989 மற்றும் 1990ஆம் ஆண்டுகளில் சென்னை உயர்நீதிமன்றம், சார்நிலை நீதிமன்றங்கள் (சிவில்) ஆகியவற்றில் தாக்கல் செய்யப்பட்ட, முடிவு செய்யப்பட்ட மற்றும் விசாரணையில் உள்ள வழக்குகள் பற்றிய புள்ளி விவரங்கள்.

| தொடர் எண்ணும் வழக்குகளின் தன்மையும். | 1988. | | | | 1989. | |
|---|---|---|---|---|---|---|
| | இவ்வாண்டில் தாக்கல் செய்யப்பட்ட வழக்குகளின் எண்ணிக்கை. | முடிவு செய்வதற்குரிய வழக்குகளின் எண்ணிக்கை. | இவ்வாண்டில் முடிவு செய்யப்பட்ட வழக்குகளின் எண்ணிக்கை. | இவ்வாண்டின் இறுதியில் முடிவுறாமல் இருந்த வழக்குகளின் எண்ணிக்கை. | இவ்வாண்டில் தாக்கல் செய்யப்பட்ட வழக்குகளின் எண்ணிக்கை. | முடிவு செய்வதற்குரிய வழக்குகளின் எண்ணிக்கை. |
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) |
| உயர்நீதி மன்றம், சென்னை— | | | | | | |
| 1 சிவில் வழக்குகள் .. .. .. | 1,607 | 5,853 | 253 | 5,600 | 1,050 | 6,650 |
| 2 உயில் தொடர்பான அசல் தரப்பு வழக்குகள். | 36 | 178 | 6 | 172 | 19 | 191 |
| 3 மணவாழ்க்கைத் தொடர்பான அசல் தரப்பு வழக்குகள். | 52 | 146 | 24 | 122 | 9 | 131 |
| 4 நடுவர் தீர்ப்புச் சட்டத்தின் கீழ் மனு | 38 | 143 | 20 | 123 | 76 | 199 |
| 5 இந்திய வாரிசுரிமைச் சட்டத்தின் கீழ் மனு. | 361 | 673 | 327 | 346 | 432 | 788 |
| 6 ஏனைய அசல் தரப்பு மனுக்கள் .. .. | 161 | 482 | 126 | 356 | 95 | 451 |
| 7 நிறுவனங்கள்-சங்கங்கள் கலைப்பு தொடர்பான வழக்குகள். | 135 | 405 | 15 | 390 | 86 | 476 |
| 8 நிறுவனம் தொடர்பான ஏனைய மனுக்கள். | 23 | 98 | 13 | 85 | 43 | 128 |
| 9 தேர்தல் மனுக்கள் .. .. .. | .. | 2 | 2 | .. | .. | 16 |
| 10 நொடிப்பு நிலை தொடர்பான மனுக்கள். | 94 | 223 | 72 | 151 | 101 | 252 |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 11 நிறைவேற்று மனுக்கள் .. .. .. | 83 | 179 | 69 | 110 | 179 | 289 |
| 12 நிறுவனம் தொடர்பான விண்ணப்பங்கள். . | 590 | 1,901 | 206 | 1,695 | 1,336 | 3,081 |
| 13 அவதூறு தொடர்பான விண்ணப்பங்கள் .. | 456 | 876 | 327 | 539 | 460 | 999 |
| பல்வகை விண்ணப்பங்கள்— | | | | | | |
| 14 நொடிப்புநிலை தொடர்பான விண்ணப்பங்கள். | 516 | 849 | 484 | 365 | 448 | 813 |
| 15 முதலாம் மேல் முறையீடுகள் .. .. | 1,519 | 7,809 | 234 | 7,575 | 1,379 | 8,954 |
| 16 அசல் தரப்பு மேல்முறையீடுகள் .. .. | 208 | 1,140 | 196 | 944 | 384 | 1,328 |
| 17 உரிமைப் பட்டயம் தொடர்பான மேல் முறையீடுகள். | 202 | 681 | 380 | 301 | 154 | 455 |
| 18 ரிட் மேல் முறையீடுகள் .. .. .. | 1,665 | 4,821 | 1,493 | 8,328 | 1,136 | 4,464 |
| 19 இரண்டாம் மேல் முறையீடுகள் .. | 1,771 | 13,423 | 1,112 | 12,311 | 2,085 | 14,396 |
| 20 ஆணைக்கு எதிரான மேல்முறையீடுகள் .. | 1,192 | 5,734 | 361 | 5,373 | 1,143 | 6,516 |
| 21 மேல்முறையீட்டு ஸ்ரீணைக்கு எதிரான மேல் முறையீடுகள். | 76 | 462 | 120 | 342 | 58 | 400 |
| 22 சிவில் மறு விசாரணை மனுக்கள் .. .. | 3,465 | 13,332 | 4,018 | 9,314 | 3.591 | 12,905 |
| 23 வரி வழக்குகள் .. .. .. .. | 1,310 | 13,443 | 306 | 12,137 | 859 | 12,996 |
| 24 பணி வழக்கு மனுக்கள் .. .. .. | 246 | 888 | 12 | 765 | 463 | 1,228 |
| 25 பிற நீதிமன்றங்களிலிருந்து அனுப்பப்படும் வழக்குகள். | 12 | 84 | .. | 84 | 3 | 87 |
| 26 மணவாழ்க்கை தொடர்பான வழக்குகள் .. | 45 | 137 | 25 | 112 | 48 | 160 |
| 27 ரிட் மனுக்கள் .. .. .. .. | 16,196 | 63,385 | 7,343 | 56,042 | 16,290 | 72,332 |



| தொடர் எண்ணும் வழக்குகளின் தன்மையும். | 1989. | | 1990. | | | |
|---|---|---|---|---|---|---|
| | இவ்வாண்டில் முடிவு செய்யப்பட்ட வழக்குகளின் எண்ணிக்கை. | இவ்வாண்டின் இறுதியில் முடிவுறாமல் இருந்த வழக்குகளின் எண்ணிக்கை. | இவ்வாண்டில் தாக்கல் செய்யப்பட்ட வழக்குகளின் எண்ணிக்கை. | முடிவு செய்வதற்குரிய வழக்குகளின் எண்ணிக்கை. | இவ்வாண்டில் முடிவு செய்யப்பட்ட வழக்குகளின் எண்ணிக்கை. | இவ்வாண்டின் இறுதியில் முடிவுறாமல் இருந்த வழக்குகளின் எண்ணிக்கை. |
| (1) | (8) | (9) | (10) | (11) | (12) | (13) |
| உயர்நீதி மன்றம், சென்னை— | | | | | | |
| 1 சிவில் வழக்குகள் .. .. .. | 415 | 6,235 | 1,335 | 7,570 | 546 | 7,024 |
| 2 உயில் தொடர்பான அசல் தரப்பு வழக்குகள். | 11 | 180 | 23 | 203 | 17 | 186 |
| 3 மணவாழ்க்கைத் தொடர்பான அசல் தரப்பு வழக்குகள். | 27 | 104 | 60 | 164 | 41 | 123 |
| 4 நடுவர் தீர்ப்புச் சட்டத்தின் கீழ் மனு .. | 25 | 174 | 54 | 228 | 84 | 144 |
| 5 இந்திய வாரிசுரிமைச் சட்டத்தின் கீழ் மனு. | 338 | 440 | 396 | 836 | 380 | 456 |
| 6 ஏனைய அசல்தரப்பு மனுக்கள் .. .. | 70 | 381 | 180 | 561 | 192 | 369 |
| 7 நிறுவனங்கள்-சங்கங்கள் கலைப்பு தொடர்பான வழக்குகள். | 20 | 456 | 73 | 529 | 43 | 486 |
| 8 நிறுவனம் தொடர்பான ஏனைய மனுக்கள். | 44 | 84 | 28 | 112 | 28 | 84 |
| 9 தேர்தல் மனுக்கள் .. .. .. | .. | 16 | 3 | 19 | 10 | 9 |
| 10 நொடிப்பு நிலை தொடர்பான மனுக்கள். | 103 | 144 | 106 | 250 | 121 | 12 |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 11 நிறைவேற்று மனுக்கள் .. .. | 62 | 227 | 172 | 399 | 178 | 221 |
| 12 நிறுவனம் தொடர்பான விண்ணப்பங்கள். | 227 | 2,804 | 1,624 | 4,428 | 708 | 3,720 |
| 13 அவதூறு தொடர்பான விண்ணப்பங்கள் .. | 347 | 652 | 421 | 1,073 | 611 | 462 |
| பல்வகை விண்ணப்பங்கள்— | | | | | | |
| 14 நொடிப்பு நிலை தொடர்பான விண்ணப்பங்கள் | 450 | 363 | 517 | 580 | 422 | 458 |
| 15 முதலாம் மேல் முறையீடுகள் .. .. | 585 | 8,369 | 1,435 | 9,804 | 454 | 9,350 |
| 16 அசல்தரப்பு மேல் முறையீடுகள் .. | 231 | 1,097 | 238 | 1,335 | 285 | 1,050 |
| 17 உரிமைப் பட்டயம் தொடர்பான மேல் முறையீடுகள். | 224 | 231 | 182 | 413 | 186 | 227 |
| 18 ரிட் மேல் முறையீடுகள் .. .. | 2,385 | 2,079 | 1,352 | 3,431 | 2,113 | 1,318 |
| 19 இரண்டாம் மேல் முறையீடுகள் .. | 999 | 13,397 | 1,920 | 15,317 | 1,168 | 14,140 |
| 20 ஆணைக்கு எதிரான மேல்முறையீடுகள் .. | 734 | 5,782 | 1,201 | 6,983 | 1,123 | 5,860 |
| 21 மேல் முறையீட்டு ஆணைக்கு எதிரான மேல் முறையீடுகள். | 30 | 370 | 47 | 417 | 43 | 374 |
| 22 சிவில் மறு விசாரணை மனுக்கள் .. | 3,549 | 9,356 | 3,534 | 12,890 | 4,641 | 8,249 |
| 23 வரி வழக்குகள் .. .. .. .. | 486 | 12,506 | 1,422 | 13,928 | 861 | 13,067 |
| 24 வரி வழக்கு மனுக்கள் .. .. .. | 754 | 474 | 351 | 825 | 270 | 555 |
| 25 பிற நீதிமன்றங்களிலிருந்து அனுப்பப்படும் வழக்குகள். | 7 | 80 | 1 | 81 | .. | 81 |
| 26 இல்வாழ்க்கை தொடர்பான வழக்குகள் .. | 15 | 145 | 49 | 194 | 51 | 143 |
| 27 ரிட் மனுக்கள் .. .. .. .. | 19,204 | 52,123 | 19,010 | 72,138 | 18,669 | 53,462 |



| | 1988. | | | | 1989. | |
|---|---|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) |
| உயர்நீதி மன்றம், சென்னை—தொடர்ச்சி. | | | | | | |
| 28 உச்சநீதிமன்ற (அனுமதி) மனுக்கள் .. | 25 | 150 | 31 | 119 | 14 | 133 |
| 29 சிறப்பு நடுவர் மன்ற மேல் முறையீடுகள். | 32 | 739 | 553 | 186 | 14 | 200 |
| 30 அவமதிப்பு தொடர்பான மேல்முறையீடுகள். | 4 | 27 | 4 | 23 | 22 | 45 |
| 31 வணிகக் குறி தொடர்பான மேல்முறையீடுகள். | 6 | 52 | 2 | 50 | 10 | 60 |
| 32 வணிகக்குறி தொடர்பான இரண்டாம் மேல் முறையீடுகள். | .. | 4 | 1 | 3 | .. | 3 |
| 33 பல்வகை வழக்குகள் .. .. .. | 42,163 | 103,922 | 29,501 | 74,421 | 1,41,396 | 1,15,817 |
| 34 எதிர் மறுப்பு .. .. .. .. | .. | .. | .. | .. | .. | .. |
| 35 மறு ஆய்வு விண்ணப்பம் .. .. .. | .. | .. | .. | .. | .. | .. |
| 36 பிற நீதிமன்றங்களிலிருந்து அனுப்பப்பட்ட வழக்கு பற்றிய மனுக்கள். | .. | .. | .. | .. | .. | .. |

| (1) | 1989. (8) | (9) | 1990. (10) | (11) | (12) | (13) |
|---|---|---|---|---|---|---|
| உயர்நீதி மன்றம், சென்னை—தொடர்ச்சி. | | | | | | |
| 28. உச்ச நீதிமன்ற (அனுமதி) மனுக்கள் ... .. | 21 | 112 | ... | .. | ... | .. |
| 29 சிறப்பு நடுவர் மன்ற மேல்முறையீடுகள் . | 10 | 190 | 21 | 211 | 2 | 309 |
| 30 அவமதிப்பு தொடர்பான மேல்முறையீடுகள். | 10 | 35 | 13 | 47 | 15 | 32 |
| 31 வணிகக்குறி தொடர்பான மேல்முறையீடுகள். | .. | 60 | 11 | 71 | 8 | 63 |
| 32 வணிகக்குறி தொடர்பான இரண்டாம் மேல்முறையீடுகள். | .. | 3 | 6 | 9 | 3 | 6 |
| 33 பல்வகை வழக்குகள் .. .. .. | 47,701 | 68,116 | 49,579 | 1,17,695 | 40,440 | 77,255 |
| 34 எதிர் மறுப்பு .. .. .. .. | .. | 575 | 190 | 765 | 55 | 710 |
| 35 மறு ஆய்வு விண்ணப்பம் .. .. .. | .. | 42 | 85 | 107 | 94 | 33 |
| 36 பிற நீதிமன்றங்களிலிருந்து அனுப்பப்பட்ட வழக்கு பற்றிய மனுக்கள். | .. | 35 | 6 | 41 | 24 | 17 |



| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) |
|---|---|---|---|---|---|---|
| **மாநகர சிவில் நீதிமன்றம், சென்னை :** | | | | | | |
| 1. சிவில் வழக்குகள் .. .. .. | 13,996 | 31,192 | 8,320 | 22,222 | 12,221 | 35,093 |
| 2. சிவில் பல்வகை வழக்குகள் .. .. | 14,087 | 38,878 | 19,094 | 19,784 | 37,018 | 56,802 |
| 3. சிவில் மேல்முறையீடுகள் .. .. | 647 | 1,217 | 623 | 554 | 522 | 1,116 |
| 4. சிவில் பல்வகை மேல் முறையீடுகள் .. | 250 | 385 | 194 | 191 | 216 | 407 |
| 5. ஆணை நிறைவேற்று நடைமுறைகள் .. | 3,397 | 7,050 | 2,223 | 4,827 | 4,131 | 8,958 |
| **சிறு வழக்கு நீதிமன்றம், சென்னை :** | | | | | | |
| 1. சிவில் வழக்குகள் .. .. .. | 9,933 | 15,368 | 4,967 | 10,401 | 7,402 | 17,803 |
| 2. சிவில் பல்வகை வழக்குகள் .. .. | 8,044 | 17,472 | 4,846 | 12,626 | 9,170 | 21,796 |
| 3. ஆணை நிறைவேற்று நடைமுறைகள் .. | 289 | 1,438 | 609 | 830 | 1,610 | 2,440 |
| **மாவட்ட நீதிமன்றங்கள் :** | | | | | | |
| 1. சிவில் வழக்குகள் .. .. .. | 1,179 | 1,501 | 1,130 | 371 | 1,137 | 1,508 |
| 2. சிவில் மேல் முறையீடுகள் .. .. | 3,386 | 5,729 | 3,651 | 2,078 | 3,513 | 5,591 |
| 3. சிவில் பல்வகை மேல்முறையீடுகள் .. | 1,470 | 3,154 | 1,664 | 1,490 | 1,334 | 2,824 |
| 4. சிவில் பல்வகை வழக்குகள் .. .. | 33,250 | 37,874 | 32,635 | 5,239 | 33,896 | 39,135 |
| 5. ஆணை நிறைவேற்று மனுக்கள் .. .. | 452 | 701 | 468 | 233 | 404 | 631 |
| 6. தொடிப்பு நிலைத் தொடர்பான மனுக்கள். | 3 | 6 | 4 | 2 | 1 | 3 |

| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) |
|---|---|---|---|---|---|---|
| **துணை நீதி மன்றங்கள் :** | | | | | | |
| 1. சிவில் வழக்குகள் .. .. .. | 16,981 | 41,003 | 11,789 | 30,114 | 17,743 | 47,857 |
| 2. சிவில் பல்வகை வழக்குகள் .. | 1,13,405 | 1,60,905 | 1,03,736 | 52,714 | 1,06,613 | 1,59,327 |
| 3. சிவில் மேல்முறையீடுகள் .. .. | 4,357 | 10,610 | 3,828 | 6,782 | 3,919 | 10,701 |
| 4. சிவில் பல்வகை மேல் முறையீடுகள் .. | 1818 | 5,072 | 1,381 | 3,691 | 1 719— | 5,410 |
| 5. ஆணை நிறைவேற்று மனுக்கள் | 6,256 | 13,581 | 4,976 | 8,605 | 6;045 | 14,650 |
| 6. நொடிப்பு நிலை தொடர்பான மனுக்கள் | 436 | 1,384 | 291 | 1,093 | 491 | 1,584 |
| **மாவட்ட முன்சிப் நீதிமன்றங்கள்:** | | | | | | |
| 1. சிவில் வழக்குகள் | 1,93,858 | 2,57,720 | 87,637 | 1,70,088 | 1,05,669 | 2,75,752 |
| 2. சிவில் பல்வகை வழக்குகள் .. .. | 25,3,835 | 3,99,496 | 2,48,218 | 1,51,278 | 1,85,3 | 3,36,604 |
| 3. ஆணை நிறைவேற்று மனுக்கள் | 46,002 | 80,791 | 36,063 | 44,726 | 39;1[illegible] | 83.881 |
| 4. நொடிப்பு நிலை தொடர்பான மனுக்கள் | 58 | 163 | 92 | 71 | 93 | 164 |



| (1) | (8) | (9) | (10) | (11) | (12) | (13) |
|---|---|---|---|---|---|---|
| **மாநகர சிவில் நீதிமன்றம், சென்னை :** | | | | | | |
| 1. சிவில் வழக்குகள் .. .. .. | 12,383 | 22,710 | 11,846 | 33,756 | 12,392 | 21,364 |
| 2. சிவில் பல்வகை வழக்குகள் .. .. | 26,282 | 28,576 | 29,883 | 58,459 | 29,395 | 29,064 |
| 3. சிவில் மேல் முறையீடுகள் .. .. | 568 | 548 | 384 | 932 | 648 | 284 |
| 4. சிவில் பல்வகை மேல்முறையீடுகள் .. | 244 | 163 | 160 | 323 | 178 | 145 |
| 5. ஆணை நிறைவேற்று நடைமுறைகள் .. | 3,433 | 5,525 | 3,815 | 9,340 | 3,626 | 5,714 |
| **சிறுவழக்கு நீதிமன்றம், சென்னை :** | | | | | | |
| 1. சிவில் வழக்குகள் .. .... ... | 9,249 | 8,554 | 4,247 | 12,801 | 8,449 | 4,352 |
| 2. சிவில் பல்வகை வழக்குகள் .. ... | 7,831 | 13,965 | 8,181 | 22,146 | 7,366 | 14,780 |
| 3. ஆணை நிறைவேற்று நடைமுறைகள் .... | 1,167 | 1,273 | 1,363 | 2,636 | 1,124 | 1,512 |
| **மாவட்ட நீதிமன்றங்கள் :** | | | | | | |
| 1. சிவில் வழக்குகள் .. .. .. | 1,095 | 412 | 1,140 | 1,553 | 1,045 | 508 |
| 2. சிவில் மேல் முறையீடுகள் .. .. | 3,555 | 2,036 | 3,672 | 5,708 | 3,531 | 2,177 |
| 3. சிவில் பல்வகை மேல் முறையீடுகள் .. | 1,734 | 1,090 | 1,249 | 2,339 | 1,066 | 1,273 |
| 4. சிவில் பல்வகை வழக்குகள் .. .. | 33,701 | 5,434 | 45,737 | 51,171 | 43,687 | 7,484 |
| 5. ஆணை நிறைவேற்று மனுக்கள் .. .. | 435 | 202 | 542 | 744 | 494 | 250 |
| 6. நொடிப்பு நிலைத் தொடர்பான மனுக்கள். | .. | 1 | .. | 1 | 1 | .. |

| (1) | (8) | (9) | (10) | (11) | (12) | (13) |
|---|---|---|---|---|---|---|
| **துணை நீதிமன்றங்கள் :** | | | | | | |
| 1. சிவில் வழக்குகள் .. .. .. | 16,427 | 31,430 | 20,462 | 51,802 | 15,117 | 36,775 |
| 2. சிவில் பல்வகை வழக்குகள் .. .. | 107,958 | 51,369 | 114,623 | 165,992 | 109,917 | 56,075 |
| 3. சிவில் மேல் முறையீடுகள் .. .. | 4,531 | 6,170 | 5,262 | 11,432 | 4,543 | 6,889 |
| 4. சிவில் பல்வகை மேல் முறையீடுகள் .. | 1,961 | 3,449 | 2,224 | 5,673 | 1,754 | 31,910 |
| 5. ஆணை நிறைவேற்று மனுக்கள் .. .. | 5,816 | 8,834 | 6,795 | 15,629 | 5,687 | 9,942 |
| 6. தொடிப்பு நிலை தொடர்பான மனுக்கள். | 412 | 1,172 | 495 | 1,667 | 400 | 1,267 |
| **மாவட்ட முன்சீப் நீதிமன்றங்கள் :** | | | | | | |
| 1. சிவில் வழக்குகள் .. .. .. | 1,08,828 | 1,69,924 | 98,413 | 2,65,337 | 1,03,510 | 1,61,827 |
| 2. சிவில் பல்வகை வழக்குகள் .. .. | 2,11,392 | 1,25,302 | 2,44,198 | 3,69,500 | 2,28,554 | 1,40,946 |
| 3. ஆணை நிறைவேற்று மனுக்கள் .. .. | 38,805 | 45,076 | 34,021 | 79,097 | 38,736 | 40,361 |
| 4. தொடிப்பு நிலை தொடர்பான மனுக்கள் | 74 | 90 | 41 | 131 | 63 | 68 |



உயர்நீதி மன்றத்திலும் (குற்றவியல்) சார்நிலை நீதிமன்றங்களிலும் 1988, 1989 மற்றும் 1990 ஆம் ஆண்டுகளில் தொடரப்பட்ட முடிவு செய்யப்பட்ட மற்றும் விசாரணையிலுள்ள வழக்குகள் பற்றிய புள்ளி விபரங்கள்.

| தொடர் எண்ணும், வழக்குகளின் தன்மையும். | 1988. | | | | 1989. | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | இவ்வாண்டில் தாக்கல் செய்யப்பட்ட வழக்குகளின் எண்ணிக்கை. | முடிவு செய்வதற்குரிய வழக்குகளின் எண்ணிக்கை. | இவ்வாண்டில் முடிவு செய்யப்பட்ட வழக்குகளின் எண்ணிக்கை. | இவ்வாண்டின் இறுதியில் முடிவுறாமல் இருந்த வழக்குகளின் எண்ணிக்கை. | இவ்வாண்டில் தாக்கல் செய்யப்பட்ட வழக்குகளின் எண்ணிக்கை. | முடிவு செய்வதற்குரிய வழக்குகளின் எண்ணிக்கை. | இவ்வாண்டில் முடிவு செய்யப்பட்ட வழக்குகளின் எண்ணிக்கை. | இவ்வாண்டின் இறுதியில் முடிவுறாமல் இருந்த வழக்குகளின் எண்ணிக்கை |
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) | (8) | (9) |
| உயர்நீதி மன்றம், சென்னை— | | | | | | | | |
| 1 குற்றவியல் அசல் மனுக்கள். | .. | .. | .. | .. | .. | .. | .. | 5,283 |
| 2 பிற நீதிமன்றங்களிலிருந்து அனுப்பப்படும் விசாரணைகள். | 6 | 18 | 10 | 8 | 9 | 17 | 12 | 5 |
| 3 குற்றவியல் வழக்கு மேல் முறையீடுகள். | 672 | 4,557 | 447 | 4,110 | 1,104 | 5,214 | 554 | 4,660 |
| 4 குற்றவியல் மறு விசாரணை மனுக்கள். | 664 | 3,268 | 502 | 2,766 | 761 | 3,527 | 570 | 2,957 |
| 5 வேறு நீதிமன்றங்களுக்கு அனுப்பப்படும் வழக்குகள். | .. | .. | .. | .. | .. | .. | .. | .. |
| 6 ஆட்கொணர்விக்கும் நீதிப் பேராணை ரிட் மனுக்கள். | .. | .. | .. | .. | .. | .. | .. | 380 |
| பலவகை வழக்குகள். | 12,078 | 24,251 | 10,510 | 13,741 | 17,142 | 30,883 | 12,323 | 18,560 |

| (1) | (10) | (11) | (12) | (13) | (14) | (15) | (16) | (17) |
|---|---|---|---|---|---|---|---|---|
| **செஷன்ஸ் நீதிமன்றங்கள்—** | | | | | | | | |
| 1 செசன்ஸ் வழக்குகள். | 5,788 | 6,693 | 3,437 | 3,256 | 3,960 | 7,216 | 3,590 | 3,626 |
| 2 குற்றவியல் வழக்கு மேல் முறையீடுகள். | 3,398 | 5,318 | 2,918 | 2,400 | 2,792 | 5,192 | 2,818 | 2,374 |
| 3 குற்றவியல் மறு விசாரணை மனுக்கள். | 1,014 | 1,735 | 999 | 736 | 1,059 | 1,795 | 1,111 | 684 |
| **பெருநகர மாஜிஸ்ட்டிரேட்டுகள் நீதிமன்றம்—** | | | | | | | | |
| முறையான வழக்கு விசாரணைகள். | 2,74,816 | 3,10,091 | 2,79,560 | 30,531 | 3,22,897 | 3,53,428 | 3,16,979 | 36,449 |
| **நீதித்துறை மாஜிஸ்ட்டிரேட்டு நீதிமன்றங்கள்—** | | | | | | | | |
| 1 மேல்முறையீடுகள். | 596 | 825 | 678 | 147 | 32 | 179 | 150 | 28 |
| 2 ஏனைய சட்ட வழக்குகள். | 4,86,098 | 6,12,431 | 4,69,945 | 1,42,486 | 7,89,081 | 9,31,567 | 7,67,356 | 1,64,211 |
| 3 இந்திய தண்டனைச் சட்டக் கோவையின் கீழ்வரும் வழக்குகள். | 1,06,582<br>1,12,691 | 1,96,293<br>2,30,120 | 1,97,528<br>1,03,947 | 98,765<br>1,26,173 | 1,51,293 | 2,50,058 | 1,32,629 | 1,17,420 |
| 4 குற்றவியல் நடைமுறைகள் கோவை வழக்குகள் மற்றும் பலவகை வழக்குகள். | 43,629 | 47,219 | 44,434 | 3,775 | 82,000 | 85,775 | 81,604 | 4,171 |



தொடர் எண்ணும் வழக்குகளின் தன்மையும்.

| (1) | 1990. இவ்வாண்டில் தாக்கல் செய்யப்பட்ட வழக்குகளின் எண்ணிக்கை. (11) | முடிவு செய்வதற்குரிய வழக்குகளின் எண்ணிக்கை. (12) | இவ்வாண்டில் முடிவு செய்யப்பட்ட வழக்குகளின் எண்ணிக்கை. (13) | இவ்வாண்டில் இறுதியில் முடிவுறாமல் இருந்த வழக்குகளின் எண்ணிக்கை. (14) |
|---|---|---|---|---|
| **உயர்நீதி மன்றம், சென்னை :** | | | | |
| 1 குற்றவியல் அசல் மனுக்கள் .. .. .. .. | 9,078 | 14,361 | 9,644 | 4,717 |
| 2 பிற நீதிமன்றங்களிலிருந்து அனுப்பப்படும் விசாரணைகள் .. | 6 | 11 | 10 | 1 |
| 3 குற்றவியல் வழக்கு மேல் முறையீடுகள் .. .. .. | 890 | 5,550 | 656 | 4,894 |
| 4 குற்றவியல் மறு விசாரணை மனுக்கள் .. .. .. | 663 | 3,620 | 580 | 3,040 |
| 5 வேறு நீதிமன்றங்களுக்கு அனுப்பப்படும் வழக்குகள் .. | .. | .. | .. | .. |
| 6 ஆட்கொணர்விக்கும் நீதிப்பேராணை ரிட் மனுக்கள் .. | 529 | 909 | 675 | 234 |
| 7 பல்வகை வழக்குகள் .. .. .. .. | 5,150 | 23,710 | 12,055 | 11,655 |
| **செஷன்ஸ் நீதிமன்றங்கள் :** | | | | |
| 1 செஷன்ஸ் வழக்குகள் .. .. .. .. .. .. | 3,614 | 7,240 | 3,359 | 3,881 |
| 2 குற்றவியல் வழக்கு மேல்முறையீடுகள் .. .. .. | 2,973 | 5,347 | 2,705 | 2,642 |
| 3 குற்றவியல் மறு விசாரணை மனுக்கள் .. .. .. | 1,066 | 1,750 | 877 | 873 |

| (1) | (11) | (12) | (13) | (14) |
|---|---|---|---|---|
| **பெருநகர மாஜிஸ்ட்டிரேட்டுகள் நீதிமன்றம்:** | | | | |
| முறையான வழக்கு விசாரணைகள் .. .. .. .. | 2,85,931 | 3,22,380 | 2,75,284 | 47,096 |
| **நீதித்துறை மாஜிஸ்ட்டிரேட்டு நீதிமன்றங்கள்:** | | | | |
| 1 மேல் முறையீடுகள் .. .. .. .. .. | 7 | 36 | 28 | 8 |
| 2 ஏனைய சட்ட வழக்குகள் .. .. .. .. | 665,591 | 8,29,802 | 6,98,799 | 1,31,003 |
| 3 இந்திய தண்டனைச் சட்டக் கோவையின் கீழ்வரும் வழக்குகள். | 1,12,691 | 2,30,120 | 1,03,947 | 1,26,173 |
| 4 குற்றவியல் நடைமுறைக் கோவை வழக்குகள் மற்றும் பலவகை வழக்குகள். | 57,017 | 61,188 | 56,511 | 4,677 |



## இணைப்பு - 3.

(160 ஆம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க.)

### அத்தியாயம் 1.

### சிறைச் சாலைகள் நிர்வாகம் குறித்த கொள்ளை விளக்கக் குறிப்பு.

1. முன்னுரை—சிறைத் துறை தமிழ்நாட்டிலுள்ள கீழ்க் கண்ட சிறைச்சாலைகளின் நிர்வாகம், அமைப்பு கட்டுப்பாடு ஆகியவற்றைக் கவனிக்கிறது.

| | |
|---|---|
| மத்திய சிறை .. .. .. .. | 8 |
| பார்ஸ்டல் பள்ளி .. .. .. | 1 |
| ஆடவர் பிற்காப்பு இல்லம் .. .. | 1 |
| மகளிர் தனிச் சிறைகள் .. .. | 2 |
| தனிக் கிளைச் சிறைகள் .. .. .. | 6 |
| திறந்த வெளிச் சிறை .. .. .. | 1 |
| மத்திய சிறையைச் சேர்ந்த சிறைப் பண்ணை. .. | 1 |
| கிளைச் சிறைகள் .. .. .. | 114 |

நன்னடத்தைப் பிரிவு ஒன்றும் சிறைத் துறையின் கட்டுப்பாட்டின் கீழ் உள்ளது. சிறைத் துறையின் முக்கிய நோக்கம் சிறைகளில் சிறைவாசிகளை வைப்பது மட்டுமல்லாமல் அவர்கள் மீண்டும் குற்றம் செய்யும்நிலைக்கு திரும்புவதைத் தடுத்து நிறுத்தவும், அவர்கள விடுதலையான பின்னர் நன் மக்களாக வாழவும், மீண்டும் சமூகத்துடன் இணைந்து செயல்படச் செய்வதுமாகும். முன்னதாக மருத்துவப் பணிகள் குடும்ப நலத் துறை இயக்குநர் மற்றும் சமூக நலத் துறையின் கட்டுப்பாட்டில் இருந்த அரசு மறுவாழ்வு இல்லமும், மேல் பாக்கத்திலுள்ள அரசு காப்பு முகாமும், சிறைத் துறைத் தலைவரின் கட்டுப்பாட்டின்கீழ் கொண்டுவரப்பட்டுள்ளன.

2. சிறைத் துறையின் கட்டுப்பாட்டில் உள்ள நிறுவனங்களின் விவரம்:

இம் மாநிலத்தில் சிறைத்துறையின் கட்டுப்பாட்டின் கீழ் உள்ள நிறுவனங்கள் பற்றிய விவரம் இணைப்பு 1-ல் குறிப்பிடப்பட்டுள்ளது. பொதுவாக ஒரு திங்களுக்கு மேலாகத் தண்டனை அடைந்தவர்கள் மத்திய சிறைகளில் வைக்கப்படுகின்றனர். விசாரணைக் கைதிகளும், ஒரு திங்களுக்கு குறைவாகத் தண்டனை பெற்றவர்களும், கிளைச் சிறைகளில் வைக்கப்படுகின்றனர். வயது வந்த கைதிகள் இளங் குற்றவாளிகளிடமிருந்து பிரித்து வைக்கப்படுகின்றனர். ஆண் கைதிகளும் பெண் கைதிகளும் தனித் தனிச் சிறைகளில் வைக்கப்படுகின்றனர். குற்றம் செய்வதையே தொழிலாகக் கொண்டவர்கள் சேலம் மத்திய சிறையில் வைக்கப்படுகின்றனர். வழக்கமாகச் சிறைக் குற்றம் செய்யும் சிறைக் கைதிகள் இதர சிறைக் கைதிகளைக் கெடுத்து விடக் கூடாது என்பதற்காக, மற்றவர்களிலிருந்து பிரித்து வைக்கப்படுகின்றனர். எனவே, இத்தகைய சிறைக் கைதிகள் கடலூர் மத்திய சிறையில் வைக்கப்படுகின்றனர். ஒரு திங்களுக்கும் மேலாகச் சிறைத் தண்டனை பெற்ற பெண் கைதிகள் வேலூர் மற்றும் மதுரையில் உள்ள பெண்கள் தனிச் சிறையில் வைக்கப்படுகின்றனர். இச்சிறைகள் பெண்களுக்கே உரிய சிறைகளாகும். பெண்களே இங்கு அதிகாரிகளாக இருந்து இச்சிறைகளை நிருவகிக்கின்றனர். இளஞ் சிறைக் கைதிகளைக் காவலில் வைத்திருப்பதற்காக புதுக்கோட்டையிலுள்ள சீர்திருத்தப் பள்ளி இயங்குகிறது. மன நோய்வாய்ப் பட்ட குற்றவாளிகள் சென்னை அரசினர் மன நலக் காப்பகத்தில் சேர்க்கப்படுகின்றனர். தொழுநோய்க் கைதிகளுக்காக தனிச் சிறைக் கூடங்கள் வேலூர் மத்திய சிறையில் உள்ளன.

கிளைச் சிறைகள் மற்றும் மத்திய சிறைகளில் மொத்தம் 18.228 சிறைவாசிகளை அனுமதிக்க இடவசதி உள்ளது. அரசு மறுவாழ்வு இல்லங்களில் 4,250 பேர்களை (பெரியவர்கள் 4,000 சிறுவர்கள் 250) அனுமதிக்க இடவசதி உள்ளது. மேல்பாக்கத்திலுள்ள அரசு காப்பு முகாமில் 950 பேர்களை (ஆண்கள் 770, பெண்கள் 180) அனுமதிக்க இடவசதி உள்ளது.

## 3. நிருவாகம். :

சிறைத் துறையின் நிருவாகம் சென்னை, திருச்சிராப்பள்ளி, கோயம்புத்தூர் மற்றும் மதுரை இவற்றிலுள்ள நான்கு சிறைத் துறைத் துணைத் தலைவர்களின் உதவியினைக் கொண்டு சிறைத் துறைத் தலைவரால் நிருவகிக்கப்பட்டு வரப்படுகின்றது. ஒவ்வொரு மத்திய சிறையும் கண்காணிப்பாளரின் தலைமையில் இயங்கி வருகிறது. அவரது கட்டுப்பாட்டில் களப் பணியாளர்கள் அமைச்சுப் மருத்துவம் மற்றும் தொழில் நுட்ப பணியாளர்கள் பணியாற்றுகின்றனர். கண்காணிப்பாளர் மற்றும் இதர களப் பணியாளர்களை நிர்வாகப் பணியிலிருந்து



விடுவிக்கும் பொருட்டு எட்டு மத்திய சிறைகளிலும் கண்காணிப்பாளரின் நேர்முக உதவியாளர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். இத்துறையில் இதுவரை மேற்கொள்ளப்பட்ட சோதனை தணிக்கை முறையினை விடுத்து 100 விழுக்காடு தணிக்கை முறையினைக் கொணரும் பொருட்டு கூடுதல் பணியாளர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர் இந்த ஏற்பாடு பணியாளர்கள் தங்களது கடமையைச் செவ்வனே செய்யவும் மற்றும் நிர்வாகம் நன்முறையில் இயங்கவும் உதவும். இதே போன்று நன்னடத்தைக் பிரிவு தலைமை நன்னடத்தை கண்காணிப்பாளரால் நிருவகிக்கப்படுகிறது. பிச்சைக்காரர் மற்றும் மறுவாழ்வு இல்லங்கள் தலைமைக் கண்காணிப்பாளரால் நிருவகிக்கப்படுகின்றது. இத்துறையில் உள்ள பதவிகளின் எண்ணிக்கையினை காட்டும் பட்டியல் இணைப்பு 2-ல் அளிக்கப்பட்டுள்ளது.

இத்துறையில் கடந்த ஆறாண்டுகளின் செலவு மற்றும் வரவு விபரங்கள் மற்றும் 1991–92 ஆம் ஆண்டிற்கான நிதி ஒதுக்கீடு விபரங்கள் கீழே அளிக்கப்பட்டுள்ளன.

| வருடம். | | செலவு. | வரவு. |
|---|---|---|---|
| | | (ரூபாய் | ஆயிரத்தில்) |
| 1985–86 | (உண்மைச் செலவினம்) | 11,54,96 | 1,48,14 |
| 1986–87 | .. .. | 13,81,88 | 1,81,10 |
| 1987–88 | .. .. | 13,62,17 | 2,33,27 |
| 1988–89 | .. .. | 15,32,91 | 4,52,53 |
| 1989–90 | .. .. | 16,54,46 | 3,58,12 |
| 1990–91 | (துறை கணக்குகள்) | 19,44,17 | 1,11,64 |
| 1991–92 | (வரவு சேலவு திட்டம்) | 19,48,70 | 61,64 |

## 4. திறந்த வெளிச் சிறைகள். :

இச் சிறைகளில் சிறைவாசிகள் சிறைக்குள்ளயே சுதந்திரமாக நடமாட வசதி உள்ளது. இம்மாநிலத்திலுள்ள ஒரே ஒரு திறந்த வெளிச் சிறை தற்போது கோயம்புத்தூர் மாவட்

—த்திலுள்ள சிங்காநல்லூரில் உள்ளது. இதில் 100 கைதிகள் தங்குவதற்கான இடவசதி உள்ளது. மேலும் சேலம் மத்திய சிறையுடன் பண்ணைச் சிறை ஒன்றும் இணைக்கப்பட்டுள்ளது.

2. திறந்த வெளிச் சிறைகளின் நோக்கங்கள் பின்வருமாறு:—

(அ) சிறைகளில் நெருக்கடியைத் தவிர்த்தல்.

(ஆ) சிறைக் கைதிகளின் எதிர்காலப் புதுவாழ்விற்காக அவர்களுக்குச் சரியான முறையில் உழவுத் தொழில் பயிற்சியளித்தல்.

(இ) நன்முறையில் நடந்து கொள்ளும் கைதிகளுக்கு நம்பிக்கையின் பேரில் அவர்களுக்கு ஓரளவு உரிமை அளித்தல்.

(ஈ) கைதிகள் குறைந்த அளவு காவலிலுள்ள சிறைகளில் அடைத்து வைக்கப்படவேண்டும்; அவர்களை சிறைகளில் நல்ல முறையில் நடத்தவேண்டும். அவர்கள் மீதான கட்டுப்பாடுகள் தவிர்க்கப்படவேண்டும் என்பன போன்ற கோட்பாடுகளைச் செயலுக்குக் கொண்டு வருதல்.

சிங்காநல்லூரிலுள்ள திறந்த வெளிச் சிறையில் சிறைக் கைதிகளுக்கு நவீன வேளாண்மை முறைகளில் பயிற்சியளிப்பதற்காக, உதவி வேளாண்மை அலுவலர் ஒருவர் உள்ளார். ஏற்கனவே இயங்கி வந்த திறந்த வெளிச் சிறை, நீலகிரி தெற்கு தோட்டம் நிலங்கள், கட்டிடங்கள் முதலியவற்றைப் புதிய தமிழ் பல்கலைக் கழகம் தொடங்க வழங்கப்பட்டதைத் தொடர்ந்து தஞ்சாவூர் மாவட்டத்தில் திருமலை சமுத்திரத்தில் ஒரு புதிய திறந்த வெளிச் சிறை ஆரம்பிக்க தக்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வரப்படுகின்றது. இச்சிறைச்சாலை அமைக்கும் பணி தடைப்பட்டதற்குக் காரணம் இதற்கு அருகாமையில் திருமலை சமுத்திரத்தில் அமைந்துள்ள பாலசேவிகா கல்வி மற்றும் தொண்டு நிறுவனம் நடத்தி வரும் சண்முகா பொறியியல் கல்லூரி, உயர்நீதி மன்றத்தில் தடையாணை பெற்றிருப்பதேயாகும். இந்தத் தடையாணையை எதிர்த்து வழக்கு நடைபெற்று வருகிறது.

5. கைதிகளின் வகைப்பாடும் சிறப்புரிமைகளும் :

சிறைகளில் உள்ள கைதிகளுக்காக 'எ', 'பி' என்ற இரு பிரிவுகள் மட்டுமே உள்ளன. விசாரணை மற்றும் காவல் கைதிகளுக்குச் சிறப்பு வகுப்பு நீதிமன்றத்தால் அளிக்கப்படுகிறது. ஒரு கைதியின் சமூக தகுதி, கல்வி, வாழ்க்கைத் தரம், நடத்தை, முன் வரலாறு, சொந்தமாக வைத்துள்ள சொத்து விபரம் ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டு அக்கைதிக்கு



'எ' வகுப்பு முதலில் நீதி மன்றத்தாலும் பின்னர் அரசாலும் உறுதிப்படுத்தப்படுகிறது. சமூகத் தகுதி, கல்வி பழக்க வழக்கம், ஆகியவற்றால் உயர்தர வாழ்க்கை முறையில் பழக்கப்பட்டிருக்கும் சிறைக் கைதிகள் 'எ' வகுப்பு பெறத் தகுதியுடையவராவர் முற்றிலும் நாகரீகமற்ற முறையில் அல்லது நன்னடத்தையற்ற முறையில் நடந்து கொண்டு குற்றத்தைச் செய்ததற்காகத் தண்டிக்கப்பட்ட எவருக்கும் 'எ' வகுப்பு அளிக்கத் தகுதியில்லை. 'எ' வகுப்பை சேராத இதர சிறைக் கைதிகள் 'பி' வகுப்பைச் சேர்ந்தவர்களாவர்.

6. (அ) 1. உணவு— சாதாரண உணவு முறை.—

முற்காலங்களில் பொதுவாக சிறை வாழ்க்கை என்பது சிறைவாசிகளுக்கு இராகிக் களி போன்ற தரமற்ற உணவு வழங்கப்படுவது மற்றும் கல் உடைப்பது போன்ற கடின வேலைகளில் ஈடுபடுத்துவது என்ற நிலை இருந்தது. தற்போது இது போன்ற கஷ்டங்கள் இல்லை. தற்போது சிறைவாசிகளுக்கு கீழ்க்கண்டவாறு சுழற்சி முறையில் வாராந்திர அட்டவணையின் கீழ் வழங்கப்படுகின்றது.

காலை.— பொங்கல்-சட்னி அல்லது உப்புமா-சட்னி அல்லது கஞ்சி-சட்னி.

மதியம்.—சாதம், சாம்பார், பொரியல் மற்றும் மோர்; அல்லது புளிசாதம் கூட்டு மற்றும் மோர்; அல்லது தேங்காய் சாதம், உருளைக் கிழங்கு மற்றும் மோர்; அல்லது சாதம், கீரை, பொரியல் மற்றும் மோர்; அல்லது சாதம், சாம்பார், பொரியல்.

மாலை.—வேர்க்கடலை சுண்டல்.

இரவு.—சாதம், சாம்பார்.

மேற்குறிப்பிட்ட உணவுப் பொருட்கள், பெரும்பான்மையான பொது மக்கள் வாங்கும் நிறுவனங்களான நுகர்ப்பொருள் வாணிபக் கழகம், காதி மற்றும் கிராமக் கைத்தொழில் நிறுவனம் மற்றும் கூட்டுறவுச் சங்கங்கள், பால் பண்ணை நிறுவனங்கள் மூலமாக பெறப்படுகின்றன. வறுமை நிலையிலுள்ள குடும்பங்களிலிருந்து வரும் சிறைவாசிகளுக்கு இவ்வகை உணவுகள் அவர்கள் வீட்டில் பெறுவதை விட மேம்பட்ட நிலையிலேயே உள்ளது. உண்மையில் சிறைவாசிகள் வறுமையினால் தங்கள் வீட்டில் பெற்ற உணவை விட சிறையில் பெறும் நல்ல உணவின் காரணமாய் எடை கூடுகின்றனர். இருப்பினும் சிறைவாசத்தினால் ஏற்படும் மன வருத்தம் காரணமாக சிலருக்கு அவ்விதம் கூடுவதில்லை.

'எ' வகுப்புச் சிறை கைதிகளுக்கு கொடுக்கப்படும் பல் வேறு வகை உணவின் விபரமும் அவற்றின் ஒரு நாள் செலவும் வருமாறு:—

| | நாளொன்றுக்கு நபர் ஒன்றுக்கு ரூபாய். |
|---|---|
| சைவ உணவருந்தும் வேலை செய்யும் சிறைக்கைதி ஒருவருக்கு. | 18.10 |
| சைவ உணவருந்தும் வேலை செய்யா சிறைக்கைதி ஒருவருக்கு. | 16.70 |
| அசைவ உணவருந்தும் வேலை செய்யும் சிறைக்கைதி ஒருவருக்கு | 19.20 |
| அசைவ உணவருந்தும் வேலை செய்யா சிறைக் கைதி ஒருவருக்கு. | 17.00 |

'பி' வகுப்புச் சிறைக் கைதிகள், சாதாரணக் காவலில் வைக்கப்பட்டவர்கள், விசாரணையிலுள்ள சிறைக் கைதிகள் ஆகியோருக்கு திருத்தியமைக்கப்பட்ட மேம்படுத்தப்பட்ட உணவு வகைகள் வழங்குவதற்கான செலவு வருமாறு:—

| | அரிசி உணவு. | கோதுமை உணவு |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| | ரூபாய். | ரூபாய். |
| வேலை செய்வோர் மற்றும் வேலை செய்யாதோர். | 9.50 | 9.50 |

பாலூட்டும் பெண் சிறைவாசிகளுக்கு சிறப்பு உணவாக 1 லிட்டர் பால் வழங்கப்படுகிறது. பெண் சிறைவாசிகளுடன் தங்கும் ஒரு வயதுக்கு குறைவான குழந்தைகளுக்கு மருத்துவ அலுவலரின் பரிந்துரையின்படி, க்ளாக்ஸோ, அமுல் போன்ற குழந்தை உணவுகள் வழங்கப்படுகின்றன.

'எ' வகுப்புக் கைதிகள் தங்களுடைய சொந்தச் செலவில் பழங்களையும் பிஸ்கட்டு, கோகோ, ஹார்லிக்ஸ் போன்ற உணவு பொருட்களையும் வாங்குவதற்கு அனுமதியளிக்கப்படுகிறார்கள். 'பி' வகுப்புச் சிறைக் கைதிகளுக்கு வரையறுத்த



அளவிற்கு சைவ உணவு மட்டுமே வழங்கப்படுகிறது. மருத்துவ அலுவலர், கைதிகளுக்கு மருத்துவக் காரணங்களுக்காக பால், இறைச்சி, முட்டை, ரொட்டி, வெண்ணெய் மற்றும் பழங்கள் ஆகியவற்றைக் கொடுக்க அனுமதி வழங்கலாம்.

(ஆ) சிறப்புணவு :

பொங்கல், சுதந்திர தினம் ஆகிய நாட்களில் சிறைக் கைதிகள் ஒவ்வொருவருக்கும் ரூ. 2 கூடுதல் செலவில் சிறப்புணவு வழங்கப்படுகிறது.

(இ) உடையும், படுக்கையும் :

'எ' வகுப்பு சிறைக் கைதிகள் சொந்தப் படுக்கையைப் பயன்படுத்தவும், வேலை நேரத்தைத் தவிர மற்ற நேரங்களில் சொந்த உடையைப் பயன்படுத்தவும் அனுமதிக்கப்படுகிறார்கள். வேலை நேரத்தில் அவர்கள் சிறைச் சாலை உடையில் இருக்க வேண்டும். 'எ' வகுப்புச் சிறைக் கைதிகள் அவர்களின் உறவினர்களைக் காணும்போது தங்கள் சொந்த உடைகளை அணியலாம். ஆனால் 'பி' வகுப்பு சிறைக் கைதிகள் எல்லா நேரங்களிலும் சிறைச்சாலை உடையிலேயே அணிய வேண்டும். பெண் சிறைவாசிகளுக்கு மூன்று ஜோடி உடைகளும், இரண்டு டவல் மற்றும் மூன்று உள்ளாடைகள் (பாவாடை, சோளி/பிரா) வழங்கப்படுகிறது. பெண் ஆயுள் தண்டனை சிறைவாசிகளுக்கு முன்பு வழங்கப்பட்ட வெள்ளை நிறச் சேலை அமங்கலமாக கருதப்பட்டதால் சனவரி 1991 முதல் ஆயுள் தண்டனை பெண் சிறைவாசிகளுக்கு அரக்கு நிற சேலையும், மற்ற பெண் சிறைவாசிகளுக்கு நீல நிற சேலையும் வழங்க உத்தரவிடப்பட்டிருக்கிறது.

(ஈ) சோப்பு முதலியன :

எண்ணெய் தேய்த்துக் குளிப்பதற்காக சிறைக் கைதி ஒவ்வொருவருக்கும் திங்களுக்கு ஒரு முறை 30 கிராம் எண்ணெய் வழங்கப்படுகிறது. மேலும் அவர்களுக்குச் சிகைக்காய்த் தூளும், சலவை சோப்பும் வழங்கப்படுகிறது. கோயம்புத்தூர் மத்திய சிறையிலுள்ள நூற்பாலையில் வேலை செய்யும் சிறைக் கைதிகளுக்குக் கூடுதல் எண்ணெய் வழங்கப்படுகிறது. நன்னடத்தை உடைய அனைத்து வகுப்புச் சிறைக் கைதிகளுக்கும் தங்களுடைய நண்பர்கள் அல்லது உறவினர்களிடமிருந்து இரு வாரங்களுக்குத் தேவையான சோப்பு எண்ணெய், பற்பொடி ஆகியவற்றைப் பெற்றுக்கொள்ள அனுமதிக்கப்படுகிறார்கள்.

**(உ) நேர்க்காணலும், கடிதங்களும் :**

'எ' வகுப்பு சிறைக் கைதிகள் வாரத்திற்கு ஒரு முறை கடிதம் எழுதுவதற்கும், பெறுவதற்கும், இரு வாரங்களுக்கு ஒரு முறை ஒரு சமயத்தில், மூவருடன் அரை மணி நேரம் கலந்துரையாடவும் அனுமதிக்கப்படுகிறார்கள். 'பி' வகுப்பு சிறைக்கைதிகள் மாதத்திற்கு நான்கு கடிதங்கள் எழுதுவதற்கும், பெறுவதற்கும், மேலும் இரு வாரங்களுக்கு ஒரு முறை ஒரு சமயத்தில் மூவருடன் அரை மணி நேரம் கலந்துரையாடவும் அனுமதிக்கப்படுகிறார்கள்.

**(ஊ) செய்தித்தாள்களும், குறித்த கால வெளியீடுகளும் :**

அரசுச் செலவில் 'பி' வகுப்புச் சிறைக் கைதிகளுக்குக் கீழ்க்கண்ட நாளிதழ்கள் 40 சிறைவாசிகளுக்கு ஒன்று என்ற வீதம் வழங்கப்படுகிறது:—

1. தினமணி
2. தினத்தந்தி
3. தினமலர்
4. இந்து
5. நமது எம். ஜி. ஆர்.

ஒவ்வொரு மத்திய சிறைக்கும் இரண்டு இந்து நாளிதழ்கள் வழங்கப்படுகிறது. தெரிந்தெடுக்கப்பட்ட கால முறை பத்திரிக்கைகள் 100 பேருக்கு ஒன்று என்ற வீதத்தில் வழங்கப்படுகிறது.

'எ' வகுப்புச் சிறைக் கைதிகள் தங்கள் சொந்தச் செலவில் அரசு ஏற்பளித்த செய்தித்தாள்களை வாங்கிக் கொள்வதற்கு அனுமதிக்கப்படுகின்றனர். அனைத்து வகுப்புச் சிறைக் கைதிகளும் தங்கள் சொந்தச் செலவில் அரசு ஏற்பளித்த பத்திரிக்கைகளை வாங்கிக்கொள்ளவும் அனுமதிக்கப்படுகின்றனர். சிறைக் கைதிகளின் பயனுக்காக நல்ல தரமான புத்தகங்கள் சிறை நூலகத்தில் வைக்கப்பட்டுள்ளன. மேலும் உள்ளூர், நூலக ஆணைக்குழுவிடமிருந்தும், புத்தகங்கள் பெறப்பட்டு, சிறைக் கைதிகளுக்கு வழங்கப்படுகின்றன. சிறைக் கண்காணிப்பாளர்கள் தேவையெனக் கருதினால் மாவட்ட கல்வி அதிகாரி மற்றும் அவர்களது உதவியாளர்களைக் கலந்து ஆலோசித்துத் தயாரிக்கப்பட்ட பயனுள்ள புத்தகங்களின் பட்டியலிலுள்ள புத்தகங்களை வாங்குவதற்கு இயலும் வகைகளில் அப்பட்டியல் தயாரிக்கப்படுகிறது.



**(எ) சிறைவாசிகளுக்கு அனுமதிக்கப்பட்ட இதர சலுகைகள் :**

'எ' வகுப்புச் சிறைக் கைதிகள், மரச் சாமான்கள், கொசு வலை ஆகியவற்றைப் பயன்படுத்தவும், சமையலுக்கும், அருந்துவதற்கும், தேவைப்படும் அவர்களை சொந்த பாத்திரங்கள், புகையிலை ஆகியவை போன்ற பிற வசதிகளை பயன்படுத்தவும் அனுமதிக்கப்படுகிறார்கள். தண்டனை சிறைக் கைதிகள் அவர்களுடைய நன்னடத்தையைப் பொறுத்து அவர்கள் அனுபவித்துள்ள தண்டனைக் காலத்தைக் கணக்கிட்டும், இரவு காவல்காரர்கள், மேற்பார்வையாளர்கள் மற்றும் காவலர்கள் என நியமிக்கப்படுவதற்குத் தகுதியுடையவர்கள் ஆவர். சிறைக் கைதிகளின் தேவையை நிறைவு செய்வதற்காக அனைத்து மத்திய சிறைகளிலும், புதுக்கோட்டையில் உள்ள பார்ஸ்டல் பள்ளியிலும் முடிவெட்டுபவர் உள்ளனர். அரசு தற்போது 'பி' வகுப்பு சிறைவாசிகள் தங்களது துணிகளை சிறையில் உள்ள சலவையகத்தில் அவர்களது செலவில் சலவை செய்துகொள்ள அனுமதி வழங்கியுள்ளது.

**(ஏ) சிறைவாசிகளுக்கான பொழுதுபோக்கு வசதிகள் :**

ஞாயிற்றுக் கிழமைகள் மற்றும் சிறை விடுமுறை நாட்களில் மத்திய சிறையிலுள்ள, எல்லாச் சிறைக் கைதிகளும், கைப்பந்து கபடி, பூப்பந்து ஆகிய விளையாட்டுக்களை விளையாடவும், வேலூரிலுள்ள பெண்கள் தனிச் சிறையில் பெண் சிறைக் கைதிகள் வளைபந்து விளையாடவும் அனுமதிக்கப்படுகின்றனர். ஆழ் நிலை தியான முறை, அனைத்து மத்திய சிறைச் சாலைகளிலும், வேலூர் பெண்கள் தனிச் சிறையிலும், புதுக்கோட்டை சீர்திருத்தப் பள்ளியிலும், மகரிஷி நிறுவனம்மூலம் விரும்பும் சிறை கைதிகளுக்கு கற்பிக்கப்படுகின்றது. சென்னையிலுள்ள மத்திய சிறைக் கைதிகளுக்கு, சென்னை யோகாசன ஆலயம் மூலம் யோகாசன வகுப்புகள் நடத்த அரசு அனுமதித்துள்ளது. தற்போது, அனைத்து மத்திய சிறைகள் மற்றும் பெண்கள் தனிச்சிறை, வேலூர், மதுரை மற்றும் திறந்த வெளிச் சிறை, சிங்காநல்லூர் ஆகிய இடங்களில் பொது மக்கள் சேவை செய்பவர்களால் தொலைக் காட்சிப் பெட்டி சிறைவாசிகளின் உபயோகத்திற்காக வழங்கப்பட்டுள்ளது.

**7. சிறைக் கைதிகளுக்கான செய் தொழிலும், சிறைகளில் தொழிற் சாலைகளும் :—**

கடுங்காவல் தண்டனை பெற்ற சிறைக் கைதிகள் மட்டும் முன்பு சிறையில் பலவித வேலைகளில் அமர்த்தப்பட்டார்கள். தற்போது விருப்பம் உள்ள விசாரணை மற்ம் காவல்

கைதிகளும் சிறைகளில் வேலை செய்யவும் ஊதியம் பெறவும் அனுமதிக்கப்படுகின்றனர். சிறைக் கைதிகள் விடுதலை அடைந்த பின்பு அவர்களுக்குப் புது வாழ்வு கிடைக்க வகை செய்வதே அதன் நோக்கமாகும். எனவே, பயனில்லா வேலை மற்றும் உற்பத்தியை நோக்கமாகக் கொண்டிராத வேலைகள் தவிர்க்கப்படுகின்றன. சிறை வேலை, கடின உழைப்பு, நடுத்தர உழைப்பு, எளிய உழைப்பு என்று மூன்று வகைகளா கப் பிரிக்கப்பட்டுள்ளது. மருத்துவ அலுவலரின் ஆலோசனை யின்படி சிறைக் கைதிக்கு உரிய வேலை கொடுக்கப்படுகிறது. சிறைக் கைதிகள் விடுதலைக்குப் பின் அவர்களுக்கு உத விடும் வகையில் தச்சு வேலை, தையல் வேலை, நெசவு வேலை, சாயம் தோய்த்தல். கருமார் வேலை, தோல் பொருட் கள் செய்யும் பணி, புத்தகம் கட்டுதல், காகிதம் செய்தல், சோப்பு செய்தல் மற்றும் பினாயில் செய்தல் ஆகிய தொழில் கள் கற்றுக் கொடுக்கப்படுகின்றன. அவர்கள், நவீன வேளாண்மை முறைகள், பால் பண்ணை ஆகிய தொழில்களி லும் பயிற்றுவிக்கப்படுகிறார்கள். கோவை மத்திய சிறையில் நெசவுப் பிரிவு மற்றும் சாயப் பிரிவு அடங்கிய துணி ஆலை ஒன்றுள்ளது. அரசு தற்போது இத்துறையை ''பணித்துறை'' என அறிவித்து ஆணை வெளியிட்டு உள்ளது. இதனால் இத் துறையில் செய்யப்பட்ட பொருட்களை வாங்கும் பிற அரசுத் துறைகள் இந்தப் பொருட்களுக்கான மதிப்பினை செலுத்த தேவையில்லை. இந்த ஏற்பாடு சிறைத் துறையில் உற்பத்திக்கான கூடுதல் வழங்குதல் பிற அரசு துறைகளி டமிருந்து பெறவும் மற்றும் உற்பத்தி திறனை அதிகரிக்கவும் உதவும். மத்திய சிறைகள், வேலூரிலுள்ள பெண்கள் தனிச் சிறை, புதுக்கோட்டையிலுள்ள சீர்திருத்தப் பள்ளி ஆகியவை ஒவ்வொன்றிலுமுள்ள தொழில்களின் வாழ்க்கைத் தொழில் களின் பட்டியல் இணைப்பு 3-ல் குறிக்கப்பட்டுள்ளது.

## 8. எளிய: சிறு தொழில்கள் சிறைச் சாலையிலுள்ள சிறைக் கைதிகளுக்கு கற்றுத்தரப்படுகிறது.

தமிழ் நாடு சிறை சீர்திருத்தக் குழுவின் பரிந்துரையின் அடிப்படையில் எட்டு மத்திய சிறைகளிலும், புதுக்கோட்டை சீர்திருத்தப் பள்ளியிலும் உள்ள சிறைக் கைதிகளுக்குப் பயிற்சி அளிப்பதற்காக அரசு கீழ்க்காணும் எளிய சிறு தொழில்களை அவற்றிற்கெதிரே குறிப்பிட்ட சிறைகளில் துவக்கியுள்ளது.—

| | | |
|---|---|---|
| 1. | செங்கல் கட்டுமானத் தொழில். | .. மத்திய சிறை, வேலூர் |





| | | |
|---|---|---|
| 2. | குழாய்களைப் பழுது பார்த்து இணைத்தல். | .. மத்திய சிறை, மதுரை சேலம், திருச்சிராப்பள்ளி, பாளையங்கோட்டை. |
| 3. | எளிய மின் இணைப்புப் பயிற்சி | .. மத்திய சிறை, சென்னை, கடலூர், பார்ஸ்டல் பள்ளி, புதுக்கோட்டை. |
| 4. | வண்ணம் பூசுதல் (பெயர் பலகை எழுதுதல் உட்பட) | .. மத்திய சிறை, கோவை. |

சிறைவாசிகள் மேற்கண்ட தொழில்களில், பயிற்சி பெற்ற பின் சிறைக் கைதிகள் குறைந்த முதலீட்டில் சொந்தமாகத் தொழில் நடத்தி தங்கள் பிழைப்புக்கேற்ற வருமானம் தேடிக் கொள்ளலாம். மேலும், வேலூர் பெண்கள் தனிச் சிறையி லுள்ள 20 பெண் கைதிகளுக்கு ஒவ்வொராண்டும், வேலூர் 'நேரு யுவக் கேந்திரா' பயிற்சி ஆசிரியர்கள் மூலம் தையல் தொழிலில் பயிற்சியளிக்கப்பட வேண்டும் என்றும் அரசு கட்டளையிடுள்ளது. மேலும் அத் தொழிலில் தேர்ச்சிப் பெற்றவர்கள் அரசினர் தொழில் நுட்ப நிறுவனத் தேர்வுக்கு அனுப்பப்படுவார்கள்.

## 9. சிறைவாசி அலுவலர்கள் :

சிறைவாசி அலுவலர்கள் கீழ்க்காணும் வீதங்களில் பணிக் கொடை பெறத் தகுதியுள்ளவர்களாவார்கள்.—

| | | பணிக்கொடையின் வீதம் (ஒரு திங்களுக்கு). |
|---|---|---|
| 1. | சிறைவாசி இரவு காவலர்கள் | 0.50 |
| 2, | சிறைவாசி மேற்பார்வையாளர்கள் | 1.00 |
| 3. | சிறைவாசி காவலர்கள் | 2.00 |

## 10. சிறைவாசிகளுக்கான ஊதியம் ஈட்டும் திட்டம் :

அனைத்து மத்திய சிறைகளிலும், பார்ஸ்டல் பள்ளி, புதுக்கோட்டை மற்றும் பெண்கள் தனிச் சிறை, வேலூரிலும் சிறைவாசிகள் ஊதியம் ஈட்டும் திட்டம் தற்போது செயலி

ளுள்ளது. இத்திட்டத்தின் கீழ் சிறைவாசி ஒருவருக்கு நாளொன்றுக்கு வழங்கப்படக்கூடிய ஊதிய வீதங்கள் பின்வருமாறு:—

1. தேர்ச்சி பெற்ற தொழிலாளர்கள 2.00
2. ஓரளவு தேர்ச்சி பெற்ற தொழிலாளர்கள் 1.00
3. தேர்ச்சி பெறாத தொழிலாளர்கள் 0.50

## 11. மருத்துவம், துப்புரவு வசதிகள் :

ஒவ்வொரு மத்திய சிறையிலும், வேலூர் பெண்கள் தனிச் சிறையிலும், புதுக்கோட்டை சீர்திருத்தப் பள்ளியிலும் மருத்துவமனை உளளது. அதில் பகுதி நேர மருத்துவ அலுவலர் ஒருவரும் (அம்மாவட்டத்தில் மாவட்ட மருத்துவ அதிகாரி அல்லது மாவட்ட மருத்துவ அலுவலர் வேறு ஊரில் இருந்தால் உள்ளூரிலுள்ள அரசு மருத்துவமனை அல்லது மருத்துவக் கல்லூரியில் உள்ள சிவில் மருத்துவரின் பதவி நிலையிலுள்ள மருத்துவ அலுவலர்) ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட உதவி மருத்துவரும், ஒரு செவிலியரும் ஒன்று அல்லது இரண்டு மருந்தாக்குநரும் இரண்டு அல்லது மூன்று செவிலியர் உதவியாளர்களும் உள்ளனர். கண் மருத்துவம் மற்றும் மருத்துவ அதிகாரியின் பரிந்துரையின் பேரில் அரசு செலவில் தேவைப்படுகின்ற கைதிகளுக்கு இலவசமாக மூக்குக் கண்ணாடியும் வழங்கப்படுகிறது. மேலும் சிறையைப் பார்வையிடும் பல் மருத்துவரால் கைதிகளுக்குப் பல்நோய் சிகிச்சையும் அளிக்கப்படுகிறது. வேலூர் மத்திய சிறையில் தொழுநோய் கைதிகள் தனியாகப் பிரிக்கப்பட்டு, தனிக் கூடங்களில் வைக்கப்படுகின்றனர். இவர்களைக் கவனித்துக் கொள்வதற்காக இயற்கை முறை மருத்துவர் அமர்த்தப்பட்டுள்ளார். மனநிலை சரியில்லாத கைதிகள், மனநோய்க் குற்றவாளிகள ஆகியோர் அரசினர் தலைமையிட மருத்துவமனை உள நோய் மருத்துவர்கள் பரிந்துரையின் பேரில் சென்னை அரசு மனநலக் காப்பகத்திற்கு அனுப்பப்படுகின்றனர். அரசு தற்போது அனைத்து மத்திய சிறைகளிலும் நோயுள்ள சிறைவாசிகளை மருத்துவமனைக்கு எடுத்துச் செல்ல ஒரு நோயாளி ஊர்தி வழங்கியுள்ளது. அனைத்து மத்திய சிறை, பார்ஸ்டல் பள்ளி, புதுக்கோட்டை மற்றும் பெண்கள் தனிச்சிறை, வேலூரில் இரத்த பரிசோதனை நிலையம் அமைக்கவும் மற்றும் இ.சி.ஜி. சாதனம் வாங்கவும் அரசு அனுமதி வழங்கியுள்ளது. அகில இந்தியச் சிறை சீர்திருத்தக் குழுப் பரிந்துரையின் அடிப்படையில் கைதியின் உடல் நலம் மிகவும் கடுமையாகப் பாதிக்கும்போதும், ஆபத்தான நிலையில் இருக்கும் போதும் மருத்துவ மனையில் அவருடைய நண்பர்களும் உறவினர்களும் கைதியை தினந்தோறும் பார்க்க அனுமதித்து அரசு உத்தரவிட்டுள்ளது.





அனைத்து மத்திய சிறைகளிலும், வேலூர் பெண்கள் தனிச் சிறையிலும், புதுக்கோட்டை சீர்திருத்தப் பள்ளியிலும் தனிக் கிளைச் சிறைகளிலும் மற்றும் அனைத்து கிளைச் சிறைகளிலும் தண்ணீர் வசதியுடன் கூடிய நீரடிக் கழிப்பிடங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

## 12. சிறைவாசிகளுக்கு கல்வி வசதி :

ஒவ்வொரு மத்திய சிறையிலும் தகுதி பெற்ற ஆசிரியர்களைக் கொண்ட தொடக்கப் பள்ளி உள்ளது- முதியோர் கல்வி கற்பிக்க மாநில திறமையளிக்கும் நிறுவனம் சிறப்புப் பயிற்சி பெற்ற ஆசிரியர்களைக் கொண்டு சிறைகளின் புதிய முறையில் கைதிகளுக்குக் கல்வி புகட்டப்படுகின்றன. கல்வி பயிற்சிக்கான் பொருட்கள், மாநில திறமையளிக்கும் நிறுவனம் மூலமாக சிறைகளுக்கு வழங்கப்படும், சிறைக் கல்வியின் தரத்தை மேம்படுத்தும் பொருட்டு, சிறைக் கண்காணிப்பாளர்கள், சிறந்த கல்வி நிறுவனங்களிலிருந்து ஆசிரியர்களையும், விரிவுரையாளர்களையும் வரவளைத்து சிறை விடுமுறை நாட்களிலும் ஞாயிற்றுக் கிழமைகளிலும் விரிவுரையாற்ற ஏற்பாடு செய்கிறார்கள். அஞ்சல் வழிக் கல்வி மூலம் முதுகலைப் பட்டப் படிப்புத் தேர்வும், பி. ஜி. எல்.. பி. எல்.. பி. எட். எம். எட்.. போன்ற கல்வித் தேர்வுகளிலும் எழுத சிறைவாசிகள் அனுமதிக்கப்படுகிறார்கள். இது தொடர்பாச புத்தகங்களை வாங்கும் செலவு, தேர்வுகட்டணம் குறித்த செலவு இதர இடை நிகழ் செலவு ஆகிய செலவுகள் முழுவதையும் அரசு ஏற்றுக் கொள்கிறது சிறைவாசிகள் தேர்வு எழுத பெறாபட்டால். மறுமுறையும் அரசு செலவில் தேர்வு எழுதலாம். இது போன்று மொத்தம் மூன்று தடவை தேர்வுக்கு செல்ல அனுமதிக்கப்படுகிறார்கள். சிறைவாசிகள் தேர்வு எழுதச் செல்லும் போது அவர்கள் சங்கடப்படாமல் இருக்க சொந்த உடையிலேயே தேர்வு எழுத அனுமதிக்கப்படுகிறார்கள். அதே போன்று அவர்களைக் காவல் காத்து அழைத்து செல்லும் வழித் துணைக் காவலர்களும் சாதாரண உடை அணிந்து செல்லுகின்றனர்.

நீதி அல்லது மதம் சம்பந்தமாக போதனைகள் என்ற பெயரால் மத மாற்றம் செய்தல் கூடாது என்ற நிபந்தனையுடன் சிறையில் மதம். நீதி நெறி வகையான போதனைகளும் விரும்பப்படும் கைதிகளுக்கு அனுமதிக்கப்படுகின்றன.

## 13. இளைஞர் சீர்திருத்தப் பள்ளி, புதுக்கோட்டை.:

18 வயதிலிருந்து 23 வயது வரை உள்ள இளங்குற்றவாளிகள் புதுக்கோட்டை இளைஞர் சீர்திருத்தப் பள்ளியில் சேர்க்கப்படுகின்றனர். இப்பள்ளி மாணவர்களுக்குக் கீழே கொடுக்கப்பட்டுள்ள தொழில்களில் அல்லது வாழ்க்கைத் தொழில் கல்வியில் பயிற்சி அளிக்கப்படுகிறது :—

1. தச்சு வேலை.
2. கருமார் வேலை.
3. புத்தகம் கட்டுதல்.
4. தையல் வேலை.
5. வேளாண்மை
6. கட்டுமான வேலை.
7. சலவைத் தொழில்
8. பாண்டு இசைக்கருவி பயிற்சி
9. சமையல் வேலை போன்ற வீட்டு வேலைகள்.

அவர்கள் அங்கிருந்து விடுதலை செய்யப்பட்ட பின்னர் வேலை தேடிக்கொள்ள இயலும் பொருட்டு அவர்களுக்குச் சான்றிதழ்கள் வழங்கப்படுகின்றன. இங்குள்ள துயிற்கூடம் ஒன்று இளங்குற்றவாளிகளுக்கான இடமாக மாற்றப்பட்டு அங்கு 18–25 வயது தொகுதியைச் சேர்ந்த இளங்குற்றவாளிகள் வைக்கப்படுகின்றனர். அவர்கள் 25 வயது வரை அப்பள்ளியில் வைக்கப்படுகின்றனர். புதுக்கோட்டை இளைஞர் சீர்திருத்தப் பள்ளியிலுள்ள துயிற்கூடம் 1894 ஆம் ஆண்டு சிறைச்சாலை சட்டத்தின் கீழ் 'சிறையாக' அறிவிக்கப்பட்டுள்ளது. சீர்திருத்தப் பள்ளியிலிருந்து விடுதலை செய்யப்பட்டவர்களின் புது வாழ்வுக்காக, இயந்திரங்கள், பசு அல்லது எருமை வாங்க நிதி உதவி வழங்கப்படுகிறது, இவ்வகையாக அவர்களுக்கு அளிக்கப்படும் நிதி உதவி அவர்கள் விரும்பினால் எளிய தவணையிலும் வசூலிக்கப்படுகிறது.

தமிழ் நாடு சிறைச் சீர்திருத்த கமிஷன் பரிந்துரையின்படி சிறைவாசிகள் பணியாளர் ஒருவரின் பொறுப்பில் 15 நாட்களுக்கு திறந்த வெளியில் ஒரு கூடாரத்தின் கீழ்த் தங்கியிருக்க இளைஞர் சீர்திருத்தப் பள்ளியைச் சேர்ந்த 25 பேர்களுக்கு



ஆண்டு முகாமிற்கு ஏற்பாடு செய்யப்படுகிறது. தற்போது புதுக்கோட்டை இளைஞர் சீர்திருத்தப் பள்ளியில் இலங்கை அகதிகள் வைக்கப்பட்டுள்ளனர். இதனால் பார்ஸ்டல் பள்ளி இல்லவசிகள் தற்போது திருச்சி மத்திய சிறையிலுள்ள தனி வளாகத்தில் வைக்கப்பட்டுள்ளனர்.

## 14. ஆடவர் பிற்காப்பு இல்லம். புழல் :

சீர்திருத்தப் பள்ளிகளிலிருந்தும், சீர்திருத்தப் பள்ளி சாராத பிற நிறுவனங்களிலிருந்தும் வெளிவரும் அத்தகையோர், ஆதாயம் தரத்தக்க சொந்தத் தொழில் புரிந்து நல்ல முறையில் வாழ்வை அமைத்துக் கொள்ள இயலும் வகையில், இரண்டு ஆண்டுகளுக்குத் தச்சு வேலை, உலோக வேலை, தையல் வேலை ஆகியவற்றில் பயிற்சி அளிக்கப்படுவதற்காக இந்த ஆடவர் பிற்காப்பு இல்லம் துவக்கப்பட்டது. பயிற்சிக் காலத்தில் இவர்களுக்கு இலவசமாக உணவு, உடை, இருப்பிடம் அளிக்கப்படுவதோடு முதலாண்டில் நாள் ஒன்றுக்கு ரூ. 1.50 வீதமும், இரண்டாம் ஆண்டில் நாள் ஒன்றுக்கு 2.00 வீதமும் பயிற்சி உதவித் தொகை வழங்கப்பட்டது. பிற்காப்பு இல்லத்திற்கு செல்பவர்கள் இல்லாமையால் இவ்வில்லம் தற்போது செயல்படவில்லை.

## 15. சிறைப் பார்வையளர்கள் :

மாஜிஸ்ட்ரேட்டுகளையும், நீதிபதிகளையும் மற்றும் மருத்துவம், நல்வாழ்வு, தொழில்கள், தீயணைப்புப் பணிகள், ஏனைய துறைகளிலிருந்து நியமிக்கப்படும் அரசு சார்புள்ள பார்வையாளர்களைத் தவிர, இத்துறையில் நாட்டமுள்ள பொது மக்கள், முக்கியமாகப் சமூகப்பணியாளர்கள், உள்நோய் மருத்துவ வல்லுநர்கள், உள நூல் வல்லுநர்கள் மற்றும் சமூகவியலாளர்கள் ஆகியோர் ஒவ்வொரு சிறையிலும் அலுவல் சார்பற்ற சிறைப் பார்வையாளர்களாக நியமிக்கப்படுகின்றனர். சிறைவாசிகளை நடத்தும் விதம் சிறைகளை நிருவகிப்பது தொடர்பான சட்டங்கள், விதிகள் ஒழுங்குமுறை விதிகள் ஆகியன சிறைகளில் உரியவாறு செயற்படுத்தப்படுகின்றனவா என்றும் சிறைகளில் பல பகுதிகளுக்குச் சென்று அங்குள்ள கைதிகளை பார்வையிட்டு, அவர்களில் எவரேனும் அவர்களிடம் புகார் செய்தால் அதனைச் சரி செய்யவும் செய்கின்றனர். சிறைப் பார்வையாளரின் பதவிக் காலம் மூன்று ஆண்டுகளாகும்.

## 16. சிறைவாசிகளை விடுப்பில் விடுதல் :

சிறைவாசிகள் தங்களது குடும்பத் தேவைகளை கவனிப்பதற்காக, சம்பந்தப்பட்ட குற்றவாளிகள் நன்னடத்தை கண்காணிப்பு அலுவலர் மற்றும் சிறைக் கண்காணிப்பாளரின்

அறிக்கையைப் பெற்று பிறகு அவர்களுக்கு அரசால் விடுப்பு அளிக்கப்பட்டு வந்தது. அரசு இந்த அதிகாரத்தை தற்போது நான்கு சரக சிறைத் துறைத் துணைத் தலைவர்களுக்கு வழங்கியுள்ளது. மூன்று ஆண்டு ஆரம்ப சிறைத் தண்டனை அனுபவித்துள்ளவரும், இது வரையில் விடுப்பில் செல்லாதவருமான சிறைவாசிகளுக்கு முதலில் ஒரு மாத விடுப்பு அளிக்கப்படுகிறது. அதன் பிறகு கடைசியாக விடுப்பில் சென்று திரும்பிய நாளிலிருந்து இரண்டாண்டுகள் சிறைத் தண்டனை அனுபவித்த பிறகு மீண்டும் விடுப்பு அளிக்கப்படுகிறது. தனிநேர்வுகல் காப்பு விடுப்பில் செல்ல அரசு அனுமதியளிக்கிறது. இன்னும் 3 ஆண்டுக்காலம் மட்டும் சிறைத் தண்டனை அனுபவிக்க வேண்டிய கைதிகளுக்கு அவர்கள் சிறையிலிருந்து விடுவிக்கப்பட்டபின், வாழ்க்கையை அமைத்துக்கொள்வதற்கு இயலும் வண்ணம் ஒவ்வொரு ஆண்டுக்கும் ஒரு மாதம் என்ற வீதத்தில் அவர்களுக்கு விடுப்பு அளிக்கப்படுகிறது.

இவ்விடுப்புடன் சிறைவாசிகள் தங்களுடைய நெருங்கிய உறவினர்களான தந்தை/தாய்/கணவன்/மனைவி/சொந்த மகன்/சொந்த சகோதரி/ சொந்த சகோதரன் மிகவும் ஆபத்தான நிலையில் நோய்வாய்ப்பட்டிருந்தாலோ அல்லது இறந்து போனாலோ அவர்களைச் சென்று பார்க்கவும், சிறைவாசிகள் அல்லது அவர்களை நெருங்கிய உறவினர்களான சொந்த மகன்/சொந்த மகள்/சொந்த சகோதரர்/சொந்த சகோதரி ஆகியோரின் திருமணத்தில் கலந்து கொள்வதற்காகவும் சிறைக் கண்காணிப்பாளர்களால் அவசர கால விடுப்பு அனுமதிக்கப்படுகிறது. இத்தகைய அவசர கால விடுப்பு ஓர் ஆண்டிற்கு 15 நாட்களுக்கு மேற்படக்கூடாது என்ற நிபந்தனைகளுக்குட்பட்டு 4 முறைகளில் சிறைவாசியின் வசதிக்கேற்ப (6+3+3+3) என அளிக்கப்படுகிறது. இத்தகைய விடுப்புகள் சிறைவாசியின் நடத்தை நன்முறையில் இருந்தால் மட்டுமே வழங்கப்படுகிறது.

17. தண்டனை குறைப்பு :

சிறைவாசிகளுக்கு நீதிமன்றத்தால் வழங்கப்பட்ட தண்டனையை குறைப்பதே தண்டனைக் குறைப்பு என்பதாகும்.

(அ) (1) சிறைவாசிகளின் நன்னடத்தை வேலை செய்யும் ஆர்வம், ஆகியவற்றை வளர்க்கவும், ஊக்கமளிக்கவும் பலவிதமான தண்டனை குறைப்புகள் சிறைவாசிகளுக்கு அனுமதிக்கப்படுகின்றன. சிறைவாசிகள் நன்னடத்தைக்காக ஒரு மாதத்திற்கு இரண்டு நாட்கள் தண்டனைக் குறைப்பும் அவர்கள் செய்யும் சிறந்த பணிக்காக ஒரு மாதத்திற்கு இரண்டு நாட்கள்



தண்டனைக்குறைப்பும், சாதாரண வகை தண்டனைக் குறைப்புகளாக அளிக்கப்படுகின்றன. சிறைப் பணிகளுக்காக ஞாயிறு அன்றும், ஏனைய சிறை விடுமுறை நாட்களிலும் சமையற்காரர்களாவும், துப்புரவு செய்வோராகவும் பணிபுரியவேண்டிய கைதிகளுக்கு இவ்விதிகளின் கீழ அவர்கள் ஈட்டிய ஏனைய தண்டனைக் குறைப்போடு மூன்று மாதத்திற்கு மூன்று நாட்கள் தண்டனைக்குறைப்பும் வழங்கப்படுகிறது. தண்டனைக் கைதியாக இருந்து பின்னர் கைதிக் காவலர்களாக நியமிக்கப்பட்டவர்களுக்கு மாதத்திற்கு எட்டு நாட்கள் தண்டனைக் குறைப்பு வழங்கப்படுகிறது. சிறைகளில் ஒழுங்கு அல்லது கட்டுப்பாட்டை பேணி வரும் சிறைவாசிகளுக்கு சிறைக் கண்காணிப்பாளரால் சிறப்புத் தண்டனைக் குறைப்பாக ஓர் ஆண்டிற்கு 30 நாட்களும், சிறந்த நற்பணிக்காக சிறப்பு தண்டனைக்குறைப்பாக சிறைத் துறைத் தலைவரால் ஓர் ஆண்டிற்கு 60 நாட்களும் அளிக்கப்படுகிறது. கருத்தடை அறுவை சிகிச்சை செய்துகொள்ளும் சிறைவாசிகளுக்கு உயரளவு ஓராண்டுக் கால சிறப்புத் தண்டனைக் குறைப்பும், இரத்த தானம் செய்யும் சிறைவாசிகளுக்கு ஒரு சமயத்தில் 15 நாட்கள் தண்டனைக் குறைப்பும் அளிக்கப்படுகின்றன. மேற்கண்ட தண்டனைக் குறைப்புகளைத் தவிர, ஆயுள் தண்டனை அடைந்த, மற்றும் மூன்றாண்டுகளுக்கு மேல் தண்டனையடைந்த சிறைவாசிகளை முன்னதாக விடுதலை செய்வது குறித்து ஒவ்வொரு சிறையிலுமுள்ள அறிவுரைக் கழகம் பரிசீலனை செய்கிறது.

2. அந்த சிறைவாசியின் கடந்த கால நன்னடத்தை பற்றிய குறிப்பையும், உள்ளீர் அதிகாரிகளின் அதாவது மாவட்ட ஆட்சித் தலைவர், நன்னடத்தை அலுவலர், சிறைக கண்காணிப்பாளர் ஆகியோர் அளித்த அறிக்கையையும் பரிசீலித்து. அச்சிறைவாசியை அவருக்கு அளிக்கப்பட்ட சிறை தண்டனைக் கால அளவு முடிவடைவதற்கு முன்னரே விடுவிக்க, அரசின் பரிசீலனைக்காக இக்குழு தனது பரிந்துரையினை அரசுக்கு அனுப்பி வைக்கிறது.

3. சென்னை உயர்நீதிமன்றம் டபிள்யூ பி. எண். 3430/82, நாள் 2—11—1983-ல் அளித்த தீர்ப்பின்அடிப்படையில் ஆயுள் தண்டனையடைந்த சிறைவாசிகளை முன்விடுதலை செய்வது குறித்துபரிசீலனை செய்வதற்காக பின்பற்றத்தக்க தான சில வழிமுறைகளை அரசு வெளியிட்டுள்ளது. இந்த ஆணையின்படி, ஒரு ஆயுள் தண்டனை அடைந்த சிறைவாசி 10½ ஆண்டுகள் தண்டனை அனுபவிக்க வேண்டும். 10½ ஆண்டுகள் தண்டனை அனுபவித்த ஆயுள் தண்டனையடைந்த சிறைவாசிகளின் நேர்வு மட்டுமே முன் விடுதலைக்காக அறிவுரைக் கழகத்தால் பரிசீலனை செய்யப்படுகின்றன. குற்றவியல் நடைமுறைச் சட்டக் கோவையின் 433.ஏ பிரிவின்

படி ஆயுள் தண்டனை பெற்ற சிறைவாசிகள் (அதாவது 18—12—1978 அன்றோ அல்லது அதற்குப் பின்னரோ தண்டனையடைந்தவர்கள்) 14 ஆண்டு காலம் தண்டனை அனுபவித்த பின்பே அறிவுரைக் கழகத்தால் முன் விடுதலைக்காக பரிசீலனை செய்யப்படுகிறார்கள். இவ்வகையான நேர்வுகள் 18—12—1992-க்கு பின்னர் தான் பரிசீலனைக்கு வரும்,

4. 18—12—1978-க்கு முன் ஆயுள் தண்டனை பெற்ற வியாதியுள்ள சிறைவாசிகளை மருத்துவ காரணங்களை முன்னிட்டு முன் விடுதலை செய்வது தொடர்பாக சிறை மருத்துவ அலுவலரின் பரிந்துரையின் பேரில் மாநில சிறைச்சாலை நடைமுறை நூலில் உள்ள விதிகளின்படி பரிசீலனை செய்யப்படுகிறது.

5. புதுக்கோட்டை, சீர்திருத்தப் பள்ளியிலுள்ளோரைப் பொறுத்த வரையில் தண்டனைக் காலம் முடியுமுன் விடுதலை செய்யும் முறை (விடுதலை அல்லது நல்லிணக்கத்தின் பேரில் விடுதலை செய்தல்) செயலில் உள்ளது. ஆனால் இது குறித்து பின்பற்றப்படும். நடைமுறை வேறாகும். 1925 ஆம் ஆண்டு சீர்திருத்தப் பள்ளிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 5/1926) 15-ஆம் பிரிவைச் சேர்ந்த (1) உட்பிரிவின்படி, நல்லிணக்கத்தின் பேரில் விடுதலை செய்யக் கருதப்பட்டுள்ளோரின் பெயர்களையும், அவர்கள் பெற்ற வாழ்க்கைத் தொழில் பயிற்சி குறித்த விவரங்களையும், உரிய விசாரணைகளைச் செய்து அவற்றின் மூலம் பெற்ற தகவலை பார்வையிடும் குழுவிடம் தாக்கல் செய்ய இயலும் வகையில், அக்குழு கூடுவதற்கு 6 வாரங்களுக்கு முன்னர் வெளியூர்களாயிருந்தால் அந்தந்த மாவட்டங்களிலுள்ள நன்னடத்தை அலுவலர்களுக்கும், சென்னை மாநகரைப் பொறுத்த மட்டில் தலைமை நன்னடத்தை கண்காணிப்பாளருக்கும், சீர்திருத்தப் பள்ளி கண்காணிப்பாளர் அனுப்பி வைக்க வேண்டும். நல்லிணக்கத்தின் பெயரில் விடுதலை செய்வதற்காகப் பார்வையிடும் குழு பரிந்துரைத்துள்ள இளங்குற்றவாளிகள்பற்றி பரிசீலித்து, பின்னர் சிறைத் துறைத் தலைவர் ஆணை பிறப்பிக்கிறார்.

(6). அனைத்திந்திய சிறை சீர்திருத்தக் குழுவின் பரிந்துரையின் அடிப்படையில் அரசு ஆணை எண் 1762, உள்துறைசிறை நாள் 20—7—1987-ல் கீழ்க்காணும் வகையைச் சார்ந்த சிறைவாசிகளின் நேர்வுகள் முன் விடுதலைக்காக பரிசீலிக்கப்படக் கூடாது என ஆணை பிறப்பித்துள்ளது.

(1) கற்பழிப்பு, பொய் கையெழுத்து, கொள்ளை ஆகிய குற்றங்களுக்காக தண்டனை பெற்ற சிறைவாசிகள், பயங்கரவாத குற்றவாளிகள் மற்றும் மாநிலத்திற்கெதிரான குற்றங்களுக்காக தண்டிக்கப்பட்ட சிறைவாசிகள், மற்றும் இந்திய தண்டனை சட்டத்தின் பிரிவுகள் 224, 376, 396 முதல் 400 வரை, 402, 467, 471, 472, 474, 498ஏ, 498பி மற்றும் 489டி ஆகியபிரிவு களின் கீழ் தண்டனை அடைந்த சிறைவாசிகள்.



(2) பொருளாதாரக் குற்றங்களுக்காக தண்டிக்கப்பட்ட சிறைவாசிகள், பொருட்களை பதுக்கி வைத்தல், கடத்தல் மற்றும் அதிகாரத்தை தவறாகப் பயன்படுத்தியதற்காக தண்டனை பெற்ற சிறைவாசிகள்.

(3) லஞ்ச ஒழிப்பு தடுப்புச் சட்டத்தின் கீழ் தண்டனை பெற்ற சிறைவாசிகள் பெண்கள் மகளிர் விபச்சாரத் தடைச் சட்டம், மருத்துவச் சட்டம் மற்றும் உணவுக் கலப்படத் தடுப்பு சட்டத்தின் கீழ் தண்டிக்கப்பட்ட சிறைவாசிகள்.

(ஆ) (1) டாக்டர் பி. ஆர். அம்பேத்கார் அவர்களின் நூற்றாண்டு நிறைவு விழாவினையொட்டி 14-4-1990 அன்று 12 வருட சிறைத்தண்டனையினை கழித்த அனைத்து சிறைவாசிகளையும் மேலே கூறிய பத்தி 17(அ)வில் தண்டனை குறைப்புக்கு வலக்கப்பட்டவர்களைத் தவிர அனைவரையும் விடுவிக்க ஆணையிட்டதின் பேரில் 26 சிறைவாசிகள் விடுதலை செய்யப்பட்டுள்ளனர்.

(2) பாவேந்தர் பாரதிதாசன் அவர்களின் நூற்றாண்டு விழாவின் ஞாபகார்த்தமாக ஒரு சில சிறைவாசிகளுக்கு கீழ்க்காணும் தண்டனைக் குறைப்பு வழங்கப்பட்டுள்ளது :—

(அ) கொலை, கள்ளக்கடத்தல் போன்ற குற்றங்களுக்காக தண்டனை பெற்றவர் தவிர, ஏனைய குற்றங்கள் புரிந்த அனைத்து பெண் சிறைவாசிகளுக்கும் முழு தண்டனை குறைப்பு.

(ஆ) ஆண் சிறைவாசிகளை பொறுத்த மட்டில் ஆயுள் தண்டனை சிறைவாசிகள் தவிர ஏனைய சிறைவாசிகளுக்கு ஆறு மாதங்கள்.

இந்த ஆணையின்படி 1090 ஆண் சிறைவாசிகளும் 91 பெண் சிறைவாசிகளும் விடுதலை செய்யப்பட்டுள்ளனர்.

18 சிறைவாசிகளின் நலன் :

மத்திய சிறைகள் ஒவ்வொன்றிலும், ஒரு பதவி வீதம் எட்டு மத்திய சிறைகளில் எட்டு பதவிகளும், வேலூரில் பெண்கள் தனிச் சிறையில் ஒரு பதவியும், புதுக்கோட்டை சீர்திருத்தப பள்ளியில் ஒரு பதவியும் ஆக மொத்தம் பத்து நல அலுவலர் பதவிகள் உள்ளன. இந்த நல அலுவலர், சிறையின் விதிமுறைக்கேற்ப சிறைவாசிகளுக்கு அவ்வப்போது வேண்டிய உதவிகளை அளித்தும், அவர்கள் உறவினர்களுடன் கடிதத் தொடர்பு கொள்ள உதவி செய்தும் வருகிறார். மேலும், தனிப்பட்ட முறையில் மேல் முறையீடு செய்ய வசதி இல்லாத சிறைவாசிகளுக்கு மேல் முறையீடு செய்யவும் உதவி செய்கிறார்.

பெண் சிறைவாசிகளின் குழந்தைகள் 6 வயதுக்குள் இருந்தால், அக்குழந்தைகள் தாயோடு, சிறையில் வைக்கப்படுகின்றனர். அக்குழந்தைகளுக்காக ஒரு குழந்தைகள் காப்பகமும், வேலூர் மாநில மகளிர் சிறையில் செயல்பட்டு வருகிறது. அவர்களை சரியான முறையில் வைத்துப் பராமரிக்க ஒருவரும் முன்வராவிட்டால், அக் குழந்தைகள் 6 வயது அடைந்தவுடன தங்கள் தாயாருடன் தங்கியிருக்க தகுதியற்றவர்களாவர். அப்பொழுது அவர்கள் சென்னை மாநகரை சேர்ந்தவர்களாயிருந்தால், சென்னையிலுள்ள பால மந்திர் மருத்துவமனைக்கும், மாநிலத்திலுள்ள இதர பாகங்களைச் சேர்ந்வர்களாயிருந்தால் மதுரை காந்தி ஆசிரமத்திலுள்ள குழந்தை இல்லத்திற்கும் அனுப்பபடுகின்றனர். சிவானந்தா அனாதை இல்லம் மற்றும் தாம்பரத்திலுள்ள எஸ். ஓ. எஸ். அனாதை இல்லம் ஆகிய இல்லங்களில் சிறைவாசிகளின் குழந்தைகளை கவனித்துக் கொள்ள அனுமதி அளிக்கப்பட்டுள்ளது.

ஒவ்வொரு மத்திய சிறையிலும், சிறைவாசிகளின் பயனுக்காக பண்பாட்டுக் குழு ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. இந்த பண்பாட்டுக் குழு சிறைவாசிகளின் நன்மைக்காக சிறைக்குள் குறிப்பிட்ட காலத்திற்கொருமுறை திரைப்படம் காட்டுகிறது. மேலும் வெளியில் உள்ளவர்களைக்கொண்டு பலவகை கேளிக்கை நிகழ்ச்சிகளை நடத்துவதற்கும் ஏற்பாடு செய்கிறது. அனைத்து மத்திய சிறைகளில் ஒரு 35 எம். எம். திரைப்படம் காட்டும் கருவி உள்ளது.

மத்திய சிறைகள் அனைத்திலும், சிறைவாசிகளுக்காக சிற்றுண்டி விடுதிகள் செயல்பட்டு வருகின்றன. தங்கள் கணக்கில் பணம் வைத்திருக்கும் சிறைவாசிகளும் பணிக்கொடை ஈட்டும் சிறைவாசிகளும் இந்த சிற்றுண்டி விடுதி வசதியைப் பயன் படுத்த அனுமதிக்கப்படுகின்றனர். இந்திய குடியரசு தலைவரால், கருணை மனு நிராகரிக்கப்பட்டு, மரண தண்டனை நிறைவேற்றப்பட இருக்கும் சிறைவாசிகளின் நெருங்கிய உறவினர்களான தந்தை/தாய்/மனைவி/மகன்/மகள்/ சொந்த சகோதரன்/சொந்த சகோதரி ஆகிய நெருங்கிய உறவினர்கள் 5 நபர்களுக்கு மேற்படாமல், அச்சிறைவாசி தூக்கிலிடப்படுவதற்கு முன் வந்து பார்த்து திரும்புவதற்கு வசதியாக தமிழ்நாட்டிலுள்ள எவ்விடத்திலிருந்தும் குறைந்த வழித்தடம் மூலம், குறைந்தபட்ச வகுப்பில் புகை வண்டி அல்லது சாலை வழிப் பயண போக்குவரத்து செலவுகளை அனுமதிக்க எல்லா மத்திய சிறைகள், புதுக்கோட்டையிலுள்ள சீர்திருத்தப்பள்ளி மற்றும் வேலூர் மாநில மகளிர் சிறை ஆகியவற்றின் கண்காணிப்பாளர்களுக்கு அரசு அதிகாரம் அளித்துள்ளது.



19. சிறைவாசிகளுக்கு இலவச சட்ட உதவி :

விசாரணை சிறைவாசிகளுக்கும், தண்டனை அடைந்த சிறைவாசிகளுக்கும் தமிழ்நாடு, மாநில சட்ட உதவி ஆலோசனை குழு இலவச சட்ட உதவி அளித்து வருகிறது. சிறைவாசிகளுக்கு சட்ட உதவி அளிப்பதற்காக இக்குழு பணி வழக்குரைஞர்களை அனைத்து நிறுவனங்களுக்கும் அனுப்பி வருகிறது.

20. சிறைகளில் புகார் பெட்டிகள் வைத்தல் :

எல்லா மத்திய சிறைகளிலும் புதுக்கோட்டை சீர்திருத்தப் பள்ளியிலும் மூன்று புகார் பெட்டிகளும் மற்றும் வேலூர் தனி மகளிர்ச் சிறையில் இரண்டு புகார் பெட்டிகளும் சிறைவாசிகள் தங்கள் குறைகளை தெரிவிக்க இயலும் வகையில், புகார் மனுக்களைத் தாக்கல் செய்ய முத்திரையிடப்பட்ட புகார்ப்பெட்டிகள் சிறைவாசிகளுக்கு எளிதில் எட்டும் இடங்களில் வைக்கப் பட்டுள்ளன. சிறைவாசிகளுக்கு எழுது பொருட்கள் கொடுக்கப்படுகின்றன. புகார்/குறை மனுக்கள் போடப்பட்டுள்ள பெட்டிகள், ஒவ்வொரு மாதத்தின் முதல் பணி நாளில், சிறை அதிகாரிகளால் மாவட்ட செஷன்ஸ் நீதிபதிகளின் முன்னிலையில் கொண்டு வரப்படுகின்றன. அவை ஒவ்வொன்றையும் அவர்கள் திறந்து, அம்மனுக்களை ஆய்வு செய்து, சிறை அதிகாரிகள் அல்லது அரசு அல்லது சிறைத் துறைத் தலைவர், நடவடிக்கை எடுக்க வேண்டியவற்றின் பகுதி நகல்களை சம்பந்தப்பட்டவர்களுக்கு அனுப்புவர். சிறைவாசிகள் கொடுக்கும் புகார்களின் மீது நடவடிக்கை எடுக்கப்படுகிறது. மேற்காணும் நிறுவனங்களில் முறைகேடு செய்ய இயலாவண்ணம் இரும்பினால் தயாரிக்கப்பட்ட புகார் பெட்டிகள் வைக்கப்பட்டுள்ளன.

21. பயிற்சி.

(அ) சிறைக் காவலர்களின் பயிற்சிப் பள்ளி, வேலூர்.

இப்பயிற்சிப் பள்ளியில் பல்வேறு சிறைகளிலுள்ள 100 இரண்டாம் நிலைச் சிறைக் காவலர்களுக்கு உடற்பயிற்சி, ஒழுங்கு, சிறை நிர்வாகம் கோட்பாடுகள் மற்றும் சீர்திருத்த முறைகளை கடைபிடித்தல் போன்ற பல்வேறு துறைகளில் பயிற்சி அளிக்கப்படுகிறது. பயிற்சிக் கால அளவு 6 திங்களாகும். மேலும் 25 முதல் நிலை சிறை காவலர்களுக்கும், 4 முதன்மை தலைமை காவலர்களுக்கும் முறையே 30, 15 நாட்களுக்கு நினைவூட்டுப் பயிற்சி அளிக்கப்படுகிறது. மேலும் பயிற்சிக் காலத்தில் சீர்திருத்த முறைப்படி சிறைவாசிகளை அணுகும் முறை குறித்துப் பயிற்சி அளிக்க முக்கியத்துவம் அளிக்கப்படுகிறது. சிறைக் காவலர் பயிற்சி பள்ளியினை முன்னேற்றம் செய்ய அரசு தற்போது ரூ. 24.07 இலட்சம் ஒப்புதல் வழங்கியுள்ளது.

**(ஆ) மண்டல சிறை சீர்திருத்த பயிற்சி நிறுவனம், வேலூர்.**

தென் மாநிலங்களைச் சேர்ந்த (ஆந்திரப் பிரதேசம், கர்நாடகம், கேரளம், தமிழ்நாடு) குற்றவாளிகள் சீர்திருத்த அலுவலர்களுக்கான மண்டல சிறை சீர்திருத்த பயிற்சி நிறுவனம் ஒன்று வேலூரில் 1—10—1979 முதல் செயல்பட்டு வருகிறது. சிறைகள், நன்னடத்தை கண்காணிப்பு பிரிவு, சான்றளிக்கப்பட்ட பளளிகள், சீர்திருத்தப் பள்ளிகள் மற்றும் சீர்திருத்தப் பணியிலும் அது தொடர்பான பணிகளிலும் ஈடுபட்டிருக்கிற இதுபோன்ற பிற நிறுவனங்கள் ஆகியவற்றிலுளள அலுவலர்களுக்கு குற்றங்களைத் தடுக்கவும். குற்றவாளிகளைச் சீர்திருத்தவும் குற்றவாளிகளுக்கு மறு பணி நோக்குப் பயிற்சி அளிக்கும் பொருட்டு தொழில் வகையில் நுட்ப அறிவு பயிற்சித் திறன் ஆகியவற்றில் பயிற்சி அளித்து, சமூக தொழில் மறுவாழ்வுக்கு அவர்களைத் தயார் செய்வது பயிற்சிப் பள்ளியின் நோக்கமாகும். மத்திய சிறைகளில் உதவி சிறை அலுவலர் முதற்கொண்டு கூடுதல் சிறைக் கண்காணிப்பாளர் வரையுள்ளவர்களுக்கும் ஏனைய சீர்திருத்த நிறுவனங்களில் உள்ள அதற்கு நிகரான பதவித் தர அலுவலர்களுக்கும் இப்பயிற்சி அளிக்கப்படுகிறது. குற்றவியல் உளவியல், சமூக வாழ்வியல், சிறை நிருவாகம், இளம் குற்றவாளிகள் நன்னடத்தை, சமூக நலப்பணி சட்டம், நிறுவன மேலாண்மை ஆகியவற்றில் பயிற்சி அளிக்கப்படுகிறது. ஒரே சமயத்தில் இம்மாநிலத்தைச் சேர்ந்த 12 அலுவலர்களுக்கு இந்நிறுவனத்தில் பயிற்சி அளிக்கப்படுகிறது. இதுவரை இம்மாநிலத்தைச் சார்ந்த 196 அலுவலர்கள் பயிற்சி பெற்றுள்ளார்கள். இந்நிறுவனத்தின் தொடர் மற்றும் தொடரா இனச் செலவுகள் நான்கு தென் மாநிலங்களாலும் சமமாக பகிர்ந்து கொள்ளப்படுகிறது. மத்திய அரசு இப்பயிற்சி நிறுவனத்தில் ஆய்வு மற்றும் மேம்பாட்டு பிரிவு அமைக்க சிறைகளை நவீனப்படுத்தும் மத்திய திட்டத்தின் கீழ் ரூ. 63.92 இலட்சம் அங்கீகாரம் வழங்கியுள்ளது.

**(இ) நற்பணிக்கான முதலமைச்சரின் சிறைப் புத்தகம் வழங்குதல்.**

சிறைக் காவலர்கள், நேர்மையுடனும் விசுவாசத்துடனும் கடமையுணர்வுடனும் திறமையுடனும் உயர்தர ஒழுங்குடனும் மற்றும் தியாக மனப்பான்மையுடனும் பணியாற்ற அவர்களை ஊக்குவிப்பதற்காக, நவம்பர் 1985-ல் ''தமிழ்நாடு முதலமைச்சர் சிறைத் துறை நற்பணிப் பதக்கம்'' என்ற தொரு பதக்கம் வழங்க வழிவகை செய்யப்பட்டுள்ளது. மாண்புமிகு தமிழக முதல்வரால் ஒவ்வொரு ஆண்டும் பொங்கல் தினத்தன்று தேர்ந்தெடுக்கப்பட்ட 20 சிறைக் காவலர்களுக்கு இப்பதக்கம் வழங்கப்படுகிறது. இப்பதங்கங்களைப் பெறும்



சிறைக் காவலர்கள் நிலை-1 மாதமொன்றுக்கு ரூ. 25 என்ற வீதத்திலும், சிறைக் காவலர்கள் நிலை 2 மாதமொன்றுக்கு ரூ. 20 என்ற வீதத்திலும் மாதாந்திரப்படி பெறுவதற்கு தகுதியானவர்களாவர்.

22. குற்றவாளிகள் நன்னடத்தை கண்காணிப்புப் பணிகள்.

குற்றவாளிகள் நன்னடத்தை கண்காணிப்புப் பணியானது குற்றவாளிகளின் சுற்றுப்புற சூழ்நிலையையும் அவர்கள் நடந்து கொள்ளும் விதம் பற்றியும், பிணைய பத்திரத்தின் பேரில் உரிய காலத்திற்கு முன்கூட்டியே நன்னடத்தை ஜாமீன் அளிப்பதன் பேரில் விடுதலையான குற்றவாளிகள், பார்ஸ்டல் பள்ளியிலிருந்தும், சீர்திருத்தப் பள்ளியிலிருந்தும், ஒழுக்கக் கண்காணிப்பு இல்லத்திலிருந்தும், விடுதலை செய்யப்பட்டவர்கள் ஆகியோர் குறித்தும் விசாரிப்பது, கண்காணிப்பது, அவர்களைப் பற்றி நீதிமன்றங்களுக்குத் தகவல் கொடுப்பது முதலியன ஆகும். சிறைத் துறைத் தலைவரின் முழுக் கட்டுப்பாட்டிற்கும் கண்காணிப்புக்கும் உட்பட்ட நன்னடத்தைக் கண்காணிப்புப் பிரிவு, தலைமை நன்னடத்தைக் கண்காணிப்பாளரின் நேரடி பொறுப்பில் உள்ளது. மண்டல நன்னடத்தை அலுவலர் ஒருவரைக் கொண்ட நன்னடத்தை ஆராய்ச்சிப் பிரிவு ஒன்றும் இப்பிரிவில் உள்ளது.

23. தமிழ்நாடு விடுதலையடைந்த சிறைவாசிக்கான உதவிச் சங்கம்.

தமிழ்நாடு விடுதலை பெற்ற சிறைவாசிகள் உதவிச் சங்கம் 1921-ல் அமைக்கப்பட்டது, தற்செயலாகக் குற்றம் புரிபவர்களும் இளங்குற்றவாளிகளும் கைதேர்ந்த குற்றம் புரிகிறவர்களாக மாறுவதை தடுக்கும் நோக்குடன், கைதிகளுக்கு புது வாழ்வு அமைத்துக் கொடுத்தல் அவர்களுக்குத் தேவைப்படும் சகலவித உதவிகள் செய்து கொடுத்தல், அவர்களின் நலனுக்காகச் சட்டங்களை இயற்றுதல், ஏற்கெனவே இருக்கும் சட்டங்களை நல்ல முறையில் பயன்படுத்தி புதியசட்டங்களை இயற்றுதல் ஆகியவை இச்சங்கங்களின் நோக்கங்களாகும். விடுதலை செய்யப்பட்ட கைதிகள் சிறு தொழில்களை மேற்கொண்டு நடத்தவும், கருவிகள், தேநீர் கெட்டில், தையல் இயந்திரங்கள் ஆகியவற்றை வாங்குவதற்கும், இச்சங்கம் உதவி தொகை வழங்கி வருகிறது. மேலும், புகை வண்டி அல்லது பேருந்து கட்டணத்திற்கான உதவித் தொகையையும், தொழில்களில் பயிற்சி பெறுவதற்கும், வேலை வாய்ப்பைத் தேடிக்கொள்ளவும், வழிகாட்ட சட்ட உதவி பெறுவதற்கும் முதியோர் உதவிப் பணம் பெறுவதற்கும், உதவித் தொகை அளிப்பதோடு, ஆடைகள், மூக்குக் கண்ணாடி முதலியவற்றையும் வழங்குகிறது.

அரசால் இச்சங்கத்திற்கு ஆண்டொன்றுக்கு ரூ. 18,000 உதவி மானியமாகக் கொடுக்கப்பட்டு வரப்படுகின்றது.

24. சென்னை மாநகரிலும், செங்கை-எம்.ஜி.ஆர். மாவட்டத்திலும் உள்ள தண்டனைக் கைதிகளை வைப்பதற்கென ஒரு புதிய சிறையை புழலில் (செங்குன்றம்) கட்டுதல்.

தற்போது சென்னையில் உள்ள மத்திய சிறையினை நகருக்கு வெளியே மாற்றும் பொருட்டு புழல் கிராமத்தில் தற்போது சிறைத் துறைக்குச் சொந்தமான நிலத்தில் நவீன அடிப்படையில் ஒரு புதிய சிறையைக் கட்டும் பணி முன்னேற்ற நிலையில் உள்ளது. அரசு முதல் மற்றும் இரண்டாம் கட்ட பணிகளுக்காக இதுவரை ரூ. 320.97 இலட்சத்திற்கு ஒப்புதல் வழங்கியுள்ளது. இந்தப் பணிகள் யாவும் நிறைவு பெற்றுவிட்டன. தற்போது சிறை நிர்வாகத்தினை நவீனப்படுத்தும் மத்திய அரசு நிதி உதவித் திட்டத்தின் கீழ் ரூ. 79.48 இலட்சத்திற்கான பணிகளுக்கு ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. இந்தப் பணிகள் முன்னேற்றத்தில் உள்ளது. தற்போது ரூ. 294.07 லட்சம் அளவில் மூன்றாம் கட்ட பணிகளுக்கான செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளது. தற்போது இந்த சிறையில் இலங்கை தமிழ் அகதிகள் வைக்கப்பட்டுள்ளனர். அவர்கள் வேறு இடத்திற்கு மாற்றப்பட்டபின் தற்போதுள்ள மத்திய சிறையில் உள்ள தண்டனை சிறைவாசிகள் இவ்வளாகத்திற்கு மாற்றப்படுவர். விசாரணைக் கைதிகள் தற்போது பூங்கா நகரிலுள்ள மத்திய சிறையிலேயே வைக்கப்படுவர்.

25. அனைத்திந்திய சிறை சீர்த்திருத்தக் குழுவின் அறிக்கை.

(நீதிபதி திரு. ஏ. என். முல்லா இதன் தலைவர் ஆவார்)

இந்தியாவிலுள்ள சிறைகளின் நிர்வாகத்தில் செய்யப்பட வேண்டிய மேம்பாடுகள் குறித்து பரிசீலிப்பதற்கும் செயல்படுத்தப்படவேண்டிய தக்க சீர்திருத்தங்களைத் தெரிவிக்கும் பொருட்டும், நீதிபதி திரு. ஏ. என். முல்லா, தலைமையில் குழு ஒன்றை மத்திய அரசு நியமித்தது. இந்தக் குழுவின் அறிக்கையில் 658 பரிந்துரைகள் உள்ளன. மொத்தமுள்ள 658 பரிந்துரைகளில் 592 பரிந்துரைகளின் மீதான தமிழக அரசின் குறிப்புரைகள் மத்திய அரசிற்கு அனுப்பப்பட்டுவிட்டன. மேலும் மூன்று பரிந்துரைகள் மீது தற்போது அரசாணை பிறப்பிக்கப்பட்டுள்ளன. ஆக பெரும்பாலான பரிந்துரைகளின் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. எஞ்சியுள்ள 63 பரிந்துரைகளின் மீது மத்திய அரசிடமும் மற்றும் பிற துறைகளிடமும் கலந்து ஆலோசிக்கப்பட்டு வரப்படுகின்றன.



26. சிறை நிருவாகத்திற்கான அலுவலர் குழு பற்றிய அறிக்கை.

இந்திய அரசு, சிறை நிருவாகம் மற்றும் சிறைகளை நிருவகிக்கும் பணி தொடர்பான பல்வேறு பொருட்களை குறிப்பாக சிறைகளில் ஒழுங்கு மற்றும் பாதுகாப்பு சம்பந்தமான பொருட்களை ஆராய்ந்து, அவைகளை மேம்படுத்துவதற்கான வழிவகைகளை பரிந்துரை செய்வதற்காக திரு. ஆர். கே. கபூர், இ. கா. ப. (ஓய்வு) தலைமையில் அலுவலர்கள் அடங்கிய ஒரு சிறு குழுவை 1986-ஆம் ஆண்டு ஜூலை மாதத்தில் நியமனம் செய்தது. இக்குழுவின் அறிக்கை இந்திய அரசிடமிருந்து 1987-ஆம் ஆண்டு டிசம்பர் மாதத்தில் பெறப்பட்டது. இவ்வறிக்கையின் மீது அரசு விரைவான நடவடிக்கையை எடுப்பதற்கு வசதியாக இவ்வறிக்கையினை ஆராய்ந்து அதன் பரிந்துரைகளின் மீது நடவடிக்கை எடுப்பதற்காக மாநில அரசு, சிறைத் துறை, பொதுப்பணித் துறை மற்றும் நிதித்துறை அலுவலர்கள் அடங்கிய ஒரு சிறு குழுவை நியமித்துள்ளது.

திகார் மத்திய சிறை மற்றும் காவல்துறை போன்ற இதர துறைகள் சம்பந்தப்பட்ட கருத்துரைகளையும், பரிந்துரைகளையும் தவிர்த்து, மேற்காணும் அறிக்கை சிறை நிருவாகம் சம்பந்தப்பட்ட 366 பரிந்துரைகளை உள்ளடக்கியதாக உள்ளது. இக்குழுவின் பெரும்பாலான பரிந்துரைகள் இம்மாநிலத்தில் நடைமுறையில் உள்ள விதிகளின் படி செயல்பாட்டிலுள்ளது. சில இதர பரிந்துரைகள் தமிழ்நாடு சிறை சீர்திருத்தக் குழு மற்றும் அனைத்திந்திய சிறை சீர்திருத்தக் குழு போன்ற குழுக்களின் பரிந்துரைகளின் அடிப்படையின் படி ஏற்கெனவே செயல்படுத்தப்பட்டதாகவும் உள்ளன. எனவே, எஞ்சியுள்ள 94 பரிந்துரைகளின் மீதும் இம்மாநில அரசின் கருத்துக்கள் மத்திய அரசுக்கு அனுப்பப்பட்டுவிட்டன.

27. சிறை நிருவாகத்தை நவீனப்படுத்துதல் :

சிறை நிருவாகத்தினை மேம்படுத்தும் மத்திய நிதி உதவி திட்டத்தின் கீழ் மத்திய அரசு 1987-90 ஆம் வருடம் ரூ. 861 லட்சம் இலக்கு நிர்ணயித்தது. இந்த திட்ட காலம் தற்போது 31—3—1992 வரை நீட்டிக்கப்பட்டுள்ளது. இந்த திட்ட உதவி ஒரு சில நேர்வுகளில் 50 : 50 இணை மானியம் மற்றும் ஒரு சில நேர்வுகளில் 100 சதவீதம் மானியம் என்ற அடிப்படையில் வழங்கப்படுகிறது. இந்த மத்திய நிதி உதவியில் மத்திய அரசு இது வரை ரூ. 189.915 இலட்சம் விடுவித்துள்ளது. தமிழக அரசு இத்திட்டங்களை நிறைவேற்றும் பொருட்டு இதுவரை ரூ. 359 இலட்சத்திற்கு ஒப்புதல் வழங்கியுள்ளது. இதர திட்டங்கள் மத்திய அரசு மற்றும் தமிழக அரசின் பரிசீலனையில் உள்ளன. இந்த மத்திய நிதி உதவியின் கீழ் நிதி உதவி வழங்கப்பட்ட

திட்டங்களுக்கு பாதுகாப்பு, சிறைவாசிகளுக்கு மருத்துவ வசதிகள், தொடர்பு வசதிகள், பணியாளர் பயிற்சி மற்றும் சிறைவாசிகளுக்கு இதர வசதிகள் என்பதன் அடிப்படையில் ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. இது வரை அங்கீகாரம் வழங்கப்பட்டு செயல்படுத்தப்படுகின்ற திட்டங்களின் விவரம் இணைப்பு 4-ல் அளிக்கப்பட்டுள்ளது. மேலும் ரூ. 57.22 இலட்சங்களுக்கான திட்டங்களுக்கு விரைவில் ஒப்புதல் வழங்கப்படவுள்ளன. அதற்கு மைய அரசு தனது பங்கான 50 சதவீதத்தை முன் கூட்டியே விடுவித்து விட்டது. இத்துடன் ரூ. 359 இலட்சங்களுக்கான திட்டங்களுக்கு ஒப்புதல் வழங்கியதாக கொள்ளலாம். மேலும் ரூ. 505 இலட்ச மதிப்பீட்டு செலவில் திட்டங்கள் தயாரிக்கப்பட்டு மைய அரசுக்கு 1—7—1971 அன்று அனுப்பப்பட்டு அதன் ஒப்புதல் எதிர்பார்க்கப்படுகிறது.

28. பணியாளர் நலன்.

பணியாளர்களால் ஆண்டு தோறும் அளிக்கப்படும் தொகையுடன் அரசு சிறைநல நிதிக்கு உதவித் தொகை ரூ. 7,000 ஆண்டு தோறும் வழங்குகிறது. தற்போது களப் பணியாளர்களில் 30 சதவிகித பணியாளர்களுக்கு மட்டுமே சிறையின் அருகில் குடியிருப்புகள் உள்ளது. ஆகவே, அனைத்துப் பணியாளர்களுக்கும், சிறையின் அருகில் குடியிருப்பு கட்டும் பொருட்டு மத்திய நிதி உதவி பெற தக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. அனைத்து களப் பணியாளர்களுக்கு தற்போது அரசு மாதம் ஒன்றிற்கு ரூ.20 இடர்ப்படி (Rishk allowance) வழங்கியுள்ளது. தற்போது அரசு அத்தியாவசிய உணவுப்பண்டங்களை சிறை அலுவலரிடமிருந்து இரண்டாம் நிலைக் காவலர் வரை சலுகை விலையில் வழங்க ஆணை பிறப்பித்துள்ளது.

29. இரண்டாம் பகுதி திட்டம் :—

சிறைகள் மற்றும் கிளைச் சிறைகளில் அடிப்படை வசதிகளான தண்ணீர்வழங்குதல், வடிகால் மற்றும் கழிவுநீர் அகற்றும் பணிக்காக ரூ. 14.34லட்சத்திற்கு 23 திட்டங்கள் 1991-92ஆம் ஆண்டு பகுதி II திட்டத்தில் சேர்க்க தீர்மானிக்கப்பட்டு ஒப்புதல் எதிர்பார்க்கப்படுகிறது. இதன் விரிவான அறிக்கை இணைப்பு 5-ல் கொடுக்கப்பட்டுள்ளது.



## இணைப்பு 1.

1-ஆம் இனத்தைக் காண்க.

| சிறைத்துறையின் கட்டுப்பாட்டின் கீழுள்ள நிறுவனங்கள். | எண்ணிக்கை |
|---|---|
| (1) | (2) |
| 1. மத்திய சிறை, சென்னை | எட்டு |
| 2. மத்திய சிறை, வேலூர் | |
| 3. மத்திய சிறை, கடலூர் | |
| 4. மத்திய சிறை, திருச்சிராப்பள்ளி | |
| 5. மத்திய சிறை, கோயம்புத்தூர் | |
| 6. மத்திய சிறை, சேலம் | |
| 7. மத்திய சிறை, மதுரை | |
| 8. மத்திய சிறை, பாளையங்கோட்டை | |
| 9. பெண்கள் தனிச் சிறை, வேலூர் | இரண்டு. |
| 10. பெண்கள் தனிச் சிறை, மதுரை | |
| 11. சீர்திருத்தப் பள்ளி, புதுக்கோட்டை | ஒன்று. |
| 12. தனிக் கிளைச் சிறை, கொக்கிரகுளம் | ஆறு. |
| 13. தனிக் கிளைச் சிறை, திருச்சிராப்பள்ளி | |
| 14. தனிக் கிளைச் சிறை, சேலம் | |
| 15. தனிக் கிளைச் சிறை, செங்கல்பட்டு | |
| 16. தனிக் கிளைச் சிறை, கடலூர் | |
| 17. தனிக் கிளைச் சிறை, கோயம்புத்தூர் | |
| 18. திறந்த வெளிச் சிறை, சிங்காநல்லூர் | ஒன்று |
| 19. பண்ணைச்சிறை, சேலம் | ஒன்று |
| 20. ஆண்கள் பிற்காப்பு இல்லம், புழல் | ஒன்று |

1. செங்கல்பட்டு-எம்.ஜி.ஆர். மாவட்டம்—

21. கிளைச் சிறை, சைதாப்பேட்டை.

22. கிளைச் சிறை, மதுராந்தகம்.

23. கிளைச் சிறை, பூவிருந்தவல்லி.

[1991 செப்டம்பர் 24

24. கிளைச் சிறை, திருவள்ளூர்.

25. கிளைச் சிறை, திருத்தணி.

26. கிளைச் சிறை, பொன்னேரி.

27. கிளைச் சிறை, காஞ்சிபுரம்.

2. கோயம்புத்தூர் மாவட்டம்—

28. கிளைச் சிறை, அவினாசி.

29. கிளைச் சிறை, மேட்டுப்பாளையம்.

30. கிளைச் சிறை, திருப்பூர்.

31. கிளைச் சிறை, உடுமலைப்பேட்டை.

32. கிளைச் சிறை, பொள்ளாச்சி.

33. கிளைச் சிறை, பல்லடம்.

3. பெரியார் மாவட்டம்—

34. கிளைச் சிறை, தாராபுரம்.

35. கிளைச் சிறை, பவானி.

36. கிளைச் சிறை, ஈரோடு.

37. கிளைச் சிறை, கோபிச்செட்டிபாளையம்.

38. கிளைச் சிறை, காங்கேயம்.

39. கிளைச் சிறை, சத்தியமங்கலம்.

40. கிளைச் சிறை, பெருந்துறை.

4. நீலகிரி மாவட்டம்—

41. கிளைச் சிறை, உதகமண்டலம்.

42. கிளைச் சிறை, குன்னூர்.

43. கிளைச் சிறை, கூடலூர்.



1999 செப்டம்பர் 24]

5. வடாற்காடு-அம்பேத்கார் மாவட்டம்—

44. கிளைச் சிறை, அரக்கோணம்.

45. கிளைச் சிறை, ஆம்பூர்.

46. கிளைச் சிறை, குடியாத்தம்.

47. கிளைச் சிறை, திருப்பத்தூர்.

48. கிளைச் சிறை, வாணியம்பாடி.

49. கிளைச் சிறை, வாலாஜப்பேட்டை.

6. திருவண்ணாமலை-சம்புவராயர் மாவட்டம்—

50. கிளைச் சிறை, செய்யாறு.

51. கிளைச் சிறை, ஆரணி.

52. கிளைச் சிறை, செங்கம்.

53. கிளைச் சிறை, போளூர்.

54. கிளைச் சிறை, திருவண்ணாமலை.

55. கிளைச் சிறை, வந்தவாசி.

7. தென்னாற்காடு மாவட்டம்—

56. கிளைச் சிறை, கள்ளக்குறிச்சி.

57. கிளைச் சிறை, சிதம்பரம்.

58. கிளைச் சிறை, செஞ்சி.

59. கிளைச் சிறை, பரங்கிப்பேட்டை.

60. கிளைச் சிறை, திண்டிவனம்.

61. கிளைச் சிறை, திருக்கோவிலூர்.

62. கிளைச் சிறை, உளுந்தூர்பேட்டை.

63. கிளைச் சிறை, விழுப்புரம்.

64. கிளைச் சிறை, பண்ருட்டி.

65. கிளைச் சிறை, விருத்தாசலம்.

8. சேலம் மாவட்டம்—

66. கிளைச் சிறை, ஆத்தூர்.

67. கிளைச் சிறை, நாமக்கல்.

68. கிளைச் சிறை, ஓமலூர்.

69. கிளைச் சிறை, பரமத்தி.

70. கிளைச் சிறை, ராசிபுரம்.

71. கிளைச் சிறை, சங்ககிரி.

72. கிளைச் சிறை, திருச்செங்கோடு.

9. திண்டுக்கல்-அண்ணா மாவட்டம்—

73. கிளைச் சிறை, திண்டுக்கல்.

74. கிளைச் சிறை, நிலக்கோட்டை.

75. கிளைச் சிறை, பழனி.

76. கிளைச் சிறை, வேடசந்தூர்.

77. கிளைச் சிறை, கொடைக்கானல்.

10. மதுரை மாவட்டம்—

78. கிளைச் சிறை, மேலூர்.

79. கிளைச் சிறை, உசிலம்பட்டி.

80. கிளைச் சிறை, திருமங்கலம்.

81. கிளைச் சிறை, பெரியக்குளம்.

82. கிளைச் சிறை, உத்தமபாளையம்.



11. கன்னியாகுமரி மாவட்டம்—

83. கிளைச் சிறை, தக்கலை.

84. கிளைச் சிறை, குழித்துறை.

85. கிளைச் சிறை, நாகர்கோவில்.

12. இராமநாதபுரம் மாவட்டம்—

86. கிளைச் சிறை, திருவாடானை.

87. கிளைச் சிறை, பரமக்குடி.

88. கிளைச் சிறை, முதுகுளத்தூர்.

89. கிளைச் சிறை, இராமநாதபுரம்.

13. காமராசர் மாவட்டம் :—

90. கிளைச் சிறை, ஸ்ரீவில்லிப்புத்தூர்.

91. கிளைச் சிறை, சாத்தூர்.

92. கிளைச் சிறை, அருப்புக்கோட்டை.

93. கிளைச் சிறை, விருதுநகர்.

14. பசும்பொன்முத்துராமலிங்கத் தேவர் மாவட்டம்—

94. கிளைச் சிறை, சிவகெங்கை.

95. கிளைச் சிறை, திருப்பத்தூர்.

15. திருச்சிராப்பள்ளி மாவட்டம்—

96. கிளைச் சிறை, அரியலூர்.

97. கிளைச் சிறை, ஜெயங்கொண்டான்.

98. கிளைச் சிறை, குளித்தலை.

99. கிளைச் சிறை, லால்குடி.

100. கிளைச் சிறை, மணப்பாறை.

101. கிளைச் சிறை, முசிறி.

102. கிளைச் சிறை, பெரம்பலூர்.

103. கிளைச் சிறை, துறையூர்.

104. கிளைச் சிறை, கரூர்.

16. புதுக்கோட்டை மாவட்டம்—

105. கிளைச் சிறை, புதுக்கோட்டை.

106. கிளைச் சிறை, அறந்தாங்கி.

107. கிளைச் சிறை, கீரனூர்.

108. கிளைச் சிறை, திருமயம்.

17. திருநெல்வேலி-கட்டபொம்மன் மாவட்டம்

109. கிளைச் சிறை, அம்பாசமுத்திரம்.

110. கிளைச் சிறை, சங்கரன்கோவில்.

111. கிளைச் சிறை, தென்காசி.

112. கிளைச் சிறை, நாங்குனேரி.

18. சிதம்பரனார் மாவட்டம்—

113. கிளைச் சிறை, கோவில்பட்டி.

114. கிளைச் சிறை, தூத்துக்குடி.

115. கிளைச் சிறை, ஸ்ரீவைகுண்டம்.

116. கிளைச் சிறை, திருச்செந்தூர்.

19. தஞ்சாவூர் மாவட்டம்—

117. கிளைச் சிறை, கும்பகோணம்.

118. கிளைச் சிறை, மயிலாடுதுறை.

119. கிளைச் சிறை, மன்னார்குடி.



120. கிளைச் சிறை, நாகப்பட்டினம்.

121. கிளைச் சிறை, நன்னிலம்.

122. கிளைச் சிறை, பட்டுக்கோட்டை.

123. கிளைச் சிறை, பாபநாசம்.

124. கிளைச் சிறை, சீர்காழி.

125. கிளைச் சிறை, திருத்துறைப்பூண்டி.

126. கிளைச் சிறை, திருவாரூர்.

127. கிளைச் சிறை, தரங்கம்பாடி.

128. கிளைச் சிறை, திருவிடைமருதூர்.

129. கிளைச் சிறை, தஞ்சாவூர்.

20. தருமபுரி மாவட்டம்—

130. கிளைச் சிறை, ஒசூர்.

131. கிளைச் சிறை, அரூர்.

132. கிளைச் சிறை, தருமபுரி.

133. கிளைச் சிறை, கிருஷ்ணகிரி.

134. கிளைச் சிறை, ஊத்தங்கரை.

அரசினர் புதுவாழ்வு இல்லங்கள் —

135. பரனூர், செங்கல்பட்டு-எம்.ஜி.ஆர். மாவட்டம்.

136. உளுந்தூர்பேட்டை, தென்னாற்காடு மாவட்டம்.

137. பர்கூர், தருமபுரி மாவட்டம்.

138. புதுக்கோட்டை, புதுக்கோட்டை மாவட்டம்.

139. விண்ணப்பள்ளி, பெரியார் மாவட்டம்.

140. மனையேரிப்பட்டி, தஞ்சாவூர் மாவட்டம்.

141. யா. புதுப்பட்டி, மதுரை மாவட்டம்.

142. மல்லவாடி, திருவண்ணாமலை-சம்புவராயர் மாவட்டம்.

143. செல்லியம்பட்டி, தருமபுரி மாவட்டம்.

144. தேவியாக்குறிச்சி, சேலம் மாவட்டம்.

145. அரசினர் காப்பு முகாம், மேல்பாக்கம்.

மொத்தம் ... 145



## இணைப்பு 2.

(இனம் எண். 2-ஐ காண்க).

(சிறைத்துறையில் உள்ள பதவிகள் எண்ணிக்கையைக் காட்டும் விவர அறிக்கை.)

| தொடர் எண்ணும் பதவிகளின் பெயர்களும். (1) | பதவிகளின் எண்ணிக்கை. (2) |
|---|---|
| 1. சிறைத்துறைத் தலைவர் .. | 1 |
| 2. சிறைத்துறைத் துணைத் தலைவர் .. | 4 |
| 3. கணக்குத் அலுவலர் .. | 1 |
| 4. உதவி கணக்கு அலுவலர் .. | 1 |
| 5. சிறைத்துறைத் தலைவரின் நேர்முக உதவியாளர். | 1 |
| 6. சிறைக் கண்காணிப்பாளர்கள் .. | 9 |
| 7. கண்காணிப்பாளரின் நேர்முக உதவியாளர் | 8 |
| 8. பெண்கள் தனிச் சிறை கண்காணிப்பாளர் | 1 |
| 9. கண்காணிப்பாளர், ஆண்கள் பிற்காப்பில்லம் | 1 (தற்காலிகமாக நிறுத்தி வைக்கப் பட்டுள்ளது). |
| 10. சிறை கூடுதல் கண்காணிப்பாளர்கள் .. | 8 |
| 11. புதுக்கோட்டை, இளங்குற்றவாளிகள், சீர் திருத்தப்பள்ளி மற்றும் மதுரையிலுள்ள பெண்களுக்கான தனிச்சிறையின் துணைக் கண்காணிப்பாளர்கள். | [illegible] |
| 12. சிறை அலுவலர்கள் .. | 9 |
| 13. உதவி மருத்துவர்கள் .. | 19 |
| 14. தலைமை நன்னடத்தைக் கண்காணிப்பாளர் | 1 |
| 15. மண்டல நன்னடத்தை அலுவலர்கள் .. | 12 |

பணியாளர் அமைப்பு.

| தொடர் எண்ணும் பதவிகளின் பெயர்களும். | பதவிகளின் எண்ணிக்கை. |
|---|---|
| (1) | (2) |
| 1. பொதுவான வகையினர். | |
| 16. முதுநிலை பிரிவுக் கண்காணிப்பாளர் .. | 1 |
| 17. அலுவலக கண்காணிப்பாளர்கள்/மேலாளர் | 18 |
| 18. கணக்கர் .. .. .. .. .. | 9 |
| 19. உதவியாளர்கள்/தேர்வு நிலை உதவியாளர்கள். | 98 |
| 20. இளநிலை உதவியாளர்கள் .. .. | 83 |
| 21. சுருக்கெழுத்துத் தட்டச்சர்கள் .. .. | 3 |
| 22. தட்டச்சர்கள் .. .. .. .. | 45 |
| 23. பதிவுரு எழுத்தர்கள் .. .. .. | 37 |
| 24. டபேதார் .. .. .. .. | 1 |
| 25. அலுவலக உதவியாளர்கள் .. .. | 91 |
| 2. சிறப்பு வகையினர். | |
| 26. மூதாய் .. .. .. | 4 |
| 27. துணைச் சிறை அலுவலர் .. .. | 17 |
| 28. உதவி கண்காணிப்பாளர் .. .. | 1 |
| 29. துணை உதவி கண்காணிப்பாளர் .. .. | 1 |
| 30. தனிக்கிளைச் சிறைகளின் கண்காணிப்பாளர்கள். | 3 |
| 31. உளவியல் வல்லுநர்கள் .. .. | [illegible] |



| (1) | (2) |
|---|---|
| 32. சமூக களப் பணியாளர்கள் .. .. | 3 |
| 33. உதவி சிறை அலுவலர்கள் .. .. | 136 |
| 34. தொழிற்சாலை மேலாளர் .. .. .. | 1 |
| 35. செவிலியர் .. .. .. .. | 9 |
| 36. மருந்தாக்குநர்கள் .. .. .. .. | 18 |
| 37. ஆண்/பெண் செவிலியர் உதவியாளர்கள் .. | 29 |
| 38. முதன்மை தலைமைக் காவலர்/வாயில் காப்பாளர்கள். | 39 |
| 39. சிறைக் காலவர்கள்/சிற்றலுவலர்(நிலை-1) | 356 |
| 40. சிறைக் காவலர்/சிற்றலுவலர்(நிலை-2) .. | 2,302 |
| 41. சிப்ப எழுத்தர்கள் .. .. .. | 9 |
| 42. இடைநிலை ஆசிரியர்கள் .. .. | 30 |
| 43. தொடக்க நிலை ஆசிரியர் .. .. | 1 |
| 44. உடற்பயிற்சி ஆசிரியர் .. .. .. | 1 |
| 45. தச்சுப் பயிற்றுநர்/கம்மியர் .. .. | 16 |
| 46. நெசவுப் பயிற்றுநர் .. .. .. | 5 |
| 47. உற்பத்தி உதவியாளர் .. .. .. | 1 |
| 48. தேர்ச்சிப் பெற்ற தொழிலாளர்கள் .. | 5 |
| 49. புத்தகம் கட்டும் மேற்பார்வையாளர்கள் | 1 |
| 50. தையற் பயிற்றுநர்கள் .. .. .. | 11 |
| 51. கருமார் தொழில் பயிற்றுநர்கள் .. .. | 3 |
| 52. தச்சு முதலாள் .. .. .. .. | 3 |
| 33. மின் கம்பியாள் .. .. .. .. | 13 |
| 54. நன்னடத்தை அலுவலர்கள் .. .. | 96 |

| (1) | (2) |
|---|---|
| 55. நல அலுவலர்கள் .. .. .. .. | 10 |
| 56. லாரி ஓட்டுநர்கள் .. .. .. | 2 |
| 57. லாரி ஆள் .. .. .. .. | 1 |
| 58. பூட் தயாரிப்புப் பணி மேற்பார்வையாளர் | 1 |
| 59. பூட் பணி கம்மியர் .. .. .. | 1 |
| 60. பூட் பணி மேஸ்திரிகள் .. .. .. | 4 |
| 61. அலுமினிய பட்டறை முதலாள் .. .. | 1 |
| 62. வண்டிக்காரர்கள் .. .. .. | 5 |
| 63. நெசவு ஆசிரியர் .. .. .. .. | 1 |
| 64. சாய வேலை ஆசிரியர் .. .. .. | 2 |
| 65. பாவு ஆசிரியர் .. .. .. .. | 1 |
| 66. இசைக்குழு ஆசிரியர் .. .. .. | 1 |
| 67. கொட்டகைப் பணி உதவி மேற்பார்வையாளர் | 1 |
| 68. பாவு அமைத்துக் கஞ்சி போடும் பணியாளர் | 1 |
| 69. கொதிகலன் பணியாள் .. .. .. | 1 |
| 70. பொருத்துத் தச்சர் .. .. .. | 1 |
| 71. நெசவுப் பணியாளர் .. .. .. | 5 |
| 72. விசையேற்று நிலையத்திற்குப் பொறுப்பு வகிக்கும் பொருத்துநர். | 1 |
| 73. கட்டு கட்டும் பணியாளர் .. .. .. | 1 |
| 74. குழாய் பொருத்துநர் .. .. .. | 1 |
| 75. கொதிகலன் எரியூட்டுபவர் .. .. | 1 |
| 76. மோட்டார் பணியாள் .. .. .. | 3 |
| 77. மின் மேற்பார்வையாளர் .. .. | 1 |



| (1) | (2) |
|---|---|
| 78. தோட்டக்காரர்கள் .. .. .. | 2 |
| 79. பினாயில் தயாரிப்பு உதவியாளர் .. | 1 |
| 80. கால்நடை உதவி ஆய்வாளர்கள் .. | 4 |
| 81. உலோகம் பற்றவைப்பவர் .. .. .. | 1 |
| 82. தலைமை ஆயா .. .. .. .. | 1 |
| 83. ஆயாக்கள் .. .. .. .. | 8 |
| 84. மின் மோட்டார் பணியாட்கள் .. .. | 2 |
| 85. மேற்பார்வையாளர்கள் ஆசிரியர்கள் (கைமுறை காகிதத் தொழில்). | 5 |
| 86. சவுக்கார வேதியியல் பணியாளர் .. .. | 1 |
| 87. என்ஜின் ஓட்டுநர் .. .. .. | 1 |
| 88. மெருகிடும் உதவியாளர் .. .. .. | 1 |
| 89. காகிதக் கூழ் செய்யும் உதவியாளர்கள் .. | 3 |
| 90. காவலாட்கள் .. .. .. .. | 15 |
| 91. இயல் மருத்துவத் தொழில் நுட்ப பணியாளர் | 1 |
| 92. கால்நடை மேய்ப்பவர் .. .. .. | 1 |
| 93. டிராக்டர் ஓட்டுநர்கள் .. .. .. | 3 |
| 94. துப்புரவாளர்/பெருக்குபவர் .. .. | 49 |
| 95. சமையற்காரர்கள் .. .. .. | 18 |
| 96. டிராக்டர் சுத்தம் செய்பவர் .. .. | 1 |
| 97. துப்புரவுத் தொழிலாளர்கள் .. .. | 60 |
| 98. கைத்தொழில் பயிற்றுநர்கள் .. .. | 9 |
| 99. முடி திருத்துநர் .. .. .. | 9 |
| 100. உதவி வேளாண் அலுவலர் .. .. | 1 |
| 101. பிரம்பு பயிற்றுநர் .. .. .. | 1 |
| 102. முதன்மை நெசவுப் பணியாளர் | 1 |
| | 3,833 |

## இணைப்பு 3.

(6-ம் இனத்தைக் காண்க)

மத்திய சிறைகள், மகளிருக்கான தனிச் சிறை, வேலூர், புதுக்கோட்டை, பார்ஸ்டல பள்ளி ஆகியவை ஒவ்வொன்றிலுமுள்ள தொழிற்சாலைகள் வாழ்க்கைத் தொழில் கைவினைப் பொருள்கள் தயாரிப்பு நிலையங்கள் குறித்த பட்டியல்.

| தொடர் எண்ணும் மற்றும் நிறுவனத்தின் பெயர். (1) | தொழில்கள். (2) |
|---|---|
| 1. மத்திய சிறை, சென்னை .. .. | தச்சு வேலை, பினாயில் தயாரிப்பு, கூர்நாடா உற்பத்தி, சோப்புத் தயாரித்தல், முத்திரை அரக்கு. |
| 2. மத்திய சிறை, வேலூர் .. .. .. | நெசவு, தையல், புத்தகம் கட்டுதல், தச்சு வேலை, காகிதம் தயாரித்தல், பலவகை. |
| 3. மத்திய சிறை, சேலம் .. .. .. | அலுமினியம், கருமார் பட்டறை, தச்சுவேலை, நெசவு, காகித உற்பத்தி, புத்தகம் கட்டுதல் தையல். |
| 4. மத்திய சிறை, கோயம்புத்தூர் .. .. | நெசவு, சாயம் தோய்த்தல், தையல், கூடாரம் தயாரித்தல், கைமுறை காகித உற்பத்தி, புத்தகம் கட்டுதல், தச்சு வேலை. |
| 5. மத்திய சிறை, திருச்சி .. .. .. | தச்சு வேலை, நெசவு, பாய்முடைதல் சோப்பு தயாரித்தல். |
| 6. மத்திய சிறை, மதுரை .. .. .. | நெசவு, தையல், காகித உற்பத்தி, புத்தகம் கட்டுதல், தச்சு வேலை. |
| 7. மத்திய சிறை, பாளையங்கோட்டை .. | தச்சு வேலை, நெசவு, தையல், கைமுறை காகித உற்பத்தி, புத்தகம் கட்டுதல். |
| 8. மத்திய சிறை, கடலூர் .. .. .. | நெசவு, தையல், தச்சு வேலை. |
| 9. பார்ஸ்டல் பள்ளி, புதுக்கோட்டை .. | தச்சு வேலை, தையல், கருமார் பட்டறை. |
| 10. மகளிர் தனிச் சிறை, வேலூர் .. .. | நாடா உற்பத்தி, முறுக்கு- நூல் உற்பத்தி, தையல், நெசவு. |

## இணைப்பு—4.

(26-ம் இனத்தைக் காண்க).

சிறைச்சாலைகளை நவீனப்படுத்தும் மத்திய அரசு திட்டத்தின் கீழ் அங்கீகரிக்கப்பட்ட பணிகளின் விபரம்.

| வரிசை எண்ணும் பணியின் பெயரும். | அங்கீகரிக்கப் பட்ட தொகை (ரூபாய் இலட்சத்தில்). | அங்கீகரிக்கப்பட்ட அரசாணை எண் மற்றும் நாள். |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| 1. மத்தியசிறை, புழலில் ஒரு மின் ஆக்கி நிறுவுதல் | 10.00 | அரசாணை நிலை எண் 2988, உள்துறை, நாள் : 18-12-1989. |
| 2. மத்திய சிறை, கோயம்புத்தூரில் ஒரு மின் ஆக்கி நிறுவுதல். | 10.00 | ஷை. |
| 3. மத்திய சிறை, புழலுக்கு நோயாளி ஊர்தி வாங்குதல். | 1.25 | ஷை. |
| 4. மத்திய சிறை, வேலூருக்கு ஒரு நோயாளி ஊர்தி வாங்குதல். | 1.25 | ஷை. |
| 5. மத்திய சிறை, புழல், தீவிரவாதிகள் மற்றும் பயங்கரவாதி சிறைவாசிகளுக்கென தனித் தொகுதி கட்டுதல். | 1.50 | அரசாணை நிலை எண் 1133, உள்துறை, நாள் : 17-5-1988. |



| | | |
|---|---|---|
| 6. ஒன்பது கிளைச் சிறைச்சாலைகளில் தண்ணீர் வசதி ஏற்படுத்திக் கொடுத்தல். | 4.01 | ஷை. |
| 7. நான்கு கிளைச் சிறைகளில் நீரடிக் கழிப்பிடங்கள் ஏற்படுத்திக் கொடுத்தல். | 2.16 | ஷை. |
| 8. பத்து கிளைச் சிறைகளில் காவலர் அறை, அலுவலக அறை நேர்காணல் அறை, மருந்தகம் ஏற்படுத்திக் கொடுத்தல். | 16.84 | ஷை. |
| 9. ஏழு கிளைச் சிறைகளை சுற்றி பாதுகாப்பு சுவர் கட்டுதல். | 10.13 | ஷை. |
| 10. மத்திய சிறை, புழலில் வெளிமின் வசதி ஏற்படுத்திக் கொடுத்தல். | 30.84 | ஷை. |
| 11. மத்திய சிறைகள், பார்ஸ்டல் பள்ளி மற்றும் பெண்கள் தனிச் சிறை, வேலூர் மற்றும் மதுரையில் மருத்துவப் பரிசோதனை நிலையம் அமைத்தல். | 1.91 | அரசாணை நிலை எண் 2237, உள்துறை, நாள் : 19-10-1987. |
| 12. மத்திய சிறைகள், பார்ஸ்டல் பள்ளி மகளிர் தனிச் சிறை, வேலூரில் சிறைவாசிகள் நலவுக்காக இ.சி.ஜி. கருவி நிறுவுதல். | 2.66 | ஷை. |
| 13. மத்திய சிறை, புழல், கோயம்புத்தூர், திருச்சி மற்றும் மதுரையில் வாக்கிடாக்கி நிறுவுதல். | 12.00 | ஷை. |

| (1) | (2) | (3 |
|---|---|---|
| 14. வேலூர் காவலர் பயிற்சி பள்ளியை மேம் படுத்தி ஆண் மற்றும் பெண் காவலர் களுக்கு பயிற்சி வழங்குதல், உலோக ஆய்வு கருவி, தொலைக் காட்சி பெட்டி, நூல் நிலைய புத்தகங்கள் மற்றும் பணியாளர் நியமனம். | 9.07 | அரசாணை நிலை எண். 2237, உள்துறை, நாள் : 19-10-1987. |
| 15. காவலர் பயிற்சிப் பள்ளி, வேலூரில் கூடுதல் கட்டிடங்கள் கட்டுதல், ஆண் மற்றும் பெண் காவலர்கள் பயிற்சி அளித்தல். | 15.00 | ஷை. |
| 16. அனைத்து மத்திய சிறைகளிலும் உலோகம் கண்டுபிடிக்கும் கருவி நிறுவுதல். | 0.51 | ஷை. |
| 17. மத்திய சிறைகள், பார்ஸ்டல் பள்ளி, பெண் கள் தனிச் சிறைகள், தனிக் கிளைச் சிறைகள், சேலம், கொக்கிரகுளம், திருச்சி ஆகியவற்றிற்கு நோயாளி ஊர்தி வாங்குதல். | 13.75 | ஷை. |
| 18. 31 கிளைச் சிறைகளில் காவலர் அறை, அலு வலக அறை, மருந்தகம் கட்டுதல். | 34.74 | ஷை. |
| 19. 35 கிளைச் சிறைகளில் பாதுகாப்பு சுவர் கட்டுதல். | 40.52 | ஷை. |
| 20. 12 கிளைச் சிறைகளில் நீரடிக் கழிப்பிடங்கள் கட்டுதல். | 5.84 | ஷை. |
| 21. புழல் மத்திய சிறையின் சுற்றுச் சுவரினை உயர்த்துதல். | 8.00 | அரசாணை நிலை எண். 2507, உள்துறை, நாள் ; 19-11-1990. |
| 22. மத்திய சிறை. புழலில் உள் மற்றும் வெளிப் புறம் ரோடு அமைத்தல். | 8.50 | ஷை. |
| 23. மத்திய சிறை, புழலில் உள்ள ஐந்து தொகுதி களில் உள்ள கூடங்களை இரண்டாகப் பிரித்து கூடுதல் கழிப்பிட வசதிகள் எற்படுத்திக் கொடுத்தல். | 3.50 | ஷை. |
| 24. புழல் மத்திய சிறையினுள் உள்ள தொகுதி களைச் சுற்றி தனி தடுப்புச் சுவர் எழுப்புதல். | 12.50 | ஷை. |
| 25. மத்திய சிறை, சேலம், கடலூர் மற்றும் பார்ஸ்டல் பள்ளி, புதுகையில் மின் ஆக்கி நிறுவுதல். | 18.00 | அரசாணை நிலை எண். 481, உள் (சிறை. இ) துறை, நாள் : 15-3-1991. |
| 26. மத்திய சிறை, கடலூர், சேலம், கோவை, பார்ஸ்டல் பள்ளி, புதுக்கோட்டை மற்றும் பெண்கள் தனிச் சிறை, வேலூ ரில் பொது அறிவிப்பு செய்யும் உபகர ணங்கள் வாங்குதல். | 1.25 | ஷை. |
| 27. மத்திய சிறை, சேலம். கடலூர், மாநில மகளிர் சிறை, வேலூர் மற்றும் பார்ஸ்டல் பள்ளியில் வாக்கி டாக்கி நிறுவுதல். | 13.00 | ஷை. |

| | | | |
|---|---|---|---|
| 28. | மத்திய சிறைகள், மாநில மகளிர் சிறை, வேலூர் மற்றும் பார்ஸ்டல் பள்ளி, புதுகையில் ஒரு மின் இஸ்திரி பெட்டி வழங்குதல். | 0.04 | அரசாணை நிலை எண். 481, உள் (சிறை-இ) துறை, நாள் 15-3-1991. |
| 29. | கிளைச் சிறைகளுக்கு ஒரு மிதி வண்டி வழங்குதல். | 1.20 | ஷை |
| 30. | சிறைகளில் சிறைவாசிகள் மற்றும் பணியாளர் நலனுக்குக்காக ஒரு கலாச்சார மையம் ஆரம்பித்தல். | 9.00 | ஷை |
| 31. | மத்திய சிறை, கடலூருக்கு ஒரு டிராக்டர் தண்ணீர் தொட்டியுடன் வாங்குதல். | 1.50 | ஷை |
| 32. | மத்திய சிறை, புழலுக்கு ஒரு மோட்டார் சைக்கிள் மற்றும் ஜீப் வாங்குதல். | 1.31 | அரசாணை நிலை எண். 755, உள் (சிறை.இ.) துறை, நாள் 6-5-1991. |
| | ரூ | 301.78 | இலட்சம். |



## இணைப்பு 5.

சிறைத்துறையில் முன்னுரிமை அடிப்படையில் திருத்தப்பட்ட 1991-92-க்கான (திட்டத்தில் சேராதது) இரண்டாம் பகுதி திட்டங்கள்.

| வரிசை எண். | திட்டத்தின் பெயர். | செலவு. தொடர் செலவினம். | செலவு. தொடரா செலவினம். |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| | | | (ரூபாய் இலட்சத்தில்). |
| 1. | பட்டுக்கோட்டை கிளைச் சிறையில் குளியலறை, மேல்நிலை தொட்டி பம்பு ரூம், ஆழ்குழாய் கிணறு மற்றும் தண்ணீர் விநியோகம் செய்தல். | .. | 2.00 |
| 2. | நிலக்கோட்டை கிளைச் சிறையில் கழிவுநீர் அகற்றும் வசதிகள் ஏற்படுத்துதல். | ... | 0.72 |
| 3. | ஆழகுழாய் கிணறு மற்றும் தண்ணீர் வசதியினை தூத்துக்குடி. முதுகுளத்தூர், உசிலம்பட்டி மற்றும் அவிநாசி ஆகிய கிளைச் சிறைகளில் ஏற்படுத்துதல். | ... | 1.36 |
| 4. | கோவை, மத்திய சிறையில் தண்ணீர் விநியோக வசதிகள் ஏற்படுத்த ஆழ்குழாய் அமைத்திடுதல். | ... | 0.40 |
| 5. | வேலூர் மத்திய சிறையில் தண்ணீர் விநியோகம் செய்ய ஒரு ஆழ் குழாய் கிணறு தோண்டுதல். | .... | 0.29 |

| | | |
|---|---|---|
| 6. புதுக்கோட்டை, பார்ஸ்டல் பள்ளி பணியாளர்களுக்கு பாய், நீர் கழிப்பறை ஆகிய வசதிகள் செய்தல். | .. | 1.93 |
| 7. திருச்சி மத்திய சிறையில் சுகாதார வசதிகள் ஏற்படுத்துதல் | .. | 0.76 |
| 8. சேலம் மத்திய சிறையில் சுகாதார பணிகள் சிறப்பு பழுது பார்ப்பதற்கான வழி வகைகள் செய்தல். | .. | 1.01 |
| 9. கோவை மத்திய சிறையில் ரோந்து கட்டிடங்கள் வடிவமைக்கும் மேடை கட்டுதல். | .. | 1.08 |
| 10. ஒரு மகளிர் தனிச் சிறை வேலூரில் தண்ணீர் வசதி ஏற்பாடு களுக்கு வழிவகைகள் செய்தல். | .. | 0.31 |
| 11. மேட்டுப்பாளையம் கிளைச் சிறையில் தண்ணீர் விநியோகம் ஏற்பாடு செய்தல். | .. | 0.44 |
| 12. கள்ளக்குறிச்சி கிளைச் சிறைக்கு ஆழ் குழாய்க் கிணறு அமைத்தல் | .. | 0.45 |
| 13. மதுராந்தகம் கிளைச் சிறைக்கு தண்ணீர் வசதி செய்தல் | .. | 0.39 |
| 14. பெருந்துறை கிளைச் சிறைக்கு தண்ணீர் வசதிசெய்தல் தொடர்பாக. | .. | 0.50 |
| 15. காங்கேயம் கிளைச் சிறைக்கு தண்ணீர் வசதி ஏற்படுத்துதல் | .. | 0.55 |
| 16. சத்தியமங்கலம் கிளைச் சிறைக்கு தண்ணீர் வசதி ஏற்படுத்து தல் தொடர்பாக. | .. | 0.44 |
| 17. ச. உடுமலைப்பேட்டை கிளை சிறைக்கு குடிநீர் விநியோக ஏற் பாடு செய்தல். | .. | 0.33 |



| | | |
|---|---|---|
| 18. பெரம்பலூர் கிளைச் சிறைக்கு குடிநீர் விநியோகம் ஏற்பாடு செய்தல். | .. | 0.15 |
| 19. திருமங்கலம் கிளைச் சிறைக்கு குடிநீர் ஏற்பாடு செய்தல் குறித்து | .. | 0.14 |
| 20. இராமநாதபுரம் கிளைச் சிறையில் பெண் சிறைவாசிகளுக்கு நீரடி கழிப்பிடம் அமைத்தல் குறித்து. | .. | 1.14 |
| 21. திருத்தணி கிளைச் சிறையில் குழாய்க் கிணறுகள் அமைத்தல் குறித்து. | .. | 0.14 |
| 22. காஞ்சிபுரம் கிளைச்சிறையில் புதியதாக கட்டிய 20 சிறை வாசிகள் அடைக்கும் கட்டிடத்திற்கு நீரடிக் கழிப்பிடம் அமைத்தல். | .. | 0.22 |
| 23. கிளைச் சிறை கள்ளக்குறிச்சி, திருமங்கலம், மணப்பாறை, பரமக்குடி, சாத்தூர், இராமநாதபுரம், லால்குடி, பெரம் பலூர், கொடைக்கானல், விருத்தாசலம், சிதம்பரம் மற்றும் குழித்துறை ஆகியவைகளுக்கு தனி மின் இணைப்பு அமைத்தல். | .. | 0.50 |
| | | 4.05 |
| | | 14.34 |

600 002

## அத்தியாயம் 11.

### தமிழ்நாட்டில் அரசினர் மறுவாழ்வு இல்லங்கள் தொடர்பாக 1991-92 ஆம் ஆண்டுக்கான கொள்கை விளக்கக் குறிப்பு.

**குறிக்கோளும் நிறுவண அமைப்பும் :—**

தொழுநோயால் பாதிக்கப்பட்டுள்ள பிச்சைக்காரர்களுக்கு சிகிச்சை அளித்து மறுவாழ்வு அளிக்கும் வகையில் தமிழ்நாடு அரசு கீழ்க்காணும் 10 இடங்களில் மறுவாழ்வு இல்லங்களை அமைத்துள்ளது:—

1. பரனூர், செங்கை-எம்.ஜி.ஆர். மாவட்டம்.
2. உளுந்தூர்பேட்டை, தென்னாற்காடு மாவட்டம்.
3. பர்கூர், தருமபுரி மாவட்டம்.
4. புதுக்கோட்டை, புதுக்கோட்டை மாவட்டம்.
5. வின்னப்பள்ளி, பெரியார் மாவட்டம்.
6. மனையேரிப்பட்டி, தஞ்சாவூர் மாவட்டம்.
7. யா. புதுப்பட்டி, மதுரை மாவட்டம்.
8. மல்லவாடி, திருவண்ணாமலை சம்புவராயர் மாவட்டம்.
9. செல்லியம்பட்டி, தருமபுரி மாவட்டம்.
10. தேவியாக்குறிச்சி, சேலம் மாவட்டம்.

மருத்துவப்பணி மற்றும் குடும்ப நலத்துறை இயக்குநரின் நிர் வாகத்தின் கீழ் முன்பு இயங்கி வந்த அரசு மறுவாழ்வு இல் லங்கள், சிறைத்துறைத்தலைவர் கட்டுப்பாட்டின்கீழ் 1984 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 1ஆம் நாள் முதல் கொண்டு வரப்பட்டு இயங்கி வருகின்றன. இந்த துறை மாற்றத்தை எதிர்த்து பால கிருஷ்ணன், சென்னை உயர்நீதி மன்றத்தில் தாங்கள் பிணி யாளிகள் தான் மற்றபடி சிறைவாசிகள் அல்ல என்று வழக்கு தொடர்ந்துள்ளார். ஆனால் அரசு இரவலர் இல்லவாசிகளை சமூக நலத்துறை வெளியிட்டுள்ள விதிமுறைகளின்படி தான் நடத்தி வருகிறதேயன்றி சிறைவாசிகளுக்கான விதிமுறைகள் பின்பற்றப்படுவதில்லை. பிச்சை எடுப்பது 1945 ஆண்டைய பிச்சை எடுப்பு ஒழிபுச்சட்டத்தின்படி ஒரு குற்றமாகும் இருப் பினும் மேற்கூறிய வழக்கில் சென்னை உயர்நீதிமன்றத்தின் தீர்ப்பு கிடைத்தபின் அதன்படி மேல் நடவடிக்கை எடுக்கப்படும்.





**அனுமதி மற்றும் நீக்கம் :**

ஒவ்வொரு இல்லத்திலும் 400 பெரியவர்களும் (ஆண், பெண் உட்பட), 25 சிறுவர்களும் தங்குவதற்கு வசதியுள்ளது. பிச்சை எடுத்ததற்காக மாஜிஸ்டிரேட்டால் தண்டனை வழங்கப்பட்ட வர்கள் மேற்படி இல்லங்களில் அனுமதிக்கப்படுகிறார்கள். அவர்கள் தங்கள் விருப்பப்படி தாங்களாகவே மேற்படி இல்லங் களில் சேர்ந்து கொள்ளலாம். மணமானவர்களில் கணவனோ அல்லது மனைவியோ தொழுநோயால் பாதிக்கப்பட்டு பிச்சை எடுப்பவராக இருந்தால் அவர்களும் இவ்வில்லத்தில் சேர்த்துக் கொள்ளப்படுகிறார்கள். அன்னாரின் குழந்தைகளும் இவ்வில்லங் களில் சேர்க்கப்படுகின்றனர்.

இந்த இல்லத்தில் தங்கி இருப்பவர்கள் சிகிச்சை பெற்று முற்றிலும் குணமடைந்து விட்டதாக சம்பந்தப்பட்ட அதிகாரி களால் சான்று அளிக்கப்படும்போது அவ்வில்லங்களிலிருந்து விடு விக்கப்படுகிறார்கள். மேலும் திரும்பத் திரும்ப ஒழுங்கற்ற முறை யில் நடந்து கொள்வோர் மற்றும் இல்லம் சீரிய முறையில் நடைபெற தடையாய் இருப்போர் மீது ஒழுங்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வெளியே அனுப்பப்படுகிறார்கள்.

இல்லத்திலுள்ளவர்களுக்கு அளிக்கப்படும் வசதிகள்.

**இலவச உணவு :**

தொழு நோயால் பாதிக்கப்பட்ட வயது வந்த நபர் ஒரு வருக்கு நாளொன்றுக்கு ரூபாய் 5 50 என்ற விகிதத்தில் உண வும், சிறுவர்களுக்கு நாளொன்றுக்கு ரூபாய்4.00 என்ற விகிதத்தி லும் உணவு வழங்கப்படுகிறது. இல்லத்திலிருப்பவர்களுக்கு காலைச் சிற்றுண்டியும், தேநீரும், மதிய உணவும், மாலை தேநீரும் மற்றும் இரவு உணவும், அளிக்கப்படுகின்றன. நாள் தோறும் மோரும் வழங்கப்படுகிறது. வாரம் ஒரு முறை இறைச்சியும் வழங்கப்படுகிறது. சுதந்திர தினம் காந்தியடிகள் பிறந்த நாள் மற்றும் முக்கியமான நாட்களில் அவ்வில்லத்தில் தங்கி உள்ள ஒவ்வொருவருக்கும் கூடுதலாக ரூபாய் மூன்று செலவில் சிறப்பு உணவு வழங்கப்படுகிறது.

**இலவச இருப்பிடம்.**

உளுந்தூர்பேட்டை, பர்கூர் இல்லங்களைத் தவிர மற்ற எல்லா இல்லங்களும், குடும்பத்தினர்கள் தங்கக் கூடிய அறைகள் கொண்ட தொகுதிகளாக (பிளாக்) கீழ் தளத்தில் கட்டப்பட் டுள்ளன. மேலும் முதல் மாடியில் தனியாள் தங்குவதற்குத் துயில் கூடங்கள். ( dor mitaries ) கட்டப்பட்டு உள்ளன. உளுந்தூர்பேட்டை, பர்கூர் இல்லங்கள் ஒற்றைக் கட்டிடமாக வும், நிரந்தர கொட்டகைகளாகவும் கட்டப்பட்டுள்ளன.

**இலவச உடை ;**

பொங்கல் நாள், சுதந்திர தின நாள் ஆகிய தினங்களில்
அவ்வில்லத்தில் தங்கியிருப்போருக்கு (இரு ஜோடி) உடைகள்
வழங்கப்படுகின்றன. தொழுநோயால் பாதிக்கப்பட்ட காலுக்கு
ஏற்றவாறுதுண்துளை ( Microcelulular ) இரப்பர் காலணி
களும் ஆண்டு ஒன்றுக்கு வழங்கப்படுகின்றன. மேலும் மூன்று
ஆண்டுக்கு ஒரு முறை ஒரு போர்வையும் வழங்கப்படுகின்றது.

**ஏனைய வசதிகள்.**

பாய், தட்டு, கரண்டி, எண்ணெய், சோப்பு, பற்பொடி,
பல்துலக்கும் பிரஷ் (விரல்கள் செம்மையாக இல்லாதவர்களுக்கு
மட்டும்) ஆகிய பொருட்கள் ஒவ்வொருவருக்கும் அளிக்
கின்றனர். கண் நோயால் அவதியுறுபவர்களுக்கு பரிசோதனைக்
குப்பின் மூக்குக் கண்ணாடிகளும் இலவசமாக அளிக்கப்படுகின்றன.
மாவட்ட காசநோய் மருத்துவ அதிகாரிகளும், மருத்துவ மற்றும்
கண் மருத்துவரும் இவ்வில்லவாசிகளுக்கு ஏற்படும், ஏனைய
நோய்களுக்கு சிகிச்சை அளிக்க இவ்வில்லங்களுக்கு வந்து செல்
கின்றனர். இல்லவாசிகளுக்காக இரு தினசரி செய்தித் தாள்கள்
வாங்கப்பபடுகின்றன. அவர்களின் இலக்கியம் மற்றும் பொதுக்
கல்வி மேம்பாட்டிற்காக இலக்கிய நூல்கள் வழங்கப்படுகின்றன.

**இல்லவாசிகளின் குழந்தைகளுக்கு வழங்கப்படும் வசதிகள் :**

தொழுநோயால் பாதிக்கப்பட்ட குழந்தைகள் சேலம்
மாவட்டம், ஆத்தூர் வட்டம் ஏத்தாப்பூர் என்னும் இடத்
யில் நடத்தப்படும் சிறப்புப் பள்ளியில அனுமதிக்கப்படு
கின்றனர். மேற்படி நோயினால் பாதிக்கப்படாத குழந்தை
கள் கூடுமானவரையில் தனியாகப் பிரிக்கப்பட்டு, இவ்வில்லங்
களின் அருகிலுள்ள பள்ளிகளில் சேர்க்கப்படுகின்றனர்.

முதன்மை செலவினங்களுக்காகவும், சீருடை, புத்தகங்கள்,
பெட்டி முதலியவைகளுக்காகவும் ஒவ்வொரு குழந்தைக்கும்
ரூ. 75 அரசு வழங்குகிறது.

மறுவாழ்வு இல்லங்களிலிருந்து பள்ளிக்குச் செல்லும்
குழந்தைகள் மேற்கொண்டும் படிப்பதற்காக, வகுப்பு வாரி
யாக ஆண்டுதோறும் கீழ்க்கண்டவாறு செலவு செய்ய,
அரசு அனுமதி வழங்கியுள்ளது.

இரண்டாம் வகுப்பு முதல் ஏழாம் வகுப்பு வரை ஆண்
டொன்றுக்கு ரூபாய் 20 (ரூபாய் இருபது மட்டும்) ஆறு
ஆண்டுகளுக்கு ரூ. 120.



எட்டாம் வகுப்பு மற்றும் ஒன்பதாம் வகுப்புகளுக்கு
ஆண்டொன்றுக்கு ரூ. 30 (ரூபாய் முப்பது மட்டும்) (இரண்டு
ஆண்டுகளுக்கு), ரூ. 60 (ரூபாய் அறுபது மட்டும்) பத்தாம்
வகுப்பிற்கு ஆண்டொன்றுக்கு ரூ. 50 (ரூபாய் ஐம்பது
மட்டும்), பதினொன்று மற்றும் பன்னிரண்டாம் வகுப்பு
களுக்கு ஆண்டொன்றுக்கு ரூ. 75 (ரூபாய் எழுபத்தைந்து
மட்டும்), (இரண்டு ஆண்டுகளுக்கு), ரூ. 150 (ரூபாய்
நூற்றி ஐம்பது மட்டும்).

**விளையாட்டும், கேளிர்கையும் :**

ஒவ்வொரு இல்லத்திலும் விளையாட்டுப் பொருட்கள்
வாங்குவதற்கு ஒவ்வொரு ஆண்டுக்கும் ரூ. 200 அரசு அனு
மதித்துள்ளது. ஒவ்வொரு இல்லத்திலும், கேளிக்கை வசதி
களுக்காக ஆண்டொன்றுக்கு ரூ. 400 என்ற செலவில்
இசைக் கருவிகளும் வாங்கி அளிக்கப்படுகின்றன.

**மருத்துவ வசதிகள் :**

மருத்துவ சிகிச்சை இல்லவாசிகளுக்கு இலவசமாக
அளிக்கப்படுகிறது. இரு மருத்துவ அதிகாரிகள், இரு செவிலி
யர்கள், ஒரு ஆய்வுக்கூட தொழில் நுட்பப் பணியாளர்,
ஒரு மருந்தாளுநர், ஒரு உடற்கூறு பயிற்சியாளர், ஒரு
தாய்மை மருத்துவ துணைச் செவிலியர், ஒரு உதவி ஆண்
செவிலியர், ஒரு உதவி பெண் செவிலியர் முதலானவர்கள்
ஒவ்வொரு இல்லத்திலும் இல்லவாசிகளின் மருத்துவத்
தேவைகளைக் கவனிக்கின்றனர். தொழுநோய் சிகிச்சை
அளிப்பதோடு மட்டுமின்றி மற்ற நோய்களுக்கும் சிகிச்சை
அளிக்கப்படுகிறது. நோயாளிகளுக்கு தீவிர சிகிச்சை அளிக்க
வேண்டி 10 பேர் தங்கக்கூடிய தனி வார்டுகளில் அனு
மதிக்கப்பட்டு அவர்களுக்குச் சிறப்பு உணவு மற்றும் மருந்து
கள் அளிக்கப்படுகின்றன. எல்லாவித வசதிகளும் கொண்ட
அறுவைச் சிகிச்சைக் கூடங்கள், பர்கூர், உளுந்தூர்பேட்டை
இல்லங்களைத் தவிர மற்ற இல்லங்களில் உள்ளன. கை
விரல் முடமானவர்கள், கால் விளங்காதவர்கள் மற்றும்
உடற்கூறு சரியில்லாத நிலையில் உள்ளவர்களுக்கு அறுவை
சிகிச்சை செய்யப்படுகிறது. இல்லவாசிகளாலேயே செய்யப்
படும் தனிச் சிறப்பு வாய்ந்த காலணிகள் மற்றும் செயற்கை
உறுப்புகள் (கை, கால்) முதலியவைகள் வழங்க இல்லம்
ஒன்றுக்கு, ஆண்டு ஒன்றுக்கு, ரூ. 300 செலவிட அரசு
அனுமதி வழங்கியுள்ளது.

**சிறப்பு ஆகாரம் :**

தேசிய விடுமுறை நாட்களில் இல்லவாசிகளுக்கு பெரியவர்
களுக்கு ரூபாய் 3 வீதமும், சிறியவர்களுக்கு ரூபாய் 1.50
வீதமும் சிறப்பு உணவு அளிக்கப்படுகிறது.

**உடற்பயிற்சியும், தொழில் பயிற்சியும் :**

ஒவ்வொரு இல்லத்திலும் ஓர் உடற்கூறு பயிற்சியாளர் உள்ளார். இவர் மின்கருவி (Electrical stimulator) மெழுகு தொட்டி ஆகியவற்றின் உதவியைக் கொண்டு ஊனமுற்ற உறுப்பினர்களுக்கும், தேவையுள்ள இல்லவாசிகளுக்கு உடற்கூறு பயிற்சி அளிக்கிறார். குடற் புண் மற்றும் உறுசிதைந்த நோயாளிகளைக் கண்டறிந்து உடற்கூறு பயிற்சியாளர்களும் மற்றும் மருத்துவ அதிகாரிகளும் அறுவை சிகிச்சைக்காக தெரிந்தெடுக்கப்படுகின்றனர்.

இல்லவாசிகளுக்கு நுண்ணிய துளையுடன் கூடிய ரப்பர் காலணிகள் அளிக்கப்படுகின்றன.

**தலைமை தொழில் ஈடுபாட்டு பயிற்சியாளர் கடமைகளும் பணிகளும் :**

தலைமை அலுவலகத்தில் உள்ள தலைமைத் தொழில் ஈடுபாட்டு பயிற்சியாளர் அனைத்து இல்லங்களில் உற்பத்தி செய்யப்பட்ட பொருட்கள் பட்டியலை ஆய்வு செய்வதிலும், உடற்கூறு பயிற்சியாளர்கள், மற்றும் ஆய்வுக்குகூட தொழில் நுட்ப பணியாளர்களின் குறிப்புகளைக் கவனிப்பதிலும் ஈடுபட்டுள்ளனர். இவர் மறுவாழ்வு இல்லங்களைப் பார்வையிடும் போது அங்குள்ள உற்பத்திப் பிரிவுகள் சரியாக இயங்குகின்றனவா என்பதையும், உடற்கூறு பயிற்சியாளர்கள் நடவடிக்கைகள் மற்றும் ஆபத்தான தொழில் நுட்ப விஷயங்களை நோயாளிகளுக்கு விளக்குவதுடன், நோயாளிகளின் சக்திக்கேற்ப வெவ்வேறு தொழில் பயிற்சிக்கு இல்லவாசிகளைத் தேர்ந்தெடுக்கின்றனர். உணர்வு இல்லாதவர்களுக்கு சிறு பொறியமைப்பு மற்றும் முறிந்த எலும்பு உதவியும், வரிச்சில்கள், நுண் துளையுடன் கூடிய ரப்பர் பாதுகாப்புள்ள கருவிகளையும், பாதுகாப்பு மற்றும் தற்காப்பு சாதனங்களையும் கொடுக்கும்படியும், மறுவாழ்வு திட்டங்களுக்கு நோயாளிகளைத் தயார் செய்யும்படியும் உடற் சிகிச்சைத் தொழில் நுட்பப் பணியாளர்களுக்கு அவர் ஆலோசனை வழங்குகிறார்.

**இல்லவாசிகளின் மறுவாழ்வுக்கான நடவடிக்கைகள் :**

இவ்வில்லங்களில் அனுமதிக்கப்பட்டுள்ள தொழு நோயாளிகளில் உடல் நலத்துடன் இருப்போருக்கு கீழ்க்கண்ட துறைகளில் பயிற்சி அளிக்கப்படுகிறது.

1. துணி நெய்தல் (கைத்தறி, விசைத்தறி).

2. பாய் பின்னுதல்.



3. செருப்பு செய்தல் மற்றும் பழுது பார்த்தல்.

4. தையல்.

5. தச்சு வேலை.

6. விவசாயம்.

7. காகித உறை செய்தல் (புதுக்கோட்டை இல்லத்தில்).

**நவீன தொழிற்சாலையுடன் அமைந்த தொழிற்கூடம் :**

ஸ்வீடன் நாட்டு செஞ்சிலுவைச் சங்க மறுவாழ்வு தொழிற்சாலையினரால் பரனூர் மறுவாழ்வு இல்லத்தில் அமைக்கப்பட்டுள்ள நவீன தொழிற்சாலையுடன் அமைந்த தொழிற்கூடத்தில், பயிற்சி அளிக்கப்பட்டவர்கள், திருச்சி, காட்பாடி ஆகிய இடங்களில் உள்ள மேற்படி சங்கத் தொழிற்சாலைகளிலும் தனியார் நிறுவனங்களிலும் வேலைக்கு அமர்த்தப்பட்டுள்ளனர். மேலும் உள்ளிருப்போருக்கு பட்டறைகளில் (லேத்) தேவையான பயிற்சி அளிக்கப்படுகிறது. முக்கியமாக, இத்தொழிற் சாலைகளில் கட்டுப்பாடான ஒழுங்கு முறையில் இல்லவாசிகளுக்கு அளிக்கப்படும் பயிற்சிகள் அவர்களின் சுதந்திரம் மற்றும் தன்னம்பிக்கையை வளர்க்க உதவுகின்றன.

**கைத்தறிகள் மற்றும் விசைத்தறிகள் :**

தற்பொழுது 135 கைத்தறிகளும் 77 பாய் தறிகளும் எல்லா இல்லத்திலும் உள்ளன. இல்லவாசிகளால் தயாரிக்கப்படும் பொருட்கள் அவர்களின் தேவைகள் போக, மீதமுள்ளவை அருகிலுள்ள மாவட்ட மருத்துவ மனைகளுக்கு விற்கப்படுகின்றன. கிராமப்புற நூற்பு கேந்திரம், புதுப்பட்டி, மற்றும் உளுந்தூர்பேட்டை இல்லங்களில் நிறுவப்பட்டுள்ளது. 10,000 சிட்டங்கள் மேற்படி இல்லங்களில் ஒவ்வொரு மாதமும் தயாரிக்கப்படுகின்றன. 34 தையல் மிஷன்கள் இவ்வில்லங்களில் உள்ளன. தையல் கலையில் தேர்ச்சி பெற்ற இல்லவாசிகளாலேயே இல்லவாசிகளுக்கு வழங்கப்படும் உடைகள் தைக்கப்பட்டு அளிக்கப்படுகின்றன.

**காகித் உறை தயாரிப்புப் பிரிவு :**

புதுக்கோட்டை அரசு மறுவாழ்வு இல்லத்தில் காகித உறை தயாரிப்புப் பிரிவு 1—2—1978 முதல் இயங்கி வருகிறது.

தமிழ்நாட்டிலுள்ள தொழுநோய்ப் பிச்சைக்காரர்கள் மறுவாழ்வு இல்லங்களிலுள்ள இல்லவாசிகளின் எண்ணிக்கை, இல்லங்களின் உற்பத்தித் திறன், உற்பத்திப் பொருட்கள், விற்பனை விவரம், இல்லவாசிகள் வேலைக்கு அமர்த்தப் பட்ட எண்ணிக்கை, அலுவலர்களைப் பற்றிய விவரங்கள் மற்றும் இல்லங்களில் தயாரித்த பொருட்களின் விற்பனை மூலம் கிடைத்த ஆதாய/இழப்பு விவரங்கள் முறையே அட்டவணைகள் 1, 2 (அ), 2 (இ), 3, 4, 5 மற்றும் 6-இல் உள்ளன.

சிறைத்துறை ஒரு பணித்துறையாக அங்கீகரிக்கப் பட்டுள்ளது. அங்கு தயாரிக்கப்படும் உற்பத்திப் பொருள் கள் இவ்வரசின் இதரத் துறைகளுக்கு இலவசமாக வழங்கப் படுகிறது.



அட்டவணை-1.

அரசு மறுவாழ்வு இல்லங்களில் 1990 ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் நிலவரப்படி தங்கியுள்ள உள்ளிருப்போர் விவரம்.

| வரிசை எண்ணும் மறுவாழ்வு இல்லத்தின் பெயரும். | உள்ளிருப் போர் மொத்த எண்ணிக்கை. (400 பெரிய வர்கள் 25 சிறி யோர்). | பெரியோர்கள். | | சிறியோர்கள். | | | மொத் தம். |
|---|---|---|---|---|---|---|---|
| | | ஆண். | பெண். | ஆண். | பெண். | சிறார். | |
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) | (8) |
| 1. உளுந்தூர்பேட்டை | 425 | 143 | 79 | 6 | 10 | 12 | 250 |
| 2. புதுக்கோட்டை | 425 | 229 | 122 | 12 | 8 | .. | 371 |
| 3. யா. புதுப்பட்டி .. | 425 | 259 | 129 | 18 | 19 | .. | 425 |
| 4. மல்லவாடி .. | 425 | 149 | 71 | 10 | 12 | .. | 242 |
| 5. மனையேரிப்பட்டி | 425 | 272 | 90 | 4 | 5 | .. | 371 |
| 6. பர்கூர் .. .. | 425 | 181 | 124 | 11 | 12 | .. | 328 |
| 7. தேவியாக்குறிச்சி | 425 | 200 | 113 | 13 | 18 | .. | 344 |
| 8. பரனூர் .. .. | 425 | 220 | 154 | 22 | 23 | .. | 419 |
| 9. செல்லியம்பட்டி | 425 | 203 | 96 | 16 | 10 | .. | 325 |
| 10. வின்னப்பள்ளி .. | 425 | 114 | 62 | 5 | 3 | 2 | 186 |
| மொத்தம் .. | 4,250 | 1,970 | 1,040 | 117 | 120 | 14 | 3,261 |

அட்டவணை-2 அ.

மறுவாழ்வு இல்லங்களில் உற்பத்திப் பொருட்களின் விவரம் (அக்டோபர் 1989 முதல் செப்டம்பர் 1990 முடிய).

| வரிசை எண்ணும் மறுவாழ்வு இல்லங்களின் பெயரும். | காய்கறி. | தானியம். | புளி. | எலுமிச்சை எண்ணிக்கை. | தேங்காய் எண்ணிக்கை. |
|---|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) |
| | (கிலோ.) | (கிலோ.) | (கிலோ.) | | |
| 1. பரனூர் .. .. | .. | .. | .. | .. | .. |
| 2. உளுந்தூர்பேட்டை | 200 | .. | .. | .. | .. |
| 3. பர்கூர் .. .. | 300 | 205 (கம்பு). | 14 | .. | 220 |
| 4. புதுக்கோட்டை | 532 | .. | .. | .. | 118 |
| 5. மனையேரிப்பட்டி | 3,027 | .. | 3 | .. | 483 |
| 6. யா. புதுப்பட்டி .. | 306 | .. | .. | .. | 106 |
| 7. மல்லவாடி .. | 699 | .. | .. | .. | 479 |
| 8. தேவியாக்குறிச்சி | 1,957 | .. | .. | 8,290 | 180 |
| 9. வின்னப்பள்ளி .. | 149 | .. | .. | .. | .. |
| 0. செல்லியம்பட்டி | 2,403 | .. | .. | .. | 315 |
| மொத்தம் | 9,573 | 205 | 17 | 8,290 | 1,901 |



அட்டவணை 2 (அ)— தொடர்ச்சி.

| வரிசை எண்ணும் மறுவாழ்வு இல்லத்தின் பெயரும். | விறகு. | துடைப்பம். | பாய். | காலணி. |
|---|---|---|---|---|
| | (மெ. டன்.) | (எண்ணிக்கை.) | (எண்ணிக்கை.) | (ஜதை.) |
| (1) | (7) | (8) | (9) | (10 |
| 1. பரனூர் .. .. | .. | .. | 473 | 300 |
| 2. உளுந்தூர்பேட்டை | .. | .. | 226 | 160 |
| 3. பர்கூர் .. .. | 2,500 | 300 | 595 | 663 |
| 4. புதுக்கோட்டை | 340 | .. | 380 | 350 |
| 5. மனையேரிப்பட்டி | 8,260 | .. | 383 | 473 |
| 6. யா. புதுப்பட்டி .. | 800 | .. | 105 | .. |
| 7. மல்லவாடி .. | 510 | 109 | 776 | 225 |
| 8. தேவியாக்குறிச்சி | 200 | .. | 365 | 434 |
| 9. வின்னப்பள்ளி .. | .. | .. | .. | .. |
| 10. செல்லியம்பட்டி | 431 | 394 | 506 | 232 |
| மொத்தம் .. | 13,041 | 803 | 3,809 | 2,837 |

அட்டவணை 2 (இ).

மறுவாழ்வு இல்லங்களில் உற்பத்திப் பொருட்கள் விவரம் (அக்டோபர் 1989 முதல் செப்டம்பர் 1990 வரை).

| வரிசை எண்ணும் மறுவாழ்வு இல்லத்தின் பெயரும். | தையல் மையம். சட்டை. (எண்ணிக்கை). | ரவிக்கை. (எண்ணிக்கை). | பாவாடை. (எண்ணிக்கை). | சிறு பிள்ளைகள் ஆடை. (எண்ணிக்கை.) | கட்டு கட்டும் துணி. (மீட்டர்) | சல்லாத் துணி. (மீட்டர்) |
|---|---|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) |
| 1. பரனூர் .. .. | 271 | 140 | 151 | 90 | 17,367 | .. |
| 2. உளுந்தூர்பேட்டை | 194 | 156 | 133 | 175 | 1,260 | .. |
| 3. பர்கூர் .. .. | 160 | 58 | 205 | .. | 560 | 4,000 |
| 4. புதுக்கோட்டை | 499 | 213 | 228 | 84 | 3,950 | .. |
| 5. மனையேரிப்பட்டி | 464 | 173 | 179 | 16 | 1,650 | .. |
| 6. யா. புதுப்பட்டி | 232 | 104 | 125 | 67 | 4,320 | .. |
| 7. மல்லவாடி .. | 246 | 180 | 121 | 23 | 3,863 | .. |
| 8. தேவியாக்குறிச்சி | 216 | 184 | 208 | 38 | 3,420 | .. |
| 9. வின்னப்பள்ளி .. | 102 | 76 | 148 | 38 | 20,848 | .. |
| 10. செல்லியம்பட்டி | 248 | 133 | 165 | 48 | 1,416 | 120 |
| மொத்தம் .. | 2,632 | 1,417 | 1,663 | 579 | 58,654 | 4,120 |



அட்டவணை 2 (இ)— தொடர்ச்சி.

| வரிசை எண்ணும் மறுவாழ்வு இல்லத்தின் பெயர். | காடா. (மீட்டர்) | சேலை. (எண்ணிக்கை). | வேட்டி. (எண்ணிக்கை). | துண்டுகள். (எண்ணிக்கை). | சட்டைத் துணி மற்றும் ரவிக்கை. (எண்ணிக்கை). | அம்பர் சர்க்கா மையம். (எண்ணிக்கை). | காகித உறை. (எண்ணிக்கை) |
|---|---|---|---|---|---|---|---|
| (1) | (8) | (9) | (10) | (11) | (12) | (13) | (14) |
| 1. பரனூர் .. .. | .. | .. | .. | .. | 1,239 | .. | .. |
| 2. உளுந்தூர்பேட்டை | 32 | 45 | 288 | 400 | 448 | 72,409 | .. |
| 3. பர்கூர் .. .. | 320 | 165 | 138 | 615 | 320 | .. | .. |
| 4. புதுக்கோட்டை | 25 | .. | .. | 350 | .. | .. | 89,600 |
| 5. மனையேரிப்பட்டி | .. | 96 | 390 | .. | 740 | .. | .. |
| 6. யா. புதுப்பட்டி .. | .. | 43 | .. | 876 | 550 | 38,260 | .. |
| 7. மல்லவாடி .. | 493 | 120 | 375 | 335 | 662 | .. | .. |
| 8. தேவியாக்குறிச்சி | .. | 143 | 180 | 406 | 840 | .. | .. |
| 9. வின்னப்பள்ளி .. | .. | .. | .. | .. | .. | .. | .. |
| 10. செல்லியம்பட்டி | .. | 192 | 308 | 464 | 802 | .. | .. |
| மொத்தம் .. | 870 | 804 | 1,679 | 3,446 | 5,601 | 1,10,669 | 89,600 |

அட்டவணை - 3.

அரசு மறுவாழ்வு இல்ல உற்பத்திப் பொருட்களின் விற்பனை விபரம் (அக்டோபர் 1989 முதல் செப்டம்பர் 1990 முடிய).

| வரிசை எண்ணும் மறுவாழ்வு இல்லத்தின் பெயரும். (1) | காடா. (2) (மீட்டர்) | டவல். (3) (எண்ணிக்கை). | எம்.சி.ஆர். பாய். (4) (ஜோடி) | (5) (எண்ணிக்கை). | கட்டு கட்டும் துணி. (6) (மீட்டர்). | சல்லாத் துணி. (7) (மீட்டர்). |
|---|---|---|---|---|---|---|
| 1. பரனூர் .. .. | .. | .. | .. | 520 | 4,265 | .. |
| 2. உளுந் தூர்பேட்டை | .. | .. | .. | 55 | .. | .. |
| 3. பர்கூர் .. .. | .. | .. | .. | 40 | .. | 3,500 |
| 4. புதுக்கோட்டை | .. | .. | .. | 170 | .. | .. |
| 5. மனையேரிப்பட்டி | .. | .. | 200 | 333 | .. | .. |
| 6. யா. புதுப்பட்டி .. | 260 | 380 | .. | .. | 3,888 | .. |
| 7. மல்லவாடி .. | .. | .. | .. | 232 | 3,200 | .. |
| 8. தேவியாக்குறிச்சி | .. | .. | 100 | .. | .. | .. |
| 9. வின்னப்பள்ளி .. | .. | .. | .. | 323 | 3,033 | .. |
| 10. செல்லியம்பட்டி | .. | .. | .. | 15 | 201 | .. |
| மொத்தம் .. | 260 | 380 | 300 | 1,688 | 14,587 | 3,500 |



அட்டவணை 4.

பணியில் அமர்த்தப்பட்ட இல்லவாசிகளின் எண்ணிக்கை (அக்டோபர் 1989 முதல் செப்டம்பர் 1990 முடிய).

| மாதங்கள். (1) | பரனூர். (2) | உளுந்தூர் பேட்டை. (3) | பர்கூர். (4) | புதுக் கோட்டை. (5) | மனை யேரிப்பட்டி (6) |
|---|---|---|---|---|---|
| அக்டோபர், 1989 .. | 97 | 98 | 105 | 121 | 68 |
| நவம்பர், 1989 .. .. | 105 | 95 | 119 | 115 | 73 |
| டிசம்பர், 1989 .. .. | 100 | 96 | 109 | 126 | 77 |
| ஜனவரி, 1990 .. | 105 | 87 | 106 | 125 | 71 |
| பிப்ரவரி, 1990 .. .. | 103 | 93 | 87 | 121 | 71 |
| மார்ச், 1990 .. | 107 | 90 | 90 | 116 | 73 |
| ஏப்ரல், 1990 .. .. | 100 | 85 | 90 | 119 | 74 |
| மே, 1990 .. .. | 103 | 87 | 82 | 117 | 72 |
| ஜூன், 1990 .. .. | 92 | 89 | 77 | 111 | 68 |
| ஜூலை, 1990 .. | 101 | 89 | 67 | 105 | 66 |
| ஆகஸ்ட், 1990 .. | 78 | 90 | 67 | 111 | 66 |
| செப்டம்பர், 1990 .. | .. | 90 | 82 | 119 | 72 |
| மொத்தம் .. | 1,091 | 1,089 | 1,081 | 1,406 | 851 |

அட்டவணை 4—தொடர்ச்சி.

| மாதங்கள். (1) | யா. புதுப்பட்டி. (7) | மல்லவாடி. (8) | தேவியாக் குறிச்சி. (9) | வின்னப் பள்ளி. (10) | செல்லியம் பட்டி. (11) |
|---|---|---|---|---|---|
| அக்டோபர், 1989 .. | 136 | 133 | 102 | 86 | 87 |
| நவம்பர், 1989 .. .. | 128 | 137 | 88 | 86 | 84 |
| டிசம்பர், 1989 .. .. | 132 | 143 | 92 | 87 | 89 |
| ஜனவரி, 1990 .. .. | 137 | 143 | 90 | 88 | 86 |
| பிப்ரவரி, 1990 .. .. | 127 | 86 | 79 | 90 | 84 |
| மார்ச், 1990 .. .. | 123 | 112 | 81 | 84 | 79 |
| ஏப்ரல், 1990 .. .. | 134 | 129 | 86 | 85 | 83 |
| மே, 1990 .. .. | 134 | 125 | 76 | 88 | 81 |
| ஜூன், 1990 .. .. | 142 | 121 | 76 | 84 | 80 |
| ஜூலை, 1990 .. .. | 144 | 130 | 69 | 81 | 75 |
| ஆகஸ்டு, 1990 .. | 122 | 132 | 75 | 89 | 4 |
| செப்டம்பர், 1990 .. | 133 | 138 | 74 | 83 | 97 |
| மொத்தம் .. | 1,592 | 1,529 | 988 | 1,031 | 1,009 |

இந்த வருடம் வேலையில் இருந்த இல்லவாசிகளின் மொத்த எண்ணிக்கை 11,667.



அட்டவணை 5

அரசு மறுவாழ்வு இல்லங்களுக்காக நியமிக்கப்பட்டுள்ள அலுவலர்கள் பற்றிய விவரப் பட்டியல்.

| வரிசை எண்ணும் பதவியின் பெயரும். (1) | பதவிகளின் எண்ணிக்கை. (2) |
|---|---|
| 1. தலைமைக் கண்காணிப்பாளர் (மறுவாழ்வு இல்லங்கள் மற்றும் இரவலர் இல்லங்கள்) | 1 (ஒன்று) |
| 2. உதவி சிறப்பு அலுவலர் (மருத்துவம்) | 1 (ஒன்று) |
| 3. உதவி கணக்கு அலுவலர் .. .. | 1 (ஒன்று) |
| 4. தலைமை தொழிற் பயிற்சி பணியாளர் | 1 (ஒன்று) |
| 5. அலுவலகக் கண்காணிப்பாளர்கள் .. | 2 (இரண்டு) |
| 6. உதவியாளர்கள் .. .. .. | 5 (ஐந்து) |
| 7. இளநிலை உதவியாளர் .. .. .. | 1 (ஒன்று) |
| 8. தட்டச்சர் .. .. .. .. | 1 (ஒன்று) |
| 9. சுருக்கெழுத்தர் (தலைமைக் கண்காணிப்பாளருக்காக). .. .. .. | 1 (ஒன்று) |
| 10. அலுவலக உதவியாளர் (தலைமைக் கண்காணிப்பாளருக்காக) .. .. | 1 (ஒன்று) |
| 11. அலுவலக உதவியாளர் (இல்லம்) .. | 1 (ஒன்று) |
| 12. ஓட்டுநர் மற்றும் சுத்தம் செய்பவர் .. | 1 (ஒன்று) |
| 13. உதவி சிறப்பு அலுவலர்களுக்காக (மருத்துவம்) நியமிக்கப்பட்ட அலுவலக உதவியாளர் | 1 (ஒன்று) |
| 14. அலுவலக உதவியாளர் (அலுவலகம்) .. | 1 (ஒன்று) |

10 (பத்து) புது வாழ்வு இல்லங்களில் நியமிக்கப்பட்டுள்ள அலுவலர்கள்.

| | |
|---|---|
| 1. நிருவாக அலுவலர்கள் .. .. .. | 10 (பத்து) |
| 2. உதவி மருத்துவர்கள் .. .. .. | 20 (இருபது) |

| (1) | (2) |
|---|---|
| 3. செவிலியர்கள் .. .. .. .. | 20 (இருபது) |
| 4. தாய்மை .. .. .. .. .. | 10 (பத்து) |
| 5. தொழுநோய் உடற்கூறு பயிற்சியாளர்கள் | 10 (பத்து) |
| 6. ஆய்வுக்கூட தொழில் நுட்பப் பணியாளர் நிலை1 | 10 (பத்து) |
| 7. மருந்தாளுநர்கள் .. .. .. .. | 10 (பத்து) |
| 8. ஆண் செவிலி உதவியாளர்கள், நிலை 2 .. | 10 (பத்து) |
| 9. பெண் செவிலி உதவியாளர்கள், நிலை 2 .. | 10 (பத்து) |
| 10. துப்புரவுப் பணியாளர்கள் .. .. .. | 20 (இருபது) |
| 11. சமையலரின் உதவியாளர்கள் .. .. | 20 (இருபது) |
| 12. அலுவலக உதவியாளர்கள் .. .. .. | 10 (பத்து) |
| 13. சமையலாளர்கள் .. .. .. .. | 10 (பத்து) |
| 14. அலுவலகக் கண்காணிப்பாளர்கள் .. | 10 (பத்து) |
| 15. பண்டகக் காப்பாளர் மற்றும் கணக்கர்கள் | 10 (பத்து) |
| 16. இளநிலை உதவியாளர்கள் மற்றும் தட்டச்சர்கள் | 10 (பத்து) |
| 17. ஓட்டுநர்கள் மற்றும் சுத்தம் செய்பவர்கள் .. | 10 (பத்து) |
| 18. தொழில் பயிற்சி பணியாளர்கள் .. .. | 3 (மூன்று) |
| 19. தலைமைக் காப்பாளர்கள் .. .. | 20 (இருபது) |
| 20. காப்பாளர்கள் .. .. .. .. | 80(எண்பது) |
| 21. மின்னாள் நிலை 2 .. .. .. .. | 10 (பத்து) |
| 22. மின் விசைத் தறி விரிவுரையாளர் .. | 1 (ஒன்று) |
| 23. இளநிலை முதலாள் .. .. .. | 1 (ஒன்று) |
| 24. இளநிலை புத்தகம் கட்டுபவர் .. | 1 (ஒன்று) |
| * வார்டர்கள் .. .. | ஆண் 60 பெண் 20 |



அட்டவணை—6.

மறுவாழ்வு இல்லங்களில் தயாரிக்கப்பட்ட பொருட்களின் விற்பனை மூலம் கிடைத்த ஆதாய/இழப்பு விவரம்.

| | 1983-84 | 1984-85 | 1985-86 | 1986-87 | 1987-88 | 1988-89 | 1989-90 |
|---|---|---|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) | (8) |
| | | | (ரூபாய் இலட்சத்தில்.) | | | | |
| மூலப் பொருட்கள் மற்றும் கூலிக்கான செலவு .. | 3.69 | 4.00 | 4.04 | 4.68 | 5.63 | 6.47 | 6.05 |
| தயாரிக்கப்பட்ட பொருட்களின் மதிப்பு .. | 3.56 | 3.95 | 3.98 | 5.62 | 6.76 | 5.39 | 5.86 |
| ஆதாயம்/இழப்பு .. | (—)0.13 | (—)0.05 | (—)0.06 | (+)0.94 | (+)1.13 | (—)1.08 | (—)0.19 |

[1991 செப்டம்பர் 24

அத்தியாயம் III.

அரசினர் காப்பு முகாம், மேல்பாக்கம் பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு 1991-92.

மேல்பாக்கம் அரசினர் காப்பு முகாம் இத்தகைய முகாம்களில் முதன்மையானதாகும். இக்காப்பு முகாம் 1—3—1954 முதல் காவல் துறையின் மேற்பார்வையில் தொடங்கப்பட்டு சென்னை நகரில் பிச்சைக்காரர்கள் பிச்சை எடுப்பதைத் தடுத்து அவர்களுக்கு மறுவாழ்வு மற்றும் தொழிற் பயிற்சி கொடுத்து சிறந்த ஒரு குடிமகனாக ஆக்குவதே இவ் விடுதியின் நோக்கமாகும்.

2. இவ்வில்ல நிர்வாகம் 1—10—1973 முதல் சென்னை, காவல்துறைத் தலைவர் பொறுப்பிலிருந்து சமூக நல இயக்குநர் தலைமைப் பொறுப்பிற்கு மாற்றப்பட்டு மீண்டும் 1—12—1984 முதல் சிறைத் துறைத்தலைவர் தலைமையின் கீழ் மாற்றப் பட்டுள்ளது.

அனுமதி மற்றும் நீக்கம் :

இவ்வில்லத்தில் மொத்தம் 950 பிச்சைக்காரர்கள் (770 ஆண்கள், 180 பெண்கள்) தங்குவதற்கு வசதி உள்ளது. அரசாணை நிலை எண் 891, சமூக நலத்துறை, நாள் 30-7-92-ல் வெளியிடப்பட்ட விதிமுறைகளுக்கிணங்க இவ்வில்லம் நடத்தப்பட்டு வருகிறது. 1945 ஆம் ஆண்டு தமிழ்நாடு பிச்சை எடுப்புத் தடுப்புச் சட்டத்தின் கீழ் தண்டனை விதிக்கப்பட்டவர்கள் இவ்வில்லத்தில் அனுமதிக்கப்பட்டு பராமரிக்கப்பட்டு வருகிறார்கள். தண்டனைக் காலம் ஒரு வருடத்திலிருந்து மூன்று வருடங்களாகும். இங்கு சேர்க்கப் படும் இல்லவாசிகள் அவர்களுக்கு வழங்கப்பட்ட தண்டனைக் காலம் முடிவடைகிற தேதியில் விடுதியிலிருந்து விடுவிக்கப் படுகிறார்கள்.

உள்ளிருப்போருக்கு அளிக்கப்படும் வசதிகள் :

இலவச உணவு :

உணவுக்காக வயதடைந்த நபர் ஒன்றுக்கு நாளொன் றுக்கு ரூ. 5.50 வீதமும், குழந்தைகளுக்கு ரூ. 4.00 வீதமும் அரசால் அனுமதிக்கப்பட்டுள்ளது. இத்தொகைகளுக்குள் இவர்களுக்கு சைவ உணவு வழங்கப்பட்டு வருகிறது. காலை கேழ்வரகு கஞ்சி மற்றும் வெங்காயம், பகல் உணவு, இரவு உணவு வழங்கப்பட்டு வருகிறது. நாள்தோறும் மோர் வழங்கப்படுகிறது. முக்கியமான நாட்களான புதுவருடப்



1991 செப்டம்பர் 24]

பிறப்பு, சுதந்திர தினம் போன்ற குறிப்பிட்ட நாள்களிலும் தீபாவளி, கிறிஸ்துமஸ், ரம்சான் போன்ற சில பண்டிகை நாட்களிலும் ஒரு இல்லவாசிக்கு பெரியவர்களுக்கு கூடுதலாக ரூ. 3.00 வீதமும், சிறியவர்களுக்கு ரூ.1.50 வீதமும் சிறப்புணவு வழங்கப்பட்டு வருகிறது.

இலவச இருப்பிடம் :

இவ்வில்லம் சுமார் 9 ஏக்கர் பரப்பளவில் அமைந்துள்ளது. ஒரே தளமுள்ள படுக்கைக் கூடங்களில் இல்லவாசிகள் தங்க வைக்கப்படுகின்றனர். ஒரு கூடத்தில் 100 பேர் வீதம் தங்கு வதற்குரிய நான்கு படுக்கைக் கூடங்கள் உள்ளன. இந்த நான்கில் ஒன்று பெண்களுக்கும் குழந்தைகளுக்கும் பயன் படுத்தப்பட்டு வருகிறது.

இலவச உடை :

ஆண்களுக்கு இரண்டு துண்டுகள், இரண்டு சட்டை மற்றும் இரண்டு கால் சட்டைகள், பெண்களுக்கு இரண்டு சேலை மற்றும் இரண்டு ஜாக்கெட்டுகள் ஆண்டுக்கு ஒரு முறை இலவசமாக வழங்கப்படுகிறது. விடுதியில் சேர்க்கப்படும் நாள் அன்று ஒரு துண்டு, ஒரு சட்டை, ஒரு கால் சட்டை வீதம் வழங்கப்படுகிறது.

இதர வசதிகள் :

இல்லவாசிகளுக்கு கீழ்க்கண்ட வசதிகள் அளிக்கப்பட்டு வருகிறது :—

1. பாய், படுக்கை விரிப்பு, தட்டு மற்றும் நல்லெண்ணெய் வழங்கப்படுகிறது.

2. இல்லத்தில் அனுமதிக்கப்படும்போது ஒரு அஞ்சல் அட்டையும், மேலும் அவர்களின் தேவைக்கு ஏற்ப கூடுதல் அஞ்சல் அட்டையும் வழங்கப்படுகிறது.

3. தண்டனைக் காலம் முடிந்து வெளியேறும் இல்லவாசி களுக்கு அவர்களின் சொந்த ஊர் செல்ல வசதியாக ரெயில்வே வாரண்ட் அல்லது பேருந்து கட்டணம் அளிக்கப்படுகிறது.

4. இல்லவாசிகளுக்காக இரண்டு தினசரி செய்தித் தாள் கள் வாங்கப்படுகிறது.

5. இல்லவாசிகள் விளையாடுவதற்கான வசதியும்,
தொலைக்காட்சி பார்க்க வசதியும், வானொலி போன்ற
வசதிகளும் செய்யப்பட்டுள்ளன.

மருத்துவ வசதிகள் :

ஒரு மருத்துவமனை இவ்விடுதிக்கென ஏற்படுத்தப்பட்
டுள்ளது. இம்மருத்துவமனையில் ஒரு மருத்துவ அலுவலரும்
இரு செவிலியரும், இரண்டு ஆண் உதவி செவிலியரும்,
இரு பெண் உதவி செவிலியரும், மற்றும் இரு மருந்தாளுநரும்
பணியாற்றுகின்றனர். சாதாரண பிணிகளை நீக்கும் மருந்து
களும் மற்றும் மாத்திரைகளும் போதிய அளவில் உள்ளன.
சிறப்புத் தன்மை உடைய வைத்திய வசதிக்காக நோய்
களுக்கேற்ப சென்னையில் உள்ள பல்வேறு மருத்துவமனை
களுக்கு பிணியாளர்கள் பரிசோதனைக்கு அனுப்பப்படு
கிறார்கள். உடல் ஊனமுற்றவர்கள் காலமுறைப்படி தயா
சதனுக்கு மாற்றம் செய்யப்படுகிறார்கள். மற்றும் தொழு
நோயால் பாதிக்கப்பட்டவர்கள், உளுந்தூர்பேட்டை தொழு
நோய் மறுவாழ்வு இல்லங்களுக்கு மாற்றம் செய்யப்படு
கின்றனர். சென்னை மனநல மருத்துவ மனையிலிருந்து
மனநல மருத்துவர் வாரத்திற்கு ஒரு முறை விடுதிக்கு
வந்து மனநலம் குன்றியவர்களுக்கு சிகிச்சை அளித்து
வருகிறார்.

இல்லவாசிகளுக்கான மறுவாழ்வுக்கான நடவடிக்கை :

இவ்வில்லத்தில் உடல் வலிமையுள்ள பிச்சைக்காரர்கள்
தான் சேர்க்கப்படுகிறார்கள். ஆகவே ஏதாவதொரு சிறு
தொழிலில் ஈடுபடுத்தப்படுகிறார்கள். இவ்வில்லவாசிகளுக்கு
கைத்தறி, தச்சு, மேலும் தையல் போன்ற சிறு தொழில்களில்
பயிற்சி அளிக்கப்படுகிறது. இவ்வாறு பலதரப்பட்ட தொழில்
களில் ஈடுபடும் இல்லவாசிகளுக்கு ஒரு ஆளுக்கு நாளொன்
றுக்கு 10 காசு ஊக்கத் தொகையாக அளிக்கப்படுகிறது.

நெசவு :

கைத்தறி பிரிவில் 10 பெடல் தறிகளும், 9 மேசைத் தறிகளும்
உள்ளன. சுமார் 15 இல்லவாசிகள் இதில் பயிற்சி பெறு
கிறார்கள். இத்தறிகளில் தயாரிக்கப்படும் துணிகள் இவ்வில்ல
வாசிகளின் ஆடைகளுக்குப் பயன்படுத்தப்படுகிறது.

தையற் பிரிவு :

இப்பிரிவில் உள்ள ஆறு தையல் இயந்திரங்கள் மூலம் இல்ல
வாசிகள் தையல் பயிற்சி பெறுகிறார்கள்.





தச்சு வேலை :

சுமார் பத்து இல்லவாசிகள் தச்சு வேலை செய்கிறார்கள்.
அரசுத் துறைகளிலிருந்து பெறப்படும் எல்லாவிதமான மரச்
சாமான்களும் இங்கு பழுது பார்க்கப்பட்டு அத்துறைகளுக்கு
அனுப்பப்படுகின்றன. மேல்பாக்கம் அரசு காப்பு முகாமி
லுள்ள இல்லவாசிகளின் எண்ணிக்கை, வேலைக்கு அமர்த்தப்
பட்ட இல்லவாசிகளின் எண்ணிக்கை, உற்பத்தித் திறன்,
உற்பத்திப் பொருட்களின் விற்பனை விபரம், அலுவலர்கள்
பற்றிய விவரங்கள மற்றும் காப்பு முகாமில் தயாராகும்
பொருட்களின் விற்பனை மூலம் கிடைத்த ஆதாய/இழப்பு
விவரங்கள முறையே அட்டவணைகள் அ. இ. உ. எ. ஐ. மற்றும்
ஓ-வில் உள்ளன.

## தயாசதன் இல்லம்.

தயாசதன் இல்லம் இது தனியார் நடத்தும் பராமரிப்பு
இல்லமாகும். இவ்வில்லத்திற்கு அரசு நிதி உதவி தரப்
படுகிறது. சென்னை காவல் துணை ஆணையரின் கட்டுப்
பாட்டின் கீழ் சென்னை நகருக்குள் நடமாடும் இரவலர்கள்,
காவலர்களால் பிடிக்கப்பட்டு, நீதிமன்றத்தில் விசாரணை
செய்யப்பட்டு, மேற்படி இல்லத்திற்கு அனுப்பி வைக்கப்
படுகின்றனர். தண்டனைபெறும் ஒவ்வொரு இரவலருக்கும்
மாதம் ஒன்றுக்கு ரூ. 40 மட்டும் மானியமாக மேற்படி
இல்லம் அரசிடமிருந்து பெற்றுவருகிறது. மேலும்,
தானாகவே வந்து சேரும் இரவலர் மற்றும் தண்டனை
பெறுவதன் மூலம் அனுமதிக்கப்படும் இரவலர் இவர்களின்
மொத்த எண்ணிக்கை 600-க்கு மிகைப்படாத வகையில்,
இவ்வில்லத்தில் அனைத்து செலவினத்தில் 25 மானியத்
தொகையானது மேற்படி ரூ. 40-ஐ கழித்தது போக
அரசால் அனுமதிக்கப்பட்டு வருகிறது. இந்த மானியத்
தொகையானது தணிக்கை ஆய்வாளரின் (Examiner of
local Fund Account) தணிக்கைச் சான்றிதழ் மற்றும் முந்தைய
ஆண்டின் மானியத் தொகையின் உபயோகப்படுத்திய
சான்றிதழ் ( Utilisation Certificate ) பெறப்பட்ட பின்பு
வழங்கப்படும். இவ்விதம் அரசால் அளிக்கப்பட்ட முந்தைய
மானியங்களின் விவரம் பின்வருமாறு :

| ஆண்டு. | | | | அனுமதிக்கப்பட்ட தொகை. |
|---|---|---|---|---|
| 1986-87 | .. | .. | .. | ரூ. 64,941 |
| 1987-88 | .. | .. | .. | ரூ. 68,505 |
| 1988-89 | .. | .. | .. | ரூ. 92,931 |

[1991 செப்டம்பர் 24

1989-90 ஆம் ஆண்டிற்கான மானியத் தொகை ரூ. 92,110-க்கு அனுமதி பெற வேண்டி அனுப்பப்பட்டுள்ள செயற்குறிப்பு அரசின் ஆய்வில் உள்ளது. இருப்பினும் இனிமேல் காவல் துறையினரால் கைது செய்யப்பட்டு தண்டனை வழங்கப்படும் இரவலர்களை சிறைத் துறை நிர்வாகத்தின் கீழ் உள்ள மேல் பாக்கம் அரசினர் காப்பு முகாமில் தங்க வசதி உள்ள அளவுக்கு அவ்வில்லத்திற்கே காவலர்கள் அனுப்ப வேண்டும் என்ற கொள்கையினை அரசு பரிசீலனை செய்து வருகிறது.



1991 செப்டம்பர் 24]

## அட்டவணை அ.

மேல்பாக்கம் அரசினர் பிச்சைக்காரர் பராமரிப்பு விடுதியில் அக்டோபர் 1989 முதல் செப்டம்பர் 1990 வரை 30-ம் தேதி நிலவரப்படி தங்கியுள்ள உள் உறுப்பினர்களின் விபரம் :

| பெரியோர்கள். | | சிறியோர்கள். | | சிறார். | மொத்தம். |
|---|---|---|---|---|---|
| ஆண்கள் | பெண்கள் | ஆண்கள் | பெண்கள் | | |
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) |
| 78 | 5 | .. | .. | .. | 83 |

## அட்டவணை இ.

அரசினர் பிச்சைக்காரர் பராமரிப்பு விடுதி, மேல்பாக்கம்—அக்டோபர் 1989 முதல் செப்டம்பர் 1990 ஆம் ஆண்டில் வேலையில் அமர்த்தப்பட்ட உள் உறுப்பினர்களின் எண்ணிக்கை.

| மாதமும் வருடமும். | | தச்சுப் பிரிவு. | தையற் பிரிவு. | நெசவுப் பிரிவு | மொத்தம். |
|---|---|---|---|---|---|
| (1) | | (2) | (3) | (4) | (5) |
| அக்டோபர் 1989 | .. | 4 | 2 | 3 | 9 |
| நவம்பர் 1989 | .. | 5 | 2 | 4 | 11 |
| டிசம்பர் 1989 | .. | 4 | 4 | 3 | 11 |
| ஜனவரி 1990 | .. | 4 | 3 | 3 | 10 |
| பிப்ரவரி 1990.. | .. | 4 | 3 | 3 | 10 |
| மார்ச் 1990 | .. | 3 | 2 | 4 | 9 |
| ஏப்ரல் 1990 | .. | 3 | 2 | 4 | 9 |
| மே 1990 .. | .. | 3 | 2 | 4 | 9 |
| ஜூன் 1990 | .. | 3 | 3 | தறிகள் பழுது நீக்கத்தில் இருந்தது. | 6 |
| ஜூலை 1990 | .. | 2 | 3 | ,, | 5 |
| ஆகஸ்ட் 1990 | .. | 3 | 2 | ,, | 5 |
| செப்டம்பர் 1990 | .. | 4 | 4 | ,, | 8 |
| மொத்தம் | .. | 42 | 32 | 28 | 102 |



## அட்டவணை உ

அரசினர் பிச்சைக்காரர் பராமரிப்பு விடுதி, மேல்பாக்கத்தில் உள்ள தொழில் கூடங்களில் உற்பத்தி செய்யப்பட்ட பொருட்களின் விபரம்.

அக்டோபர் 1989 முதல் செப்டம்பர் 1990 வரை.

| | | |
|---|---|---|
| | (2) | (3) |
| (1) | | |
| தையற் பிரிவு. | பிரீச்சஸ் (எண்ணிக்கை). | பனியன் (எண்ணிக்கை). |
| .. | 150 | 202 |
| நெசவுப் பிரிவு | டவல்கள் (எண்ணிக்கை). | வெள்ளை காடா (மீட்டரில்). |
| | 175 | 220 |
| தச்சுப் பிரிவு | நாற்காலி பழுது நீக்கம். (எண்ணிக்கை). | மொத்தம். (எண்ணிக்கை). |
| | 8 | 8 |

## அட்டவணை எ.

அரசினர் பிச்சைக்காரர் பராமரிப்பு விடுதி, மேல்பாக்கம் விற்பனைப் பொருட்களின் விபரம்.

(அக்டோபர் 1989 முதல் செப்டம்பர் 1990 முடிய).

| பொருட்களின் பெயர். | மதிப்பு. |
|---|---|
| (1) | (2) |
| | ரூபாய். |
| தச்சுப் பிரிவு உற்பத்தி .. .. .. | 2,832.00 |
| தையற் பிரிவு உற்பத்தி .. .. .. | 5,374.94 |
| நெசவுப் பிரிவு உற்பத்தி .. .. .. | 2,965.15 |
| மொத்தம் .. | 11,172.09 |



## அட்டவணை ஐ.

அரசினர் பிச்சைக்காரர் பராமரிப்பு விடுதி, மேல்பாக்கம்—அலுவலர்கள் பற்றிய விவரப் பட்டியல்.

| வரிசை எண். | பதவியின் பெயர். | பதவியின் எண்ணிக்கை |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| 1. | நிருவாகி .. .. .. | 1 |
| 2 | துணை நிருவாகி .. .. | 1 (இந்தப் பதவி நிறுத்தி வைக்கப் பட்டுள்ளது.) |
| 3 | மருத்துவ அலுவலர் .. .. | 1 |
| 4 | அலுவலகக் கண்காணிப்பாளர் .. | 1 |
| 5 | உதவியாளர்கள் .. .. .. | 2 |
| 6 | இளநிலை உதவியாளர்கள் .. | 2 |
| 7 | தட்டச்சர் .. .. .. | 1 |
| 8 | சுருக்கெழுத்து தட்டச்சர் .. | 1 |
| 9 | சமூக நல ஊழியர் .. .. | 1 |
| 10 | போதகர்கள் .. .. .. | 5 |
| 11 | அலுவலக உதவியாளர்கள் .. | 2 |
| 12 | தலைமைக் காவலர் .. .. | 1 |
| 13 | காவலர்கள் .. .. .. | 11(9 பதவிகள் நிறுத்தி வைக்கப் பட்டுள்ளது.) |
| 14 | வாயிற் காவலர்கள் .. .. | 2 (7 பதவிகள் நிறுத்தி வைக்கப் பட்டுள்ளது.) |
| 15 | தலைமைக் காப்பாளர் .. .. | 9 |
| 16 | காப்பாளர்கள் .. .. | 3 |
| 17 | சமையற்காரர் .. .. .. | 3 |
| 18 | துப்புரவுப் பணியாளர்கள் .. | 3 |
| 19 | சலவையாளர்கள் .. .. | 2 |
| 20 | சவரப் பணியாளர்கள் .. .. | 2 |
| 21 | மருந்தாளுநர்கள் .. .. .. | 2 (1 பதவி நிறுத்தி வைக்கப் பட்டுள்ளது.) |
| 22 | செவிலியர்கள் .. .. | 2 |
| 23 | பெண் செவிலி உதவியாளர்கள் .. | 2 |
| 24 | ஆண் செவிலி உதவியாளர்கள் .. | 1 |
| 25 | ஓட்டுநர் .. .. .. | |
| | மொத்தம் .. | 62 |

அட்டவணை ஒ.

அரசினர் பிச்சைக்காரர் பாராமரிப்பு விடுதி, மேல்பாக்கத்தில் தயாரிக்கப்பட்ட பொருட்களின் விற்பனை மூலம் கிடைத்த ஆதாய/இழப்பு விபரம்.

| விவரம். | 1984--85 (ரூபாய் இலட்சத்தில்.) |
|---|---|
| (1) | (2) |
| மூலப் பொருட்கள் மற்றும் கூலிக்கான செலவு .. | 0.27 |
| தயாரிக்கப்பட்ட பொருட்களின் மதிப்பு .. | 0.32 |
| ஆதாயம்/இழப்பு .. | (—)0.05 |

D
V2/11, 31 1-1991
N91-10-1

| 1985-86 | 1986-87 | 1987-88 | 1988-89 | 1989-90 |
|---|---|---|---|---|
| (3) | (4) | (5) | (6) | (7) |
| (ரூபாய் இலட்சத்தில்.) | | | | |
| 0.12 | 0.16 | 0.17 | 0.12 | 0.04 |
| 0.24 | 0.20 | 0.20 | 0.15 | 0.11 |
| (+)0.12 | (+)0.04 | (+)0.03 | (+)0.03 | (+)0.07 |

16608